ஸ்ரீ மஹாபாரதம்

விராடபர்வம்.

தம்பகோணம், கோபாலவிலாஸ புஸ்தகசாலத்தலவர்

மத்வசாஸ்த்ரஸம்பூர்ணர்,

ப்ரம்மஶ்ரீ அ. வேங்கடேசாசார்யர்

அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

தம்பகோணம் காலேஜ் ரிடையர்ட் தமிழ்ப்பண்டிதர்

ம. வீ இராமாநுஜாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

நான்காம் பதிப்பு

விலை ரூபா 2—4—0 : கபால்சார்ஜ் ரூபா 0—8—0

PRINTED AT THE KESARI PRINTING WORKS.
G. T. MADRAS.

1933

(All Rights Reserved.)

ஸ்ரீ

விராடபர்வ நான்காம் பதிப்பின் முகவுரை.

இந்த விராடபர்வத்தைப்பற்றித் தெரிவிக்கவேண்டியவற்றை இதன் முதற்பதிப்பு மூன்றும்பதிப்புக்களின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். வனபர்வ இரண்டாம்பாகத்தின் முகவுரையில் ஸ்ரீ மஹாபாரதத் தமிழ்மொழிபெயர்ப்பின் வரலாறுமுழுதும் ஒருவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கே, சில விஷயங்கள் விரிவுஅஞ்சித் தெரிவிக்கப்படவில்லை. இப்பால், அவைகளைத் தெரிவிப்பது அவஸ்யமென்று தோன்றுதலால், அவைகளைமாத்திரம் இங்கே சுருக்கமாகத் தெரிவிக்கிறேன்.

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றிய சில கொள்கைகள்.

வடமொழியில் ஸ்ரீ மஹாபாரதத்திற்குப் பலபதிப்புக்கள் உள்ளன. ஆனால், அவைகளில் ஒன்றுக்கொன்று சில சில இடங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆதலால், ஒருபதிப்பையே பின்பற்றி மொழிபெயர்ப்பது அவஸ்யமாயிற்று. கும்பகோணம் மத்வவிலாஸப் பதிப்புத் தென்தேசப்பாடத்தைத் தழுவியிருத்தலாலும், அதனைப் பின்பற்றி மொழிபெயர்க்கவேண்டுமென்று பல பெரியோர்கள் கூறினமையாலும், நான் அதனையே முதல் நூலாக வைத்துக்கொண்டு அதிலுள்ளபடி நேரே மொழிபெயர்த்திருக்கிறேன். இந்த விவரத்தை ஆதிபர்வமுகவுரையிலும் வனபர்வ இரண்டாம்பாக முகவுரையிலும் தெரிவித்திருக்கிறேன். பொருந்தாத சில அதிகபாடங்களும் பொருள்விளங்காத சில தொடர்களும் கூறியதுகூறலான சிலவாக்கியங்களுமே மொழிபெயர்க்கப்படவில்லை. அப்படிப்பட்ட இடங்களில், பெரும்பாலும், கீழே குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்த மொழிபெயர்ப்பு ஒருமதச்சார்பாக இல்லாமல் எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படி பொதுவாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய முக்யமான கொள்கை. ஒரு மதத்தினருக்கு அனுகூலமாகவோ பிரதிகூலமாகவோ முதல்நூலிலுள்ளதை மாற்று

வதோ விலக்குவதோ இல்லாததைச்சேர்ப்பதோ செய்வதில்லை என்பதும் என்னுடைய விரதம்.

மஹாபாரத மொழிபெயர்ப்பு யாவரும் படித்துத் தெரிந்து கொள்ளும்படி எளியநடையில் இருக்கவேண்டுமென்பதும் என்னுடைய கொள்கை. ஆதலால், யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய சொற்களையன்றிக் கடினமான சொற்களை உபயோகிப்பதேயில்லை; கடினஸந்திகளையும் உபயோகிப்பதில்லை. சாஸ்திர சம்பந்தமான பரிபாஷைகளைத் தமிழில் மொழிபெயர்த்தால் ஸாதாரண ஜனங்களுக்கு அதிக கடினமாகுமேயன்றி எளிதில் பொருள் விளங்காதாகையால், அவைகளை வடசொற்களாகவே உபயோகித்திருப்பதோடு, உச்சரிப்பும் வடமொழிக்கு ஒத்தே இருக்கும்படி எழுதியிருக்கிறேன்.

ஆதிபர்வ முகவுரையில், 'பாஷையைக்காட்டிலும் விஷயத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டுமென்று அறிஞர் பலரும் அடிக்கடி வற்புறுத்தினமையால் அந்த முறைப்படி ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள கருத்துக்களை அமைக்கும்வகையில் தமிழ்நடை சில இடங்களில் சிறிது மாறியிருத்தல்கூடும். மொழிபெயர்ப்பு மூலத்திலுள்ளபடியே இருக்கவேண்டுமென்பதே முழுநோக்கமாதலால், தமிழ்நடை தன் ஸ்வதந்திரநடையைச் சிறிது விட்டிருக்கவேண்டிவருகிறது. எந்தமொழிபெயர்ப்பும் மூலத்தின்விஷயங்களை விளங்கச்செய்யமாத்திரம் முடியுமேயல்லாது பாஷையின்நடையோடு இயற்கையில் அமைந்த ரஸபாவங்களை முழுதும் வெளியிடக்கூடாதென்பது ஒரு பாஷையிலிருந்து மற்றொருபாஷையில் விஷயங்களை மாற்றிக்கொண்டுவர முயற்சிசெய்கிற யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. ஆதலால், மொழிபெயர்ப்பாக இருக்கும் அளவில் இருக்கவேண்டிய குணங்களைமட்டும் பார்த்துக் குற்றங்களை கூடமிக்கும்படி விவேகிகளை ப்ரார்த்திக்கிறேன்' என்று எழுதியிருக்கிறேன். அதனையும் இங்கே தெரிவிக்கிறேன்.

ஒரு பண்டிதர் மொழிபெயர்த்ததை வேறு இரண்டு பண்டிதர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதும் அவர்களுக்கு ஏதாவது ஆக்ஷேபமிருந்தால் அந்த இடத்தை முதலில் மொழிபெயர்த்தவர்களுக்கு அனுப்புவதும் வழக்கம். மொழிபெயர்த்தவர்களுக்கும் அந்த ஆக்ஷேபம் 'சரி' என்று தோன்றினால், அவர்கள் அந்தப்படி திருத்துவார்கள். அல்லது, தாம் பொருள் செய்ததே சரி என்று தோன்றினால், அதற்கு ஆதாரம் சொல்லுவார்கள். அந்த முறை

யில் சில இடங்களில் ஸந்தேகம்கேட்டு அனுப்பியபோது, அவர்கள் முதலில் மொழிபெயர்த்ததைத் திருத்தியும் முழுதும் மாற்றியும் எழுதி அனுப்பியிருக்கிறார்கள்; முன்எழுதிய காகிதங்களில் திருத்தச் சாத்தியப்படாத இடங்களில் வேறு புதிதாக எழுதி முன்காகிதங்களில் ஒட்டி அனுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காகிதங்களில் சில ஜாக்ரதையாக வைக்கப்பட்டுள்ளன. வேண்டுவோர் அவைகளை என்னிடம் பார்க்கலாம்.

தமிழ்மொழிபெயர்ப்பைப்பற்றிய சில ஸமாதானங்கள்.

பீஷ்மபர்வத்தில் பகவத்கீதாபர்வம் வெளிவரத்தொடங்கியவுடன், திருவண்ணாமலையிலிருந்து, ஒரு பெரியவர், மொழிபெயர்ப்பு தமது கொள்கைப்படி இல்லாமைபற்றிக் குறைகூறி எழுதியிருந்தார்கள். அவர்களுக்கு நேரே ஸமாதானம் எழுதியதுடன், பீஷ்மபர்வ முகவுரையில், 'கீதையின் மொழிபெயர்ப்பு, மஹாபாரதத்தின் மற்றப் பகுதிகளைப்போலவே, ஒருமதச் சார்பாக இராமல் பொதுவாக இருக்கவேண்டுமென்பதே எனது விருப்பம். ஆயினும், வேதாந்த பாகங்கள் வரும்பொழுது, அங்ஙனம் செய்தல் ஸாத்யப்படவில்லை. மொழிபெயர்ப்பவர்கள் எந்தமதத்தைச் சார்ந்தவர்களோ அந்தமதத்தின் சார்பாகத்தான் மொழிபெயர்ப்பு அமைகிறது. இதனைப் பகவத்கீதையில் மாத்திரமே அன்றி, மற்றப்பருவங்களிலும் வேதாந்தப்பகுதிகள் வருமிடம்தோறும் காணலாம். இந்தமாதிரியான இடங்களில் தங்கள் மதக்கொள்கைக்கு மூரணையிருப்பதாக நினைப்பவர்கள் தங்கள் தங்கள் சமயநூல்களில் வல்ல பண்டிதர்களிடம் கேட்டுத் தெளிந்துகொள்க' என்று எழுதியுமிருந்தேன். அந்தப்பெரியார் உண்மையை அறிந்து ஸமாதானம் அடைந்தார்கள்.

இப்பால், சாந்திபர்வ மோக்ஷதர்மத்தில் சில சுலோகங்களுக்கு நன்கு பொருள்விளக்கப்படவில்லை என்று சிலர் குறைகூறுவதாகக் கேட்டேன். மஹாபாரதம் முழுவதிலுமே எளிதிற் பொருள்விளங்காத கடினசுலோகங்கள் பல உண்டென்பது பிரஸித்தமானது. அதிலும், மோக்ஷதர்மத்தில் கடினமான சுலோகங்கள் மிகஅதிகம் என்பதைப் பண்டிதர்கள் நன்கு அறிவார்கள். மோக்ஷதர்ம மொழிபெயர்ப்புவிஷயமாகப் பெரியோர் பலர் அடைந்த கவலையையும், நான் அடைந்த சிரமத்தையும், அதுபூர்த்தியானதில் அடைந்த ஸந்தோஷத்தையும் சாந்திபர்வ

முகவுரை.

இரண்டாம்பாக முகவுரையில் விவரமாகத் தெரிவித்திருக்கிறேன். சுலோகத்திலுள்ள சொற்களைக்கொண்டு பொருள் தெரிந்து கொள்ளக்கூடாமல் வியாக்யானத்தைக் கொண்டே பொருள் நிச்சயிக்கக்கூடிய இடங்கள் பல உண்டு. சில சுலோகங்களிலுள்ள சொற்களுக்கு நேரே வியாக்யானம் இராது. அந்தமாதிரி இடங்களில் சுலோகத்திலுள்ள சொற்களுக்குப் பொருத்தமாகப் பொருள் செய்வதற்கு நாங்கள் பட்ட சிரமம் எல்லையில்லாதது. பண்டிதர்கள் மொழிபெயர்த்து எழுதியனுப்பிய கையெழுத்துப் பிரதியை ஒப்புநோக்கித் திருத்தும்போது, தக்க பண்டிதர்கள் சிலரும் நானும் ஒருநாள் முழுதும் மிகச் சிரமப்பட்டுப் பார்த்தும் கையெழுத்துப் பிரதியில் ஒருபக்கங்கூட லித்தம் செய்யமுடியாமல் போனதுண்டு. வியாக்யானத்தைத் தழுவியே மொழிபெயர்த்துவிடலாமென்றால் அது ஒருசார்பு பற்றியதாக இருத்தலால் சில இடங்களில் அதனை முழுதும் பின்பற்றக் கூடவில்லை. அந்தமாதிரி இடங்களில் சுலோகத்துக்குப் பொருள் விளங்காமையாலும், வியாக்கியானம் வேறுவிதமாகப் பொருள் படுதலாலும், நமது மொழிபெயர்ப்பு வியாக்யானத்திற்கு முழுதும் ஒத்தில்லாமையாலும், 'மொழிபெயர்ப்பு விளக்கமாயில்லை' என்று குறைகூறுவோர் கருதிரர்கள்போலும். வியாக்யானத்தில் ஒரு சார்புபற்றிச் செய்திருக்கிற இடங்களில் அதனைப் பின்பற்றி மொழிபெயர்க்கவில்லை என்றும் மூலத்திலுள்ளபடி இயன்றவரை நமது மொழிபெயர்ப்பு நேரே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதென்றும் அவர்களுக்கு இங்கே வணக்கமாகத் தெரிவிக்கிறேன்.

சாந்திபர்வத்தை மொழிபெயர்த்து உதவிய மஹா மஹோபாத்யாய வேதாந்தகேஸரி பைங்காநாடு கணபதிசாஸ்திரிகளவர்கள் எழுதிய ஒருலிகிதத்தை இங்கே வெளியிடுகிறேன். அது வருமாறு :—

'கள்ளிக்கோட்டை, 12-10-1910.

நமஸ்காரம். க்ஷேமம்.

ஆபத்தர்மப் பிரகரணம் பூர்த்தியாகி அனுப்பியது வந்திருக்கலாம். விஜயதசமிமுதல் மோக்ஷதர்மம் எழுதத் தொடங்குகிறேன். ஆனல், மோக்ஷதர்மம் கடினமான பாகமாகையால், கொஞ்சம் மெதுவாகவே எழுதவேண்டியதாயிருக்கும். அன்றியும், இதில் மூலத்துக்கும் வியாக்யானத்துக்கும் ரொம்ப வேற்றுமை தோன்றுகிறது. வியாக்யாதா

மிகவும் பிரயாஸப்பட்டு ஒவ்வொரு சுலோகத்தையும் அத்வைதத்துக்கு [1] இழுக்கிறார். அதேவிதம் நான் எழுதுவேனுகில் உலகம் என்னை ஸ்வமத பக்ஷபாதி என்று சொல்லக் கூடும். மூலத்திற்கு உசிதமாய் வெளியாவதும் மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமில்லாததுமாகவே எழுதவேண்டுமென்பது என் கருத்து இவ்விதம் எழுதினால் பல இடங்களில் வியாக்யானம் ஒத்திராது. வியாக்யானத்தையும் பழைய உரை என்று வேறு எழுதினால் வேலை இரட்டிக்கும். இவ் விஷயத்திற்கு என்ன செய்யலாம்? எழுதத்தொடங்குவதற்கு முன்னமேயே தங்கள் அபிப்ராயம் தெரியவேண்டும். அல்லாமலும், மோக்ஷதர்மம் அச்சிடும்போது இந்தப் பத்திரிகையிலுள்ள என் கருத்தையும் வேண்டுமானால் வெளியிடலாம். எல்லாவிஷயத்திற்கும் பதில் எதிர்பார்க்கிறேன்.

நமஸ்காரம்.

தங்கள், ப. கணபதி சாஸ்திரீ.'

அருங்கலை விற்றுதர்களும் பரம ஆஸ்திகர்களும் ஸத்தர்ம பரிபாலகர்களும் ஸதாசார ஸம்பன்னர்களும் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பை மிக ஆதரிப்பவர்களும் எனக்குப் பரம ஆப்தர்களுமான ப்ரம்மஶ்ரீ Prof. K. சுந்தரராம ஐயர் M. A., அவர்கள், "ஶ்ரீமான் கணபதி சாஸ்திரிகளவர்கள், 'நீலகண்டர் அவஶ்யமில்லாத பல இடங்களில் வலிந்து பொருள் செய்திருக்கிறார். இந்த மொழிபெயர்ப்பில் அந்த முறையைப் பின்பற்றவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று என்னிடத்தும் மற்றும் பல ஆப்தர்களிடத்தும் பலமுறை கூறியிருக்கிறார்கள். ஆதிபர்வம் ஸபாபர்வம் அநுசாஸனபர்வமாகிய மூன்று பர்வங்களை மொழிபெயர்த்துதவியவர்களான ஶ்ரீ. உ. சதாவதானம், தி. ஈ. ஶ்ரீநிவாஸாசாரியரவர்களும், இதே அபிப்ராயம் சொன்னதாகவும் அவர்களே பலமுறை சொல்லியிருக்கிறார்கள்.

மோக்ஷதர்ம மொழிபெயர்ப்பு விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு மாறுபடாமலிருக்கிறதா என்று ஒப்பிட்டுப் பார்க்கும்படி சில ஶ்ரீவைஷ்ணவப் பெரியோர்களிடம் நான் கேட்டுக்கொண்டபோது, அவர்கள் பார்த்து, இந்த மொழிபெயர்ப்பில் அங்கங்கே வேறுபாடுகளைக் குறிப்பது போதாதென்றும் தனியாகவே மொழிபெயர்க்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இவற்றால்,

---

[1] இதன் 28-வது பக்கம் குறிப்பைப் பார்க்க.

பொதுவாக மஹாபாரதமொழிபெயர்ப்புவிஷயத்திலும் சிறப்பாக மோக்ஷதர்ம மொழிபெயர்ப்பு விஷயத்திலும், எங்களுக்கிருந்தசிர மமும் பிறருக்கிருந்த கருத்துவேறுபாடுகளும் நன்கு விளங்கும்.

சாந்திபர்வத்தை மொழிபெயர்த்துஉதவியவர்கள், ப்ரம்மஶ்ரீ வேதாந்தகேஸரி மஹாமஹோபாத்யாய பைங்காநாடு கணபதி சாஸ்திரிகளவர்களும், ப்ரம்மஶ்ரீ வேதாந்தவிபூஷணம் மஹோப தேசகர் சாஸ்திரரத்நகரம் மஹாமஹோபாத்யாய கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகளவர்களும் ஆவார்கள். பொதுவாக ஸம்ஸ் கிருதபாஷையிலும் சிறப்பாக வேதாந்தசாஸ்திரத்திலும் இந்த இரண்டு பெரியார்களும் வித்வான்களுடையகூட்டத்தில் எவ்வளவு நன்குமதிக்கப்பட்டவர்களென்பது உலகம் அறியும். அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டதே விளக்கமாக அமையவில்லையானால், விஷயம் எளிதில் பொருள்விளங்காத கடினத்தன்மையுடைய தென்று கருதி ஸமாதானம் அடையவேண்டும்.

சாந்திபர்வத்தில் மோக்ஷதர்மத்தைமாத்திரமாவது மூன்று மதங்களிலும் அந்தஅந்தமதநூல்களில் மிக்க பாண்டித்திய முள்ள தக்கவித்வான்களைக்கொண்டு சோதித்து அச்சிட்டு வெளி யிடவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ஶ்ரீமஹாபாரதம் பொதுவான நூலாதலாலும் மோக்ஷதர்மம் மூன்றுமத வேதாந்த பாஷ்யங்களுக்கும் முக்யஆதாரமாயிருத்தலாலும் அது நன்குதிரு த்தமடைந்துவெளிவருவது இந்துக்களான யாவருக்கும் நன்மை யானது. இது மிக்கபொருட்செலவினாலும் பலநாள் உழைப்பினா லும் நிறைவேறக்கூடிய காரியம். தேசாபிமானமும் மதாபி மானமுமுடைய செல்வவான்கள் மனமுவந்து உதவிபுரிய முன் வருவார்களானால் அதுஸம்பந்தமாக நான் செய்யக்கூடிய கைங்கர யத்தைச்செய்ய வித்தனையிருக்கிறேன். அல்லது, அவர்களே தக்க பண்டிதர்களைவைத்துக்கொண்டுபார்த்துத் திருத்திக்கொடுத்தால், ஆக்ஷேபமில்லாமல் பொதுவாகவுள்ளவற்றை நூலிலும், ஒரு கொள்கை பற்றியவற்றைக் கீழே குறிப்பிலும் சேர்த்துப்பதிப் பிப்பேன். குறைகூறுவோர் இந்தவிஷயத்தை மனத்திற்கொண்டு உண்மையாக முயற்சிசெய்ய வேண்டுகிறேன்.

மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிடத் தொடங்கியது முதல் அதைப்பற்றிப் பாராட்டிப் புகழ்ந்து எழுதியிருப்பவர் களின்கடிதங்கள் எண்ணிலடங்கா. ஸாதாரணமாக ஸமாசாரங்

கள்எழுதுகிற கடிதங்களிலும், மொழிபெயர்ப்பின் பெருமையையும் இது தமிழுலகத்துக்குப் பெரும்பயன் அளித்தலையும் இதனை வெளியிடுவதிலுள்ள சிரமத்தையும்பற்றிப் பாராட்டி எழுதப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் அச்சிட்டு வெளியிடுவதானால் மஹாபாரத புஸ்தகத்தின் அளவுக்குக் குறையாது. நேரேஸந்திக்கும்போதும் நான் இல்லாத பல ஸமயங்களிலும் சொல்லுகிற புகழ்மொழிகளுக்கும் அளவே இல்லை. 'மனித முயற்சியில் செய்து முடிக்கக்கூடிய செய்கையன்று' என்று பாராட்டுக்கூறுபவர்கள் பலர். இந்த மொழிபெயர்ப்பின் உதவியைக்கொண்டே தாங்கள் மஹாபாரத ப்ரஸங்கம் செய்துவருவதாகச் சில தக்கபண்டிதர்கள் எழுதியதுமுண்டு. இவற்றையெல்லாம் நானே தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் வெட்கம் அடைகிறேன். இந்த அளவு தெரிவித்துக்கொள்ளும்படி நேர்ந்ததற்குக்கூட மிக வருந்துகிறேன்.

காரணமில்லாமல் அங்கங்கே குறைகூறிக்கொண்டிருப்பவர்களும் சிலர் உண்டு. இவர்கள் சொல்வனவற்றை அங்கங்கே கேட்பவர்கள் நேரில் தெரிந்துகொண்டிருக்கக்கூடும். தங்களுக்கு உண்டான ஸந்தேகமுதலிய காரணங்களால் குறைகூறி எழுதப்பட்ட கடிதங்களும் பல. அவைகளையெல்லாம் முழுதும் தெரிவிப்பது ஸாத்யமில்லை. ஆகையால், மாதிரிக்காக ஒன்றைமாத்திரம் இங்கே தெரிவிக்கிறேன். அது வருமாறு:—

'மகா-ள-ள-ஸ்ரீ, வேத மூர்த்திகளாகிய ஸ்ரீமத். உ. வே. ம. வீ. இராமாநுஜாசாரியர் அவர்கள் உபயசரணாரவிந்தங்களுக்கு மேலக்குமாரமங்கலம் ர. சு. ரங்கஸாமி ஐயர், மேட்டுப்பாளையம் முத்துரெட்டியார் ஆகிய நாங்கள் இருவரும் அனேககோடிஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துப் பக்திபுரஸ்ஸரத்துடன் தெரிவித்துக்கொண்ட விஞ்ஞாபனம்.

உபயகுசலோபரி.

நாங்களிருவரும் தங்களிடமிருந்து ஆதிபர்வம் பீஷ்மபர்வம் துரோணபர்வம் கர்ணபர்வம் இந்த நான்குபர்வங்களையும் வருவித்து அவைகளிலுள்ள பகவானை நாராயணனுடைய பரத்வத்தைப்பார்த்து மிகுந்த ஆனந்தம் அடைந்தோம். கொஞ்சநாளைக்குமுன், ரெட்டியார் விராடபர்வத்துக்கு எழுதி அச்சமயம் கையிருப்பில் இல்லையென்று தாங்

கள் எழுதியதும் தேவரீர் திருவுள்ளத்திற்கு ஞாபகம் இருக்கும். தவிர, நாங்கள் சாந்திபர்வ அநுசாஸனபர்வங்களையும் மற்றவைகளையும் வருவிக்க உத்தேசித்து, கணிசப்பாக்கம் ஸம்பத்ஸ்வாமிகளிடமிருந்து அநுசாஸன பர்வத்தின் முதல் ஸஞ்சிகையை வாங்கிப் பார்த்ததில், 45 முதல் 50 வரையிலுள்ள அத்யாயங்களில் முன்பின்னுள்ள ஸமஸ்தமான விஷ்ணு பரத்வத்துக்கு நேர்விரோதமாகச் சிவபரத்வமானது விஷ்ணுஸர்வோத்கிருஷ்ட கண்டனமாகக் கிருஷ்ணன் தவம்செய்தார் என்றும் சிவனிடம் புத்ரவரம் பெற்றார் என்றும் உபமன்யுவிடம் உபதேசம் பெற்றார் என்றும் விஷ்ணு சிவனிடம் உற்பவித்தார் என்றும் லிங்கபூஜையாலேயே விஷ்ணு லோகாதிபதி ஆனரென்றும், பிரம்மலோகத்தில் தண்டியால் செய்யப்பட்ட சிவஸஹஸ்ர நாமாதிகளும் அதிவிரிவாக இன்னபடியென்று வாய்விட்டுச் சொல்வதற்கில்லாது மிகுந்த துவேஷத்தைத் தன்னுள் அடக்கியதாக விளங்குகிறது. மொழிபெயர்த்தவரும் அச்சிட்டவர்களுமாகிய ஸ்ரீநிவாஸாசாரியரும் தேவரீரும் ஸம்பிரதாயக்கடல் கடந்த பண்டிதர்களான ஸ்ரீவைஷ்ணவர்களாயிருந்தும் மேற்கண்டவிஷயமான உபமன்யு உபாக்யானத்திற்குத் தகுந்த ஸமாதானமில்லாமல் இருக்கின்றதை யோசிக்குங்கால் எங்கள் மனம் மிகுந்த துயரம் அடைகிறது. உபமன்யு உபாக்யானத்தைச் சிலவித்வான்கள் பிரக்ஷிப்தம் என்று சொல்லிக்கொண்டிருக்க, தாங்கள் அதை அவ்விதம் என்று அறிந்திருந்தும் இப்படி அச்சிட்டதை நோக்குங்கால் எங்களுக்கு விபரீதமாகத் தோன்றுகிறது. அது உண்மையாகில் அந்தப் பர்வத்திலுள்ள விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப்போல சிவ ஸஹஸ்ரநாமத்துக்குத் திரிமதஆசாரியர்களும் என் பாஷ்யம் செய்யவில்லை? ஆரண்யபர்வத்திலுள்ள சிவவிஷயமும் துரோணபர்வத்திலுள்ள அப்வத்தாமா விஷயமான சிவபரத்வமும் வருவது ஸகஜமே. அவைகளைப்போலில்லாமல் இது விஷ்ணுகண்டனமாயிருப்பது மிக வருந்தற்பாலது. பர்வங்கள்தோறும் சிவனைப் பிரம்மாவின் புத்ரனென்று ஸ்தாபித்திருக்க, இவ்விடம் மட்டும் கண்டனமானதற்குக் காரணம் என்ன? இவைகளை நோக்குங்கால் ஆழ்வாராசார்யர்களான மஹான்களுக்கும் அன்னவர்கள் நூல்களுக்கும்

நேர் விரோதமானதாய் விளங்குகிறது. மேற்கண்ட சரித்திரம் உண்மையிலேயே வியாஸரால் பாரதத்தில் எழுதப்பட்டதா? தங்கள் மொழிபெயர்ப்புக்கு மூலக்கிரந்தமான T. R. கிருஷ்ணசாரியர்பதிப்பும் அவர் கருத்தும் இதை ஏற்றுக்கொள்ளுமா? சதாவதானம் ஸ்ரீநிவாஸாசாரியருக்கும் தங்களுக்கும் இது நிஜமென்று நம்பிக்கையுண்டா? இதற்கு நாளதுவரையிலும் பாரதத்தில் கற்பனை என்பதற்கு ஆதாரமில்லையா? அல்லது, அவ்விதம் கண்டித்து எழுதினால் தற்காலத்திய ஜனங்கள் புஸ்தகம் வாங்கமாட்டார்கள் என்று பேசாது விட்டுவிட்டீர்களா? இது யாது காரணமோ அதைத் தேவரீரே எங்களுக்கு எழுதி ஸம்சயநிவிருத்தி செய்தால் மிகுந்த நன்றியுள்ளவர்களாக இருப்போம். ஆதிபர்வத்திலுள்ள பராசர ஸத்யவதீ விவாஹம் என்பதைத் தகுந்த காரணத்துடன் கண்டித்த பண்டிட் ஸ்ரீநிவாஸாசாரியர் என்ன காரணம் பற்றி இதைக் கண்டிக்கவில்லை? வேதப்ரதிபாத்யமான சக்ரமானது சிவனிடமிருந்து விஷ்ணு அடைந்தார் என்பதைப் பார்க்குங்கால் தப்தசக்ராங்கனத்திற்குக்கூடவன்றோ பழுது வந்துவிட்டது. 'நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்—தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்' என்பதற்குக்கூடப் பங்கம் வந்துவிட்டதே. இப்படிச் சொல்லத்தரமில்லாமல் ஸர்வவிதத்திலும் விஷ்ணுபரத்வ கண்டனமான இந்த இதிஹாஸம் விஷ்ணுபரமான பாரதகதையில் எதற்காக விளங்குகிறது? மேற்கண்ட இந்த விஷயங்களுக்கெல்லாம் தேவரீர் கோபித்துப் பராமுகமாயிராது உங்கள் குழந்தைகள் என்று நினைத்து உடனே பதில் எழுதவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். பாரதம் ஆதிபர்வத்தின் ஆதியில், ஸௌதியானவர், 'அந்த நாராயணன்கதையைச் சொல்லுகிறேன்' என்றும், வில்லிபுத்தூராரும், 'மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்' என்றும் ஒரே வாக்காகச் சொல்லியிருக்க, அப்படிப்பட்ட வைஷ்ணவ கிரந்தத்துக்கு விரோதம் வந்தது வியக்கத்தக்கது. இதில் சொற்குற்றம் முதலிய இருந்தாலும் கோபிக்க வேண்டாம்.

இப்படி, தங்கள்

முத்து ரெட்டியார்.'

அவர்களுக்கு நான் எழுதிய பதில் வருமாறு :—

'மணலூர், 16—12—1923.

அன்புள்ள ஐயா,

தாங்கள் அன்புடன் எழுதிய நீண்ட லிகிதம் வரப்பெற்றேன். ஸ்ரீ மஹாபாரதம் வேதத்தோடொத்தது. வேதத்தில் ருத்ரபாரம்யம் சொல்லிய இடங்கள் பல உண்டு. பதினெண் புராணங்களில் சிவபரத்வம் சொல்லுகிற புராணங்களே அதிகமானவை. அவைகளுக்கெல்லாம் ச்ருதிஸ்மிருதி இதிஹாஸ புராணங்களின் பிராமாண்யதாரதம்மியத்தைக் கொண்டும் புராணங்களில் ஸாத்விக ராஜஸ தாமஸப் பாகுபாட்டைக்கொண்டும், கேள்வி உத்தரங்களின் நயத்தைக் கொண்டும், முன்பின் அமைந்துள்ள சப்தங்களின் ஸ்வாரஸ்யங்களைக்கொண்டும் அர்த்தம் செய்து, பெரியோர்கள் ஒற்றுமைப்படுத்துகிறார்கள். பாரதத்திலும் அப்படியே செய்துகொள்ள வேண்டும். இந்த விஷயங்களைக் கடிதமூலமாக எழுதுவது ஸாத்யமுமில்லை ; எனக்கு அவகாசமுமில்லை.

உபமன்யு உபாக்யானம் ப்ரக்ஷிப்தம் என்பது நம்மவர்களுடைய கொள்கையே. இது வெளிப்படை. ஆனாலும், இது புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டதன்று. நமது பூர்வாசாரியர்சூலத்திற்கு முற்பட்டதே. ஸ்ரீராமாயணத்தில் ஆதித்ய ஹ்ருதயமும் அப்படியே ப்ரக்ஷிப்தம் என்றுதான் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஸம்ஸ்கிருத புஸ்தகங்களில் இவைகள் சேர்த்தே அச்சிடப்பட்டிருக்கின்றன. நானும் எனக்காக மஹாபாரதத்தை மொழிபெயர்த்துக் கொடுக்க முன்வந்துள்ள வித்வான்களும் ஒரு பதிப்பை மூலமாக வைத்துக்கொண்டு அந்தப் பதிப்பிலுள்ளபடியே மொழிபெயர்த்து வெளியிட நிச்சயித்துக்கொண்டோம். அந்தப் பதிப்பிலுள்ளது விடுபட்டிருந்தாலும் இல்லாதது சேர்ந்திருந்தாலும் நாங்கள் உத்தரவாதியாவோம். மூலத்திலுள்ளதை மொழிபெயர்ப்பதே நாங்கள் இப்பொழுது மேற்கொண்டது. மதஸ்தாபனம் செய்வதன்று. லோகோபகாரமும் சிரமஸாத்யமுமான இந்தக் கைங்கர்யத்தை மேற்கொண்டு பல வருஷங்களாயினமையால் இதனை விரைவில் பூர்த்திசெய்ய வேண்டுமென்பதே என்மனத்தில் ஊன்றி

நிற்கிறது. வேறு ஒன்றிலும் என்மனம் செல்லவில்லை. ஆதலால், தாங்கள், தயைசெய்து, இனி இந்தமாதிரி விஷயங்களை எனக்கு எழுதாமலிருக்க வேண்டுகிறேன். திருவயிந்திரபுரம் முதலான திவ்யதேசங்களில் மஹாவித்வான்கள் பலர் இருக்கிறார்கள். தங்களுக்கு உண்டாகும் ஸந்தேகங்களை அவர்களிடம் கேட்டுத் தெளிந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்ஙனம்,

அன்பன், ம. வீ. இராமானுஜன்.'

இவற்றுல், ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிடத் தொடங்கியதனல், மூலத்திற்கு அர்த்தத்தை நிச்சயித்து மொழி பெயர்ப்பைத் திருத்தலிலும் காரிய நிர்வாஹத்திலுண்டான பொருள்முட்டுப்பாட்டிலும் மற்றும் பலவகையிலும் அடைந்த பலவகைத் துன்பங்கள் தவிர, நான் எத்தனைபேருக்கு எத்தனை விதமாகச் சமாதானம் சொல்லவேண்டியவனாக இருந்தேனென்பதையும், அதனல் என்மனம் எவ்வளவு கவலையும் துன்பமும் அடைந்திருக்குமென்பதையும் அறிவுடையோர் நன்கு ஊகிக்க வேண்டும். இவ்வளவு சிரமத்தைக்கொடுத்தபிறகாவது இந்த அரியபெரிய நற்காரியத்தை நிறைவேற்றியருளியதற்காக எல்லாம் வல்ல ஸர்வேச்வரனுடைய அவ்யாஜமான பெருங்கருணைத்திறத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்; அவனுடைய திருவடித் தாமரைகளை எப்பொழுதும் சிந்தித்து வந்திக்கின்றேன்.

மஹாபாரத ஸம்பந்தமாகச் சில ஸமாதானங்கள்.

மஹாபாரதத்தைபற்றிச் சிலர் விஷயத்தைஆராயாமல் குறைகூறுவர். அவர்கள், (1) மஹாபாரதத்தைப் படிக்கலாகாதென்றும், (2) படித்தால் கலகம் உண்டாகுமென்றும் (3) வீட்டில் படிக்கலாகாதென்றும், (4) முதலிலிருந்து முறையே தொடர்ச்சியாகப் படிக்கலாகாதென்றும் ஆதாரமில்லாமல் வாய்க்குவந்தவாறு கூறி மஹாபாதகத்திற்குக் காரணமாவர்.

(1) ஸ்ரீ வேதவியாஸ பகவானே ஹரிந்துக்களாகிய நமக்கு ஸகலஞானத்தையும் அளித்தவர்; வேதத்தை வகுத்தவர்; பதினெண்புராணங்களையும் தொகுத்தவர்; திருமால் திருப்பாற்கடல் கடைந்து அம்ருதம் எடுத்து உதவியதுபோல வேதமாகிய கடல் கடைந்து ப்ரம்மஸூத்ரமாகிய அமிருதத்தை எடுத்துக்கொடுத்

தப் பேருதவிபுரிந்தவர். பரமரிஷிகளும் புராணங்களும் அவரை ஸாக்ஷாத் பகவானே என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். அவரே மஹாபாரதத்தையும் இயற்றியவர். மற்றவைகளையெல்லாம் செய்ததைக்காட்டிலும் மஹாபாரதத்தைச் செய்ததற்காகவே, அவரை, 'கூஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் விஷ்ணும் நாராயணம் ம்ஹர்ஷிம் | கோஹ்யந்யோ ஹர்வி மெத்தேய மஹாபாரத கூஹ்ருவெசு| = ஓ! மைத்ரேயரே! கிருஷ்ணத்வைபாயனரான வியாஸ ரைப்ரபுவான நாராயணரென்றே தெரிந்துகொள்ளும்: ஏனெனில், நாராயணரைத்தவிர இவ்வுலகில் வேறுயாவர் ஸ்ரீமஹாபாரதத்தைச் செய்யவல்லவராவார்?' என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். பத்துப் புராணங்களுக்கு அதிகமானவை வியாஸரையும் மஹாபாரதத்தையும் பாராட்டிப் புகழ்கின்றன. இன்றியமையாத தந்தை தாயார்களுக்கும் பித்ருக்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளையும் செய்யவேண்டாத ஸந்யாஸிகளும் வியாஸரைப் பூஜை செய்கிறார்களென்றால் அவர் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? சாஸ்திரங்களை நம்புகிறவர்களெல்லாரும் அவர் சொல்லுவனவற்றையெல்லாம்நம்பவேவேண்டும். அவர், மஹாபாரதத்தின்பெருமையையும் அதனை ஒவ்வொரு வீட்டிலும் படிக்கவேண்டுமென்பதையும் அதனைப்படித்தலாலும் கேட்டலாலும் உண்டாகும் பல நன்மைகளையும் மஹாபாரதத்தின் முதலிலும் கடையிலும் விஸ்தாரமாகக் கூறியிருப்பதோடு, ஒவ்வொரு பர்வத்தின் முடிவிலும் பலபல உபாக்யானங்களின் முடிவிலும் அதை அதைப் படித்தல் கேட்டல்களினாலுண்டாகும் பயன்களையும் அங்கங்கே சிறப்பாகக் கூறியிருக்கிறார். இவற்றிற்கு ஆதாரம் மஹாபாரதத்தில் தொட்ட தொட்ட இடந்தோறும் காணலாம். அவர் சொல்லியிருப்பவை எல்லாம் நம்மை மோசம்செய்து நம்மிடமிருந்து ஒன்றைப் பெறுதற்காக அன்று. நாம் ஞானத்தை அடைந்து கடைத்தேற வேண்டுமென்னும் பெருங்கருணையினாலேயே. 'மஹாபாரதத்தைப் படிக்கவேண்டுமென்று ஸர்வஜ்ஞரும் பகவானுடைய அவதாரமென்று சொல்லப்படுகிறவருமான ஸ்ரீவியாஸர் சொல்லியதை நம்புவதா, யாரோ சிலர் சொல்லுவதை நம்புவதா' என்று அறிவுடையோர் ஊகிக்கவேண்டும்.

மஹாபாரதம் பலஅரியவிஷயங்கள் அடங்கியதாததலாலும், தர்மார்த்தகாமமோக்ஷம் என்னும் நான்குபுருஷார்த்தங்களையும் நன்குதெரிவிப்பதாகையாலும் ஐந்தாம்வேதமென்று எல்லா

ராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருத்தலாலும் படித்தல்கேட்டல்களால் மஹாபாதகங்களையும் போக்கவல்லதென்று பல மஹரிஷிகளாலும் பலபுராணங்களாலும் பெரிதும் புகழப்படுதலாலும், 'சூஶ்ராவயேத சதுரோ வர்ணாந்ருதீ யதே' என்கிறபடியே பகவத்சரித்திரங்களை முழுதும் நிரம்பியிருத்தலாலும் இதனை ஸகல ஜனங்களும் கேட்கவேண்டுமென்பதற்காக நமது தேசத்துப் பண்டைக்கால அரசர்கள் இதனைப்படித்துப் பிரசங்கிப்பவர்களுக்கு மானியங்கள் கொடுத்திருக்கிறார்களென்பது சிலாசாஸனங்களால் விளங்குகின்றது. இந்த விவரமும் மஹாபாரதத்தைப் பற்றிய மற்றும் பல விவரங்களும், [1] 'மஹாபாரதமும் திராவிட பாஷைகளும்' என்னும் புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீவேதவியாஸர் மஹாபாரதத்தை எழுதும்படி விநாயகரைக் கேட்டுக்கொண்டபோது, விநாயகர், 'எனது எழுத்தாணி தடைப்படாமல் வேகமாகச் சொல்லவேண்டும். தடைப்பட்டால் எழுத்தாணியைக் கீழே வைத்துவிடுவேன்' என்று சொன்னதாகவும், வியாஸர், 'அப்படியாலல், தாங்கள் சுலோகங்களின் அர்த்தத்தை மனத்தில் வாங்கிக்கொண்டு எழுதவேண்டும்' என்று கேட்டுக்கொண்டதாகவும், விநாயகரும், 'அப்படியே செய்வேன்' என்று சொல்ல வியாஸர் சொல்லத் தொடங்கியதாகவும், அவர் சொல்லும்போது இடையிடையே விநாயகர் ஆலோசிக்கும்படி கடின சுலோகங்களைச் சொல்லிக்கொண்டுபோனதாகவும் ஒருகதை மஹாபாரதத்திலேயே வழங்குகிறது. இந்தக்கதையின் உண்மை எப்படியாலுலும், '8800 சுலோகங்களை நான் அறிவேன்; சுகர் அறிவர்; ஸஞ்சயன் அறிந்தாலும் அறியலாம்' என்று வியாஸரே சொல்லியிருக்கிற ஒருஸ்லோகத்திலுல் மஹாபாரதத்தில்கடினமானசுலோகங்கள் பலஉண்டு என்பதுநிச்சயம். அவைகளுக்கு, 'முடிச்சுக்கள் அல்லது வியாஸகுட்டு' என்று பெயர்வழங்குகிறது. இப்படிப்பட்ட கடினமான கிரந்தத்திற்கு விளக்கமான வியாக்யானம் இல்லை. ஆதலால், இதில் சில ஸ்லோகங்கள் சிறந்த பண்டிதர்களுக்கு அன்றி மற்றவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கு

---

1 இந்தப் புஸ்தகம், சென்னை ஸர்வகலா சங்கத்தார் விருப்பத்தின்படி, நான் சென்னைப் பச்சையப்பன் காலேஜில் 1930வது பிப்ரவரிமீ 27, 28உ களிலும் மார்ச்சுமீ முதல் தேதியிலும் செய்த மூன்று உபந்நியாஸங்கள் அடங்கியது. அது அச்சில் இருக்கிறது; விரைவில் வெளிவரும்.

வதில்லை. "வேதமானது குறைந்த கல்விகேள்வியுள்ளவனைக் கண்டு 'இவன் நம்மை மோசம்செய்துவிடுவான்' என்று பயப்படுகிறது" என்று ஒருபுராண சுலோகம் கூறுகிறது. அப்படியே, இந்த மஹாபாரதமும் குறைந்த படிப்புள்ளவர்களைக் கண்டால் பயப்படுகிறது. அவர்களும் இந்த மஹாபாரதத்தைக்கண்டால் பயப்படுகிறார்கள். குறைந்த படிப்பும் அல்பபுத்தியுமுடைய போலிப்பண்டிதர்கள் தங்களுடைய அறியாமையை மறைப்பதற்காக 'மஹா பாரதத்தைப் படிக்கலாகாது' என்பது முதலிய சில அபவாதங்களைக் கட்டிவிட்டார்கள். நல்லசெய்திகள் பரவுவதைக் காட்டிலும் தீய செய்திகள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கமடைந்து பரவுவது இயற்கையாதலாலும், நம்மவர்கள் பிறர் சொல்லுவனவற்றை ஆராயாமலே எளிதில் நம்பும் தன்மையுடையவர்களாதலாலும், இந்த அபவாதம் வழங்கலாயிற்று.

ஸ்ரீ மஹாபாரதத்தை மற்றக் காரியங்களுக்கு இடையே சில சில நேரம் படித்து வந்தால் முழுதும் படித்து முடிப்பதற்குப் பல வருஷங்கள் செல்லும். அதற்குள் ஏதாவது ஓர் அஸௌகர்யம் நேர்ந்தால், அதற்கு மஹாபாரதம் காரணம் என்னலாமா? இராமாயணம் படித்தால் ராஜ்யத்தை இழந்து காட்டிற்குப் போகவேண்டுமென்றும் பின்னும் பல துக்கங்களை அனுபவிக்கவேண்டுமென்றும் சொல்லலாமா?

ஸ்ரீமத் ராமாயணத்தை மொழிபெயர்த்து வெளியிட்டும் பிரஸங்கம் செய்தும் உலகத்தில் மிக்க புகழ்படைத்திருக்கிற சிலர் சிரமத்தை அடைந்திருப்பதை நாம் நேரில் பார்க்கவில்லையா? கேட்டதில்லையா? பலவருஷங்களுக்குமுன், நான் மஹாபாரதத்தை மொழிபெயர்த்து வெளியிடத்தொடங்கியபோது, ராமாயண முதலியகிரந்தங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதென்று சில தக்கவர்கள் தொடங்கிச் சிலஸஞ்சிகை வெளிவந்தவுடன், அவர்களுக்குள் கலகம் ஏற்பட்டுப் பிரிந்துபோய்ப் பிறகு சேராமலே இருக்கவில்லையா? சில இடங்களில் சில தக்கவர்கள் சேர்ந்து ஸ்ரீராமாயணத்தைத் தமிழில்மொழிபெயர்த்து வெளியிடத்தொடங்கிச் சிலபாகம்நடந்துவந்து பிறகுநடைபெறுமல்நின்றுபோகவில்லையா? தென்னாட்டில் தமிழ்க் கவிகளுள் கம்பர் கவிச்சக்ரவர்த்தி என்று கொண்டாடப்படுவதுபோல வடநாட்டில் ஹிந்தி பாஷைக் கவிகளுள் துளஸிதாஸ் என்பவர் கவிச்சக்ரவர்த்தி என்றும் தெய்வி

கம் வாய்ந்தவர் என்றும் கொண்டாடப்படுபவர். அவர் செய்த இராமாயணம் துளஸீதாஸ் ராமாயணமென்று மிக்க பிரஸித்தி பெற்றது. கும்பகோணம் மத்வவிலாஸ புஸ்தகசாலைத் தலைவர், ஸ்ரீமான் T. R. கிருஷ்ணசாரியரவர்கள், மாத்வஸம்பிரதாயக் கிரந்தங்கள் பலவற்றையும் ராமாயண பாரத பாகவதங்களையும் பல வியாக்யானங்களுடனும் பல அரிய குறிப்புக்களுடனும் அச்சிட்டு வெளியிட்டவர்கள். அவர்கள் துளஸீதாஸ் ராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடத் தொடங்கினர்கள். அதில் ஒரு ஸஞ்சிகை வெளிவந்தது. பிறகு, நின்றே போயிற்று. இவற்றிற்கெல்லாம் இராமாயணம் காரணம் என்னலாமா?

வாணுஷ்ரோகோ நலோராஜா வாணுஷ்ரோகோ யாபி ஓதிரட்|| வாணுஷ்ரோகாய வைவஹீ வாணுஷ்ரோகோ ஜநா ஓநந்த்' என்கிறபடி நளன் யுதிஷ்டிரர் ஜானகி ஜகுர்த்தனர் ஆகிய இவர்கள் புண்ய ஸ்லோகர்கள் என்று பிரஸித்தர்கள். இவர்களுடையபெயரைச் சொல்லுவதனாலும் சரித்திரங்களைப் படித்தல் கேட்டல்களாலும் பாவங்கள் நீங்கிப் புண்யமுண்டாகுமென்பது பெரியோர் கொள்கை. அவர்களுடைய சரித்திரங்களையும் ஹரிச்சந்திரன் முதலிய சக்கரவர்த்திகளுடைய சரித்திரங்களையும் ப்ரஹ்லாதன் த்ருவன் முதலிய பக்தர்களின் சரித்திரங்களையும் படிக்கும்போது அவர்கள் கஷ்டம் அடைந்ததையும் பிறகு நன்மை அடைந்ததையுமே படிக்கிறோம். அதனால், அவர்கள் அடைந்த கஷ்டங்களையெல்லாம் நாமும் அடைவோம் என்று சொல்லலாமா? அவர்கள் அடைந்த துன்பங்களை அடையோம் என்பதையன்றோ பயனைக் கூறுகிறார்கள்.

(2) மேல்நோக்காகப் பார்ப்பவர்களுக்கு மஹாபாரதத்தில் ஒற்றுமைக்குறைவு இருப்பதுபோலத் தோன்றினும் நுணுகிப் பார்த்தால், அஃது ஒற்றுமையை வளர்ப்பதென்பது நன்கு விளங்கும். பாண்டவர்கள் ஒருவரோடொருவர் கலகப்படுவதற்குப் பல காரணங்களிருந்தும் எவ்வளவோ கஷ்டங்கள் நேர்ந்தும் மிக ஒற்றுமையாக இருந்தார்கள்; ஸஹோதர வாத்ஸல்யத்தை மிக உறுதியாகக் கொண்டிருந்தார்கள். துரியோதனாதியர்கள் தீய செய்கையுள்ளவர்களாயிருந்தும் அவர்களும் தங்களுள் அந்த வழியில் மிக்க ஒற்றுமையுடையவர்களாக இருந்தார்கள். கோஷயாத்திரையில் துரியோதனனைக் கந்தர்வன் கட்டிப்போன

பொழுது, தர்மபுத்திரர், 'அன்னியர்கள் வரும்பொழுது நாம் நூற்றைவரும் ஸகோதரர்கள்' என்று சொல்லித் துரியோதனனுடைய கட்டைஅவிழ்த்துவிடச் செய்தார்.

மஹாபாரதத்தைத் தமிழில் காவியமாக விருத்தக்கவியில் இயற்றிய வில்லிபுத்தூராழ்வாருடையபெருமை உலகம் அறிந்தது. தமிழ்ப் புலவர்களில் அவர் கவித்திறத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை. தமிழ்படித்தவர்களில் அவர்பெருமையை அறியாதவர் அறியாதவரே. அவர் மஹாபாரதம் பாடியதற்கு ஒரு காரணம் கூறுவது உண்டு. அதாவது :-"வில்லிபுத்தூராழ்வாருக்கும் அவருடைய தம்பிக்கும் தாயபாக விஷயமாகக் கலகமுண்டாயிற்று. அவர் அதனை அரசனிடம் தெரிவித்துக்கொண்டார். அவன் கேட்டு, 'கல்விக்கடலைக் கடந்த இத்துணைப் பெரியார்க்கும் காமக்குரோதங்கள் நீங்கவில்லையே. பாக விஷயமாகச் சகோதரனுடன் கலகம் விளைக்கிறீரே! இவருக்கு யார் சொல்லுவது? இவர் தாமாகவே உணரும்படி செய்யவேண்டும்' என்று தனக்குள் நிச்சயித்து, அவரை நோக்கி, அவருடைய கவிபாடும் திறமையைப் புகழ்ந்து, 'நீர் மஹாபாரதத்தைத் தமிழில் பாடிக்கொணர்ந்தால் உமது வழக்கைக் கேட்டு முடிவுசெய்வேன்' என்று கூறினன். அவர் அப்படியே பாடத்தொடங்கி யுதிஷ்டிர பட்டாபிஷேகம்வரையில் பாடிமுடித்தனர். அவ்வளவில் மஹாபாரத யுத்தத்துக்குத் தாயபாகமே காரணமாக இருந்ததென்னும் உண்மை மனத்திற்பட, அவர் கலகம்நீங்கித் தம்தம்பியுடன் ஸமாதானமாகி அன்பு பாராட்டிச் சேர்ந்து வாழ்ந்தார்" என்பது.

இவைகளால், ஸ்ரீ மஹாபாரதம் ஒற்றுமையை உண்டுபண்ணுவதென்றே விளங்குகிறது. ஒற்றுமைக்குறைவை உண்டு பண்ணக் கூடியதென்று சொல்வதற்குக் காரணமே இல்லை. ஆதலால், ஒற்றுமைக்குறைவை உண்டுபண்ணுமென்று சொல்வது சோம்பேறிகள் சொல்லுகிற ஆதாரமற்ற வார்த்தை என்பது உறுதியாகிறது.

(3) ஸ்ரீமஹாபாரதம் வீட்டிலிருப்பதே பரமக்ஷேமத்திற்குக் காரணமென்பது, 'ஹாரதம ஹவெந யஸ்ய தஸ்ய ஹஸ்தமதா ஜய:' என்பதனால் நன்குவிளங்கும். மஹாபாரத புஸ்தகம் வீட்டிலிருப்பதே பல நன்மைகளுக்குக் காரணமாகுமென்றால் அதனைப் படித்தல் கேட்டல்களால் உண்டாகும் நன்மைகளைச் சொல்லவும் வேண்டுமோ? மஹாபாரதத்தைப் படித்துப் பொருள்

சொல்வதானால் பலவருஷங்கள் செல்லும். நம்தேசத்தில் பெரும் பாலும் நடந்துவருகிற வழக்கப்படி ஒருவர் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து சொல்லுவதானால், நீடித்த பலவருஷங்களில் அந்த வீட்டினருக்கு அயலூருக்குப் போக நேரலாம்; ஆசௌசம் முதலிய அஸௌகர்யம் நேரலாம்; அவைகளால் மஹாபாரதப் பிரஸங்கத்துக்குத் தடை ஏற்படலாம்; பல வருஷங்கள் தொடர்ச்சியாக இதனை வைத்து நடத்துவது ஒருகுடும்பத்துக்கு ப்ரமமாயிருக்கலாம்; சில வீடுகளுக்குச் சிலர் மனஸ்தாபம் முதலிய காரணங்களால் வரக்கூடாமலிருக்கலாம்; ஒருவர் வீட்டுத் திண்ணையில் வைத்து நடத்துவதில் சிலருக்கு ஆக்ஷேபமிருக்கலாம். ஆதலால், ஒரு பொதுஇடத்தில் வைத்து நடத்தினால் எல்லாரும் வந்து கேட்பதற்கு எவ்விதத்தடையும் இராதென்பதுபற்றியும் எவ்விதஅஸௌகர்யத்தாலும் இந்த ஸத்கதாப்பிரஸங்கம் தடைப்படாமல் நடக்குமென்பதுபற்றியும் இதனைக் கோயில் முதலிய பொதுஇடங்களில் படித்து வந்திருக்கலாம்.

(4) கும்பகோணம், மஹாவித்வான் மத்வசாஸ்திர ஸம்பூர்ணர் பாரதஹ்ருதயம் ப்ரம்மஸ்ரீ கா. பெ. ராமசந்திராசாரியாரவர்களுடைய பெருமையைப்பற்றியும் அவர்கள் இந்த மஹாபாரத விஷயமாக எனக்குச் செய்திருக்கிற பெருதவிகளைப்பற்றியும் ஆர்ஷ மேதிகபர்வம் வனபர்வ இரண்டாம்பாகம் உத்யோகபர்வம் ஆகிய இவற்றின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். மஹாபாரதத்தைப் படிக்கவேண்டிய முறை எப்படியென்று அவர்களைக் கேட்டபோது, அவர்கள், 'முதலிலிருந்து கடைசிவரை தொடர்ச்சியாகப் படிப்பதுதான் பரம்பரையான வழக்கம்; நானும் அப்படியேதான் செய்துவருகிறேன்.' என்று சொன்னார்கள். ஸ்ரீ பாகவதத்தை 'ஸப்தாஹம்' என்று ஏழுநாளில் படிப்பதுபோலவும், ஸ்ரீமத் ராமாயணத்தை 'நவாஹம்' என்று ஒன்பதுநாளிலும் 'புனர்வஸு பட்டாபிஷேகம்' என்று இருபத்தேழுநாளிலும் படிப்பதுபோலவும், மஹாபாரதத்தை நாற்பது தினங்களில் படிக்கும் ஒரு முறை உண்டென்றும் சொன்னார்கள்.

இவர்கள் மஹாபாரதம்முழுதும் தம் வீட்டில் பலமுறை படித்திருக்கிறார்கள். மற்றும் பலவீடுகளில் பலமுறை படித்துப் பொருள் சொல்லியிருக்கிறார்கள். மஹாபாரதப் பிரசாரத்திலேயே இவர்கள் பெருமையையும் புகழையும் பொருளையும் பெற்றிருக்கிறார்கள். இவர்களுடைய மூத்தகுமாரர் ஸ்ரீமான்,

Dr. R. நாகராஜ சர்மா அவர்கள் ஆங்கில பாஷையிலும் ஸம்ஸ்கிருத பாஷையிலும் மிக்க புலமைவாய்ந்தவர்கள். இளைய குமாரர் ஸ்ரீமான், சுதர்சனசர்மா அவர்கள் ஸம்ஸ்கிருத பாஷையில் மிக்க பாண்டித்தியம் உடையவர்கள்; ஸாஹித்யசிரோமணி பரீக்ஷையில் தேறினவர்கள். இந்த இரண்டு குமாரர்களும் தக்கவர்களால் மிகநன்கு மதிக்கப்பெற்றவர்கள். பிதாவும் புத்ரர்களும்,

“தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்”

“மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்”

என்னும் திருக்குறள்களுக்கு இலக்கியமாக விளங்குகிறார்கள்.

ஐரோப்பாக்கண்டத்திலுள்ள கீழ்த்திசைப் பாஷா நிபுணர்கள் பலர், மஹாபாரதத்தை எழுத்துளண்ணிப்படித்து ஆராய்ச்சி செய்து அதிலிருந்து பல அரியவிஷயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்; மஹாபாரதத்தின் பெருமையைப் பலபடப் புகழ்ந்து எழுதுகிறார்கள். இதன்விவரத்தையும் ‘மஹாபாரதமும் திராவிட பாஷைகளும்’ என்னும் புஸ்தகத்தில் பரக்கக்காணலாம்.

இங்ஙனம் பலவகையாலும் சிறப்புவாய்ந்ததும் ஐந்தாம் வேதமென்று கொண்டாடப்படுவதுமான மஹாபாரதத்தைத் தூஷிக்கிறவர்களைப்பற்றி நான் என்ன சொல்வது? அவர்கள், அதனால் ப்ரதிபாதிக்கப்படுகிறவனும், ‘ஹாஸ்தாயைநூ ஹரிஹ்வுயே’ என்கிறபடி அதனின்றும் வேறுகாதவனுமான பகவானையே தூஷிப்பவர்களாவார்கள். அவர்களுக்கு நல்ல அறிவை அளித்தருளும்படி எல்லாம்வல்ல கடவுளைப் ப்ரார்த்திக்கிறேன்.

என்னிடத்துள்ள குற்றங்குறைகளுக்கு அளவே இல்லை. அவைகளை யாரேனும் சொல்லுவார்களானால் அவர்கள் உண்மை சொன்னார்களென்று நினைத்துப் பொறுத்துக்கொண்டு அவைகளை நீக்கிக்கொள்ளுதற்கு இயன்றவரை முயலுவேன். சிலர் மஹாபாரதத்தையும் சிலர் சாந்திபர்வத்தை மொழிபெயர்த்து உதவிய பெரியோர்களையும் நிந்தித்தார்களென்று கேட்டமையாலும் அவர்களுக்கு ஸமாதானம் கூறுவது என் கடமையென்று தோன்றினமையாலும் இவ்வளவு எழுத நேர்ந்தது. பொறுத்தருளும்படி வண்ணம் பெரியோர்களை ப்ரார்த்திக்கிறேன்.

நான் அடையும் நன்மைகள்.

மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிடத்தொடங்கியதில் நான் அடைந்த நன்மைகள் பல. அது, ஒன்றுக்கும்பற்றுத என்னை உலகம் அறியச்செய்தது; உலகமுள்ளவரையில் என்றும் அழியாத பெரும்புகழை எனக்கு அளித்தது. இந்தக்காரியம் பூர்த்தியான பிறகு என்மனம் ஆனந்தவெள்ளத்தில் திளைத்தாடுகின்றது. 'இதனைச் செய்யத்தொடங்கியதில் நீ மிக்க ச்ரமங்களை அடையவில்லையா?' என்று என்னைச் சிலர் கேட்கக்கூடும். தாங்கமுடியாத ச்ரமமே இருந்ததென்பதும் இப்பொழுதும் இருக்கிறதென்பதும் உண்மையே. ஸாதாரணமாக எந்தப் பெருங்காரியத்தைச் செய்வதும் ச்ரமம்தான். பல தக்க பண்டிதர்களையும் உதவிக்காக மற்றும் பலரையும் வைத்துக்கொண்டு பலவருஷங்களில் செய்யக்கூடிய பெருங்காரியமாதலாலும், அதிகமான பொருளுதவி வேண்டினமையாலும், கிடைத்த உதவி போதாமையாலும் ச்ரமம் அதிகமாகவே இருந்தது. நமது நாட்டார் தாம் செய்யவேண்டிய உதவியைச் செய்யக்கூடிய அளவு செய்திருப்பார்களாலால் எனக்கு இவ்வளவு ச்ரமம் நேர்ந்திராது. பிந்திக்கிடைத்த உதவிகள் முந்திக்கிடைத்திருந்தாலும் இவ்வளவு ச்ரமம் இருந்திராது. வனபர்வ இரண்டாம்பாக முகவுரையிலும் மற்றும் பலபர்வங்களின் முகவுரைகளிலும் நான் தெரிவித்திருக்கிற சில பரோபகாரிகள் மனமுவந்து உதவிபுரிய முன்வந்திராவிட்டால் இந்த அரியபெரியநற்காரியம் இம்மட்டிலாவது பூர்த்தி அடைந்திராது. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிதலை இங்கும் தெரிவிக்கிறேன். அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் மேலும் மேலும் அளித்தருளும்படி எல்லாம்வல்ல கடவுளை ப்ரார்த்தித்துக்கொண்டே யிருக்கிறேன்.

காரியம் நடைபெறுங்காலத்தில் அளவில்லாத ச்ரமத்தை அடைந்ததல்லாமல் காரியம் பூர்த்தியான பிறகும் கவலைப்படும்படியாகச் செல்லும்வகைகள் இருந்தாலும், பல லட்சங்கள் பொருள்தேடிக் குவித்துவைத்திருந்தால் அடையக்கூடுமென்று எதிர்பார்க்கும் திருப்தியைக்காட்டிலும் பலமடங்கு அதிகமான திருப்தியை இந்தக்காரியம் பூர்த்தியானதில் நான் அடைகிறேன். என் குடும்பத்தாரும் அப்படியே நினைக்கிறார்கள். ஸ்ரீமஹாபாரத புஸ்தகத்தில் இன்னும் 200 பிரதிகள் செல

வாகுமாறல் எனக்கு இருக்கிற கவலைமுழுதும் நீங்கிவிடும். தமிழ் நாட்டிலும் வேறுதேசங்களிலும் இதர தீவுகளிலுமுள்ள தமிழ் மக்களின் பெருந்தொகைக்கு இந்தச் சிறுதொகை மேருவுக்கும் ஓரணுவுக்கும் அல்லது கடல்நீருக்கும் ஒரு திவலைக்குமுள்ள அளவு கூட ஒப்புச்சொல்லமுடியாது. இதுவரை நடத்தி நிறைவேற்றி யருளிய கடவுள் மிச்சமுள்ள சிறுகவலையையும் விரைவில் நீக்கி அருள்வானென்றே நம்பிக்கொண்டிருக்கிறேன்.

'கடவுள் ஒருவன் உண்டு. அவனே உலகமனைத்தையும் காக்கிறான். அவன் என்னையும் கைவிடான்' என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. அவன் என்னைக் கைவிடாமல் காக்கிறானென்பதற்குரிய அடையாளங்களை நான் அப்போதப்போது காண்கிறேன். முன்னம் அறியாத இடங்களிலிருந்து, நான்பாராமலும் கேளாமலும், உதவிகிடைத்துவருகிறது. அப்படிப்பட்ட உதவிகள் பல ஸமயங்களில் நேர்ந்ததுண்டு. அதற்குக் கடவுளுடைய திருவருள்தவிர வேறு காரணம் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

தற்காலம் கிடைத்துவருகிற ஒரு பேருதவியை என்னவென்று சொல்லுவேன்! கடவுள் தோன்றுத் துணையாயிருந்து காப்பாற்றுகிறானென்பதற்கு இதுவே தக்க நிதர்சனமாம். தேசாந்தரத்திலுள்ள ஒரு பரோபகாரி எனக்குச் சில மாதங்களாக உபகாரச் சம்பளம் அளித்து வருகிறார்கள். நான் அவர்களைப் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை. நம்மவர்களில் இப்படி உபகாரம் செய்யக்கூடியவர்கள் இருப்பார்களென்று நான் எதிர் பார்த்ததுமில்லை. சென்ற மேமீ 3வ காலையில், நான் ஒரு நண்பரோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தேன். அப்போது, நான் அடைந்த பல ப்ரமங்களையும் சொல்லிவிட்டு, 'கிடைத்ததைக்கொண்டு ஜீவனம் செய்துகொண்டும் நல்ல காவியங்களைப் படித்துக்கொண்டும் இனிது பொழுதுபோக்கிவந்த என்னைக் கடவுள் இந்தப் பெரிய காரியத்தில் இழுத்துவிட்டுப் பலபல துன்பங்களுக்கு உள்ளாக்கிவிட்டார்' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஒரு கடிதம் வந்தது. அதில், மஹாபாரதத்தில் 6 பிரதிகள் அனுப்பும்படி ரூ. 300-க்கு ஒருசெக்கு (Cheque) வந்தது. அதைத் தவிர, பின்வரும் விஷயமும் எழுதியிருந்தது:

'* * * * * * *

23rd April, 1932.

DEAR MR. RAMANUJACHARIAR,

* * * * * * *

I offer you my hearty congratulations on the completion of the Mahabharata. Your difficulties, anxieties and troubles must have been very very great and now you may enjoy your well deserved rest. In order that you may be free from financial worries and that you may be kept above physical wants, I have instructed my bankers to remit you Rs. 25 p.m. on the 1st of every month for your life time commencing from the 1st May, 1932. I pray that God may bless you with a long life.

Yours very sincerely,

* * *

P.S.—I like to remain incognito and would request you not to publish my name in print.'

அதைப் பார்த்தவுடன், நான் அடைந்த தன்மையை உடனிருந்த நண்பரும் ஸர்வஸாக்ஷியான கடவுளுமே அறிவர். நான் கடவுளை நொந்துகொண்டிருந்தபோது இந்த நற்செய்தி வந்தமையால், கடவுளே நேரில் வந்து, 'நான் இருக்கிறேன். உன்னைக் கைவிடமாட்டேன்' என்று உறுதிகூறியதாக நினைத்தேன். கடவுளுக்குப் பல்லாண்டு கூறினேன். அந்தக் கடிதத்தைக் கண்ணில் ஒற்றிச் சிரமேல் வைத்துக்கொண்டேன். இந்த உபகாரத்தை நான் எதற்கு ஒப்புச்சொல்வேன்? இந்த மஹாபுருஷருக்கு என்மீதுள்ள அவ்யாஜமான அன்பும் ஸ்ரீமஹாபாரதத்திலுள்ள அபிமானமும் பின்வரும் கடிதங்களாலும் நன்கு விளங்கும்.

* * * *

'* * * * *18—10—32*

MY DEAR SIR,

I trust you are receiving the monthly remittances from Messrs. Thomas Cook & Sons regularly. I shall be glad to be informed at any time when there is any delay so that I may set things right, if need be.

Yours most affectionately,

* * * *

'* * * *

* * * 14—11—32.

My Dear Sir,

I am enclosing herewith a copy of a photo of mine. I had no photos of mine at all and yesterday a friend took one for you.

Kindly send me per V.P.P. one complete set of the Tamil Mahabharatha. This is required for a friend of mine * * *

Yours most affectionately,

* * * *,

இந்த மஹோபகாரியினுடைய பேருதவிக்கு எதை ஒப்பிடுவ தென்று எனக்குத் தெரியவில்லை. கற்பக விருக்ஷம் கேட்டதைக் கொடுக்கும்; சிந்தாமணி நினைத்ததைக் கொடுக்கும். கௌதம னும் நினையாமலும் கொடுக்கும் ஒன்றை என்னவென்று சொல் வது! இப்படிப்பட்ட குணநிதியை உலகம் அறியும்படி செய்வது எனது கடமையாகும். நான் இவர்களைத் தக்க இடத்தில் வைத்து இவர்களுடைய புகழ் உலகமுள்ள வரையில் நிற்கும்படி செய்ய எல்லாம்வல்ல இறைவன் இனிது அருள்புரியவேண்டும்.

ஸ்ரீ மஹாபாரத ஸம்பந்தமாக எனக்குக் கிடைத்திருக்கிற நற்சாக்ஷிப் பத்திரங்களாலும் ஸமாசார பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிற மதிப்புரைகளாலும் மற்றும் சில விவரங்கள் வெளி யாகலாம். இந்தப் பெருமைகளெல்லாம் எனக்குக் கிடைத்தது ஸ்ரீமஹாபாரதத்தினாலன்றே! இந்த மஹாபாரதப் பதிப்பே பல தக்கவர்களுடைய பழக்கங்களையும் பல நன்மைகளையும் நான் அடையக்காரணம் ஆயிற்று. அவைகளை நானே தெரிவிப்பது முறையன்றுதலால் இம்மட்டோடே நிறுத்துகிறேன்.

மஹா பாரதத்தினால் நன்மை அடைந்தவர்களுள் நானும் ஒரு வனுதலாலும், அந்த முறையில் எனது சொந்த அனுபவத்தைத் தெரிவித்தல் அவசியமாதலாலும், உண்மை பேசுதல் குற்றமா காதென்னும் துணிபினாலும், இங்ஙனம் என்னைப்பற்றியும் தெரி விக்கலானேன். பொறுத்தருளும்படி பெரியோர்களை மிகவும் ப்ரார்த்திக்கிறேன்.

சில பொருத்தங்கள்.

ஸ்ரீ மஹாபாரதத்திற்கு, ஸகல ஞானத்தையும் தருதலால் ஐந்தாம்வேதமென்றும் ஜயத்தைத் தரத்தக்கதாதலால் 'ஜயம்' என்றும் பெயர்கள் வந்திருக்கின்றன. 'ஜ' முதலெழுத்தாகவும் 'ய' கடையெழுத்தாகவும் அமைந்ததும், பதினெட்டு எழுத்துக்களாலானதுமான (1) ஒரு மஹாமந்திரத்தினுடைய விவரணம் மஹாபாரதமென்றும், அதன் முதல் எழுத்தையும் கடைஎழுத்தையும் சேர்த்து (2) 'ஜய' என்று இதற்குப் பெயர் அமைக்கப்பட்டதென்றும் பெரியோர் கூறுவர். இந்த, 'ஜய' என்பதற்கும் கணிதசாஸ்திரத்திற் சொல்லிய கடபயாதி முறைப்படி பதினெட்டு என்பதுபொருள். (3) பதினெட்டுப் பர்வங்களையுடையதும் (4) பதினெட்டு அக்ஷௌஹிணி சேனைகளுக்கு நடந்த (5) பதினெட்டு நாள் போரைத் தெரிவிப்பதும் (6) பதினெட்டு அத்யாயங்களையுடைய பகவத்கீதையைத் தன்னகத்துக் கொண்டதுமான இந்த மஹாபாரதத்திற்கு மூலமந்திரம் பதினெட்டு எழுத்துக்களுள்ளதாயிருப்பதும் பதினெட்டு என்று பொருள் தரும் படியான 'ஜய' என்பது பெயராக அமைந்திருப்பதும் அறிவுடையோர் நுணுகி ஆராய்ந்து வியக்கத்தக்கவை.

இவையல்லாமல், நமது மொழிபெயர்ப்பின் கடைசிஸஞ்சிகையாகிய 45-வது ஸஞ்சிகை 1932வது பிப்ரவரிமீ 17உ வெளிவருமென்று ஹிந்து பத்திரிகையில் 15, 17, 19 ஆகிய மூன்று தினங்களில் பிரசுரித்திருக்கிறது. அந்த 17-ம் தேதியில் வெளியிடக்கூடாமல் 18உ தான் அந்த ஸஞ்சிகை அச்சுக்கூடத்திலிருந்து என்னிடம் வந்துசேர்ந்தது. ஆதலால், பிப்ரவரிமீ (7) 18உ கடைசிஸஞ்சிகை வெளிவந்தது. ஸ்ரீ மஹாபாரதம் பூர்த்தியானதற்காக, கும்பகோணம் போர்ட் டர் டவுன் ஹாலில் நடந்த ஸந்தோஷக்கொண்டாட்டத்தை முதலில் மார்ச்சுமீ 12உயிலும், பிறகு 14உயிலும் நடத்த நினைத்தார்கள். அப்படி நடத்தப்படாமல் 18உயே நடைபெறும்படி தெய்வாதீனமாக நேர்ந்தது. ஒரு கேஸ் ஸம்பந்தமாகக் கும்பகோணம் ஸப்கோர்ட்டில் 18உ விசாரணைக்குத் தேதி குறிப்பிட்டிருந்ததாலும், அதற்காக, சென்னையிலிருந்து ஸ்ரீமான், V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களும் ஸ்ரீமான், K. V. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்களும் வருவதாயிருந்ததாலும், இரண்டு கனவான்களும் இந்த மஹா

பாரதப்பதிப்புவிஷயத்தில் மிக்க அபிமானமுடையவர்களாதலா லும், அந்த ஸமயம் வைத்துக்கொள்ளலாமென்று நிச்சயித்தார் கள். அந்தப்படியேஅது (8) 18உ நடைபெற்றது. சென்னை ஸம்ஸ் கிருதஸேவாஸமிதியார் மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ்தோட்டத் தில் மஹாபாரத மொழிபெயர்ப்புப் பூர்த்தியானதற்காக நடத்திய ஸந்தோஷக்கொண்டாட்டத்திற்கும் ஒருவாறு பதினெட்டின் ஸம் பந்தம் இல்லாமற்போகவில்லை. அது நடந்தினம் இங்கிலீஷ் ஏப் ரல்மாதம் 15உயும் தமிழ்ச் சித்திரை மாதம் 3உயும் சேர்ந் தது. அந்த இரண்டும் சேர்ந்து (9) பதினெட்டாகும். அன்று ஸ்ரீராமநவமியும் ஆயில்ய நக்ஷத்திரமும் சேர்ந்த தினமு மாம். நமது தேசத்தில் திதியினாலும் நக்ஷத்திரத்தினாலும் நாட்களைக் கணக்கிடுவது வழக்கமாயிருப்பதற்கேற்ப இங்கே திதியும் நக்ஷத்ரமும்சேர்ந்து பதினெட்டைக் குறிக்கும். நவமியா னது திதியில்ஒன்பதாவது; ஆயில்யம் நக்ஷத்ரத்தில்ஒன்பதாவது. இரண்டும் சேர்ந்து (10) பதினெட்டு ஆகும். அக்கழகத்தார் எனக்கு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்துப் பட்டமளித்தது ஹிந்துபத்திரிகையில் ஏப்ரல் மாதம்(11)18உதான் வெளிவந்தது.

மேலும், நான் மஹாபாரதமொழிபெயர்ப்பைத் தொடங்கிய பொழுது வேலைபார்த்தது, கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலில். அதில், 1893 - ம்வது முதல் 1910 - ம் வருஷம் முடிய (12) பதினெட்டு வருஷம் இருந்தேன். மஹாபாரத வேலையைத் தொடங்கி நடத்துவதற்கு ஆதாரமாக இருந்த வீடு, கும்ப கோணத்தில், மஹாவித்வான் பரம்மஶ்ரீ மஹாமஹோபாத்யாய, தாக்ஷிண்ணத்யகலாநிதி, டாக்டர், வே. சாமிநாத ஐயரவர்க ளுடையது. அதில், 1904-ம் வது முதல் 1921-ம் வருஷம் முடிய (13) பதினெட்டு வருஷம் குடியிருந்தேன். 1908-ம் வது முதல் 1932-ம்வருஷம் வரையில் 24 வருஷங்களில் ஸ்ரீ மஹாபாரதப் பதிப்பு முடிவுஅடைந்ததாலும், ஐரோப்பியயுத்தம் காரணமாக 6 வருஷம் தடைப்பட்டு ஸஞ்சிகை வெளிவந்தகாலம் (14) பதி னெட்டு வருஷமே ஆகும். ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்பைச் செய்யலாமென்று சில நண்பர்கள் சொல்ல, அந்தப்படி நிச்ச யித்து, முன்னதாகச் செய்யக்கூடிய வேலையைச்செய்ய முதலில் 1905-ம் வருஷம் தொடங்கினேன். அதுமுதல் நடந்துவந்து, 1932-ம் வருஷத்தில் பூர்த்தியாயிற்று. இவற்றுக்கு இடையில் 27 வருஷங்களாயின. இருபத்தேழு வருஷங்களுக்கும் 324 மாதங்

களாகின்றன. ஆகவே, பதினெட்டுப் பர்வங்களும் 324 மாதங்களில் நிறைவேறின. இம்முறையில் அவை ஸாஸரி (15) பதினெட்டு மாதங்களுக்கு ஒருபருவம்வீதம் பூர்த்தியாகியிருக்கின்றன.

என் முழுப்பெயரை, 'மணலூர் வீரவல்லி இராமாநுஜாசாரியன்' என்று எழுதுவது வழக்கம். அதில் அடங்கிய எழுத்துக்கள் (16) பதினெட்டு. என்னுடைய பெயரின் முதலெழுத்து இங்கிலீஷில் 'R' என்பது. அது அந்த அக்ஷரவரிசையில் (17) பதினெட்டாவது. இவையல்லாமல், இன்னும் ஒரு ரகசியமும் வெளியிடுவேன். எம்பெருமான் இந்த மஹாபாரதத்தை வெளியிட வியாஜமாகக் கொண்ட என்னுடைய ஜன்மநக்ஷத்ரம் கேட்டை. அது (18) பதினெட்டாவது நக்ஷத்ரமாகும்.

மேற்கூறியவை பதினெட்டின் ஸம்பந்த மூடையனவாக இருக்கவேண்டுமென்று ஒருவரும் கருதிச் செய்தவையல்ல; தாமாகவே அமைந்தவை. இன்னும் நுணுகி ஆராய்ந்தால் பின்னும் சில பதினெட்டுக்கள் கிடைக்கலாம். ஆனாலும், மஹாபாரதத்திற்குப் பதினெட்டு ஏற்ற எண்ணதலால் பொருத்தங்களும் பதினெட்டே போதுமென இவ்வளவோடு நிறுத்துகிறேன். இப்படிப்பலவிதத்திலும் பதினெட்டின் பொருத்தம் அமைவது தெய்விகம் என்றே நினைக்கிறேன்.

மஹாபாரதத்தில் தமிழ்ச் சொல்லாக வழங்குவனவற்றுள் முக்கியமானது, 'மணலூர்' என்பது. அந்தப்பெயரையுடைய ஊரிலும் மஹாபாரதத்திற்குப் பொருந்திய எண்ணை பதினெட்டாவது நக்ஷத்ரமாகிய கேட்டையிலும் அடியேனைப்பிறப்பித்ததனால், மஹாபாரதத் தமிழ்மொழிபெயர்ப்பை அடியேனைக் கொண்டே நிறைவேற்றுவதென்பது எல்லாம்வல்ல எம்பெருமானுடைய திருவுள்ளம் போலும். அடியேன் செய்யக் கருதியிருக்கும் மற்ற நற்பணிகளையும் இனிது நிறைவேற்றியருளும் வண்ணம் அவனது திருவடித்தாமரைகளைச் சிந்தித்து வணங்குகிறேன்.

மேலே கூறியவற்றுள் பெரும்பாலன ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியானபிறகே நிச்சயிக்கக்கூடியவையாதலாலும் கடைசிப் புஸ்தகம் பூர்த்தியாகி வெளிவந்தபிறகு இந்தப் பர்வமே புதிய பதிப்பாக வெளிவந்து முகவுரை எழுதப்படுவதாலும் இவை இங்கே வெளியிடப்பெற்றன.

முகவுரை.

மறைந்துபோன திவ்யப்ரபந்தமாகிய தமிழ்வேதம் இவ்வூரில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ஆராவமுதப் பெருமாளால் வெளிவந்ததென்றும், அதனால் அவருக்கு, 'ஆராவமுதஆழ்வான்' என்று திருநாமம் வழங்கலாயிற்று என்றும் சொல்லுவர். ஐந்தாம் வேதமாகிய இந்த மஹாபாரதம் தமிழில் வெளிவரத் தொடங்கியதும் இவ்வூரிலேயே. நான் இடையில் பலவிடங்களுக்குச் சென்றிருந்தும் திரும்ப இவ்வூரிலேயே வந்து இந்த மஹாபாரதம் பூர்த்தியானது, அந்த ஆராவமுத ஆழ்வானுடைய பரமகிருபையாலே என்பது நன்கு விளங்குகிறது.

ஆரா வமுதே! அடியே னுடலம் நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய உருக்கு கின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்! கண்டேன் எம்மானே!

ஓராயிரமாய் உலகேழளிக்கும்
பேராயிரங் கொண்டது ஓர்பீடுடையன்
காராயின காளநன்மேனியினன்
நாராயணன் நங்கள் பிரானவனே.

(திருவாய்மொழி)

இங்ஙனம்,

கும்பகோணம்,
1-1-1933.

ம. வீ. இராமாநுஜாசாரியன்.

குறிப்பு.—Justice Telang அவர்கள், ஸ்ரீ மஹாபாரதத்துக்கு வ்யாக்யானம் செய்திருக்கிற நீலகண்டரைப்பற்றி, "Whatever his merits as an exegete, and even these are marred by a persistent effort to read his own foregone conclusions into the text he comments on." (P. 203 of The Sacred Books of the East, Edited by Max Muller, Vol. VIII) என்று எழுதியிருப்பது, மஹா வித்வான் ப்ரம்மஸ்ரீ, வேதாந்த கேஸரி, மஹா மஹோபாத்யாய, பைங்காநாடு கணபதி சாஸ்த்ரிகளவர்களுடைய அபிப்பிராயத்தை நன்கு வற்புறுத்தும். இதன் 7-வது பக்கம் மூன்றுவது வரியில் பார்க்க.

ஸ்ரீ:

மூன்றும் பதிப்பின் முகவுரை.

ஸ்ரீராமாயணத்தில் ஸுந்தரகாண்டம்போல, ஸ்ரீமஹாபாரதத்தில் மிக முக்கியமானது, இந்த விராடபர்வமாகும். மஹாபாரதத்தை ஒரு விருக்ஷமாக உருவகம்செய்து, அதற்கேற்ப, பல பர்வங்களையும் அம்மரத்தின் பல உறுப்புகளாகக் கூறுமிடத்து, இந்த விராடபர்வத்தை அதன் * ஸாரமாகக் கூறியிருத்தலே, இதன் சிறப்பை நன்குவிளக்கும். பெரியோர்கள் தமது இஷ்டஸித்திக்காக இந்தப்பர்வத்தைப் பாராயணம் செய்வதுண்டு. மற்றக்காலங்களைக் காட்டிலும், மழையில்லாதகாலத்தில் இதனையே படித்து வருகிறார்கள். பாண்டவர்களுக்கு ஒருவருக் கொருவரிடமுள்ள அன்புடைமையும், நன்னம்பிக்கையும், அவர்களுடைய நன்றியறிதலும், யுதிஷ்டிரர் குறிப்பை அறிந்து மற்றப் பாண்டவர்கள் நடத்தலும், த்ரௌபதியின் கற்புடைமையும், யாரும் தேசகாலங்களுக்கு ஒத்துநடக்க வேண்டுமென்பதும், அடாது செய்தவர் படாது படுவர் என்பதும், பொறுத்தார் அரசாள்வர் என்பதும் முதலிய பலவிஷயங்கள் இந்தப்பர்வத்தில் நன்கு விளங்கும். இதில், தெளம்யர் பாண்டவர்களுக்கு நற்புத்திக்கூறுமிடம் படிப்பவர் மனத்தைக் கவரத்தக்கது.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இந்த விராடபர்வம் முதன்முறை 1912-ம் வருஷத் தொடக்கத்தில் வெளியிடப்பட்டது. அது ஸம்பந்தமானயாவும் இதன் பின்னுள்ள அதன் முகவுரையால் நன்கு விளங்கும். இதன் இரண்டாம் பதிப்பு 1918-ம் வருஷத் தொடக்கத்தில் வெளிவந்தது. ஸ்ரீமஹாபாரதத்தை மொழிபெயர்த்துப் பதிப்பித்தலாகிய பெருங்கார்யத்திற்குத் தக்கபடி ஸௌகர்யங்களை முன்னதாக அமைத்துக்கொண்டு தொடங்காமையால், எல்லாப் பர்வங்களிலும், அப்போதப்போது ஸௌகர்யத்திற்குத் தக்கபடி சிலசில பிரதிகளே அச்சிடப்பட்டமையாலும், இந்தப் பதிப்புவேலையைத் தொடங்கிப் பதினேழு வருஷங்களுக்கு மேலானமையாலும் இடையிடையே பல ஸந்திகைகள் குறைவுபட்டன. பிரகடனபத்திரிகையில், 'இதுவரையில் பதினொருபர்வங்கள் பூர்த்தியாகி விலைக்குக் கிடைக்கும்' என்று கூறப்பட்டிருப்பினும், எல்லாப் பர்வங்களையும் சேர்த்துக் கொடுப்பதற்கு ஒருபோதும் நேரவில்லை. ஒருஸமயம் இருந்த புஸ்தகம் ஒருஸமயம் இருந்ததில்லை. சிலர், ஒரே புஸ்தகத்திற்குப் பலமுறை எழுதியதுண்டு. படிப்பவர்களுக்கு வேண்டும்போது புஸ்தகம் கிடைக்கவில்லையென்றால் அவர்

---

* ஸ்ரீமஹாபாரதம், ஆதிபர்வம் 11-ம் பக்கம் பார்க்க.

'விராடோத்யோக ஸாரவாந்' என்று வடமொழி மஹாபாரதம் கூறுகிறது.

களுக்குள்ள ஊக்கம் பெரிதும் குறைகிறது. ஆகையால், கையிலில் லாத பழைய ஸஞ்சிகைகளை அச்சிட்டுக் கொடுத்தலும், புதிய ஸஞ் சிகையை வெளியிடுவதுபோலவே, அவசியமாயிற்று. புதிய ஸஞ் சிகை வேலையோடு பழைய ஸஞ்சிகையின் இரண்டாம் பதிப்பு வேலையையும் சேர்த்து நடத்த இயலாமையால், நான் மனத் தளர்ச்சியுற்று வேலையை நடத்தாமலிருந்ததை அறிந்து, பரம ஆப் தர்களும் லோகோபகாரமான இந்த உத்தம கைங்கரியத்தைத் தலைக்கட்டிவைப்பதில் மிக்க ஊக்கங்கொண்டிருப்பவர்களுமான ஸ்ரீமான் ராவ்பகதூர் V. T. கிருஷ்ணமாசாரியரவர்கள், C. I. E., பல நண்பர்களுடன் கலந்து ஆலோசித்து, இந்த மஹா பாரதப் பதிப்பைப் பூர்த்தி செய்தற்கு இன்றியமையாத ஸௌகர் யங்களைச் செய்துவருகிறார்கள். அவர்கள் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பை வடமொழி மஹாபாரதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து மிக்க ஸ்ரத்தையுடன் படித்து வருபவர்களாதலால், இதனை விரைவில் அச்சிட்டுப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் அவர்களுக்கு மிகுதியாயிருக்கிறது. ஸ்ரீமஹாபாரத சம்பந்தமான பதிப்புவேலை முழுமையும் சில மாதங்களில் பூர்த்திசெய்துவிட வேண்டுமென்று தாங்களாகவும் தங்களுடைய நண்பர்கள் மூல மாகவும் அவர்கள் என்னை அடிக்கடி தூண்டி எனக்கு ஊக்கம் அளித்து வருகிறார்கள். இந்தத் தருமசீலர்கள் ஸ்ரீமஹாபாரத கைங்கர்யத்தை ஆதரித்து நடத்திவருகிற முறையைப் பின்னர் விவரமாகத் தெரிவிப்பேன்.

இந்தப் பரமோபகாரிகள் மனமுவந்து செய்துவருகிற பெரு தவியினாலேயே, பழைய ஸஞ்சிகைகளில் பல இரண்டாமுறை பதிப்பிக்கப்பெற்றன; அந்த முறையில் இந்த விராடபர்வமும் இப் பொழுது பூர்த்தியாயிற்று. புதிய ஸஞ்சிகை வேலையும் விரைவாக நடந்துவருகிறது. அவர்களுடைய பெருதவியால், பல வருஷங்க ளாக நடந்துவருகிற இந்த அரியபெரிய நற்கார்யம் சில மாதங்க ளில் பூர்த்தியாகுமென்றே நம்புகிறேன். எல்லாம் வல்ல ஸர்வேஸ் வரன் தோன்றுத்துணையாக நின்று நிறைவேற்றியருளுக.

இந்த மஹாபாரதப் பதிப்புவிஷயத்தில், இவ்வளவு ஸ்ரத்தை எடுத்துக்கொண்டிருக்கிற இந்தப் பரமோபகாரிகளுக்கு மஹா பாரத ப்ரதிபாத்யனை ஸ்ரீகண்ணபிரான் எல்லா நன்மைகளையும் அளித்தருளுக. இங்ஙனம் பிரார்த்தித்தலன்றி நான் அவர்களுக் குச் செய்யும் கைம்மாறு யாதுளது? உலகுள்ளளவும் அவர்கள் புகழ் நின்று நிலவுக.

மணலூர்,
நரசிங்கன்பேட்டை, S. I. R.
2—3—1926

இங்ஙனம்,

ம. வீ. இராமானுஜாசார்யன்.

ஸ்ரீ:

முதற்பதிப்பின் முகவுரை.

பல அரியவிஷயங்களைத் தன்னிடத்துக்கொண்டிருக்கிற இந்தப் பெருநூலை வடமொழிக்கு ஸரியாக மொழிபெயர்த்து வெளியிடுவதிலுள்ள ஸ்ரமம், அறிவுடையோர்களுக்குத் தெரிந்ததே யாதலால், நான் இங்கு அதனை அதிகமாக விவரிக்கவில்லை. இவ்விஷயத்தில் எனக்கு உண்டான கவலை எல்லையில்லாமலிருந்தது. அது ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவருளால் ஒருவாறு நீங்கித் தைர்யம் அடைகிறேனென்பதைக்கேட்கிற ஆஸ்திகஸஜ்ஜனர்கள் த்ருப்தியடைவார்கள். மொழிபெயர்ப்பு அனேகமாய்ப் பூர்த்தியாயிற்றென்றே சொல்லலாம். உலகத்தில் வழங்கும் பல பாஷைகளிலுமுள்ள நூல்களுள்ளும் இவ்வளவு பெரியதும் அரியதும் ஹிந்துமதஸம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிவிப்பதுமான நூல் வேறில்லை என்பது எழுத்தாலும் சொல்லாலும் எல்லாரும் ஒப்புக்கொண்டது. எதிர்பாராத பல அஸௌகர்யங்களால் சிலசில ஸமயங்களில் ஸஞ்சிகைகள் காலத்தில் வெளிவராமற் போயின. பெரியோர்கள், கார்யத்தின் ஸ்ரமத்தையும் பெருமையையும் உத்தேசித்து க்ஷமிப்பார்களென்று நம்புகிறேன். இனி, ஸஞ்சிகைகளைக் காலத்தில் வெளியிடவேண்டுமென்று மிக முயற்சிசெய்து வருகிறேன்.

இந்த மஹாபாரதம் பூர்த்தியானபிறகு, விரிவான முகவுரையொன்று எழுதப்பெறுமாகையால், இந்தப் பெருங் கார்யத்துக்கு வேண்டிய உதவிகளைச்செய்து ஆதரித்துவருகிற வித்வான்கள் பிரபுக்கள் முதலியவர்களின் பெயர்களைப் பின்பு வெளியிடுவேன். அவசியம் தெரிவிக்கவேண்டிய சில விஷயங்களைமாத்ரம் இங்கே தெரிவிக்கிறேன்.

தேசாபிமானமும் பாஷாபிமானமுமுள்ள கனவான்கள் கையொப்பம்செய்து உத்தமோத்தமமான இந்த ஸத்கார்யத்தில் என்னை உத்ஸாஹப்படுத்தி வருவதற்கு நான் அவர்கள் விஷயத்தில் மிக்க நன்றியறிவுள்ளவனாக இருக்கிறேன்.

முகவுரை.

திருப்பனந்தாள் ஆதீனம், மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ. காசிவாஸி, சோமசுந்தரத்தம்பிரானவர்கள், நான் இதனைத் தொடங்கியதுமுதல், அடிக்கடி விசாரித்து ஆதரித்து, எனக்கு மனத்தளர்ச்சி உண்டாகாமல் ஊக்கமளித்துவருவதோடு மஹாபாரதத்துள் * ஸாரமான விராடபர்வத்தை விரைவில் வெளியிட வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லி, அதற்குவேண்டும் பொருளுதவியும் செய்தார்கள். அவர்கள் செய்த இப் பெருநன்றியை நான் எந்நாளும் மறவேன்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

என்றபடி, அவர்கள் செய்யும் பேருதவிக்கு யான் செய்யும் கைம்மாறு யாதுளது?

இந்நூலின் பெருமையையும் எனது சிறுமையையும்பார்த்து, என்னவிதமான குற்றங்களிருப்பினும்க்ஷமித்து, தெரிவிக்கவேண்டியவைகளைத் தெரிவித்து, என்னைத்திருத்தி ஆதரித்து, இக்கார்யம் பூர்த்தியாகும்படி செய்யவேண்டுமென்று பெரியோர்களை நிரம்பவேண்டுகிறேன்.

இடையூறு சிறிதுமின்றி, இஃது, இனிது நிறைவேறும்படி செய்வித்தருளவேண்டுமென்று எல்லாம்வல்ல ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறேன்.

மணலூர்,
13—3—1912.

இங்ஙனம்,
ம. வீ. இராமாநுஜாசார்யன்.

---

* 'விராடோத்யோகஸாரவாந்' என்பது மஹாபாரதத்திலுள்ள வாக்யம்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

விராடபர்வம்.

விஷயஸூசிகை.

பாண்டவப்ரவேசபர்வம்.

அத்யாயம்.		பக்கம்.
1	கடவுள் வணக்கம்	1
	ஜனமேஜயர் பாண்டவர்களுடைய அஜ்ஞாதவாஸத்தை விரிவியது	1
	யுதிஷ்டிரர் அரணிமுதலியவற்றை ப்ராம்மணருக்குக் கொடுத்தது	2
	தௌம்யர் பாண்டவர்களுக்குத் தேறுதல் சொல்லியது ...	3 - 4
	யுதிஷ்டிரர், தம்முடனிருந்த தபஸ்விகளிடம் அஜ்ஞாத வாஸத்துக்கு அனுமதிகேட்டது	5
2	பாண்டவர்கள் அஜ்ஞாதவாஸம் செய்யும் இடத்தை நிச்சயித்தது	6 - 7
	தர்மபுத்ரர், தாம் அஜ்ஞாதவாஸம் செய்யும் விதத்தை ப்ரதிஜ்ஞை செய்தது	7 - 8
3	பீமன், தான் அஜ்ஞாதவாஸம் செய்யும் விதத்தை ப்ரதிஜ்ஞை செய்தது	9 - 10
	அர்ஜுனன், தான் அஜ்ஞாதவாஸம் செய்யும் விதத்தை ப்ரதிஜ்ஞை செய்தது	12 - 13
4	நகுலன், தான் அஜ்ஞாதவாஸம் செய்யும்விதத்தை ப்ரதிஜ்ஞை செய்தது	14
	ஸஹதேவன், தான் அஜ்ஞாதவாஸம் செய்யும் விதத்தை ப்ரதிஜ்ஞை செய்தது	15
	த்ரௌபதி, தான் அஜ்ஞாதவாஸம் செய்யும் விதத்தை ப்ரதிஜ்ஞை செய்தது	16 - 17
5	தர்மபுத்ரர், தௌம்யர் முதலியோர் வஸிக்கவேண்டிய இடங்களைக் கூறியது	17
	தௌம்யர் அரசர்களிடத்து ஒழுகவேண்டிய முறையை உபதேசித்தது	18 - 24
	தௌம்யர் பாண்டவர்களை ஆசீர்வதித்தது ...	24
6	பாண்டவர்கள் மத்ஸ்யதேசத்திற்குச் சென்றது ...	25
7	பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களை ஒரு வன்னிமரத்தில் கட்டியது	27 - 32

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

தர்மபுத்ரர், தங்களுக்கு ஸங்கேதப்பேர்களை வைத்துக் கொண்டது 32
8 தர்மபுத்ரர் துர்க்காதேவியைத் துதித்தது ... ... 33 - 35
9 தர்மபுத்ரர் தர்மதேவதையை வேண்டியதும், அவருக்கு ஸந்யாஸிரூபம் வந்ததும் ... ... 36 - 37
பீமன்முதலியோர், அஜ்ஞாதவாஸத்திற்குரிய ரூபத்தைத் தரித்தது 37
தர்மபுத்ரர் விராடஸபையை அடைந்ததும், விராடன் எதிர் சென்று வணங்கியதும் ... ... 37 - 39
தர்மபுத்ரரும் விராடனும் ஸம்பாஷித்ததும், அவர் அவன் ஸபையில் தலைவரானதும் ... ... 39 - 42
10 பீமன் விராடஸபையை அடைந்ததும், சமையற்காரர் களுக்குத் தலைவனாக அமர்ந்ததும் ... ... 42 - 45
11 அர்ஜுனன் விராடனிடம் சென்றதும், உத்தரை முதலி யோருக்குப் பரதம் கற்பிக்க அமர்ந்ததும் ... 46 - 49
12 நகுலன் விராடனை அடைந்ததும், அஸ்வரக்ஷகனாக அமர்ந்ததும் ... ... 49 - 51
13 ஸஹதேவன் விராடனை அடுத்ததும், பசுக்காத்தலை மேற் கொண்டதும் ... ... 51 - 54
14 த்ரௌபதி ஸைரந்த்ரிணையை அடைந்ததும், ஸைரந்த்ரி யாக அமர்ந்ததும் ... ... 54 - 62

ஸமயபாலனபர்வம்.

15 பாண்டவர்கள், மறைவாக ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டது 63
பீமன், சங்கரமஹோத்ஸவத்தில் மல்லனை வென்று பரிசு பெற்றது ... ... 63 - 67
பீமன் முதலியோர் தத்தம் செய்கைகளால் விராடனை மகிழ்வித்தது 67

கீசகவதபர்வம்.

16 கீசகன் த்ரௌபதியைக்கண்டு மோஹித்ததும், தன்கருத் தை ஸைரந்த்ரிணியிடம் வெளியிட்டதும் ... 68 - 69
கீசகன் த்ரௌபதியைப்புகழ்ந்து தன்கருத்தை அவளுக் குத் தெரிவித்தது ... ... 69 - 71
17 த்ரௌபதி கீசகன்வேண்டுகோளை மறுத்தது ... 71 - 72
கீசகன் மறுபடியும் வேண்டியதும், த்ரௌபதி கடிந்து சொல்லியதும் ... ... 72 - 73
18 கீசகன் த்ரௌபதியைத் தன்னிடம் அனுப்பும்படி ஸை ரந்த்ரிணியிடம் வேண்டியது 74

அத்யாயம்.		பக்கம்.
	ஸுதேஷ்ணை கீசகனுக்குப் புத்திகூறியது ...	74 - 75
	கீசகன் பிடிவாதத்தால், ஸுதேஷ்ணை த்ரௌபதியை அவனிடம் அனுப்ப ஸம்மதித்தது	75 - 76
	ஸுதேஷ்ணை த்ரௌபதியைக் கீசகனிடம் மத்யம்வாங்கி வரச்சொல்லியதும், த்ரௌபதி மறுத்ததும் ...	77
	ஸுதேஷ்ணை த்ரௌபதியை வற்புறுத்தியது ...	78
	த்ரௌபதி தேவதைகளையும் தன் மாமனுரையும் ப்ரார்த்தித்தது	78
19	த்ரௌபதி ஸூர்யனைப் ப்ரார்த்தித்ததும், அவன் அவனைக்காக்க ஒரு ராக்ஷஸனை அனுப்பியதும் ...	79
	த்ரௌபதி, கீசகன் வீடுசென்றது	79
	கீசகன் த்ரௌபதியைப் பலாத்காரம் செய்ததும், அவள் விராடன் ஸபைக்கு ஓடியதும்	80
	கீசகன் த்ரௌபதியை உதைத்ததும், ராக்ஷஸன் அவனைக் கீழே தள்ளியதும்	80
	பீமன் கீசகனைக் கொல்லயத்தனித்ததும், தர்மபுத்ரர் குறிப்பால் அவனைத் தடுத்ததும்	81
	த்ரௌபதி விராடனிடம் முறையிட்டது	82 - 84
	ப்ரம்மதேவர் இந்த்ரனுக்குத் தர்மோபதேசம் செய்தது	83
20	த்ரௌபதி விராடனிடம் மறுபடியும் புலம்பியது ...	84 - 85
	விராடன் பராமுகமாயிருந்ததும், த்ரௌபதி புலம்பியதும்	85 - 86
	ஸபையிலுள்ளோர் த்ரௌபதி விஷயத்தில் அனுதாபப்பட்டது	87
	தர்மபுத்ரர் த்ரௌபதியை ஸமாதானம் செய்தது ...	88 - 89
	ஸ்த்ரீகள் ஸ்வதந்த்ரமில்லாதவர்களென்பது ...	88
	த்ரௌபதி ஸுதேஷ்ணையிடம்சென்றதும், அவள் கபடமாக வினவியதும்	90
	த்ரௌபதி கீசகனைக் கந்தர்வர் கொல்வர் என்றது ...	90 - 91
21	கீசகனுடைய பிறப்புமுதலிய வரலாறு	92 - 94
	ஸூதஜாதி விவரம்	92
	உபகீசகர்களின் வரலாறு	93
	ஸுதேஷ்ணையின் பிறப்பும் விவாஹமும்	93
	உத்தரன் உத்தரை இவர்களின் பிறப்பு	93
	விராடன் கீசகனை ஸேனாதிபதியாக்கியது ...	94
	பொறுமையின் சிறப்பு	94
	த்ரௌபதி கீசகனைச் சபியாததின் காரணம் ...	94
22	த்ரௌபதி இரவில் பீமனிடம் சென்றது	95
	பீமன் த்ரௌபதியை வினவியது	96-97

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

த்ரௌபதி, கீசகனால் தனக்கு நேர்ந்த துன்பங்களைக் குறித்து முறையிட்டது 97-105

23 த்ரௌபதி, தன்மேம்பாட்டையும் தனக்கு வந்த தாழ்வையும் கூறிக் கீசகவதத்தை வற்புறுத்தியது ... 107-108

24 பீமன், கீசகனைக்கொல்வதாகச் சொல்லி த்ரௌபதியைத் தேற்றியது 109-111

த்ரௌபதி, கீசகனைக் கொல்லும்படி திரும்பவும் வற்புறுத்தியது 111-113

25 பீமன், கீசகனைக் கொல்வதற்கு உபாயம் சொல்லியது ... 113-114

கீசகன் த்ரௌபதியை மறுபடியும் விரும்பியது ... 114-115

த்ரௌபதி இணங்குவதுபோலக் காட்டி இடம் குறிப்பிட்டது 115

த்ரௌபதி கீசகனிடம் நடந்ததைப் பீமனுக்குச் சொல்லியது 116-117

பீமன் கீசகவதம்செய்வதாக ப்ரதிஜ்ஞைசெய்தது ... 117

த்ரௌபதி, கீசகவதம் மறைவாயிருக்கவேண்டுமென்றது 117-118

26 பீமன், நடனசாலையில் ஒளித்திருந்தது 118

கீசகன், நடனசாலைக்குவந்து பீமனை த்ரௌபதியென்று நினைத்து அவனிடம் பேசியது 119

பீமன் த்ரௌபதிபோலக் கீசகனிடம் பேசியது ... 119-120

பீமனுக்கும் கீசகனுக்கும் மல்லயுத்தம் 120-121

கீசகவதம் 121

பீமன் த்ரௌபதியிடம் விடைபெற்றுச் சென்றது ... 122

த்ரௌபதி இறந்தகீசகனை ஸைபக்காவலாளர்களுக்குக் காட்டியது 122

27 உபகீசகர்கள் த்ரௌபதியைக் கீசகனுடன் தகனம் செய்ய யத்தனித்தது 123-124

த்ரௌபதி முறையிட்டதும், பீமன் உபகீசகரைக் கொன்று அவனை மீட்டதும் 124-126

பீமன் த்ரௌபதிக்குச் சிரோமணியின் கதையைச் சொல்லியது 126-127

28 நகரவாஸிகள் த்ரௌபதியை நகரத்தைவிட்டு விலக்கும்படி விராடனிடம் தெரிவித்தது 128-129

விராடன் த்ரௌபதியைத் துரத்தும்படி ஸுதேஷ்ணைக்குச் சொல்லியது 129

நகரவாஸிகள் த்ரௌபதியைக்கண்டு அஞ்சியது ... 129-130

த்ரௌபதியும் பீமனும் குறிப்பாகப் பேசிக்கொண்டது 130

அர்ஜுனனுக்கும் த்ரௌபதிக்கும் ஸம்பாஷணம் ... 130-131

விஷயஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
	ஸுதேஷ்ணை த்ரௌபதியை வெளிப்படும்படி சொல்லியதும், த்ரௌபதியின் மறுமொழியும் ...	... 131-132
	கோக்ரஹணபர்வம்.	
29	பாண்டவர்களைத்தேடச்சென்ற தூதர்கள், கீசகவதத்தைத் துர்யோதனனுக்குத் தெரிவித்தது	... 133-135
30	துர்யோதனன், பாண்டவர்களைக் கண்டுபிடிக்கும் உபாயத்தை ஆலோசித்தது	... 136
	கர்ணனும் துச்சாஸனனும் சொல்லியவை	... 136-137
31	த்ரோணர் சொல்லியது	... 138-139
	பீஷ்மர் சொல்லியது	... 139-142
32	க்ருபர் சொல்லியது	... 143-144
	துர்யோதனன், பாண்டவர்கள் விராடநகரத்திலிருப்பதை ஊகித்தது	... 144-145
	ஸுசர்மா விராடனைவெல்வது அவசியம் என்றது	... 146
	கர்ணன், விராடதேசத்தின்மீது படையெடுப்போமென்றது	... 146-147
	துர்யோதனன், விராடதேசத்தின்மீது படையெடுக்கும் முறையைத் துச்சாஸனனுக்குக் கூறியது	... 147-148
33	ஸுசர்மா, விராடனுடையபசுக்கூட்டத்தைக் கவர்ந்தது	148-149
	விராடன் போருக்கு ஆயத்தமானது ...	... 149-150
	பாண்டவர்கள் போர்த்துணையாகச் சென்றது	... 151
34	விராடன்சேனைக்கும் ஸுசர்மாவின்சேனைக்கும் யுத்தம்	153-155
35	ஸுசர்மா விராடனைக் கட்டியது ...	... 156
	தர்மபுத்ரர், விராடனைக்காக்கும்படி பீமனுக்குச் சொல்லியது	... 157
	பீமன் விராடனை மீட்டதும், ஸுசர்மாவைக் கட்டியதும்	158-160
	பாண்டவர்கள் விராடன்பசுக்களைத்திருப்பியதும், ஸுசர்மாவை அடிமையாக்கி விடைகொடுத்ததும்	... 160-161
36	விராடன் பாண்டவர்களைப் புகழ்ந்தது ...	... 161-162
	தூதர் விராடநகரில் ஜயகோஷம் செய்தது	... 163
37	துர்யோதனன் முதலியோர் விராடனுடைய பசுக்களைக் கவர்ந்தது	... 164
	இடையன் உத்தரனிடம் முறையிட்டது ...	... 164-165
38	உத்தரன், ஸ்த்ரீகளின் முன்னிலையில் தன்னைப் புகழ்ந்துகொண்டது	... 166
	அர்ஜுனன், தான் ஸாரதியாவதற்கு முயற்சிசெய்தது	... 167-168
	உத்தரன், அர்ஜுனனை ஸாரதியாக்கிக்கொண்டது	... 168-171
	உத்தரன், அர்ஜுனனுக்குக்கவசமுதலியனகொடுத்தது	... 171-172

அத்தியாயம். பக்கம்.

உத்தரைமுதலியோர், பகைவர்களின் ஆடைமுதலியவற்
றைக் கொணரும்படி அர்ஜுனனுக்குச் சொல்லி
யது 172
39 உத்தரன், கௌரவசேனையைக் கண்டு பயந்து முறையிட்
டது 174-175
அர்ஜுனன் உத்தரனுக்குப் புத்தி கூறியது ... 175-176
உத்தரன் ரதத்தினின்று குதித்தோடியது ... 176
த்ரோணர், அர்ஜுனனைத்தெரிந்து கௌரவர்களுக்குச்
சொல்லியது 176-177
கர்ணனும் க்ருபரும் கூறியவை 177
துர்யோதனன் பேடியைக் கொல்வேனென்றது ... 177-178
அர்ஜுனன் உத்தரனைப்பிடித்ததும், உத்தரன் தன்னை
விட்டுவிட்டால் பரிசளிப்பேனென்றதும் ... 178-179
அர்ஜுனன், உத்தரனை ஸாரதியாயிருக்கச் சொல்லியது 179-180
40 த்ரோணர் உத்பாதமுதலியவற்றைக்கூறி, அர்ஜுனன்வர
வைப் பீஷ்மருக்குக் குறிப்பித்தது 180-181
த்ரோணர், துர்யோதனனிடம் அர்ஜுனனைப் புகழ்ந்தது 181-182
அர்ஜுனன் உத்தரனை வன்னிமரத்திலிருந்த ஆயுதத்தை
எடுக்கச் சொல்லியது 183-185
41 உத்தரன் ஆயுதங்களைக்கண்டு வியந்து விழுவியது ... 185-187
42 அர்ஜுனன் ஆயுதங்களின் விவரம்கூறியது ... 187-190
43 உத்தரன் பாண்டவரிருக்குமிடத்தை விழுவியதும், அர்
ஜுனன் மறுமொழியும் 190-191
அர்ஜுனன், தன்பத்துப்பெயர்களையும் அவற்றின்பொரு
ளையும் பதிமூன்றாவதுபெயர் வந்தகாரணத்தையும்
கூறியது 192-194
44 உத்தரன், அர்ஜுனனை ஸ்துதிக்கும்படி வேண்டியது ... 195
அர்ஜுனன், தனக்குப்பேடிரூபம்வந்தவரலாற்றைக் கூறி
யது 197
உத்தரன் தான் தேர் ஓட்ட இணங்கியது ... 197
45 அர்ஜுனன் யுத்தஸந்நாஹம்செய்தது 200
அர்ஜுனனது சங்கநாதத்தைக் கேட்டு உத்தரன் மூர்ச்
சித்ததும், அர்ஜுனன் அவனைத்தேற்றியதும் ... 200-202
46 த்ரோணர், அர்ஜுனனோடு போர்புரியவேண்டிய வித
தைத் துர்யோதனனிடம் கூறியது 202-204
47 துர்யோதனன், த்ரோணரை அவமதித்துச் சேனையை உத்
ஸாஹப்படுத்தியது 204-207
48 கர்ணன் தன்னைப்புகழ்ந்ததும், அர்ஜுனனை இகழ்ந்ததும்,
பொய்ப்ரதிஜ்ஞைசெய்ததும் 207-210

அத்யாயம்.		பக்கம்.
49	க்ருபர், அர்ஜுனனைப்புகழ்ந்தும் கர்ணனை இகழ்ந்தும், அர்ஜுனனை வெல்லும்விதத்தைக் கூறியது ...	210-212
50	கர்ணன் க்ருபரை நிந்தித்தது	212-213
	அச்வத்தாமா, கர்ணனையும் துர்யோதனனையும் இகழ்ந்து கூறியது	213-215
51	பீஷ்மர், துரியோதனனைக்கண்டித்து அச்வத்தாமாவை ஸமாதானஞ்செய்தது	216-217
52	பீஷ்மர், பாண்டவர்களுடன் ஸந்திசெய்வதுநலமென்று துர்யோதனனுக்குச் சொல்லியது	218-219
	அதிமாஸவிவரணமும், பாண்டவர்களின் ப்ரதிஜ்ஞாகால நிர்ணயமும்	218
	துர்யோதனன், பாண்டவர்களுக்கு எதையும் கொடேனென்றது	219-220
	பீஷ்மர், சேனையை அணிவகுத்தது	220-221
53	இந்த்ரன்முதலிய தேவர்கள் அங்கு யுத்தத்தைப் பார்க்க வந்தது	221-222
54	அர்ஜுனன், த்ரோணர் முதலியோரை அம்புகளால் வணங்கியது	223
	த்ரோணர் அர்ஜுனனைப் புகழ்ந்தது	223-224
55	அர்ஜுனன் துர்யோதனனைத் தேடிச்சென்றது ...	226
	பீஷ்மர், சேனையுடன் அர்ஜுனனைப் பின்தொடர்ந்தது	226-227
	அர்ஜுனன் கௌரவர்களோடு போர்புரிந்தது ...	227-228
	இடையர்கள் பசுக்களுடன் ஸ்வதேசம் சென்றது ...	228
56	அர்ஜுனன், உத்தரனுக்கு த்ரோணர் முதலியோருடைய கொடி அடையாளத்தால் அவர்கள்பெயரையும் வல்லமையையும் தன்தேரைநடத்தும்விதத்தையும் சொல்லியது	229-231
57	அச்வத்தாமா கர்ணனை இகழ்ந்தது	231
	கர்ணன் வீரவாதம்பேசியது	231-232
	துர்யோதனன், அறியாமையால் பசுமந்தையைக் கவர்ந்தோமென்று கர்ணனுக்குச் சொல்லியது ...	232
	த்ரோணர்முதலியோர் அர்ஜுனனுடன் போர்புரிந்தது.	232-236
58	அர்ஜுனனுக்கும் விகர்ணன்முதலியோருக்கும் யுத்தம் ...	238-244
	சத்ருந்தபன் மரணம்	239
	ஸங்க்ராமஜித்தின்மரணம்	239
	கர்ணன் தோற்றோடியது	244
59	த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தமும், த்ரோணர் தோற்றதும்	247-252

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

60 அர்ஜுனனுக்கும் அஸ்வத்தாமாவுக்கும் யுத்தமும் அர்ஜுனன் மேலானதும் 253-254

61 அர்ஜுனனுக்கும் க்ருபருக்கும் யுத்தம் 254-257

சந்த்ரகேதுமுதலியோர் மரணம் 255

அர்ஜுனன், ஒரேஸமயத்தில் பீஷ்மர்முதலிய எல்லாருடனும் போர்புரிந்து ரக்தநதியை உண்டாக்கியது ... 257-259

62 வ்ருஷஸேனனும் துச்சாஸனன் முதலியோரும் அர்ஜுனனை எதிர்த்துத் தோற்றோடியது 260

அர்ஜுனனும் பீஷ்மரும் போருக்காக ஸந்தித்ததும், தேவர்கள் அவர்களைப் புகழ்ந்ததும் 261-262

63 அர்ஜுனனுக்கும் பீஷ்மருக்கும் யுத்தமும், பீஷ்மர் தோற்றதும் 262-267

சித்ரஸேனன், அர்ஜுனனையும் பீஷ்மரையும் புகழ்ந்தது 265

64 அர்ஜுனன், ஒரேஸமயத்தில் த்ரோணர் முதலிய ஐந்து மஹாரதர்களோடு போர்புரிந்தது 268

65 அர்ஜுனன், பீஷ்மர்முதலியோர் இருக்குமிடத்துக்குத் தேரைச்செலுத்தும்படி உத்தரனுக்குச் சொல்லி, தன்பராக்ரமத்தையும் கூறியது 269-271

துச்சாஸனன் முதலியோர், அர்ஜுனனை எதிர்த்துத் தோற்றோடியது 271-274

66 அர்ஜுனனுக்கும் துர்யோதனனுக்கும் யுத்தமும், துர்யோதனன் தோற்றுப் பீஷ்மர் முதலியோரைச் சரணமடைந்ததும் 276-278

அர்ஜுனன் துர்யோதனனைப் பரிஹஸித்தது ... 278-279

67 துர்யோதனன், திரும்பவும் அர்ஜுனனுடன் போர்புரிந்தது 280-281

அர்ஜுனன், துர்யோதனன்முதலியோர்மீது ஸம்மோஹனாஸ்த்ரப்ரயோகம்செய்து, உத்தரனை அவர்கள் ஆடை முதலியவற்றைக் கவரும்படி ஏவியது ... 281-282

உத்தரன் துர்யோதனன்முதலியோரின் ஆடை முதலியவற்றைக் கவர்ந்ததும், அர்ஜுனன் நகைத்ததும் ... 282

துர்யோதனன் மயக்கந்தெளிந்ததும், பீஷ்மர் ஆடைகளை உத்தரன் கவர்ந்தானென்றதும் ... 282-283

அர்ஜுனன், ஆசார்யர்களை வணங்கிவிடைபெற்றுத் துர்யோதனனை மகுடபங்கம்செய்தது 284

68 அர்ஜுனன், போரில்தோற்று ஒளித்த வீரர்களுக்கு அபயமளித்தது 285-286

அர்ஜுனன் உத்தரனை வெற்றி தனதென்று சொல்லும்படி செய்து, ஆயுதங்களை வன்னிமரத்தில் வைத்து, ப்ருஹந்நளையாகித் தேரோட்டியது 286-287

அத்தியாயம். பக்கம்.

உத்தரன் தன்வெற்றியைத் தெரிவித்தற்குத் தூதனுப்பி யது 287

69 விராடன் த்ரிகர்த்தர்களைவென்று திரும்பிவந்து உத்தரனைக் காப்பதற்காகச் சேனையை ஏவியது ... 288-289

தர்மபுத்ரர், ப்ருஹந்நளையை ஸாரதியாகக்கொண்டவன் கௌரவர்களை வெல்வானென்றது 289

தூதர் உத்தரனது வெற்றியை விராடனுக்கு அறிவித்த தும், விராடன் அவர்களுக்குப் பரிசளித்ததும் ... 289-290

விராடன், நகரை அலங்கரித்து உத்தரனை எதிர்கொள் ளும்படி ஏவலாளர்க்குக் கட்டளையிட்டது ... 290

70 விராடன் தர்மபுத்ரரைச் சூதுக்கழைத்ததும், அவர் மறுத்ததும், அவன் வற்புறுத்தியதும் ... 291-292

சூது தகாதென்பது 292

விராடனும் தர்மபுத்ரரும் சூதாடியதும், விராடன் அவ ரைப் பாச்சிகையால் அடித்ததும் 292-294

த்ரௌபதி தர்மபுத்ரரின் ரக்தத்தை முன்றானையிலேந்தி யதும், விராடன் காரணம்கேட்க, அவள் சொல்வி யதும் 294-295

71 தேவர்கள் அர்ஜுனனைப் புகழ்ந்து சென்றது ... 296

சேனைகள் உத்தரனை எதிர்கொண்டு புகழ்ந்தது ... 296-297

72 உத்தரன் விராடனுக்குத் தன்வரவைத் தெரிவித்ததும், தர்மபுத்ரர் உத்தரன்மட்டும்வரட்டுமென்று தூதனுக் குச் சொல்லியதும் 299-300

உத்தரன் தர்மபுத்ரர்காயத்தைக்கண்டு பயந்து விழுவிய தும், விராடன் விடைகூறியதும் 300-301

உத்தரன் தர்மபுத்ரரிடம் க்ஷமைகேட்கும்படி விராட னுக்குச் சொல்லியதும், அவன் அவ்வாறே செய்து உத்தரனைப் புகழ்ந்து விழுவியதும் 301-303

உத்தரன், கௌரவர்களை ஒரு தேவகுமாரன் ஜயித்தா னென்றது 303-304

அர்ஜுனன் உத்தரை முதலியோருக்கு ஆடைமுதலியவற் றைக் கொடுத்தது 305

73 அர்ஜுனன் யுதிஷ்டிரரிடம்வந்து காயம்பட்டகாரணத் தை விழுவியதும், அவர் விடையளித்ததும் ... 305-306

பீமார்ஜுனர் விராடனைப் பரிவாரத்தோடு கொல்ல முயன்றதும், தர்மபுத்ரர் தடுத்ததும் 306-307

வைவாஹிகபர்வம்.

74 தர்மபுத்ரர்முதலியோர் ஹிம்மாஸனங்களில் வீற்றிருந்த தும், விராடன் கோபித்ததும் 307-308

அத்யாயம். பக்கம்.

அர்ஜுனன், தர்மபுத்ரர் ஸிம்மாஸனம் ஏறுவது தகு
மென்று அவரைப்புகழ்ந்து அவரை வெளியிட்டது 308-310
75 அர்ஜுனன் பீமன்முதலியோரையும், பீமன் அர்ஜுனனை
யும் விராடனுக்குத் தெரிவித்தது 310-311
உத்தரன் பாண்டவர்களைத் தன் பிதாவுக்குத் தெரிவித்து
அர்ஜுனனுடைய வல்லமையையும் கூறியது ... 311-313
விராடன் தர்மபுத்ரரைத் தன் ராஜ்யத்திற்கு அரசராக்கி
யது 313
76 உத்தரன் உத்தரையை அர்ஜுனனுக்குக் கொடுத்துப்
பாண்டவர்களை க்ஷேமகேட்கும்படி விராடனுக்குச்
சொல்லியது 314
விராடன் மந்த்ரிமுதலியவர்களுடன் தர்மபுத்ரரைச் சரண
மடைந்து, தனது அரசாட்சி முதலியவற்றைக்
கொடுத்தது 314-315
77 விராடன், உத்தரையை அர்ஜுனனுக்குக் கொடுப்பதா
கத் தர்மபுத்ரரிடம் கேட்டதும், அர்ஜுனன் மருமக
ளாக்க அங்கீகரித்ததும் 316
அர்ஜுனன் உத்தரையை மனைவியாகக் கொள்ளாததின்
காரணம் 316-317
விராடனும் அர்ஜுனனும் க்ருஷ்ணன் முதலியோருக்குத்
தூது அனுப்பியது 317
துர்யோதனன், திரும்ப வனம் செல்லும்படி தர்மபுத்ரருக்
குத் தூதனுப்பியது 318
தர்மபுத்ரர், ப்ரதிஜ்ஞாகாலநிர்ணயத்தைப் பீஷ்மரிடம்
தெரிந்துகொள்ளும்படி மறுமொழி அனுப்பியது 318
பீஷ்மர், பாண்டவர்களின் ப்ரதிஜ்ஞாகாலம் நிறைவேறிய
தென்று துர்யோதனனுக்குச் சொல்லியது ... 319
78 பாண்டவர்கள் உபப்லாவ்யநகரத்தில் வஸித்ததும், க்ருஷ்
ணன் முதலியோர் அவர்களிடம் வந்ததும் ... 320
தர்மபுத்ரர் முதலியோர் க்ருஷ்ணனை எதிர்கொண்டு
பூஜித்தது 320-321
க்ருஷ்ணன், துர்யோதனரதியரைக் கொல்வதாக த்ரௌ
பதியிடம் சபதம் செய்தது 321
த்ருபதன் முதலியோர் உபப்லாவ்யநகரம் வந்தது ... 321-322
அபிமன்யுவுக்கும் உத்தரைக்கும் விவாஹமும், விராடன்
சீர் கொடுத்ததும் 322-324

விராடபர்வ விஷயஸூசிகை முற்றிற்று.

ஸ்ரீ :

ஸ்ரீகணேசாயவித்மஹேவக்ரதுண்டாயதீமஹி
ஸ்ரீகணேஸோதந்திவக்த்ரஸ்தந்நோதந்திப்ரசோதயாத்

ஸ்ரீ மஹாபாரதம்.

விராட பர்வம்.

முதலாவது அத்யாயம்.

பாண்டவ ப்ரவேச பர்வம்.

1 நாராயணம் நமஸ்க்ருத்ய நரம்சைவ நரோத்தமம் |
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ||

(யுதிஷ்டிரர், ம்ருகத்தினால் கவரப்பட்ட அணிகளையும் பாத்திரத்தையும் ப்ராம்மணனுக்குத் திருப்பிக் கொடுத்ததும், துக்கிக்கின்ற யுதிஷ்டிரருக்குத் தௌம்யர் ஸமாதானம் கூறியதும், பாண்டவர்கள் தௌம்யரோடு மந்த்ராலோசனை செய்வதற்காக ஓரிடத்தில் உட்கார்ந்ததும்.)

ஜனமேஜயர், வைசம்பாயனரைப் பார்த்து, "ப்ராம்மணரே! என்னுடைய தந்தையின் பாட்டன்மார்கள் துர்யோதனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் துன்பமடைந்து விராட நகரத்தில் ஒருவருக்கும் தெரியாமல் எவ்வாறு வாஸஞ்செய்தனர்? பதிவ்ரதையும் மஹாபாக்யமுள்ளவளும் எப்பொழுதும் ஸுகத்தை அனுபவித்தவளுமான அந்த த்ரௌபதியானவள் துக்கத்தை அடைந்து எவ்விதமாக அஜ்ஞாதவாஸம் செய்தாள்? அந்த ப்ராம்மணஸ்ரேஷ்டர்களும் பரிசாரகர்களும் ஸ்திதர்களோடும் சமையற்காரர்களோடும் எப்படி அஜ்ஞாதவாஸம் செய்தார்கள்?" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"அரசரே! உம்முடைய ப்ரபிதாம்மஹர்கள் விராட நகரத்தில் எவ்வாறு அஜ்ஞாதவாஸம் செய்தார்களென்பதை முழுதும்

---

1 உரை விசேஷத்தை ஆதிபர்வம் முதற்பக்கம் குறிப்பிற் காண்க.

சொல்லுவேன் ; அதைக்கேளும். தர்மராஜாவான அந்த யுதிஷ்டிரர் அவ்விதமாக அந்த வரங்களைப்பெற்றுக்கொண்டு ஆஸ்ரமத்தை அடைந்து தம்முடைய வ்ருத்தாந்தத்தை ப்ராம்மணர்களுக்குத் தெரிவித்தார். யுதிஷ்டிரர் ப்ராம்மணர்களுக்கு அந்த விருத்தாந்தமனைத்தையும் தெரிவித்து (ம்ருகத்தினல் அபஹரிக்கப்பட்ட) அரணிகளுடன் பாத்திரத்தை அந்த ப்ராம்மணனுக்குக் கொடுத்தார். பாரதரே ! பிறகு, உறுதியான வ்ரதத்தையுடையவனும் குந்திபுத்ரருமான யுதிஷ்டிர மஹாராஜர் தம்பிமார்களைலெல்லாம் அழைத்து, 'ஸஹோதரர்களே ! நாம் (துர்யோதனன் முதலானவர்களால்) கபடத்தினல் ராஜ்யத்தை அபஹரிக்கப்பட்டோம் ; பெரும்பாலும் தரித்திரர்களாகச் செய்யப்பட்டுப் பன்னிரண்டு வருஷகாலம் தேசத்தைவிட்டு வெளியில் ஓட்டவும் பட்டோம் ; பன்னிரண்டு வர்ஷகாலம் கானகத்தில் வஸித்ததுபோலவே பதின்மூன்றுவது வர்ஷம் மறைந்து அஜ்ஞாத வாஸஞ்செய்வோம்' என்று கூறினர். தர்மராஜரால் அனுமதிகொடுக்கப்பட்டவர்களும் ஸத்யமான பராக்ரமமுள்ளவர்களும் பதின்மூன்றுவது வர்ஷம் மறைந்து அஜ்ஞாதவாஸஞ் செய்யப்போகின்றவர்களும் மஹாதமாக்களும் வ்ரதமுடையவர்களுமான பாண்டவர்கள், கற்றறிந்தவர்களும் [1] ஸ்நாதகர்களும் கடுமையான வ்ரதமுள்ளவர்களும் வனவாஸ ஸமயத்தில் ஸஹாயர்களாக அங்கிருந்தவர்களுமான ப்ராம்மணர்களையும் வனவாஸகாலத்தில் தங்களிடம்பற்றுதலுள்ளவர்களாக வாஸஞ்செய்த தபஸ்விகளையும் நோக்கி அருகில் உட்கார்ந்து இரு கைகளையும் குவித்துக்கொண்டு அஜ்ஞாதவாஸஞ் செய்வதில் அவர்களை அனுமதி கொடுக்கும்படி செய்யவேண்டி மனக்கிளர்ச்சியுடன் வசனிக்கலானர்கள். 'ப்ராம்மணோத்தமர்களே! நாங்கள் த்ருதராஷ்டிர குமாரர்களால் கபடத்தினல் கவரப்பட்ட ராஜ்யத்தையுடையவர்களும் பலவிதத்தாலும் தரித்திரர்களாகச் செய்யப்பட்டவர்களும் பன்னிரண்டு வர்ஷம் காட்டிலுண்டானவைகளை ஆகாரமாகக் கொண்டவர்களுமாக உங்களோடு சேர்ந்தே காட்டில் வஸித்தோமென்பது உங்களுக்கு முற்றிலும் தெரிந்திருக்கிறது. மிச்சமான இந்தப் பதின்மூன்றுவது வர்ஷமா

---

[1] குருகுலவாஸஞ்செய்து வேதாத்யயனத்தையும் ப்ராஜாபத்ய முதலிய வ்ரதத்தையும் சாஸ்த்ரமுறைப்படிமுடித்து ஸ்நானம்செய்தவர்கள். இவர்கள், வ்ரதத்தை அனுஷ்டியாமல் வித்தையைமாத்ரம் அப்யஸித்தவர் வித்யாஸ்நாதகரென்றும், வித்தையை அப்யஸியாமல் வ்ரதத்தைமாத்ரமுடித்தவர் வ்ரதஸ்நாதகரென்றும், வித்தையையும் அப்யஸித்து வ்ரதத்தையுமுடித்தவர் உபயஸ்நாதகரென்றும் மூவகையராவர்.

ண்டு அஜ்ஞாத்வாஸ ஸமயம்; ஆதலால், நாங்கள் மறைந்து வஸிக்கப்போகின்றோம். அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும். தகுந்த சாரர்களையுடையவர்களும் ஸ்வஜனங்களுடைய பொருள்களைக்கவர்வதில் முயற்சியுள்ளவர்களும் எங்களிடத்தில் மிக்கவைரமுள்ளவர்களுமான துஷ்டமனத்தையுடைய துர்யோதனனும் சகுனியும் கர்ணனும் அறிவார்களாஞல் தீங்கை விளைவிப்பார்கள். துராத்மாக்களான அவர்கள்விஷயத்தில் எவன்தான் விஶ்வாஸத்தை அடைவான்? நாங்கள் எங்களுடைய ராஜ்யத்தில் நிலை பெற்று ப்ராம்மணர்களோடு சேர்ந்து எல்லாத் தேசங்களிலும் ஆட்சிசெய்வோமென்பது திரும்பவும் எங்களுக்குக் கிடைக்குமா?' என்றார்கள். சுத்தரும் தர்மராஜனுடைய புத்ரரும் ராஜாவுமான யுதிஷ்டிரர் இவ்வாறு மொழிந்து துக்கத்தினாலும் சோகத்தினாலும் பீடிக்கப்பட்டவராகவும் பாஷ்பத்தினால் தடுமாறுகின்றகுரலுள்ளவராகவும் அப்பொழுது மூர்ச்சை அடைந்தார். பிறகு, அந்த யுதிஷ்டிரரைத் தம்பிமார்களோடுசேர்ந்து ப்ராம்மணர்களனைவர்களும் தேறுதலடையச்செய்தார்கள். அப்பொழுது, ராஜாவான யுதிஷ்டிரர் மூர்ச்சை தெளிந்து துக்கத்தாலும் மோஹத்தாலும் பீடிக்கப்பட்டுப் பாஷ்பத்தினால் தழுதழுத்தகுரலுள்ளவராகித் தார்மிகர்களுள் உத்தமரான தௌம்யரைப் பார்த்தார். பிறகு, அந்தத் தௌம்யர் ப்ராம்மணர்களுடன் அப்போது ராஜாவான அந்த யுதிஷ்டிரரையும் அவருடைய தம்பிமார்களையும் ஸமாதானஞ் செய்து அரசரை நோக்கிச் சிறந்தபொருளுள்ள வாக்யத்தை உரைக்கலானார்.

'ராஜரே! நீர் கற்றறிந்தவர்; மனத்தை அடக்கினவர்; ஸத்யஸந்தர்; ஐம்பொறிகளையும் வென்றவர். இப்படிப்பட்ட தீரர்கள் ஒரு விதமான ஆபத்திலும் மதிமயக்கங்கொள்ளார்கள். பகைவர்களை வெல்வதின்பொருட்டு அந்த ஸமயங்களில் மறைந்திருக்கின்றவர்களும் மஹாத்மாக்களுமான அனேக தேவர்களாலும் ஆங்காங்கு ஆபத்துக்கள் அடையப்பட்டிருக்கின்றன. திதியினுடைய புத்ரர்களால் ராஜ்யமானது கவர்ந்துகொள்ளப்பட்டபொழுது தேவராஜன் மிகவும் துக்கித்து, ப்ரம்மதேவரை ஸந்தோஷப்படுத்துவதற்காக ப்ராம்மண வேஷந்தரித்து நிஷத தேசத்தை அடைந்து கிரிப்ரஸ்தமென்னும் பட்டணத்தில் மறைந்துவாஸஞ்செய்து பகைவர்களுடைய பலத்தை அழிப்பதற்குரிய கார்யத்தைச்செய்தான். ராஜரே! இந்த்ரன் ப்ரம்மதேவருடைய அனுக்ரஹத்தினால் மஹாபலசாலிகளும் பகைவர்களுமான திதியினுடைய புத்ரர்களைப் பலத்தினால் ஜயித்து உலகங்களை

மறுபடியும் பாதுகாத்தான். விஷ்ணுவானவர் தைத்யர்களைக் கர்ப்பத்தில் வதஞ்செய்வதின்பொருட்டுத் திதியினிடத்தில் வஸிக்கவேண்டி அப்பொழுது அப்மகிரியை அடைந்து ஒருவராலும் அறியப்படாமல் நெடுங்காலம் வாஸஞ்செய்தார். அவர் தம்மிடம்விட்டு வேறிடம்சென்று வாமன ரூபத்தால் மறைந்து ப்ரம்மசாரியாகிப் பலியினிடமிருந்து ராஜ்யத்தை [1]விக்ரமங்களால் அபஹரித்தாரென்பது உம்மால் கேட்கப்பட்டிருக்கிறது. ஐயா! தொடையில் மறைந்து வாசஞ்செய்யும் ப்ரம்மரிஷியான ஔர்வரால் அப்பொழுது உலகங்களில் செய்யப்பட்ட கார்யத்தையும் முழுவதும் நீர் கேட்டிருக்கிறீர். எல்லா இடங்களிலும் மறைந்திருக்கின்றவராயிருந்தாலும் விஷ்ணுவிஷயல் வ்ருத்ரனை அழிக்கும் விஷயத்தில் இந்த்ரனுடைய வஜ்ராயுதத்தில் ப்ரவேசித்துச் செய்யப்பட்ட கார்யத்தையும் நீர் கேட்டிருக்கிறீர். அக்னி ஜலத்தில் நுழைந்து மறைந்து வஸித்ததையும் தேவர்கள் விஷயத்தில் செய்த கார்யத்தையும் நீர் கேட்டிருக்கிறீர். ஐயா! பூமியில் அனேக வர்ஷகாலம் மறைந்து வஸிக்கின்றவனும் உத்தமமான தேஜஸ்ஸையுடையவனுமான ஸூர்யஸல் எவ்வாறு சத்ருக்களை வரும் எரிக்கப்பட்டார்களென்பதும் உம்மால் கேட்கப்பட்டிருக்கிறது. இம்மண்ணுலகத்தில் தசரதருடைய அரண்மனையில் மானிட வேஷத்திஸல் மறைந்து வஸித்தவரும் யுத்தத்தில் பயங்கரமான செய்கையுடையவருமான விஷ்ணுவிஸல் ராவணன் கொல்லப்பட்டான். இவ்வாறு இந்த மஹாத்மாக்கள் அவ்வவ்விடங்களில் மறைந்தவர்களாயிருந்துகொண்டு பகைவர்களுள் தலைவர்களை வென்றார்கள். அப்படியே நீரும் வெல்லப்போகிறீர்' என்றார்.

தர்மங்களை அறிந்தவரான அந்த யுதிஷ்டிரர், தௌம்யரால் இவ்வாறான வாக்யங்களால் மனக்களிப்பை அடையும்படி செய்விக்கப்பெற்று, மறுபடியும் சாந்தமான புத்தியையடைந்து அசைவற்றிருந்தார். பிறகு, பலசாலிகளுள் சிறந்தவனும் பெரிய கைகளையுடையவனும் மிக்க பலமுள்ளவனுமான பீமஸேனன், ராஜாவானயுதிஷ்டிரரை வாக்கிஸல் மிகவும் சந்தோஷிக்கச்செய்து, 'மஹாராஜரே! பாரும்; காண்டீவத்தை வில்லாகவுடைய உம்முடையஸஹோதரஸல் தர்மத்தையும் அர்த்தத்தையும் ப்ரதானமாகக்கொண்டிருக்கிற புத்தியிஸல் ஒருவிதமான ஸாஹஸமும் செய்யப்படவில்லை. அந்தத் துர்யோதனன் முதலானவர்களை நாசஞ்செய்வதில் சக்தியுள்ளவர்களும் பகைவர்களைக் கொல்லு

[1] அடிவைப்பு.

கிறவர்களும் பயங்கரமான வன்மையுள்ளவர்களுமான நகுல னும் ஸஹதேவனும் என்னால் எப்போதும் தடுக்கப்பட்டிருக் கின்றார்கள். நீர் எங்களை எந்த வழியில் சேர்ப்பிக்கிறீரோ அந்த வழியை விட்டு நாங்கள் விலகமாட்டோம்; ஆதலால், நீர் எல்லா வற்றையும் கட்டளையிடும். விரைவாகப் பகைவர்களை ஜயிப்போம்' என்று கூறினன். இவ்வாறு பீமஸேனனால் சொல்லப்பட்ட தர்ம ராஜாவான யுதிஷ்டிரர் கற்றறிந்தவர்களோடும் கடுமையான வ்ரத முள்ள தபஸ்விகளோடும் ஸுகமாக வீற்றிருந்தார். மிகக்கற்றறிந் தவரும் வ்ரதத்தையுடையவருமான யுதிஷ்டிரராஜர், அஞ்சலி செய்துகொண்டு, அந்த வனவாஸத்தில் தங்களிடத்தில் பற்று தலுடனிருந்த சிஷ்டர்களான தபஸ்விகளை அந்த அஜ்ஞாதவாஸ விஷயத்தில் அனுமதி கொடுக்கச் செய்வதற்காகச் சொல்லத் தொடங்கினர். 'நாங்கள் அனைவர்களும் த்ருதராஷ்டிர புத்ர ர்களால் ஆலோசனை செய்து ராஜ்யம் கவரப்பட்டும் பெரும்பாலும் தரித்ரர்களாகச் செய்யப்பட்டும் அப்படியே பன்னிரண்டு வர்ஷ காலம் கஷ்டத்துடன் வனத்தில் வஸித்தோமென்பது உங்களுக் குத் தெரிந்திருக்கிறது. மிகுதியிருக்கின்ற பதின்மூன்றாவது வர்ஷ மானது அஜ்ஞாதவாஸ காலம். ஆதலால், ஓரிடத்தில் மறைவாக வஸிக்கப்போகிறோம். அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கவேண் டும்' என்றனர். இவ்வாறு தர்மராஜர் சொல்ல, ப்ராம்மணர்கள் உத்தமமான ஆசீர்வாதங்களைச் செய்து பரதகுலத்தில் பிறந்தவர் களான பாண்டவர்களிடத்தினின்று விடைபெற்றுக்கொண்டு தங் கள் வீடுகளை நோக்கிச்சென்றார்கள். வேதங்களை அறிந்தவர்களும் ப்ரேஷ்டர்களுமான எல்லா ஸந்யாஸிகளும் மஹரிஷிகளும் அப் பொழுது முறைப்படி ஆசீர்வாதங்களைச் செய்து மீண்டும் அவர் களைப் பார்ப்பதில் விருப்பத்துடன் தங்கள் தங்கள் இருப்பிடம் சேர்ந்தார்கள். அந்த வேலைக்காரர்களும் தூதர்களும் சிற்பிகளும் பரிசாரகர்களும் (பாண்டவர்களிடத்தினின்று) முறைப்படி விடை பெற்றுக்கொண்டு மீண்டும் (அவர்களைப்) பார்ப்பதில் விருப்பத் துடன் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். பாரதரே! கற்றறிந்தவர்களும் வீரர்களுமான அந்த ஐந்து பாண்டவர்களும் த்ரௌபதியை அழைத்துக்கொண்டு எழுந்திருந்து தௌம்யருடன் சென்றார்கள். புருஷப்ரேஷ்டர்களும் தனித்தனியாய்ச் சாஸ்த்ரங் களை விசேஷித்தறிந்தவர்களும் மந்த்ராலோசனையில் ஸமர்த்தர் களும் ஸந்திவிக்ரஹங்களுடைய உண்மையை அறிந்தவர்களுமான அந்தப் பாண்டவர்களனைவர்களும் மறுதினத்தில் அஜ்ஞாதவா ஸஞ் செய்யும் முயற்சியுடன் அந்த இடத்தினின்று நல்ல சகுனத்

துடன் ஒருக்ரோசதூரம் சென்று மந்த்ராலோசனையின்பொருட்டு உட்கார்ந்தார்கள்.

இரண்டாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர், தம்பிகளுடன் ஆலோசித்து விராடநகரத்தில் வஸிக்க நிச்சயித்ததும், தாம் ஸந்யாஸி-வேஷம் பூண்டு விராடனுடைய ஸபைத்தலைவராக இருப்பதைக் கூறியதும்.)

வனவாஸத்தை நிறைவேற்றினவர்களும் ஸத்யஸந்தர்களும் மஹாதையர்யமுள்ளவர்களுமான அந்தப்பாண்டவர்கள் தௌம்யருடன் மறுபடியும் மந்த்ராலோசனை செய்யலானார்கள். பிறகு, தர்மராஜரும் குந்திபுத்ரரும் குருகுலத்தில் உதித்தவருமான யுதிஷ்டிரர், ஸஹோதரர்களையும் த்ரௌபதியையும் தௌம்யரையும் பார்த்து, 'குந்திபுத்ர! அர்ஜுன! நாம் இந்தப்பன்னிரண்டு வர்ஷகாலமாக ராஜ்யத்தினின்றும் துரத்தப்பட்டோம். ப்ரயாஸமிருப்பதனல் வஸிப்பதற்கு மிகவும் அஸாத்யமான இந்தப்பதின் மூன்றுவது வர்ஷம் வந்துவிட்டது. இனி வஸிக்கத்தகுந்த இடத்தை நன்றாக ஆலோசிப்பாயாக. அர்ஜுன! வந்திருக்கின்ற இந்தப்பதின்மூன்றுவது வர்ஷம், நாமனைவரும் த்ரௌபதியுடன் த்ருதராஷ்டிர புத்ரர்களால் அறியப்படாதவர்களாக எங்கு வாஸஞ் செய்வோம்?' என்று வினவ, அர்ஜுனன், 'மஹாராஜரே! பரதஸ்ரேஷ்டரே! அந்தத் தர்மதேவதையினல் அளிக்கப்பட்ட வரத்தினலேயே நாம் மனிதர்களால் அறியப்படாமல் ஸஞ்சரிக்கப்போகிறோம். வாஸஞ்செய்வதற்கு ரமணீயமானவைகளும் ரக்ஷிக்கப்பட்டவைகளும் நான் எடுத்துச் சொல்லப்போகின்றவைகளுமான சில தேசங்களுள் ஒன்றை நீர் விரும்பும். குருதேசங்களுக்கு நாலுபக்கங்களிலும் மனத்துக்கினிமையான பலவகைப்பட்ட பாஞ்சால நாடுகளும் மத்ஸ்யதேசங்களும் ஸால்வம், வைதஹம், பாஹ்லிகம், தசார்ணம், சூரஸேனம், கலிங்கம், மாகதம் என்கிற நாடுகளுமிருக்கின்றன. சத்ருக்களை அழிப்பவரே! விராட நகரமும் அழகுள்ளதும் ஜனங்களால் நாலுபக்கங்களிலும் சூழப்பட்டதும் ஸுபிக்ஷமுள்ளதும் ஐச்வர்யத்தினல் பெருத்ததுமாயிருப்பதாகக் கேட்கிறோம். அரசரே! மற்றும் அனேகமான பற்பல தேசங்களும் கேட்கப்படுகின்றன. எந்தத் தேசத்தில் உமக்கு விருப்பமிருக்கிறதோ அங்கு நாம் செல்வோம். மஹாராஜரே!

இவைகளுள் எந்தத் தேசத்தில் நீர் வஸிக்கப்போகிறீர்? ராஜ்யத்தினின்று தவறிவிட்டோமென்று ஓரிடத்திலும் உம்முடைய மனமானது துக்கத்திற்கு உட்பட்டதாகச் செய்யத்தக்கதன்று' என்றான். யுதிஷ்டிரர், 'மிக்க புஜபலமுள்ளவனே! மஹிமை பொருந்தியவரும் ப்ரபுவும் எல்லாப்பிராணிகளுக்கும் ஈச்வரருமான அந்தத் தர்மதேவதைசொன்னது அவ்விதமேயாகும். அது வேறுவிதமாகாது. நாமனைவரும் ஒன்றுசேர்ந்து நன்கு ஆலோசித்து, வஸிப்பதின்பொருட்டு ரமணீயமானதும் மங்களகரமானதும் ஸுகமானதும் ஓரிடத்தினின்றும் பயமில்லாததுமான ஒரு ஸ்தானத்தை அவசியம் பார்ப்போம். மத்ஸ்ய தேசாதிபதியான விராடன் மிகுந்தபலமுடையவன்; மேலும், பாண்டவர்களான நம்மிடத்தில் அதிகப் பற்றுதலுள்ளவன்; தர்மசீலன்; நன்கொடையுடையவன்; வயது சென்றவன்; ஸாதுக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவன்; குணங்களையுடையவன்; உலகத்தில் ப்ரஸித்திபெற்றவன்; உறுதியான பக்தியுடையவன்; இந்த்ரியங்களை ஜயித்தவன். பார்த்த! தோஷமற்றவனே! அந்த மத்ஸ்யதேசத்தில் விராடராஜனுடைய அருகில் வாசஞ்செய்வது எனக்கு ப்ரியமாயிருக்கின்றது. ஐயனே! உனக்கும் ப்ரியமிருந்தால் விராடநகரத்தில் இந்தப் பன்னிரண்டு மாஸங்களும் அவனுக்கு வேலைகளைச்செய்துகொண்டு வஸிப்போம். குருநந்தன! அவனுடைய எந்த எந்தக்கார்யத்தைச்செய்வதற்கு நாம் சக்தியுள்ளவர்களாவோமோ, எவன் எவன் எந்த எந்தக் கார்யத்தைச் செய்யமுடியுமோ அவனவன் அந்த அந்தக் கார்யத்தைச் சொல்லவேண்டும்' என்றுசொல்ல, அர்ஜுனன், 'வேந்தரே! அந்த விராடனுடைய ராஜ்யத்தில் எவ்விதமான கார்யத்தை நீர் செய்யப்போகிறீர்? அரசரே! விராடனுக்கு எந்தக் கார்யத்தைச்செய்து மகிழ்வீர்? நீர் கபடமற்ற வேஷந்தரித்தவர்; தர்மத்தில் நிலைபெற்றவர்; பொறுமையில்லாதவர்; உமக்கு க்ரூரமும் கபடமுமான செய்கை பொருந்தாது; நீர் ஸத்யமானவாக்கையுடையவர்; யஜ்ஞங்களை அனுஷ்டித்தவர்; பேராசையாலும் கோபத்தாலும் விடுபட்டவர்; மெல்லியதன்மையுடையவர்; பெருங்கொடையுடையவர்; அகார்யத்தில் வெட்கமுடையவர்; தர்மத்தையே ப்ரதானமாகக் கொண்டவர்; உண்மையான பராக்கிரமமுடையவர். அரசரே! தவத்தினால் வாட்டமுற்றிருக்கின்ற நீர் அந்த விராடனிடத்தில் எவ்வாறு கார்யத்தைச் செய்யப்போகிறீர்? ராஜரே! கெட்டகார்யத்தில் புத்தியைச்செலுத்தினவனுக்குத்தக்கதான துக்கமானது உமக்குச் சிறிதும் தகாது. அப்படிப்பட்ட

நீர் கோரமான இந்த ஆபத்தை அடைந்து எவ்வாறு தாண்டப் போகிறீர்?' என்று கூறினன். அர்ஜுனன் இவ்வாறுசொல்ல, யுதிஷ்டிரர், 'குருநந்தன! நான் செய்யப்போகிற காரியத்தை நீ கேள். மத்ஸ்யதேசவாஸிகளான ஜனங்களை ஆனந்தப்படுத்துகின்றவனும் ராஜாவுமான விராடனை அடைந்து அவனுக்குச் சபைத்தலைவனேவனென்பது என்னுடைய எண்ணம். அக்ஷவித்தையை அறிந்தவனும் நன்றாகச் சூதாடுகிறவனுமான நான் கங்கன் என்றபெயரைச் சொல்லிக்கொண்டு வைடூர்யம் தங்கம் தந்தம் ஸ்படிகம் வெள்ளி இவைகளால் செய்யப்பட்டவைகளும் கறுப்புநிறமுள்ளவைகளும் சிவப்பு நிறமுள்ளவைகளும் மனத்துக்கு இன்பத்தை உண்டுபண்ணத்தக்கவைகளும் மங்களகரங்களும் அரசன் பசு இவர்களுடைய அடையாளங்களுடன் கூடியபவைகளும் பார்க்க அழகானவைகளும் நல்லகாந்தியுள்ளவைகளுமான [1] சாரிகைகளைவைத்துப் [2] பாச்சிகைகளை உருட்டப்போகிறேன். அப்பா! சிவப்புநிறமுள்ளவைகளும் மரகதத்தினால் செய்யப்பட்டவைகளும் அழகியவைகளும் ஸபைக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுகின்றவைகளும் ஸமர்த்தர்களால் நன்றாகச் செய்யப்பட்டவைகளுமானகாய்கள் எனக்குப் பொருள்களாயிருக்கின்றன. மனிதர்கள் இவைகளைக் கையினால் தொட்டாலும் மிக்க மனக்களிப்பை அடைவார்கள். அந்தக்காய்களை நான் சமமானதும் ரமணீயமானதும் புழுதியில்லாததுமான இடத்தில் உருட்டி இஷ்டப்படி சூதாடுவேன். அஃது எனக்கு விளையாட்டாயிருக்கும். ஜ்யோதிஷத்திலும் பக்ஷிசகுனங்களை அறிவதிலும் நிமித்தத்தை அறிவதிலும் ஸாமர்த்தியத்தோடு பாச்சிகையாடுவதிலும் என்னால் அத்தியயனஞ்செய்யப்பட்டதும் ப்ரம்மஸ்வரூபத்தை நிரூபணஞ் செய்கின்றதுமான வேதத்திலும் எல்லா வேதங்களிலும் தர்மார்த்தகாமமோக்ஷங்களிலும் நீதிசாஸ்திரங்களிலும் கரைகண்டவனான நான், கங்கன் என்கிற பெயருள்ள ஸந்யாஸியாகி விராடனுடைய ஸபாத்யக்ஷனாக இருந்துகொண்டு, (விராடனால்) கேட்கப்படுவேனானால் அவனுக்கு மிக்க ப்ரியமான வார்த்தையைச் சொல்வேன். அவன் என்னைக்கேட்டால், அவனை நோக்கி, 'நான் முன்பு யுதிஷ்டிரருக்கு ப்ராணனுக்கொப்பானதோழனாயிருந்தேன்' என்று சொல்வேன். விராடநகரத்தில் இவ்வாறு நான் எப்பொழுதும் மறைந்திருந்துகொண்டு ஜாக்ரதையுடன் வாசஞ்செய்வேன். நான் எவ்விதம் சஞ்சரிப்பேனென்பது இவ்விதம் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது' என்று கூறினர்.

---

1 2 சூதாடுகருவிகள்.

மூன்றுவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பீமனும் அர்ஜுனனும் விராட நகரத்தில் தாம் வஸிக்கும் விதத்தைக்கூறியது.)

இவ்வாறு, தாமகந்தனா தமமைக்குறித்துச்சொல்லிப் பெருமூச்சுவிட்டு, வெப்பமுள்ளதும் மனவருத்தத்தினால் உண்டானதுமான கண்ணீரைச்சொரிந்து, பீமஸேனனைப்பார்த்து, 'பீமஸேன! மத்ஸ்யராஜனுடையதேசத்தில் எவ்விதமானகார்யத்தை நீ செய்வாய்? அந்தக்கந்தமாதனபர்வதத்தில்க்ரோதவசர்களையும் யக்ஷர்களையும் கோபத்தினால் மிகவும்சிவந்தகண்களையுடையராக்ஷஸர்களையும் நீ வல்லமையினால் கொன்று பாஞ்சாலகன்னிகைக்கு அநேகம் தாமரைப்பூக்களைக் கொண்டுவந்து கொடுத்தாய். குந்திபுத்ர! பகைவர்களை அடக்குபவனே! ராக்ஷஸராஜனும் பயங்கரனும் மனிதர்களைப்பக்ஷிப்பவனுமான பகாஸுரனை ப்ராம்மணருக்காகக் கொன்றாய். அந்த ஏகசக்ர நகரியானது உன்னால் அபயங்கொடுக்கப்பட்டு க்ஷேமமுள்ளதாகச்செய்யப்பட்டது. மிக்கபுஜபலமுள்ளவனே! மஹாவீர்யமுள்ளவனான ஹிடிம்பனையும் [1] கிர்மீரனென்கிற ராக்ஷஸனையும்கொன்று உன்னால் காடானது பகைவரற்றதாகச்செய்யப்பட்டது. ஆபத்தையடைந்தவளும் அழகான சிரிப்புள்ளவளுமான த்ரௌபதியும் நாங்களும் ஜடாஸுரனைக் கொன்று விடுவிக்கப்பட்டோம். ஐயனே! வ்ருகோதர! வீர்யத்தினால் நிறைந்தவனும் அதிககோபமுள்ளவனும் சிறந்தபலமுடையவனுமான நீ மிக்கதுர்ப்பலனான அந்தவிராடனுடைய நகரத்தில் மத்ஸ்யராஜனிடத்தில் எவ்விதமான கார்யத்தைச் செய்துகொண்டு வஸிக்கப்போகிறாய்?' என்று வினவ, பீமன், 'மனிதர்களுக்கதிபதியே! நான் [2] வல்லனென்னும் பெயருடன் [3] ஸூபகாரனென்னும் சமையற்காரனாக ராஜாவானவிராடனை அடைவேன்; இதைத்தான் விரும்புகிறேன். நான் மடைப்பள்ளி வேலையில் ஸமர்த்தனாயிருக்கிறேன். பற்பலவிதமான ரஸங்களையும் அவ்வாறே ருசியும் மதுரமுமான பருப்புக்களையும் செய்வேன். நான் இந்த விராடனுக்கு ப்ரீதியை உண்டுபண்ணிக்கொண்டு, நல்லதேர்ச்சியுள்ளவர்களால் எவ்விதமான வ்யஞ்சனங்கள் முன்செய்யப்பட்டனவோ அவைகளையும் கீழ்ப்படுத்துவேன். நான் அந்த விராடனில் முன் புஜிக்கப்படாதவைகளும் ரஸங்க

1 கிம்மீரனென்றும்பாடம். 2 வல்லவனென்றும்பாடம்.
3 பருப்புமுதலியவைகளைச் சமைப்பவன்.

ளுடனும் குணங்களுடனும் கூடியவைகளுமான அன்னபானாதி களைச் செய்வேன். ருசியுள்ள வ்யஞ்சனத்தைப் புஜித்து மத்ஸ்ய ராஜன் ப்ரீதியுடையவனுவான். பிளக்கப்பட்டிருக்கின்ற மரங் களை நான் நூறு நூறுகக் கொண்டுவருவேன். அரசன் என்னு டைய செய்கைகளைக்கண்டு என்னை அலக்ஷ்யஞ்செய்யமாட்டான். நான், யுத்தங்களில் ஜயிக்கப்படாதவர்களும் பலவாறு தங்கள் ப்ரதாபத்தை வெளியிட்டவர்களும் பலத்தில் அரசனுக்கு நம்பிக் கையை உண்டுபண்ணினவர்களும் [1] ரங்கஸ்தலத்தை அண்டிப் பிழைக்கின்றவர்களும் பகைவர்களுக்குப் பயத்தை உண்டுபண் ணுகின்றவர்களுமான அவ்வரசனுடைய பெரிய மல்லர்களனைவரை யும் அடித்து அரசனுக்கு ப்ரீதியை உண்டுபண்ணுவேன். அவர் களோடு யுத்தம் பண்ணுகின்ற நான் அவர்களை யமலோகத்துக்கு அனுப்பப்போகிறதில்லை. அந்த மல்லர்கள் துன்பத்தை அடைந்த வர்களாக ஜீவித்திருக்கும்படி அவர்களைத் துன்பஞ் செய்யப் போகிறேன். எருதோ எருமைக்கடாவோ அறுபதுவருஷம் சென்றயானையோ ஸிம்மமோ புலியோ (எதுவானாலும்) ஸம்சய மில்லாமல் என்னால் பிடிக்கத்தக்கதாகும். மற்றவர்களால் பிடிக்க முடியாதவைகளும் ஸர்ப்பங்களுடைய விஷத்துக்கு ஒப்பானவை களுமான அவைகளெல்லாவற்றையும் மத்ஸ்யராஜன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே நான் பலாத்காரமாய்ப் பிடிப்பேன். விராடனுடைய மடைப்பள்ளியில் சமையற்காரர்களாகவும் மாமி சங்களைப் பாகஞ்செய்கின்றவர்களாகவும் ஏவப்பட்டிருக்கிற மனிதர்களையும் என்னுடைய செய்கையினால் ஸந்தோஷப்படுத்து வேன். 'நான் யுதிஷ்டிரரிடத்தில் சமையற்காரனும் மதங்கொண்ட பெரிய காளைகளைப் பிடித்து அடக்குகின்றவனும் பரூப்பு பகூ ணம் முதலானவைகளைச் செய்கின்றவனும் மல்லயுத்தஞ் செய் கின்றவனுமாக இருந்தேன்' என்று ஜனங்களுக்குச் சொல் வேன். ராஜரே! என்னை நானே காப்பாற்றிக்கொண்டு ஸஞ் சரிப்பேன். விராடநகரத்தில் விராடராஜனுக்கருகில் நான் எவ் விதம் மறைந்து வஸிக்கப்போகிறேனென்பது என்னால் இவ்விதம் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது' என்று கூறினன்.

யுதிஷ்டிரர், 'அக்நியானவன் ப்ராம்மணவேஷத்தால் மறைந் து, 'அர்ஜுனு! அதிக ஆகாரத்தைவிரும்புகிறவனும் பிராமணனு மாயிருக்கின்ற என்னைக் காண்டவவனத்தில் விட்டுவிடு' என்றுஉன வுக்காகவேண்டினன். தர்மபுத்தியுடையவனும் பெரும்புகழுள்ள வனுமான அர்ஜுனன் ப்ராம்மணருபமுள்ள அந்த அக்நிபகவா

[1] மல்லயுத்தம்செய்வதற்குத்தகுதியான ஒருவித ஸமதரை.

னுக்கு ப்ரதிஜ்ஞைசெய்து ஒருரதத்திலேயே இந்த்ரனை ஜயித்து ஸர்ப்பங்களையும் ராக்ஷஸர்களையும் கொன்று அந்தக் கார்யத்தை நிறைவேற்றினன். தேவர்களையும் மனிதர்களனைவர்களையும் ஒரு தேராளியாகவே வென்றவனும் பயங்கரமானவில்லையுடையவனும் வெண்மையான குதிரைகளையுடையவனுமான பாண்டவன் என்ன செய்யப்போகிறான்? வ்ருகோதர! ஸர்ப்பத்துக்கொப்பான ஸ்பர் சத்துடன்கூடின இந்த அர்ஜுனன், [1] ஸர்ப்பங்களுள் வாஸுகி போலவும் பாம்புகளுள் கண்ணில் விஷமுள்ள பாம்புபோலவும் தேஜஸ்களுள் அக்நிபோலவும் நதிகளுக்கு ஸமுத்ரம்போலவும் மலைகளுள் இமயம்போலவும் தேவர்களுள் மஹேந்த்ரன்போலவும் அஸுரர்களுள் பலிபோலவும் சிறந்த யானைகளுள் ஸுப்ரதீகம் என்கிற திக்கஜம்போலவும் நகத்தடியை வஹிக்கின்றவைகளுள் குதிரைபோலவும் யக்ஷர்களுள் குபேரன்போலவும் மிருகங்களுள் ஸிம்மம்போலவும் ராக்ஷஸர்களுள் ராவணன்போலவும் தைத்யர் களுள் சம்பரன்போலவும் ருத்ரர்களுள் கபாலிபோலவும் பலமுள் ளவர்களுள் விஷ்ணுபோலவும் ஸர்ப்பங்களுள் ரோஷமும் பொறு மையுமுள்ள தக்ஷகன்போலவும் பறவைகளுள் வாயுவைப்போல் வேகத்தாலும் பலத்தாலும் நடுங்கச்செய்கின்ற கருடன்போலவும் தபிக்கச்செய்கிறவர்களுள் ஸூர்யன்போலவும் மனிதர்களுள் ப்ராம்மணன் போலவும் மடுக்களுள் பாதாளம்போலவும் கர்ஜிக் கின்றவைகளுள் மேகம்போலவும் ஆயுதங்களுள் உத்தமமான வஜ் ரம்போலவும் பசுக்களுள் திமிலுடன்கூடிய சிறந்தகாளைபோலவும் நாகங்களுள் த்ருதராஷ்ட்ரன் போலவும் யானைகளுள் ஐராவதம் போலவும் ப்ரியமுள்ள வஸ்துக்களுள் சிறந்த புத்ரன்போலவும் ஸுஹ்ருத்துக்களுள் உத்தமியான மனைவிபோலவும் மலைகளுள் ப்ரேஷ்டமான மேருகிரிபோலவும் தேவர்களுள் மதுஸூதனர் போலவும் க்ரஹங்களுள் உத்தமமான சந்த்ரன்போலவும் தட ாகங்களுள் மாநஸஸரஸ்போலவும் சிறந்தவனுயிருக்கின்றன். இவை கள் தத்தம் ஜாதிகளில் சிறந்திருப்பனபோலவே யெவனமுள்ள வனுன [2] குடாகேசன் எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவன். பாரத! அப்படிப்பட்ட இந்த அர்ஜுனன், இந்த்ரனையும் வாஸு தேவரையும் காட்டிலும் சிறந்தவன். ப்ரம்மசாரியும் வ்ரதத்தில்பற் றுள்ளவனும் சஸ்த்ரதாரிகளனைவர்களுள்ளும் உத்தமனும் அஸ்த் ரங்களை அறிந்தவனும் எல்லாமறிந்தவனும் எல்லோராலும் ஏற் றுக்கொள்ளப்பட்டவனும் பேசுகிறவர்களுள் சிறந்தவனுமான

1 பாம்பின் வகைகள்.

2 ஆலஸ்யமற்றவன்; அல்லது சுருட்டையான கேசமுடையவன்.

இந்த அர்ஜுனன் இந்திரனுடைய அரண்மனையில் ஐந்துவர்ஷ காலம் வாஸஞ்செய்து வேகமுள்ளதும் ஸூக்ஷ்மமும் விசித்ரமும் சாஸ்வதமுமான அஸ்த்ரத்தைப் பெற்றுத் தேவராஜனிடம் அநுமதிபெற்று த்ருதராஷ்ட்ர புத்ரர்களுடைய விநாசத்தின்பொருட்டும் பாண்டவர்களுடைய ஜயத்தின்பொருட்டும் மீண்டு பூலோகத்துக்கு வந்தான். எவனைப் பன்னிரண்டாவது ருத்ரனென்றும் பதின்மூன்றுவது ஸூர்யனென்றும் [1] ஒன்பதாவது வஸுவென்றும் எட்டாவது குலாசலமென்றும் எண்ணுகிறேனே, எவனுடைய இடக்கைவலக்கைகளிரண்டும் நீண்டவையும், ஒரே அளவுள்ளவையும், நாண்கயிறு உரைவதினால் தழும்புபட்டவையும், காளைகளுடைய முன்கால்கள்போன்றவையும், கையுறை விரலுறை இவைகளோடு எப்பொழுதும் சேர்க்கை பெற்றவையும், கஜராஜனுடைய துதிக்கைக்கொப்பானவையும், பருத்தவையும், பரிகாயுதங்கள்போன்றவையும், மிருதுவானவையும் சிவப்பானவையுமான உள்ளங்கைகளுடன் கூடியவையும் மங்களகரமுமாக விளங்குகின்றனவோ, கரியநிறமுடையவனும் யௌவனமுள்ளவனும் வளர்ந்திருக்கின்ற கேசங்களுடையவனும் அழகிய தோற்றமுடையவனும் பாண்டுபுத்ரனும் காண்டீவம் என்கிற வில்லையுடையவனும் வெண்குதிரைகளையுடையவனும்கிரீடத்தைத்தரித்தவனும்வானரக்கொடியுள்ளவனும் [2] பீபத்ஸுவும் பயங்கரமான வில்லையுடையவனும் குந்திபுத்ரனுமான அந்த அர்ஜுனன் எந்தரூபத்தை எடுத்து எவ்விதக்கொள்கையுடன் எவ்விதச் செய்கையுள்ளவனுகவும் எதைப்ரதானமாகக் கைப்பற்றினவனுகவுமிருந்துகொண்டு எதைச்செய்வான்? விராடனுக்கு எந்தக் கார்யத்தைச்செய்து இனிது வஸிப்பான்?' என்று வினவ, அர்ஜுனன், 'பரதஸ்ரேஷ்டரே! நாண்கயிற்றின் உரைதலினாலும் கையுறையினுடைய உரைதலினாலும் தழும்புபட்டிருக்கிற இந்த இரண்டு கைகளையும் எப்பொழுதுமே சட்டையினால் மறைப்பதற்கு நான் விரும்புகிறேன். வேறுவிதத்தால் மறைப்பதற்கு என்னால் முடியாது. ஆதலால், கார்யநிமித்தம் இந்த இழிவான தொழிலை நான் செய்யப்போகிறேன். நாண்கயிறு உரைதலால் உண்டுபண்ணப்பட்ட பெரிதான தழும்பினால் அடையாளமிடப்பட்டிருக்கின்ற என்னுடைய இரண்டு பெரிய கைகளையும் வேறுவிதத்தினால் மறைப்பதற்கு நான் விரும்பவில்லை. இரண்டு சங்குவளையல்களையும் தொங்குகின்ற குண்டலங்களையும் அணிந்து, பின்னிவிடப்பட்டிருக்கிற தலைமயிர்

---

[1] இரண்டு சொற்கள் விடப்பட்டன.

[2] அவன்பெயர்களுள் ஒன்று; இதன் 193-ம் பக்கம் பார்க்க.

ருடன் ப்ருஹன்னளை என்று பெயருடையவனுயிருப்பேன் ஸ்திரீகளுக்குரிய ஸ்வபாவத்தினுலேயே மறுபடியும் மறுபடியும் கதையைப்படித்துக்கொண்டும் ப்ரஜைகளுடையநடக்கையைப் பல விதமானபரிஹாஸத்துடன் எடுத்துச்சொல்லிக்கொண்டும் விராட ராஜனையும் அந்தப்புரத்திலுள்ள மற்றஜனங்களையும் ஸந்தோஷப் படுத்துவேன். ராஜரே! விராடநகரத்தில் ஸ்திரீகளுக்கு அற்புத மும் அவ்வாறே பற்பலவிதமுமான நர்த்தனத்தையும் கானத்தை யும் வாத்யத்தையும் கற்பிப்பேன். ராஜேந்த்ரரே! ஸ்திரீகளுடைய தன்மைக்குரிய நடக்கையினாலும் நாட்டியம் கானம் கதை இவை களைப்பற்றின செய்கைகளாலும் என்னை நான் கபடத்தினல் மறைத்துக்கொள்ளப்போகிறேன் 'யுதிஷ்டிரருடையஅரண்மனை யில் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டவளாகவும் த்ரௌபதியினு டைய பரிசாரிகையாகவும் வசித்துவந்தேன்' என்று சொல்லிக் கொள்வேன். ராஜரே! ஊர்வசியினுடையசாபத்தினல் நான் நபும்ஸகத்தன்மையடைந்திருக்கிறேன். இந்த்ரனுடைய அனுக்ர ஹத்தினல் பதின்மூன்றுவதுவர்ஷத்துக்குமேல் சாபத்தினின்று விடுபடுவேன். நான் எவ்வாறு வஸிப்பேனென்பது இவ்விதம் என்னல் ப்ரதிஜ்ஞைபண்ணப்பட்டது. ராஜேந்த்ரரே! இப்படிப் பட்ட [1] கிருத்ரிமமானவேஷத்தால் நளன்போல மறைந்தவனகி விராடநகரத்தில் ஸுகமாகவஸிக்கப்போகிறேன்' என்று மறு மொழிகூறினன்.

யுதிஷ்டிரர், 'உலகத்தில் கீர்த்திபினலும் பராக்ரமத்தினலும் வாஸுதேவருக்கொப்பானவனும் பரதஸ்ரேஷ்டனும் வஜ்ரம் போல உறுதியான [2] முஷ்டியுள்ளவனுமான இந்த அர்ஜுனன் மஹாமேரு மறைக்கப்படுவதுபோல் விராடராஜ்யத்தில் விராட னுடையஅரண்மனையில் மறைந்துவஸித்துக்கொண்டு, 'நான் நபும் ஸகனென்று சொல்லப்போகிறேன்' என்று ப்ரதிஜ்ஞைசெய்தது பாதகமன்றே?' என்று கூறினர்.

நான்காவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(நகுலனும் ஸஹதேவனும் த்ரௌபதியும் தாம்வஸிப்பதைத்தெரிவித்து ப்ரதிஜ்ஞைசெய்தது.)

புருஷர்களுள்சிறந்தவீரனும் தார்மிகர்களுள் ச்ரேஷ்டனு மான அர்ஜுனன் இவ்வாறு வார்த்தைசொல்லிவிட்டுப் பேசாம லிருந்தான் ராஜாவானயுதிஷ்டிரர் மற்றொருப்ராதாவைப்பார்த்து

1 செய்துகொண்டது. 2 வில்லேப்பிடித்தல்.

மறுபடியும் சொல்லலானர். “ம்ருதுவானதேகமுள்ளவனும் சூரனும் பார்க்கத்தகுந்தவனும் ஸுகானுபவத்துக்கேற்றவனும் துக்கத்தை அனுபவிப்பதற்குத் தகாதவனும் பாலனும் எப்பொழுதும் லாலனஞ்செய்யப்பட்டவனுமான இந்தநகுலன் எவ்விதமான தொழிலையும் எவ்விதமான ஒழுக்கத்தையுமுடையவனாக இருக்கப்போகிறானே? துன்பமுற்றவனும் அமைதியுள்ளவனுமான அப்படிப்பட்ட இந்தநகுலன் இந்தஸமயத்தில் எந்தவேலையைச்செய்ய விரும்புவானே? அப்பா! நகுலா! விராடராஜனுடையராஜ்யத்தில் நீ எந்தக்கார்யத்தைச்செய்துகொண்டு வஸிக்கப்போகிறாய்? அந்தக்கார்யத்தை எனக்குச் சொல்வாயாக’ என்றார்.

நகுலன், ‘குருராஜரே! நான் தாமக்ரந்தியென்கிற பெயருடன் விராடனுடையகுதிரைகளுக்குத் தலைவனாவேனென்பது என் எண்ணம். இந்தச்செய்கை எனக்கு மிக்கவிருப்பமானது. (குதிரைகட்டுகிற) கயிற்றுவேலையில் ஸமர்த்தனும் தாமக்ரந்தி என்றபெயரால் அறியப்பட்டவனுமானஎன்னை ஜனங்கள் இப்புவியில் ஓரிடத்திலும் ஒருபொழுதும் அவமதிக்கமாட்டார்கள். குதிரைகளைப்பழக்குவதிலும், அவ்வாறே, அவைகளுக்கு வைத்தியம்செய்வதிலும் நான் ஸமர்த்தனாயிருக்கிறேன். உமக்கு எவ்வாறு குதிரைகள் ப்ரியமுள்ளவைகளோ அவ்வாறே எனக்கும். எப்பொழுதும் ப்ரியமுள்ளவைகள். குதிரைக்குட்டிகளும் அவ்வாறே பெண்குதிரைகளும் என்னை அவமதிக்கமாட்டா. என்னை அடைந்திருக்கின்ற குதிரைகள், அவைகளின்முதுகில் ஏறுவதிலும் தேரில்கட்டுவதிலும் துஷ்டத்தனமுள்ளவைகளாகமாட்டா. ஐயா! விராடநகரத்தில் என்னைப்பார்க்கிற ஜனங்களுக்கு, ‘நான் முன்பு பாண்டுகுமாரரால் குதிரைகள்விஷயங்களில் அதிகாரம்கொடுக்கப்பெற்றிருந்தேன்’ என்று இவ்விதமாகச்சொல்லிக்கொண்டு ஸுகமாகஸஞ்சரிப்பேன். ராஜரே! இவ்வாறு அந்தவிராடனுடையநகரத்தில் மறைந்துஸஞ்சரிக்கப்போகிறேன். எவ்விதமாக நான் வஸிப்பேனென்பது உங்களிடத்தில் ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டது’ என்று மறுமொழி கூறினன்.

நகுலன் இவ்வாறுசொல்லியதைக்கேட்ட தர்மராஜர், ‘இந்த ஸஹதேவன், புத்தியில் ப்ருஹஸ்பதிக்கு ஒப்பானவனும் நீதியில் சுக்ரனுக்குஸமானனும் பற்பலமந்த்ராலோசனைகளில் ஸமர்த்தனும் வழியைவிட்டுவிலகாத நற்செய்கைகளில் நிலைபெற்றவனும் நன்முகப்பழக்கப்பட்டவனும் நல்வழியில்நிற்பவனுமாகி ராஜ்யதந்த்ரத்தை அறிந்திருக்கிறான். அந்தராஜநீதியை அறிந்திருக்கிற ஜனங்கள் கொஞ்சமேனும் இவனிடத்தில் தவறுதலைக்கண்டார்களில்லை. ஏ! ஸஹதேவ! நல்ல ராஜநீதியை அறிந்தவனும்

சூரனும் எல்லாமந்த்ரங்களிலும் ஸமர்த்தனும் நம்முடையதாயான குந்திக்கு எப்பொழுதுமே அதிகமான அன்புக்குவிஷயமான வனுமான நீ அந்தவிராடராஜனுக்கு எவ்விதமானதொழிலைச் செய்யப்போகிறாய்? அப்பா! நீ எந்தக்கார்யத்தைச் செய்து கொண்டு மறைந்து ஸஞ்சரிக்கப்போகிறாய்?' என்றுவினவ, ஸஹதேவன், 'ராஜரே! நான் பசுக்களுக்குத் தீனிபோட்டுப் போஷிப்பவனும் கறக்கிறவனுமாகி விராடனுடைய பசுக்களைக் காப்பவனாயிருக்கலாமென்பது என்விருப்பம். நான் பசுக்களுடையஸ்வபாவத்தை அறிவதில் ஸமர்த்தன். என் பெயர் தந்த்ரீபாலனென்று நான் சொல்லிக்கொள்வேன். என்னால் அப்பொழுது விராடநகரத்தில் காக்கப்பட்ட பசுக்கள் நோயற்றவைகளும் எண்ணிக்கையினால் அதிகப்பட்டவைகளும் புஷ்டியுள்ளவைகளும் பாலுள்ளவைகளும் அநேக கன்றுகளையுடையவைகளும் நல்ல பலமுள்ளவைகளும் நன்றாகப் போஷிக்கப்பட்டவைகளும் ஜ்வரமும் தோஷமும் அற்றவைகளும் திருடர் பயமில்லாதவைகளும் எப்பொழுதுமே வியாதிகளாலும் புலிகளாலும் விலக்கப்பட்டவைகளும் நன்றாக ஒன்றுகூடினவைகளும் மனத்துயரமற்றவைகளும் துன்பமில்லாதவைகளும் ஆகப்போகின்றன. நான் இவ்விஷயத்தில் ஸமர்த்தனாயிருப்பேன். இதில் எனக்கு அதிகமான ப்ரீதியிருக்கிறது. நான் முற்காலத்தில் உம்மால் எப்பொழுதுமே பசுக்காத்தலில் ஏவப்பட்டிருந்தேன். ராஜரே! அதில் எனக்கு ஸம்பூர்ணமான ஸாமர்த்தியமுண்டு. அரசரே! பசுக்களுடைய சுபமான லக்ஷணமும் நடையும் மற்றுமுள்ளயாவும் என்னால் நன்றாய். அறியப்பட்டிருக்கின்றன. மேன்மையரே! எந்தக்காளைகளுடைய மூத்திரத்தை மோந்துபார்த்து மலட்டுப்பசுவும் கன்றை ஈனுமோ அப்படிப்பட்ட உயர்ந்த லக்ஷணத்தையுடையகாளைகளையும் நான் அறிவேன். அத்தகைய நான் இவ்வாறு ஸஞ்சரிக்கப்போகிறேன். எனக்கு இவ்விஷயத்தில் ப்ரீதியானது அதிகமன்றோ? நான் விராடநகரத்தில் அச்செய்கையினால் மறைந்து கொண்டு மகிழப்போகிறேன். தோஷமற்றவரே! விராடராஜனை நான் ஸந்தோஷப்படுத்துவேன். உமக்குக் கவலைவேண்டாம். ராஜரே! என்னைப் பகைவன் அறியமாட்டான், (ஆதலால்,) அச்செய்கையானது உமக்கு விருப்பமாயிருக்கலாம். எவ்வாறு நான் ஸஞ்சரிப்பேனென்கிற இந்த விஷயமானது உங்களிடத்தில் என்னால் ப்ரதிஜ்ஞைபண்ணப்பட்டது' என்று மறுமொழி சொன்னான்.

யுதிஷ்டிரர், 'த்ருபதராஜகுமாரியாகிய கிருஷ்ணையானவள் எவ்விதமான கார்யத்தைச்செய்துகொண்டு விராடநகரத்தில்

வசிக்கப்போகிறாள்? ஸாமான்யஸ்த்ரீகளைப்போல த்ரௌபதி யானவள் கார்யம் யாதொன்றையும் செய்வதற்கு அறியாள். இவள் [1]பிறந்தநாள் முதல் புஷ்பமாலைகள் சந்தனங்கள் அலங் காரங்கள் பற்பலவஸ்திரங்கள் இவைகளைமாத்ரமே அறிவாள். பதிவ்ரதையும் மஹாபாக்யமுள்ளவளுமான இந்தப்பாஞ்சாலி யானவள் எவ்வாறு ஸஞ்சரிக்கப்போகிறாள்? இவளோ நமக்கு ப்ரியமானமனைவி; ப்ராணனைக்காட்டிலும் சிறந்தவள்; தாய் போலக்காப்பாற்றத்தக்கவள்; மூத்தஸஹோதரிபோலப் பூஜிக் கத்தக்கவள். மென்மையான தேஹமுள்ளவளும் நல்ல இயற்கை யுடையவளும் கீர்த்தியுள்ளவளும் மங்களத்தைச் செய்பவளும் பதிவ்ரதையுமாயிருக்கிற ராஜபுத்ரியானவள் விராடநகரத்தில் எவ்வாறு வஸிக்கப்போகிறாள்?' என்றார்.

த்ரௌபதி, 'ராஜேந்த்ரரே! ராஜரே! என்னிமித்தமான் சோகம் உமக்கு வராவண்ணம் நான் வஸிப்பேன். நீர் மனக்கவலை யற்றிரும். ராஜரே! ப்ரபுவே! என்னைப் பிறர் அறியாவண்ணம் எதை நான் செய்வேனென்பதைக் கேளும். ராஜரே! நான் மறைந்து வாஸஞ்செய்யப்போகிறேன். ஒருவரும் என்னை அறிய மாட்டார்கள். அவ்விதமான நடக்கையையும் நான் சொல்லு கிறேன். உமக்கு ஸுகமுண்டாகட்டும். மஹாராஜரே! நற் குலத்தில்பிறந்தவளான நான் [2]ஸைரந்த்ரி என்கிற பெயருடன் வ்ரதத்தை அனுஷ்டிப்பவளாக விராடனுடைய அரண்மனையில் வஸிக்கப்போகிறேன். இஃது என்னுடையஎண்ணம். பரத குலத்தில் உதித்தவரே! ஸைரந்த்ரிகள் ஸ்த்ரீகளுக்குப் பரிசாரிகை களாக ரக்ஷிக்கப்படுகிறார்கள். இந்தஸ்த்ரீகள் ஒருபர்த்தாவை யுடையவர்களென்பது உலகத்துக்கு நிச்சயம். அப்படிப்பட்ட நான் தலைபின்னுவதில்ஸாமர்த்தியமுள்ள ஸைரந்த்ரியென்றும்உல கத்தில் தேசாந்தரம்போயிருக்கின்ற புருஷர்களுடையஸ்த்ரீகளை ஸமாதானஞ்செய்கின்றவளென்றும் சொல்லிக்கொள்ளப்போகி றேன். பாரதரே! அரசன் என்னைக் கேட்பாரகில், 'நான் யுதிஷ்டிரருடைய அரண்மனையில் த்ரௌபதிதேவிக்கு ஊழியஞ் செய்துகொண்டு வாஸஞ்செய்துவந்தேன்' என்று சொல்லு வேன். நீர் என்னை எதைப்பற்றிக்கேட்டீரோ அவ்விஷயத் தில், என்னுடையஸ்வரூபத்தை நானே மறைத்துக்கொண்டு ஸஞ்சரிக்கப்போகிறேன். ராஜரே! நான் அந்தராஜக்ருஹத்தில்

---

1 வேறுபாடம்.

2 பிறருடையவீட்டில்வஸித்துக்கொண்டு ஸ்வாதந்த்ர்யத்துடனும் கற்புடனும் ராஜஸ்த்ரீமுதலானவர்களுக்குத் தலைபின்னுதல் விசித்ரமான படம் எழுதுதல்முதலான சில்பங்களைச்செய்பவள்.

போஷிக்கத்தகாதவளாகமாட்டேன். நான் எப்பொழுதும் விரதத் திலேயே என்னைக் காப்பாற்றிக்கொண்டு கீர்த்தியுடையவளும் ராஜபத்னியுமான ஸைரேதஷ்ணையை அடையப்போகிறேன். அவள் (தன்னிடம்) வந்திருக்கின்ற என்னைக் காப்பாற்றுவாள். உமக்கு இவ்விதமான துயரம் வேண்டாம். மேலும், அவ்விடத்தில் வஸிக் கின்றவளான நான் உங்களால் பாதுகாக்கப்பட்டவளாகவே ஸஞ் சரிப்பேன். நான் எவ்விதமாக வாஸஞ்செய்யப் போகிறேனென் பதை இவ்விதம் உங்களிடத்தில் ப்ரதிஜ்ஞைசெய்துவிட்டேன்' என்று மறுமொழி கூறினாள்.

யுதிஷ்டிரர், 'ஏ! கல்யாணி! கெட்டஎண்ணமுடையவர்களும் பாபிகளுமாயிருக்கின்ற நம்முடைய சத்ருக்கள் மறுபடியும் ஸாக முடையவர்களாகாமலும், அவர்கள் நம்மைக் கண்டறியாமலும் நீ செய்வாயாக. கிருஷ்ணையே! நற்குலத்திலுதித்தவளுக்கு எது தகுந்ததோ அவ்வித மங்களகரமான வார்த்தையைப் பேசுகிறாய். பதிவ்ரதையும் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றவளுமான நீ ஒரு பாவத்தையும் அறியாய்' என்றார்.

ஐந்தாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் இந்த்ரஸேனன் முதலானவர்களை த்வாரகை முத லான இடங்களுக்கு அநுப்பிவிட்டபிறகு, தௌம்யர் ராஜகீருஹத்தில் வஸிக்கவேண்டிய முறைகளைப் பாண்டவர்களுக்குக் கற்பித்ததும்.)

யுதிஷ்டிரர், 'உங்களால் எந்தக்கார்யங்கள் சொல்லப்பட்ட னவோ அந்தக் கார்யங்களை நீங்கள் அநுஷ்டித்துவாருங்கள். எனக்கும் நிச்சயத்திலே உசிதமான ஒருயுத்தி உண்டாயிருக்கின் றது. நம்முடையபுரோகிதரான இந்தத்தௌம்யர் த்ருபதனுடைய அரண்மனையில் ஸைதர்களோடும் சமையற்காரர்களோடுங்கூட அக்னிஹோத்ரங்களைப் பாதுகாக்கட்டும். இந்த்ரஸேனனை முதன் மையாகக்கொண்ட இவர்கள் வெற்றுரதங்களை நடத்திக்கொண்டு சீக்கிரம் த்வாரகையை அடையவேண்டுமென்று எனக்குத் தோன் றுகிறது. த்ரௌபதியினுடைய பரிசாரிகைகளான இந்தப் பெண் களனைவர்களும் ஸைதர்களோடும் சமையற்காரர்களோடும் பாஞ் சாலதேசத்துக்கே செல்லட்டும். எல்லாரும், 'மஹாத்மாக்களான பாண்டவர்களனைவர்களும் நடுநிசியில் எங்களையும் பிரகாஶமெடுத் துப்புஜிக்கின்ற ப்ராம்மணர்களையும் விட்டுவிட்டு த்வைதவனத்தி

னின்றும் எங்கேயோ புறப்பட்டுப் போய்விட்டார்கள; அறியக் கூடவில்லை' என்று சொல்லவேண்டும்' என்று கட்டளையிட்டார். இவ்வாறு அந்தப் பாண்டவர்கள் தனித்தனியாக அவரவர்களுடைய செய்கைகளை எடுத்துக்கூறிப் பரஸ்பரம் விடைபெற்றுக் கொண்டு, பிறகு, தௌம்யரிடம் விடைபெற்றுக்கொண்டார்கள். அரசரே! தர்மத்தில் மனத்தைச் செலுத்தினவரும் எல்லாத்தர்மங்களின் விசேஷங்களையும் அறிந்தவரும் புரோஹிதருமான அந்தத் தௌம்யரும் புருஷச்ரேஷ்டர்களான அந்தப் பாண்டவர்களுக்கு நீதியை உபதேசிக்கத் தொடங்கினர்.

"'ராஜரே! உலகத்திலுள்ள இந்த நடக்கையெல்லாம் எவ்விதமாயிருக்கின்றதென்பதை நீர் அறிந்திருக்கிறீர். அறிந்திருந்தாலும், நண்பர்கள் ப்ரீதியினால் சொல்லத்தக்கதே. ஆதலால், நான் (உங்களுக்குச் சிலவிஷயங்களைச்) சொல்லப்போகிறேன். காரணத்தைமாத்ரம் அறிந்துகொள்ளுங்கள். ஓ! ராஜபுத்ரர்களே! எவ்வாறு அயல்தேசம் சென்று ராஜக்ருஹத்தை அடைந்துஸஞ்சரிப்பவன் கெடுதியடையாமலிருப்பனோ அவ்விதமான இந்த ராஜகிருஹத்தில் வஸிக்கும் உபாயத்தை உங்களுக்கு நான் அன்பினால் சொல்லுகிறேன். குருகுலத்தில் உதித்தவரே! கௌரவிக்கத்தக்கவரே! கௌரவர்களுடைய அரண்மனையில் பிறந்த ஒருவன் கௌரவிக்கப்படாமல் ஒருவருஷகாலம் மறைந்து வாஸஞ்செய்வதென்பது மிக்க கஷ்டமே. உள்ளே வரலாமென்று அனுமதி பெற்றுக்கொண்டு அரசனைப் பார்க்கவேண்டும். அரசர்களுடைய பொருள்களில் நம்பிக்கை வைக்கலாகாது. தன்னைக் கேளாமலிருக்கையில் அரசனுக்கு ஒருபொழுதும் நீதி சொல்லக்கூடாது. பேசாமலிருந்துகொண்டே அவனை உபாஸிக்கவேண்டும். தகுந்த ஸமயத்தில் அவனைப் புகழவேண்டும். பொய்சொல்லுகின்ற ஜனங்களிடத்தில் அரசர்கள் அஸூயைப்படுவார்கள். அவ்வாறே பொய் சொல்லுகின்ற மந்த்ரியை அரசர்கள் அவமதிப்பார்கள். மிகவும் அல்பமாயினும் கார்யங்களை அரசனிடத்தில் தெரிவித்துச் செய்யவேண்டும். இவ்வாறு அரசனிடத்தில் பழகுபவனுக்கு ஒருபொழுதும் குறை நேரிடாது. ஏ! பாண்டவரே! உலகத்தில் பிராணிகளை (உணவு முதலியவற்றால்) போஷிக்கின்றவனும் (ஆபத்தினின்று) காப்பாற்றுகின்றவனும் எல்லாச் சஸ்திரங்களாலும் நிறைந்தவனுமான அரசன் மனிதவடிவங்கொண்ட ஒரு பெருநெருப்பு. அரசனை அடுத்திருப்பவனை எவ்விதத்திலும் தோஷம் எவ்வாறு அணுகாதோ அவ்வாறான அவனுடைய நடக்கையைத் தெரிந்துகொள்ளுங்கள். புத்திசாலியான ஒருவன் கூத்திரியனை

யும் ஸர்ப்பத்தையும் அதிகமாகக்கற்றறிந்த ப்ராம்மணனையும், அசக்தர்களாயிருந்தாலும், ஒருபொழுதும் அலக்ஷியஞ்செய்யக் கூடாது. இம்மூவரும் அவமதிக்கப்பட்டால் மனிதனை எரிப்பர். ஆதலால், கற்றறிந்தவர்கள் எப்பொழுதும் அரசனை முயற்சியுடன் பூஜிக்கவேண்டும். அரசனல் ஸம்மதிக்கப்பட்டமனிதன் வரம்புகடந்து செல்லக்கூடாது. பண்டிதர்கள் உலகத்தில் (அவனவனுக்குரிய) மர்யாதையைத்தான் வ்யவஹாரமென்று அறிந்திருக்கிறார்கள். பகைவர்களை அடக்குபவரே! அரசர்கள், புத்ரனையும் பேரனையும் ஸஹோதரனையும் வரம்புகடந்து நடப்பவனைப் புகழமாட்டார்கள். அரசனல் ஒரு வித அதிகாரங்கொடுக்கப்பட்டவன் மிக்கசெல்வத்தையடைந்திருந்தாலும் தனக்குரிய நிலைமையை ஆலோசித்துப் பிறவிக்குருடனைப்போலத் தன்னைக் கருதவேண்டும். அரசனிடத்தில்பழகுபவன் தைர்யசாலியாக எப்பொழுதும் வாயிலைப்பார்த்துக்கொண்டு அரசர்களிடத்தில் நம்பிக்கை இல்லாதவனாயிருக்கவேண்டும். அரசர்களிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது. எந்த ஆஸனத்தில் பிறன் பிரியம்வைக்கமாட்டானோ அந்த ஆஸனத்தையே விரும்பவேண்டும். ராஜக்ருஹத்தில்வஸிக்கின்ற மனிதன் எந்த ஆஸனத்தில் உட்கார்ந்தால் மிக்கபலவானை ஒருவனுடைய மனம் வருந்தாதோ அந்த ஆஸனத்தை விரும்பவேண்டும். ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் எந்த இடத்தில் எவ்வாறு உட்கார்ந்திருந்தால், 'இவன் துஷ்டகார்யம் செய்கிறவன்' என்று மற்றவன் ஸந்தேஹிப்பனோ அந்த இடத்தில் அவ்வாறுஒருபோதும் உட்காரக்கூடாது. தனக்குரிய இடத்தில் இஷ்டப்படி இருக்கலாம்; அல்லது, அரசனுடைய சமீபத்தில் நிற்கலாம். பிறருடைய ஆஸனத்தை ஒருபொழுதும் விரும்பவேகூடாது. வேறொருவனுடைய ஆஸனத்தில் உட்கார்ந்தால் இவனை அவனுடையவேலைக்காரர்கள் ஸபையில் இழுத்துவிடுவார்கள்; சத்ருக்களால் பரிஹஸிக்கப்படுவான். வேலைக்காரன் தனத்துக்காக அரசனை அடைந்திருத்தலால் எப்பொழுதும் அரசனுக்கு முன்னிலையிலிருப்பதுகூடாதென்று (நீதிமான்கள்) எண்ணுகிறார்கள். ராஜரே! கற்றறிந்தவன், அரசனுடையவலப்பக்கத்தையோ இடப்பக்கத்தையோ அடைந்து விநயமுள்ளவன்போல நிற்கவேண்டும். அரசனுக்கு முன்புறத்திலாவதுபின்புறத்திலாவது நிற்கக்கூடாது. பின்புறத்திலுள்ள இடமானது அரசனைக்காப்பாற்றும்ஆயுதபாணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதர்களை வசப்படுத்துவதின்பொருட்டுத் தாய்வம்சத்திலாவது தகப்பன்வம்சத்திலாவதுள்ள (பெரியோர்களுடைய) நாமதேயத்தையும் நன்

னடக்கையையும் எப்பொழுதும் சொல்லவேண்டும். அரசனுல் பூஜிக்கப்பட்டும் எந்தமனிதன் அவ்வரசனுக்கு ப்ரதிபூஜை செய்யவில்லையோ, அந்தமனிதனை, அரசன், ஆசார்யன் சோம்பேறிகளானசிஷ்யர்களைக் கௌரவியாததுபோல, ஒருபொழுதும் கௌரவப்படுத்தமாட்டான். ராஜக்ருஹத்தில்வஸிப்பவன், 'நான் அரசனுடைய அன்புக்குப்பாத்ரமாயிருக்கிறேன்' என்று அரசனுடைய வாஹனத்திலாவது கட்டிலிலாவது ஆஸனத்திலாவது ரதத்திலாவது ஏறக்கூடாது. எந்தமனிதன், வீட்டினின்று வெளிப்பட்டுச் செய்யவேண்டியகார்யத்தை நினைத்துக்கொண்டு அபிவிருத்தியில் உறுதியான எண்ணமுள்ளவனும் சோம்பலற்றவனும் மனத்தை அடக்கினவனுமாகி, பசிதாகங்களால் வருத்தப்பட்டாலும் ரோதனஞ்செய்யாமல், கஷ்டத்திலும் ஸுகத்தையடையவேண்டுமென்று விரும்புவனே அவன் ராஜக்ருஹத்தில் வஸிக்கவேண்டும். (அரசனுல்) மற்றவர்கள் ஏவப்படும்போது, 'நான்செய்வேன்' என்று தைர்யத்துடன் எந்தமனிதன் முற்படுவனே அந்தமனிதனே அரசர்களிடங்களில் ஸித்தியைப்பெறுவான். எந்தமனிதன் வெயிலிலோ குளிரிலோ பகலிலோ இரவிலோ ஏவப்பட்டால் ஆலோசியாமல் கார்யங்களைச்செய்வனே அவன் அரசர்களிடங்களில் ஸித்தியை அடைகிறான். ராஜக்ருஹத்திலிருக்கும் ஸமர்த்தனனமந்திரியை ஒருபொழுதும் அவமதிக்கக்கூடாது. கௌரவப்படுத்தப்பட்டாலும் ஸந்தோஷிக்கக்கூடாது. அவமானப்படுத்தப்பட்டாலும் மனவருத்தமடையக்கூடாது. எவன் ருஜுபுத்தியுள்ளவனும் ம்ருதுத்தன்மையுள்ளவனும் உண்மைபேசுபவனுமாயிருக்கிறானே அவன் அரசர்களிடங்களில் கார்யஸித்தியைப் பெறுகிறான். ராஜக்ருஹத்தில் வஸிப்பவன் லாபத்திலல்ஸந்தோஷமடையக்கூடாது; அவமதிக்கப்பட்டாலும் மனவருத்தமடையக்கூடாது. (ஸுகதுக்கங்களில்) சரியான நிறைபாரமுள்ளதராசுபோல் ஸமனயிருக்கவேண்டும். அரசனே! ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் அதிக ஆசை இல்லாதவனும் தைர்யமுள்ளவனும் நிழல்போல எப்பொழுதும் அரசனை அனுசரிப்பவனும் ஸமர்த்தனும் அதிகமான ஈகையுடையவனும் பண்டிதனுமாயிருக்கவேண்டும். ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் இதிஹாஸங்களையும் புராணங்களையுமறிந்தவனும் நல்லகதைகளைச் சொல்வதில் ஸாமர்த்தியமுள்ளவனும் மிக்க கொடையுள்ளவனும் ஸத்யவாக்குள்ளவனுமாயிருக்கவேண்டும். ரஹஸ்யத்தில் சொல்லப்பட்ட அரசனுடையவார்த்தையை மனிதர்களிடம் வெளிப்படுத்தக்கூடாது. அரசர்கள், எவனிடத்தில்அஸூயையைப்பா

ராட்டுகிறார்களோ அவனைப்பற்றிப் பேசக்கூடாது. அரசர்களுடைய காரியங்களில் ஏவப்பட்டவன் கொஞ்சமேனும் (குடிகளிடமிருந்து) பரிதானத்தை வாங்கக்கூடாது; வாங்குகின்றவன் சிறைச்சாலையையோ, அல்லது மரணத்தையோ அடைவான். 'ஸமமாகச் சேவகத்துக்கு வந்திருக்கின்ற நான் மற்றொருவன் எங்கள் இருவர்களுள் என்னைக்காட்டிலும் குறைந்தமற்றவனை அரசன்போஷிக்கிறான்; பார்!' என்று அறிவுள்ளவன் மயக்கமடையக்கூடாது. ஒவ்வொரு காரியத்திலும் அரசர்கள் மிகச்சிறந்த அறிவுள்ளவனை விட்டுவிட்டு அதிகமாகக் கீழ்நிலைமையிலிருப்பவனை ஏற்படுத்துவார்கள். அரசர்களுடைய தன்மை அப்படிப்பட்டது. ராஜக்ருஹத்தில் வஸிக்கின்ற கற்றறிந்தவனை மனிதன் அரசர்களின் மனைவிகளிடம் எவ்விதத்தாலும் நேசம் பாராட்டக்கூடாது. அந்தஸ்த்ரீகளைக் காக்கும்வேலையையும் தான் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அரசன் தன் ஸ்த்ரீகளோடு சேர்ந்து நிற்கின்ற வேலைக்காரனைக் கண்ணால் பார்க்கும்பொழுது அரசனுடைய புத்தியானது கலங்கும். அரசன் ஸந்தேஹப்பட்டாலும் படுவான். தன் நிலைமையிலுள்ளவனும் (க்ரோதத்தினால்) பலாத்காரம் செய்யப்பட்டவனுமான அரசன் ஸ்த்ரீவிஷயத்தில் ஸந்தேஹத்துக்கிடமுள்ள எந்தவேலைக்காரனுடைய உயிர்வாழ்க்கையை நல்லதென்று நினைப்பான்? ராஜக்ருஹத்திலிருக்கின்ற ஸந்தோஷத்துக்கேதுவான சில வஸ்துக்களின் விஷயங்களில் தான் அதிகமாக ஸந்தோஷம் பாராட்டக்கூடாது. அந்த வஸ்துக்களையே அரசனிடத்தில் புகழவேண்டும். புத்திக்குறைவுள்ள மனிதன் ஸந்தோஷத்தினால் தன்இஷ்டப்படி கெட்ட காரியத்தைச் செய்துவிடுவான். ஆதலால், அந்தப்புரத்தில் இவனுடைய நடக்கையை அரசன் கவனித்துப்பார்ப்பான். அந்தப்புரத்தை அடைந்து கபடவேஷமின்றியிருக்கின்ற இந்த வேலைக்காரனை ஸ்த்ரீகளும் எல்லா நபும்ஸகர்களும் ஸம்சயமில்லாமல் அலக்ஷ்யம் செய்வார்கள். ஆதலால், தன்னைக் கம்பீரஸ்வபாவமுள்ளவனை ஏற்படுத்திக்கொண்டும், ஸந்தோஷத்தை உள்ளடக்கிக்கொண்டும் அரசனுடைய அந்தப்புரத்தில் நாள்தோறும் நடக்கும் வ்ருத்தாந்தத்தை வெளியிடாமலுமிருக்கவேண்டும். மிகச்சிறந்த மந்த்ராலோசனையானது வெளிப்பட்டால் ஸுகத்தைக் கெடுப்பதுபோலவே அந்தப்புரத்திலுள்ள வ்ருத்தாந்தமானது வெளியிலுள்ளவர்களால் கேட்கப்பட்டால் ஸுகத்தைக் கெடுத்துவிடும். அந்தரங்கர்களும் வெளியிலுள்ளவர்களுமான அரசனை அண்டிப்பிழைக்கும் இரண்டுவகை வேலைக்காரர்களுடைய வ்ருத்தாந்தத்தையும் நீர் கேளும். வெளியிலுள்ளவனைவது உள்ளிலுள்ளவனைவது ஒரு

பொழுதும் ஸ்த்ரீகளை நிணைக்கக்கூடாது. அரசனுவென்றால் அந்த வேலைக்காரர்களுக்கு அதிகமான பயத்தை உண்டுபண்ணுவான். அரசனல்லாத கற்றறிந்த ஒருவன் தன்னை அரசனுக்கு வேண்டினவனென்று எண்ணிக்கொண்டு அரசன் அணியத்தக்க உத்தம ரத்னங்களை அரசனைப்போலத் தான் உபயோகிக்கக்கூடாது. அரசனுக்கு ப்ரியமான ரத்னங்களை அரசனைப்போல் அனுபவிக்கின்ற அரசனல்லாத மனிதனை அரசன் உயிரோடு வைப்பதற்குப் பொறுக்கமாட்டான். ஆதலால், ஐஸ்வர்யத்தை விரும்புகின்ற மனிதன் ப்ரகாசமில்லாத போகத்துடன் கூடியவனுக ஸுகங்களை அனுபவிக்கவேண்டும். ராஜாவானவன் தனக்குச் சமமான போகத்துடன்கூடின வேலைக்காரனைக் கோபத்துக்காளாக்குவான். அரசனுடைய புத்ரனோடு எவ்விதகாரணத்தினாலும் நேசம் பாராட்டக்கூடாது. அரசனால் அவமதிக்கப்பட்டவனையும் பயனற்றவனையும் சத்ருவையும் தூரத்தில் விலக்கவேண்டும். இந்த நான்குவித மான மனுஷ்ய ஸ்திதியை அனுசரிக்கின்ற ராஜஸேவகனிடத்தில் அரசனுடைய ப்ரீதிக்குக் காரணமானது இரண்டாகத் துண்டிக்கப்படுகிறது. இந்த நராதமர்களைக்காட்டிலும் வேறனவர்களும் இதற்கு மாறான நிலைமையை அனுஷ்டிக்கிறவர்களுமான மனிதர்களோடு சேர்க்கையை அடையவேண்டும். விரோதத்தை எவ்விதத்திலும் அடையக்கூடாது. ராஜபந்துக்களோடும் பலமுள்ளவர்களான மனிதர்களோடும் சேர்க்கையை நல்லதாக எண்ணவேண்டும். எவ்விதத்திலும் விரோதத்தைத் தேடிக்கொள்ளக்கூடாது. முற்கூறப்பட்ட இரண்டுவிதமான நிலைமைகளுக்கும் விரோதமாக நடக்கும் பலக்குறைவுள்ள ஒருமனிதனுக்கு முதலில் ராஜப்ரீதிக்கு எது மூலமோ அது துணிக்கப்படும். இரண்டாவது பயமும் நேரும். கர்வமுள்ளவர்களுடைய வேஷத்தையும் கபடமுள்ளவர்களுடைய வேஷத்தையும் அரசனுடைய வேஷத்தையும் வெளிப்படையாகத் தரிப்பவன் வ்ருத்தி அடையமாட்டான். ராஜவேஷந் தவிர மற்ற இரண்டு வேஷங்களையும் தரிப்பவன் பந்துக்களால் பரிஹாஸஞ்செய்யப்படுவான். புருஷர்களல்லாதபுருஷர்களோடும், ஸ்த்ரீகளோடும் ஸ்திரீகளைப்பார்க்கின்ற ஸ்வபாவமுள்ள புருஷர்களோடும், கூடுமானல், ஓரிடத்திலும் ஒருபொழுதும் ஸம்பாஷணஞ் செய்யக்கூடாது. இம்மூவர்களோடும் பேசுகின்ற அறிவற்ற மனிதன், கழுகானது மாம்ஸத்தை அபஹரிப்பதுபோலத் தன்னுடைய ஐஸ்வர்யத்தை [1] அபகரிக்கிறன். (காரணமில்லாமல்) காரணமிருப்பதுபோல் அரசனிடமிருந்து ஸம்மானத்தைப்பெறுகிற

[1] இழந்துவிடுவானென்பது கருத்து.

வர்களோடும். சிற்றரசர்களுடையதூதர்களோடும் ஒருபொழுதும் சேர்க்கைபெறலாகாது. ராஜக்ருஹத்தில்வஸிக்கின்ற புத்திசாலியான மனிதன் அரசனுல் உத்தரவளிக்கப்படாமல் மற்றொருவனுடையஸ்தானத்தை அடையக்கூடாது. அரசர்கள்முன்னிலையில் தற்புகழ்ச்சி செய்யக்கூடாது. அப்படிப் புகழ்வதானது தரித்திரர்களுக்கும் அதிகமான அப்ரியத்துக்குக்காரணமாகும். பொருளில் ஆசைகொண்டு எந்தஸ்த்ரீ அரசனை அடைந்திருக்கிறளோ அப்படிப்பட்டவளை ஆவலுடன்பார்க்கின்றவேலைக்காரன் கெடுதியை அடைவான். ஆதலால், அவ்விதமாக அடுத்திருக்கின்றஸ்திரீயை ஸமர்த்தன் உற்றுப்பார்க்கக்கூடாது. அவ்வாறே, தும்மலையும் அபானவாயுவையும் காறி எச்சிலுமிழ்வதையும் மௌனமாகச் செய்யவேண்டும். பரிஹாஸவார்த்தைகளில் ஒருபொழுதும் சிரிக்கக்கூடாது. அப்படிச் செய்வதானது அறிவீனனுடையசெய்கையென்று எண்ணப்படுகிறது. (அரசனுடைய) ப்ரீதிபினனுண்டான சிரிப்பை மௌனமாக வெளியில் காட்டவேண்டும். ஒருகாலத்தும் 1 உதடுகளை அசைக்கக்கூடாது. கைகளையும் ஆட்டக்கூடாது. அரசனுடையவார்த்தையை ஆக்ஷேபிக்கக்கூடாது. குறுக்காகப் பார்க்கவும்கூடாது. நன்றாகக் கண்களால் பார்க்கவேண்டும். அரசனுக்கருகில் புருவத்தைநெறிக்கலாகாது. கட்டைவிரல்களால் பூமியைக்கீறலாகாது. ஒருபொழுதும் நன்றாகக் கொட்டாவி விடக்கூடாது. அந்தஅரசனுடையமுன்னிலையில் ப்ரியர்களும் ஹிதர்களும் புகழப்பட்டாலும் இகழப்பட்டாலும் தான் புகழவுங்கூடாது; அலக்ஷ்யபாராட்டவுங்கூடாது. ப்ரியர்களையும் ஹிதர்களையும்பார்க்கும்பொழுதும் (அவர்களுடைய) வாக்யங்களைக்கேட்கும்பொழுதும் அம்ருதம்போல் அவர்களை வர்ணிக்கவேண்டும். அரசனுக்கு ப்ரதிகூலகார்யங்களைச் செய்பவன் புத்ரனாலும் ப்ராதாவானாலும் அரசனுக்குச்சமானனானாலும் லோகமுடையவனாகான். புத்திசாலியானவன் ஜாக்ரதையுடன் அரசனைப் பூர்ணமான நல்லொழுக்கத்தாலும் முயற்சியினாலும் பற்பலவிதமானசுத்தியினாலும் ஆனந்தப்படுத்தவேண்டும். ஸ்நானஞ்செய்வதும் சுத்தவஸ்த்ரம்தரிப்பதும் சரீரஸம்பந்தமானசுத்தியென்று சொல்லப்படுகின்றன. அற்பமான வஸ்துக்களில் பற்றுதலற்றிருப்பது இரண்டாவதுசுத்தியென்றுசொல்லப்படுகிறது. எவன் ராஜா, போஜன், விராட், ஸம்ராட், க்ஷத்ரியன், பூபதி, நிருபனென்ற இவ்விதசப்தங்களால். புகழப்படுகிறனோ அவனை எவன்தான் பூஜிக்கத்தக்கவனல்லன்? ஆதலால், புத்தியுள்ளவன்,

1வேறுபாடம்

பக்தியுள்ளவனும் உண்மைபேசுகிறவனும் இந்திரியங்களை அடக்கினவனும் மேதாவியும் தைர்யமுள்ளவனுமாக அரசனை ஆப்ரயிக்கவேண்டும். நன்றியறிவுள்ளவனும் கற்றறிந்தவனும் அல்பஸ்வபாவமில்லாதவனும் உறுதியான அன்புள்ளவனும் இந்திரியங்களை அடக்கினவனும் வ்ருத்தியடைகின்றவனும் நல்லநிலைமையிலிருக்கின்றவனுமான அரசனை அடுக்கவேண்டும். பார்த்தரே! ராஜஸேவகர்கள் ஐஸ்வர்யத்தைப்பெறுவதற்குரிய நல்லொழுக்கமானது சாஸ்த்ரமுறைப்படி உங்களுக்கு என்னால் உரைக்கப்பட்டது. இந்த ஒருவருஷமுழுமையும் இவ்விதமான ஸ்வபாவமுள்ளவர்களாயிருங்கள். அதற்குப் பிறகு, உங்களுடைய தேசத்தையடைந்து இஷ்டப்படி வஸிப்பீர்கள்' என்று கூறினர்.

சத்ருக்களைத் தபிக்கச்செய்கின்றபார்த்தர்கள், கீர்த்தியுடையவரும் பிதாவுக்கொப்பானவருமான அந்தத்தௌம்யரைப்பார்த்து, 'அவ்வாறேஆகட்டும்' என்றுசொல்லி ஸந்தோஷமுடையவர்களாக அவரை வந்தனஞ்செய்து புறப்பட்டார்கள். பிராம்மணரான தௌம்யர் புறப்படும் அவர்களுக்கு மங்களத்தின்பொருட்டும் ராஜ்யலாபத்தின்பொருட்டும் வீர்யத்தின்பொருட்டும் விஜயத்தின்பொருட்டும் மந்திரங்களை ஜபித்தார். பிறகு, அந்தப்ராம்மணர், அவர்கள் திரவ்யங்களை மீண்டுஅடைதற்கும் சத்ருக்களுடையவினாசத்திற்கும் ஆசீர்வாதங்களைச்செய்து, 'உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும்; வழியானது மங்களகரமாகட்டும். மறுபடியும் திரும்பிவருகின்றஉங்களை நான் பார்ப்பேன்' என்றவார்த்தையைச்சொன்னர். புத்திமானனஅந்தத்தௌம்யாசார்யர் இவ்வாறுசொல்ல, யுதிஷ்டிரரைத் தலைவராகக்கொண்ட பாண்டவர்களனைவர்களும் ஸந்தோஷமடைந்தமனத்துடன் செல்லத்தொடங்கினர்கள்.

ஆறுவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் தௌம்யரைவிட்டு விராடநகரத்தை அடுத்தது.)

அந்தப்பாண்டவர்கள் அனைவர்களும் அக்நியையும் புரோஹிதரான ப்ராம்மணரையும் ப்ரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துப் பிறகு புறப்பட ஆரம்பித்தார்கள். யுதிஷ்டிரர், தௌம்யரைப்பார்த்து, '(ப்ராம்மணரே!) உம்மால் நான் கட்டளையிடப்பட்டேன். உமக்கு மங்களமுண்டாகட்டும். மாதாவான குந்தியையும் புகழுள்ள தந்தை

னையும்தவிர, எங்களுக்கு இவ்விதமான உபதேசசத்தைச்செய்பவர் ஒருவருமில்லை. துக்கத்தைத்தாண்டுவதற்கும் (அஜ்ஞாதவாஸத் துக்காகப்) புறப்படுவதற்கும் க்ஷேமத்திற்கும் எது அடுத்துச் செய்யத்தக்கதோ அதை நீர்சொல்லவேண்டும்' என்றார். பிறகு, அந்தப் பாண்டவர்கள் பிரயாணப்படும்பொழுது, தௌம்யர், மந்திரங்களாலும் ஹவ்யங்களாலும் பூஜிக்கப்பட்ட அக்னியை முன்னாக ஜ்வலிக்கச்செய்து, எல்லா இடையூறுகளையும்போக்கக்கூடியனவும் அவ்வாறே எல்லாக்கார்யஸித்திகளையும் உண்டுபண்ணக்கூடியன வுமான மந்திரங்களை ஜபித்தார். பிறகு, மஹாரதர்களான பாண் டவர்களனைவர்களும் ஆயுதங்களைத்தரித்துக்கொண்டும் த்ரௌ பதியைமுன்னிட்டுக்கொண்டும் ஒருவனத்தினின்றும் மற்றொரு வனத்துக்குத் தௌம்யருடன் வேகமாகச் சென்றார்கள். கட்டப் பட்ட கத்தியுள்ளவர்களும் விற்களையும் அம்புகளையும் தூணீரங் களையுமுடையவர்களும் பயங்கரமானவில்லுள்ளவர்களுமான அந் தப் பாண்டவவீரர்கள் காம்யகவனத்தினின்று புறப்பட்டுத் தசார்ணதேசத்துக்கு வடபுறமாகவும் பாஞ்சாலநாட்டுக்குத் தென் புறமாகவும் யக்ருல்லோமதேசம் சூரஸேனதேசம் இவைகளின் நடுவாகவும்சென்று யமுனாநதியை வந்தடைந்தார்கள் பிறகு, அவர்கள் காலால்நடந்து யமுனையினுடையதென்கரையை அடை ந்து காடுவிட்டுக்காடுபுகுந்து மேற்குமுகமாகச் சென்றார்கள். வில் லாளிகளானபார்த்தர்கள், ரமணீயமான வனதுர்க்கங்களிலும் அழகான சிறியதடாகங்களிலும் நதிகளுடைய ஸங்கமஸ்தலங் களிலும் பற்பலவிதமானவடிவங்களுள்ளவைகளும் பற்பலகொடி களால் சூழப்பட்டவைகளும் புஷ்பங்களால்நிறைந்தவைகளும் மனத்துக்கு ப்ரியமானவைகளும் நல்லவாஸனையுள்ளவைகளும் மனத்துக்கின்பமானவைகளும் புஷ்பங்களால் விளங்குகின்றவை களுமானமரங்களைப்பார்க்கின்றவர்களும், மனத்துக்கின்பமான புஷ்பவாசனைகளையும் பழங்களுடையவாஸனைகளையும் மோந்து பார்க்கின்றவர்களுமாக வஸித்துக்கொண்டிருந்தார்கள். பெரிய வில்லையேந்தியவர்களும் மஹாபலசாலிகளும் சத்ருக்களுடையபட் டணங்களை ஜயிக்குந் தன்மையுடையவர்களுமான பாண்டவர்கள், ம்ருகளைமூஹங்களை அடித்துக்கொண்டு பன்னிரண்டுவர்ஷகாலம் வனவாஸஞ்செய்துவிட்டு, அப்பொழுது தங்களை வேடர்களென்று சொல்லிக்கொண்டு, மத்ஸ்யராஜனுடையதேசத்தில் பிரவேசித்தார் கள். பெரியவில்லுள்ளவர்களான பாண்டவர்கள் அவ்விடத்தில் தௌம்யரை விட்டுவிட்டார்கள். அந்தத்தௌம்யரும் ஓர் ஆர்த்ர மத்தில் அக்நிஹோத்ரத்தைச்செய்துகொண்டு ஒருவருக்குந் தெரி

யாமல் வஸித்துவந்தார். மஹாத்மாக்களான அந்தப்பாண்ட வர்கள் சென்றபிறகு, இந்திரஸேனன்முதலானவர்கள் தர்மபுத்தி ரர்சொற்படி த்வாரகையையடைந்து தேர்களையும்குதிரைகளையும் காப்பாற்றிக்கொண்டு மனக்கவலையற்று ஸுகமாக மறைந்துவஸித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு, த்ரௌபதியானவள் விராட தேசத்தையடைந்து ராஜாவைப்பார்த்து, 'ராஜரே! வயலில் பசுமந்தைகளிருக்கும் இடத்தை அடைந்திருக்கின்ற ஒற்றையடிப் பாதைகள் காணப்படுகின்றனவற்றைப்பாரும். கிராமங்களுடையவும் நகரத்தினுடையவும் பூந்தோட்டங்களிலுள்ள மரங்களையும் பாரும். விராடனுடையராஜதானியானது தூரத்திலிருக்குமென்பது வெளியாகிறது. இவ்விடத்தில் இந்தப்பின்னிரவுமுழுமையும் வாஸஞ்செய்வோம். எனக்குப்ரமம் அதிகமாயிருக்கிறது' என்று தெரிவித்தாள்.

யுதிஷ்டிரர், 'மாத்ரீபுத்ர! நகுல! தாமரை இதழ்போன்ற கண்களையுடையவளான இந்தத்திரௌபதியைக் கைகளால்தூக்கிக் கொண்டு ஒருமுகூர்த்தகாலம் நடந்துபோ. ஓ! பரதஸ்ரேஷ்ட! பிறகு, விராடனுடைய நகரமானது ஸமீபிக்கப்போகிறது. ராஜதானியில் வஸிப்போம். வனம் நம்மால் விடப்பட்டதுபோலும்' என்றுநியமிக்க, நகுலன், 'ராஜரே! முற்பகலில் வேட்டையாடிக் கானகத்தில் ம்ருகங்கள் என்னால் கொல்லப்பட்டன. ம்ருகங்களைக்கொல்வதில் விருப்பமுற்றவனும் வேகமாக ஓடுகின்றவனுமானநான் மேடுபள்ளமுள்ளதும் எவ்விதத்தாலும் பிரவேசிக்கமுடியாததுமான காட்டில் வெகுதூரம் நடந்திருக்கின்றேன். அதிகவெய்யிலால் மிக்கதாபத்தையடைந்திருக்கிறநான் இவளை எடுத்துச் செல்வதற்குச் சக்தியற்றவன்' என்று மறுமொழிகூறினன். யுதிஷ்டிரர், 'ஓ! ஸஹதேவ! நீ திரௌபதியை எடுத்துக்கொண்டு ஒருமுகூர்த்தகாலம் செல். விராடராஜதானியில் வஸிப்போம். வனம் நம்மால் விடப்பட்டதுபோலும்' என்று நியமிக்க, ஸஹதேவன், '(ராஜரே!) நானும் தாகமுள்ளவனும் பசியுள்ளவனுமாயிருக்கிறேன்; அதிகப்ரமத்தை அடைந்திருக்கிறேன். உமக்கு மங்களமுண்டாகட்டும். நான் இவளை எடுத்துக்கொண்டுசெல்வதற்குச் சக்தியற்றவனையிருக்கிறேன்' என்று மறுமொழிகூறினன். யுதிஷ்டிரர், 'ஓ! வீரனே! அகன்றகண்களையுடையவனே! அர்ஜுன! நீ தாமரைப்பூவின் இதழ்போன்ற கண்ணையுடையவளும் துருபதராஜனுடையகுமாரியுமாகிய இந்தத்ரௌபதியை வீரசிங்கம்போல இரண்டுகைகளாலும் தூக்கிக்கொண்டு ஒருமுகூர்த்தகாலம் க்ஷேமமாகச்செல். ராஜதானி

யில் வஹிப்போம். வனம் நம்மால் விடப்பட்டதுபோலும்' என்று நியமித்தார். பிறகு, குருவான தர்மபுத்ரருடைய வார்த்தையைக்கேட்டு மிக்க மனக்களிப்புற்றவனும் பொறிகளை அடக்கினவனும் சிறந்த கைகளுள்ளவனுமான அர்ஜுனன், தோஷமற்றவளும் இனிய தோற்றமுடையவளுமான ராஜகுமாரியை இரண்டு கைகளாலும் தூக்கிக்கொண்டு சென்றான். ஜடையுடையவனும் மரவுரியுடுத்தவனும் அம்புகளையும் அம்பறாத்தூணிகளையும் வில்லையும் தரித்தவனுமான அர்ஜுனன், [1] ப்ரேஷ்டமான இடையையுடையவளும் சிறுமியும் நீண்டகண்களையுடையவளுமான த்ரௌபதியைத் தோளில்தூக்கிக்கொண்டு விராடநகரத்தின் அருகில்வந்து இறக்கினன்.

ஏழாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களைக் கட்டிவைத்ததும், தங்களுக்குத் ஸங்கேதமான பெயர்களை வைத்துக்கொண்டதும்.)

அந்தத்தர்மராஜர், விராடராஜதானியைஅடைதலும், அர்ஜுனனைப்பார்த்து, 'ஓ! புருஷப்ரேஷ்ட! பரந்தப! இந்த ஆயுதங்கள் எவ்விடத்தில்வைக்கத்தக்கன? இவைகளைப்பாதுகாப்பது எவ்விதம்? அப்பனே! நாம் ஆயுதங்களோடுகூடியவர்களாகவே பட்டணத்தில் பிரவேசிப்போமாலல் இந்தநகரத்துஜனங்களுக்கு ஸந்தேகமின்றிப் பயத்தைஉண்டுபண்ணுவோம். நரர்ஷ்ட! காண்டீவமோ மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்றது. ஐய! இந்தவில்லை எடுத்துக்கொண்டு ஜனங்களுள்ளபட்டணத்தில் நாம் ஸஞ்சரிப்போமாலல் திருதராஷ்டிர புத்ரனை துரியோதனனுக்கு எவ்வாறு தெரிவிக்கப்படாதவர்களாவோம்? ஸம்சயமில்லாமல் மனிதர்கள் நம்மை விரைவாக அறிவார்கள். அஜ்ஞாதவாஸகாலத்தைத்தாண்டாமல் நம்முள் எவரையாவது அறியப்பட்டால் மறுபடியும் நாம் பன்னிரண்டுவர்ஷகாலம் வனத்தில்பிரவேசிக்கவேண்டும். ஆதலால், ஆயுதங்களையெல்லாம் ஏதாவது ஓரிடத்தில் மறைத்துவைத்துவிட்டு உத்தமமான இந்தப்பட்டணத்தில் நுழைவோம். அப்படிச்செய்தால் நன்குசெய்யப்பட்டதாகும்' என்றுகூறினர். பெரும் புகழுள்ளவனும் பகைவீரர்களைக் கொல்லுகின்றவனுமான அர்ஜுனன், அஜாதசத்ருவினுடையவார்த்தையைக்கேட்டு, அவரைப்பார்த்து, 'ராஜரே! பயங்கரமானகிளைகளுள்ளதும் ஏற

---

1 'வாராரோஹா' என்பது மூலம்.

முடியாததும் பெரிதுமானவொருவன்னிமரமானது இதோ கானகத்தில் சுடுகாட்டினருகில் காணப்படுகிறது. இந்தமரமானது வழியைவிட்டு விலகியஇடத்தில் மூளைத்திருப்பதால் மனிதர்களால் அடையப்படுகிறதில்லை. இது விசாலமானதும் நான்குபக்கத்திலும் பரவியிருக்கின்றகிளைகளுள்ளதும் காக்கைகளால் அடையப்பட்டதுமாயிருக்கிறது. இந்தவன்னிமரத்தை [1] ஸ்நேஹத்தோடுகூடியதாகவும் ஏறமுடியாததாகவும் நான் காண்கிறேன். இந்தச்சுடலையினருகில் விசேஷமாக யாதொருவீட்டையுங்காணேம். ராஜரே! இந்தமரத்தில்ஆயுதங்களைக்கட்டிவைத்துவிட்டு நாம்நகரத்தில் பிரவேசிப்போம். பார்த்தரே! இந்தவன்னிமரத்தினிடத்தில் மனிதர்கள் ஒருவரும் நாடமாட்டார்கள். தோல் மயிர் எலும்பு இவைகளால் மூடப்பட்டதும் வில்லினுடைய நாண்கயிற்றினால் சுற்றப்பட்டதுமான ஒரு புருஷஸ்வரூபத்தை விற்களால்அமைத்துக் கழுத்தில்சுருக்கிட்டு உயிரைவிட்டவன்போல மரத்தில்கட்டி ஆயுதங்களை இதில் இவ்வாறு வைத்துவிட்டு நாம் நகரத்தில் பிரவேசிப்போம். இவ்வாறு செய்தால் வனத்தில் ஸஞ்சரிக்கின்ற மனிதர்கள் இம்மரத்தை அணுகமாட்டார்கள். மனிதர்கள்யாவரும் இவ்விடத்தில் ஆயுதமிருக்கிறதென்பதை அறியமாட்டார்கள்' என்றான். பரதஸ்ரேஷ்டரே! அந்தத்தனஞ்சயன் தர்மாத்மாவான ராஜாவைப் பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டு ஆயுதங்களை வைப்பதற்கு ஆரம்பித்தான். ஐந்துமலைகளுக்கொப்பானஐந்துபாண்டவர்களும் அந்த எல்லாஆயுதங்களையும் தூணீரங்களையும் நிகரற்றஒளிபொருந்தியகத்திகளையும் சேர்த்துக்கட்டினர்கள். பிறகு, யுதிஷ்டிரராஜர் ஸஹதேவனைப்பார்த்து, 'ஏ! வீரனே! நீ இந்தவன்னிமரத்திலேறி இதில் நம்முடைய ஆயுதங்களை வை' என்றுசொன்னர். இவ்வாறு குந்திபுத்ரரும் பரதஸ்ரேஷ்டருமான யுதிஷ்டிரர், அந்தஸஹதேவனைப்பார்த்துக் கட்டளையிட்டு ஆயுதங்களை அந்த மரத்தில் வைப்பதற்காக மறுபடியும் தனஞ்சயனைப்பார்த்துச் சொல்லினர். சத்ருக்களைத் தபிக்கச்செய்பவனும் குருநந்தனனுமான அர்ஜுனன், தேவர்களையும் மனுஷ்யர்களையும் பிசாசங்களையும் ஸர்ப்பங்களையும் ராக்ஷஸர்களையும் நிவாதகவசர்களையும் பௌலோமர்களையும் ஒருவராலும் ஜயிக்கமுடியாதவர்களான காலகேயர்களையும் இன்னும் மற்றவர்களையும் ஒற்றைத் தேராளியாகவே ஜயித்ததும், செல்வத்தால் மிகுந்த மற்றத் தேசங்களையும் ஜயித்ததும், உக்ர ஸ்வரூபமுள்ளதும், மஹாகோரமானதும், சத்ருக்களுடைய கூட்டங்களை அழிக்கும் ஸ்வபாவமுள்ளதும், அச்சந்தருவதுமான காண்டீவத்

[1] வளப்பம், தைலம், புஷ்டி.

தை நாண்கயிறற்றதாகச்செய்தான். வீரரும் பகைவர்களைத் தவிக்
கச்செய்பவரும் அரசர்களுள் உத்தமரும் அதிகமான தேஜஸ்ஸுள்ள
வரும் தர்மநந்தனரும் பாண்டுபுத்ரருமானயுதிஷ்டிரர், குருக்ஷேத்
த்தைக் காப்பாற்றினதும் எல்லா உலகங்களையும் வசப்படுத்துவ
தும் ஸர்ப்பத்தினுடைய உடல்போன்றதும் மணிகளாலும் ஸ்வர்
ணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் எப்பொழுதும் அஸுரர்
களையும் ராக்ஷஸர்களையும் பயமடையும்படி செய்கின்றதும் உத்தம
முமான வில்லை நிமிர்த்தபின் வைப்பதற்காக நிமிர்த்தார். கோப
முள்ளவனும் பாண்டுபுத்ரனுமான பீமஸேனன், ஒருவஞ்சகமே
முன்பு திக்விஜயகாலத்தில் யுத்தத்தில் பாஞ்சாலர்களை ஜயித்ததும்,
அநேகம்பகைவர்களைத் தடுத்ததும், வஜ்ரத்தால் பிளக்கப்பட்ட
மலையின்ஒலிபோன்ற நாணொலியைக்கேட்கச்செய்துபகைவர்களைத்
துரத்தியதும், சிந்துராஜனை ஜயித்துப்பிடித்ததும், கந்தமாதனபர்
வதத்தில் க்ரோதவசர்களைக்கொன்றதும், அத்புதமான செங்கழு
நீர்மலரை அபஹரித்துவந்ததும், போரில் திரிகர்த்தர்களைஜயித்து
த்ரிகர்த்தராஜனை வசப்படுத்தியதுமான வில்லினுடைய இந்திரனு
டைய வஜ்ராயுதத்தையொத்த ஸ்பர்சமுள்ளதும் வஜ்ரங்களாலும்
ஸ்வர்ணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதுமான நாண்கயிற்றை அந்
தப்பீமஸேனன் அவிழ்த்தான். மஹாராஜாவான யுதிஷ்டிரர், மறு
படியும் நகுலனை அழைத்து, 'எந்தவில்லினால் யுத்தத்தில் எல்லாச்
சத்துருக்களையும் நீகொல்ல விரும்புகிறாயோ, எதனால் கல்மஷதசங்
களை ஜயித்தாயோ அப்படிப்பட்டதும் சார்ங்கத்துக்கும் காண்ட
வத்துக்குமொப்பானதும் ஸ்வர்ணத்தினால் சித்ரவேலை செய்யப்
பட்டதும் உறுதியுள்ளதும் இந்த்ராயுதத்துக்கு ஒப்பானதும் உத்
தமமானதும் உனக்குத் தகுந்ததும் நன்றாகச் செய்யப்பட்டதும்
அலங்கரிக்கப்பட்டதுமான இந்தவில்லை வைப்பதற்காக நாண்
கயிற்றைஅவிழ்த்துக் கொண்டுவா' என்றார். மாத்ரீபுத்ரனும்
நீண்டகைகளையுடையவனும் சிவந்த முகத்தையுடையவனும் மித
மாகப்பேசுகிறவனும் பாண்டவனும் குலத்திலும்ரூபத்திலும் தனக்
குச்சமானனில்லாததுபற்றி நகுலனென்று சொல்லப்பட்டவனும்
யுத்தத்தில் (பகைவர்களை) அலறச்செய்கின்றவனும் சூரனுமான
அந்தநகுலன்எந்தவில்லினால் மேற்குத் திசையை ஜயித்தானோ அந்
தவில்லினுடைய நாண்கயிற்றை அவிழ்த்தான். தர்மநந்தனர் ஸுற
தேவனைப்பார்த்து மறுபடியும் சொல்லலானர். 'சத்ருக்களை அழிப்
பவனே! யுத்தத்தில் ஸாமர்த்தியமுள்ளவனை நீ பகைவர்களான
களிங்கர்களையும் தென்னாட்டு வீரர்களையும் மகத வீரர்களையும் எத
னால்யுத்தத்தில் கொளுத்திணையோ அந்தவில்லை நாணைத்தளர்த்தி

வைப்பதற்குக் கொண்டுவா' என்றார். பிரபுவும் சிறந்த ஒழுக்க முள்ளவனும் வீரனுமான ஸஹதேவன் எந்த வில்லினால் தென்திசையை வென்றானோ அந்தவில்லை நாணை அவிழ்த்துவிட்டான். பாண்டவர்கள் ஒளிபொருந்தியவைகளும் (பகைவர்களைத்) துண்டிக்கும் திறமையுள்ளவைகளும் மிக்க உறுதியுள்ளவைகளும் மிக்க கூர்மையுள்ளவைகளும் ஸ்வர்ணமயமான பிடிகளுள்ளவைகளும் பற்பல விதங்களுமான கத்திகளையும் நாராசங்களையும் முப்பது அங்குலத்துக்குமேல் நீண்டிருக்கின்ற கத்திகளையும் அம்புகளையும் அம்பறாத்தூணிகளையும் கதாயுதங்களையும் ஒன்றுகச் சேர்த்துவைத்தார்கள். பிறகு, பகைவர்களை வாட்டுகின்றவரான தர்மராஜர், ஸஹதேவனைப்பார்த்து, 'வீரனே! இந்த வன்னிமரத்தின்மீதேறி இந்தமரத்தில் நம்முடைய ஆயுதங்களை வை. வீர! இதோ சமீபத்தில் பசு என்கிற ஒரு மிருகமானது உயிரை இழந்து அறிவற்றிருக்கிறது. இதை அறுத்து (இதன்தோலினால்) நம்முடைய விற்களை நாற்புறத்திலுஞ்சுற்று' என்று கட்டளையிட்டார். இவ்வாறு சொல்லப்பட்டவனும் மிக்க பாஹுபலமுள்ளவனுமான ஸஹதேவன் தர்மபுத்ரர் கூறியபடியே வன்னிமரத்திலேறி விரைவாக வில்லுகளை (அதில் கட்டி மாட்டுத்தோலினால்) நன்றுகச் சுற்றினன். பகைவர்களால் ஜயிக்கமுடியாதவனும் வீரனுமான ஸஹதேவன் குளிர்காற்று வெய்யில்களினாலுண்டாகும் பயத்தினின்றும் மழையினின்றும் ஒருவிதமானகெடுதியும் நான்குபக்கத்திலும் உண்டாகாமல் பாதுகாக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு மறுபடியும் மறுபடியும் அந்த ஆயுதங்களை நன்றுகச்சுற்றி நல்ல மூட்டமுள்ளவைகளாகச்செய்து மழை பெய்யும்பொழுது எந்த இடத்தில் குறுக்காக மழைச்சாரல் அந்த ஆயுதங்களில் அடிக்கும் என்று எண்ணினானோ அந்த இடத்தில் அந்த ஆயுதங்களை உறுதியுள்ள கயிற்றினால் நன்றுகக்கட்டி இறுக்கினன். பிறகு, பாண்டவர்கள் 1 பிராயோபவேசத்தினால் உலர்ந்ததும் நரம்பு எலும்பு தோல் இவைகளோடு கூடியதும் ஸமீபத்திலிருக்கின்றதுமான உஞ்சவ்ருத்தி செய்கிறவனுடைய (உயிரில்லாத) ஒரு சரீரத்தைக் கொண்டுவந்து வில்லுகளின் மத்தியில் கட்டினர்கள். உபாயத்தில் ஸமர்த்தர்களான அவர்களனைவர்களும் உரக்கக் கர்ஜித்துக்கொண்டு, 'கட்டப்பட்டிருக்கின்ற இந்தச் சவத்தினுடைய துர்க்கந்தத்தினால் வனத்தில் ஸஞ்சரிக்கின்ற மனிதர்கள், 'இந்த வன்னிமரமானது சவத்துடன் கூடியது' என்று தூரத்திலிருந்து விலக்கிவிடுவார்கள்' என்று சொல்லிக்கொண்டார்கள். பிறகு, தர்மபுத்தி

1 ஆஹாரமில்லாமல் பூமியில் படுத்தலாகிய ஒருவிரதம்.

யுள்ள அந்த யுதிஷ்டிர மஹாராஜர் ஸஹதேவனைப் பார்த்து, 'ஓ! பாண்டவ! நல்லறிவுள்ளவனே! இந்த ப்ராம்மண சரீரத்தைக் கயிறுகளால் இறுக்கிக் கட்டி இந்த மரத்தில் விஸ்தாரமானவையும் அடியில் உறுதியுள்ளவையுமான கிளைகளின்மீது நன்றுகக்கட்டிவிடு' என்றுசொன்னர். ஸஹதேவன் அந்தவார்த்தையைக்கேட்டு அந்தப்பிணத்தை அவ்விடத்தில்கட்டினன். யுதிஷ்டிரர், சுத்தராயிருந்துகொண்டு, 'வரன்களைக்கொடுக்கின்ற பிரம்மதேவரையும் இந்திரனையும் குபேரனையும் வருணனையும் வாயுவையும் ருத்ரரையும் யமனையும் விஷ்ணுவையும் சந்திரஸூர்யர்களையும் தர்மதேவதையையும் பூமியையும் ஆகாசத்தையும் திக்குக்களையும் அவ்வாறே மூலத்திசைகளையும் வஸுக்களையும் மருத்துக்களையும் அதிகதேஜஸ்ஸுள்ள அக்நியையும் மனத்தினல் நமஸ்கரித்தும் இவ்வுலகத்தில் பகலிலும் இரவிலும் ஸஞ்சரிக்கின்றவைகளாகச்சொல்லப்பட்ட பிராணிகளை நமஸ்கரித்தும் நல்லவ்ரதத்தையுடையமற்றவர்களையும் நமஸ்கரித்தும் அவர்களை நான் சரணமடைந்தேன். அதிகபலமுள்ளவைகளான எல்லா ஆயுதங்களையும் மஹாதேவர், வாயு, வனஸ்பதிகள், மலைகள், சந்திரன், ஸூர்யன் இவர்களிடத்தில் நான் அடைக்கலமாகக் கொடுத்திருக்கிறேன். இவை பதின்மூன்றுவது வர்ஷம் முடிந்தவுடனே என்னிடத்திலாவது அர்ஜுனனிடத்திலாவது கொடுக்கத்தக்கன. பீமனிடத்தில் கொடுப்பது கூடாது. இந்தவ்ருகோதரன் கோபமுள்ளவன்; திருதராஷ்டிரருடைய புத்ரர்களிடத்தில் பொறுமையில்லல் எப்பொழுதுமே கோபங்கொண்டவன். கோபத்தினுண்டான மாத்ஸர்யத்தையுடைய அவன் குறித்தகாலம் நிறைவேறுவதற்குள்ளாகவே திருதராஷ்டிரகுமாரர்களை அடிப்பான். அதனல், எமக்கு மறுபடியும் எப்பொழுதும் வனவாஸஞ்செய்யும்படி நேரிடும். அந்தக்காலம் நிறைவேறினபிறகு, தார்த்தராஷ்டிரர்களைக் கொல்லப்போகிறோம். இப்படிச்செய்வது தர்மமும் அர்த்தமும் காமமும் கீர்த்தியும் நிறைந்தபுகழுமாகும். இவைபனைத்தும் உயிரும் என்னுடையஅதீனமாக இருக்கின்றன; ஸம்சயமில்லை' என்று கூறினர். பகைவர்களைத் தபிக்கச்செய்பவரே! தேவதைகளை நமஸ்கரித்து வன்னிமரத்தையும் பிரதக்ஷிணஞ்செய்து நகரத்தைக்குறித்துச்செல்வதற்குப் புறப்பட்டிருக்கின்றவர்களும் தர்மத்தை அறிந்தவர்களும் பிராதாக்களுமான அவர்களனைவர்களும் ஒன்றுசேர்ந்து மாட்டிடையன்முதல் ஆட்டிடையன்வரையிலுள்ள வேளாண்மைத் தொழில்செய்பவர்களுள் யாராவது ஒருவன் தற்செயலாய் அந்த இடத்தில் வருவனேயாகில் அவனைப்பார்த்து

அடிக்கடி (அந்தவன்னிமரத்தைக்) காட்டி, 'நூற்றெண்பது பிராயமுள்ளவளும் வெகுகாலம் ஜீவித்திருந்தவளுமான எங்களுடைய தாயானவள் இதோ சமீபத்தில் ம்ருத்யுவுக்கு வசமாளுள். (எங்களுடைய) குலதர்மப்படி இவள் அக்னி ஸம்ஸ்காரஞ் செய்யப்படவில்லை. எங்களுடையகுலதர்மம் இப்படிப்பட்டது' என்று இவ்விதம் சொன்னார்கள். அவர்கள் ஸந்தோஷமுடையவர்களாக, 'துக்கங்களால் பீடிக்கப்பட்ட எங்களுடைய இந்தத் தாயானவள் இந்தஇடத்தில் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டாள். மரித்தவளை அக்னிஸம்ஸ்காரஞ்செய்யாமல் இவ்வாறுமரத்தில்கட்டுவது, கானகத்தில்ஸஞ்சரிக்கின்ற காட்டாள்களும் வேடர்களுமான எங்களுக்கு, முன்னோர்களால் பண்டைக்காலம்தொட்டு அனுஷ்டிக்கப்பட்டுவருகின்ற குலதர்மமாயிருக்கின்றது' என்கிற வார்த்தையை எல்லோரும் கேட்கும்படி சொல்லிக்கொண்டு திசையனைத்தையும் எதிரொலியிடும்படிசெய்தார்கள். இவ்வாறு அவர்கள் ஆயுதங்களை நன்றுகக்கட்டி அந்தவன்னிமரத்தில்வைத்து நான்குபக்கத்திலும் கோஷித்துக்கொண்டு விராடநகரத்தினருகில் வந்தார்கள். பிறகு, பீமஸேனனும், அர்ஜுனனும், மாத்ரீபுத்ரர்களான நகுலஸஹதேவர்களும், யுதிஷ்டிரரும், ராஜபத்னியும் அழகிய இடையுள்ளவருமான க்ருஷ்ணையும் அப்பொழுது முன்சொல்லிக்கொண்டதுபோல விராடநகரத்தில் பிரவேசித்தார்கள். யுதிஷ்டிரர், விராடராஜசத்தில் மத்ஸ்யராஜனை விராடனுடைய ஸமீபத்தில் பதின்மூன்றுவது வர்ஷம் அஜ்ஞாதவாஸஞ்செய்வதற்காக விரைவாகத் தங்களுக்கு ஜயன், ஜயேசன், விஜயன், ஜயத்ஸேனன், ஜயத்பலன் என்கிற மறைவான பெயர்களையிட்டார். 'ஆபத்துநேருங்காலங்களில் இந்தப்பெயர்களாலேயே நாம் ஒருவரை ஒருவர் அழைத்துக்கொள்வோம்' என்றும் வ்யவஸ்தை பண்ணினர். பிறகு, பாண்டவர்கள் பதின்மூன்றுவதுவர்ஷம் விராடநகரத்தில் அஜ்ஞாதவாஸஞ் செய்வதாகப் பிரதிஜ்ஞைபண்ணினபடி பெரிதான விராடநகரத்தில் புகுந்தார்கள்.

எட்டாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் துர்க்காதேவியை ஸ்தோத்ரம்செய்தது.)

மனுஷ்யமான விராடநகரத்தைக் குறித்துச் செல்லுகின்றயுதிஷ்டிரர், மூவுலகங்களுக்கும் ஈச்வரியும் யசோதையின் கர்ப்பத்தில் தோன்றியவளும் நாராயணருடைய உத்தமமானப்ரீதிக்குப் பாத்ரமான

வளும் நந்தகோபருடைய க்ருஹத்தில் உதித்தவளும் மங்களகரியும் வம்சத்தை வ்ருத்திசெய்கின்றவளும் கம்ஸனை ஓட்டினவளும் அஸுரர்களுக்கு நாசத்தைஉண்டுபண்ணுகின்றவளும் (கம்ஸனால்) கல்லில் மோதப்பட்டு ஆகாயத்தை நோக்கிச் சென்றவளும் வாஸுதேவருக்கு ஸஹோதரியும் திவ்யபுஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவளும் திவ்யவஸ்த்ரமுடுத்தவளும் (சத்ருஸம்ஹாரத்தால்) விளையாடுகின்றவளும் கத்திகேடகங்களைத் தரித்தவளுமான துர்க்காதேவியை மனத்தில் ஸ்தோத்ரஞ்செய்தார். எவர்கள் எப்பொழுதும் மங்களஸ்வரூபிணியாயிருக்கின்றதுர்க்காதேவியைப் பாபங்களுடையபாரத்தை இறக்குவதற்காகவும் புண்ணியத்தின்பொருட்டும் நினைக்கிறார்களோ அவர்களை, அவள், சேற்றிலகப்பட்ட பலஹீனமான பசுவைக் கரையேற்றுவதுபோலப் பாவத்தினின்று கரையேற்றுகிறாள். யுதிஷ்டிரமஹாராஜர் துர்க்காதேவியை அழைத்து, தம் இளையஸஹோதரர்களோடு பிரத்யக்ஷமாகத் தர்சிப்பதில் விருப்பமுற்றவராக மறுபடியும் பற்பலவிதமான ஸ்தோத்ரங்களுக்காக ஏற்பட்டிருக்கிற நாமங்களாலே புகழத்தொடங்கினர்.

'வரங்களைக் கொடுப்பவளே! கறுத்த நிறமுடையவளே! நித்யயௌவனமுள்ளவளே! வேதத்தில் ஸஞ்சரிப்பவளே! பாலஸூர்யனுக்கொப்பான வடிவமுடையவளே! பூர்ணசந்திரனுக்கொப்பான முகத்தையுடையவளே! நான்குகைகளையுடையவளே! நான்குமுகங்களையுடையவளே! பருத்திருக்கின்ற [1]ஸ்தனங்களையுடையவளே! மயிலுடைய தோகையின்நிறம்போன்ற கண்களையுடையவளே! கடகங்களையும் தோள்வளைகளையும் தரித்தவளே! உனக்கு நமஸ்காரம். ஏ! தேவி! ஸ்ரீமந்நாராயணருக்குப் பத்னியாயிருக்கின்ற ஸ்ரீமஹாலக்ஷ்மிபோல விளங்குகிறாய். ஏ! ஆகாசத்தில்ஸஞ்சரிப்பவளே! உன்னுடைய ஸ்வரூபமும் ப்ரம்மசர்யமும் நிர்மலமானவை. நீ நீலமேகம்போலக் கறுத்தநிறமுடையவளும் ஸங்கர்ஷணருடைய முகம்போன்ற முகமுடையவளுமாக இருக்கிறாய். இந்த்ரத்வஜம்போல நீண்டும் பருத்துமிருக்கின்ற இரண்டுகைகளைத் தரித்தவளாகவும் பாத்ரத்தையும் தாமரைப்பூவையும் மணியையும் பாசத்தையும் வில்லையும் மஹாசக்ரத்தையும் இன்னும்பற்பலவிதஆயுதங்களையும்தரித்துப் புவியில் பரிசுத்தஸ்திரீயாகவுமிருக்கிறாய். தேவி! நீ குண்டலங்களால் நிறைந்தகாதுகளால் அலங்கரிக்கப்பட்டவளாகவும் சந்திரனுக்கொப்பானமுகமுள்ளவளாகவும் விளங்குகிறாய். விசித்ரமான மகுடத்தோ

[1]ஒருசொல்விடப்பட்டது.

டும் அழகிய முடியப்பட்டுள்ளகூந்தலோடும் விளங்குகிறாய். ஸர்ப்பத்தினுடையஉடல்போன்றதும் பிரகாசிக்கின்றதுமான கடிஸூத்ரத்தோடுகூடிய நீ வாஸுகியினுடைய தேகத்தினால் சுற்றப்பட்டிருக்கின்ற மந்தரபர்வதம்போல இப்புவியில் விளங்குகிறாய்; மயில் தோகைகளால் செய்யப்பட்டதும் உயரத்தூக்கிக் கட்டப்பட்டதுமான கொடியினாலும் விளங்குகிறாய். தேவி! 1 கௌமாரவிரதத்திலிருந்துகொண்டு தேவலோகமானது உன்னால் பரிசுத்தமாக்கப்பட்டது. ஆதலால், நீ தேவர்களால் ஸ்தோத்ரம்செய்யப்படுகிறாய்; பூஜிக்கவும்படுகிறாய். மூவுலகங்களையும் ரக்ஷிப்பதற்காக மஹிஷாஸுரனைக்கொன்றவளே! எனக்கு நீ பிரசன்னையாகவேண்டும். தேவர்களுள் மேன்மைபெற்றவளே! நீ கருணைபுரியவேண்டும். நீ மங்களத்தை உண்டுபண்ணுகிறவளாகவேண்டும். நீ ஜயஸ்வரூபிணியாகவும் விஜயஸ்வரூபிணியாகவுமிருந்து யுத்தத்தில் ஜயத்தைக் கொடுப்பவளாகவிளங்குகிறாய். வரங்களைக் கொடுப்பவளான நீ இப்பொழுது எனக்கும் விஜயத்தைக்கொடு. ஏ! காளீ! காளீ! மஹாகாளீ! சாராயத்திலும் மாம்ஸத்திலும் பசுக்களிலும் பிரியமுள்ளவளே! பர்வதங்களுள் ச்ரேஷ்டமான விந்த்யபர்வதமானது உனக்குச் சாச்வதமான வாஸஸ்தானம். நீ பூதங்களால் அனுஸரிக்கப்பட்டவள்; இஷ்டங்களைக்கொடுப்பவள்; இஷ்டப்படி ஸஞ்சரிப்பவள். எந்த மனிதர்கள் கஷ்டத்தை நீக்கிக்கொள்வதன்பொருட்டு உன்னை நினைக்கிறார்களோ, புவியில் எந்தமனிதர்கள் விடியற்காலத்தில் உன்னை நமஸ்கரிக்கின்றார்களோ அவர்களுக்குப் புத்ரர்கள் ஐச்வர்யமுதலியனல்லாம் கிடைப்பது அரிதன்று. துர்க்காதேவி! நீ துர்க்கத்திலிருந்து (பிராணிகளைக்) கரையேற்றுவதினால் ஜனங்களால் துர்க்கை என்றண்ணப்பட்டிருக்கிறாய். அரண்யங்களில் கஷ்டப்படுகிறவர்களும் மஹாஸமுத்ரத்தில் முழுகுகின்றவர்களும் திருடர்களால் வழிமறிக்கப்படுகிறவர்களுமான மனிதர்களுக்கு நீ உத்தமகதியாயிருக்கிறாய். ஏ! மஹாதேவி! ஜலத்தைத்தாண்டும் ஸமயத்திலும் அரண்யங்களிலும் பிரவேசிக்கமுடியாத மலைக்காடுகளிலும் எந்தமனிதர்கள் உன்னை நினைக்கிறார்களோ அவர்கள் கஷ்டத்தை அடையார்கள். நீயே கீர்த்தி; பூதேவி; தைர்யலக்ஷ்மி; கார்யஸித்தி; 2 ஹ்ரீ; கல்வி; ஸந்ததி; புத்தி; ஸந்த்யை; ராத்ரி; ஒளி; உறக்கம்; நிலவு; காந்தி; பொறுமை; தயை. நீ பூஜிக்கப்படுவையேயாகில் மனிதர்களுடைய பந்தத்தையும் மோஹத்தையும் மக்களழிவையும் பொருளழிவையும் வ்யாதியையும் மரணத்தையும் பயத்தையும்

1 ப்ரம்மசர்யம். 2 அகார்யத்தில் உண்டாகும் வெட்கம்.

விலக்குவாய். ஏ! தேவி! தேவர்களுக்கெல்லாம் தலைவியே! ராஜ்யத்தினின்று தவறியிருக்கின்ற அப்படிப்பட்டநான் உன்னைச் சரணமடைந்தேன்; உன்னை முடியினால் வணங்கினேன். தாமரை யிதழ்போன்ற கண்களையுடையவளே! என்னை நீ பாதுகாப்பாயாக. ஏ! ஸத்யஸ்வரூபிணி! நீ எங்கள்விஷயத்தில் ஸத்யமாயிருப்பாயாக. ஏ! துர்க்கையே! பக்தர்களைக்காப்பாற்றுபவளே! பக்தரிடத்தில் அன்புடையவளே! நீ என்னை ரக்ஷிப்பாயாக' என்று ஸ்தோத்ரம்செய்தார்.

இவ்வாறு ஸ்தோத்ரஞ்செய்யப்பட்ட அந்தத் தேவியானவள் பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரராஜருக்குத் தன் ஸ்வரூபத்தைக்காண்பித்து அருகில் வந்து அவரைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானாள். 'ராஜனே! மிக்கபாஹுபலமுள்ளவனே! பிரபுவே! என்வார்த்தையைக் கேள். யுத்தத்தில் சீக்ரம் உனக்கு வெற்றி உண்டாகப்போகிறது. என்னுடைய அனுக்ரஹத்தினால் கௌரவசேனையைக்கொன்று ஜயித்து ராஜ்யத்தில் சத்ருக்கள் இல்லாமல் செய்து மறுபடியும் பூமியை அனுபவிக்கப் போகிறாய். ராஜனே! பிராதாக்களோடுகூடிப் பூர்ணமான ப்ரீதியை அடையப்போகிறாய். என்னுடைய அனுக்ரஹத்தினால் உனக்கு ஸௌக்யமும் ஆரோக்யமுமுண்டாகும். உலகத்தில் தோஷமற்றவர்களான எவர்கள்என்னை ஸ்தோத்ரம்செய்வார்களோ அவர்கள் விஷயத்தில் நான் த்ருப்தியடைந்து அவர்களுக்கு ராஜ்யத்தையும் ஆயுளையும் சரீரத்தையும் புத்ரனையும் கொடுப்பேன். ராஜனே! உன்னால் நான் எவ்வாறு நினைக்கப்பட்டேனோ, இவ்விதமாக எவர்கள் தேசாந்தரத்திலும் நகரத்திலும் அல்லது யுத்தத்திலும் சத்ருக்களால் ஸங்கடம் நேர்ந்தகாலத்திலும் காட்டிலும் பிரவேசிக்கமுடியாத கானகத்திலும் ஸமுத்ரத்திலும் கொடிகளாலும் செடிகளாலும் அடர்ந்த மலையிலும் நினைப்பார்களோ அவர்களுக்கு இவ்வுலகில் கிடைக்கஅரிதானவஸ்து ஒன்றும்இராது. ஓ! பாண்டவர்களே! இந்தஉத்தமமான ஸ்தோத்ரத்தை எவன்பக்தியோடு கேட்பனோ, அல்லது படிப்பனோ, அவனுடையகார்யங்களெல்லாம் வெற்றியை அடையும். என்னுடைய பிரஸாதத்தினால் விராடநகரத்திலிருக்கின்ற உங்களனைவர்களையும் கௌரவர்களோ அல்லது அங்குவஸிக்கின்ற மனிதர்களோ அறியமாட்டார்கள்' என்றாள். வரங்களைக்கொடுப்பவளான துர்க்காதேவியானவள் சத்ருக்களைஸம்ஹரிக்கும் திறமையுள்ள யுதிஷ்டிரரைப் பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டுப் பாண்டவர்களுக்கு ரக்ஷணையைச்செய்து அவ்விடத்திலேயே மறைந்தாள்.

ஒன்பதாவது அத்யாயம்.
பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர், ஸந்யாஸிவேஷம்தரித்து விராடனுடைய ஸபையில் பிரவேசித்ததும், மர்யாதைசெய்யப்பெற்று அங்கே வஸித்ததும்.)

பிறகு, அந்தப்பாண்டவர்கள் பரிசுத்தஜலமுடையதும் மங்களத்தைதருவதும் தோஷமற்றதும் மஹரிஷிகளாலும் கந்தர்வர்களாலும் அடைபப்பட்டஜலமுள்ளதும் மூவுலகங்களுக்கும் மேலானதும் ஜஹ்நுமஹரிஷியினுடைய புத்ரியுமான கங்கையில் இறங்கி ரிஷிகளையும் தேவர்களையும் பித்ருக்களையும் (மந்திரத்துடன்கூடின தீர்த்தத்தினால்) திருப்தியடைவித்தார்கள். ராஜாவானயுதிஷ்டிரர், (தமதுபிதாவான தர்மராஜர்) கொடுத்திருக்கின்றவரத்தை நினைத்து அக்நிஹோத்ரஸாதனமான ஹவிஸை ஹோமஞ்செய்து மங்களகரமான ஜபங்களைச்செய்து இந்திரனைத்தேவதையாகக்கொண்ட கீழ்த்திசையைநோக்கிக் கைகளைக்குவித்துக்கொண்டு(தம்பிதாவான)தர்மராஜாவைச்சரணமடைந்துமெதுவாக அழைத்துச் சொல்லுகிறார். 'வரங்களைக்கொடுப்பவரும் பிரஜைகளுக்குப்பதியும் எனக்குப்பிதாவுமாயிருக்கின்ற தர்மதேவர் பிரஸன்னமான மனத்துடன்எனக்கு வரத்தைஅளித்தார். தாகங்கொண்டு ஜலத்தை விரும்பிய என்னுடைய ஸஹோதரர்கள் என்னால் ஏவப்பட்டு ஒரு தடாகத்தில் பிரவேசித்தார்கள். அவர்கள், பெரும்போரில் வஜ்ரபாணியான இந்திரனால் அஸுரர்கள் தள்ளப்பட்டதுபோல உத்தமரான ஒருயக்ஷரால் வனத்தில் தள்ளப்பட்டார்கள். நான்சென்று அவருடையஎல்லாவிணக்கங்களுக்கும் விடைசொல்லி, வரங்களைக்கொடுப்பவரும் (எனக்குப்) பிதாவுமான அவரை ஸந்தோஷப்படுத்தினேன். மஹிமையுடையவரான அவர் பிரஸன்னராகி எனக்கு வரமளித்தார். அவ்வாறே,நேசத்துடன் என்னைக்கட்டிக்கொண்டு, 'பாண்டுநந்தன! நீ விரும்புகிறதைப் பெற்றுக்கொள். ஆகாயத்தில்நிற்கிறேன்; வரமளிக்கிறேன். என்னைப்பார்' என்று சொன்னார். நான், வரதரும் பிதாவும் பிரபுவுமான அவரைப்பார்த்து, 'பிரபுவே! என்னுடைய புத்தியானது எப்பொழுதும் தர்மத்தில் பற்றுள்ளதாயிருக்கவேண்டும். என்னுடைய இந்த இளையஸஹோதரர்கள் பிழைக்கவேண்டும். அவ்வாறே நாங்கள் (அஜ்ஞாதவாஸத்துக்குரிய) ஸ்வரூபத்தையும் ஜயத்தையும்அடையக்கடவோம். விரும்பியபடி எங்களுக்குப் பொறுமையும் கீர்த்தியும் உண்டாகவேண்டும். எங்கள் விரதமானது ஸத்யமாக நிறைவேறவேண்டும்'

என்று வேண்டினேன். அந்தவரம் கேட்கப்பட்டபடி எனக்கு இப்பொழுது கிடைக்கவேண்டும். அந்தத் தேவஸ்ரேஷ்டர் சொன்னது பொய்யாகாது' என்று சொன்னர். தர்மாத்மாவான யுதிஷ்டிரர் இவ்வாறு சொல்லிவிட்டுத் தர்மதேவதையையே தியானஞ்செய்தார். அப்பொழுதே அவர் அநுக்ரஹத்தினல் யுதிஷ்டிரருக்கு ஒருரூபம் தாஞகவே உண்டாயிற்று. அப்பொழுது, அந்தயுதிஷ்டிரர் நல்லியல்வனமுடையவரும் த்ரிதண்டங்களைப் பிடித்தவரும் கமண்டலுவையும் தலைப்பாகையையும் தரித்தவரும் நன்றுகச், சிவந்திருக்கின்றதும் உத்தமமுமான காஷாயவஸ்திரத்தைத்தரித்தவரும் குடுமியுள்ளவரும் பவித்ரத்தைக் கையிலணிந்தவருமான பிராம்மணராகக் காணப்பட்டார். அப்படித்தோற்றியது ஆச்சர்யமாயிருந்தது. ராஜரே! தர்மத்தை அநுஷ்டிப்பவர்களும் மஹாத்மாக்களும் உத்தமமானதர்மத்தினுடைய உயர்ந்தபலத்தைவிரும்புகின்றவர்களுமான அந்தப் பீமஸேனன்முதலானவர்களுக்கும் அவ்விதமாகவே ஒருக்ஷணத்தினுள் (அஜ்ஞாதவாஸத்துக்குத்) தக்க பூஷணங்களும் வஸ்திரங்களும் மாலைகளும் தோன்றிவிட்டன. புதிய உருவமுள்ளவரும் பிரதாபசாலியுமான யுதிஷ்டிரமஹாராஜர் [1] அதர்வ ரூபத்தினல் விளங்கினர். பிறகு, முதலில், அந்த அரசர் வைடூர்யமிழைக்கப்பட்டவைகளும் வெண்ணிறமுடையவைகளும் தங்கத்தால் செய்யப்பட்டவைகளுமான பாச்சிகைகளைத் துணியால் சுற்றிக்கொண்டு, நிறைந்ததேஜஸ்ஸுள்ளவனும் மிக்ககாந்தியால்விளங்கும் அக்நிபோன்றவனும் கடினமானவிஷமுள்ளஸர்ப்பம்போல நெருங்கமுடியாதவனுமான விராடனைத் தூரத்திலிருந்துபார்த்தார். அப்பொழுது, அவர், ஸைபில்வீற்றிருப்பவனும், கைகளைக்குவித்துக்கொண்டிருப்பவர்களும் விசித்திரமாயும் பற்பலவிதமாயுமிருக்கின்ற ஆயுதங்களைக் கையில் பிடித்தவர்களுமான மனிதர்களால் சூழப்பட்டவனும், சிலசுலோகங்களையும் அக்ஷரங்களையும் மந்த்ரங்களையும் அறிந்தவர்களும் காணிக்கைக்குவியல்களோடு பிரவேசிக்கின்றவர்களுமான ப்ராம்மணர்களால்சூழப்பட்டவனும், யானைகளாலும் குதிரைகளாலும் சூழப்பட்டவனும், மிருகங்களாலும் யானைகளாலும் கூனர்களுடைய கூட்டங்களாலும் நான்குபக்கங்களிலும் சூழப்பட்டவனும், வெண்ணிறமுள்ளதும் உயர்ந்ததுமான தலைப்பாகையினல் மறைக்கப்பட்டிருக்கின்ற தலையிருள்ளவனும், விசித்ரமானவைடூர்யத்தினுலிழைக்கப்பட்ட குண்டலங்களையுடையவனுமான விராடனை, தேவலோகத்தில் பிருஹஸ்பதி இந்திரனை அடைவது

1 'பராம்மணரூபத்தினல்' என்பது பழைய உரை.

போல் வந்தடைந்தார். மனிதர்களுக்கதிபனன அந்த விராட ராஜன், வருகின்ற அந்தப்பாண்டவரைக் கண்களிக்க நன்முகப் பார்த்து அவரைக்குறித்து அப்பொழுது தன்னுடையஸபையி லிருந்த பிராம்மணர்களைப் பலமுறை கேட்கலானன்.

'ப்ராம்மணர்களே! காந்தியினல் குபேரன்போன்றவரும் சிறந்தரூபத்தால் பூமியைவிளங்கச்செய்பவரும் என்னுடைய ஸபையை நாடிவருகின்றவரும் யௌவனமுள்ளவருமான இந்தப் பிராம்மணருடையதர்சனத்தை யாராவது இதற்குமுன் அறிந்த துண்டா? சிறந்த சிங்கம்போன்றவரும் யானைக்கூட்டத்தலை வன் போன்றவருமான இவர் பொன்மலைபோல விளங்குகிறார்; அக்னிபோலவும் ஸூர்யன்போலவும் சந்திரனுடனும் நக்ஷத்ரங்க ளுடனும்கூடின கிரணங்களுள்ளகிரஹம்போலவும் விளங்குகிறார். இவருக்கு வேலைக்காரனும், யானையும், உயரத் தூக்கிப் பிடிக்கப் பட்டதும் ஸூர்யனைமறைக்கக்கூடியதுமான குடையும் காணப் படவில்லை. இவருக்குக் குண்டலமும் தோள்வளையும் மாலைகளும் இல்லை. நாலுகுதிரைகளுள்ளதும் விசித்திரமான அவயவங்க ளுள்ளதுமான ரதமுமில்லை. சிறந்தயானைக்கும் புலிக்கும் பெரிய காளைக்கும் ஒப்பாயிருக்கிற இவர் க்ஷத்திரியரூபத்தை நன்கு தரிக்கிறார். நமக்கு எதிரில்வரும் இவர் அலங்காரமில்லாதவரா யிருந்தும் உதித்திருக்கிற பாலஸூர்யன்போல விளங்குகிறார். இவர் எல்லாவிதத்திலும் க்ஷத்திரியராகவே தோன்றுகிறார். இந்திரனுக்குஸமானராயிருக்கிற இவர் இப்போது நான்கு ஸமுத் ரத்திற்குட்பட்ட பூமியையும் ஆளத்தகுதியுள்ளவராயிருக்கிறார். இவர் நிச்சயமாய்க்ஷத்ரியர்தாம். இவர் ராஜ்யாபிஷேகஞ்செய்து கொண்டவராக எனக்குத்தோன்றுகிறார். ஏனெனில், இவ ருடையரூபம் யானைக்கும் ஸிம்மத்திற்கும் ரிஷபத்திற்கும் ஒப்பா யிருக்கிறது. இந்த ப்ராம்மணர் எந்த இஷ்டத்தைத் தேடு கிறாரோ இவருடைய அந்த இஷ்டத்தையெல்லாம் நிச்சயமாக நிறைவேற்றவேண்டும். இப்படிப்பட்ட புருஷருடைய தர்சனம் எனக்கு மிகவும்பிரியமானது. இவர் என்னுடைய பிரதானமான பிராம்மணர்களிலும் அதிதிகளிலும் பொருள்களிலும் ரத்னங்களி லும் பசுக்களிலும் வீடுகளிலும் இஷ்டப்படி தடையின்றி ஸஞ்சரிக்கட்டும்' என்று இவ்விதம் அந்தயுதிஷ்டிரரைக்குறித் துச் சொன்னன். அரசன் அளவிடக்கூடாத தேஜஸுடன் விளங்குகிறவரும் த்ரிதண்டத்தையும் கமண்டலத்தையும் அங் குசத்தையும் உறியையும் தரித்தவரும் வேறு வேஷத்துடன் ஸமீபத்தில்வருகிறவருமான அவரைப்பற்றி இவ்வாறு சொல்

லிக்கொண்டு பரபரப்புடன் எழுந்திருந்தான். ஸபையில்வந்த வரும் ராஹுவினுடைய முகத்தினின்று வெளிப்பட்டுக் கிரணங்களால் காய்ந்துகொண்டிருக்கிற ஸூர்யன் போன்றவருமான அந்த யுதிஷ்டிரரைப் பார்த்து, விராடராஜனுடன்கூடியதும் பிரம்மக்ஷத்ரிய வைச்ய சூத்ரர்களால் நிரம்பினதுமான அந்த ஸபையானது எழுந்திருந்தது. பிராம்மணனேவஷமுள்ளவரும் ஜயமடையத்தக்கவருமான அந்த யுதிஷ்டிரரால், 'இவ்வுலகில் உமக்கு ஜயமுண்டாகட்டும்' என்று முதலில் சொல்லப்பட்டவனும் வெற்றிபெற்று வ்ருத்தியடைந்தவனுமான அந்தவிராடராஜன் கைகூப்பிக்கொண்டு எதிர்சென்று அவரை நமஸ்கரித்தான். பூமியில் பிரஸித்தனான அந்தவிராடராஜன் கைகூப்பிக்கொண்டு அவரைப்பார்த்து மதுரமான அக்ஷரங்களுள்ள வார்த்தையைச் சொல்லத் தொடங்கினன்.

'ஓ! பகவானே! நீர் எவ்விடமிருந்துவந்தீர்? எதனை விரும்புகிறீர்? எங்கே போகிறீர்? ப்ராம்மணரே! நான் உமக்கு என்ன செய்யவேண்டும்? நீர் எனக்கு உம்முடைய கல்வியையும் சீலத்தையும் குலத்தையும் கோத்ரத்தையும் அப்படியே பெயரையும் தேசத்தையும் சொல்லும். ஸாதுக்கள் உண்மையான ப்ரதிஜ்ஞையுள்ளவர்களாகவே இருப்பார்கள். ஸ்ம்யாவஹிகளான ப்ராம்மணர்கள் விசேஷமாய்மெய்யேசொல்லுவார்கள். நான் உமக்குத்தகுந்தபடிநடந்துகொள்ளுகிறேன். உம்மை அவமானப்படுத்துகிறதில்லை. உம்முடைய வார்த்தையை மீறி நடக்கிறதில்லை. ஏனெனில், அக்னிக்குச் சமமான பிராம்மணர்கள் பூஜிக்கப்படாவிட்டால் விஷத்துடன்கூடிய ஸர்ப்பங்கள்போலக் குலத்தை நிர்மூலமாக்கிவிடுவார்கள். பிராம்மணஸ்ரேஷ்டரே! பூமிமுழுமையையும் உமக்குக்கொடுக்க விரும்புகிறேன். ஸேனைகளும் பொக்கசங்களுமுள்ளபட்டணத்தையும் உமக்குக்கொடுக்கிறேன். நீர் எந்த அரசனுடைய தேசத்தினின்று இவ்விடம் வருகிறீர்? இவ்விடத்தில் என்ன கார்யம் செய்கிறீர்?' என்றுவினவினன். யுதிஷ்டிரர், இங்ஙனம் வினவிய அந்த அரசனைப்பார்த்து, அடிக்கடி தர்மத்தைக்கவனித்து, 'ராஜரே! இந்த ஸபையில் வார்த்தை சொல்வதற்கு எவன்தான் தைர்யமுடையவனுவான்? ஆயினும், பிரதிஜ்ஞை செய்தபடி நான் உண்மையைச் சொல்லுகிறேன்; கேளும். என்னுடைய கல்வியையும் சீலத்தையும் குலத்தையும் செய்கையையும் பிறப்பையும் தேசத்தையும் கேளும். குருவின்உபதேசத்தினாலும் நியமத்தாலும் எனக்கு இந்த விரதமானது ஏற்பட்டிருக்கிறது. குலமுறையை அனுஸரிப்பதற்காகப் பித்ருக்கள் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். பிரபுவே!

பிராம்மணனுயிருக்கின்ற நான் விரதத்தை அநுஷ்டிப்பதற்காக க்ஷத்ரியரஞ் செய்துகொண்டும் ஸந்யாஸஞ் செய்துகொண்டும் த்ரிதண்டத்தைப் பிடித்துக்கொண்டுமிருக்கிறேன். இது, நானே செய்துகொண்டதன்று. ஐந்துபூதங்களாலும் சூழப்பட்டிருக்கின்றனுடைய இந்த மானிடசரீரத்தைப் பாரும். இவ்வுலகில் என்னுடைய ஐந்து இந்த்ரியங்களையும் சரீரத்தையும் பார்க்கின்றவர்கள் ஐந்துபேர்களையே பிதாக்களாகச்சொல்லுகிறார்களென்று கேள்வி. அந்தஜுவர்களும் மனுஷ்யர்களாயிருப்பார்களென்று நான் எண்ணவில்லை. நான் ஸ்வபாவத்திலல் பித்ருக்களுக்குச் சமானனுகவுமிருக்கவில்லை. ராஜரே! நான் விரதஞ் செய்துகொண்டிருக்கிற ப்ராம்மணன். எனக்கு,'கங்கன்'என்றுபெயர். உம்முடைய தேசத்திற்கு வந்திருக்கிறேன். நான் சொக்கட்டானுடி என்னுடைய செய்கையிலல் வறுமையுற்றிருக்கிறேன்; இப்பொழுது ஸத்யவசனமுள்ள தபஸ்வியாகஸஞ்சரிக்கிறேன். நான் முந்தி யுதிஷ்டிரருக்கு ஸ்நேஹிதனுக இருந்தேன். அவர் வீட்டில் வஸித்துக்கொண்டு அவருடைய சரீரமாகவே இருந்தேன். நான் அவருடைய வீட்டில் ஸுகமாக வஸித்துக்கொண்டிருந்தேன்; முன் அவருடைய நகரத்திற்கு ராஜாவாகவேயிருந்தேன். அவருடைய வீட்டில் ஸ்த்ரீகள் என்னுடைய உத்தரவுப்படி நடந்தார்கள். எனக்கு ப்ரீதியையுண்டுபண்ணுகிறதற்காகக் குதிரைகள் அடங்கியிருந்தன. நான் முன் அவருடைய பட்டணத்தில் எதைச்செய்தேனே அதை ஒருபோதும் ஒருவனும் மாற்றினதில்லை. முன் அவருக்குஒப்பான பிராயமுள்ள ஸ்நேஹிதனுயிருந்த நான் மிக்க துக்கத்துடன் பூமி முழுதும் ஸஞ்சரித்தேன். நான் ஓரிடத்திலும் மனம் ஸமாதானமடையவில்லை. விரதஉபதேசத்திலுலும் நியமத்திலுலும் பாரத்தை வஹித்துக்கொண்டிருக்கிறேன். ராஜரே! நான் 1 'வ்யாக்ரபாத்' என்னும் ரிஷியினுடைய கோத்திரத்தில் பிறந்தவன். நான் (யுதிஷ்டிரரிடமடைந்த) அந்த ஸௌக்கியத்தையே தேடுகிறேன். ஆத்மாவுக்குஸமமான யுதிஷ்டிரருடையநடக்கையை நான் நன்றியறிவுள்ளவனுயிருப்பதால் உமக்குச்சொன்னேன். இந்த ஸந்யாஸாச்ரமத்தை அடைந்திருக்கும் எனக்கு யுதிஷ்டிரரும் நீரும் ஸமமானகுணமுடையவர்களே. எனக்குத்தாயில்லை; தகப்பனில்லை; பந்துக்களில்லை; ரூபமில்லை; ஸுகமில்லை; ஸந்ததியில்லை. எனக்கு இப்போது ஸுகமும்துக்கமும் விருப்பும்வெறுப்பும் போகிறதும்வருகிறதும்

1 புலிபோலப்பாய்வதால் யமனுக்கு 'வ்யாக்ரபாத' என்று பெயர்; ஆகையால், தாம் 'வ்யாக்ரபாத' என்னும் யமனுடைய புத்ரனென்பது உண்மைப் பொருள்.

ஸமமாகவேயிருக்கின்றன. நான் ஆசையினாலும் தனத்தினாலும் விடப்பட்டவனாயிருக்கிறேன். இப்போது உம்முடையகிருஹத்தில் வஸிப்பதற்காக இவ்விடம் வந்தேன். ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச்செய்யும் என்னுடைய இந்த வ்ரதமோ இவ்விடத்தில் ஒருவருஷத்தோடு முடிவுபெறும். பிறகு, நான் என்னுடைய செய்கைகளால் உம்மை ஸந்தோஷமுள்ளவராகச்செய்து மறுபடியும் எவ்விடத்திற்குப்போக எனக்கு விருப்பமிருக்குமோ அவ்விடத்திற்குப் போவேன். நான் எப்போதும் பாச்சிகைகள் ஆடுவதில் திறமையுள்ளவன். பக்ஷிகளின் சப்தங்களையும் மிருகங்களுடைய 1சப்தங்களையும் அறிந்தவனான நான் அபாயமடைந்து ஆச்ரயமற்று ஸந்யாஸம்பெற்றுப் பிக்ஷாசனராக இருக்கிறேன்' என்று சொன்னார்.

அவர் இவ்விதம் வார்த்தைசொன்னவுடன், விராடராஜன் கைகூப்பிக்கொண்டு அந்த ஸந்யாஸியைப்பார்த்து ஸந்தோஷமுள்ள மனத்துடன் மங்களகரமான அக்ஷரங்களுள்ளதும் மனத்திற்குஇசைந்ததும் ஸபையழுவதும் ப்ரஸியதுமான வார்த்தையைச் சொல்லத்தொடங்கினன். 'நீர் அபேக்ஷிக்கிற வரத்தை நான் உமக்குக் கொடுக்கிறேன். உமக்குவிருப்பமிருந்தால் மத்ஸ்ய தேசத்தை ஆண்டுகொண்டிரும். அக்ஷவித்தையை அறிந்திருக்கின்ற சூதாடிகள் எனக்கு ப்ரியமானவர்கள். நீரும் சூதுவிளையாடுகிறவராயிருக்கிறீர். ஆகையால், நீர் என்னுடைய ராஜ்யத்தை அடைவதற்குத் தக்கவராயிருக்கிறீர். சக்கரவர்த்திக்கு ஒப்பானவரே! வாஹனத்தையும் ஆஸனத்தையும் வஸ்த்ரத்தையும் போஜனத்தையும் அரிகமாலைகளையும் ஆபரணங்களையும் வாஸனத்ரவியங்களை அணிதலையும், நீர் எப்பொழுதும் என்னிடமானமாகவே அனுபவிக்கத்தக்கவர். உம்மை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பதை நான் ப்ரியமாகஎண்ணுகிறேன். அனர்த்தங்களால் பீடிக்கப்பட்ட உத்தம ப்ராம்மணர்களாவது இதரஜனங்களாவது (தங்களுக்கு நேர்ந்திருக்கின்ற கஷ்டத்தை நிவ்ருத்திசெய்வதற்காக) உம்மிடத்தில் ஓடிவருவார்களானால், நீர்விரும்புகிறபடி அவர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களனைத்தையும் நான் செய்வேன். எனக்கு இந்தவிஷயத்தில் ஸம்சயமில்லை. எவன் என்பக்கத்தில் உமக்கு அப்ரியத்தைச்செய்வதை அவனைக்கவனித்து நாட்டைவிட்டு ஓட்டுவேன். ஜிதேந்த்ரியரான நீர் எனக்குள்ள பொருள்களுக்குத் தலைவராயிருந்துகொண்டு இவ்விடத்தில் வாஸஞ்செய்யும்' என்று கூறினன்.

---

1 இங்கு ஒருசொல் விடப்பட்டது.

யுதிஷ்டிரர் சொல்லத்தொடங்கினர். 'இதைக்காட்டிலும் எனக்கு மேலானஇஷ்டம் ஒன்றும்இல்லை. என்னால் ஜயிக்கப்பட்ட பொருளைச் சிறிதும் நான் வைத்துக்கொள்ளுகிறதில்லை. யாதொரு விதமான போஜனத்தையும் நான் தீண்டேன். நான் ஹவிஸைப் புஜிப்பவன்; இரவில் தரையில்படுப்பவன். விரதத்தின் உபதேசத்தை அனுஸரித்து உறுதியுள்ள பிரதிஜ்ஞை என்னால் செய்யப்பட்டிருக்கிறது. ராஜரே! ஒருவர்மேலும் நான் கோபமடையத்தக்கவனல்லன். ராஜரே! இவ்விதமான பிரதிஜ்ஞையுடன் இங்குவஸிப்பதில் எனக்கு எண்ணமிருக்கிறது; வேறுவிதமாகஇல்லை. மத்ஸ்யராஜரே! மாசற்றவரே! இவ்விதவரத்தை நீர் கொடுக்கவேண்டுமென்று நான் வரிக்கிறேன். இந்த வரத்தினால் நான் தன்யனுவேன்' என்று கூறினர்.

இவ்வாறு மத்ஸ்யராஜனுக்கும் யுதிஷ்டிரருக்கும் முதன்மையான சேர்க்கையானது உண்டாயிற்று. விஷ்ணுவுக்கு வஜ்ரபாணியான இந்திரனுடசேர்க்கையுண்டானதுபோல, விராடராஜனுக்கு அந்த யுதிஷ்டிரரோடு சேர்க்கையுண்டாயிற்று. ஆஸனத்தில் வீற்றிருப்பவரும் பிரியமானரூபமும் காட்சியுமுள்ளவருமான அவரைப்பார்த்த அரசனுக்கு (போதுமென்கிற) திருப்திஉண்டாகவில்லை. யுதிஷ்டிரரும், இந்திரன் தன்னுடைய காந்தியினால் ஸ்வர்க்கத்தை விளங்கச்செய்வதுபோல அந்தஸபையை விளங்கச்செய்துகொண்டிருந்தார். ராஜாவும் புருஷஸ்ரேஷ்டரும் வீரருமான அந்த யுதிஷ்டிரர் இவ்விதம் அப்பொழுது விராடராஜனுடைய சேர்க்கைபெற்று விசேஷமாகப் பூஜிக்கப்பட்டு ஸுகமாக வாஸஞ்செய்துவந்தார். அவருடைய அவ்வித ஒழுக்கத்தை ஒருவரும் அறியவில்லை.

பத்தாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் சமையற்காரவேஷந்தரித்து விராடசபையில் பிரவேசித்ததும், விராடன் அவனைச் சமையல் அதிகாரத்தில் நியமித்ததும்.)

பிறகு, பயங்கரமானதோற்றமுடையவனும் சிங்கத்தினுடைய பராக்ரமம்போன்ற பராக்ரமத்தையுடையவனுமான பீமன், சாணைபிடிக்கப்பட்டிருக்கின்ற இரண்டு சிறந்த கத்திகளை (இடையில்) கட்டிக்கொண்டும் கரண்டியையும், மத்தையும், கையில்பிடித்துக்கொண்டும் (த்ராக்ஷரஸமுதலான ஐந்துரஸங்கள் சேர்த்துச்செய்யப்பட்ட பஞ்சஸாரம்என்கிற) பானகத்தினாலும் (தேன் சர்க்கரைமுதலான

டமதுர வஸ்துக்களின் சேர்க்கையினல் உண்டுபண்ணப்பட்ட) ராகம் என்கிற ரஸத்தினலும் ஷாடபம் என்கிற ரஸத்தினலும் நன்ருக நிரூணக்கப்பட்டதும் நன்ருகப் பதம் செய்யப்பட்டதுமான பசுமாட்டுத்தோலையும் இஞ்சி [1]ரஸத்தோடு கூடின [2]ஸம்புடத்தையும் இருப்புப்பாத்திரத்தையும் கையில்பிடித்து மேற்குத்திசையில்காணப்பட்டான். கம்பீரமானரூபமுள்ளவனும் கறுத்த ஆடை உடுத்தவனும் பர்வதராஜனுடைய பலம்போன்றபலமுடையவனுமான அவன், சிறந்த தேஜஸினல் ஸூர்யன்போல இவ்வுலகத்தை ப்ரகாசிக்கச்செய்துகொண்டு, மத்ஸ்யராஜனை அடைந்து நின்ருன். யானைக்கூட்டத்தலைவன்போன்றவனும் ஆயிரங்கண்களையுடைய இந்திரனுக்கு இளையஸஹோதரனை உபேந்திரனுக்கும் யமனுக்கும் ஒப்பானவனும் மூவுலகங்களுக்கும் தலைவர்களான இந்திராதி தேவர்களுக்கு அதிபதியான ஸ்ரீமந்நாராயணனைப்போன்றவனுமான பீமன், சந்திரன் இரவைவிளங்கச்செய்வதுபோல, விராடனுடையஸபையை விளங்கச்செய்துகொண்டு வந்தான். வருகின்றவனும் யானைக்கூட்டத்தலைவன்போன்றவனும் பாலஸூர்யன்போன்ற காந்தியுள்ளவனுமான அவனைப்பார்த்த விராடராஜன், மனத்தில் பயத்தினல் கலக்கத்தையும் துக்கத்தையும் அடைந்து, அடிக்கடி எல்லாத்திக்குக்களையும் நன்ருகஉற்றுப்பார்த்துக்கொண்டு நல்ல நிலைமையினின்றும் தவறினன். அவன், ஒரே ஆடையுடுத்தவனும் பகைவர்களுடையபடைகளைத் தடுப்பவனும் ராஜகுமாரனுமான அந்தப் பீமனை ஸபைக்குக் கொஞ்சதூரத்தில் கண்டு மனத்தளர்ச்சி அடைந்தான். அங்குள்ள ஜனங்களும் மிக்கபயமுற்றவர்களாக மெள்ள நான்குபக்கத்திலும் சென்ருர்கள். பிறகு, மத்ஸ்யதேசத்தாருக்குப் பதியான விராடன் மிகுந்ததுன்பத்தையடைந்து உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு ஸபையிலுள்ளவர்களைப் பார்த்து, 'ஓ! ஜனங்களே! என்னுடைய இந்தஸபையை நோக்கி வருகின்றவனும் கஜராஜனுக்கு ஒப்பானவனும் யௌவனமுடையவனுமான இவன் யார்? அகன்ற மார்பும் தோள்களுமுள்ளவனும் மிருகராஜன்போலப் பலத்தால் மேம்பட்டவனும் சிங்கத்தையும் புலியையும்போல நடப்பவனும் திவ்யபுருஷன்போல ப்ரகாசிப்பவனுமான இவனை என்னைச்சேர்ந்தவர் யாராவது ஒருவர் இதற்குமுன் பார்த்ததுண்டோ? பொன்மலையினுடைய ஒளிபோன்ற ஒளியுடையவனை இவன் ராஜலக்ஷ்மியினல் ஓர் அரசன்போல விளங்குகிருன். நிச்சயமாகவே இவன் க்ஷத்ரியனாக இருக்கவேண்டும். ஏனென்ருல், இவன் ஆயி

1, 2 வேறுபாடம்.

ரம்கண்களையுடையவனை மஹேந்திரனுக்கு ஸமானனாயிருக்கிறான். ரூபத்தால் ஒப்பற்றவனை இந்த மஹாபுருஷன் இந்திரனைப்போல இந்தப்பூமியை ஆளுவான். இவன் ஆகாயத்தில் பெருஞ்செல்வத்திலிருந்து நழுவிவிழுந்த நஹுஷனுடைய புத்ரனையயாதிபோல ஐஸ்வர்யத்தினின்றுதவறின ஓர் அரசனே என்பதும் என்னுடைய எண்ணம்' என்றான். அந்தவிராடன், பலவிதமாக ஊகித்துக்கொண்டிருக்கும்பொழுதே, பாண்டுபுத்ரனை விருகோதரன், ஸபையைத்தாண்டி அரசனைப்பார்த்து, 'ஜயமடைவாயாக' என்று சொல்லியும், ஸபைத்தலைவனையும் ஸபையிலுள்ளவர்களையும் ஸுகப்ரஸ்னம்செய்தும் ஸந்தோஷிக்கச்செய்தான்.

பிறகு, பாண்டுநந்தனன், (அரசன்) எவ்வாறு தன்னிடத்தில் நாளடைவில் கருணையுள்ளவனுவமே அவ்வாறுனவாக்யத்தை அவனைநோக்கி உரைக்கலானான். 'பகைவர்களைக் கொல்பவரே! நான் உம்மை அண்டிப்பிழைப்பதற்காக வந்திருக்கிறேன். நீரே உலகத்தில் சிறந்த ஆதாரம். ஓ! ராஜரே! நான் சூத்ரன்; [1] நாலாம் வர்ணத்தைச் சார்ந்தவன். குருவினுடைய உபதேசத்தால் பரிசாரகத்தொழிலைச்செய்பவன். கல்லபருப்புக்களையும் சிறந்த ரஸங்களையும் செய்யும்விதத்தை அறிவேன். நல்லமாம்ஸங்களையும் பக்ஷணங்களையும் பழங்களைச்சார்ந்த பலவிதமான ரஸாயனங்களையும் பக்குவஞ்செய்வேன். மடைப்பள்ளியில் எனக்கு ஸமமான சமையற்காரன் இல்லை' என்று கூறினான். மத்ஸ்யராஜன் அவனைப்பார்த்து மிகுந்த சந்தோஷமுள்ளவனாக, 'குபேரனும் சந்திரனும் இந்திரனும் ஸூர்யனும்போலப் பிரகாசிப்பவனே! உன்னிடத்தில் ஒருவிதமான சூத்ரத்தன்மையையும் நான் காணவில்லை' என்று வணக்கத்துடன் பிரியமாயும் கம்பீரமாயும் மதுரமாயுமிருக்கின்ற வார்த்தையைச்சொன்னான். 'அக்நிக்கும் ஸர்ப்பத்துக்கும்நிகரான தேஜஸ்ஸுள்ள உனக்கு மடைப்பள்ளியில் இவ்விதமானதொழில் தகுந்ததன்று. கருடனுக்கும் கந்தர்வனுக்கும் மஹாஸர்ப்பத்துக்கும் ஒப்பானவனே! நீ சமையற்காரனாக இருப்பதற்குத் தகுந்தவன் அல்லை. நீ இப்பொழுது என்னுடைய சேனைத்தலைவனாகவும் த்வஜமுடையவனாகவும் ரதத்தின்மீதேறினவனாகவும் என்னுடைய யானைப்படைகளுக்குத் தலைவனாகவும் இருப்பாயாக. நீ இழிவான தொழிலைச் செய்வதற்குத்தகுந்தவன் அல்லை. நீ இந்தப் பூமியை

---

1 'பீமஸேன' என்கிற நான்கு அக்ஷரங்களடங்கிய பெயருடையவனென்பது உண்மைப்பொருள். வர்ணம்=ஜாதி, எழுத்து.

ஆளுவதற்குத் தகுந்தவனாயிருக்கிறாய்' என்று கூறினான். பீமன், 'உக்ரமான ஆஜ்ஞையுடையவரே! நான் நான்காவது வர்ணத்தைச் சேர்ந்தவனாயிருக்கிறேன். உம்மிடத்தினின்று இவ்விதமான பதத்தை நான் விரும்பவில்லை. நான் ஜாதியில் சூத்ரன்; வலலனென்று பெயருடையவன். உம்முடைய தேசத்தை அண்டிப் பிழைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு வந்தவன். நான் முற்காலத்தில் யுதிஷ்டிரருடைய மடைப்பள்ளியில் (எல்லோருக்கும்) அன்னபானங்களைக் கொடுப்பவனும் எல்லாச் சமையற்காரர்களுக்கும் தலைவனுமாயிருந்தேன். அரசரே! ஆயினும், என்னை நீர் ஏற்றுக்கொள்ளாவிட்டால் நான் வந்தபடியே இவ்விடத்தினின்று திரும்பிப் போவேன். ஏ! நரதேவரே! நீர் என்னை அன்னங்களை நன்றுகப் பக்குவஞ்செய்யும் தொழிலில் ஏவும். நான் உமக்குச் சமையற்காரனாயிருக்கிறேன். அரசரே! பலத்திலும் எனக்கு ஸமானமாக ஒருவனும் இல்லை. நான் எப்பொழுதும் கைச்சண்டை செய்வதையே ஸ்வபாவமாகக் கொண்டவன். ஓ! மாசற்றவரே! நான் யானைகளையும் சிங்கங்களையும் எதிர்த்து எப்பொழுதும் உமக்கு ப்ரியத்தைச் செய்வேன். ஓ! பிரபுவே! பலங்குறைந்தவனும் இழிவான செய்கையுடையவனுமான என்னைப்போன்றவன் உம்முடைய சேனைக்குத் தலைவனாயிருக்கக்கூடாது. ராஜரே! நாங்கள் எங்களுக்குரிய தொழில்களால் திருப்தியடைகிறவர்கள். உமக்கு விருப்பமானால் சமையற்காரனுடைய ஸ்தானத்தில் எனக்கு அதிகாரங்கொடும். பலத்திலும் வீர்யத்திலும் (உலகத்தாரால்) ஒப்புக்கொள்ளப்பட்ட மல்லர்களோடு உம்முடைய பிரீதியின்பொருட்டுப் போர்புரிவேன்' என்று சொன்னான்.

பீமஸேனன் இங்ஙனங்கூற, மத்ஸ்யதேசாதிபதியான விராட ராஜன், அவனைப்பார்த்து மிகுந்த மனக்களிப்புற்றவன்போல மறுமொழி கூறலானான். 'அந்தத் தொழிலானது உனக்குத் தகுந்ததென்று நான் எண்ணவில்லை. நீ கடல்சூழ்ந்த பூமியை ஆளுவதற்குத் தகுந்தவனாயிருக்கிறாய். நீ மூவுலகங்களையும் ரக்ஷிக்கிறவன்போல விளங்குவதுடன் இப்பொழுது எனக்கு விஷ்ணுபோலவும் அதிகமாக விளங்குகிறாய். உன்விருப்பம் நிறைவேற்றப்பட்டது. என்னால் மரியாதைசெய்யப்பட்டவனாக என்னுடைய மடைப்பள்ளியில் இரு. அவ்விடத்தில் என்னால் எப்பொழுதும் நன்குமதிக்கப்பட்டிருக்கின்ற என்னுடையமனிதர்கள் இருக்கிறார்கள். நீ இப்பொழுது என்னால் அவர்களுக்குத்தலைவனாக ஏற்படுத்தப்பட்டவனாக இரு' என்றான். ராஜரே! அந்தப்பீமன் விராடராஜனுடைய மடைப்பள்ளியில் அவ்விதமாக ஏற்படுத்தப்பட்டு அவனுடைய

அன்புக்குரியவனுக வாஸஞ்செய்துவந்தான். அவனைப் பாமர ஜனங்கள் ஒருவரும் அறியவில்லை; அவனுடையமேலைக்காரருள்ளும் ஒருவரும் அறியவில்லை.

பதினேராவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் நபும்ஸகவேஷம்தரித்து விராடனுடையஸபையில் பிரவேசித்ததும், அவன் விராடனுல் பெண்களுக்கு நாட்டியம் கற்பிக்கும்படி ஏவப்பட்டதும்.)

பிறகு, சிறந்தநிறமுள்ளவனும் யௌவனமுள்ளவனும் ஸ்திரீவேஷம்பூண்டவனும் மிகஅலங்கரிக்கப்பட்டவனும் பவளங்களால் விசித்ரமான இரண்டுகுண்டலங்களையும் அங்குமிங்குமாகஅசைந்து ஆடிக்கொண்டிருக்கின்ற இரண்டுசங்குவளைகளையும் அணிந்தவனும் கறுப்பும் சிவப்புமான இரண்டு வஸ்திரங்களைத்தரித்தவனும் சிறந்த சரீரத்தையுடையவனும் சுக்ரனுக்கும் ப்ருஹஸ்பதிக்கும்ஒப்பான ஒளிபொருந்தியவனும் மிகுதியான நீண்டகூந்தல்களை விரித்துக்கொண்டவனும் பெரியகைகளையுடையவனும் மதங்கொண்டபெரியயானையினுடைய வல்லமைபோன்ற வல்லமைபொருந்தினவனுமான மற்றொருவன் காணப்பட்டான். அவன் நடையினால் அப்பொழுது பூமியைநடுங்கும்படி செய்துகொண்டு ஸபையின் அருகில் விராடனை அடைந்து, ஆகாயத்தில் [1] க்ரஹத்தால் ஆக்ரமிக்கப்பட்டசந்திரன்போல நபும்ஸகவேஷத்தினால் விளங்கியும் விளங்காமலும் இருந்தான்: ஸபையில் வந்திருக்கின்றவனும் [2] கபடத்தால் மறைக்கப்படாதவனும் பகைவர்களை நொறுக்குகின்றவனும் நன்றாக விளங்குகின்றவனும் தேவராஜன்போன்ற காந்தியுள்ளவனும் தேவராஜனுடைய புத்ரனும் சிறந்தயானைபோன்ற பராக்கிரமமுடையவனுமான அவனை அரசன் பார்த்துத் தன்னைப்பத்தியுள்ள எல்லாரையும்நோக்கி, 'இவன் எவ்விடமிருந்து வருகின்றான்? முன் நான் இவனைப்பற்றிக் கேள்வியுற்றதில்லை' என்றுவினவினான். அப்பொழுது அங்குள்ளமனிதர்கள் அவனை அறிந்ததாகச் சொல்லவில்லை. அரசன் வியப்புற்று இவ்விதமானவாக்யத்தைச் சொல்லலானான். 'கஜேந்திரனுடைய லீலைபோன்ற லீலையுடையவனும் சிங்கம்போன்ற நடையுடையவனும் காளையினுடைய கண்கள்போன்ற கண்களையுடையவனும் தேவகுமாரன்போல உக்ரமான தேஜஸ்ஸையுடையவனும் பருத்ததோள்களையும் கைகளையும்

---

1 ராஹுகேதுஸ்வரூபங்களான சாயாக்ரஹங்கள்.
செயற்கையாலன்றி இயற்கையாகவே பீடிவடிவமடைந்தவன்.

உடையவனும் ஸ்வர்ணம்போலச் சுத்தனுமான இந்தமனிதன் யார் எனதுநகரத்தில் பிரவேசித்திருக்கிறான்? இவனைப்பார்த்து, 'தேவேந்திரனுடைய குமாரனே பிரம்மாவினுடையபுத்ரனே பிரம்மதேவன்தானே பார்வதிபுத்ரனே குபேரனுடைய புத்ரனே' என்று எனக்கு ஸந்தேஹம் உண்டாயிருக்கின்றது' என மொழிந்தான். பகைவரை அழிப்பவனும் இந்திரனுக்குஒப்பானவனுமான அந்த அர்ஜுனன், ஸபையிலுள்ள அனேகர்கள் பார்க்கையில், ஸபையைத்தாண்டி அரசனிடம் வந்து, 'அரசரே! நான் பிருஹன்னளை என்னும் பெயருள்ளவள்; நாட்டியமாடுகிறவள். நான் பின்னலை நன்றாகப் பின்னுவேன்; அழகான குண்டலங்களை இடுவேன்; மாலைகளைத் தொடுப்பேன்; உடைகளை வித்தஞ்செய்வேன்; ஸ்நானம்செய்விப்பேன்; கண்ணாடியைத் துடைத்துவைப்பேன். திலகங்களிடுவதிலும் எனக்கு ஸாமர்த்தியம் உண்டு. நபும்ஸகர்களுக்கும் பாலர்களுக்கும் மற்றுமுள்ள ஜனங்களுக்கும்நர்த்தனம்பழக்குவதிலும் வித்தியாப்யாஸமுறைகளைக் கற்பிப்பதிலும் எனக்குத் திறமைஉண்டு; பின்னல்களில் பூக்களைத் தைப்பேன். அந்தச்செய்கையில் ஸ்திரீகள் என்னைக்காட்டிலும் ஸாமர்த்தியத்தில் மேலாயிருக்க மாட்டார்கள்' என்றுசொன்னன். அர்ஜுனன் இவ்வாறு தன்னுடைய செய்கையை விதிப்படி கம்பீரத்துடனே விராடராஜனிடத்தில் தெரிவித்து நின்றான். அதிககீர்த்தியுள்ளவனான விராடராஜன், தன்ஸமீபத்தில் வந்திருக்கின்றவனும் உயர்ந்தவனுமான அவனைக்கண்டு ஆச்சர்யமடைந்து, 'அஸாரமான இந்தவேஷம் உனக்குத் தகாது. சிங்கம்போன்ற அரசனே! ஆண்மையில்லாமலிருப்பது உனக்குத் தகாது. பிரபுவே! உன்னுடையமேனியானது பூதபதியினுடைய மேனிபோல மங்களகரமான வேஷங்களாலும் பூஷணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மேகங்களால் அடர்ந்து வியாபிக்கப்பட்டிருக்கிற ஆகாயத்தில் கிரணக்கூட்டங்களையுடைய ஸூர்யனுடைய வடிவம்போல உன்னுடையவடிவம் விளங்குகிறது. பருத்தும் மிகநீண்டிருக்கின்ற உன்னுடைய இருகைகளையும் விஸ்தாரமானது பிடிக்கப்பட்டால் விளங்கச்செய்யுமென்று நான் எண்ணுகிறேன். உனக்குத்தகுந்ததான விஸ்தீர்ணத்தைப்பிடித்து மிகவும் உறுதியுள்ளவனாக இப்பொழுது இந்தத் தேசத்தையும் இந்தப் பட்டணத்தையும் காப்பாற்றுவாயாக. பிருஹன்னளையே! நீ என்னுடைய புத்ரனுக்கு ஒப்பாக இரு. நான் பிராயமுதிர்ந்தவனாயிருக்கிறேன்; உனக்குப் பொருளைக் கொடுக்கிறேன். பிரபுவே! என்னுடைய இந்தப் பட்டணமுழுதையும் நீ காப்பாயாக. நான் உனக்கு ஒருவிதமான நபும்ஸகத்தன்மையையும் காணவில்லை. நீ மத்ஸ்யதேசத்

தை விரைவாகவ்ருத்தியடையச்செய்து ஆண்டுவருவாயாக. நான் உண்மை சொல்லுகிறேன். நான் உனக்கு ராஜ்யத்தைக் கொடுக்கிறேன்' என்றான். அந்த அரசன், இவன் என்ன செய்யப் போகிறானென்று அறிய விருப்பம்கொண்டு, அவனுடைய முன்னிலையில் நீண்டவைகளும் வர்ணமுள்ளவைகளும் நாண்கயிறுள்ளவைகளும் பலமுள்ளவைகளுமான தன்னுடைய அதேகவிற்கலை அவனுக்குக் கொடுத்தான். பிறகு, அர்ஜுனன், 'பிரபுவே! என்னுல் 1 இவ்விதமான வில்லானது எடுக்கப்பட்டதில்லை; இப்படிப்பட்ட வில்லானது ஓரிடத்திலும் பார்க்கப்பட்டதுமில்லை. என்னைப்போன்ற வில்லாளிகளும் பூமியில் இல்லை. நான் நாட்டியமாடுவேன்; பாடுவேன்; வாத்தியங்களை வாசிப்பேன். நர்த்தனசிகையை செய்விக்கும் விஷயத்தில் எனக்கு விசேஷமான ஸாமர்த்தியமுண்டு. ஆதலால், ராஜரே! உத்தரைக்கு நர்த்தனத்தைக் கற்பிக்கிறதற்காக என்னை ஏற்றுக்கொள்ளும். நான் தேவிக்கு நர்த்தனத்தைக் கற்பிக்கிறவளாவேன்' என்று மிக்க ஆண்மையற்ற வார்த்தையைச் சொன்னான். விராடராஜன், 'பிருஹன்னளையே! உனக்கு அவ்விதமான வரத்தைத் தருகிறேன். என் பெண்ணையும் என்பெண்ணைப்போன்ற மற்றுமுள்ள ஸ்திரீகளையும் நாட்டியமாடும்படிசெய்' என்றுசொல்லிவிட்டு, பிறகு, அழகிய இடையையுடையவளும் அழகியவளுமான தன்புத்ரியைத் தானே அழைத்துச் சந்தோஷமுள்ள மனத்தோடு அவளைப்பார்த்து, 'அழகிய சரீரமுடையவளே! பிருஹன்னளையென்கிற இவள் உனக்குத் தோழியாயிருக்கட்டும். பெண்ணே! இவள் மிக்கப்ரீதியால் நன்குகட்டப்பட்ட ஸ்நேஹமுள்ளவளாகவும் எப்பொழுதும் உனக்கு உயிருக்கு ஒப்பாகவும் வேண்டிய பக்ஷணங்களையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையுமுடையவளாகவும் மங்களகரியாகவும் எல்லா ஜனங்களிடங்களிலும் தடையற்றவளாகவும் ஸஞ்சரிக்கட்டும். கெட்டகுலத்தில் பிறந்தவர்களுக்கு இவ்விதமான வடிவம்இராது. இப்படிப்பட்ட ஒருத்தி நடைத் தவறுதலுள்ளவளாயிருக்கமாட்டாள்' என்று கூறினான். அரசன் தன்னுடைய பற்பலமந்திரிகளோடுஆலோசித்துஅந்த அர்ஜுனனை ஸ்திரீகளைக் கொண்டு விரைவாகப் பரீக்ஷிக்கச் செய்து (அந்தஸ்திரீகளால்) அவனுடைய உறுதியான நபும்ஸகத்தன்மையையும் கேட்டு, பிறகு, அவனைக் கன்னிகையினுடைய அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டான். பிரபுவான அந்தத் தனஞ்சயன் விராடனுடைய குமாரிக்குக் கானத்தையும் வாத்யம் வாசிப்பதையும் கற்பித்தான். அவ்வாறே, அந்த உத்தரையினுடைய தோழிகளுக்கும்

1 இது, குறிப்புமொழியாகக் கொள்ளவேண்டும்.

பரிசாரிகைகளுக்கும் கற்பித்தான். அந்தப்பாண்டவன் அந்தஉத்தரையினுடைய அன்புக்கும் உரியவனனன். சிறந்தகோட்பாடுகளையுடைய அந்தத்தனஞ்சயன் அவ்வாறு அவர்களுக்கு ப்ரியத்தைச் செய்துகொண்டு அவர்களோடு அந்தஅந்தப்புரத்திலேயே வாஸஞ் செய்துவந்தான். அவ்விடத்தில் அந்த நிலைமையை அடைந்திருக்கின்ற அர்ஜுனனை வெளியிலிருக்கும் ஜனங்களாவது மற்ற ஜனங்களாவது அறியவில்லை.

பன்னிரண்டாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(நகுலன் விராடனை அடைந்து தனக்கு அஸ்வசாஸ்திரத்திலுள்ள ஸாமர்த்தியத்தைக் கூறியதும், விராடன் நகுலனுக்குத் தந்தி னைகளை ராகூஷிக்கும் அதிகாரத்தைக் கொடுத்ததும்.)

பிறகு, விராடராஜன் குதிரைகளைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, பிரபுவான மற்றொரு பாண்டுகுமாரன் காணப்பட்டான். வருகின்றவனை அந்தப்பாண்டவனை ஸாமான்யஜனங்கள் மேகத்தினின்று விடுபட்டிருக்கின்ற சந்திரமண்டலத்தைப்போலக் கண்டார்கள். அவன் இங்குமங்கும் அந்தக் குதிரைகளைப்பார்த்தான். பார்க்கின்ற அந்தநகுலனை மத்ஸ்யராஜன் கண்டான். பிறகு, அந்தவிராடன் குருகுலோத்தமனை அந்த நகுலனைப்பார்த்து, அப்பொழுது ஸபையிலிருக்கின்றவர்களையெல்லாம் வினவினன். 'யௌவனமுள்ளவனும் என்னுடைய ஸபையை நோக்கி வருகிறவனுமான இவனை யாராவது இதற்குமுன் பார்த்ததுண்டா? இவன் எனக்கு ப்ரியனாயிருக்கிறான். இவனுடைய தர்சனமும் என் மனத்துக்குப் பிடித்திருக்கிறது. யாராவது ஒருவன் இவனைப் பார்த்திருந்தால் சொல்லட்டும். இவன் என்னுடைய குதிரைகளை அடிக்கடி பார்க்கிறான். ஆதலால், நிச்சயமாக இவன் குதிரைகளுடைய ஸ்வபாவங்களை அறிந்தவனாகவும் ஸமர்த்தனாகவுமிருக்கவேண்டும். இவன் விரைவாக அருகில் ப்ரவேசிக்கும்படிச் செய்யப்படலாம். இந்தவீரன் தெய்வம்போல விளங்குகிறான்' என்றான். மத்ஸ்யராஜன் இங்ஙனம் ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுதே, கௌரவர்களுள் சிறந்தவனான நகுலன் ஸபையை விரைவாக அடைந்தான். பிறகு, கௌரவர்களுள் உத்தமனானநகுலன்விராடராஜனை நமஸ்கரித்து அருகில் வந்து அவனைப்பார்த்து, 'ராஜரே! நான் சம்பளத்தையும் போஜனத்தையும் விரும்பிப் பிழைக்கவேண்

டுமென்று எண்ணங்கொண்டு இப்பொழுது உம்முடையபட்டணத்தை வந்துஅடைந்தேன். நான் உம்முடைய குதிரைகளைக்கட்டுகிறவனும் உம்மால் நன்றுகப் போஷிக்கப்பட்டவனுமாயிருக்க விரும்புகிறேன். உமக்கு இஷ்டமிருந்தால் என்னைக் குதிரைகளுக்குத் தலைவனாக ஏற்படுத்தும்' என்று சொன்னன். விராடன், 'நான் உனக்கு வாஹனங்களையும் பொருள்களையும் சம்பளத்தையும் கொடுக்கிறேன். நீ குதிரைக்காரனாயிருப்பதற்குத் தகுந்தவனல்லன். நீ எவ்விடத்திலிருந்து வருகிறாய்? நீ யாரைச்சார்ந்தவன்? நீ எவ்வாறு இங்குவந்தாய்? உன்னிடத்தில் எவ்விதச் சில்பவித்தை இருக்கிறது? சொல்' என்றுவினவ, நகுலன், 'பாண்டுபுத்ரர்கள் ஐவருள்ளும் ராஜாவான யுதிஷ்டிரர் மூத்தவர். பகைவர்களை அழிப்பவரே! அவரால் நான் முற்காலத்தில் குதிரைகள் விஷயத்தில் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருந்தேன். நான் குதிரைகளுடைய ஸ்வபாவத்தை அறிவேன்; பலவிதமான அப்யசிக்ஷையையும் துஷ்டக்குதிரைகளை அடக்கும் விதத்தையும் குதிரைகளுக்குச் செய்யத்தக்க எல்லாச் சிகித்ஸையையும் அறிவேன். என்னிடமிருக்கும் குதிரைகள் பயப்படமாட்டா. பெண்குதிரைகளும் என்னிடத்தில் துஷ்டத்தனம்செய்யா. அவ்வாறிருக்க, ஆண் குதிரை எவ்வாறு துஷ்டத்தனஞ்செய்யும்? என்னுடைய திறமையையறிந்தே அந்தப்பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரர், '1 க்ரந்திகன்' என்றே என்னைப் பேரிட்டு அழைப்பர். தேவராஜனுக்கு மாதலிபோலவும் தசரதமஹாராஜனுக்கு ஸுமந்திர்போலவும் ஜமதக்னியினுடைய குமாரரான பரசுராமருக்கு ஸுமஹன்போலவும் நான் உமக்கு ஸாரதியாயிருந்து உம்முடையகுதிரைகளைப் பழக்குகிறேன். மஹாராஜரே! மனிதர்களுக்கெல்லாம் ராஜாவான யுதிஷ்டிரருடைய கட்டளையினால் நான் லக்ஷக்கணக்காகவும் கோடிக்கணக்காகவுமுள்ள குதிரைகளுக்கு ரக்ஷகனாக இருந்தேன்' என்று கூறினன்.

விராடன், 'என்னிடத்திலுள்ள வாஹனங்களான குதிரைகளெல்லாம் இப்பொழுதே உனக்கு அதீனமாயிருக்கட்டும். மேலும், என்னுடைய குதிரைவீரர்களும் ஸாரதிகளும் உனக்கு ஸ்வாதீனர்களாயிருக்கட்டும். தேவதைக்குஒப்பானவனே! இவ்விதமான உன்னுடைய இஷ்டம் நிறைவேற்றப்பட்டது. மற்றும் உன்னால் எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றவரத்தைச் சொல். குதிரைத்தொழில் உனக்குத் தகுதியாகக்காணப்படவில்லை. நீ அரசன்போல விளங்குகிறாய். உனக்குக் குதிரைத்தொழில் தகாது. பார்ப்பதற்கு இனியவ

1 கட்டி அடக்குகிறவன்.

னே!எனக்கு உன்னுடையஇந்தத் தர்சனமானதுயுதிஷ்டிரருடைய தரிசனத்துக்குஒப்பாகவே இருக்கிறது. இகழத்தகாதவரான அந்தப்பாண்டவர் வேலைக்காரர்களைவிட்டுநீங்கி எவ்வாறு கானகத்தில் ஸஞ்சரிக்கிறரோ? எப்படி ஸுகமாகவஸிக்கிறரோ?' என்றான். உத்தமனை கந்தர்வனுக்கு ஒப்பானவனும் யௌவனமுள்ளவனுமான அந்த நகுலன், ஸர்வோத்தமமுற்ற விராடராஜனால் அவ்வாறு பூஜிக்கப்பட்டான். பிரியமாகவும் சாதுர்யமாகவும் வஸித்துவருகின்ற நகுலனை அஜ்ஞாதவாஸகாலத்தினிடையில் எவ்விதத்திலும் யாரும் அறியவில்லை.

பதின்மூன்றுவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(ஸஹதேவன் இடையனுடையவேஷம்தரித்து விராடநகரத்தில்சென்றதும், விராடன் ஸஹதேவனுக்குத்பசுக்களைஒப்புக்கொடுத்ததும்.)

பிறகு, சந்திரன்போன்றவனும் யாகத்தில் ஹவிஸ்ஸுகளால் ஹோமம்செய்யப்பட்ட அக்னிபோன்றவனுமான மற்றொருவன் காணப்பட்டான். அவன் உலகத்தைவிளங்கச்செய்கின்ற பாலஸூர்யன் போல அழகியதோற்றமுள்ளவனாகக் காணப்பட்டான். வருகின்ற அந்த ஸஹதேவனை, முந்தியிருக்கின்ற விராடராஜன் உடனே கண்டான். எல்லாருடைய மனத்தையும்கவரும் காந்தியுள்ளவனும், யௌவனமுள்ளவனும், பகைவர்களை அழிக்கும் திறமையுடையவனும், மேகத்தினின்றும் விடுபட்ட சந்திரமண்டலம்போன்றவனும், (ஸபையை நோக்கி) வருகின்றவனும், அளவுள்ள கோலுள்ளவனும், அழகிய தோற்றமுள்ளவனும், தும்பைகளையும் அசோகயிற்றையும் நாண்கயிற்றையும் நீண்டதும் ப்ரகாசமுள்ள அனேகமயிர்களாலே நன்றாகச் சேர்த்து முறுக்கப்பட்டதுமான சரட்டையும் பின்புறத்தில் கட்டிக்கொண்டிருப்பவனுமான அந்தஸஹதேவனை அந்தஸபையிலுள்ள ஜனங்கள் தனித்தனியாகக் கூடிக்கொண்டு பார்த்தார்கள். வீர்யவானான அந்தஸஹதேவனும் அரசனைநோக்கி, 'ராஜரே! என்னைப் பசுக்களுக்குத்தலைவனாக ஏற்படுத்தும். என்னால் காப்பாற்றப்பட்ட உம்முடைய பசுக்கள் தெளிவான நித்ரையுள்ளவைகளாயிருக்கும். நான் திறமையுள்ள இடையன். (என்னால் நன்றாகப்போஷிக்கப்படும் உம்முடைய பசுக்களுக்குத்) துஷ்டமிருகங்களிடமிருந்தும் ரோகத்தினிட

மிருந்தும் காட்டுத்தீயினிடமிருந்தும் திருடனிடமிருந்தும் பயம் உண்டாகாது. ராஜரே! உம்முடையபசுக்கள் அதிகப் பாலுள்ளவைகளும் எண்ணிக்கையிலுல் அதிகப்பட்டவைகளும் பிணியற்றவைகளும் நல்ல புஷ்டியுள்ளவைகளுமாகும்' என்று கூறினன். அரசன், ஸஹதேவனுடைய வார்த்தையைக்கேட்டு, அவனைப்பார்த்து ஸந்தோஷித்துப் புகழ்ந்து, 'வீர! உன்னிடத்தில் இடையர்களின் தன்மையை நான் பார்க்கவில்லை. உறுதியுள்ள உன்னுடைய சரீரமானது தைர்யத்திலுல் க்ஷத்ரியனுடைய சரீரம்போலவும் குருவம்சத்தில்பிறந்தவனுடைய சரீரம்போலவும் விளங்குகிறது. உன்னுடையசரீரமானது பாண்டித்யமில்லாததாகக் காணப்படவில்லை. நீ இந்தராஜ்யத்தில் எனக்கு ஆலோசனைசொல்லுகிற மந்திரிஸ்தானத்தை வஹித்துக்கொண்டிரு. பிருஹஸ்பதியானவர் இந்திரனுடன்கூடின தேவர்களைப்போல நீ அரசர்களோடுகூடின இந்த மத்ஸ்யதேசத்தை ஆண்டுகொண்டிரு. அழகிய வேஷமுள்ளவனே! நீ என்னுடைய எல்லாச்சேனைகளையும் காப்பாற்று. உனக்குத் தகுதியான கத்தியை எடுத்துக்கொள். சேனையை ரக்ஷிக்கிற பாரத்தைப்பொறுத்து, என்னுடைய ஸைன்யத்துக்கு நீ தலைவனாயிரு. வில்லைக்கையில்எடு' என்று ஸந்தோஷமுள்ள மனத்தோடு கூறினன். விராடராஜனுல் (இப்படிச்) சொல்லப்பட்டவனும் குருவம்சத்தில் பிறந்தவர்களுள் உத்தமனும் அதிபுத்திசாலியுமான ஸஹதேவன் மத்ஸ்யதேசத்தில் மிகச்சிறந்தவனை விராடராஜனைப் புகழ்ந்து நமஸ்காரஞ்செய்து, 'ராஜரே! ஸாரமான என்னுடைய வார்த்தையைக்கேளும். நான் சிறுவன்; ஒருவிதஜாதியால் தோஷமுள்ளவன். நீதிகளில் தகுந்தஆலோசனையுடன் கூடியிருக்கும் தன்மை எனக்கு இப்பொழுது எவ்வாறு உண்டாகும்? தோஷமற்றவரே! அரசரே! நாங்கள் எங்கள்ஜாதிக்குரிய தொழில்களாலேயே ஸந்தோஷமடைகிறவர்கள். (ஆதலால்,) பசுக்களைக் காக்கும்விஷயத்தில் எனக்குக் கட்டளையிடும். நான் வைப்யன். எனக்கு அரிஷ்டநேமியென்று பெயர். நான் குருஶ்ரேஷ்டர்களான பாண்டவர்களுடைய பசுக்களைக் காக்கும் அதிகாரத்தில் இருந்தேன். ராஜஶ்ரேஷ்டர்களான அந்தப்பாண்டவர்கள் இருக்குமிடத்தை நான் அறியவில்லை, ப்ரஜைகளுக்குத் தலைவரே! உம்மிடத்தில் வாஸஞ்செய்ய விருப்பமுற்றிருக்கிறேன். பிரபுவே! இதைத் தவிர வேறுதொழிலால் ஜீவிப்பதற்கு என்னல்முடியாது. உம்மைத்தவிர வேறொருவரும் என் மனத்துக்கு ப்ரியமாயில்லை' என்றுசொன்னன். விராடன், 'பகைவர்களை அழிப்பவனே! நீ பிராம்மணனே;

அல்லது அரசனே; கடல் சூழ்ந்த பூமியையாளும் அரசனுடைய ரூபமுடையவனாக இருக்கிறாய்; உண்மையைச்சொல். உன்னிடத்தில் இடைத்தன்மையானது பொருத்தமாயில்லை. எந்த அரசனுடைய ராஜ்யத்திலிருந்து இவ்விடம் வந்திருக்கிறாய்? எவ்விதமான சிறந்த சில்பம் உன்னிடத்திலிருக்கின்றது? நீ எங்களிடத்தில் எவ்விதமாக எப்பொழுதும் வலிக்கப்டிபோகிறாய்? உனக்கு இங்கு என்ன [1] வேதனம் வேண்டும்? சொல்' என்று வினவ, ஸைரந்தரன், 'அரசரே! பாண்டுபுத்ரர்கள் ஐவருள்ளும் யுதிஷ்டிரராஜர் மூத்தவர். அவருக்கு எட்டிலக்ஷம் பசுக்களுடைய வர்க்கங்கள் நூறுநூறாக இருந்தன. வேறு பதினாயிரம் பசுக்களுமிருந்தன. அப்படியே இன்னும் வேறான இருபதினாயிரம் பசுக்களும் இருந்தன. அவைகளுக்கெல்லாம் நான் இடையனாக இருந்தேன். என்னைத் தந்த்ரீபாலனென்று எல்லோரும் சொல்வார்கள். (நான் இருக்குமிடத்துக்குச்) சுற்றிலும் பத்து யோசனைதூரம்வரையில் ஒரிடத்திலாவது பசுக்களைப்பற்றியதான சென்றதும் நிகழ்வதும் வருவதும் மற்றதுமான ஒன்றும் என்னால் அறியப்படாததாக இராது. மஹாத்மாவான அந்தயுதிஷ்டிரருடைய குணங்கள் என்னால் நன்றாய் அறியப்பட்டிருந்தன. குருதேசத்தரசரான அந்தயுதிஷ்டிரரும் என்னால் ஸந்தோஷப்படுத்தப்பட்டவரானார். என்னால் எண்ணப்பட்டிருக்கின்ற பசுக்கள் கணக்கிட்டு அறியமுடியாதவைகளும் மிகப்பெரியவைகளும் அதிகப்பாலுள்ளவைகளும் அரோகங்களும் கன்றுகளுள்ளவைகளும் நல்லஸ்வபாவமுள்ளவைகளுமாகின்றன. பசுக்கள் (என்னால் பாதுகாக்கப்பட்டால்) விரைவில் அதிகமாகின்றன. அப்பசுக்களிடத்தில் இப்புவியில் ஒருவிதமான ரோகமும் உண்டாகிறதில்லை. அந்தஅந்த உபாயங்களால் என்னால் இம்மாதிரி அறியப்பட்டிருக்கின்றது. இவைகள்தாம் என்னிடத்திலுள்ள சில்பங்கள். ராஜரே! எந்தக்காளைகளுடைய மூத்ரத்தை மோந்துபார்த்து மலட்டுப்பசுவும் கன்றை ஈனுமோ, அவ்விதமான உயர்ந்த லக்ஷணமுள்ள காளைகளையும் நான் அறிவேன்' என்று மறுமொழி கூறினான்.

மத்ஸ்யதேசாதிபதியான விராடன், ஸந்தோஷத்தினால் குளிர்ந்த மனத்துடன் மாத்ரிபுத்ரனான பாண்டவனைப்பார்த்து, "இழிவான தொழிலை உனக்கு (ஏற்படுத்த) நான் ஸம்மதிக்கவில்லை; இந்தப்பூமி முழுமையையும் நீ ரக்ஷிப்பதற்குத்தகுந்தவனாயிருக்கிறாய். பிரபுவே! அல்லது, உனக்கு இப்பொழுது விருப்ப

[1] சம்பளம்.

மிருந்தால் இஷ்டப்படி எனது பசுக்கூட்டத்தை நீ பாதுகாத்து வா. என்னுடைய பசுக்கள் உன்னிடத்தில் ஒப்பிக்கப்பட்டவைகளாகட்டும். இடையர்களிடமுள்ள பசுக்களை உனக்கு நான் தருகிறேன். ஒவ்வொருநிறத்திலும் தனித்தனியாக லக்ஷக்கணக்கான பசுக்கூட்டங்களிருக்கின்றன. உன்னுல் விரும்பப்பட்ட வரத்தை நான் உனக்குக்கொடுக்கிறேன். என்னுடைய பசுக்கள் உன்னிடத்தில் ஒப்பிக்கப்பட்டவைகளாகட்டும்' என்று சொன்னன்.

மஹாத்மாவும் பாண்டுபுத்ரனுமான ஸஹதேவன், இவ்வாறு விராடனுடைய சேர்க்கைபெற்று இஷ்டப்படி பசுக்களுக்கு ரக்ஷகனாயிருக்கும் நிலைமையை அடைந்து, அஸ்தகிரியில் பிரவேசித்திருக்கின்ற ஸூர்யன்போல, அஜ்ஞாதவாஸஞ்செய்துகொண்டு வஸித்தான். பழுதற்றபராக்ரமமுள்ள பாண்டவர்கள், கடலால்சூழப்பட்ட பூமியை ஆள்வதற்கு முயற்சியுள்ளவர்களாக, உள்ளபடி அஜ்ஞாதவாஸத்தை அனுஷ்டிப்பதற்காகப் பிரதிஜ்ஞைசெய்தபடியே இவ்விதமாக விராடனிடத்தில் வஸித்துவந்தார்கள்.

பதினன்காவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதியானவள் ஸைரந்த்ரீவேஷந்தரித்து ஸுதேஷ்ணையினுடைய அரண்மனையில் வஸித்தது.)

பிறகு, அழகியகூந்தலையுடையவளும் பார்க்கத்தகுந்தவளும் சுத்தமான சிரிப்புடையவளும் பருத்த வட்டமான கொங்கைகளையுடையவளும் மங்களமுள்ளவளும் கறுத்த கண்களையுடையவளும் கறுத்தநிறமுடையவளும் க்ருஷ்ணைஎன்கிற பெயருடையவளும் பயந்தவளுமான அந்த த்ரௌபதியானவள் ம்ருதுவான பின்னல்மயிர்களை உயரத்தூக்கிமுடிந்து வலப்பக்கத்தில் மறைத்துக்கொண்டும் அதிகமாக அழுக்கடைந்ததும் பெரிதுமான ஒருவஸ்திரத்தை உடுத்துக்கொண்டும் ஸைரந்த்ரியினுடையவேஷத்தைத் தரித்துக்கொண்டும் விராட நகரத்தில் புகுந்து துயரத்தை அடைந்தவள்போலச் 1 சென்றாள். அவளைப்பார்ப்பதற்காக அங்குள்ளபுருஷர்களும் ஸ்திரீகளும் நான்குபக்கத்திலிருந்தும் ஓடிவந்து அவளைப்பார்த்து, 'பெண்ணே! நீ யார்? எதைச்செய்ய விரும்புகிறாய்?' என்றுவினவினர்கள். ராஜேந்திரரே!

---

1 'ஸைரந்த்ரீவேஷ ஸம்யுதா' என்பது, கூறியதுகூறலால், விடப்பட்டது.

அந்த த்ரௌபதியானவள் அவர்களைநோக்கி, '(ஓ! சுகரவர்வி களே!) வந்திருக்கின்றநான் ஸைரந்த்ரி ; என்னைக் காப்பாற்றுகிற வருக்கு ஊழியத்தைச் செய்யவிரும்புகிறேன்' என்று மறுமொழி கூறினாள். அந்த த்ரௌபதியினுடைய ரூபத்தினாலும் வேஷத்தி னாலும் இன்சொல்லாலும் சோற்றுக்காக வந்திருக்கிறவளாக அவளை ஜனங்கள் நம்பவில்லை. கேகயராஜகுமாரியும் விராடராஜனுடைய மனத்துக்கு இனிய மனைவியுமான ஸுதேஷ்ணையானவள், உப்பரி கையிலிருந்து நான்குபக்கத்திலும் பார்க்கின்றவள் தற்செயலாக த்ரௌபதியைக் கண்டாள். விராடனுடைய மனைவியான அந்த ஸுதேஷ்ணைதேவியானவள் அவ்விதரூபத்தையுடையவளும் ரத னற்றவளும் ஒற்றைவஸ்திரத்தை உடுத்தவளும் ஸ்த்ரீகளாலும் புருஷர்களாலும் நான்குபக்கத்திலும் சூழப்பட்டவளுமான அவ ளைக்கண்டு காருண்யத்தினால் உண்டானபரபரப்புடன், 'அவளிடத் தினின்று ஜனங்களை விலக்கி, நீங்களெல்லாரும் அவளை இங்கே அழைத்துவாருங்கள். பதிவ்ரதையான அந்தப் பெண்ணைப் பார்த்தபொழுதே என்மனம் நடுங்குகிறது. ஆதலால், உங்களுக்கு இஷ்டமிருந்தால் அந்தப்பெண்ணை விரைவாக இங்கு அழைத்து வந்து (எனக்குக்) காண்பியுங்கள்' என்று சொல்லி, தன்பக்கத்தி லுள்ளவர்களான ஸ்த்ரீகளையும் அவளை அழைத்துவருவதில் விருப்பமுள்ளவர்களான வ்ருத்தஸ்த்ரீகளையும் அனுப்பினாள். அவ் வாறு சொல்லப்பட்ட அந்தஸ்த்ரீகள் ஒருங்குசேர்ந்து த்ரௌபதி யினுடைய அருகில்சென்று அவளை அழைத்துவந்து அவளைப்பார் த்து எல்லாவித்தாலும் மதுரமான அக்ஷரங்களுடன்கூடின வாக்யத்தை உரைக்கலானார்கள். 'ஏ! கல்யாணி! உப்பரிகையி லிருக்கின்ற ஸுதேஷ்ணைதேவி உன்னைப்பார்க்கஎண்ணங்கொண்டு உனக்காக எங்களை அனுப்பினாள். அவளைப்பார்க்க உனக்கு இஷ்ட மிருந்தால் எங்களால் நீ பாதுகாக்கப்பட்டவளாக உன்னிஷ்டப் படி இப்பொழுது வா' என்று சொன்னார்கள். (பிறர்களுடைய) சொற்களின் பொருள்களை அறிவதில் ஸமர்த்தையான த்ரௌபதி அவர்களுடைய அவ்விதமான வார்த்தையைக்கேட்டு, தன்னால் விரும்பப்பட்ட கார்யத்தினுடைய அதிக லாபத்தினால் ஸந்தோஷ மடைந்து, அரண்மனையைநோக்கி வந்தாள். த்ரௌபதியானவள், எந்தஇடத்தில் பிரதான ராஜஸ்த்ரீ இருக்கிறாளோ அந்த ராஜமனை கையை அடைந்து, கீர்த்தியுள்ளவளும் ராஜபத்னியுமான ஸுதேஷ்ணையை வந்தடைந்தாள். கறுத்த நீண்டகண்களையுடை யவளும் நாணமுள்ளவளும் இளங்கொடிபோல நடிக்கமுற்றவளும் அழகிய இடையுள்ளவளும் மங்களமுள்ளவளும் எல்லா லக்ஷணங்

களும் பொருந்தியவளுமான அந்தத்ரௌபதியானவள், கறுத்த நிறமுடையவைகளும் மெல்லியவைகளும் நீண்டவைகளும் சுருண்டு மென்மையாயிருக்கின்ற நுனிகளையுடையவைகளும் அழகியவைகளுமான கூந்தல்களை உயரஎடுத்து முடித்துக்கட்டி வலப்பக்கத்தில் மறைத்துக்கொண்டு விராடனுடைய அந்தப்புரத்தில் நுழைந்து எதிரில்சென்று, ரத்னங்களாலிழைக்கப்பட்ட விரிப்புடன் கூடின பொற்பீடத்திலிருப்பவளும் சிவந்ததும் மெல்லியதுமான ஆடையையுடுத்தவளும் மேகத்திலுள்ள மின்னல்கொடிபோன்றவளும் பற்பலநிறங்களுள்ள (ரத்னகாந்திகளால்) விசித்ரமாயிருப்பவளும் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும் அழகிய புருவங்களும் கூந்தல்களும் இடையுமுள்ளவளும் கூனர்களுக்கும் குள்ளர்களுக்கும் மத்தியிலிருப்பவளும், யாகத்தில் அனேகபுஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட பூமியிலுள்ள யாகமேடைபோன்றவளும் எல்லா அலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும் ஐஸ்வர்யமுள்ளவளும் அனேக ராஜபுத்ரிகளால்சூழப்பட்டவளும் ராஜமஹிஷியுமான ஸுதேஷ்ணையைக் கண்டாள். அந்த உத்தமஸ்த்ரீகளெல்லாரும் திரௌபதியைப் பார்த்து மனவருத்தமடைந்து ஆஸனத்திலிருந்து விரைவாக எழுந்திருந்து நான்குபக்கத்திலும் (திரௌபதியைவந்து) சூழ்ந்துகொண்டார்கள். அவர்களெல்லாரும் (தேவலோகத்திலிருந்து) வந்திருக்கின்ற தேவியான இந்திராணியைப்போல அந்தத்ரௌபதியைப் பார்த்தார்கள். மறைந்திருக்கின்ற கணுக்கால்களையுடையவளும், உத்தமமான [1]இடையையுடையவளும், சிவந்தும் நீண்டுமிருக்கின்ற கண்களையுடையவளும், எல்லாவிதத்திலும் மேன்மைபெற்றவளும், தோஷமற்ற அங்கங்களையுடையவளும், வணங்கின சரீரத்தையுடையவளும், அழகிய இடையையுடையவளும், அதிக குறுமையும் நெடுமையுமில்லாதவளும், அனேகம் புற்களால்அடர்ந்த காட்டிலுள்ள பெண்மான்போன்றவளும், இகழத்தகாதவளும், அழகிய கூந்தலையுடையவளும், மான்போன்ற விழியையுடையவளும், பயந்திருக்கின்ற பெண்மான்போன்றவளும், கூட்டத்திலிருந்து தவறியிருக்கின்ற பெண்யானைபோன்றவளும், லக்ஷ்மிதேவிபோன்றவளும், அகன்ற கண்களையுடையவளும், கீர்த்திபொருந்திய விதைதேவிபோன்றவளும், நக்ஷத்ரங்களுள் ரோஹிணிபோன்றவளும், ஜ்வலிக்கின்ற அக்னிஜ்வாலைபோன்றவளும், ருத்ரபத்னியாகிய பார்வதிபோன்றவளும், மஹோததியினுடைய கரைபோன்றவளும், நாககன்னிகைகளுள் ஸுலபைபோன்றவளும், பெண்

---

1 மூலம் வேறு.

மான்களுள் கின்னரிபோன்றவளும், கங்கையைப்போல் பரிசுத்தமான அங்கங்களுடையவளும், சரத்காலத்தைச்சேர்ந்த ராத்ரிபோன்றவளும், உலகத்தில் (இவ்விதமான ஸ்வரூபமுடையவளென்று) எண்ணத்தகாதவளும், இளாதேவிபோல் உத்தமமான கீர்த்தியைப்பெற்றவளும், ஸாவித்ரியைப்போல (எவ்விதத்திலும்) அவமதிக்கத்தகாதவளும், பிரம்மதேஜஸோடு கூடியவளும், லக்ஷ்மியைப்போல் பதிவ்ரதையும், அருந்ததிபோல் சுத்தையும், பிரியமுள்ளவளுமான அந்த த்ரௌபதியை ஸுதேஷ்ணையான வள் ஆச்சர்யத்தினால் மலர்ந்தகண்களையுடையவளாகப் பின்வருமாறு கேட்கலானாள்.

'தோஷமற்ற எல்லா அங்கங்களையுமுடையவளே! நீ யார்? நீ எவ்விடத்தினின்று இங்கே வந்திருக்கிறாய்? நீ எவனைச்சார்ந்தவள்? விசாலமான கண்களையுடையவளே! நான் உனக்கு எதைச் செய்யக் கடவேன்? மறைந்திருக்கின்ற கணுக்கால்களுடையவளும், (நீண்டும் குறுகியுமில்லாமல்) ஸமமான இரண்டுதாடைகளையுடையவளும், (சப்தம், புத்தி, நாபி இம்) மூன்றுகளிலும் ஆழ்ந்தவளும், (மூக்கு இரண்டுகண்கள் காது நகங்கள் ஸ்தனங்கள் பிடரி இந்த) ஆறுகளிலும் உன்னதமாயிருப்பவளும், சிவந்திருக்கின்ற (உள்ளங்கை, உள்ளங்கால், கடைக்கண், உதடு, நா, நகம் இந்த) ஐந்து இடங்களிலும் பளபளப்புள்ளவளும், ஹம்ஸம் போலக்கத்கதஸ்வரத்துடன்பேசுபவளும், அழகிய கூந்தலையுடையவளும், அழகிய குரலுடையவளும், யௌவனத்தின் மத்தியிலிருப்பவளும், பருத்திருக்கின்ற [1] கொங்கைகளுள்ளவளும், குடிலமான இமைமயிர்களுள்ள கண்களுடையவளும், கோவைப்பழம்போன்ற உதட்டையுடையவளும், மெலிந்த இடையுள்ளவளும், சங்கம் போன்ற கழுத்தையுடையவளும், மறைந்திருக்கின்ற நரம்புகளையுடையவளும், பூர்ணசந்திரனுக்கொப்பான முகத்தையுடையவளும், விலாஸங்களுடன்கூடியவளுமான நீ, அஸுர ஸ்திரீயோ? கின்னரியோ? கந்தர்வஸ்திரீயோ? வனதேவதையோ? அப்ஸரஸ்திரீயோ? நாககன்னிகையோ? தாரையோ? அலம்புஸையோ? மிச்ரகேசியோ? புண்டரீகையோ? மாலினியோ? நீ யார்? அந்த அந்த லக்ஷணத்துடன் கூடின காச்மீரதேசத்தில் பிறந்த பெண் குதிரையைப்போல விளங்குகிறாய். நீ இந்திராணியோ? ருத்ரபத்னியோ? ஸ்வதையோ? ரதிதேவியோ? ஏ! தேவி! தேவர்களுள் பிரஸித்திபெற்றவளான எந்தத் தேவஸ்திரீ, இங்கு வந்த

1 ஒருசொல் விடப்பட்டது.

ருய்? சொல். உன்னுடைய ரூபமானது பூஷணங்களால் விடுபட்டிருந்தாலும் ஒப்பற்றதாக விளங்குகிறது. லோககர்த்தாவான பிரம்மதேவர் உன்னைப் படைத்துவிட்டு (வேறு ஸ்திரீகளைப் படைப்பதினின்று) ஒழிந்திருப்பாரென்று நான் எண்ணுகிறேன். உன்னைப்பார்த்து ஸ்திரீகளே திருப்திபெறுகிறார்களில்லை. புருஷர்களுக்கு எவ்வாறு ஆசையுண்டாகாமலிருக்கும்? தளிர்களாலும் புஷ்பங்களாலும் பூங்கொத்துக்களாலும் நான்குபக்கத்திலும் நிறைந்த வனதேவதைகளும் உன்னுடைய ரூபத்தின் நிறைவினால் வியப்புற்று உன்னையே பார்க்கின்றார்கள். ஏ! கல்யாணி! அந்தப் புரத்திலுள்ள ஸ்திரீகளும் மிருகங்களும் பக்ஷிக்கூட்டங்களும் புருஷர்களும் எல்லாரும் மிக்க வியப்புற்று உன்னையே பார்க்கின்றார்கள். மூவுலகங்களிலும் உன்னைப்போன்ற ஒரு ஸௌந்தரியானவள் இதற்குமுந்திப் பார்க்கப்படவுமில்லை; கேட்கப்படவுமில்லை. நீ அழகிய கண்ணுள்ளவளாயிருக்கிறாய்' என்று கூற, த்ரௌபதியானவள் (பின்வருமாறு) மறுமொழி கூறலானாள்.

'நான் தேவஸ்திரீயுமல்லேன்; கந்தர்வஸ்திரீயுமல்லேன்; யக்ஷஸ்திரீயுமல்லேன்; கின்னரஸ்திரீயுமல்லேன்; நான் ஸைரந்த்ரிஜாதியைச் சேர்ந்தவள்; காட்டிலுள்ள கிழங்குகளையும் பழங்களையும் உண்பவள். என் கணவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே நான் ஏதோ ஒரு காரணத்தினால் (ஒருவனால்) கூந்தலில் பற்றி இழுக்கப்பட்டு, பயந்துகொண்டு கானகம் சென்றேன். அழகிய புருவங்களையுடையவளே! நான் ஓரிடத்திலும் நிலையற்றவளாகவும் காட்டிலுள்ள கிழங்குகனிகளைப் பக்ஷிக்கின்றவளாகவும் பன்னிரண்டுவர்ஷகாலம் அந்தக்காட்டில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்து உன்னருகில் வந்தடைந்தேன். நான் அழகாகக் கூந்தலைப்பின்னவும் விசித்ரமான மணிகளைக் கோக்கவும் அறிவேன்; மல்லிகைகளையும் கருநெய்தல்களையும் தாமரைப்பூக்களையும் சேர்த்து மாலைகளைத்தொடுக்க அறிவேன்; சிந்துவாரக புஷ்பங்களாலும் ஜாதிபுஷ்பங்களாலும் தலையலங்காரங்களை ஒழுங்காகச் செய்வேன்; கஸ்தூரியினாலும் காரகில் சாந்தினாலும் பத்ரலேகையையும் செய்வேன்; சிறந்த சந்தனத்தைச் சேர்ப்பேன்; பற்பலவிதமும் மிக்க மங்களகரமுமான மாலைகளையும் தொடுப்பேன்; கிருஷ்ணனுக்கு ப்ரியமுள்ள பார்யையான ஸத்யபாமையை நான் ஆராதித்தேன்; அவ்வாறே, பாண்டவர்களின் பார்யையும் ஸ்த்ரீகளுள் உத்தமியுமான த்ரௌபதியையும் ஆராதித்தேன். அழகிய புருவங்களையுடையவளான அந்த த்ரௌபதிதேவி

யிலுல் எனக்கு வேண்டிய வஸ்துக்களைக்கொடுத்து மிகவும் ஸந்தோ ஷப்படுத்தப்பட்டேன். திரௌபதிதேவியானவள் எனக்கு மாலினி யென்று தானே பெயரிட்டாள். தாமரைப்பூவிதழ்போன்ற கண்ணை யுடையவளான அந்தக்ருஷ்ணையானவள் எனக்கு உயிருக்கொப் பான தோழி. மங்களகரமான முகமுள்ளவளே! நான் ஓரிடத்தி லாவது நெடுங்காலம் வஸிப்பதற்கு விரும்பமாட்டேன். இதுதான் எங்களுடைய வ்ரதம். இப்படிப்பட்ட இந்தச் செய்கையானது எங்களுடையகுலதர்மம். எவன் எங்களுடையபொருளையும் தேசத் தையும் ஆடையையும் கவர்வதே, அவன்விஷயத்திலும் எங்க ளால் கோபம் பாராட்டத்தக்கதில்லை. (ஏனென்றால்,) எங்களு டையகுரு மிக்ககோபமுள்ளவர். அப்படிப்பட்டநான் பர்த்தாக் களுடைய சோகத்திலுல் ஆக்ரமிக்கப்பட்ட அங்கங்களையுடையவ ளும் பர்த்தாக்களோடு ஸமானமாக விரதத்தை அனுஷ்டிப்பவளு மாயிருந்து எவ்விடத்தில் ஸௌர்யாஸ்தமனமாகிறதோ அவ்விடத் தையே இருப்பிடமாகக்கொண்டு செல்லமுடியாத காடுகளிலும் தீர்த்தங்களிலும் தடாகங்களிலும் பற்பலவிதமானவைகளும் மன த்துக்கு இனியவைகளுமான மலைகளிலும் ஸ்த்ரீகாமிகளான நதி களிலும் பிரவேசிக்கமுடியாத பூமியிலும் ஸஞ்சரிக்கிறேன். இனிய சொல்லையுடையவளே! என்னுடையபதிகள் ஸஞ்சரித்துக்கொண் டிருக்குங்கால் வீரர்களைப் பதியாகக்கொண்டவளும் தேவியுமான நான் தெய்வச்செயலால் குழந்தைகளைவிட்டுப் பிரிக்கப்பட்டபொ ழுது உன்னுடைய பர்த்தாவினுடைய நன்னடக்கையைக் கந்தமா தனபர்வதத்திலிருந்தே கேட்டிருக்கிறேன். பிராம்மணர்களிடமி ருந்து மஹிமையைக்கேட்டு அந்தக் கந்தமாதனபர்வதத்தினின்றே உன்னை அடைவதற்கு நான் விருப்பமுற்றேன். ஆதலால், நான் இவ்விடம் வந்தேன். எனக்குத் தர்மராஜனும் வாயுவும் இந்திர னும் அவ்வாறே அச்வினீதேவர்களும் குருக்கள். அவர்களுடைய அனுக்ரஹத்திலுல் என்னை ஒரு புருஷனுவது அவமதிக்கச் சக்தி யுள்ளவனுகான்' என்று கூறினுள். திரௌபதியானவள் இவ் வாறு அந்த ஸுதேஷ்ணையைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் கை களைக் குவித்துக்கொண்டு நின்றுள்.

ஸுதேஷ்ணைதேவியானவள், ஸ்த்ரீகளுள் சிறந்த திரௌபதி யைப்பார்த்து வியப்புற்று, 'கல்யாணி! உன்னை நான் போஷிக்க மாட்டேன். எனக்கு ஸந்தேஹம் உண்டாயிருக்கின்றது. இந்த ராஜா உன்னைப்பார்த்தால் (உன்னிடத்தில்) கெட்ட எண்ணம் கொள்வார். (ஆதலால்,) நீ இந்த அரண்மனையில் வஸிப்பதற்குத்

தகுந்தவளல்லையென்று நான் எண்ணுகிறேன். அழகிய இடையுள்ளவளே! இங்கு வஸிப்பதில் இவ்விதத் தோஷமிருக்கிறது. பயந்தவளே! நீ எவ்விதம் எண்ணுகிறாய்? சிறந்த ஒளிபொருந்தியவளே! ராஜக்ருஹத்திலும் என்னுடைய கிருஹத்திலுமிருக்கிற ஸ்த்ரீகளெல்லாரும் உன்னெருத்தியையே ஆச்சர்யத்தோடுபார்க்கின்றார்கள். என்னுடைய வாஸஸ்தானத்தில் ஸமீபத்திலிருக்கிற இந்த மரங்களையும் நீ பார். உன்னைப் பார்த்து இந்த மரங்களும் வணங்குகின்றன. நீ எந்தப் புருஷனைத்தான் ஆவலுள்ளவளாகச் செய்யமாட்டாய்? நீ மனிதர்களுக்குரிய ரூபத்தை மீறினதும் ஆச்சர்யகரமும் உத்தமமுமான ரூபத்தைத் தரிக்கிறாய். இகழத்தகாத அங்கங்களுடையவளே! உன்னுடைய ரூபத்தை விலங்குஜாதியில் சேர்ந்தவைகளும் ஆச்சர்யத்துடன் உற்றுப் பார்க்கின்றன. (அவ்வாறிருக்க,) பூமியிலுள்ள மனிதர்கள் உன்னை ஆச்சர்யத்துடன் பார்ப்பார்களென்பதில் ஸம்சயமென்ன இருக்கின்றது? அழகிய இடையுடையவளே! 1 விராடராஜர் உன்னுடைய உத்தமமான சரீரத்தைப் பார்த்து, என்னை விட்டுவிட்டு முழுமனத்துடனும் உன்னையே அடைவார். நீண்ட கண்களையுடையவளே! தோஷமற்ற அங்கங்களையுடையவளான நீ மனமகிழ்ந்து எந்த மனிதனைப் பார்ப்பாயோ அவன் காமனுக்கு வசப்பட்டவனாவான். நல்ல மங்களஸ்நானஞ்செய்து அலங்காரங்களை அணிந்து, எந்த மனிதனை நீ பார்ப்பாயோ அவனுக்கு வாட்டமாவது துக்கமாவது ஆலஸ்யமாவது தோல்வியாவது உண்டாகாது. தோஷமற்ற எல்லா அங்கங்களையுமுடையவளே! நீ நன்றாக அலங்கரித்துக்கொண்டு எவனை அடைவாயோ அவனுக்குச் சோகமாவது மனக்கொதிப்பாவது கோபமாவது உண்டாகாது. நான் பொய்சொல்லவில்லை. அழகிய புருவங்களையுடையவளே! உத்தமியான நீ எவனுக்கு உடன்பட்டு மடியின்மீது ஏறினவளாவையோ அவனுக்குப் பிணியும் மூப்பும் பசியும் தாகமும் உண்டாகா. தகுந்த உன்னுடைய இருகைகளாலும் எவனை நீ கட்டி அணைவாயோ அவன் மரித்தவனாலும் பிழைத்து விடுவானென்பது என்னுடைய எண்ணம். எவனுக்கு நீ மனைவியாவையோ, ஸந்தோஷத்தோடு எவனைக் கட்டிக்கொள்வாயோ அவன் எல்லாத்தேவர்களுள்ளும் மஹேந்திரன்போல மேன்மைபெற்று வாழ்வான். அழகிய தொடைகளையுடையவளே! ஒரு மனிதன் ஒரு மரத்தின்மீது ஏறி அந்த மரத்தையே விட்டுவதுபோல ராஜக்ருஹத்தில் நீ எனக்கு ஆவாய். அழகிய புருவங்களையுடையவளே! பெண் நண்டானது எவ்வாறு கர்ப்பத்

1 இங்கு ஒருசொல் விடப்பட்டது.

ைதத் தனக்கும்ருத்யுவாகத் தேடிக்கொள்ளுகிறதோ, அவ்வாறே, உன்னுடைய சேர்க்கையை நான் ஸ்ணுகிறேன். ஸைரந்திரி! உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்விதத்தாலும் நான் உன்னை அவமதிக்கவில்லை. கல்யாணி! என் கணவருடைய சீலத்தினிடமிருந்து உண்டான பயத்தினால், நீ என்னிடம் வஸிப்பதை நான் விரும்பவில்லை' என்றாள்.

திரௌபதி, '(தேவி!) நான் விராடராஜராலாவது வேறொருவராலாவது தேவகந்தர்வயக்ஷர்களாலாவது கெட்ட எண்ணத்துடன் பார்ப்பதற்கு முடியாதவள். நற்குலத்தில் பிறந்தவர்களும் நல்லவிரதமுள்ளவர்களும் தேவாதிதேவர்களுக்குப் புத்ரர்களும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும் ஒப்பான காந்தியுடையவர்களுமான ஐந்து கந்தர்வர்கள் என்னைக் காக்கின்றார்கள். கெட்ட ஸ்வபாவமுள்ள எந்த மனிதன் கெட்ட எண்ணத்துடன் என்னைத் தொடுவனோ அவன் அந்த இரவிலேயே உலக்கைகளால் அடிக்கப்பட்டு விரைவாக விழுவான். அகன்ற கண்களையுடையவளே! என்னை கெட்ட எண்ணமுள்ளவளாகி என்னைப் பார்த்துப் பேசுவனோ அந்த மனிதனுக்குப் பந்துக்கள் பூர்ணமாக நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஆயிரக்கோடிக்கணக்காகவும் இருந்தாலும் அவன் உன் முன்னிலையிலேயே மாண்டுபோவான். அப்படிப்பட்ட மனிதனை என்றும் முப்பது வயதுப்பருவ நிலையைப்பெற்ற தேவர்களாவது அஸுரர்களாவது பன்னகர்களாவது அந்தக் கந்தர்வராஜர்களிடமிருந்து பாதுகாக்கமாட்டார்கள்; ஸம்சயமில்லை. ஸுதேஷ்ணையே! நீ என்னை ஸ்வஜனங்களுள்ளாவது பந்துக்களுள்ளாவது ஒருத்தியாகஎண்ணி என்னிடத்தில் நம்பிக்கைவை. நான் மனிதர்களால் பார்க்கத்தக்கவளல்லேன். என்னுடைய நடக்கை இவ்விதமானதன்று. எவன் எனக்கு எச்சிலைக் கொடுக்கமாட்டானோ, எவன் என்னைத் தன்கால்களைக் கழுவும்படி செய்யமாட்டானோ அந்த மனிதனுடைய அருகில் வாஸஞ்செய்வதினால் என்னுடைய கணவர்களான கந்தர்வர்கள் ப்ரீதியடைவார்கள். எந்த மனிதன் மற்ற ஸாமான்யஸ்திரீகளைப்போல என்னை விரும்புவனோ அந்த மனிதன் அன்றிரவிலேயே வேறு சரீரத்தில் பிரவேசிப்பான். ராஜபத்னீ! நான் ஒருவராலும் (நல்லொழுக்கத்தினின்று) தவறச்செய்வதற்கு முடியாதவள். (துஷ்டர்களுக்குத்) துன்பத்தை விளைவிக்கும் தன்மையுடையவர்களும் பலசாலிகளுமான அப்படிப்பட்ட கந்தர்வர்கள் எனக்கு ப்ராணநாதர்கள். இவ்வாறு (கந்தர்வர்களால் ரக்ஷிக்கப்பட்டு) வஸித்துவருகின்ற என்விஷயத்தில் உனக்குப் பயமே வேண்டாம்' என்று மறுமொழி கூறினாள்.

ஸைரந்திரி இப்படிச் சொல்லியதைக்கேட்ட ஸுதேஷ்ணையானவள், 'கல்யாணி! உன் ஒழுக்கம் இவ்விதம் இருக்குமானால் நீ என்னிடத்தில் இங்கு வாஸஞ்செய். பெண்ணே! எந்தப்புருஷன் தான் போஜனஞ்செய்த மிகுதியை உனக்குக் கொடுப்பான்? புத்திமானனை எந்த மனிதன் லக்ஷ்மியைப்போன்ற உன்னைப் பார்த்துக் கால்களை நீட்டுவான்? இவ்வாறு ஆசாரத்தால் நிறைந்தவளும் இவ்விதமாகத் தேவர்களைக் கதியாகவுடையவளுமான நீ பிராம்மணர்களுக்கு ஸாவித்ரிபோலப் பிராணிகளுக்கு ரக்ஷிக்கத்தக்கவளாயிருக்கிறாய். கல்யாணி! தேவதைபோல் பூஜிக்கப்பட்டவளாகவும் உத்தமமான தேஜஸ்ஸுள்ளவளாகவும் என்னிடத்தில் பிரீதியுள்ளவளாகவும் வாஸஞ்செய். பெண்ணே! ஸர்வாபீஷ்டங்களாலும் நிரம்ப ஸந்தோஷமுள்ளவளாகவும் மனக்கலக்க மற்றவளாகவும் ஸுகமாக வாஸஞ்செய். எனக்கு உன்னிடத்தில் அன்பிருக்கின்றது' என்று சொன்னாள். ஸுதேஷ்ணையினால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்த த்ரௌபதியானவள் மிக்க ப்ரீதியுடையவளாகவும் அழகிய சிரிப்புடையவளாகவும் ஸந்தோஷமற்றவளாகவும் விராடனுடைய அந்தப்புரத்தில் ஸுகமாகப் பிரவேசித்தாள். ஜனமேஜய மஹாராஜரே! பணிவிடை செய்யப்படத் தகுந்தவளான திரௌபதியானவள், ஸுதேஷ்ணைக்கு ஊழியம்செய்துகொண்டு மிகுந்த கஷ்டத்துடன் (அங்கு) வாஸஞ்செய்தாள். இவ்வாறு பாண்டவர்கள், ஒருவருக்கும் தெரியாமல் வாஸஞ்செய்யக்கருதி அடக்கப்பட்ட மனத்துடனும் சாம்பலில் மறைந்திருக்கின்ற அக்னிபோல மூடப்பட்ட தேஜஸ்ஸுடனும் விராடனிடத்தில் வஸித்தார்கள். அவ்வாறே, மங்களஸ்வரூபிணியான கிருஷ்ணையும் அந்தப்புரத்தை அடைந்து வாஸஞ்செய்தாள்" என்று கூறினர்.

பாண்டவப்ரவேசபர்வம் முற்றிற்று.

பதினைந்தாவது அத்யாயம்.

ஸமயபாலன பர்வம்.

(பாண்டவர்கள் தங்களுடையசெய்கைகளால் விராடனை ஸந்தோஷிக்கச்செய்ததும், பீமன் மஹாமல்லனைக்கொன்றதும்.)

ஜனமேஜயர், "இப்படி விராடநகரத்தில் வஸிப்பவர்களும் உண்மையான பராக்ரமமுள்ளவர்களும் புருஷோத்தமர்களுமான பாண்டவர்கள் அதற்குமேல் என்னசெய்தார்கள்?" என்றுவினவ,

வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர். "இங்ஙனம் அந்தவிராட நகரத்தில் மறைந்து வாஸஞ்செய்கின்றவர்களும் குருகுலத்தில் உதித்தவர்களுமான அந்தப்பாண்டவர்கள் விராடராஜன் திருப்தியடையும்படி எந்தக்கார்யத்தைச் செய்தார்களென்பதைக்கேளும். வேந்தரே! ஸபைத்தலைவரானயுதிஷ்டிரர் ஸபையிலுள்ளவர்களுக்கும், அவ்வாறே, புத்ரர்களையுடைய விராடனுக்கும் அன்புடையராயிருந்தார். சூதின் ரஹஸ்யத்தை நன்குஅறிந்தவரும் பாண்டுபுத்ரருமான அந்த யுதிஷ்டிரர் கயிற்றிலில் கட்டப்பட்ட பக்ஷிகளைப்போலச் சூதிலில் கட்டப்பட்டிருக்கின்ற விராடன்முதலான ஸபையிலுள்ளவர்களைத் தம் இஷ்டப்படி சூதுவிளையாடச்செய்தார். புருஷஸ்ரேஷ்டரான தர்மராஜர் (சூதாட்டத்தில்) பொருள்களை ஜயித்து விராடனுக்குத் தெரியாமல் ஸஹோதரர்களுக்கு யதேஷ்டமாகக் கொடுத்துவந்தார். பீமஸேனனும் மத்ஸ்யராஜனில் கொடுக்கப்பட்ட மாம்ஸங்களையும் பற்பல பணியாரங்களையும் விற்பவன்போல ப்ராதாக்களுக்குக் கொடுத்துவந்தான். அர்ஜுனன் அந்தப்புரத்தில் கிடைத்த பழையவஸ்திரங்களை விற்பவன்போலப்பாண்டவர்களுக்கெல்லாம்கொடுத்துவந்தான். நகுலனும் குதிரைகளுக்குத் தகுந்தகார்யத்தைச்செய்து, ஸந்தோஷமடைந்த அந்த விராடராஜனிடத்திலிருந்து பொருளைப்பெற்றுப் பாண்டவர்களுக்குக் கொடுத்துவந்தான். பாண்டுபுத்ரனஸஹதேவனும் இடையர்களுடைய வேஷத்தைத்தரித்துத் தயிரையும் பாலையும் நெய்யையும் பாண்டவர்களுக்குக் கொடுத்துவந்தான். துக்கிக்கத்தக்கநிலைமையையுடையவளும் கோபமுள்ளவளுமான த்ரௌபதியும், ப்ராதாக்களான அந்தப்பாண்டவர்களிவர்களையும் பார்த்துக்கொண்டு பிறர்களால் அறியப்படாமல் வஸித்துவந்தாள். மஹாரதர்களான அவர்கள் அப்பொழுது ஒருவருக்கொருவர் இவ்வாறு உபகாரஞ் செய்துகொண்டு மறுபடியும் கர்ப்பத்தில் வஸிப்பவர்கள் போல (மிக்க கஷ்டத்தோடு) விராட நகரத்தில் வஸித்துவந்தார்கள். வேந்தரே! பாண்டுபுத்ரர்கள் அப்பொழுது திருதராஷ்டிரகுமாரனை துர்யோதனனிடத்தில் உண்டாயிருக்கின்ற பயத்திலில் மனக்கவலையுற்றுக் கிருஷ்ணையைப் பாதுகாத்துக்கொண்டு மறைந்து வாஸஞ்செய்து வந்தார்கள்.

பிறகு, நான்காவதுமாஸத்தில் மத்ஸ்யதேசத்தில் புருஷர்களுக்கு மிகவும் ப்ரியமாயுள்ளதும் ஸம்ருத்தியுள்ளதுமான சங்கரமஹோத்ஸவமானது வந்தது. அரசரே! அந்தமஹோத்ஸவத்தில், பருத்ததேஹமுள்ளவர்களும் அதிகவீர்யமுள்ளவர்களும் காலகே

யர்களென்கிற அஸுரர்கள்போன்றவர்களும் வீர்யத்திஞல் அதிக மதங்கொண்டவர்களும் பலத்திஞல் மேலாயிருப்பவர்களும் ராஜாவிஞல் ஸம்மானஞ் செய்யப்பட்டவர்களும் சிங்கம்போன்ற தோளையும் இடையையும் கழுத்தையுமுடையவர்களும் நல்லசுத்தஸ்வபாவமுள்ளவர்களும் உதாரமானமனத்தையுடையவர்களும் அடிக்கடி ரங்கஸ்தலத்தில் அரசனுடைய ஸந்நிதானத்தில் (சண்டைசெய்து) ஜயித்தவர்களுமான மல்லர்கள், ஆயிரக்கணக்காக நான்குதிக்குக்களிலுமிருந்தும் அந்தவிராடநகரத்துக்குவந்தார்கள். அந்தமல்லர்களுள் ஒருவன் மஹாபலிஷ்டனுயிருந்தான். அவன் அங்குள்ள மல்லர்களனைவர்களையும் சண்டைக்கு அழைத்தான். அங்குநிற்கும் அவன், கர்ஜனஞ்செய்து, கம்பீரமாகநடந்து (தனது கர்வந்தோன்றத்) துள்ளுகிறவனைக் காணப்பட்டான். அந்த மல்லர்களனைவர்களும் மனஞ்சலித்துப் புத்தியையிழந்து தலைகுனிந்து பயமுற்று (துக்கத்திஞல்) மனமழிந்தவர்களானர்கள். மனவருத்தங்கொண்ட இன்னும் சில மல்லர்கள் உயிரைஇழப்பதை விரும்பினர்கள். சிலர் பூமியில்புக விரும்பினர்கள். சிலர் ஆகாயத்தில் செல்வதற்கு எழுந்தார்கள். விராடராஜனுடைய அந்த மல்லர்களனைவரும் மல்லராஜனுல் அடிக்கப்பட்டுப் பயந்தவர்களும் அமைதியுள்ளவர்களும் துன்பமுற்ற அங்கங்களையுடையவர்களும் சப்தமற்றவர்களும் சஞ்சலமானபார்வையையுடையவர்களும் கர்வத்தையும் ஒளியையும் இழந்தவர்களுமாகி ஒன்றுஞ் சொல்லாமலிருந்துவிட்டார்கள். மல்லராஜன், அந்த மல்லர்கள் பயந்திருப்பதைக்கண்டு, (அரசனை நோக்கி,) 'ஓ! வேந்தரே! (இவ்விடம்) வந்திருக்கிறஎன்னை அகண்டபூமண்டலத்தில் சிங்கக்கூட்டங்களோடும் புலிக்கூட்டங்களோடும் சேர்ந்து விளையாடுகின்ற மல்லராஜனென்று அறியும்' என்றுசொன்னன். விராடன், பலமும் கொழுப்புமுள்ள மல்லராஜனுடைய வார்த்தையைக்கேட்டுப் பயந்திருக்கின்ற அந்த மல்லர்களைப்பார்த்து, '(ஓ! மல்லர்களே!) இந்த மல்லனோடு எந்தமனிதன் சண்டைசெய்வதற்கு வல்லமையுள்ளவன்?' என்று வினவினன். ஓ! மன்னரே! விராடன் இவ்வாறு சொல்லியதைக்கேட்ட அந்தமல்லர்களெல்லாம் பேசாமலிருந்துவிட்டார்கள். பிறகு, அரசன் கோபமடைந்து, 'இந்த மல்லர்களுக்கு விட்டிருக்கின்ற மான்யக்ராமங்களையும் ஏற்பட்டிருக்கிற சம்பளங்களையும் நான் நிறுத்திவிடப்போகிறேன்' என்றுசொன்னன். பிறகு, யுதிஷ்டிரர், விராடராஜனுடைய வார்த்தையைக்கேட்டு, 'மஹாராஜரே! முன்பு நான் யுதிஷ்டிரரிடத்தில் பார்த்த ஒரு மல்லனிருக்கிறன். ராஜ

ரே! அவன் இந்தமல்லனேடு போர்புரிவதற்கு வல்லமைபொருந்தியவன். அரசரே! யுதிஷ்டிரருடைய பட்டணத்தில் நான் முற்காலத்தில் பார்த்த அந்தமல்லன் இப்பொழுது உம்முடைய மடைப்பள்ளியில் வஹிக்கின்றான்' என்றார். யுதிஷ்டிரருடைய வார்த்தையைக்கேட்டு, விராடராஜன், 'இப்பொழுது இந்த மல்லனேடு போர்புரிவதற்கு அவனும் விரைவாக அழைக்கப்படலாம்' என்று வெளிப்படையாகச் சொன்னான். விராடனால் அழைக்கப்பட்டு அவ்வாறு (மல்லயுத்தத்தின் பொருட்டு) ஏவப்பட்ட பீமஸேனன், (அரசனைப்பார்த்து,) 'ஓ! அரசரே! நான் (மல்லனேடு) போர்புரிவதற்கு வல்லமையுள்ளவன். புருஷஸ்ரேஷ்டரே! ராஜேந்திரரே! உம்முடைய பிரபாவத்தினாலும் ஐஸ்வர்யத்தினாலும் வல்லமையினாலும் ஆஜ்ஞையினாலும் இந்த மல்லனேடு போர்புரிவதற்குச் சக்தியுள்ளவனாயிருக்கிறேன். அரசரே! [1] உம்முடைய ஐஸ்வர்யத்தினாலும் மஹாதேவருடைய பக்தியினாலும் நான் இந்த மல்லனைக் கீழேதள்ளுவேன்' என்றுசொன்னான். (ராஜாவினால்) ஏவப்பட்ட வீரனான பீமஸேனன் இரண்டுகைகளிலும் புழுதியை எடுத்தூப் பூசிக்கொண்டு மல்லன யுத்தத்துக்கழைத்து ஜனக்கூட்டங்களுடைய மத்தியில் போர்புரிவதற்காக ஆயத்தமாகநின்றான். பீமன் மத்தகஜம்போலப் பகைமல்லனேடு போர்புரிவதற்கு ஆரம்பித்தான். பிறகு, மத்ஸ்யராஜன் சமையற்காரனானவலலனேடு அந்த மல்லனைப் போர்புரியும்படி செய்தான். அப்பொழுது, பீமன், (விராடனால்) தூண்டப்பட்டவனாகி அவனைப்பார்த்து, 'ராஜரே! நான் (யுத்தஞ்செய்யச்) சக்தியற்றவனாயிருந்தாலும் ராஜாவான உங்கள்கட்டளையை மறுப்பதற்குக் கூடாதவனாயிருக்கிறேன்' என்று வருத்தத்தோடு (மல்லயுத்தம்செய்வதில்) மனத்தைச்செலுத்தினவன்போலப் பாராட்டினான். பிறகு, புருஷஸ்ரேஷ்டனான அந்தப்பீமஸேனன், புலிபோல மெதுவாகப் பதுங்கிஸஞ்சரித்து விராடராஜனைஸந்தோஷிக்கச்செய்து விசாலமானயுத்தரங்கத்தில் பிரவேசித்தான். பிறகு, குந்திபுத்ரன் அங்கிருக்கும் ஜனங்களை ஸந்தோஷிக்கச்செய்து கச்சையைஇறுக்கிக் கட்டிக்கொண்டான். பிறகு, பீமன், மல்லர்களுள் பிரஸித்தமான பராக்ரமமுள்ளவனும் விருத்ராஸுரனுக்கொப்பானவனுமான ஜீமூதன்னென்கிற அந்தமல்லனை அவ்விடத்தில் சண்டைக்கு அழைத்தான். பிறகு,பீமன் அந்தமல்லனைக் கஷ்கத்தில்பிடித்துக்கொண்டு ஸிம்மம்போல மிகவும்கர்ஜித்தான். அவ்விருவர்களும் அதிகஉத்ஸாஹத்துடன் கூடியவர்கள். அவ்விருவர்களும், பருத்ததேஹ

1 இரண்டு சொற்கள் விடப்பட்டன.

மூள்ளவைகளும் அறுபது வயதுசென்றவைகளுமான இரண்டுமத யானைகளைப்போலப் பயங்கரமான பராக்ரமமுள்ளவர்கள். பிறகு, நரஸ்ரேஷ்டர்களும் வீரர்களும் மிகுந்தமனக்கிளர்ச்சியுள்ளவர்களும் ஒருவனை மற்றொருவன் ஜயிப்பதில் விரூப்பமுற்றவர்களும் பலத்திலுல் மிகுந்தஸந்தோஷமுடையவர்களும் புருஷர்களுக்கு இருக்கக்கூடியபலத்தை மீறியிருக்கின்ற பலமுடையவர்களும் ஒருவனுக்கு மற்றொருவன் துன்பத்தைவிளவிக்கக்கூடிய ஸமயத்தை எதிர்பார்க்கின்றவர்களும் பரஸ்பரம் ஜயத்தில் விருப்பமுள்ளவர்களுமான அவ்விருவர்களும் பற்பலவிதமான [1]க்ருத [2]ப்ரதிக்ருதங்களாலும் பலத்திலுல் அதிகரித்திருக்கின்றகைகளாலும் [3]ஸந்நிபாதம், [4]அவதூதம், [5]ப்ரமாதம், [6]உன்மதனம், [7]க்ஷேபணம், [8]முஷ்டி, [9]வராஹோத்தூதம், [10]நிஸ்வனம் இவைகளாலும் உள்ளங்கை அறைதல்களாலும் [11]வஜ்ரநிபாதங்களாலும் அவ்வாறே [12]ப்ரஸ்ருஷ்டைகளாலும் [13]சலாகாபாதங்களாலும் [14]நகபாதங்களாலும் பயங்கரமான [15]பாதோத்தூதங்களாலும் முழங்கால் இடிகளாலும் [16]அப்ம நிர்க்கோஷங்களாலும் தலை இடிகளாலும் ஒருவரோடொருவர் மல்லயுத்தஞ் செய்தார்கள். உத்ஸவத்தில் வந்திருக்கின்ற சூரர்களுடைய கூட்டத்துக்கு எதிரில் ஆயுதமில்லாமலே புஜபலத்தாலும் தேஹபலத்தாலும் மநோபலத்தாலும் அந்த யுத்தமானது கோரமாக நடந்தது. ராஜரே! விருத்ரனும் இந்திரனும்போன்ற பலசாலிகளான அவ்விருவர்களுடைய யுத்தத்தில் எல்லாஜனங்களும் பெருங்கூச்சலுடனும் சிங்கநாதத்துடனும் எழுந்திருந்துநின்று மிகக்களிப்புற்றார்கள். அவ்விருவர்களும் [17]ப்ரகர்ஷண [18]ஆகர்ஷணங்களில் அப்யாகர்ஷ விகர்ஷணங்களால் பரஸ்பரம் இழுத்தார்கள். முழங்கால்களால் இடித்துக்கொண்டார்கள். பிறகு, அகன்றமார்பும் நீண்டகைகளுமுடையவர்களும் கைச்சண்டையில் ஸமர்த்தர்களுமான அவ்விருவர்களும் மிகஆரவாரித்து ஒருவரையொருவர் உறுக்கி இருப்புமயமான பரிகாயுதங்கள்போன்றகைகளால் கட்டி இறுக்கினர்கள். பிறகு, பீமன் வேகத்தோடு மேலேகிளம்பி அந்தமல்லனைக் கஷ்கத்தில் பிடித்தான்; கையினுல், அவனை விலாப்பக்கத்தில் பிடித்து வீழ்த்தினன். சத்ருக்களைக்கொல்லுகின்றபீமன் அந்தமல்லனை இருகைகளாலும் மேலேதூக்கி அவனைப்பார்த்து அட்டஹாஸஞ் செய்துகொண்டு புலியானது யானையை இழுப்பதுபோல இழுத்தான். சிறந்தகைகளுள்ளவனும் வீர்யமுள்ளவனுமானபீமன் அந்தமல்லனைத் தூக்கிச் சுழற்றினன். பிறகு, அங்குள்ளமல்லர்களும் மத்ஸ்ய

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 மல்லயுத்தத்தின்வகைகள்.

தேசத்திலுள்ள ஜனங்களும் அதிக ஆச்சர்யத்தையடைந்தார்கள். மிக்க தோள்வலியமைந்த விருகோதரன், பலத்தை இழந்தவனும் பிரஜ்ஞையற்றவனுமான அந்தமல்லனை நூறுதடவைசுழற்றிப் பூமியில் போட்டுத் தேய்த்தான். உலகத்தில் ப்ரஸித்திபெற்ற ஜீமூதனென்கிற அந்த மல்லவீரன் கொல்லப்பட்டவுடனே, விராடன் பந்துக்களோடு அதிக ஸந்தோஷத்தை அடைந்தான். பெரியமனமுள்ள விராடராஜன் மிக்க ஸந்தோஷத்திலுல் அந்தப்பெரியஅரங்கத்தில் வலலனுக்குக் குபேரனைப்போல அதிகமான பொருளைக் கொடுத்தான். இவ்வாறு அந்தப்பீமன் அனேக மல்லர்களையும் மிக்க பலமுள்ளவர்களான அனேக புருஷர்களையும் கொன்று மத்ஸ்யராஜனுக்கு அதிகப்ரீதியை உண்டுபண்ணினான். விராடன், எப்பொழுது இந்தப்பீமனோடு (சண்டை செய்வதற்கு) ஸமானனை ஒருமனிதன் அங்குஇல்லையோ அப்பொழுது புலிகளோடும் சிங்கங்களோடும் யானைகளோடும் பீமனைப் போர்புரியச்செய்தான். அந்தப்பீமன், விராடனால் கொடுக்கப்பட்டவைகளும் விசித்திரமும் பற்பலவிதமுமான பொருள்களை அங்குள்ள மனிதர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தன்இருப்பிடம் சென்றான். அந்த விருகோதரன் மறுபடியும் அந்தப்புரத்தைஅடைந்து ஸ்திரீகளுடைய மத்தியில் விராடனுடைய மஹாபலமுள்ள யானைகளோடும் சிங்கங்களோடும் போர்புரிந்தான். பாண்டுகுமாரனை அர்ஜுனனும், பாட்டினாலும் ஆட்டத்தினாலும் விராடனையும் அந்தப்புர ஸ்திரீகளெல்லாரையும் ஸந்தோஷிக்கச்செய்தான். நகுலன் நன்றுகப்பழக்கப்பட்டவைகளும் வேகமுள்ளவைகளும் ஆங்காங்கு ஒன்றுகூட்டப்பட்டவைகளுமான குதிரைகளால் ராஜஶ்ரேஷ்டனை விராடராஜனை ஸந்தோஷப்படுத்தினான். விராடராஜன் ப்ரீதியுடன் அந்த நகுலனுக்குக்கொடுக்கத்தக்கபொருள்களை மிகுதியாகக்கொடுத்தான். புருஷஶ்ரேஷ்டனை விராடன், ஸஹதேவனால் நன்றுகப்பழக்கப்பட்டவைகளும் அவனுக்கு நான்கு பக்கத்திலும் இருக்கின்றவைகளுமான எருதுகளைக்கண்டு அவனுக்குப் பற்பலபொருள்களைக் கொடுத்தான். ராஜரே! திரௌபதியானவள் வருத்தமுற்றவர்களும் மஹாரதர்களுமான அவர்களனைவர்களையுங் கண்டு அதிக ஸந்தோஷமில்லாத மனத்தையுடையவளாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். இவ்வாறு, அந்தப் புருஷஶ்ரேஷ்டர்களான பாண்டவர்கள் அந்த விராடராஜனுக்கு அப்பொழுது ஊழியங்களைச்செய்துகொண்டு மறைந்து அந்த விராடநகரத்தில் வாஸஞ் செய்துவந்தார்கள்.

ஸமயபாலனபர்வம் முற்றிற்று.

பதினுருவது அத்யாயம்.

கீசகவதபர்வம்.

(கீசகன், திரௌபதியின்மீது தனக்குள்ள காதலை ஸைரந்தரிக்கும் திரௌபதிக்கும் தெரிவித்தது.)

ஜனமேஜயமஹாராஜரே! மஹாரதர்களான பாண்டவர்கள் மத்ஸ்யராஜனுடைய நகரத்தில் அப்பொழுது மறைந்து வஸித்து வருங்கால் பத்துமாஸங்கள் சென்றன. பணிவிடை செய்யப்படத் தக்கவளான திரௌபதியும் ஸைரந்தரிக்குப்பணிவிடைசெய்து கொண்டு மிகுந்த கஷ்டத்தோடு வஸித்துவந்தாள். அவ்வாறு ஸைரந்தரியினுடைய அரண்மனையில் வஸிக்கின்ற பாஞ்சாலியானவள், அந்த ஸைரந்தரிதவியையும் அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளையும் ஸந்தோஷமடையும்படி செய்தாள். அந்த வர்ஷமானது அனேகமாகச் சென்றபோது, மஹாபலசாலியும் விராடனுக்கு ஸேனாபதியுமான கீசகனானவன் த்ரௌபதியைக்கண்டான். தேவகன்னிகைபோல விளங்குகின்றவளும் பூமியில்ஸஞ்சரிக்கின்ற தேவதைபோன்றவளுமான அவளைக்கண்டு கீசகன் மன்மதபாணங்களால் பீடிக்கப்பட்டு அவளை விரும்பினான். காமாக்னியினால் மிகவும் வாட்டப்பட்டவனும் ஸேனாபதியுமான அவன் ஸைரந்தரியிடம்வந்து அட்டஹாஸத்துடன் பின்வருமாறு வசனிக்கலானான். 'இந்த விராடனுடைய அரண்மனையில் மங்களமுள்ளவளான இந்த ராஜஸ்திரீ இதற்குமுன் என்னால் ஒருபொழுதும் பார்க்கப்பட்டதில்லை. நல்ல வாஸனையுடன் உண்டாக்கப்பட்ட கள்ளானது மதிமயக்கத்தை உண்டுபண்ணுவதுபோல இந்தப்பெண் ரூபத்தினால் எனக்கு அதிக மதிமயக்கத்தை உண்டுபண்ணுகிறாள். ஓ! மங்களமுள்ளவளே! தேவதையினுடைய ரூபம்போன்ற ரூபமுடையவளும் மனத்துக்கு இன்பமுள்ளவளுமான இவள் யார்? மங்களஸ்வரூபியே! இவள் எவனைச்சார்ந்தவள்? எவ்விடமிருந்து இங்கு வந்திருக்கின்றாள்? எனக்குச்சொல். என்னை மனங்கலங்கச்செய்து தன்வசமாக்கிக்கொள்ளுகிறாள். இவ்விஷயத்தில் வேறுமருந்து இருப்பதாக நான் எண்ணவில்லை. ஆச்சர்யம்! மங்களமுள்ளவளான உன்னுடைய இந்த வேலைக்காரியானவள் புதியரூபமுடையவளாக எனக்குத்தோன்றுகிறாள். இவள் நிலைமைக்குத்தகாததானதொழிலையன்றோ உன்னிடத்தில் செய்துவருகிறாள்? இவள் என்னையும் என்னிடத்திலுள்ள பொருள்களையும் ஆளட்டும். அதிகமானயானைகளும் குதிரைகளும் ரதங்களுமுள்ளதும் மஹிமையுள்ள ஜனங்க-

ளால் நிறைந்ததும் ஐஸ்வர்யமுள்ளதும் பற்பலவிதமான பான போஜனங்களுடையதும் மனத்துக்கு இன்பமானதும் பொன்மயமான நானவித பூஷணங்களுள்ளதும் பெரிதுமான என்னுடைய வீட்டை இவள் விளங்கச் செய்யட்டும்' என்றான். பிறகு, கீசகன், ஸுதேஷ்ணாதேவியினிடத்தில் விடைபெற்று, ராஜபுத்ரியான திரௌபதியினிடம் வந்து, காட்டில் ஒரு நரியானது பெண் சிங்கக்குட்டியைப் பார்த்துப் பேசுவதுபோல, அப்பொழுது அவளை நல்வார்த்தைகளால் மனச் சமாதானமடையச் செய்து கொண்டு, பின்வருமாறு சொல்லலானான்.

'கல்யாணி! நீ யார்? எவனைச் சார்ந்தவள்? சிறந்த முகமுள்ளவளே! நீ எவ்விடமிருந்து விராடநகரத்தை வந்தடைந்தாய்? மங்களமுள்ளவளே! உண்மையை உரைப்பாய். உன்னுடைய ரூபமானது சிறந்தது; அவ்வாறே காந்தியும் சிறப்புள்ளது; மென்மைத்தன்மையும் ஸ்ரேஷ்ட்டமானது; உன்னுடைய அழுக்கற்ற முகமானது காந்தியினால் சந்திரன்போல விளங்குகிறது. அழகிய புருவங்களையுடையவளே! உன்னுடைய இருகண்களும், அதிக விஸ்தாரமுள்ளவைகளும் தாமரைப்பூவிதழ்களுக்கொப்பானவைகளும் மங்களகரங்களுமாயிருக்கின்றன. அழகிய எல்லா அங்கங்களுமுள்ளவளே! உன்னுடைய வசனமானது கோகிலத்தினுடைய சப்தத்துக்கு ஒப்பாயிருக்கின்றது. அழகிய இடையையுடையவளே! இகழத்தகாதவளே! உன்னைப்போன்ற இவ்விதரூபமுள்ள வேறொருஸ்திரீயைப் பூமண்டலத்தில் நான் இதற்குமுன் பார்த்ததில்லை. அழகிய இடையையுடையவளே! நீ யார்? தாமரையை வாஸஸ்தானமாகக்கொண்ட மஹாலக்ஷ்மியோ? நீ ஐஸ்வர்யாபிமானி தேவதையோ? ஹ்ரீயோ? ஸ்ரீயோ? கீர்த்தியோ? அல்லது காந்தியோ? சிறந்த முகமுள்ளவளே! இவர்களுள் நீ யார்? நீ மன்மதனுடைய அங்கத்தில் விளையாடுகின்றவளும் அதிக ரூபமுள்ளவளுமான ரதிதேவியோ? அழகிய புருவங்களையுடையவளே! சந்திரனுடைய சிறந்த ஒளிபோல நீ அதிகமாக விளங்குகிறாய். நிலவுபோல மனத்துக்கு ஆஹ்லாதகரமான கொஞ்சம் மலர்த்தப்பட்டிருக்கிற இமைமயிர்களுடன்கூடியதும் மேலும் மங்களகரமானதும் திவ்யமான கிரணங்களால் சூழப்பட்டதும் சிறந்த காந்தியினால் மனத்துக்கின்பமாயிருக்கின்றதும் ஒப்பற்ற ஒளியுள்ளதுமான உன்னுடைய முகசந்திரனைக்கண்டு இவ்வுலகமனைத்திலும் எந்த மனிதன்தான் காமனுக்கு வசப்படாமலிருப்பான்? அழகிய புருவங்களையுடையவளே! உன்னுடைய இரண்டு கொங்கைகளும், ஹாரத்தை அணிவதற்குத் தகுந்தவைகளும் மிக்க மங்

கள்கரங்களும் அழகியவைகளும் காந்தியுள்ளவைகளும் பருத்தவை களும் வட்டமானவைகளும் இடைவெளியற்றவைகளுமாயிருக்கின் றன. அழகிய சிரிப்புள்ளவளே! தாமரைமொட்டுக்கள் போன்ற உன்னுடைய இரண்டுஸ்தனங்களும் மன்மதனுடைய கொறடாக் கள்போல என்னைத் துன்பத்துக்கு ஆளாக்குகின்றன. மெல்லிய இடையை யுடையவளே! உன்னுடைய இந்த இடையானது (மூன்று) மடிப்பினல் அழகியதும் ஸ்தனபாரத்தினல் அதிகமாக வளைக்கப்பட்டதும் நுனிக்கையினல் பிடித்து அளக்கத்தக்கதுமா யிருக்கிறது. கோபமுள்ளவளே! நதியிலுள்ள மணற்குன்றுக்கு ஒப்பான உன்னுடைய அழகிய ஜகனத்தைக்கண்டே அஸாத்ய மான காமரோயானது என்னைக்கவருகிறது. உன்னுடன்சேர்க்கை பெறுவதிலுள்ள எண்ணத்தினல் வளர்கின்ற இந்தக் காமாக்னி யானது தையில்லாமல் காட்டுத்தீப்போல ஜ்வலித்துக்கொண்டு என்னை எரிக்கின்றது. உத்தமமான இடையையுடையவளே! (என்னிடத்தில்) ஜ்வலிக்கின்ற காமத்தீயை உன்னுடைய தேஹத் தைக் கொடுப்பதாகிற மழையுடன்கூடின உன்சேர்க்கையாகிற மேகத்தினல் தணித்துவிடு. சந்திரனுக்கொப்பான முகத்தை யுடையவளே! கரியகடைக்கண்களையுடையவளே! என் மனத்துக்கு 1 உன்மாதத்தை உண்டுபண்ணுகின்றவைகளும் உன்னிடம் சேரு வதிலுள்ள ஆசையினல் தீட்டப்பட்டவைகளும் வேகமுள்ளவை களுமான மன்மதனுடைய பாணக்கூட்டங்கள் என்னுடைய இந்த மனத்தைப் பிளந்து உட்செல்லுகின்றவைகளும் தையற்றவை களும் வேகமுள்ளவைகளும் உக்ரமும் அதிபயங்கரமும் அளவில் லாத உன்மாதத்தினுடைய தொடக்கத்துக்குக் காரணமும் எனக்கு ப்ரீதியையும் சித்தப்ரமத்தையும் உண்டுபண்ணுகின்ற வைகளுமாயிருக்கின்றன. நீ இப்பொழுது உன்தேஹத்தை எனக் குக் கொடுப்பதினலும் ஸம்போகங்களாலும் என்னை (இந்த ஆபத் தினின்று) கரையேற்றுவதற்குத் தகுந்தவள். விலாஸங்களை யுடையவளே! விசித்ரமான மாலைகளை அணிந்தவளும் உடைகளைத் தரித்தவளும் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வளுமாகி என்னுடன்சேர்ந்து வேண்டியவரையில் காமஸுகத்தை அனுபவி. செருக்கியநடையுள்ளவளே! ஸுகத்தை அனுபவிப் பதற்கே தகுந்தவளான நீ ஸுகத்தை இழந்து இவ்விடத்தில் கஷ்டத்துடன் வஸிப்பதற்குத் தகுந்தவளல்லை. என்னிடத்தி னின்று நீ சிறந்தஸுகத்தை அடை. ருசியுள்ளவைகளும் அம்ரு தம் போன்றவைகளும் பற்பலவகைப்பட்டவைகளும் மனிஜ்ஞங்

1 சித்தப்ரமம்.

களுமான குடிக்கத்தக்க வஸ்துக்களைக் குடிக்கின்றவளும் ஸுக மாக ரமிக்கின்றவளுமாயிருந்து பற்பலவிதமான போகோபசாரங் களையும் நிகரற்றஸௌபாக்யத்தையும் அனுபவி. மஹாபாக்ய முள்ளவளே! சிறந்ததும் மங்களகரமுமான போகங்களோடு பானம்பண்ணக் கூடியதைக் குடி. தோஷமற்றவளே! கோபமுள் ளவளே! ஸ்ரேஷ்டமான இந்த உன்னுடைய ரூபமானது நாயக னால் அனுபவிக்கப்படாமலிருப்பதனல் இப்பொழுது பயனற்ற தாயிருக்கிறது. ஸுந்தரி! மங்களஸ்வரூபிணியும் சிறந்தவளுமான நீ, கூட்டிக்கொள்ளப்படாத உத்தமமும் சுபமுமான பூமாலை போல விளங்காமலிருக்கிறாய். அழகியசிரிப்புடையவளே! எனக்கு இதற்குமுன்னுள்ளவர்களான மனைவிகளை விட்டுவிடுகிறேன். அவர் கள் உனக்கு அடிமையாகட்டும். ஸுந்தரி! நானும் உனக்கு அடிமைபோலிருக்கிறேன். உத்தமமான முகமுள்ளவளே! நான் எப்பொழுதும் உனக்கு வசப்பட்டவனாக இருப்பேன்' என்று கூறினன்.

பதினேழாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதியானவள் தன்மீது ஆசைவைத்த கீசகனைக் கடுஞ்சொற்களால் மறுத்தது.)

துராத்மாவான கீசகனல் இவ்வாறு சொல்லப்பட்டவளும் தோஷமற்றஅங்கங்களுள்ளவளும் ஸைரந்த்ரிவேஷத்தைத் தரித்த வளுமான திரௌபதியானவள், அந்தக் கீசகனைப்பார்த்து, 'ஏ! ஸூதபுத்ரரே! வேண்டத்தகாதவளும் ஹீனஜாதியில் பிறந்தவ ளும் வேலைக்காரியும் அருவருக்கத்தக்கவளும் கூந்தல் பின்னுகிற வளுமான என்னை நீர் ஆசைப்படுகிறீர். நான் பிறருடைய மனை வியாயிருக்கிறேன். உமக்கு மங்களமுண்டாகும். இது உமக்குத் தகாது. மனிதர்களுக்கு மனைவிகள் அன்புக்கு விஷயமாயிருப் பார்கள். தர்மத்தை நன்றாக ஆலோசித்துப்பாரும். பரதாரங் களிடத்தில் புத்தியானது ஒருபொழுதும் எவ்விதத்தாலும் உம் மால் செலுத்தத்தக்கதன்று. அகார்யத்தை விட்டுவிடுவதுதான் ஸத்புருஷர்களுடைய விரதம். வீணான பராசையுள்ளவனும் பாவத்தில் மனத்தைச் செலுத்தியவனும் புத்திமயக்கத்தை அடைந்தவனுமான மனிதன் கோரமான அபகீர்த்தியையும் மிக்க பயத்தையும் அடைவான்' என்று மறுமொழி கூறினள். ஸைரந்

த்ரியிலுல் இங்ஙனம் சொல்லப்பட்டவனும் காம்த்தால் மயக்க முற்றவனும் மிக்ககெட்டபுத்தியுடையவனும் பொறிகளை அடக் காதவனுமான அந்தக் கீசகன், பரதாரங்களைத் தீண்டும் விஷயத் தில் ஸம்பவிக்கக்கூடியவைகளும் அனேகங்களும் உயிரைப் போக் கக் கூடியவைகளும் எல்லா உலகத்தாராலும் நிந்திக்கத்தக்கவை களுமான தோஷங்களை அறிந்தவனுயிருந்தும் மிகவும் கெட்டனெண் ணங்கொண்டு த்ரௌபதியைப்பார்த்து, 'ப்ரேஷ்டமான இடை யையுடையவளே! சிறந்த முகமுடையவளே! அழகான சிரிப்பை யுடையவளே! உன்னிமித்தமாக மன்மதாவேசம் கொண்டிருக் கின்ற என்னை இவ்வாறு நிராகரிப்பதற்கு நீ தகுந்தவளல்லை. பயந்தவளே! கறுத்த கடைக்கண்களையுடையவளே! நீ, உன் வசப்பட்டவனும் பிரியமான வார்த்தையைச் சொல்லுகின்றவ னுமான என்னை நிராகரித்துவிட்டு, பிறகு, நிச்சயமாகப் பச்சாத்தா பத்தை அடையப்போகிறுய். அழகிய புருவங்களையுடையவளே! அழகிய இடையையுடையவளே! நான் இந்தராஜ்யம் அனைத்துக் கும் பிரபுவும் (ஜனங்களை) அடக்கி ஆள்பவனும் புவியில் வீர்யத் தில் ஒப்பற்றவனுமாயிருக்கிறேன். ரூபத்திலும் யௌவனத்தி லும் ஸௌபாக்யத்திலும் மங்களகரமானவைகளும் சிறந்த வைகளுமாயிருக்கின்ற போகங்களாலும் இப்பூமண்டலத்தில் எனக்குநிகரானமனிதன் வேறொருவனுமில்லை. கல்யாணி! விரும் பக்கூடிய எல்லாப்பொருள்களாலும் நிறைந்தவைகளும் நிகரில் லாதவைகளுமான போகங்கள் அனுபவிக்கத்தக்கனவாயிருக்கும் போது என் அடிமைத்தொழில்செய்வதில் பற்றுள்ளவளாயிருக் கிறுய்? சுபமான முகத்தையுடையவளே! என்னல் இந்தராஜ் யம் உனக்குக் கொடுக்கப்பட்டது. நீயே தலைவி. ப்ரேஷ்டமான இடையுடையவளே! என்னை நீ ப்ரீதியுடன் அடைவாய்; ப்ரேஷ்ட மான போகங்களை அனுபவிப்பாயாக' என்றுன். கீசகன் இவ் வாறு அமங்களமான வார்த்தைசொல்லியதைக் கேட்ட அந்தப் பதிவ்ரதையான திரௌபதியானவள், அவனுடைய அவ்விதமான வார்த்தையை நிந்தித்து அவனைப்பார்த்துப் பின்வருமாறு உரைக் கலானுள்.

'ஓ! ஸூத புத்ர! மதிமயக்கங்கொள்ளாதே; இப் பொழுது உயிரைவிடாதே. நீ என்னைக் கந்தர்வ ரூப முள்ள ஐந்துபுருஷர்களால் எப்பொழுதும் ரக்ஷிக்கப்பட்டவ ளாக அறிந்துகொள். நான் உன்னல் அடையத்தக்கவளல் லேன். எனக்குக் கந்தர்வர்கள் பிராணநாதர்கள். அந்தக் கந் தர்வர்கள் கோபங்கொண்டால் உன்னைக் கொல்லுவார்கள்.

இவ்விதம் செய்யாதே; வீணுகநாசமடையாதே. நீ புருஷர்களாலே நடப்பதற்கு அரிய வழியில் செல்வதற்கு விரும்புகிறாய். மந்த புத்தியுள்ள நீ, புத்தியில்லாத ஒருசிறுவன் நதியினுடைய ஒரு கரையினின்று மற்றொருகரையில் தாண்ட விரும்புவதுபோல இக் கார்யத்தைச் செய்ய விரும்புகிறாய். நீ (இவ்விதமான கெட்டகார் யத்தைச் செய்துவிட்டுப்) பூமிக்குள் நுழைந்தாலும் ஆகாயத்தில் பறந்தாலும் ஸமுத்திரத்தின் அக்கரைக்கு ஓடினாலும் அந்தக் கந் தர்வர்களிடமிருந்து உனக்கு விடுதலை உண்டாகாது. ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றவர்களான தேவகுமாரர்கள் பகைவர்களை நாசஞ் செய்யும் தன்மையுடையவர்கள். கீசக! நீ கோபாலில் பீடிக்கப் பட்ட ஒருமனிதன், [1] காளராத்ரியை விரும்புவதுபோல என்னை இப்பொழுது பிடிவாதத்துடன் ஏன் வேண்டுகிறாய்? தாயினுடைய மடியில் படுத்திருக்கும் சிசுவானது சந்திரனைப் பிடிக்கவேண்டு மென்று விரும்புவதுபோல, நீ ஏன் என்னைக்கைப்பற்ற விரும்பு கிறாய்? கீசக! அவர்களுடைய பிராணநாயகியான என்னைவேண்டு கிற உனக்குப் பூமண்டலத்திலாவது அல்லது ஸ்வர்க்கத்துக்குப் போன இடத்திலாவது ரக்ஷிக்கிறமனிதன் ஒருவனும் எற்படமாட் டான். சுபத்தைவிரும்பும் புத்தியானது உனக்கு இல்லை. (பரதா ரத்தினிடம் பற்றில்லாமலிருப்பதென்னும்) அந்தச்சுபமானபுத்தி யிருந்தால் உனக்கு உயிர்வாழ்தல் கூடும்' என்றாள்.

பதினேட்டாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(கீசகன் திரௌபதியைத் தன்னிடம் அனுப்பும்படி ஸுதேஷ்ணை யை வேண்டியதும், ஸுதேஷ்ணை திரௌபதியைக் கபடமாகக் கீசகனிடம் அனுப்பியதும்.)

பாஞ்சாலியினால் நிராகரிக்கப்பட்டவனும் காமத்தால் மோகங்கொண்டவனுமான கீசகன் ராஜமாளிகையில் நுழைந்து தன்ஸஹோதரியினுடைய எதிரில்நின்றான். எல்லையைக்கடந்த தும் கோரமுள்ளதுமான காமத்தினால் கவரப்பட்டவனும் காற்றி னால் அலைக்கப்பட்ட கடல்போல மோஹத்தினால்கெடுக்கப்பட்ட வனும் அதிகதுக்கத்தால் பீடிக்கப்பட்டவனுமான அந்தக்கீசகன், அழகியகூந்தல் நுனியையுடையவளும் பிரியஸஹோதரியுமான ஸுதேஷ்ணையைப்பார்த்துத் தன்தலையில் இருகைகளையும் குவித்

---

1 பிரளயகாலத்து இரவு.

துக்கொண்டு அவளுடைய இரண்டுகால்களிலும் (வணங்கி) அடிக்கடி பெருமூச்சுவிட்டுக்கொண்டு பிரகாசமில்லாததும் ம்ருதுவுமான நல்வசனத்தை அடிக்கடி குரல் தளர்ச்சியடையச் சொல்லலானன். 'ஸுதேதஷ்ணையே! ஸைரந்த்ரியானவள் விருப்பத்துடன் என்னைச்சேரத்தக்க உபாயத்தைச் சீக்கிரம்செய். நான் இப்பொழுது உயிரைவிடாமலிருக்கவேண்டும். தோஷமற்ற அங்கங்களுள்ள இந்த ஸைரந்த்ரியானவள் தெளிந்தமனத்துடனே இனியாவது என்னை விரும்பாமல்போவாளானால் நான் யமனுடையவீட்டை அடைவேன்' என்றுசொன்னன்.

கறுத்தகண்களையுடைய ஸுதேதஷ்ணை ப்ரியஸஹோதரனை அந்தக்கீசகனைக் கட்டிக்கொண்டு பிராதாவினுடைய உயிரைக் காப்பதற்காக அவனுக்குத் தேறுதல்சொல்லி, 'கீசக! அழகிய இடையுடையவளான அந்த ஸைரந்த்ரி என்னைச் சரணமடைந்திருக்கிறாள். நான் அவளுக்கு அபயம் கொடுத்திருக்கிறேன். அவள் நல்லொழுக்கமுள்ளவள். உனக்கு க்ஷேமமுண்டு. நான் அவளை இப்பொழுது (இவ்விதம்) சொல்வதற்குப் பொறேன். அவளை பிறரால் கெட்ட எண்ணத்தோடு ஸ்பர்சிப்பதற்கு முடியாதவள். அவளை ஐந்துகந்தர்வர்கள் ரக்ஷிக்கிறார்களாம்; ஸந்தோஷப்படுத்துகிறார்களாம். அவள் முதலில் (என்னுடன்) சேர்க்கை பெறுங்காலத்தில் இவ்விதமாகச் சொல்லியிருக்கிறாள். யானைத்துதிக்கைபோன்ற தொடைகளையுடைய அந்த ஸைரந்த்ரி என்னிடம் உண்மையாக அவ்வாறு சொல்லியிருக்கிறாள். மஹாத்மாக்களான அந்தக் கந்தர்வர்கள் கோபித்துக்கொள்வார்களானால் உன்னுடைய பிராணனை நாசஞ்செய்வார்களல்லவோ? ராஜாவும் இவ்விடத்தில் இவளைப்பார்த்து மோஹமடைந்தார். அரசர் என்னால் உண்மைமொழிகளைச்சொல்லி வேண்டிக்கொள்ளப்பட்டார். அவரும் இவளை எப்பொழுதும் பார்த்து மனத்தினால்மாத்திரம் புகழ்கிறார். உயிரைப்போக்குகின்றவர்களும் சிறந்தவர்களுமான கந்தர்வர்களுடைய பயத்தினால் அரசர் மனத்தினாலும் இவளை நினைக்கிறதில்லை. மிக்க மேன்மைதரியமுள்ளவர்களும் கருடனுக்கும் வாயுவுக்குமொப்பான தேஜஸ்ஸுள்ளவர்களுமான அந்தக் கந்தர்வர்கள் கோபித்தால் ஸூர்யன் யுகாந்தகாலங்களில் மூவுலகங்களையும் கொளுத்துவதுபோலக் கொளுத்துவார்கள். ஸைரந்த்ரியினால் அந்தக்கந்தர்வர்களுடைய இந்த மிக்கபலமானது என்னிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ரஹஸ்யமான இந்த வரலாற்றை நான் பந்துஹாகையால் நேசத்தினால் உன்னிடத்திலும்

சொல்லுகிறேன். எவ்விதத்தாலும் அடைய்யத்தகாத கெட்டகதி யை நீ அடையவேண்டாம். பலசாலிகளான அந்தக்கந்தர்வர்கள் உன்னுடையகுலத்துக்கும் தனத்துக்கும்கெடுதியை உண்டுபண்ணு வார்கள். ஆதலால், உனக்கு ப்ராணன்மீது விருப்பமிருந்தால் இவளிடத்தில் மனத்தைச் செலுத்தாதே. எனக்கு ப்ரியத்தைச் செய்யவிரும்பினால் இவளை நினையாதே. இவளிடம் நீ செல்லாதே' என்று கூறினாள். இவ்வாறு சொல்லப்பட்டவனும் கெட்டஎண்ண முடையவனுமான கீசகன் ஸைரந்த்ரியைப் பார்த்து, '(ஏ! ஸைரந்த்ரியே!) நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் கந்தர்வர்களை நான் ஒருவனுகவே கொல் வேன். ஐந்துகந்தர்வர்களைப்பற்றி என்ன ஆலோசனை இருக்கிறது? ஸ்திரீகளுக்குரிய முக்யமான ரஹஸ்யத்தை நீ அறியவில்லை. புத்ரனு னலும் பேரனுனலும் மனவுறுதியுள்ள ஸஹோதரனுனலும் ஏகாந் தத்தில் பலவிதவாஸனைகளால் அலங்கரிக்கப்பட்ட ஒருமனிதனைப் பார்த்தால் பதிவ்ரதைகளாயிருந்தாலும் ஸ்திரீகளுடைய [1] மன மானது வேறுபடுகின்றதென்று நாம் கேட்டிருக்கிறோம். (ஆத லால்,) சந்தனத்தால் பூசப்பட்ட அங்கங்களுடையவனும் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவனுமான என்னைப் பார் த்து ஸைரந்த்ரியானவள் மன்மதனுல்பீடிக்கப்பட்டு என்வசப்படு வாள். நான் உயிரோடிருப்பது உனக்கு விருப்பமானுல் அப்படிப் பட்ட நீ இவளைப்பார்த்து இவ்விஷயத்தைச்சொல்' என்று கேட் டுக்கொண்டான். இவ்வாறு சொல்லப்பட்ட ஸைரந்த்ரியான வள், சோகத்தால் மிகப்பீடிக்கப்பட்டும் அவனுடைய துர்த்தசை யைக்கண்டு மிகுந்த மனவருத்தமடைந்தும், 'இவன் பாதாளத்தில் விழுகிறான்; பிதற்றிக்கொண்டு வடவாமுகாக்னியில் விழுகிறான். அந்தோ! துக்கம்! அந்தோ! கஷ்டம்! அந்தோ! பாபம்!' என்று அழுதாள். (மறுபடியும் ஸைரந்த்ரியானவள், கீசகனைப் பார்த்து) 'உன்னிமித்தமாக என்னுடைய ஸஹோதரர்களும் ஸ்நேஹிதர்களும் நசிக்கப்போகிறார்கள். நீ இவ்வாறு துன்பப் படுங்காலத்தில் என்னால் எது செய்யத்தக்கது? நீ நன்மையை அறிகிறாயில்லை; காமத்தையே அனுஸரிக்கிறாய். பாவி! இவ்வாறு காமத்தினால் புத்திமயக்கம்கொண்டிருப்பதால் நிச்சயம் நீ ஆயுள் இழந்தவனே. மனிதர்களுள் இழிவானவனே! செய்யத்தகாத பாவத்தில் என்னை நீ ஏவுகிறாய். மேலும், 'ஒருவன் பாவத்தைச் செய்கிறான். அதனால் அவனுடைய ஜாதியே கெடுக்கப்படுகிறது.'

---

1 மூலத்தில் வேறுவிதமாயிருக்கிறது.

என்று நிபுணர்களான உத்தமபுருஷர்களால் முந்தியே இவ்விஷயம் கூறப்பட்டிருக்கிறது. நீ யமதர்ம்ராஜனுடைய தேசத்தை அடைந்துவிட்டாய். இதில் ஐயமில்லை. தோஷமற்ற இந்த உறவினர்களையெல்லாம் நாசஞ்செய்யப்போகிறாய். விஷயங்களை அறிந்தவளான நான், பிராதாவினிடத்திலுள்ள அன்பினால் (தெரியாதவள்போல) செய்யப்போகிறேனென்னும் இதுதான் எனக்குமிகுந்த துக்ககரமான விஷயம். குலம் நாசத்தையடைந்த பிறகு, நீ ஸந்தோஷமுள்ளவனாயிரு. நீ இவ்விடத்தினின்று விரைவாக மங்களகரமான உன்னுடைய வீட்டையே அடை. ஏதோ ஒரு கார்யத்தை உத்தேசித்து மத்யத்தையும் அன்னத்தையும் ஆயத்தஞ்செய். அன்னமும் மத்யமும் ஸித்தஞ் செய்யப்பட்டவுடன் எனக்கு ஒருவனை அனுப்பு. மத்யத்தையும் அன்னத்தையுங்கொண்டுவருவதற்காக அவளை நான் உன்னிடம் அனுப்புவேன். பிறகு, உன்னிடம் அனுப்பப்பட்டவளும் தடையற்றவளுமான அவளை ஜனங்களில்லாத இடத்தில் உன் நல்வார்த்தையைப் பொறுப்பாளாகுல் கிரமப்படி நன்மொழிகளால் அவள் மனத்துக்கு ஸமாதானத்தை உண்டுபண்ணு. இவையனைத்தும் தற்காலத்தில் செய்யத்தக்கவை. இவ்விஷயத்தில் இனி ஸம்பவிக்கக்கூடியதைத் தொடர்ச்சியாக ஆலோசனை செய்' என்று சொன்னாள்.

ஸுதேஷ்ணையினால் இவ்வாறு சொல்லப்பட்ட கீசகன், காலனால் தூண்டப்பட்டு விரைவாக ராஜக்ருஹத்திலிருந்து தன் வீடு நோக்கிச்சென்றான்; தன்வீட்டுக்கு வந்துசேர்ந்து மத்யத்தையும் நேர்த்தியான அன்னத்தையும் வெள்ளாடுசெம்மறியாட்டிறைச்சிகளையும் பலவிதமான மிருகங்களின் மாம்ஸங்களையும் மிகுதியாக நன்கு பக்குவஞ் செய்வித்தான். கீசகன், அப்பொழுது ஸமர்த்தர்களான சமையற்காரர்களைக்கொண்டு பற்பலவிதங்களும் ஆனைகங்களும் (ருசியினால்) ஒன்றுக்கொன்று மாறுபட்டவைகளுமான பக்ஷணங்களையும் அன்னபானங்களோடு நன்றாகப் பக்வம் செய்வித்தான். மூடாத்மாவான கீசகன், விரைவாகப் பசுப்போலக் காலபாசத்தினால் கழுத்தில் சுற்றப்பட்டு ஸமீபத்தில் வந்திருக்கின்ற மரணத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. சாராயம் வருவிக்கப்பெற்றும் உணவு நன்றாகப் பக்வம் செய்யப்பட்டும் ஸஜ்ஜமானவுடன், கீசகன் மறுபடியும் ஸுதேஷ்ணையிடம் வந்து, 'ஸுதேஷ்ணையே! பலவிதமான மத்யமும் மாம்ஸமும் பலவிதமான பக்ஷணங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஸைரந்த்ரியானவள் ஏதாவது ஒரு கார்யத்தினால் எவ்வாறு என் வீட்டுக்கு வருவ

ளோ அவ்வாறு அவளிடத்தில் சொல். இப்பொழுது எனக்கு விருப்பத்தைச் செய்வதற்காக நீ அதிக வேகத்தைப் பாராட்டு. நான், 'எனக்கு ஸைரந்த்ரியினுடைய சேர்க்கையையாவது மரணத்தையாவது கொடும்' என்று விருஷபக்கொடியையுடையவரான தேவரைச் சரணமடைகிறேன்' என்னும் வசனத்தைச் சொன்னேன். அந்த ஸுதேஷ்ணையானவள், அவனைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, '(கீசக!) நீ உன்னுடைய வீட்டுக்குத் திரும்பிப்போ. இதோ நானும் ஸைரந்த்ரியை மத்யத்தை வாங்கி வருவதற்காக விரைவாகக் கட்டளையிடுகிறேன்' என்றாள். இவ்வாறு சொல்லப்பட்டவனும் பாவத்தில் மனமுள்ளவனும் அதிக வேகமுள்ளவனுமான கீசகன் ஸைரந்த்ரியை அடைந்திருக்கிற மனத்தையுடையவனாகவே மறுபடியும் விரைவாகத் தன் வீடு போய்ச்சேர்ந்தான். அவன் விரைவாகத் தன் வீடுபோய்ச்சேர்ந்தானென்பதை அறிந்து, ஸுதேஷ்ணையானவள், பிறகு, ஸைரந்த்ரியை அழைத்து, 'ஸைரந்த்ரி! என்னுடைய ப்ரீதிக்காக நீ கீசகன் வீட்டுக்குப்போ; அழகிய இடையுடையவளே! விலாஸமுடையவளே! எனக்குத் தாஹமாயிருக்கிறது. மத்யத்தை வாங்கிவா' என்ற வாக்யத்தைச் சொன்னாள். ஸுதேஷ்ணையினால் இவ்வாறு சொல்லப்பட்ட ராஜகுமாரியான அந்த த்ரௌபதியானவள் சோகத்தினால் மிகவும்வாட்டமுற்றுப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, '(அம்மா!) நான் அங்கே போகமாட்டேன். கல்யாணி! காமத்தில் மனத்தைச் செலுத்தினவனான ஸுதபுத்ரன் என்னை விரும்புகிறானல்லனே? ராஜபுத்ரி! நான் அவன்வீட்டுக்குப் போகமாட்டேன். அம்மா! அவன் வெட்கமில்லாமலிருக்கிறானென்பதை நீயே அறிந்திருக்கிறாய். மங்களமுள்ளவளே! 'நான் இங்கு வஸிக்குங்காலத்தில் வேறுபுருஷனை அடையமாட்டேன்' என்கிற சபதமானது (உன்னிடம்) முதலில் வந்துசேருங்காலத்தில் பண்ணப்பட்டிருக்கிறது. அழகிய கூந்தல் நுனியையுடையவளே! கீசகனோடன்; மன்மதனால் கர்வமுள்ளவன். அவன் இங்கு இருக்கும்பொழுதே என்னைக்கண்டு அவமதிக்க முயல்கிறான். டாந்துக்களில்லாமல் அவன் இருப்பிடத்தை அடைந்திருக்கின்ற என்னை எவ்வாறு ஸகிப்பான்? ஏ! ராஜபுத்ரி! அனேக வேலைக்காரர்கள் உனக்கு ஸ்வாதீனர்களாயிருக்கின்றார்கள். கைகேயி! வேறொருத்தியை அனுப்பு. நீ இந்தஸமயத்தில் என்னை ரக்ஷிக்கவேண்டும். தேவி! பயத்தினால் நடுக்கமுற்றநான் கீசகனுடையஇருப்பிடத்தை அணுகமாட்டேன்; செய்ய மிகக்கடினமான வேறு எந்தஎந்தக் கார்யமிருந்தாலும் அதை அதை நான் செய்கிறேன்' என்று

கேட்டுக்கொண்டாள். பாஞ்சாலியிஞல் இவ்வாறுசொல்லப்பட்ட வளும் கேகயராஜகுமாரியுமான விராடனுடையபத்னியானவள், தெய்வவசத்தால் கோபங்கொண்டு மறுபடியும் அவளைப்பார்த்து, 'நான் உன்னை வற்புறுத்துகிறேன். நீயே கீசகனிடம்போ; உன் னைப்போல வேறுவேலைக்காரி எனக்கு இல்லை. நீயே மிகவும்விரை வாகச் செல். அவஸ்யம் நீயே போக வேண்டும்; எதற்காக என் ஜோடு வாதாடுகிறாய்? சீக்ரம்போ; விரைவுபண்ணு; எனக்கு ப்ரிய மானகார்யத்தைச்செய். என்பிராதாவானவன் இவ்விதஸ்வபாவ முள்ளவனல்லன். நீ என் ஸந்தேஹப்படுகிறாய்?' என்றுசொல் லித் தனக்குள்ள பிரபுத்வத்திஞல் அவளைப் போகும்படி வலிந்து கட்டளையிட்டு, அவளிடத்தில், 'நல்ல வாஸனையுள்ளதும் நன்ருக இறக்கப்பட்டதுமானமத்யத்தைக் கொண்டுவா' என்று ஆஜ்ஞை செய்து, மூடியுள்ளதான ஒருபொற்பாத்ரத்தைக்கொடுத்தாள். அந்த த்ருபதகுமாரியானவள் ஸந்தேஹமடைந்து நடுக்கமுற்று அழுதுகொண்டு தேவதைகளுக்கும் தன்மாமனர்களுக்கும் நமஸ் காரஞ்செய்து, 'நான் பார்த்தர்களைத்தவிர வேறொரு புருஷனை யும் அறியாமலிருப்பது ஸத்யமாயிருந்தால் அந்த ஸத்யத்திஞல் கீசகன் என்னைக்கண்டு தனக்குவசப்படுத்தாமலிருக்கவேண்டும். நான் பாண்டுபுத்ரர்கள் ஐவர்களையும்தவிர வேறொருபுருஷனையும் அடையாமலிருப்பது ஸத்யமாஞல் அந்தஸத்யத்திஞல் கீசகன் என்னைக்கண்டு தன் வசப்படுத்தாமலிருக்கவேண்டும்' என்று இவ் விதம் கூறினுள்.

பத்தொன்பதாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதி ஸூர்யன்முதலானதேவர்களை ப்ரார்த்தித்ததும், கீசகன் அவளைவேண்டினதும், அவள்மறுத்ததும், அவன் அவளை உதைத்ததும், ஸூர்யனுல்அனுப்பப்பட்ட ராக்ஷஸன் கீசகனைக் கீழேதள்ளியதும், கீசகனைக்கொல்லநினைத்தபீமன் யுதிஷ்டிரால் தடுக்கப்பட்டதும்.)

அழகியஇடையுள்ள திரௌபதியானவள், தர்மராஜனையும் இந்திரனையும் ஸூர்யனையும் வாயுவையும் அச்வினீதேவர்களையும் குபேரனையும் வருணனையும் யமனையும் ருத்ரரையும் அக்னியையும் பகனையும் விஷ்ணுவையும் ஸுப்ரம்மண்யரையும் பூஷாவையும் ஸாவித்ரியுடன்கூடின ப்ரம்மதேவரையும் ஸ்தோத்ரஞ்செய்தாள். மான்குட்டியின் கண்போன்ற கண்ணையுடையவளும் அழகியஇடை

யையுடையவளும் தர்மத்தை அனுஷ்டிப்பவளும் மனுஷ்யபலத்தை இழந்தவளுமான - அந்தத்ரௌபதியானவள், அப்பொழுது ஒரு மூஹூர்த்தகாலம் ஸூர்யனை மந்திரங்களால் ஸ்தோத்ரம்செய்தாள். மெல்லிய இடையுடையவளான திரௌபதியினுடைய அந்த விருத்தாந்தமனைத்தையும் ஸூர்யன்தெரிந்துகொண்டான்; பிறகு, அவளைரக்ஷிப்பதற்காக ஒரு ராக்ஷஸனை மறைந்திருக்கும்படி ஏவினான். அப்பொழுது அந்தராக்ஷஸனும் புகழ்பெற்றவளான அந்தத்ரௌபதியை எல்லா நிலைமைகளிலும் விட்டு விலகாமலிருந்தான். அழகிய கூந்தல் நுனியையுடைய அந்த த்ரௌபதியானவள், அடிக்கடி விரைகின்றவளாகவும் பரவசையாகவும் காலவிளம்பம் செய்பவளாகவும் கீசகனுடைய வீட்டைக் குறித்துப் புறப்பட்டாள். கீசகன், பெண்மான்போலப்பயந்தவளும் (தனக்குமுன்) வருகின்றவளுமான அந்தக்ருஷ்ணையைக்கண்டு (நதியின்) கரையிலிருக்கிறவன் ஓடத்தைக்கண்டு எழுந்திருப்பதுபோல ஆஸனத்தினின்று விரைவாக எழுந்திருந்தான். காமத்தில்விருத்தியடைந்தவனும் துராத்மாவும் தன்னைத்தான் புகழ்ந்துகொள்பவனும் மூடனுமான அந்தக் கீசகன், தன்வீட்டில் வந்திருக்கின்றவளும் தாமரைமலர்போன்ற கண்களையுடையவளுமான அந்தத்ரௌபதியைப் பார்த்து, ‘அழகியகூந்தல்நுனியையுடையவளே! உனக்கு நல்வரவா? இன்று இரவு எனக்கு நல்ல விடிவாகவிடிந்தது. சுபமுடையவளே! நெடுங்காலம்கழித்து என்னுடைய வீட்டிற்குத் தலைவியாக நீ வந்துசேர்ந்தாய். என்னிடத்தில் ப்ரீதியைப் பாராட்டு. என்னை உன்வசப்படுத்திக்கொள். உனக்காகவே என்னால் வித்தஞ்செய்யப்பட்டிருக்கின்ற போகங்களை நீ ஏற்றுக்கொள். முழுவதும் ரத்நமயமாயிருக்கிற மாலையையும் ஸ்வர்ணமயமான குண்டலங்களையும் ஆடைகளையும் சந்தனத்தையும் மாலையையும் வாஸனைப்புகையினால்சுத்தமாயிருக்கிற மத்யத்தையும் பெற்றுக்கொள். உனக்கு மங்களம். விருப்பப்படி விளையாடிக்கொண்டிரு. தாமரைமலர்போன்ற கண்களையுடையவளே! இனிய காட்சியையுடையவளே ப்ரீதியினால் என்மீது கருணைபுரிவாயாக. வெண்மையும் மென்மையுமாயிருக்கிற உறை உள்ள சயனம் நன்றாக விரிக்கப்பட்டிருக்கிறது. இதன்மீதேறி என்னோடு சேர்ந்து இவ்விதமான உத்தம மத்யத்தைக்குடி. அகன்ற கண்களையுடையவளே! என்னை அன்புடன் அடை. நான் உனக்குத் தகுந்த கணவனையிருக்கிறேன். உத்தமமான [1] அங்கத்தையுடையவளே! மஹாமேருவை ஸூர்யனுடைய ஒளி அடைவது

---

1 மூலம் வேறு.

போல நீ என்னை வந்து அடை' என்றான். அந்த வீட்டில் வந்திருக்கின்றவளும் கீசகனால் இவ்வாறு உரைக்கப்பட்டவளும் உத்தம ஸௌந்தர்யமுள்ளவளுமான அந்தத்ரௌபதியானவள் கெட்ட ஒழுக்கமுள்ளவனை அந்தக் கீசகனைப்பார்த்து, ('ஏ! கீசக!) இவ்விதமானவார்த்தையைச் சொல்வதற்கு நீ தகுந்தவனல்லை. நாய்மாம்ஸத்தைப் பக்ஷம்செய்து உண்பவனைபுலையனுல் பிராம்மணஸ்திரீ தொடத்தகாதவள்போல நான் உன்னால் தொடத்தக்கவளல்லேன். கெட்டபுத்தியுள்ளவனே! பிறர்மனைவியைப் புணருகின்றவர்களும் (உலகத்திலுள்ள) வரம்பைக்கடந்தவர்களும் புழுப்போல அசுபங்களுக்கு ஆதாரமானவர்களுமான அனேகமனிதர்கள் செல்லுகிறதும் யாரும் செல்லுதற்கு அரிதான வழியுள்ளதுமான நரகத்தை அடைவதற்கு விரும்புகிறாய். ஸைரந்த்ரிணியானவள் என்னை மத்யம் கொண்டுவருவதற்காக உன்னுடைய வீட்டுக்கு அனுப்பினாள். உன்னுடைய உடன்பிறந்தாள் தாஹித்திருக்கிறாள். (கொடுத்தால்) அவளுக்கு மத்யத்தைக் கொண்டுபோவேன். கேகய ராஜகுமாரியான ஸைரந்த்ரிணியானவள் தாகம்மேலிட்டு என்னை விரைவாக மத்யம்வாங்கிவரும்படி கட்டளையிட்டாள். ஸூதபுத்ர! ஆதலால், மத்யம் சீக்ரம் என்னிடம் கொடுக்கப்படலாம்; நான் போகிறேன்' என்று கூறினாள். கீசகன், 'கல்யாணி! ராஜபுத்ரியான (ஸைரந்த்ரிணிக்கு) இந்தமத்யத்தை வேறு ஸ்திரீகள் கொண்டுபோவார்கள். கல்யாணி! நீ எதற்காகச் செல்லவேண்டும்? எனக்காக நீ இங்கே வந்திருக்கிறாய்' என்று சொன்னான். ஸூதபுத்ரன் இவ்வாறு சொல்லிவிட்டு (த்ரௌபதியினுடைய) வலக்கையைப் பிடித்தான். அந்தத்ரௌபதியானவள் கையை உதறிக்கொண்டு பாத்ரத்தைப் பூமியில்போட்டுவிட்டு ராஜாவான யுதிஷ்டிரரிருக்கிற ஸபைபைச் சரணமடைவதற்காக ஓடிவந்தாள். விரைவாக ஓடுகின்ற அந்தப் பாஞ்சாலியை ஸூதபுத்ரனான கீசகன் தலைமயிரில் பிடித்துப் பூமியில்தள்ளி ஸபையிலுள்ள மஹாத்மாவான விராடராஜனும் மூத்தோர்களானபிராம்மணர்களும்க்ஷத்ரியர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே காலால் உதைத்தான். காலால் உதைக்கப்பட்ட அந்த த்ரௌபதியினுடைய முகத்தினின்று இரத்தம்பெருகியது. பாரதரே! பிறகு, ஸூர்யனால் ஏவப்பட்ட அந்தராக்ஷஸன் விரைவாகக் காற்றுவேகத்தினால் கீசகனைத் தூரத்தில் விலக்கித்தள்ளினான். ராக்ஷஸனுடைய பலத்தினால் விலக்கித் தள்ளப்பட்ட அந்தக்கீசகன் அப்பொழுது சுழற்சியடைந்து கைகால்அசைவற்று வேரோடு அறுத்துத்தள்ளப்பட்ட

மரம்போலப் பூமியில் விழுந்தான். அவனைக்கண்டு அந்தஸபையி லுள்ளவர்கள் நான்குபக்கத்திலும் கூக்குரலிட்டார்கள். அவர்கள், 'ஸுதபுத்ர! கீசக! நீ இளமைப்பருவத்திலிருப்பவளும் எளி மையுடையவளும் பந்துக்களை இழந்தவளுமான இந்தப்பெண்ணை ஏன் கொல்லுகிறாய்? இது தகாதகார்யம்' என்றும் சொன்னார் கள். அந்தஸபையில் பிராதாக்களான அந்தப்பார்த்தர்கள், அவ் வாறு கீசகனால் காலால் உதைக்கப்படுகின்ற கிருஷ்ணையைப் பார்த்துப்பொறுதவர்களாகார்கள். அவனைக்கண்டு பீமஸேனனுக் குக் கோபத்தால் கண்ணீர் பெருகியது; உஷ்ணமான பெருமூச்சு உண்டாயிற்று; இரண்டுகண்களும் மேலே தூக்கப்பட்ட இமைக ளுள்ளனவாயின. வெயர்வையுடையதும் பயங்கரமுமான புருவ நெறித்தலானது நெற்றியில் தோன்றியது. மிக்க மனைதரிய முள்ளபீமன் துராத்மாவான அந்தக் கீசகனைக் கொல்லவேண்டு மென்கிற எண்ணங்கொண்டு அப்போது கோபத்தால் பற்களால் பற்களைக் கடித்தான். மறுபடியும் கோபத்திலை தூண்டப்பட்டு ஆஸனத்தினின்று விரைவாக எழுந்திருந்து (கீசகனைக்கொல்லுவ தற்காக) நீண்ட ஒரு மரத்தையும் பார்த்து அரசனையும் பார்த் தான். அந்த யுதிஷ்டிரர், துராத்மாவான கீசகனுடைய வதத்தில் விருப்பமுற்ற அந்தப் பீமனை முகக்குறியினாலேயே தடுத்துவிட் டார். குந்திபுத்ரரும் ராஜாவுமானயுதிஷ்டிரர், கோபாவேசமுள்ள வனும் புத்திசாலியுமான அந்தப் பீமஸேனனுக்கு மெல்லக் குறிப் பித்தார். அப்பொழுது கங்கரென்னும் பெயர்பெற்ற யுதிஷ்டிரர், 'சமையற்கார! நீ ஸாஹஸம் செய்யாதே. இந்த மரமானது கனி களுடன்கூடி இருக்கிறது. இந்தமரத்தில் உலர்ந்த விறகுகளில்லை. சில உபயோகமில்லாத விறகுகள் இருக்கின்றன. உனக்கு விறகு வேண்டுமானால் நகரத்தைவிட்டு வெளியில் சென்று மரத்தை வேரோடு பிடுங்கித்தள்ளு. உனக்கு ஸ்ரமமுண்டாகாது. ஒரு பச்சைமரத்தினுடைய குளிர்ந்த நிழலை அடைந்த மனிதன் (அந்தமரத்தினை) தான் முந்தி அடைந்த உபகாரத்தை நினைத்து அதன் இலைவிஷயத்தில்கூட த்ரோஹம் செய்யக்கூடாது. சமை யற்கார! உன்கோபத்திற்கு இது ஸமயமன்று; சபலப்படாதே. இந்த மரமானது பூர்ணமாகவில்லை. இரண்டு பக்ஷங்களால் குறைவு பட்டிருக்கின்றது. பலசாலிகளுக்கு இதுபரிதான கார்யமன்று' என்று அப்பொழுது தடுத்துச்சொல்லினர். பிறகு, தர்மராஜர் அத்தருணத்தில் விராடராஜன் அறிந்துகொள்வானென்கிற பயத் தினால் தம் கைக்கட்டைவிரலால் காற்கட்டைவிரலை அழுத்தி அந்தப் பீமஸேனனைத் தடுத்தார். பகைவர்களுடைய பட்டணங்

களை ஜயிப்பவனும் தைர்யமுள்ளவனுமான பீமஸேனனை அந்த வாக்கியத்தைக்கேட்டு, வேகத்துடன் உண்டான கோபத்தை வலிந்து அடக்கினன். பிராதாவினுடைய இங்கிதங்களை அறிந்த அந்த விருகோதரன் சும்மா இருந்துவிட்டான். பீமனுடைய ஆடம்பரத்தையும் அந்தத்தர்மராஜருடைய செய்கையையும்பார்த்து அந்தத் திரௌபதியானவள் கோபத்தினல் அடிக்கடி அதிகமாக அழுதாள். சிவந்தும் நீண்டுமிருக்கின்ற கண்களையுடையவளும் அழகிய இடையையுடையவளும் த்ருபதபுத்ரியுமான கிருஷ்ணையானவள், கேசகளல் பின் தொடரப்படுவதனல் ஸர்பயின் வாயிலை நாடி, அழுதுகொண்டே, பயங்கரமான கண்ணல் எரிக்கிறவள் போல, தைன்யமுற்ற மனத்தையுடையவர்களான அந்தப்பர்த்தாக்களைப் பார்த்து, தன்னுடைய மனத்திலிருக்கிற கோபத்தைக் காட்டக்கூடிய அங்கவிகாரத்தை மறைத்து, தர்மத்துடன்கூடின பிரதிஜ்ஞையைப் பாதுகாத்துக்கொண்டு, பின்வரும் வாக்யத்தைச்சொல்லலானுள். 'ப்ரியர்களிடத்திலும் கொல்லத்தக்கவர்களிடத்திலும் ஸமபுத்தியைப்பாராட்டுகின்றவர்களும் பிரஜைகளுடைய ரக்ஷணத்தையே ஸ்வபாவமாகக் கொண்டவர்களும் அளவற்ற தேஜஸையுடையவர்களும் தர்மத்திலும் ஸத்யத்திலும் நிலைபெற்றவர்களும் தம்முடைய குடிகளிடத்திலும் தம்புத்ரர்களிடத்திலும் வேற்றுமைபாராட்டாதவர்களுமான அரசர்களுக்குக் கார்ய ரக்ஷணமானது எப்பொழுதும் செய்யத்தக்கது. விவாதம் நேர்ந்திருக்கும் ஸமயங்களில் தர்மாஸனத்தில் வீற்றிருக்கின்றவனும் பக்ஷபாதமின்றிக் கார்யத்தைப் பரிசீலனம் செய்பவனுமான அரசனல் இரண்டுஉலகங்களும் ஜயிக்கப்படுகின்றன. அரசரே! தர்மாஸனத்தில் வீற்றிருக்கிற நீர் நிரபராதியான என்னைக் காப்பாற்றும். மஹாராஜரே! நீர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, நிரபராதியான நான் துராத்மாவான கீசகனல் தாஸிபோலக் காலால் உதைக்கப்பட்டேன். ராஜஸ்ரேஷ்டரே! உமக்கு முன்னலேயே நான் பூமியில் தேய்க்கப்பட்டேன். குற்றமற்றவளும் இரக்கப்படத்தக்கவளும் ஸ்திரீயுமான என்னை நீர் காப்பாற்றும். நரேஸ்வரரே! கீசகனிடத்தில் பயந்தவளான என்னைக் காப்பாற்றும். தர்மத்தைக் கைதவறவிடாதீர். மத்ஸ்யதேசாதிபரே! தகப்பன் தன் வயிற்றிற்பிறந்த பிள்ளைகளைக் காப்பதுபோல ப்ரஜைகளைக் காப்பாற்றும். மதிமயக்கங்கொண்டவனும் அதர்மமாகக் கார்யங்களைச் செய்கிறவனும் துராத்மாவுமான அரசனைப் பகைவர்கள் சீக்கிரம் தம் வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். நீர் மத்ஸ்ய ராஜாக்களுடைய குலத்தில் பிறந்தவரன்றே? அவர்

களுக்கு ஸத்யமே முக்யமானது. தர்மத்தையே முக்யமாகக் கொண்ட குலத்தில் அன்றோ இவ்வித ஸ்வபாவமுள்ள நீர் பிறந்திருக்கிறீர்? நராதிபரே! ஆதலால், (எனக்கு) ரக்ஷகராவதற் காக உம்மை நான் கூவி அழைக்கிறேன். ஓ! ராஜேந்திரரே! பாபி யான கீசகனிடத்தினின்று என்னை இப்பொழுது நீர் பாதுகாக்க வேண்டும். புருஷாதமனான கீசகன் என்னை இந்தஸமயத்தில் நாத னற்றவள் என்றறிந்து உதைக்கிறான். இழிந்தவனான இந்தக்கீச கன் தர்மத்தையே நினைக்கவில்லை. அகார்யங்களைச்செய்யாமலும் கார்யங்களைத் தவறுமல்செய்துகொண்டும் பிரஜைகளிடங்களில் நன்னடக்கையுள்ளவர்களாயிருக்கிற மன்னர்கள் ஸ்வர்க்கத்தை அடைகிறார்கள். கார்யாகார்யவிசேஷங்களை அறிந்திருந்தும் தமது இச்சைப்படி குடிகளிடங்களில் பாவத்தைச்செய்கிற மன்னர்கள் தலைகீழாக நரகத்தில் விழுகிறார்கள். அரசர்கள் செய்யவேண்டிய கார்யத்தைச் சரியாகச் செய்வதனால் எவ்விதமானதர்மத்தை அடைகிறார்களோ அவ்விதமான தர்மத்தை யஜ்ஞங்களாலும் தானங்களாலும் குருசுஸ்ரூஷையினாலும் அடைகிறதில்லை. மேலும், முற்காலத்தில் பிரம்மதேவர், (தர்மவிஷயமான ஸம்சயநிவ்ருத்திக் காக) வினவிய இந்திரனுக்கு உலகத்தில் கார்யம் அகார்யம் இரண் டும் எவ்விதம் பிரதானமாயினவென்பதையும் பின்னும் தர்மாதர் மங்கள் இரண்டும் க்ரியைகள் அக்ரியைகள் இரண்டும் புண்யபாபங் களை அடைவிப்பதில் எவ்வாறு தனித்தனியாகப்பிரிக்கப்பட்டிருக் கின்றனவென்பதையும் உரைத்து (மறுபடியும் மஹேந்திரனைப் பார்த்து), 'முற்காலத்தில் பிரஜைகளை ஸ்ருஷ்டித்தபொழுது (அந்த ப்ரஜைகளைப்பார்த்து), 'மனுஷ்யர்களே! (கார்யம் அகார் யம், தர்மம் அதர்மம், க்ரியை அக்ரியை என இம்) மூன்று இரட் டைகளும் பூமியில் உங்களால் நன்றாக அனுஷ்டிக்கத்தக்கவை' என் பது என்னால் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமான நல்லொழுக் கத்திலும் தீயொழுக்கத்திலும் மனிதன் கர்மங்களால்உண்டான பலனை அடைகிறான். நல்லகார்யத்தைச் செய்பவன் நன்மையை அடைகிறான். பாபத்தைச்செய்பவன் பாபத்தைஅடைகிறான். அவ்விதமான நல்வினை தீவினைகளால் ஸ்வர்க்கநரகங்களுடைய ஸம்பந்தத்தைப் பெறுகிறான். ஒரு மனிதன் அஜ்ஞானத்தினால் நல்லசெய்கையையோ கெட்ட செய்கையையோ செய்து மரண மடைந்து தன்புத்திபிறகு பச்சாத்தாபமுற்று வருத்தமடைகி றான்' என்று மறுமொழி கூறினர். இவ்வாறு சிறந்த வசனத்தைக் கூறி ப்ரம்மதேவர் இந்திரனை அனுப்பினர். இந்திரனும் ப்ரம்ம தேவரிடத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு தேவராஜ்யபரிபால

னம் செய்துவந்தான். ராஜேந்திரரே! [1] பரமேஷ்டியானபிரம்மா விஞல் தேவராஜனுக்கு உரைக்கப்பட்டதுபோல நீரும் கார்யா கார்யங்களில் நிலைபெற்றிரும்' என்றுகூறினாள்.

இருபதாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(கீசகனைச் சிக்ஷியாமையால் த்ரௌபதிவிராடனை இகழ்ந்ததும், விராடன் த்ரௌபதியைஸமாதானஞ்செய்ததும், கந்தர்வர்கள் கீசகனைக்கொல்வ தென்று த்ரௌபதி ஸைரந்த்ரிணைக்குச் சொல்லியதும்.)

இவ்வாறு பாஞ்சாலி புலம்புகையில், பலத்திஞல்கர்வமடைந் திருந்த கீசகனை அவ்விடத்தில் சிக்ஷிப்பதற்குச்சக்தியற்றவனும் மத்ஸ்ய தேசத்தார்களுள் உத்தமனுமான விராடராஜன் கீசகனை நல்வார்த்தையிஞலேயே தடுத்தான். இகழத்தகாதவளும் தேவ கன்னிகைபோன்றவளும் கெட்டகார்யத்தைச் செய்தவனைகீச கன்விஷயத்தில் செலுத்தத்தக்க ராஜநீதிகளுடையமுறைகளை அறிந்தவளுமான பாஞ்சாலராஜகுமாரியானவள், குற்றஞ்செய்தவ னும் மத்ஸ்யராஜாவிஞல் குற்றத்துக்குத்தகுந்த தண்டனையிஞல் சிக்ஷிக்கப்படாதவனுமான கீசகனைக் கண்டு, உத்தமமானதர் மத்தை நினைத்து ராஜாவைப்பார்த்து மறுபடியும் சொல்லத் தொடங்கினாள். சிறந்த இடையையுடைய பாஞ்சாலியானவள், அந்தஸபையில் ராஜாவை அனுஸரிப்பதில் நோக்கமுடைய ஸபையி லுள்ளவர்களனைவர்களையும் அபராதியான கீசகனையும் பார்த்து, துக்கத்திஞல் கவரப்பட்டமனத்துடன் விராடனை நோக்கி, 'ராஜரே! நீர் கீசகன்விஷயத்தில் அரசன்போல ஒன்றுஞ்செய்ய வில்லை. திருடர்களுடைய ஸ்வபாவம்போன்ற உம்முடைய ஸ்வ பாவமானது ஸாதுக்களிடங்களில் நிலைபெற்றிராது. கீசகனும் தனக்குரிய தர்மத்தில் நிலைபெற்றிருக்கவில்லை. மத்ஸ்யராஜ னும் தமக்குரிய தர்மத்தில் எவ்விதத்தாலும் நிலைபெற்றிருக்க வில்லை. இவரை உபாஸிப்பவர்களான இந்தஸபையிலுள்ளவர் களும் தர்மத்தை அறிந்தவர்களல்லர். கீசகன் தர்மத்தை அறியவில்லை. அவ்வாறே, அரசருடைய வேலைக்காரர்களும் தர் மத்தை அறியவில்லை. அரசரும் நல்லொழுக்கத்தைக் கற்பிக்கிற் ரில்லை. மந்திரிகளும் அறிகிறார்களில்லை. அரசரே! ராஜஸபை யில் விராடரான உம்மை நான் நிந்திக்கவில்லை. மத்ஸ்ய தேசத்து அரசரே! உமக்குஅருகில் இந்தக்கீசகனால் நான்

---

1 உத்தமமான ஸ்தானத்தில் இருப்பவர்.

உதைக்கப்படத்தக்கவளல்லேன். தர்மத்தைதமீறி நடந்தவனை கீசகனை ஸபையிலுள்ளோர்கள் பார்க்கட்டும். விராடராஜரே! குற்றமற்றவளும் நாதனற்றவளுமான என்னைப்பாரும். துஷ்டரிடத்தில் நல்ல வார்த்தை பயன்படாது. துஷ்டரிடத்தில் தண்டனையை விதிக்கவேண்டும். தண்டிக்கத்தகாதவர்களைத் தண்டிப்பவனும் தண்டிக்கத்தக்கவர்களைத் தண்டியாதவனுமான அரசன் உலகத்தில் ராஜா என்கிற சொல்லுக்கு உரியவனுகமாட்டான். பூமியை ஆளுகின்றவன், துயரமுற்றவர்கள் குருடர்கள் தரித்திரர்கள் சக்தியற்றவர்கள் நொண்டிகள் கூனர்கள் புத்தியீனர்கள் முதலான மனுஷ்யர்களையும், நாதனற்றவர்களும் பாலர்களும் முதியவர்களுமானஸ்த்ரீபுருஷர்களையும், துஷ்டர்களாலும் திருடர்களாலும் அவமதிக்கப்பட்டவர்களையும் ரக்ஷிக்கவேண்டும். அரசன் நாதனற்றவர்களுக்கு நாதனுகவும், தகப்பனில்லாதவர்களுக்குத் தகப்பனுகவும், தாயில்லாதவர்களுக்குத் தாயாகவும், குருவில்லாதவர்களுக்குக் குருவாகவுமிருக்கவேண்டும். கதியற்றவர்களுக்கு அரசனே கதி. மனிதர்களுக்கு அரசனே முக்யமான ஆதாரம். உத்தமனை அரசன், துஷ்டர்களான வேறுமனிதர்களால் தொடப்பட்டவளும் பதிவ்ரதையும் நாதன்றவளுமான ஒரு ஸ்திரீயைத் தன்பெண்போல விசேஷமாகப்பாதுகாக்கவேண்டும். ராஜரே! இவ்வளவுகாலம்வரையில் உம்முடைய அரண்மனையில் உமது பெண்ணைக்காட்டிலும் மேலாகவவஹித்துவந்த நான் கீசகனல் உதைக்கப்பட்டேன். என்னைப்பாரும்' என்று புலம்பினுள். விராடன், '(ஸைரந்த்ரி!) என்கண்ணுக்குப் புலப்படாத இடத்தில் உங்களிருவர்களுக்கும் நடந்த சண்டையை நானறியேன். கார்யங்களுடைய தத்வத்தை அறியாமலிருக்கிற எனக்கு எவ்வாறு அமங்களம் உண்டாகும்?' என்று கூறினன்.

திரௌபதி, 'எவர்களுடைய விரோதியானவன் காலால் பூமியைத் தொட்டுக்கொண்டு உறங்குகிறனில்லையோ அவர்களுடைய மஹிமைதங்கிய மனவியான என்னை ஸூதபுத்ரன் காலால் உதைத்தான். எவர்கள் (பிறர்களுக்கே) கொடுப்பார்களோ, எவர்கள் (பிறரிடமிருந்து) இரக்கமாட்டார்களோ, எவர்கள் பிராம்மணர்களிடங்களிலும் வேதங்களிடங்களிலும் விஸ்வாஸமுள்ளவர்களோ, எவர்கள் ஸத்யவாதிகளோ, எவர்களுடைய நாவெலியானது துந்துபிவாத்தியத்தின் சப்தம்போல அதிகமாகக்கேட்கப்படுமோ அவர்களுடைய பிரியமுள்ளமனவியான என்னை ஸூதபுத்திரன் காலால் உதைத்தான். எவர்கள் தேஜஸ்விகளும் பொறுமையுள்ளவர்களும் பலசாலிகளும் கௌரவ

முள்ளவர்களும் பெரிய வில்லுள்ளவர்களும் யுத்தத்தில் சூரர்களும் கர்வமுள்ளவர்களும் ஆண்மையைச் சிறப்பாகக்கொண்டவர்களுமாயிருக்கிறார்களோ அவர்களுடைய சிறந்த மனைவியான என்னை ஸுதபுத்ரன் காலாலுதைத்தான். மஹாபலசாலிகளான எவர்கள் கோபம்கொண்டால் இவ்வுலகமனைத்தையும் அழிப்பார்களோ, அவர்களுடைய மனத்துக்கினியமனைவியான என்னை ஸுதபுத்ரன் காலால் உதைத்தான். வீர்யத்திலும் ஸத்யத்திலும் பலத்திலும் இந்திரியங்களை அடக்குவதிலும் எவர்களுக்கு நிகரானவன் ஒருவனுமில்லையோ அவர்களுடையமனத்துக்கினிய மனைவியான என்னை ஸுதபுத்ரன் காலால் உதைத்தான். தனமுதலானவைகளால் பூமியில் எவர்களுக்கு ஒப்பானமனிதன் ஒருவனுமில்லையோ அவர்களுடைய மனத்துக்கினிய மனைவியான என்னை ஸுதபுத்ரன் காலாலுதைத்தான். வேந்தரே! பூமிக்கு நாதராயிருப்பவரே! பிரஜைகளுக்கு நன்மையைப் பயப்பதில் விருப்பமுள்ளவரான நீர் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே உம்முடைய எதிரில் அந்தக்கீசகனால் இப்பொழுது அதிகமாக நான் அடிக்கப்பட்டேன். எவர்கள், தம்மைச்சரணமாக வந்து அடைந்தவர்களுக்குச் சரணமாகின்றார்களோ அதிக பலமுள்ள அவர்கள், இப்பொழுது உலகத்தில் எங்கு மறைந்து ஸஞ்சரிக்கின்றார்கள்? பலசாலிகளும் அதிகதேஜஸையுடையவர்களுமான அவர்கள், ஸுதபுத்ரனால் துன்பமடைகின்றவளும் கற்புடையவளுமான காதலியைப் பார்த்து, சக்தியற்றவர்கள் போல, எவ்வாறு பொறுக்கின்றார்கள்? அவர்களுடையகோபம் எங்கே? அவர்களுடைய அவ்விதவீர்யமும் பலமும் எங்கே? அவர்கள் துராத்மாவான கீசகனால் ஹிம்ஸிக்கப்படுகின்ற தங்களுடைய மனைவியை (இந்த ஆபத்தினின்று மீட்டுக்) கைப்பற்றுவதற்கு விரும்புகிறார்களில்லையே! குற்றமற்றவளும் துன்புறுத்தப்படுகின்றவளுமான என்னை எவன் பார்த்துப் பொறுத்துக்கொண்டிருக்கிறானே அப்படிப்பட்ட தர்மதூஷகனான விராடன்விஷயத்தில் நான்தான் என்னசெய்ய முடியும்? எவன் ஸபையில் வீற்றிருக்கும்பொழுது தர்மம் அதர்மத்தால் அடிக்கப்படுமோ, அந்தத் தர்மமானது எவர்களால் அவ்வித அதர்மத்தினிடத்திலிருந்து விலக்கப்படவில்லையோ அவனும் அச்சபையிலுள்ளவர்கள் எல்லாரும் அடிக்கப்படுகிறார்கள். எந்த ஸபையில், எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, தர்மம் அதர்மத்திலும் ஸத்யம் அஸத்யத்திலும் அடிக்கப்படுகின்றனவோ அந்த ஸபையிலுள்ள எல்லாரும் அடிக்கப்படுகிறார்கள்' என்றுகூறினாள்.

பிறகு, அந்தஸபையிலுள்ளவர்களனைவர்களும் அந்தஸைரந்த்ரியினுடைய உருக்கமான அந்தப்புலம்பலைக்கேட்டு, அவளைக் கொண்டாடினர்கள்; 'நல்லது! நல்லது!' என்றும் சொன்னர்கள்; கீசகனையும் நிந்தித்தார்கள். சிலர் கிருஷ்ணையைப் புகழ்ந்தார்கள். சிலர் கீசகனை நிந்தித்தார்கள். சிலர் அரசனை நிந்தித்தார்கள். சிலமனிதர்கள் அந்தஸைரந்த்ரியை நிந்தித்தார்கள். ஸபையிலிருந்தவர்கள், 'எந்தமனிதனுக்கு அழகிய எல்லா அங்கங்களுமுடையவளும் நீண்டகண்களையுடையவளுமான இவள் பார்யையோ அவனன்றோ பெரும்பேறுபெற்றவன். அவன் ஒரு பொழுதும் துன்பத்துக்கு ஆளாகான். எவளுடைய சரீரமானது மங்களகரமாகவும் புஷ்டியுள்ளதாகவுமிருக்கிறதோ, எவளுடைய முகம் தாமரைமலரையும், நடை அன்னப்பறவையையும், சிரிப்பு குருக்கத்திப்பூவையும் கீழ்ப்படுத்துகின்றனவோ அப்படிப்பட்ட இவள் காலாலுதைக்கப்படத் தக்கவளல்லள். எவளுடைய முப்பத்திரண்டுபற்களும் வெண்மைநிறமுள்ளவைகளும் சதைப்பற்றுள்ளவைகளுமாயிருக்கின்றனவோ கூந்தல்கள் பளபளப்பாயும் மெதுவாயுமிருக்கின்றனவோ அப்படிப்பட்ட இவள் காலால் உதைக்கப்படத் தக்கவளல்லள். எவளுடைய உள்ளங்கையில் (ரேகைவடிவங்களான) தாமரைமலரும் சக்ரமும் கொடியும் சங்கும் உப்பரிகையும் சுறுமீனும் இருக்கின்றனவோ அவ்விதமான இவள் காலுதையை அடையத் தகுந்தவளல்லள். எவளுக்கு வலமாகச்சுழன்ற நான்கு [1] ரோமாவர்த்தங்கள் இருக்கின்றனவோ, எவளுக்குச் சரீரமானது (குறுகியும் உயர்ந்துமில்லாமல்) ஸமமாகவும் மங்களகரமாகவும் பளபளப்பாகவுமிருக்கிறதோ அவள் காலுதையை அடையத்தகுந்தவளல்லள். இடைவெளியில்லாதகைகால்களையுடையவளும் இடைவெளியில்லாத பற்களையுடையவளுமாக எவள் இருக்கிறளோ தாமரையிதழ்போன்ற கண்ணையுடையவளான அந்தப்பெண்ணனவள் எவ்வாறு காலுதையை அடையத் தகுந்தவளாவள்? லக்ஷணங்களுள்ளவளும் பூர்ணசந்திரனுக்கொப்பான முகமுள்ளவளும் திவ்யஸௌந்தர்யமுடையவளும் அழகிய முகமுள்ளவளுமான அப்படிப்பட்ட இவள் காலாலுதைபடுதற்குத் தகாதவள். தேவஸ்திரீபோல அழகில்சிறந்தவளும் இந்திரனுடைய தேவிபோல மங்களகரியும் ரூபத்தினுடைய ஒற்றுமையினால் அப்ஸரஸ்திரீபோன்றவளுமான இவள் காலால் உதைபடத்தகுந்தவளல்லள்' என்று அங்கு ஸபையிலுள்ளவர்கள் கிருஷ்ணையைப் பார்த்துப்புகழ்ந்தார்கள். அப்பொழுது, ஒருவிஷயத்தைச்சொல்ல

1 மயிர்ச்சுழிகள்.

எண்ணங்கொண்டிருக்கின்ற யுதிஷ்டிரரைப்பார்த்து, அழகிய இடையையுடையவளான அந்தத்ரௌபதியானவள் பெருமூச்சு விட்டுத் தலைகுனிந்து, பூமியைப் பார்த்துக்கொண்டு பேசாமல் நின்றாள். யுதிஷ்டிரருடைய நெற்றியில் கோபத்தால் வேர்வை உண்டாயிற்று. பிறகு, ஸந்யாஸிவேஷந்தரித்த தர்மபுத்ரர், ஸைரந்த்ரிவேஷந்தரித்திருக்கின்ற தமக்கு ப்ரியமஹிஷியான கிருஷ்ணையைப்பார்த்து அங்கு அரசனுடைய பக்கத்தில் (சில வாக்யங்களை) உரைக்கலானர்.

'ஏ! ஸைரந்த்ரீ! நீ பயப்படாதே. தர்மசீலரும் பரலோகபயமுள்ளவரும் ஸத்யத்திலும் தர்மமார்க்கத்திலும் நிலைபெற்றவருமான இந்தவிராடராஜர் உன்னைரக்ஷியாதகாரணத்தால், நீ ஸுதேஷ்ணையினுடைய வாஸஸ்தானத்தைக் குறித்துச்செல். வீரபத்னிகள் பர்த்தாவை அனுஸரித்துத் துன்பத்தை அடைவிக்கப்படுகிறார்கள். பதிசுச்ரூஷையினால் துன்பமடைந்திருக்கின்ற ஸ்திரீகள் நிச்சயமாகப் பதிலோகத்தை ஜயிக்கிறார்கள். உன் கணவர்கள் கோபத்துக்கு இதுகாலமன்றென நினைக்கிறார்களென்று நான் எண்ணுகிறேன். ஆதலால், ஸூர்யனுடைய தேஜஸ்போன்ற தேஜஸையுடையவர்களான கந்தர்வர்கள் உன்னைப்பாதுகாப்பதற்கு எதிரில் விரைவாக ஓடிவருகிறார்களில்லை. அழகிய கூந்தல்நுனியையுடையவளே! தர்மசாஸ்திரத்தை அனுஸரித்துக் குலஸ்திரீகளுடைய தர்மமானது எவ்வாறு காணப்படுகிறதோ அப்படிப்பட்ட மோக்ஷதர்மங்களை ஆச்ரயித்திருக்கின்ற கதைகளை நீ கேட்டிருக்கலாம். ஸ்திரீகளுக்கு ஒருவித யஜ்ஞமுமில்லை; ச்ராத்தமுமில்லை; உபவாஸமுமில்லை; பர்த்தாவினிடத்தில் செய்யப்படுகிற சுச்ரூஷையே ஸ்வர்க்கத்திற்குக்காரணமாகின்றது. ஸ்திரீகளை இளமைப்பருவத்தில் பிதா ரக்ஷிக்கிறான்; யௌவனகாலத்தில் பர்த்தா ரக்ஷிக்கிறான்; மூப்புக்காலத்தில் புத்ரன் பாதுகாக்கிறான். ஸ்திரீகள் (ஒருபொழுதும்) ஸ்வாதந்த்ரியம் பெறுவதற்குத் தகுந்தவர்களல்லர். பயந்தவளே! மனிதர்கள், பகைவர்களால் அனேகக்லேசங்களால் அவமதிக்கப்பட்டாலும், பர்த்தாவிடத்திலிருந்து உண்டாகிற பயத்தினால் ஒருபொழுதும் கோபம் பாராட்டுகிறதில்லை. (பர்த்தாவைத்தவிர) வேறிடத்தில் மனத்தை வைக்காதவர்களும் சுத்தர்களுமானஸ்திரீகள் புண்யலோகத்தை நிச்சயம் ஜயிக்கிறார்கள். உன்னுடையபதிகள் நிச்சயமாகக் கோபம் பாராட்டுவதற்குத் தகுந்த காலமென்று நினைக்கவில்லை. கோபங் கொண்டவர்களான உன்னுடைய பர்த்தாக்களை இந்திரன்கூட எதிர்க்கமாட்டான். ஆதலால், [1] காம

[1] தங்களிஷ்டப்படி ரூபத்தைத்தரிக்கும் ஸ்வபாவமுடையவர்கள்.

ரூபிகளான கந்தர்வர்கள் உன்னை அடையவில்லை. நீண்ட கண்ணை யுடையவளே! உன்னுல் ஏதாவது ஒரு சபதமானது செய்யப் பட்டிருந்தால் அதை நீ நினைத்துக்கொள். பொறுமையை ஸ்வ பாவமாகக்கொண்டவளே! பொறுமையானது ஸர்வோத்தமமான தர்மம். பொறுமையே தர்மம். பொறுமையே ஸத்யம். பொறு மையே தானம். பொறுமையே தவம். பொறுமையுள்ளவர் களுக்கு இவ்வுலகம் உண்டு. பொறுமையுள்ளவர்களுக்குப் பர லோகமும் உண்டு. [1] இரண்டுபாகங்களையுடையதும் [2] பன்னி ரண்டு அங்கங்களையுடையதும் [3] இருபத்துநான்கு பிரிவுகளையுடை யதும் [4] முந்நூற்றறுபத்தாறு ஆரக்கால்களையுடையதுமான (ஸம்வத்ஸரசக்ரமானது) ஒருமாஸத்திலுல் குறைவுள்ளதாக இரு க்கையில் எவன்தான் பொறுமையில்லாமல் இருப்பான்? ஓ! ஸைரந்த்ரி! நீ போ. கந்தர்வர்கள் உனக்கு ப்ரியத்தைச்செய் யப்போகிறார்கள். எவலுல் உனக்கு அப்ரியமானகார்யஞ்செய் யப்பட்டதோ (அவனை ஸம்ஹரித்து) அவர்கள் உன்துக்கத்தைப் போக்கப்போகின்றார்கள்' என்றார். இவ்வாறு சொல்லியும், நிற் கின்ற அவளைப்பார்த்து, பின்னும் தர்மபுத்திரர், 'கல்யாணி! ராஜஸபையில்சொக்கட்டாலுடுகின்றவர்களுக்கு நீ இடையூற்றை உண்டுபண்ணுகிறாய். அழகிய இடையையுடையவளே! ஆதலால், நீ எனக்கு நட்டுவஸ்திரீபோலத் தோன்றுகிறாய்' என்று கூறி னர். பர்த்தாவினுல் இவ்வாறுரைக்கப்பட்ட அவள், தர்மபுத்ரரை நன்றுகப் பார்த்து, 'கற்றறிந்தவரே! உம்மால் உண்மை கூறப் பட்டது. எவர்களுள் மூத்தவன் சூதாடுவதில் ஸாமர்த்யமுடை யவனோ அவர்களுள் ஒருநட்டுவனுடைய நட்டுவச்சியாக என்னை நீர் அறிந்துகொள்ளும்' என்று சொன்னுள். [5] சிறந்த இடை யுள்ளவளும் யானைத்துதிக்கைபோன்ற தொடைகளுள்ளவளும் மான்குட்டியின் கண்கள்போன்ற கண்களுள்ளவளும் இடைவெளி யில்லாத கொங்கைகளுள்ளவளும் புழுதியால்பூசப்பட்ட எல்லா அங்கங்களுமுள்ளவளும் கறுத்தமேகங்களால்சூழப்பட்ட சந்திர னுடைய ஒளிபோன்றவளுமான த்ரௌபதியானவள், இவ்வாறு சொல்லிவிட்டு, பர்த்தாவின் ஆஜ்ஞையை அறிந்து அழகிய தன் முகத்தைத்துடைத்து ரக்தத்தால்நனைக்கப்பட்டனவும் அவிழ்த்து விடப்பட்டனவுமான தலைமயிர்களை ஒன்றுசேர்த்துக்கொண்டு (ஸபையினின்றும்) நீங்கிப் பெண்யானைபோலப் புறப்பட்டாள்.

---

1 தக்ஷிணாயனம்; உத்தராயணம். 2 பன்னிரண்டுமாஸங்கள்.
3 இருபத்துநான்குபக்ஷங்கள். 4 வேறு பாடம். முந்நூற்று அறு பத்துஆறு பகலிரவுகள். 5 மூலம் வேறு.

எவள்நிமித்தம் பாண்டவர்கள் உயிரையும் விடுவார்களோ அந்த க்ருஷ்ணையை அவ்விதநிலைமை அடைந்தவளாகக்கண்டும், தர் மிஷ்டர்களான அவர்கள், பொறுமையுடன், பெரியகடலானது கரையைக்கடவாததுபோல ப்ரதிஜ்ஞையைக் கடவாதிருந்தார்கள். பிறகு, அழகிய எல்லா அங்கங்களையுமுடையவளான அவள் அதிக மாக நடுக்கமுற்று ஸ்ரீதஷ்ணையினுடைய இருப்பிடத்தை அடைந்து அழுதுகொண்டே அவளுக்கெதிரில் நின்றாள். விராட பத்நியானவள், அவளைப்பார்த்து, கபடமாக, 'ஸைரந்த்ரி! தாமரைமலருக்கொப்பானதும் அழகியபற்களும் உதடுகளும் கண் களும் மூக்குமுடையதும் பூர்ணசந்திரனுக்கு ஒப்பான ஒளிபொ ருந்தியதும் கோவைப்பழம் போன்ற உதடுகளையுடையதும் கறுத்த இரண்டு கருவிழிகளால் மிக்க அழகிய காந்திபொருந்தி யதுமான உன்னுடைய முகமானது, அழுகின்ற உன்னால் துடைக் கப்பட்ட கண்ணீரோடு கூடியதாக நேரானகண்களால் ஏன் ஜலத்தைவடிக்கின்றது? அழகிய இடையையுடையவளே! எவன் உன்னைத் துன்பஞ்செய்தான்? கல்யாணி! நீ ஏன் புலம்புகிறாய்? புத்ரர்களோடும் பந்துக்களோடுங்கூடிய மனைவிகளினின்றும் எவன் பிரிவை அடைகிறான்? அரசர் இப்பொழுது கோபங் கொண்டு எவனுக்கு மரணதண்டனை விதிக்கப்போகிறார்? சொல். உனக்கு எவ்விதமானசெய்கை பிரியமானது? யாரை நான் விட வேண்டும்? யாரை நான் கொல்லவேண்டும்?' என்று வினவினாள். கிருஷ்ணையானவள் அவளைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, 'தெரிந்திருந்தும் ஏன் என்னைக்கேட்கிறாய்? பிராதா வான கீசகனிடம் நீயே என்னை அனுப்பிவிட்டு ஏன் இவ்வாறு பிதற்றுகிறாய்? கீசகன், மத்யத்தை வாங்கிவருவதற்காக இவ்விட மிருந்து போயிருக்கின்ற என்னை, அரசர் பார்த்துக்கொண்டிருக் கும்பொழுதே, அந்தஸபையில், ஜனங்களில்லாதகாட்டில் அடிப் பதுபோல அடித்தான்' என்று கூறினாள். ஸ்ரீதஷ்ணை, 'அழ கியதந்தங்களும் உதடுகளுமுடையவளே! எவன் தர்மத்தையுடை யவளான உன்னை உல்லங்கனஞ்செய்தானோ, எவன் காமத்தினால் கவரப்பட்ட மனமுள்ளவனைக் கிடைக்கத்தகாதவளான உன்னை அவமதிக்கிறானோ அப்படிப்பட்ட அந்தக்கீசகன் எனக்கு ஸோதரனாயிருந்தாலும் நீ விரும்பினால் அவனைக்கொல்லிவிப்பேன்; நிச் சயம்' என்றாள். திரௌபதி, '(ஓ! ஸ்ரீதஷ்ணையே!) எவர் களுக்கு அந்தக்கீசகன் அபராதத்தைச் செய்தானோ அவர்கள் இப்பொழுதே அவனைக் கொல்லப்போகிறார்கள். இன்றைக்கோ, அல்லது நாளைக்கோ, அவன் பரலோகத்தை அடையப்போகிறா

னென்று எண்ணுகிறேன். நீ சீக்ரமாக இப்பொழுதே உன்பிராதாவான கீசகனுக்கு ஜீவப்ராத்தம்கொடு. அவனை மிக்ககளிப்புள்ளவனுகச்செய். அவன் உயிரைத் தரிக்கப்போகிறதில்லையென்று நான் எண்ணுகிறேன். என்னுடைய கணவர்களும் தார்மிகர்களுமான அந்தஐவர்களுள் ஒருவர் எவராலும் எவ்விதத்திலும் ஜயிக்கமுடியாதவர்; பூமியில் வலிமையில் நிகரில்லாதவர். அவர் கோபித்துக்கொள்வராஞல் இந்த ஓர் இரவிலேயே இவ்வுலகமனைத்தையும் மனிதர்களற்றதாகச் செய்வார். காமரூபியான அந்தக் கந்தர்வர் இதுவரையில் கோபங்கொள்ளவில்லை. கீசகன் என்னைக் காலால் உதைத்ததை அவர் அறியும்க்ஷணத்திலேயே, கெட்டஎண்ணமுடையவனும் பாபியுமானகீசகன் புத்ரர்களுடனும் ஸஹோதரர்களுடனும் பந்துக்களுடனும்சேர்ந்து, பாபத்தொழிலைச் செய்தவன்போல, நிச்சயமாக நாசமடையப்போகிறான். மேலும், ஸமர்த்தர்களான புருஷஶ்ரேஷ்டர்களால், 'ஒருவன் காலபாசத்துக்கு வசப்பட்டுப் பாபத்தைச்செய்கிறான். இழிவான அவனுடைய அவ்வித அபராதத்தினல் அவனுடையவம்சமே அழிந்துவிடுகிறது' என்று இவ்விஷயம் முந்தியே உரைக்கப்பட்டிருக்கின்றது' எனமொழிந்தாள்.

ஸைரந்த்ரியானவள் ஸுதேஷ்ணையைப்பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டுத் துக்கத்தால் மதிமயக்கங்கொண்டு, கீசகனைக் கொல்வதற்கு வ்ரததீக்ஷையை அடைந்தாள். திரௌபதியானவள் ஸ்திரீகளால் வேண்டப்பட்டவளாயிருந்தும் ஸுதேஷ்ணையினல் நன்குமதிக்கப்பட்டவளாயிருந்தும் ஸ்நானமும் செய்யவில்லை; போஜனமும் செய்யவில்லை; புழுதியையும் துடைக்கவில்லை; ரக்தத்தால் நனைக்கப்பட்ட முகத்தையுடையவளாகவும் கசக்கப்பட்டகண்களையுடையவளாகவுமேயிருந்தாள். அவ்வாறு துக்கத்தால் மிகுந்த தாபத்தை அடைந்தவளும் மிகஅழுதுகொண்டிருப்பவளுமான அந்தத்ரௌபதியைப்பார்த்து எல்லாஸ்திரீகளும் ஸம்பவிக்கப்போகின்ற கீசகனுடைய வதத்தை மனத்தினுள் புகழ்ந்தார்கள்'' என்று சொல்லினர்.

இருபத்தோராவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(கீசகனுடைய உத்பத்தீமுதலான வரலாறு.)

ஜனமேஜயர், ''(வைசம்பாயனரே!) பதிவ்ரதையும் மஹாபாக்யமுள்ளவளும் ஸ்திரீகளுள் உத்தமியுமான திரௌபதியான

வள் கீசகனால் காலாலுதைக்கப்பட்டு அதிகதுக்கத்தை அடைந்து விட்டாள். அந்தோ! அவள், முன்பு பலாத்காரமாக அபஹரிக்கப்பட்டபொழுது, தன்கணவர்களுடைய ஸஹோதரியும் மங்களகரியுமான துச்சலையை நினைத்து ஸிந்துராஜனைச் சபியாமலிருந்தாள். மஹாபாக்யவதியான கிருஷ்ணையானவள் துராத்மாவான கீசகனால் பிடிக்கப்பட்டும் காலால் உதைக்கப்பட்டுமிருந்தும் ஏன் அந்தஸமயத்தில் அவனைச் சபியாமலிருந்தாள்? தேஜஸ்வினுடைய ராசியாயிருப்பவளும் தர்மங்களை அறிந்தவளும் உண்மையைப் பேசுகின்றவளுமான அந்தத்தேவியானவள் கூந்தலில்தொட்டு இழுக்கப்பட்டபோது சக்தியற்றவள்போல ஏன் பொறுத்துக் கொண்டிருந்தாள்? உத்தமரே! இதற்குக்காரணம் சிறிதாயிராது. நான் இதனைக் கேட்கவிரும்புகிறேன். க்ருஷ்ணையினுடைய துயரமானது என்மனத்துக்கு மிக்கவருத்தத்தை உண்டுபண்ணுகின்றது. முனிவரே! அந்தத்துஷ்டனான கீசகன், எவனுடைய வம்சத்தில் பிறந்தவன்? மத்ஸ்யராஜனுடைய மைத்துனனான கீசகன் எவ்வாறு பலத்தால் மேன்மைபெற்றவனானன்? ஸூதபுத்ரனான கீசகனால் உதைக்கப்பட்ட அந்த அன்புடையமனைவியைப் பார்த்தும்கூட அந்தவீரர்கள் ஏன் கலங்காமலிருந்தார்கள்? அவனைப் பற்றி என்னசெய்தார்கள்?'' என்றுவினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"ராஜரே! உம்மால்வினவப்பட்ட இந்தக்கேள்வியானது குருவம்சத்தில்பிறந்தவர்களுக்குக் கீர்த்தியைப்பெருகச்செய்யக்கூடியது. நான், இவை எல்லாவற்றையும் இப்பொழுது விரிவாகச் சொல்லப்போகிறேன். ராஜரே! பிராம்மணஸ்த்ரீயினிடத்தில் க்ஷத்திரியனுக்குப்பிறந்தவன் ஸூதனென்று சொல்லப்படுகிறான். பிரதிலோம[1] ஸாங்கர்யத்தினாலுண்டாகிறவர்களுள் அவன் ஒருவனே த்விஜனென்று சொல்லப்படுகிறான். இருபிறப்புடையவர்களுக்குரிய செய்கையுள்ளவனை அவனை ரதகாரனென்றும் க்ஷத்ரியனைக்காட்டிலும் கீழானவனென்றும் வைச்யனைக்காட்டிலும் மேலானவனென்றும் சொல்லுகிறார்கள். முன்பு ராஜாக்களால் ஸூதனேடு ஸம்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அவ்விதமான பிரதிலோமஸாங்கர்யத்தினால் (ஸூதஜாதியைச் சேர்ந்தவனால்) 'ராஜா' என்கிறபெயரானது அடையப்படவில்லை. அரசரே! முற்காலத்தில் ஸூதவம்சத்தில்பிறந்தவனால் எந்தத்தேசமானது உண்மையாக அடையப்பட்டதோ அந்தத்தேசமானது ஸூதர்களுடையபெயரினால் ஸூததேச

1 கலப்பு.

மென்று பெயர்பெற்றது. ராஜபுத்ரியினிடத்தில்பிறந்தவனும் கேகயனென்று பிரஸித்திபெற்றவனுமான ஓர் அரசன் அந்த ஸ்ரீதர்களுக்குத் தலைவனானன். அவன் ஸாரத்யத்தில் ஒப்பற்றவனானன். கௌரவர்களுள்சிறந்தவரே! பாரதரே! அவனுக்கு மாலவியினிடத்தில் அப்பொழுது கீசகர்களென்று பிரஸித்திபெற்ற நூற்றுபுத்ரர்கள் உண்டானர்கள். பிரபுவே! பலத்திலுல்சிறந்தவனும் எல்லாரையும்ஜயித்தவனும் பலத்திலுல் அடங்காத மதங்கொண்டவனுமான கீசகனென்பவன் அவர்களுள் மூத்தவன். அந்தக்கீசகனுள்பட நூற்றுபிள்ளைகள். குருகுலத்தில்பிறந்தவரே! (அந்த) மாலவிக்கே இளையஸஹோதரி ஒருத்தி இருந்தாள். அவளிடத்தில் கேகயராஜனுக்கு ஸுதேஷ்ணைஎன்கிற ஒருபெண் உண்டானாள். அவளைக் கேகயராஜன் மத்ஸ்யராஜனை விராடனுக்கு ஸந்தோஷத்தோடு கொடுத்தான். கோஸலராஜகுமாரியும் ப்ரவேதனுக்குத்தாயுமான ஸுரதையானவள் விண்ணுலகமேகியபின் ப்ரவேதனும் காணுமற்போக, சங்கனும் மாமனுடையவீட்டை அடையவே, விராடராஜன் ஸுதேஷ்ணையை மனைவியாக அடைந்து துயரத்தை அகற்றினான். மஹாராஜரே! கேகயராஜகுமாரியான ஸுதேஷ்ணைதேவியும் குலத்திலுடைய அபிவ்ருத்திக்காக விராடராஜனிடத்தினின்று உத்தரனையும் உத்தரையையும் பெற்றாள். ராஜரே! கீசகன் சிறியதாயின் பெண்ணும் இகழத்தகாதவளுமான அந்த ஸுதேஷ்ணைக்கு எப்பொழுதும் அன்புடன் பணிவிடைசெய்துகொண்டு விராடனிடத்தில் ஸுகமாக வஸித்துவந்தான். பராக்ரமசாலிகளான அந்தக் கீசகனுடையஸஹோதரர்களனைவர்களும் அந்தக்கீசகனை அனுஸரித்து மிக்கஸந்தோஷத்தோடு விராடனுடையபடைகளையும் பொக்கசத்தையும் வ்ருத்திசெய்தார்கள். ராஜரே! காலேயர்களென்னும் பெயர்பெற்ற அந்தத் தைத்யர்கள் பூமியில் பெரும்பான்மையாக ப்ரஸித்திபெற்ற கீசகர்களாகத்தோன்றினர்கள். (அந்த அஸுரர்களுள்) பாணனென்பவன் ஜ்யேஷ்டனையிருந்தான். அவனே எல்லா அஸ்திரங்களையுமுடையவனும் பலசாலியும் பயங்கரமானபராக்ரமமுள்ளவனும் (நீதி) வரம்பைக்கடந்தவனும் மனிதர்களுக்குப் பயத்தைக்கொடுப்பவனுமான கீசகனுகத் தோன்றினான். பலத்திலுல் அதிகமதங்கொண்ட அந்தக்கீசகனை (த்துணையாக) ப்பெற்று, விராடராஜன், முற்காலத்தில் இந்திரன் அசுரர்களைஜயித்ததுப்போலப் பகைவர்களனைவர்களையும் ஜயித்தான். அவன் மேகலம், த்ரிகர்த்தம், தசார்ணம், கசேருகம், மல்லவம், யவனம், ஹிலிந்தம், காசி, கோஸலம், கரதம், நிஷித்தம், சிவம்,

மூசுலகம், புளிந்தம், களிங்கம், தங்கணம், பரதங்கணம் என்கிற நாடுகளையும் ஜயித்தான். பற்பல தேசாதிபதிகளான மற்றும் அனேகசூரர்களும் கீசகனல் யுத்தத்தில் முறியஅடிக்கப்பட்டுப் பத்துத்திக்குகளிலும் ஓடிவிட்டார்கள். விராடன், இவ்விதமான வீர்யமுள்ளவனும் பலத்தில் பதிணுயிரம்யானைக்கொப்பானவனுமான அந்தக்கீசகனை அந்தத்தருணத்தில் தன்னுடைய ஸைந்திபதியாக நியமித்தான். தசரதகுமாரரான ராமருக்கு ஒப்பான விராடராஜனுடைய பத்துஸஹோதரர்களும் அதிகபலசாலிகளான அந்தக்கீசகர்களை அனுஸரித்துவந்தார்கள். பயங்கரனான அந்தக்கீசகன் இவ்விதமான வலிமையுடையவன். மற்றக்கீசகர்களும் அவ்விதமானவலிமையுடையவர்களாகவே இருந்தார்கள். அரசனுடைய மைத்துனர்களும் மிக்கவலிமையுள்ளவர்களுமான அந்தக்கீசகர்கள் விராடனுக்கு நன்மையை உண்டாக்குவதில் விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள். இவ்விதமாகக் கீசகனுடைய பராக்ரமம் முழுதும் உமக்குச் சொன்னேன். த்ரௌபதியானவள், அந்தக்கீசகனைச் சபியாததற்குக் காரணத்தையும் சொல்லுகிறேன்; என்னிடத்தினின்று கேளும். ரிஷிகள் கோபத்தினின்றும் தவத்தைப் பாதுகாக்கிறார்கள்; சபிக்கிறதில்லை. அதை உள்ளபடி அறிந்த த்ரௌபதியானவள், அவனைச் சபிக்கவில்லை. 'பொறுமையே தர்மம். பொறுமையே தானம். பொறுமையே யஜ்ஞம். பொறுமையே தவம். பொறுமையே ஸத்யம். பொறுமையே நல்லொழுக்கம். எல்லாம் பொறுமையே' என்று வேதம் கூறுகிறது. பொறுமையுள்ளவர்களுக்கே இவ்வுலகம். பொறுமையுள்ளவர்களுக்கே பரலோகம். இவையனைத்தையும் அறிந்தவளான அந்தத்த்ரௌபதியானவள் பொறுமையைக்கைக்கொண்டாள். பரதகுலத்தில் உதித்தவரே! விசாலமானகண்களையுடையவளும் பதிவ்ரதையுமான அந்தத்த்ரௌபதியான-வள், வல்லமையுள்ளவளாயிருந்தும், பொறுமையுள்ளவர்களும் தர்மத்தை அனுஷ்டிக்கின்றவர்களுமான தன்கணவர்களுடைய கருத்தை அறிந்து அந்தக்கீசகனைச் சபியாமலிருந்தாள். அந்தப் பாண்டவர்களனைவர்களும் துக்கமுற்றவளான த்ரௌபதியைக்கண்டு வெட்கமடைந்து அப்பொழுது கோபத்தீயினால் எரிக்கப்பட்டார்கள். பிறகு, கரையினால் மஹாஸமுத்ரம் தடுக்கப்படுவதுபோலத் தர்மபுத்ரரால் தடுக்கப்பட்டவனும் சிறந்த கைகளுள்ளவனுமான பீமன், கீசகனைக் கொல்லக்கருதிக் கோபத்தை மனத்தினுலடக்கி இடைவிடாமல் பெருமூச்சுவிட்டுக்கொண்டு அப்பொழுது மடைப்பள்ளியில் அன்றிரவு அதிக வருத்தத்தோடு படுத்திருந்தான்.

இருபத்திரண்டாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதி இரவில் பீமனைஅடைந்து கீசகனைக்கொல்லும் படி வற்புறுத்தியதும், யுதிஷ்டிரர்முதலானவர்களைத் துறித்துத் துக்கித்ததும்.)

பிறகு, ஸைதபுத்ரனால் உதைக்கப்பட்டவளும் ராஜகுமாரியும் மிகுந்ததுன்பத்தையடைந்தவளும் கோபமுள்ளவளும் த்ருபதராஜகுமாரியுமாகிய அந்த க்ருஷ்ணையானவள், ஸைதபுத்ரனுடைய நாசத்தைச் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு அப்பொழுது தன் இருப்பிடத்துக்கு வந்துசேர்ந்தாள். மெல்லிய இடையுடையவளான அந்தக்ருஷ்ணையானவள், முறைப்படி சுத்தி செய்துகொண்டும் தன் அங்கங்களையும் இரண்டு ஆடைகளையும் ஜலத்தால் நன்றாக அலம்பிக்கொண்டும் அழுதுகொண்டும், அவ்விதத்துக் கத்தினுடைய முடிவைச் சிந்தித்தாள். அந்த த்ரௌபதியானவள், 'நான் என்னசெய்வேன்? நான்எவ்விடம்சென்வேன்? என்னுடைய கார்யம் எவ்வாறு நிறைவேறும்? பீமஸேனரைத்தவிர வேறு ஒருவர் இப்பொழுது என் மனத்தினால் விரும்பப்பட்டிருக்கிற விருப்பத்தை நிறைவேற்றமாட்டார்' என்று இவ்வாறு ஆலோசித்து மனத்தினால் அந்தப்பீமனை அடைந்தாள். இரவில் ஊரடங்கி நிச்சப்தமாயிருக்கையில், மனத்தில்அதிக துக்கத்தையுடையவளும் நல்ல மனத்தையுடையவளும் நாதனையுடையவளும் பதிவ்ரதையுமான அந்தத்ரௌபதியானவள் தன் நாதனை விரும்பிக்கொண்டு தன்படுக்கையை விட்டுவிட்டு வேகமாகச் சென்றாள். வெண்ணிறமுள்ள சிரிப்புடையவளான அந்தப் பாஞ்சாலியானவள், மடைப்பள்ளியிற் சென்று, பெண்யானையானது பெரிய ஆண்யானையை அடைவதுபோலப் பீமஸேனனை அடைந்தாள். [1] முழுமையும் வெண்மைநிறமுள்ளதும் காட்டில் வளர்ந்ததும் மூன்றுவயதுள்ளதுமான ஒரு பசுவானது கானகத்தில் பெருகிவருகின்ற மலையருவியினருகில் உறங்குகின்ற பெரிதான ஒருவ்ருஷபத்தை விருப்பத்துடன் அடைவதுபோலவும், பெண்சிங்கமானது நன்றாக உறங்கிக்கொண்டிருக்கின்ற ஆண்சிங்கத்தை அடைவதுபோலவும், பாஞ்சாலியானவள் பீமஸேனனை அடைந்து, கோமதிநதிக்கரையில் மிக வளர்ந்திருக்கின்ற ஸாலவ்ருக்ஷத்தைப் பூத்திருக்கின்ற ஒரு கொடி சுற்றுவதுபோல, தூங்கிக்கொண்டிருக்கின்ற தன்பதியான அவனை

---

1 'ஸர்வஸ்வேதா' என்பது மூலம்; 'பெண் கொக்கு' என்பது பழைய உரை.

நீட்டப்பட்ட தன் இருகைகளாலும் நன்முகக் கட்டிக்கொண் டாள். வேறொரு மஹா லக்ஷ்மிபோன்ற திரௌபதியானவள் ஸ்ரோத்ரத்தில் யோகநித்திரை செய்துகொண்டிருக்கிற விஷ்ணு வை எழுப்புவதுபோல, நித்ரை செய்துகொண்டிருக்கிற மஹாத் ஸாஹத்துடன்கூடிய தன்னுடைய கணவனை இரண்டுகைகளாலும் தொட்டுஎழுப்பினள். இந்திராணியானவள் தேவராஜனையும், பார் வதியானவள் சங்கரனையும், ஸாவித்ரியானவள் பிரம்மதேவனை யும், தேவஸேனையானவள் ஸுப்ரம்மண்யனையும், பெண் யானை யானது ஆண்யானையையும், மஹாலக்ஷ்மியானவள் தாமோதரனை யும் எழுப்புவதுபோல, ஆசைப்படத்தக்க உருவழுடையவளான திரௌபதியானவள், வெண்பட்டினால் வெளுத்திருக்கின்ற படுக்கை யில் படுத்திருப்பவனும் வ்ருஷபத்தினுடைய கண்போன்ற கண் களையுடையவனும் திக்குயானைபோன்ற வடிவழுள்ளவனுமான பீமனை எழுப்பினள். வீணைபோன்ற இனிமையான சொல்லை யுடைய பாஞ்சாலியானவள் குருகுலத்தில் உதித்தவனை பாண்டு நந்தனனைப்பார்த்துப் (பின்வருமாறு) காந்தாரமென்னும் ஸ்வரத் துடன் வசனிக்கலானுள். 'பீமஸேனரே! எழுந்திரும்; எழுந் திரும்; மரித்தவர்போல ஏன் படுத்துறங்குகிறீர்? உம்முடைய மனவியைத்தொட்டும் ஜீவித்திருக்கிற பாவியான கீசகன் சாவ வில்லையன்றே? அப்படிப்பட்ட பாவியும் எனக்குப் பகைவனும் ஸேனபதியுமான கீசகன் அவ்விதமான (கெட்ட) செய்கையைச் செய்து உயிரோடிருக்கையில் இப்பொழுது நீர் எப்படி உறங்கு கிறீர்?' என்றுள்.

ஸுகமாகத் தூங்கிக்கொண்டிருந்த குருப்ரேஷ்டனை அந்த விருகோதரன் அந்தச் சப்தத்தைக் கேட்டு அங்குசங்களால் (குத் தப்பட்ட) பெரியயானைபோல உணர்ச்சியை அடைந்தான். அள விடமுடியாத மனைதைர்யத்தையுடையவனை அந்தப் பீமன் எந் தப்படுக்கையில் படுத்துறங்குகையில் எழுப்பப்பட்டானோ மேல் விரிப்புடன்கூடின அந்தக் கட்டிலில் படுக்கையை விட்டு எழுந் திருந்து உட்கார்ந்தான். ஒருவராலும் அவமதிக்கமுடியாதவனும் குருகுலத்தினுதித்தவனுமான பீமன் பாஞ்சால ராஜனுடைய குலத்தை வ்ருத்தியடையச் செய்கின்றவளும் ராஜபுத்திரியும் ப்ரியமஹிஷியுமான அந்தப் பாஞ்சாலியைத் தன் பக்கத்தில் உட்காரச்செய்து, (பின்வருமாறு) விளவினன். 'என்ன கார் யத்துக்காக அதிவேகத்துடன் என் பக்கத்துக்கு வந்தாய்? இயற்கையான உன் (மேனியிலுள்ள) நிறமானது காணப்பட வில்லை. நீ இளைத்தவளாகவும் காணப்படுகிறாய். வெளிப்படையாக

லும், அல்லது மறைவானலும், எல்லாவற்றையும் நீ சொல்ல வேண்டும். நான் எல்லாவற்றையும் அறியும்படி முழுதும் சொல். ஸுகமோ துக்கமோ, சுபமோ அசுபமோ, செய்யத்தகாத காரியமாயிருந்தாலும், (அப்படிப்பட்ட) கார்யம் என்னல்செய்யப்பட்டுவிட்டதென்றே நீ நிச்சயமாக எண்ணிக்கொள். கிருஷ்ணையே! எல்லாக் காரியங்களிலும் நானே உன்னல் நம்பத்தகுந்தவன். நான் ஆபத்துக்களில் உன்னை அடிக்கடி விடுவிக்கிறேன். நீ எந்தக் காரியம் சொல்ல விரும்புகிறாயோ அதை உன்னிஷ்டப்படி சீக்ரம் சொல்லிவிட்டு வேறொருவருக்கும் தெரியாமல் உன்படுக்கைக்கே செல்' என்று கூறினன். அந்த த்ரௌபதியானவள் லஜ்ஜையை அடைந்து பயந்து தலைகுனிந்து கண்ணீரினல் கெடுக்கப்பட்டகண்களையுடையவளாகி யாதொரு மறுமொழியும் சொல்லாமலிருந்தாள். பிறகு, பயங்கரமான பராக்ரமமுள்ளவனும் சிறந்த பலமுடையவனும் பாண்டவர்களுள் முக்யனென்று எண்ணப்பட்டவனுமான பீமஸேனன், 'ஸுந்தரி! அன்புடையவளே! யாஜ்ஞஸேனியுள்ளவளே! யார் உனக்கு என்னவிருப்பத்தைச் செய்யவேண்டும்? சொல்' என்று வின்வ, த்ரௌபதியானவள், 'பீமஸேனரே! எவனுக்கு யுதிஷ்டிரர் பர்த்தாவோ அவனுக்குத் துக்கப்படாமலிருப்பது எவ்வாறு ஸம்பவிக்கும்? நீர் துக்கங்களனைத்தையும் அறிந்துகொண்டே என் என்னைக் கேட்கிறீர்? பிராதிகாமியானவன் என்னை அக்காலத்தில் தாஸியென்றுசொல்லி ஸபைக்கு அழைத்து வந்தது என்னுடைய மர்மஸ்தானங்களைப் பிளக்கிறது. (மேலும்) ஹஸ்திநபட்டணத்தில் நான் வீட்டுக்குவிலக்காயிருக்கும் ஸமயத்தில் துச்சாஸனனல் மயிரில் பிடித்து ராஜஸபையில் (பலாத்காரமாக) இழுக்கப்பட்டேன். சிறந்தகைகளுள்ளவரே! பகைவர்களை வாட்டுகின்றவரே! அந்த ஸபையில் கர்ணன் முதலான க்ஷத்ரியர்களாலும் துர்யோதனனாலும் மாமனர்களான பீஷ்மராலும் புத்திசாலியான விதுரராலும் த்ரோணராலும் க்ருபராலும் பார்க்கப்பட்டேன். பாண்டவரே! நீர் உயிரோடிருக்கும்பொழுதே அப்படிப்பட்ட நான் மாமனர்களுடைய மத்தியிலும் பிராதாக்களுடையமத்தியிலும் மயிரில்பிடித்து ஸபையிலிழுக்கப்பட்டேன். பிறகு, விடப்பட்டு, [1]ராஜ்யத்திலிருந்து காட்டையும் அடைந்தேன். அப்படிப்பட்ட நான் வழிநடையினல்மெலிந்து அரண்யத்தில் கஷ்டத்துடன் வஸித்தேன்; ஜடாஸுரனல் நேர்ந்த துன்பத்தினல் மிகவும் அதிகமான பயத்தையும் அடைந்தேன். பிரபுவே! த்ரௌபதியான என்னைத்தவிர என்னைப்போன்ற

1 இங்கு ஒருசொல் விடப்பட்டது.

வேறு எந்தராஜபுத்ரி அதிக துக்கத்தை அனுபவித்துக்கொண்டு ஜீவித்திருப்பாள்? வனவாஸஞ்செய்து கொண்டிருக்குங்காலத்தில் துராத்மாவான ஸைந்தவனால் நான் அபஹரிக்கப்பட்டேன். இரண்டாவதான இந்தவிபத்தை எவள் பொறுப்பதற்குச் சக்தியுள்ளவளாவாள்? பாண்டுகுமாரரான நீர் ஜீவித்திருக்கும்பொழுதே, நான், மேடுபள்ளமாயிருக்கின்றவைகளும் பிரவேசிக்கமுடியாதவைகளும் துஷ்ட மிருகங்களால் சூழப்பட்டிருக்கின்றவைகளுமான இடங்களில் இரண்டுகால்களாலும் அலைந்துதிரிந்தேன்; அவ்விடங்களில் வனத்திலுண்டான கிழங்குகனிகளை ஆஹாரமாகக்கொண்டு பன்னிரண்டுவர்ஷகாலம் வாஸஞ்செய்து பதின்மூன்றுவது வர்ஷத்தில் ஸைரந்த்ரீவேஷத்துடன் உபஜீவனத்துக்கு ஊழியஞ்செய்பவளாக இந்த நகரத்தை வந்தடைந்தேன். ஸத்யத்தையும்தர்மத்தையும் பிரதானமாகக்கொண்டு நான் அந்யஸ்திரீயை உபாஸிக்கிறேன். பாண்டவரே! நீர் ஜீவித்திருக்கும்போது, நான் விராடராஜனுக்கு நாள்தோறும் 1 கோசீர்ஷகத்தையும், 2 பத்மகத்தையும், 3 ஹரிச்யாமத்தையும், சந்தனத்தையும் அரைக்கிறேன். அப்படிப்பட்ட நான் உம் நிமித்தமாக (அனுபவிக்கும்) அனேகதுக்கங்களை ஆலோசிக்கவில்லை; மத்ஸ்யராஜனுக்கு முன்னிலையில் சூதாடியான அந்தக்கங்கர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கீசகனால் காலாலுதைக்கப்பட்டேன். பாண்டவரே! இவ்வாறு பலவிதமான துக்கங்களால் வருத்தப்படுகிற என்னைப்போன்ற எந்த ஸ்த்ரீதான் உயிரோடிருப்பாள்? குந்திபுத்ரரே! என்னை நீர் அறியவில்லை. நான் உயிரோடிருப்பதால் யாது பயன்? நான் துருபதராஜனுடையபுத்ரி; திருஷ்டத்யும்னனுடைய இளைய ஸஹோதரி; அக்னிகுண்டத்தினின்றும் பிறந்தவள். பூமியில் ஒருபொழுதும் நான் ஸஞ்சரிக்கமாட்டேன்; கீசகனை நீர் கொல்லாவிட்டால் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டாவது ஜலத்தில் விழுந்தாவது உயிரை விடுவேன்; விஷத்தைக் கலக்கிக் குடிப்பேன்; அல்லது, நெருப்பிலாவது விழுவேன். நான் மரத்தின்மீதேறியாவது கீழேவிழுந்து உயிரை விடுவேன். கத்தியிலாவது தேகத்தைப் பிளந்துகொள்வேன். நான் உயிரோடிருப்பதில் யாது பயன்? பாரதரே! புருஷச்ரேஷ்டரே! விராடராஜனுக்கு ஸேனாபதியும் அவனுக்கு மைத்துனனும் அதிக கெட்ட புத்தியுடையவனுமான கீசகன், ஸைரந்த்ரீவேஷத்தோடு ராஜக்ருஹத்தில் வஸிக்கின்ற என்னைக் கெட்ட எண்ணத்

---

1 வாஸனைச் சந்தனம்.

2 தாமரைமலரின் வாஸனைபோன்ற வாஸனையுள்ள சந்தனம்.

3 மாங்கனியின் வாஸனைபோன்ற வாஸனையுள்ள சந்தனம்.

துடன், நாள்தோறும், 'நீ எனக்கு மனைவியாய்விடு' என்று சொல்லுகிறான். பகைவர்களை அழிப்பவரே! கொல்லத்தக்கவனை அவனால் இவ்வாறுசொல்லப்படுகின்ற என்னுடைய மனமானது பரிபாக காலத்தினால் பழுத்தபழம்போலப் பிளக்கப்படுகிறது. குந்திபுத்ரரே! நீர் எனக்கு ரக்ஷகராகவேண்டும். பகைவர்களை வருத்துகிறவரே! முயற்சியற்றவரும் கோபமில்லாதவரும் வீர்ய மற்றவருமான யுதிஷ்டிரரிடம் நான் செல்லமாட்டேன். இப்படிப் பட்ட புத்ரரை ஒருத்தியும் உண்டுபண்ணியிருக்கவேண்டாம். பாண்டவரே! அதிக பலமுள்ளவரே! உம்முடைய கோபத்தையும் பலத்தையும் வீர்யத்தையும் நான் நன்றாக அறிவேன். ஆதலால், உம்முடைய முன்னிலையில் நான் புலம்புகிறேன். புருஷர்களிற் சிறந்தவரே! பாண்டவரே! அறுபது வயது சென்றதும் மதங்கொண்டதும் யூதபதியுமாகிய ஒருயானையானது பூமியில் தள்ளப்பட்டிருக்கின்ற வில்வமரத்தைக் கால்களால் மிதித்து நாசஞ்செய்வதுபோல அவனுடைய தலையைப் பூமியில்தள்ளி இடக்காலினால் தாக்கையும். அந்தக்கீசகன், இரவுவிடிந்து காலையில்எழுந்து உதிக்கின்ற ஸூர்யனைப் பார்ப்பானையின், நான் ஜீவித்திருக்க விரும்பேன். பரதகுலத்திலுதித்தவரே! நீர் இப்பொழுது கீசகனுடைய வதத்தைப்ரதிஜ்ஞை செய்யாமற்போனால் என்னுடைய பிராணன்மீதும் அர்ஜுனருடைய ஸுக்ருதத்தின்மீதும் யுதிஷ்டிரருடைய பாதங்களின்மீதும் நகுலஸஹதேவர்களுடைய உயிர்வாழ்க்கையின் மீதும் ஆணையிடப்பட்டிருக்கிறீர். எவருடைய செய்கையினால் முடிவற்றதான இவ்விததுக்கத்தை நான் அடைந்தேனோ அப்படிப்பட்ட கெட்ட சூதாடினவரும் மூத்ததமையனுமான யுதிஷ்டிரரை நீர் நிந்தனைசெய்யும். எவர்களுக்கு மிகவும் மூதன்மையான ஜ்யேஷ்டன் குலத்தைக் கெடுப்பவனையிருப்பானோ, பயந்தபுத்தியையுடைய அவர்களும் அந்தமூத்தோனையே அனுஸரிப்பார்கள். புத்ரர்களோடும் பசுக்களோடும் பந்துக்களோடுங்கூடின ராஜ்யத்தை எவன்தான் இழந்துவிட்டு மான்தோல் உடுத்துப் பெருங்காட்டில் புகுவான்? எவரிடத்திலுள்ள ஆயிரக்கணக்கான 1 பொருள்களையும் மிகச்சிறந்த மற்றத் தனத்தையும் காலையிலும் மாலையிலும் (பந்தயம்வைத்துச்) சூதாடினாலும் பதினாயிரம்வர்ஷம் சூதாடலாமோ, 2தங்கமும் 3ஹிரண்யமும் வஸ்த்ரங்களும் வாஹனங்களும் காளைகளும் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் குதிரைக்கூட்டங்களும் கோவேறுகழுதைக்கூட்டங்களும் ஒரு காலத்தும் குறைவடையாவோ அப்படிப்பட்ட அந்தயுதிஷ்டிரர் சூதாட்

1 'நிஷ்காந்' என்பதுமூலம். 2, 3 பொன்னின்வகை.

டத்தின் வாயிலாக ஐஸ்வர்யத்தினிடத்தினின்று கீழேதள்ளப் பட்டு மூடர்போலத் தம் செய்கைகளை நினைத்துக்கொண்டு பேசா மலிருக்கிறார். முற்காலத்தில் செல்லுகையில், பதினாயிரம் யானை களும் குதிரைகளும் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்த அவர் இப்பொழுது சூதாட்டத்தினால் ஜீவிக்கிறார். அவ்வாறே, இந்திர ப்ரஸ்தத்தில் ராஜாவாயிருந்த எந்த யுதிஷ்டிரரை அளவற்ற காந்தி யுள்ள லக்ஷம்ஸ்திரீகள் உபாஸித்தார்களோ, எவருடைய மடைப் பள்ளியில் எப்பொழுதும் அனேக ஆயிரக்கணக்கான வேலைக்காரி கள் பாத்ரங்களைக் கையில்கொண்டு இரவும்பகலும் அதிதிகளுக் குப்போஜனம் செய்வித்தார்களோ, எவர் நாள்தோறும் காலையில் ஆயிரக்கணக்கான ஸ்வர்ணங்களைத் தானம்செய்துகொண்டிருந் தாரோ, அப்படிப்பட்ட இந்தத் தர்மராஜர் சூதாட்டத்தினாலுண் டான பெரிய அனர்த்தத்தினால் கவரப்பட்டுக்கொண்டிருக்கிறார். (கேளீக்ருஹத்தில்) கண்வளர்கின்ற இவரைக் காலையில் நன்கு சுத் தம் பண்ணப்பட்ட ரத்நங்களுள்ள காதணிகளை அணிந்தவர்களும் நல்ல குரலுள்ளவர்களுமான அனேக [1]ஸூதர்களும் [2]மாகதர் களும் உபாஸித்தார்கள். ஆயிரம் வாலகில்யர்களும், ஜலத்தில் வஸித்துக்கொண்டு (கடும் தவம் புரிகின்றவர்களான) ஆயிரக் கணக்கான ரிஷிகளும், [3]கற்களால் தானியத்தைத் தேய்த்து உண் பவர்களான ஆயிரக்கணக்கான ரிஷிகளும், வாயுபக்ஷணமுள்ளவர் களான ஆயிரம் ரிஷிகளும், ஆயிரம் ரிஷிபத்நிகளும், ஆயிரம் பிரம்மசாரிகளும், ஆயிரம் மௌனிகளும், ஆயிரம் க்ருஹஸ்தர் களும், [4]ஹம்ஸர்களும், [5]பரமஹம்ஸர்களும், யோகிகளும், பிரா மணர்களும், [6]குடீசகர்களும், [7]பரிவ்ராட்டுக்களும், இன்னும் வனத் தில் ஸஞ்சரிக்கும் மற்றவர்களும், (ஸுகதுக்கங்களில்) ஸமபாவனை யுள்ளவர்களும், அனேகர்களான ஊர்த்வரேதஸுகளும், நான்கு வேதங்களையும் அறிந்தவர்களும் சிக்ஷை மீமாம்ஸை இவைகளின் கரையைக் கண்டவர்களுமான பிராம்மணர்களும், [8]க்ரமபாடிக ளானவிப்ரர்களும், ஸாமங்களை அத்யயனஞ்செய்கின்ற ஆயிரக்கண க்கான ரிஷிகளும், தவத்தையும் வேதாத்யயனத்தையுமுடையவர்க ளும் எல்லாவிருப்பங்களுடனும் எவருடைய ஸபையைவந்தடைந்து எப்பொழுதும் ஸபையோர்களாயிருந்தார்களோ, எந்தயுதிஷ்டிரர் கருணையினால் தம்ராஜ்யத்திலுள்ள எல்லாக்குருடர்களையும் வயது சென்றவர்களையும் நாதனற்றவர்களையும் துக்கமடைந்தவர்களையும்

---

1 பௌராணிகர்கள். 2 வம்சாவளியைக்கீர்த்தனம் செய்பவர்கள்.

3 அநுசாஸனபர்வம் 709-ம் பக்கம் குறிப்பிற்காண்க. 4, 5, 6, 7 துற விகளின் வகைகள். 8 வேதம் ஓதுவதின் ஒருமுறையைக் கற்றவர்.

அன்னத்தைவிரும்புகின்றவர்களையும் எப்பொழுதும் போஷித்தாரோ அப்படிப்பட்டயுதிஷ்டிரர் மத்ஸ்யராஜனுடைய வாஸஸ்தானத்தை அடைந்து, 'கங்கர்' என்கிற பெயர்பூண்டு (அந்தமாத்ஸ்யனுக்குப்) பரிசாரகராக (அவனுடைய) ஸபையில் வணக்கமுள்ளவராயிருக்கிறார். இந்திரப்ரஸ்தத்தில் வஸிக்குங்காலத்தில் மற்ற அரசர்களெல்லாரும் எவருக்குக் கப்பம்கொடுக்கிறவர்களானார்களோ அவர் அன்யர்களிடத்திலிருந்து (தம்முடைய) ஜீவனத்தை விரும்புகிறார். பூமியில் பிரஸித்திபெற்ற அரசர்கள் எவருக்கு வசப்பட்டிருந்தார்களோ அந்தயுதிஷ்டிரர்இப்பொழுது அன்னியராஜாக்களுக்கு வசப்பட்டுப் பரவசராயிருக்கிறார். எந்த யுதிஷ்டிரர் ஸூர்யன் தேஜஸினால் பூமி முழுவதையும் ஆக்ரமிப்பதுபோல (த்தம்முடைய பிரதாபத்தினல்) பூமண்டல முழுவதையும் அடைந்து விளங்கினரோ அந்தயுதிஷ்டிரர் இப்பொழுது விராடராஜனுடைய ஸபையிலுள்ளவராயிருக்கிறார். பாண்டவரே! எந்த யுதிஷ்டிர ராஜரைச் சிறந்த ரிஷிகள் ஸபையில் உபாஸித்தார்களோ பாண்டுபுத்ரரான அந்தயுதிஷ்டிரர் இப்பொழுது வேறொருவனை உபாஸிக்கிறார்; பாரும். தோஷமற்றவரும் மஹாபுத்தியுள்ளவரும் ஜீவிப்பதற்காக மறைந்திருக்கின்றவரும் தர்மராஜருமான யுதிஷ்டிரரைப் பார்த்து எவனுக்குத்தான் துயரம் உண்டாகாது? பரதருடைய வம்சத்தினுதித்தவரே! ஸபையில்வீற்றிருக்கும் எவரை முன்பு பூமிமுழுதும் உபாஸித்ததோ பரதகுலத்தினுதித்த அவர் இப்பொழுது வேறொருவனை உபாஸித்துக்கொண்டிருக்கிறார்; பாரும். பீமஸேனரே! இவ்வாறு பலவிததுக்கங்களால் பீடிக்கப்படுகின்றவளும் நாதனற்றவள் போலிருப்பவளும் சோகமாகிறகடலினுடைய மத்தியிலிருப்பவளுமான என்னை நீர் ஏன் பார்க்கவில்லை? பாரதரே! உம்மிடத்தில் நான் சொல்லப்போகிற இது எனக்கு அதிக துக்கத்தைக் கொடுக்கிறதாயிருக்கிறது. என்னிடத்தில் உம்மால் அஸூயை பாராட்டத்தக்கதன்று. நான் இந்த விஷயத்தைத் துக்கத்தால் சொல்லுகிறேன். நீர் (விராடராஜனுடைய) அரண்மனையில் கேகய ராஜகுமாரியான ஸுதேஷ்ணை பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே புலிகளோடும் எருமைக்கடாக்களோடும் யானைகளோடும் எப்பொழுதும் யுத்தஞ்செய்கிறீர். அப்பொழுது எனக்கு மயக்கமுண்டாகிறது. என்னுடைய நிலைமையைப் பார்த்து அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகள் நகைக்கிறார்கள். பிறகு, கைகேயியானவள் எழுந்திருந்து மயக்கத்தினுல் கவர்ந்துகொள்ளப்பட்டவள்போன்றவளும் தோஷமற்ற அங்கங்களுள்ளவளுமான என்னைப் பார்த்து அப்பொழுது அழகிய மந்தஹாஸத்

துடன் அங்குள்ள எல்லாஸ்த்ரீகளையும் நோக்கி, 'ஏ! பரிசாரிகைகளே! ஸைரந்திரியானவள், ஒரிடத்தில் வஸிப்பதினாலுண்டான ஸ்நேஹத்தினால், யுத்தஞ்செய்கின்றவனும் மஹா வீர்யமுடையவனுமான இந்த வல்லனைப்பார்த்து மிகவருந்துகிறாள். ஸைரந்த்ரி நல்லரூபமுடையவள். வலலனும் ஸுகந்தரன். ஸ்த்ரீகளுடைய மனமானது அறிவதற்கு அரிதானது. இவ்விருவர்களும் (ஒருவருக்கு ஒருவர்) இணைந்தவர்களென்று நான் எண்ணுகிறேன். ஸைரந்த்ரியானவள் ப்ரியனான வலலன் (மிருகங்களோடு சண்டை செய்துகொண்டு) ஸமீபத்தில் வஸிக்கும்காலத்தில் உருக்கமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறாள். இந்தராஜக்ருஹத்தில் இவ்விருவர்களும் ஒரே ஸமயத்தில் (வந்துசேர்ந்து) வாஸஞ் செய்துவருகின்றார்கள்' என்று சொல்லுகிறாள். இவ்விதமான சொற்களைச்சொல்லி அந்த ஸுதேஷ்ணையானவள் என்னைப்பற்றித் தினந்தோறும் பேசுகிறாள். கோபித்துக்கொள்வேனையாகில் என்னைப்பார்த்து உமது விஷயத்தில் என்னிடத்தில் ஸ்நேஹம் கொள்ளுகிறாள்' என்று கூறினாள். அவள் அவ்வாறு சொல்லுங்காலத்தில் பயங்கரமான பராக்ரமமுள்ள பீமன் கோபத்தினால் சிவந்த கண்களுடன் ஒருவார்த்தையும் சொல்லவில்லை. திரௌபதியானவள், பீமன் கோபங்கொண்டானென்பதை அறிந்து திரும்பவும் (அவனைப்பார்த்து,) 'யுதிஷ்டிரரால் உண்டுபண்ணப்பட்ட துக்கத்தில் முழுகினவளான நான் இனிப் பிழைத்திருப்பதற்கு விரும்பவில்லை. ஒப்பற்ற ரதிகராயிருந்து எல்லாத்தேவர்களையும் மனிதர்களையும் ஜயித்தவரும் யௌவனமுடையவருமான அந்த அர்ஜுனர், (நபும்ஸக) வேஷத்தால் மறைந்துகொண்டு விராட ராஜனுடைய கன்னிகைகளுக்கு நர்த்தனம் கற்பிக்கின்றவராகவும் அவர்களுக்கு ஊழியம் செய்கிறவராகவும் இருக்கிறார். அளவிட முடியாத பலத்தையுடையவரும் காண்டவவனத்தில் அக்னியைத் திருப்தியடையச் செய்தவரும் ப்ருதையின் குமாரருமான அர்ஜுனர், கிணற்றிலுள்ள நெருப்புப்போல அந்தப்புரத்தை அடைந்து பிரகாசமற்றிருக்கிறார். எந்தப்புருஷஸ்ரேஷ்டரிடத்திலிருந்து எப்பொழுதுமே பகைவர்களுக்குப் பயமுண்டோ அந்தத் தனஞ்சயர் உலகத்தார்களால் இகழப்பட்ட வேஷத்தோடிருக்கிறார். எவருடைய நாணொலியைக் கேட்டுப் பகைவர்கள் நடுக்கமுற்றார்களோ அந்த அர்ஜுனர் பெடிவடிவத்தை அடைந்தவரும் நர்த்தனத்துடன் பாடுகிறவருமாயிருப்பதைக் கண்டு என்மனமானது நல்ல நிலைமையை அடையவில்லை. ஸ்த்ரீகள் அவருடைய கானஸ்வரத்தினால் ஸந்தோஷமடைந்து (அவரையே) நாற்

புறத்திலும் சூழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். எவருடைய முடியில் ஸூர்யனுக்கொப்பான கிரீடம் விளங்கியதோ அந்தத் தனஞ்சயர் இப்பொழுது பின்னலால் விகாரமாக்கப்பட்டிருக்கின்ற நுனிமயிர்களுடன் கூடியவராயிருக்கிறார். திவ்யாஸ்திரங்களனைத்தும் நிலைபெற்றிருக்கின்ற மஹாபுருஷரும் எல்லா வித்தைகளுக்கும் ஆதாரமாயிருக்கின்றவருமான எவர் குண்டலங்களைத் தரித்து வந்தாரோ, பூமியில் தேஜஸினால் ஒப்பற்றவரான எவரை, பேரலைகள் கரையைத் தாண்டார்ததுபோல, ஆயிரக்கணக்கான அரசர்கள் யுத்தகளத்தில் மீறி நடக்கமாட்டார்களோ, யௌவனமுடையவரான அந்த அர்ஜுனர் பேடிவடிவத்தால் மறைக்கப்பட்டு, விராடராஜனுடைய கன்னிகைகளுக்கு நர்த்தனம் கற்பிக்கின்றவரும் அவர்களுக்கு ஊழியம் செய்கின்றவருமாயிருக்கிறார். பீமஸேனரே! எவருடைய தேரொலியினால் பர்வதங்களோடும் காடுகளோடும் இடைவெளியோடும் ஸ்தாவரங்களோடும் ஜங்கமங்களோடுங் கூடியிருக்கின்ற பூமி நடுங்கியதோ, சிறந்த வில்லுள்ளவரான எவர் பிறந்தவுடனே குந்திதேவிக்கு அன்பானது பெருகியதோ உம்முடைய இளைய ஸஹோதரரான அந்த அர்ஜுனர் இப்பொழுது என்னைக் குறித்துத் துக்கமடையவில்லை. அலங்காரங்களாலும் நாற்புறமும் புரண்டு கொண்டிருக்கின்ற குண்டலங்களாலும் அலங்கரிக்கப்பட்டும் சங்கு வளையைக் கையிலணிந்துகொண்டும் வருகின்ற அவரைக் கண்டு என் மனம் வாடுகிறது. பின்னலாகத் திரிக்கப்பட்ட நுனிமயிருள்ளவரும் கன்னிகைகளால் சூழப்பட்டவரும் முன்பு பயங்கரமான வில்லைக் கையிலேந்தியவருமான அர்ஜுனரைக் கண்டு என் மனமானது துக்கத்தை அடைகிறது. தேவதையினுடைய ரூபம் போன்ற ரூபத்தையுடையவரும் பெண்யானைகளால் நாற்புறத்திலும் சூழ்ந்து மறைக்கப்பட்ட ஆண்யானைபோலக் கன்னிகைகளால் நான்குபக்கத்திலும் சூழப்பட்டு ஸங்கீதகோஷ்டியின் மத்தியிலிருந்து, அந்தச் சபையில் வந்திருக்கின்ற மத்ஸ்யதேசாதிபதியான விராடனை (க்கீர்த்தனங்களால்) பாடுகின்றவருமான இந்தப் பார்த்தரை நான் பார்க்கும்பொழுது என் மனமானது மயக்கத்தையடைகிறது. சிறந்தவரான குந்திதேவியார், தனஞ்சயர் ஆபத்தடைந்திருப்பதையும், கெட்டசூதாட்டத்தை விளையாட்டாகக்கொண்டவரும் குருகுலத்தில் உதித்தவருமான அஜாதசத்ரு (ஆபத்தில்) முழுகியிருப்பதையும் அறியவில்லையென்பது நிச்சயம். பகைவர்களனைவர்களையும் அழிக்கும் திறமையுள்ளவரும் அளவிடமுடியாத பெளருஷமுள்ளவருமான பார்த்தர் ஒரு ரதத்தை ஸஹாயமாகக்கொண்டு ஐந்த்ரம், வாருணம், வாயவ்யம், ப்ராம்

மம், ஆக்னேயம், வைஷ்ணவம் என்கிற திவ்யாஸ்த்ரங்களால் அக்னியைத் திருப்தியடையச் செய்யப் பகைவர்களனைவர்களையும் ஜயித்தார். பாரதரே! வாஸுதேவரைத் துணையாகக்கொண்ட எந்த அர்ஜுனர் ஒரு ரதத்தைத் துணையாகக்கொண்டு கௌரவ ரம், வைஷ்ணவம், சைவம் ஆகிய அஸ்த்ரங்களையும் மற்ற அஸ்த் ரங்களையும் அஸ்த்ரவீர்யத்தையும் காண்பித்துக்கொண்டும் திவ்ய மான காந்தர்வம், வாயவ்யம், வைஷ்ணவம், ப்ராம்மம், பாசு பதம், ஸ்தூணகர்ணம் என்கிற அஸ்திரங்களையும் வெளிப்படுத்திக் கொண்டும் கோரரூபமுடையவர்களும் மஹாபலசாலிகளும் இந்தி ரனுக்கு விரோதிகளுமான பௌலோமர்களையும் காலகேயர்களை யும் நிவாதகவசர்களையும் ஜயித்தாரோ அப்படிப்பட்ட பார்த்தர் கிணற்றிலிட்ட நெருப்புப்போல் அந்தப்புரத்தை அடைந்து பிர காசமற்றிருக்கிறார். அதிகமானபலமும் பராக்ரமமுமுடையவரும் கடுந்தவம்புரிந்து சூலபாணியான சங்கரரை யுத்தத்திலல் ஸந் தோஷிக்கச் செய்தவரும் பசுக்கொட்டில்களில் பெரிய காளைபோ லக் கண்ணிமாடத்தைஅடைந்திருக்கின்றவரும் ஸ்திரீவேஷத்திலல் விகாரத்தையடைந்தவருமான பார்த்தரைக்கண்டு என் மனம் குந்திதேவியை நாடுகிறது. எவர் எப்பொழுதும் ரூபம், அஸ்திரம், மேதை இம்மூன்றையுமுடையவரோ அந்தநகுலர் விராடனுடைய குதிரைகளைக் கட்டுகிறார். காலத்தினுடைய வேறுபாட்டைப் பாரும்! ராஜகன்னிகைகளும் தாஸிகளும் வைப்ய கன்னிகை களும் சிறப்புள்ள எல்லா ஸ்திரீகளும் எந்தத் தாமக்ரந்திக்கு வசப் பட்டிருந்தார்களோ, விராடனை அடைந்து குதிரைகளைக் காண்பித் துக்கொண்டு ஸைவகத்தொழிலில் இருக்கின்றவரும் தர்மராஜர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே வேகத்தோடு குதிரைகளை நடைகளில் பழக்குகின்றவருமான எந்தத் தாமக்ரந்தியைப் பார் ப்பதற்கு ஜனக்கூட்டங்கள் நான்குபக்கத்திலும் சூழ்ந்திருக்கின் றனவோ அப்படிப்பட்ட நகுலரைக்கண்டு நான் துக்கிக்கிறேன்; புலம்பவும் புலம்புகிறேன். பார்த்தரே! பகைவர்களை வாட்டு பவரே!' அவ்விதமாகவே யுத்தஞ்செய்கிறவர்களுள் உத்தமரும் இளையவருமான ஸஹதேவரைக் கண்டாவது ஸுகமுள்ளவளா யிருக்கிறேன்' என்று நீர் என்னை எண்ணுகிறீரா? என்ன? பாண்டவரே! பசுக்களிடங்களில் இடையன்வேலைபார்ப்பவரும் கன்றின் தோலிலும் பூமியிலும் படுப்பவருமான அந்த ஸஹ தேவரைக் கண்டு துக்கத்தாலும் சோகத்தாலும் கவரப்பட்ட அங்கங்களையுடையவளாக நான் வெண்ணிறம் அடைந்தேன். மஹா பாக்யமுள்ளவரே! உண்மையான பராக்ரமத்தையுடைய ஸஹதேவர் எந்தக் காரணத்திலல் இவ்விதமான துன்பத்தை

அடைந்தாரோ அப்படிப்பட்டபாபமானது அவருக்குஇருப்பதாக நான் அவருடையசரித்ரங்களை அடிக்கடி ஆலோசித்தும் காண்கிறேனில்லை. பரதஸ்ரேஷ்டரே! பசுக்களின்மத்தியில் பெருங்காளை போல மத்ஸ்யராஜனுல் பசுக்களிடத்தில் (ரக்ஷகராக) ஏற்படுத்தப் பட்டவரும் மிகுந்தகோபமுள்ளவரும் சிவந்தகண்களையுடைய வரும் கோபாலர்களுக்கு முன்செல்பவரும் விராடனை ஸந்தோஷிக் கச் செய்கின்றவருமான உம்முடைய பிரியமானதம்பியைக்கண்டு நான் துக்கத்தை அடைகிறேன். என்மனத்தில் கொதிப்புண்டா கிறது. மாமியாரான குந்திதேவியானவர் வீரரானஸஹதேவரைக் குறித்து, 'பாஞ்சாலி! இந்த ஸஹதேவன் மஹாவம்சத்தில் பிறந்த வன்; நீதிமான்; 1 சீலமுடையவன்; அகார்யத்தில் வெட்கமடை கிறவன்; உத்தமன்; தர்மத்தை அனுஷ்டிப்பவன்; என்னுடைய ப்ரீதிக்குப்பாத்ரமாயிருப்பவன். அப்படிப்பட்ட இந்தஸஹதேவன் அரண்யங்களில் ராத்ரிகாலங்களிலும் உன்னல் பாதுகாக்கப்படத் தக்கவன்' என்று எப்பொழுதும் என்னிடம் புகழ்ந்திருக்கிறார். மேலும், புத்ரரிடத்தில் அதிக அன்புள்ளவரான குந்திதேவியார் அங்குநின்று அழுதுகொண்டே, மஹாரண்யவாஸத்தைக்குறித் துப்புறப்பட்ட ஸஹதேவரைக்கட்டிக்கொண்டு, என்னைப்பார்த்து, 'பாஞ்சாலி! இவன், மென்மையுள்ளவன்; சூரன்; அரசனை அனு ஸரித்திருப்பவன். ஜ்யேஷ்டனைப் பூஜிக்கின்றவனும் வீர்யமுடைய வனுமான இந்தஸஹதேவனை நீயே நேராகப் போஜனம்செய்யும் படி செய்' என்று இவ்வாறு சொல்லியிருக்கிறார். பாண்டவரே! பசுக்களிடங்களில் இடையன்வேஷம் பூண்டிருக்கின்றவரும் யுத் தஞ்செய்கிறவர்களுள் உத்தமருமான அப்படிப்பட்ட ஸஹதேவ ரைப்பார்த்து நான் உயிரோடிருப்பேனே? யுதிஷ்டிரார்நிமித்தம் இவ்வாறு அனேகதுன்பங்களை அடைந்தேன். பரதகுலத்தில் உதித்தவரே! பின்னும், நாள்தோறும் வ்ருத்தியடைந்திருக்கின்ற துக்கங்களைக்கேளும். குந்திபுத்ரரே! அந்தத்துக்கங்கள் என்னி டத்தில் நாள்தோறும் வளர்ந்துகொண்டிருக்கின்றன. மற்றத்துக் கங்களையும் சொல்லுவேன். நீங்கள் ஜீவித்திருக்கும்பொ ழுதே பற்பலதுக்கங்கள் என்சரீரத்தை வறளும்படிசெய்கின்றன. அதைக்காட்டிலும் மிகுந்த துக்கம் என்னஇருக்கிறது? ஒருபர்த்தா வையுடையஸ்திரீ ஸுகமாகவேஇருக்கிறாள். எனக்கு ஐந்துகணவர் கள் இருக்கிறார்கள். இருந்தும், என்னுடைய துயரமானது முடி வற்றதாயிருக்கிறது.

---

1 வேறுபாடம்.

இருபத்துமூன்றுவது அத்யாயம்.
கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதி, தன் வைபவத்தைநினைக்தும்படி செய்து
கீசகனைக்கொல்லும்படி பீமனை வற்புறுத்தியது.)

நான், சூதாடியான யுதிஷ்டிரர்நிமித்தம் ஸைரந்த்ரிவேஷத்
தோடு அந்தப்புரத்தில்வஸித்துக்கொண்டு ஸுதேஷ்ணைக்கு வசப்
பட்டிருக்கிறேன். பகைவர்களேவாட்டுகின்றவரே! ராஜகுமாரியான
என்னுடைய நிலைமையின் கடுமையான மாறுட்டத்தைப்பாரும்.
நான்காலத்தைஎதிர்பார்த்துஎல்லாத்துக்கங்களையும்பொறுத்துக்
கொண்டிருக்கிறேன். மனிதர்களுடைய விபவங்களும் துயரங்களும்
நிலையற்றனவென்றெண்ணி மீண்டும் பர்த்தாக்களுக்குநேரக்கூடிய
அபிவ்ருத்தியை எதிர்பார்த்திருக்கிறேன். ஐஸ்வர்யங்களும் வ்யஸ
னங்களும் சக்ரம்போலச் சுழன்றுகொண்டிருக்கின்றனவென்று
நினைத்து மீண்டும் பர்த்தாக்களுக்கு வரக்கூடிய மேம்பாட்டை
எதிர்பார்த்திருக்கின்றேன். ஒருமனிதனுக்கு எது தோல்விக்குக்
காரணமோ அதுவே வெற்றிக்குக்காரணமாகிறதென்று எண்ணி
(வரக்கூடியநன்மையை) எதிர்பார்த்திருக்கின்றேன். 'கால
வசத்தால், பிறருக்குக்கொடுத்துவந்தபுருஷர்கள் பிறரிடமிருந்து
யாசிக்கின்றவர்களும்,(பிறரை) அடித்தவர்கள் பிறரால்அடிக்கப்படு
கின்றவர்களும்,(பிறரைத்)தள்ளினவர்கள் பிறரால்தள்ளப்படுகின்ற
வர்களுமாகின்றனர்' என்று கேட்டிருக்கிறேன். 'தெய்வத்துக்குச்
செய்வதற்கரிதானது ஒன்றுமில்லை. அதனைத்தாண்டிச்செல்வதும்
மிக்கஅஸாத்யமே' [1]என்றெண்ணி மறுபடியும்நல்ல அத்ருஷ்டத்தி
னுடையவரவை எதிர்பார்த்திருக்கிறேன். எந்தஇடத்தில் முந்தி
ஜலமிருந்ததோ அந்தஇடத்தில் மறுபடியும் ஜலம் நிற்கிறதில்லை
யென்கிற மாறுபாட்டை எண்ணிக்கொண்டு மீண்டும் அபிவருத்தி
யை எதிர்பார்த்திருக்கிறேன். நன்முக முயற்சிசெய்யப்பட்டிருந்
தாலும் எவனுடையபிரயோஜனம் தெய்வத்தால் அழிக்கப்படுகிற
தோ விவேகமுள்ள அவன் தெய்வம் அனுகூலமாவதற்காக எப்
பொழுதும் முயற்சிசெய்யவேண்டும். இப்பொழுது சொல்லிய என்
னுடையவசனத்துக்கு யாதுபயனுளது? துக்கமுடையவளானஎன்
னைக்கேளும். கேளாமலிருந்தாலும் நான்உமக்குச்சொல்லுகிறேன்.
நான் பாண்டுபுத்ரர்களுக்குப் பட்டமஹிஷியும் துருபதமஹாராஜ
ருக்குப் புத்ரியுமாயிருந்தும் இவ்விதமான நிலைமையை அடைந்

---

1 'என்று தெய்வத்தைப்புகழும் சாஸ்த்ரத்தை நம்புகிறேன்' என்
பது பழைய உரை.

திருக்கிறேன். என்னைத்தவிர வேறு எந்த ஸ்த்ரீ உயிரோடிருக்க விரும்புவாள்? பகைவர்களை அடக்குகிறவரே! பாரதரே! என்னுடைய சோகமானது கௌரவர்களனைவர்களையும் விட்டுவிட்டுப் பாஞ்சாலர்களையும் பாண்டவர்களையும் வந்து அடைந்திருக்கிறது. நான் பிராதாக்களாலும் மாமனார்களாலும் அநேகபுத்ரர்களாலும் சூழப்பட்டிருக்கிறேன். இப்படி [1]பந்துக்களோடுகூடிய எந்த ஸ்த்ரீதான் இவ்வாறு துக்கத்தை அனுபவிப்பாள்? பரதஸ்ரேஷ்டரே! நிச்சயமாக நான் இளமைத்தன்மையினல் பிரம்மதேவருக்கு அப்ரியமானகார்யம் செய்திருக்கவேண்டும். (ஆகையினல் தான்,) அவருடையபிரபாவத்தினல் (இப்படிப்பட்ட) கெட்ட நிலைமையை அடைந்திருக்கிறேன். பாண்டவரே! என்னுடைய நிறமும் விகாரமும் எவ்விதமாயிருக்கின்றனவென்பதைப் பாரும். இவ்விதமானநிறமும் விகாரமும், முன்சேர்ந்த மிக்க கஷ்டமான அப்படிப்பட்டவனவாஸத்திலும் உண்டாகவில்லை. பீமஸேனரே! பார்த்தரே! முற்காலத்தில் நான் எவ்விதமான ஸுகத்தை அனுபவித்தேனென்பதை நீரே அறிந்திருக்கிறீர். அவ்விதமானநான் இப்பொழுது அடிமைப்பட்டிருக்கிறேன்; என் மனத்துக்கு ஆறுதலுண்டாகவில்லை. பயங்கரமான வில்லையேந்திய குந்திபுத்ரரான தனஞ்சயர் அந்தமஹாசபையில் தணிந்தநெருப்புப்போல (வீர்யமற்றவராக) இருந்தவிஷயத்தையும்தெய்விகமென்றே நான்எண்ணுகிறேன். பார்த்தரே! பிராணிகளுடையகதியானது மனிதர்களால் அறிவதற்கு ஸாத்யமாகாது. எதிர்பாராமல் உங்களுக்கு நேர்ந்திருக்கின்ற இந்த ஆபத்தைப்பாரும். இந்திரனுக்கொப்பான நீங்கள் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருந்த முகத்தையுடையவளும் சிறந்தவளும் நல்லவளுமானநான் தாழ்ந்தவர்களான வேறு பெண்களுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். பகைவர்களுடைய கர்வத்தை அழிப்பவரே! பாண்டுநந்தனரே! நீங்களும் பாஞ்சாலர்களும் உயிரோடிருக்கும்பொழுது நான் அடையத்தகாததான என்னுடைய நிலைமையை நீர் பாரும். ஸமுத்ரம்வரையிலுள்ள பூமண்டலம் எவளுக்கு வசப்பட்டிருந்ததோ அப்படிப்பட்ட பாஞ்சாலியானவள் இப்பொழுது ஸுதேஷ்ணைக்கு வசப்பட்டிருக்கிறாள். எவளுக்கு முந்திச்செல்லுகின்றவர்களும் பின் தொடர்ந்துவருகின்றவர்களுமிருந்தார்களோ அப்படிப்பட்டநான் இப்பொழுது ஸுதேஷ்ணைக்கு முந்தியும்பிந்தியும் சென்றுகொண்டிருக்கிறேன். குந்திபுத்ரரே! என்னல் பொறுக்கக்கூடாததான மற்றொருதுக்கத்தையும் கேளும். குந்திதேவிக்கல்லாது என்தேவ

1 'மேன்மைபொருந்திய' என்பது பழைய உரை.

த்துக்காகக்கூடச் சந்தனமுதலானவற்றை ஒருகாலமும் அரைத்த வளல்லாதநான் இப்பொழுது (ஸுதேஷ்ணைக்குச்) சந்தனத்தை அரைத்துக்கொண்டிருக்கிறேன். உமக்கு மங்களம் உண்டாகட்டும். குந்திபுத்ரரே! என்கைகளைப்பாரும். இதற்குமுன் என்கைகள் இவ்விதமிருந்ததில்லை' என்றுசொல்லிவிட்டு, தழும்பேறியிருக்கிற இருகரங்களையும் பீமஸேனனுக்குக் காண்பித்தாள். 'குந்திதேவிக்காவது உங்களுக்காவது ஒருபொழுதும் பயப்படாதநான், இப்பொழுது, 'சந்தனமானது என்னால் நன்றுகச் சேர்க்கப்பட்டிருக்கிறதோ, இல்லையோ, விராடமஹாராஜன் என்னை என்னசொல்லப்போகிறானே' என்று நடுங்கிக்கொண்டு அவனுடைய முன்னிலையில் கிங்கரியாக நிற்கின்றேன். வேறுருவரால் சேர்க்கப்பட்ட சந்தனமானது விராடராஜனுக்கு விருப்பமாயில்லையாம்' என்றுசொன்னாள்.

கோபமுள்ளவளான அந்தக்ருஷ்ணையானவள், தன்னுடையதுக்கங்களைப் பீமஸேனனிடத்தில்சொல்லி அவனுடைய மார்பைத் தழுவிக்கொண்டு மெதுவாக அழுதாள். அவள் பீமஸேனனுடைய 1மார்புடன் (தன்மார்பைச்) சேர்த்துக்கொண்டு அடிக்கடி பெருமூச்சுவிட்டுப் பாஷ்பத்தினால் (தடுக்கப்பட்டதும்) மதுரமுமானவாக்கினால் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள். 'பாண்டவரே! பீமஸேனரே! பாக்யமற்றவளானநான் மரிக்கவேண்டியதருணத்தில் உயிரோடிருக்கிறகாரணத்தினால் முற்காலத்தில் தேவதைகள்விஷயத்தில்நான்பெரியபாபம் செய்திருக்கவேண்டும். கீசகனை நீர் கொல்லாவிட்டால் நான் என் சரீரத்தை விட்டுவிடுவேன்; விஷத்தைக் கலக்கிக் குடிப்பேன்; அல்லது, நெருப்பில் புகுவேன். நான் பாக்யமற்றவள்; புண்யமற்றவள்; எப்பொழுதுமே துக்கத்தை அனுபவிப்பவள்; மனத்துக்கு ஆறுதலில்லாதவள். பாபத்தில் முழுகியிருக்கின்றவளான எனக்கு உயிரால்யாது பயன்?' என்றுசொல்லி, தழும்புபட்ட இரண்டுகைகளையும் அவனுக்குக் காண்பித்தாள். பகைவர்களைக்கொல்லுகிறவனை விருகோதரன் நடுக்கமுற்றிருக்கின்ற அவளுடைய 2பருத்தனவும் தழும்பேறினவுமான இருகரங்களையும் முகத்தில் ஒத்திக்கொண்டு அழுதான். வீர்யமுடையவனை குந்திபுத்ரன் அவளுடைய இருகரங்களையும் பிடித்துக்கொண்டு கண்ணீரையும் துடைத்து அதிகதுக்கத்தால்வருந்தி, பின்வருமாறு உரைக்கலானான்.

---

1 'ஹ்ருதயத்தை நடுக்கமுறச் செய்துகொண்டு' என்பது பழைய உரை. 2 'இளைத்தனவும்' என்பது வேறுபாடம்.

இருபத்துநான்காவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதிக்தும் பீமனுக்தும் ஸம்வாதமும், திரௌபதி கீசகனைக் கொல்வதற்த வற்புறுத்தியதும்.)

பீமஸேனன், அந்தப் பாஞ்சாலியைத் தேறுதலடையச் செய்து, வசனிக்கலானான். 'கல்யாணி![1] நேர்த்தியான இடையையுடையவளே! கேள். ஸபையில் வந்திருக்கின்ற உன்னைப்பார்த்து அந்தஸமயத்தில் கோபத்தினால் நான் மத்ஸ்யதேசத்தார்களுக்குப் பெரிய நாசத்தைச்செய்யக்கருதி ஆலோசித்தேன். நான் ஒருமரத்தை உற்றுப்பார்த்தேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். அந்தஸமயத்தில் என்னைத் தர்மராஜர் கடைக்கண்ணால் தடுத்தார். அதனை அறிந்து நான் தலைகுனிந்துகொண்டு சும்மா மடைப்பள்ளி வந்துசேர்ந்தேன். பெண்ணே! இப்பொழுது யான் சொல்லப்போகிற என்னுடைய வேறொரு பிரதிஜ்ஞையைக்கேள். உன்னுடைய இந்த இரண்டு கைகளும் முன்பு சிவப்பு நிறமுடையனவாயிருந்து இப்பொழுது தழும்பேறினவாகச் செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால் என்னுடைய பாஹுபலத்தையும் பல்குனனுடையகாண்டீவத்தையும் நிந்திக்கவேண்டும். விராடனுடைய ஸபையில் மூந்தியே (கீசகன் முதலான பாபிகளுக்கு) பெரிதான துன்பத்தை உண்டுபண்ணமலிருந்தேனென்பது இப்பொழுது என்னை எரிக்கிறது. அதனை இப்பொழுது செய்கிறேன். அந்த ஸமயத்தில் குந்திபுத்ரரான யுதிஷ்டிரர் என்னைப்பார்த்தார். அதற்கு ஒருகாரணம்எனக்குத்தோன்றியது. அவருடைய அவ்விதமான கருத்தை அறிந்து நான் அவருடைய ஆணையில் கட்டுப்பட்டு நின்றுவிட்டேன். கல்யாணி! ராஜ்யத்தினின்று வெளிப்பட்டதும், கௌரவர்களைக் கொல்லாமலிருந்ததும், துர்யோதனன் கர்ணன் ஸுபலனுடைய புத்ரனை சகுனி பாபியான துச்சாஸனன் இவர்களுடைய தலையை இடறுமலிருந்ததும், மார்பில் அடிக்கப்பட்ட முளைபோல என்னை வருத்துகின்றன. சிறந்த இடையுடையவளே! மேலும், என்னுடைய மற்றொரு வார்த்தையை நீ நினைக்கிறாயா? கிருஷ்ணையே! (முன்பு ஒரு ஸமயத்தில்) பரிசுத்தமான ஸரஸ்வதிநதிக்கரையில் நாம் ஒன்றுசேர்ந்து புறப்பட்டுப் போனோம். அப்பொழுது, நான், எல்லாத் துயரங்களையும் நினைத்துக்கொண்டு, 'பாஞ்சாலி! நான் தர்மராஜாவான யுதிஷ்டிரரையும் தனஞ்சயனை

---

1 'வராரோஹே' என்பது மூலம். இதற்கு, 'சிறந்தவளே!' என்றும் பொருளுண்டு.

யும் மாத்ரிபுத்ரர்களும் பிராதாக்களுமான நகுல ஸஹதேவர்களை யும் அனுஸரிக்கமாட்டேன்' என்று சொன்னேன். கிருஷ்ணையே! இவ்விதமான நிச்சயத்தைச் செய்து யுதிஷ்டிரரையும் நிந்தித் தேன். அப்பொழுது (அகார்யத்தில்) லஜ்ஜையுள்ளவரும் தர்மஞ் தனரும் அரசருமான யுதிஷ்டிரர் என்னுடைய கொடிய வார்த் தையைக் கேட்டு, சிறந்த பொருளுள்ள வார்த்தையைச் சொல்லி, தெளம்யமுனிவர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, பிராதாக் களனைவர்களையும் ஸமாதானம் அடையச் செய்தார். ஏ! ராஜ பத்னி! உலகங்களிலுள்ள எல்லாச் சாஸ்திரங்களாலும் பிரதி பாதிக்கப்பட்ட குணங்களுள்ளவளான நீ துயரமடையாதே. பூமி யில் ஒப்பற்றதான ஸத்யம் நம்மால் ஒன்றுசேர்ந்து காப்பாற்றத் தக்கது. நாங்கள் மனத்தேறுதலை அடைவிக்கப்படும்போது நீயும் மனத்தேறுதலை அடைவிக்கப்படுவாய். அழகிய இடையுடையவ ளே! விசாலமான புத்தியுடையவளே! தர்மத்தை விடாதே. கோபத்தை விட்டுவிடு. கல்யாணி! யுதிஷ்டிர மஹாராஜர், உன் னிடத்தினின்று இப்படிப்பட்ட நிந்தையை முழுதும் கேட்பாரா னால் உயிரை விட்டுவிடுவர். அழகிய இடையுடையவளே! தனஞ்சய னுவது நகுலஸஹதேவர்களாவது கேட்பார்களானால், அவர்களும் உயிரை விட்டுவிடுவார்கள். அழகிய இடையுடையவளே! இவர்கள் லோகாந்தரத்தை அடைந்தால் நான் உயிரோடிருப்பதற்குச்சக்தி யுள்ளவனுகப்போகிறதில்லை. பாஞ்சாலி! கௌரவமுடையவளே! நான் உனக்குச் சொல்லும் தர்மத்தைக் கேள். வைதேஹியென் கிற ஜனகருடைய புத்ரியான ஸீதையானவள் பெரிய காட்டில் வஸிக்கின்ற தன்னுடைய கணவரைப் பின்தொடர்ந்து சென்ற ளென்பதை நீ கேட்டிருக்கிறுயன்றே? பெருங்காட்டில் வஸித்த வரும் ராமருக்கு இனிய மனைவியும் அழகிய இடையையுடைய வருமான அந்த ஸீதையானவள் ராவணனல் அபஹரிக்கப்பட் டும் ராக்ஷஸிகளால் பயமுறுத்தப்பட்டும் மிகுந்ததுயரத்தை அனு பவித்துக்கொண்டு ராமரையே அனுஸரித்திருந்தாள். பயந்தஸ்வ பாவமுடையவளே! அவ்வாறே, லோபாமுத்ரையும், ரிஷிக ளுள் சிறந்தவரும் மஹிமையுள்ளவரும் தன் பர்த்தாவுமான அகஸ்தியரைப் பின்தொடர்ந்து வனத்தையே அடைந்தாள். பதிவ்ரதையும் சர்யாதியினுடைய புத்ரியுமான ஸுகன்னியென் கிற உத்தம ஸ்த்ரீயும் புற்றுயிருந்த ப்ருகுவினுடைய புத்ரரான ச்யவனரை வனத்தில் அனுஸரித்திருந்தாள். முற்காலத்தில் உலகத்தில் ரூபத்தால் நிகரில்லாத நாளாயனியென்கிற இந்திர ஸேனையும் ஆயிரம் பிராயமுள்ள கிழவரான பர்த்தாவை அனுஸரித்திருந்தாள். கிருஷ்ணையே! முற்காலத்தில் தமயந்

தியும் நளமஹாராஜனையே வனமத்தியில் அனுஸரித்துச் சென்ருள். அவ்வாறே, நீயும் கணவர்களை அனுஸரித்தாய். கல்யாணி! (முற்கூறப்பட்ட) இந்த ஸ்திரீகள் ரூபவதிகளென்றும் பதிவ்ரதைகளென்றும் சொல்லப்பட்டிருப்பதுபோலவே நீயும் எல்லாக் குணங்களோடும் சேர்ந்திருக்கிருய். இகழத்தகாதவளே! நீ வெகுகாலம் பொறுக்கவேண்டாம்; மூப்பதுநாள்மாத்ரமே பொறுக்கவேண்டும். பதின்மூன்ருவது வர்ஷம் நிறைந்தவுடன், நீ அரசர்களுடைய பட்டமஹிஷியாவாய். நான் உண்மையாக உனக்குச் சபதம் செய்கிறேன். அஃது இவ்வாறே ஆகப்போகிறது; வேறுவிதமாகாது. கோபமுள்ளவளே! எல்லா உத்தம ஸ்திரீகளுக்கும் பிரமாணமாயிருத்தலை நீ செய்யத்தக்கவள். கோபமுள்ளவளே! எல்லா மன்னர்களுடைய தலையிலுமிருக்கப்போகிருய். பர்த்தாக்களிடத்திலிருக்கிற பக்தியினாலும் நல்ல நடக்கையினாலும் அடைவதற்கரியனவான போகங்களை அடையப்போகிருய். நம்முடைய பிரதிஜ்ஞையானது நிறைவேறினபிறகு பெரியபோகங்களை அடைவாய். (பிறகு, இவையெல்லாம்) குரூபக்தியினால் உண்டுபண்ணப்பட்டனவென்பதை அறிந்து, அரசர்களுடையமுடியில் நிலைபெற்றவளாயிருக்கப்போகிருய்' என்று (தேறுதல்) சொன்னன்.

திரௌபதி, 'குந்திபுத்ரரே! உருக்கத்துடன் புலம்புகிற நான் அரசரை நிந்திக்கவில்லை. துக்கங்களைப் பொறுக்கச் சக்தியற்ற என்னால் கண்ணீர் சொரியப்பட்டது. களங்தேதயரே! விராடராஜனுடைய மைத்துனனும் ஸூதபுத்ரனும் போஜனென்று சொல்லப்பட்டவனும் த்ரிகர்த்ததேசத்தில் பிறந்தவனும் தர்மத்தைவிட்டு விலகினவனும் கொடிய தன்மையுடையவனும் எல்லாவிஷயங்களிலும் ஸமர்த்தனும் துஷ்ட எண்ணமுள்ளவனுமான கீசகன், விநயமற்றவனும் மிகக் கெட்ட எண்ணமுள்ளவனுமாகி, என்னை அநாதை என்றெண்ணிக்கொண்டு, 'கல்யாணி! நீ எனக்கு மனைவியாவாய்' என்று தினந்தோறும் சொல்லுகிருனென்கிற துக்கம் எனக்கு ஸஹிக்கமுடியாததென்று நீர் அறியும். மஹாபலமுள்ள பீமஸேனரே! போனகார்யத்தைச் சொல்வதினால் யாதுபயன்? இப்பொழுது நேர்ந்திருக்கின்ற கார்யத்துக்குத் தகுந்த முயற்சிசெய்யும். பீமஸேனரே! கைகேயியானவள் என்னுடையருபத்தினின்று உண்டானபயத்தால் ஸந்தேஹமுள்ளவளாகி, 'அரசர் எவ்வாறு இவளை அடையாமலிருப்பார்?' என்று எப்பொழுதுமே மனவருத்தமடைந்துகொண்டிருக்கிருள். அவளுடைய அந்த எண்ணத்தை அறிந்தும், கெட்ட எண்ணமுள்ளவனும் பொய்யில் நோக்கமுள்ளவனுமான கீசகன்

திரும்பவும் என்னை விரும்புகிறான். பீமஸேனரே! அவனை நோக்கிக் கோபங்கொண்டவளான நான் கோபத்தை அடக்கிக் கொண்டு, 'கீசக! காமனால் மதிமயக்கமுற்ற உன்ஸ்வரூபத்தை நீ பாதுகாத்துக்கொள். நான் ஐந்து கந்தர்வர்களுடைய பிரியமான பார்யை; பட்டமஹிஷி. ஒருவராலும் ஜயிக்கமுடியாதவர்களும் ஸாஹஸகார்யத்தைச் செய்கின்றவர்களுமான அந்தச் சூரர்கள் உன்னைக் கொல்வார்கள்' என்று கூறினேன். இவ்வாறு சொல்லவும், அவன் கெட்ட எண்ணத்துடன் (என்னைப்பார்த்து), 'ஸைரந்த்ரி! சுத்தமான மந்தஹாஸத்தையுடையவளே! கந்தர்வர்களுக்கு நான் பயப்படமாட்டேன். யுத்தத்தில் ஒன்றுகூடியிருக்கின்ற நூறுகந்தர்வர்களையும் ஆயிரம் கந்தர்வர்களையும் நான் கொல்வேன். பயந்தவளே! எனக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணு' என்று மறுமொழி கூறினான். இவ்வாறு சொல்லப்பட்ட நான், காமாதுரனை அந்த ஸமீபத்தினைப்பார்த்து, மறுபடியும், 'கீசக! கீர்த்திசாலிகளான அந்தக்கந்தர்வர்களுக்கு நீ எதிராளி அல்லை. தர்மத்தில் எப்பொழுதும் நான் நிலைபெற்றிருக்கிறேன். குலமும் சீலமுமுடையநான், கொல்லத்தக்கவனை உன்னைப்பற்றி யாதொன்றையும் (செய்ய) விரும்புகிறேனில்லை. அதனால், நீ உயிரோடிருக்கிறாய்' என்றேன். இவ்வாறுசொல்லப்பட்டவனும் கெட்ட எண்ணமுள்ளவனுமான அந்தக் கீசகன், கலகலவென்று நகைத்துக்கொண்டு, நல்லவழியில் நிற்கவில்லை; தர்மத்தையும் அனுஷ்டிக்கவில்லை. பாபபுத்தியுள்ளவனும் பாபத்தைச் செய்பவனும் காமராஜனுக்கு வசப்பட்டவனும் விநயமில்லாதவனும் துஷ்டஸ்வபாவமுடையவனுமான அந்தக் கீசகன் அடிக்கடி என்னல்நிராகரிக்கப்பட்டான். அவன் என்னைப்பார்க்குந்தோறும் என்னை ஹிம்ஸிப்பானதனால் அப்பொழுதே உயிரை விட்டுவிடுவேன். அப்படி நான் உயிரைவிடுவேனதனால் தர்மத்தில் முயற்சிசெய்துகொண்டிருக்கிற உங்களுடைய பெரியதர்மமே அழிந்துபோய்விடும். அஜ்ஞாதவாஸப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றுகிற உங்களுக்கு மஹிஷி இல்லாமல் போய்விடுவாள். 'மஹிஷி ரக்ஷிக்கப்பட்டால் ஸந்ததி ரக்ஷிக்கப்பட்டதாகிறது. ஸந்ததி ரக்ஷிக்கப்பட்டால் ஆத்மா ரக்ஷிக்கப்பட்டதாகிறது' என்று வர்ணப்ரமதர்மங்களை அறிந்த ப்ராம்மணர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். க்ஷத்ரியனுக்குத் திருடர்களைக் கொல்வதைக் காட்டிலும் வேறு தர்மம் எப்பொழுதும் இல்லை. மஹாபலமுடையவரே! பீமஸேனரே! தர்மராஜரும் நீரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, கீசகன் என்னைப் பின்தொடர்ந்து ஓடிவந்தான். பீமஸேனரே! (முன்பு) அந்த ஜடாஸுரனிடத்தினின்றும் உம்மால் நான்

பாதுகாக்கப்பட்டேன். அவ்வாறே, ஜயத்ரதனையும் நீர் ஸஹோதரர்களுடன் சேர்ந்து ஜயித்தீர். பாரதரே! கீசகன் ராஜாவினுடைய ப்ரீதிக்குரியவனுயிருப்பதால் எனக்குச் சோகத்தை விளைவிக்கிறான். (இவ்விதமாக) என்னை அவமதிக்கிற இந்தப்பாவியையும் நீர் ஸம்ஹாரஞ்செய்யும். பரதகுலத்திலுதித்தவரே! என்னுடைய பலதுன்பங்களுக்கு நிமித்தமாயிருப்பவனும் காமத்தினல் தாபமடைந்திருப்பவனுமான அந்தக் கீசகனை, கல்லில் குடத்தைப் போட்டு உடைப்பதுபோல நாசஞ்செய்துவிடும். அவன் பிழைத்திருக்கும்பொழுது நாளைக் காலையில் ஸூர்யோதயமாகுமாஞல் நான் விஷத்தைக்கலந்துகுடிப்பேன். (ஒருபொழுதும்) கீசகனுக்கு வசப்படமாட்டேன். பீமஸேனரே! உம்முடைய முன்னிலையில் உயிரை விடுவது எனக்கு நன்மையைப் பயக்கக்கூடியது' என்று கிருஷ்ணையானவள் இவ்வாறு சொல்லிவிட்டுப் பீமனுடைய மார்பில் சாய்ந்து மிக அழுதாள். பீமனும் அவளைக் கட்டி அணைந்து அதிக நல்வார்த்தையைச் சொல்லி ஸமாதானஞ்செய்து இரண்டு கடைவாய்களையும் நாவினல் நக்கிக்கொண்டு மனத்தினல் கீசகனை நாடினன். கோபமுள்ளவனை பீமன் மிக்க துன்பமுற்றவளும் அழகிய இடையுள்ளவளுமான துருபதராஜ குமாரியைத் தகுந்த காரணங்களோடும் உண்மைப் பொருள்களோடுங்கூடின வசனங்களால் பலவாறுக ஸமாதானஞ்செய்து, கண்ணீரால்நிறைந்த அவளுடைய முகத்தைத் தன்கையினல் துடைத்து, துக்கத்தினல் பீடிக்கப்பட்டவளான அவளைநோக்கிச் சொல்லலானன்.

இருபத்தைந்தாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதியானவள், பீமன் சொற்படி, கீசகனை வஞ்சனையால் ஓரிடத்தில் வரும்படி தூண்டஞ்செய்து, அதைப் பீமனிடம் தெரிவித்தது.)

'கல்யாணி! பயந்தவளே! நீ எவ்விதஞ் சொல்லுகிறையோ அவ்விதமே செய்யப்போகிறேன்; இப்பொழுதே பந்துக்களோடுகூட இந்தக்கீசகனைக் கொல்லப்போகிறேன். யாஜ்ஞஸேனி! சுத்தமானசிரிப்பையுடையவளே! துக்கத்தையும் சோகத்தையும்விலக்கிவிட்டு, நாளைக்காலையில், இந்தக் கீசகனுடன் இரவில் (சேருவதாக) ஸங்கேதத்தைச்செய். மத்ஸ்யராஜனுல் இந்த இடத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நடனசாலையில் பகலில் கன்னிகைகள் நர்த்தனம் செய்கின்றார்கள்; அவ்வாறே, இரவில் வீடுபோய்ச் சேருகின்றார்

கள். பயந்தஸ்வபாவமுடையவளே! அந்த நடனசாலையில் நன்றாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதும் உறுதியான அங்கமுள்ளதுமான ஒரு கட்டில் இருக்கிறது. அதன்மீது உன்னைப் பார்ப்பதினாலுண்டாயிருக்கின்ற காமத்தினால் கலங்கின பொறிகளையுடைய அந்தக் கீசகனுக்கு முன்னமே இறந்துபோன (அவனுடைய) [1] பாட்டன்மார்களைக் காட்டப்போகிறேன். மங்களகரமானமுகமுள்ளவளே! ஸுதபுத்ரனோடு ஸங்கேதத்தை ஏற்படுத்துகின்ற உன்னைப் பிறர் பாராவண்ணம் அவனுக்கு ஸங்கேதத்தை ஏற்படுத்து. கல்யாணி! அந்தக்கீசகன் (எனக்கு) அருகிலிருப்பவனுகும்படி செய். ஸுதபுத்ரனுடைய ஸங்கேதத்தை (ஒருவருக்கும்) தெரியாதபடி ஏற்படுத்து. பயந்தவளே! ராஜபுத்ரி! நம்மிருவர்களுடைய சேர்க்கையையும் ஒரு மனிதனும் அறியாவண்ணம் கீசகனுடைய விநாசத்தின்பொருட்டு (ஸங்கேத ஸ்தானத்தை) ஏற்படுத்து' என்று சொன்னன். அங்கு அவ்விருவர்களும்பேசிக்கொண்டு துக்கத்தினால் கண்ணீரைச்சொரிந்து இரவின் மிச்சத்தில் மிகக்கொடியவனான கீசகனை மனத்தினால் நினைத்துக்கொண்டிருந்தார்கள். பீமனால் அப்பொழுது கீசகவதமானது பிரதிஜ்ஞை செய்யப்பட்டவுடன், திரௌபதியானவள் மீண்டும் ஸுதேஷ்ணையின் அந்தப்புரம்சேர்ந்தாள். அந்த இரவானது விடிந்தவுடன், கீசகன் காலையில் எழுந்திருந்து அரசனுடையஅரண்மனையை வந்துஅடைந்து திரௌபதியைப்பார்த்து, 'ஸைரந்த்ரி! அரசன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே உன்னைக் கீழே தள்ளிக் காலாலுதைத்தேன். அப்பொழுது பலசாலியான என்னால் ஆக்ரமிக்கப்பட்ட நீ ரக்ஷகனை ஒருவனையும் அடைந்தாயில்லை. இந்தவிராடன் பெயரினால்மாத்ரம் மத்ஸ்யதேசத்தார்களுக்கு அரசன் என்று சொல்லப்படுகிறான். மத்ஸ்ய தேசத்தார்களுக்கு ஸ்வைபதியாயிருக்கின்ற நானல்லவோ அரசன். பயந்தவளே! நீ [2] என்னை ஸுகமாக வந்தடை. நான் உனக்குத் தாஸனாயிருக்கிறேன். பயந்தவளே! நான் உன்னை விட்டு நெடுங்காலம் ஜீவிப்பதற்கு விரும்பவில்லை; அழகிய இடையையுடையவளே! உனக்கு ஒவ்வொரு தினத்திலும் நூறு [3] பொன்னாணயங்களைக் கொடுக்கிறேன்; மேலும், நூறு வேலைக்காரிகளையும் நூறு அடிமைக்காரர்களையும் உனக்குக் கொடுக்கிறேன்; பெண் கோவேறுகழுதை பூட்டின ரதங்களையும் கொடுக்கிறேன். நம்மிருவர்களுக்கும் சேர்க்கையுண்டாகட்டும். நல்லதிற

---

1 'கொல்லப்போகிறேன்' என்பது கருத்து. 2 வேறுபாடம்.

3 'நிஷ்கம்' என்பது மூலம். அது, நூற்றெட்டுப்பலம் நிறையுள்ள ஸுவர்ணமென்பர்.

மையுள்ள ஆயிரம்வேலைக்காரர்களையும் ஆயிரம்கடாமாடுகளையும் ஆயிரம் அந்தப்புரங்களையும் ஆயிரம்ஸ்வர்ணக்குவியல்களையும் அரசர்க்குஉரிய எல்லாஉடைகளையும் உனக்குக்கொடுப்பேன்' என்று சொன்னான். திரௌபதி, 'கீசக! நான்சொல்லுகிறவார்த்தையை உண்மையாக நம்பு. என்னுடன் நீ சேருவதை உன்னுடைய தோழனுவது ஸஹோதரனுவது (ஒருவரும்) அறியக்கூடாது. லோகாபவாதத்தில் நான் பயந்தவள். கீர்த்திபெற்றவர்களான கந்தர்வர்களுக்குத் தெரிந்தால் அனர்த்தம் விளையும். பெரிதான அபகீர்த்தியும் உண்டாகும். இதை நீ ப்ரதிஜ்ஞைசெய். அதற்குப்பிறகு, நான் உனக்கு வசப்படுவேன்' என்றுகூறினாள். கீசகன், 'அழகிய இடையையுடையவளே! இதை நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். வாழைமரம்போன்ற தொடையையுடையவளே! ஸூர்யனுடைய தேஜஸ்போன்றதேஜஸையுடையவர்களான கந்தர்வர்கள் உன்னைப் பாராதபடி உன்னுடன்சேருவதற்காக மன்மதமதமுள்ள நான் ஒருவனுகவே ஒருவருமில்லாத உன்னுடைய க்ருஹத்துக்குவருகிறேன்' என்றுமொழிந்தான். திரௌபதி, 'மத்ஸ்யராஜனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்தநடனசாலையில் பெண்கள் பகலில் நர்த்தனம்செய்கின்றார்கள்; இரவில் தங்கள்வீட்டுக்குச் செல்லுகின்றார்கள். (இன்று) இரவில் அந்தஇடம்போய்ச்சேர். கந்தர்வர்கள் அதை அறியார்கள். அவ்விடத்தில்(சென்று நாம் ஸுகத்தை அனுபவிப்போமானால்) குற்றமுண்டாகாது; ஸம்சயமில்லை. நீ இரவில் தனியே ஸங்கேதஸ்தானமான நாட்டியசாலைக்கு வந்து சேரவேண்டும். அவ்விடத்தில் நான் உனக்கு உடன்பட்டவளாவேன்; இதில் ஸம்சயமில்லை' என்று சொன்னாள். கீசகன், 'கல்யாணி! பயந்தவளே! நீ சொல்லுகிறபடியே செய்வேன். பெண்ணே! நான் ஒருவனுகவே நர்த்தனசாலைக்கு வருவேன். அழகிய இடையையுடையவளே! (உன்னுடன்) சேருவதின்பொருட்டு என்னுடைய புண்யத்தின்மீது சபதம்செய்கிறேன். உத்தமதேஜஸ்காந்தியையுடையவளே! கந்தர்வர்கள் உன்னை அறியாவண்ணமே நான் செய்வேன்; ஸத்யமாக உனக்கு ப்ரதிஜ்ஞைசெய்கிறேன். கந்தர்வர்களிடத்திலிருந்து உனக்குப் பயம்வேண்டாம். இன்றைத்தினத்தில் உன்னுடன்சேருவதற்காக நான் (என்னை) விசித்ரமான அழகிய ஆடைகளால் அலங்கரித்துக்கொள்வேன்; உன்னையும் அலங்கரிப்பேன்; நீ என்னைவிடாதபடி உன்னோடு ரமிப்பேன்' என்று கூறினான். த்ரௌபதி, 'ஸூத! கீசக! அவ்விதமானால், பிறந்ததுமுதல் உன்னால் அநுபவிக்கப்பட்டிராத ஸுகத்தை நானும் உனக்குக் காண்பிக்கப்போகிறேன்' என்றுசொன்னாள். வேந்தரே!

அந்தவிஷயத்தைப்பற்றி வார்த்தைமட்டும் சொல்லுகிற திரௌபதிக்கும் கீசகனுக்கும் க்ஷணமாத்ரகாலமானது ஒரு மாஸத்துக்குஸமமாயிற்று. பிறகு, மூடனான கீசகன் தன்வீட்டுக்குச்சென்றுமிக்கஆனந்தத்தில் முழுகினன். அவன், ஸைரந்த்ரிவேஷந்தரித்திருக்கின்ற அந்தத்ரௌபதியைத் தனக்கு ம்ருத்யுவென்றுதெரிந்து கொண்டானில்லை. காமத்தால் மோஹித்திருக்கின்றஅவன் வாஸனைப்பொருள்களிலும் ஆபரணங்களிலும் மாலைகளிலும் விசேஷ ப்ரீதியுடன் அப்பொழுது தன்தேகத்தை விரைவில்அலங்கரித்துக்கொண்டான். நீண்டகண்களையுடையவளான அந்தத்ரௌபதியையே இடைவிடாமல் த்யானம்செய்பவனும் அவ்விதமான (சரீராலங்கார) கார்யத்தைச் செய்துகொள்ளுகிறவனுமானஅந்தக்கீசகனுக்குக் காலமானது நீண்டதுபோலாகியது. அவியுங்காலத்தில் திரியை (மிகுதியின்றி) எரிக்கப்போகின்ற தீபத்துக்குஅதிகமான காந்தியுண்டாவதுபோலச் செல்வத்தை இழக்கப்போகிறவனான கீசகனுக்கு அதிக ஒளியானது உண்டாகியது. காமத்தால் மயக்கமுற்றவனான கீசகன் அந்த த்ரௌபதியினிடத்தில் நம்பிக்கை வைத்து அழகியமுகமுடையவளான அவளைநினைத்துக்கொண்டு தனக்குவரும் நாசத்தை அறியவில்லை. கல்யாணியானதிரௌபதியானவள், பிறகு, மடைப்பள்ளியைஅடைந்து குருகுலத்திலுதித்தவனும் (தனக்குக்) கணவனுமான பீமஸேனனுக்கு ஸமீபத்தில் வந்துநின்றாள். அழகிய கூந்தல்நுனியையுடையவளானஅந்த த்ரௌபதியானவள், அவனைப்பார்த்து, 'பகைவர்களைத்தவிக்கச் செய்பவரே! நீங்கள் சொல்லியவண்ணமே நடனசாலையில் என்றேடு கீசகன் சேருவதென்பது ஏற்படுத்தப்பட்டுவிட்டது. சிறந்தகைகளையுடையவரே! கீசகன் காலத்தால் நிச்சயமாகக் கட்டப்பட்டவனைகவும் காமத்தினல் பலாத்காரமாகத் தூண்டப் பட்டவனைகவும் இரவில் ஒருவனைகவே ஒருவருமில்லாதநடனசாலையை வந்து அடையப்போகிறன். அந்தக்கீசகனை நீர் நாசஞ்செய்யும். குந்திபுத்ரரே! பாண்டவரே! நீர் நர்த்தனசாலையைஅடைந்து, ஸ்ரீதபுத்ரனும் மதத்தினல் இறுமாப்புடையவனுமான அந்தக்கீசகனை உயிரிழக்கச்செய்யும். கர்வங்கொண்டவனான அந்தஸ்ரீதபுத்ரன் கந்தர்வர்களை அவமதிக்கிறன். பகைவர்களைக் கொல்பவர்களுள் சிறந்தவரே! நீர், யானையானதுதாமரைத்தண்டைக் களைவதுபோல அவனைக்களைந்து எறிந்துவிடும். பாரதரே! துக்கத்தினல்சூழப்பட்ட என்னுடைய கண்ணீரைத்துடையும். பாஹுவீர்யத்துக்குத்தக்க பராக்ரமத்தை இப்பொழுது வெளிப்படுத்தும். உமக்கு மங்களத்தையும் உம்

முடைய குலத்துக்குக் கௌரவத்தையும் நீர் உண்டுபண்ணும்' என்று கூறினாள்.

பீமன், 'சிறந்தவளே! உனக்கு நல்வரவா? நேர்த்தியான காந்தியுடையவளே! நீ எனக்கு ப்ரியத்தை தெரிவித்தலால், நான் இந்த விஷயத்தில் வேறு ஒருதுணையையும் எதிர்பார்க்கவில்லை. சுத்தமான சிரிப்புடையவளே! (முற்காலத்தில்) ஹிடிம்பனைக் கொன்றதனல் எவ்விதமான பிரீதி எனக்கு உண்டாயிற்றோ அவ்விதமான பிரீதியானது கீசகனைக் கொடுபோகிற சோர்க்கையில் உன்னல் எனக்கு வெளியிடப்பட்டுவிட்டது. பிராதாக்களையும் புத்ரர்களையும் ஸத்யத்தையும் முன்னிட்டு நான் உன்னிடத்தில் சபதம்செய்கிறேன்; விருத்ராஸுரனைத் தேவராஜன் கொன்றதுபோலக் கீசகனைக் கொல்லப்போகிறேன்; கேசவர் கேசியைக் கொன்றதுபோலப் பலாத்காரமாகக் கொல்லப்போகிறேன்; ரஹஸ்யமாகவாவது வெளிப்படையாகவாவது கீசகனை நாசம்பண்ணப்போகிறேன். கல்யாணி! காமத்தினல் ஆக்ரமிக்கப்பட்டிருக்கிறமனத்துடன் அடைவதற்கரிய உன்னை விரும்புகிறவனும் மன்மத விகாரத்தையுடையவனுமான கீசகனை நான் கொல்வேன். ஒருகால், மத்ஸ்யதேசத்தார்கள் என்னல் கீசகன்கொல்லப்பட்டானென்பதைத் தெரிந்துகொள்வார்களாயின், அப்பொழுது அவர்களுக்கு இருப்பிடமான இந்த இடத்தை மனுஷ்யர்களற்றதாகச் செய்வேன். பெண்ணே! துர்யோதனன், மத்ஸ்யதேசத்தார்கள் என்னல் கொல்லப்பட்டார்களென்பதைத் தெரிந்துகொள்வானனல் அப்பொழுது அவனையும் அவனைச்சேர்ந்தவர்களோடும் பந்துக்களோடும் கொன்று கௌரவர்களுடைய ராஜ்யமனைத்தையும் நான் கைப்பற்றுவேன். நான் குந்திபுத்ரரான யுதிஷ்டிரரை அனுஸரித்திருப்பதற்குச் சக்தியுள்ளவனல்லேன். குந்திபுத்ரரான யுதிஷ்டிரர் ஸத்யத்தை வேண்டியமட்டிலும் உபாஸிக்கட்டும். வணக்கமுள்ளவர்களும் (தர்மத்தை) அனுஷ்டிப்பவர்களுமான மற்றவர்களும் இஷ்டப்படி தர்மத்தை உபாஸிக்கட்டும். இவ்விதமான துன்பத்தை அடைந்திருக்கின்ற உன்னை உபேக்ஷிப்பதற்கு நான் பொறேன். பாஞ்சாலி! கீசகனுடையவதத்தினல் மீண்டும் நீ ஸுகமுடையவளாயிரு' என்றான். த்ரௌபதி, 'பீமஸேனரே! சிறந்தகைகளுள்ளவரே! உம்மால் செய்யப்படுகிற கீசகவதத்தை நகரத்திலுள்ளவர்கள் அறிவார்களாகில் நான் ஜீவிப்பதற்குமுடியாது. பிரபுவே! என் நிமித்தமாக ராஜாவான யுதிஷ்டிரர், ஸத்யத்தினின்று எவ்வாறு விலகாமலிருப்பாரோ அவ்வாறு, கீசகனை இரவில் ஒருவருக்குந் தெரியாமல் கொன்று

விடும். (இவ்விஷயம் கௌரவர்களால்) அறியப்பட்டால், புத்தி சாலியும் குந்திபுத்ரரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரர் இளைய ஸஹோதரர்களால் சூழப்பட்டு மறுபடியும் கானகம் செல்ல வேண்டியதாகும். பாரதரே! தர்மத்தை ப்ரதானமாகக்கொண்ட தமையனை எவன்தான் மீறிநடப்பான்? பீமஸேனரே! (இந்தவரலாறு) அறியப்படுவதில் நான் பயப்படுகிறேன். நீர், உம்முடைய பரபரப்பை நன்றுக வெளியிடக்கூடாது. குருகுலத்திலுதித்தவரே! சிறந்தபலமுடையவரே! பகைவர்களை அடிப்பவரே! ஸூதபுத்ரன் உம்மால் கொல்லப்பட்டானென்பதை ஒருவரும் அறியாதபடி செய்யும். சத்ருக்களைச் சிக்ஷிப்பவரே! நீர் ஒருவருடைய கண்ணுக்கும் புலப்படாமலிருந்துகொண்டு அந்தக் கீசகனுடைய உயிரைப் போக்கும்' என்று சொன்னாள்.

இருபத்தாறுவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(கீசகன், பீமனே த்ரௌபதியெனநினைந்து அவனுடன் பேசியதும், பீமன் அவனைக்கொன்றதும், உபகீசகர்கள் அங்குவந்ததும்.)

பீமன், 'கல்யாணி! பயந்தவளே! நீ சொல்லுகிறவிதமே செய்வேன். நான் இருள் மிகுந்த இரவில் ஒருவராலும் காணப்படாமல், கிடைத்தற்கரிய உன்னை விரும்புகின்ற துராத்மாவான அந்தக் கீசகனுடைய குண்டலங்களையணிந்த அந்தத்தலையை, யானையானது பில்வத்தை ஆக்ரமித்து நாசஞ்செய்வதுபோல நாசஞ்செய்வேன். பாஞ்சாலி! தர்மராஜனுடைய புத்ரரான யுதிஷ்டிரரைப்பற்றி நான் சொல்லியது, கோபத்தினலன்றி வேறில்லை. எவன் ராஜாவான யுதிஷ்டிரரை அனுஸரியாமலிருப்பான்?' என்று சொல்லினன். மிக்க தோள்வலியுள்ளவனும் ஆண்மையுள்ளவனும் அச்சந்தரும் வன்மையுள்ளவனும் பாண்டவர்களுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுகின்றவனுமான பீமஸேனன், அவ்விடத்தில் (திரௌபதியைப்பார்த்து) இவ்வாறுரைத்துவிட்டு, நடுநிசியில் எழுந்திருந்து, அப்பொழுதே வெண்ணிறமுள்ளதும் மெல்லியதுமான ஒரு வஸ்த்ரத்தைத்தரித்து, திரௌபதி தன்னைப் பின்தொடர்ந்துவர, நடனசாலையிருக்கின்றவிடம் சென்றான். அந்தப் பீமன் இருளடர்ந்த இரவில் மூந்தியே சென்று ஹிம்மமானது மறைந்திருந்து மானை எதிர்பார்ப்பதுபோலக் கீசகனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். கீசகனே அன்றிரவில் ஸ்நானஞ் செய்து நன்றுக அலங்

கரித்துக்கொண்டு, திறந்துவைக்கப்பட்டிருக்கின்ற தலைவாயிலையுடையஸங்கேதஸ்தலமும் ஒருவருமில்லாததுமான நடனசாலையை விரைவாகவந்தடைந்தான். காமத்திலல் மதிமயக்கமுற்ற கீசகன், அந்த ஸைரந்த்ரி ஸங்கேதஸ்தலத்திலிருப்பதாக நினைத்துக்கொண்டு அவள்குறிப்பிட்டுச்சொல்லிய இடமாகிய நர்த்தனசாலையையே விரைவாகவந்தடைந்தான். பிறகு, மூடனனகீசகன், நடனசாலையில்புகுந்து,அவ்விடத்திலுள்ள கட்டிலில் முந்தியேவந்துபடுத்திருக்கின்றவனும் மதங்கொண்டவனும் நிகரில்லாதபிரதாபமுள்ளவனும் கிருஷ்ணையை அவமதித்ததலல் உண்டானகோபத்திலல் அதிகமாக ஜ்வலிக்கின்றவனும் புருஷஸ்ரேஷ்டனும் தனக்குமருத்யுவுமான அந்தப் பீமனைக் கையிலல்தொட்டான். கீசகன், காலலல்தூண்டப்பட்டு ஏகாந்தத்தில்பீமனை அடைந்து, ஆனந்தத்தால் மனமும் புத்தியும்கலக்கமுற்று, மந்தஹாஸஞ் செய்துகொண்டு, (திரௌபதி என்கிற எண்ணத்திலல் பின்வருமாறு) ஸம்பாஷிக்கலானன்.

'கல்யாணி! சுத்தமான புன்னகையுள்ளவளே! என்லல் உனக்காக மிகுதியான பொருள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் உன்னிடத்திலேயே இருக்கட்டும். நீ தாஸிகளைவேவந்தகாரணத்திலல், என்வீட்டிலுள்ளஸ்த்ரீகள் என்னைப்பார்த்து, 'நீ பலசாலி; அழகுடையவன்; உனக்குச் சரியானபுருஷன் வேறுருவனும்இல்லை' என்று எப்பொழுதும் புகழ்கின்றார்கள். தாமரைப்பூப்போன்ற கண்களையுடையவளே! நான் அழகுள்ளவன்; (மங்கள) ஸ்நானஞ்செய்திருக்கின்றேன்; அதிகமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறேன். ஸ்திரீகளை வசப்படுத்தக்கூடியதன்மை என்னிடமிருப்பதால் நான் எப்பொழுதுமே ஸ்திரீகளுக்கு ப்ரியன்; இனியகாட்சியுடையவன்; ஸௌந்தர்யத்தினுடையபயனை அடைந்தேன்' என்றான். பீமன், 'தெய்வாதீனமாக நீ அழகாயிருக்கிறாய். பாக்யத்திலல் உன்னை நீ புகழ்ந்துகொள்ளுகிறாய். இவ்விதகுணமும் ரூபமும் சீலமுமுள்ள ஒருபெண் இதற்குமுன் உன்னலும் பார்க்கப்பட்டிருக்கமாட்டாள். ஸுதபுத்ர! இப்பொழுது நீ என்னைப்பார். நீ அறிந்துகொள்வாய். இந்தப் பெண்ணைனவள் எவ்விதகுணங்களோடு கூடியிருக்கிறாளென்பதை ஒரு முகூர்த்தத்தில் நீயே பார்க்கப்போகிறாய். காமத்திலல் ரமிக்கப்போகிறாய். நீ விரைவாக (என்னைத்) தொடுவாய். இப்படிப்பட்ட ஸ்பர்சமானது இதற்குமுன் ஒருபொழுதும் உன்லல் அனுபவிக்கப்பட்டிராது. சாதுர்யமுடையவனன நீ ஸ்பர்சத்தைஅறிகிறாய். நீ காமசாஸ்த்ரமுறைகளில் ஸமர்த்தன்; இவ்வுலகில் ஸ்திரீகளுக்குப் ப்ரீதியை

உண்டுபண்ணுகின்றவன். உனக்குநிகராக வேறு ஒருபுருஷனும் கிடையான்' என்றுகூறினன். சிறந்தகைகளுள்ளவனும் பயங்கரமான பராக்ரமமுள்ளவனும் குந்திபுத்ரனுமான பீமன், அந்தக் கீசகனைப்பார்த்து இவ்வாறுசொல்லி விரைவாகஎழுந்திருந்து அட்டஹாஸஞ்செய்து, 'உன்ஸஹோதரியானவள், ஹிம்மத்திலுல் இழுக்கப்படுகின்ற பெரியயானையைப்போல என்னல் பூமியில் இழுக்கப்படுகின்றவனும் மஹாபான்றவனும் பாபியுமானஉன்னைப் பார்க்கப்போகிறுள். நீ கொல்லப்பட்டபிறகு ஸைரந்த்ரியானவள் தடையற்றவளாக ஸஞ்சரிக்கப்போகிறுள். ஸைரந்த்ரியினுடைய கணவர்களும் எப்பொழுதும் ஸுகமாகவே ஸஞ்சரிக்கப்போகிறுர்கள்' என்றுகூறி, பிறகு, மாலைகளையணிந்தனவும் நல்லவாஸனைபொருந்தினவுமான (அவனுடைய) தலைமயிர்களைப்பற்றி இழுத்தான். கீசகனைப் பிடித்துக்கொண்டிருக்கின்றவனும் அதிக பலமுள்ளவனுமான பீமன், மாம்ஸத்தில் விருப்பமுள்ளஒருஹிம்மமானது அல்பமிருகத்தைப்பிடித்துக்கொண்டு விளங்குவதுபோல விளங்கினன். மயிர்களில் பிடிக்கப்பட்டவனும் பலசாலிகளுள் சிறந்த பலவானுமான அந்தக்கீசகன், தன்மயிர்களை வேகமாகவிடுவித்துக்கொண்டு பாண்டவனைக் கைகளில்பிடித்தான். வஸந்தகாலத்தில் ஒரு பெண்யானைநிமித்தமாகப் பலமுள்ள இரண்டு ஆண்யானைகளுக்குச் சண்டைநேர்ந்ததுபோல, கோபங்கொண்டவர்களும் ஆண்மையிற்சிறந்தவர்களுமான அவ்விருவர்களுக்கும் கைச்சண்டை நடந்தது. முற்காலத்தில் பிராதாக்களும் வானரஶ்ரேஷ்டர்களுமான வாலி ஸுக்ரீவர்கள் இருவருக்கும் யுத்தம்நேர்ந்ததுபோல, கீசகர்களுள் தலைவனான பிரதானகீசகனுக்கும் மனிதர்களுள் உத்தமனான பீமனுக்கும் பாஹுயுத்தம் நடந்தது. பீமனும்கீசகனும் புலிகள்போலக் கர்ஜிக்கின்றவர்களும் கருடனும் ஸர்ப்பமும்போல முயற்சியுள்ளவர்களும் ஸமமான முயற்சியுள்ளவர்களும் ஸமமான கோபமுள்ளவர்களுமாகி (ச்சற்றுநேரம் சண்டைசெய்து) கீழேவிழுந்தார்கள். மிக்க மதங்கொண்ட யானைகள்போலவும் புற்றைமுட்டுகின்ற காளைகள்போலவும் கர்ஜிக்கின்றவர்களும் ஒத்த வன்மையுள்ளவர்களுமான அவ்விருவர்களும் (சண்டையிட்டுப்) பூமியில் விழுந்தார்கள். பலவானான கீசகன் சிறிது தளர்ச்சியடைந்தவனும் கோபத்தால் தலைகுனிந்து நிற்பவனுமான பீமனை முழங்கால்களால் இடித்துப் பூமியில் தள்ளினன். பிறகு, பலசாலியான கீசகனால் கீழே தள்ளப்பட்ட பீமனேனே தடியினால் அடிக்கப்பட்ட ஸர்ப்பம்போல வேகத்தோடு கிளம்பினன். பலத்திலுல் மிக்க மதங்கொண்ட பீமனும் கீசகனுமாகிய அவ்

விருவர்களும் ஜயிக்கும் விஷயத்தில் மாறுபாடு அடைந்து சப்த மின்றி ஒருவரையொருவர் பற்றியிழுத்தார்கள். அதனல், அப் பொழுது சிறந்த அந்தநடனசாலையானது அதிகநடுக்கமுற்றது. அவ்விருவர்களும் கோபத்துக்குடன்பட்டவர்களாக ஒருவரோ டொருவர் அடித்துக்கொண்டார்கள். பலசாலியான கீசகன், பீம ஸேனனல் இரண்டுஉள்ளங்கைகளாலும் மார்பில்அறையப்பட்டு ரோஷத்தினல் சிவந்தகண்களுள்ளவனகி ஓரடியினின்று மற்றோர் அடி நகராமலிருந்தான். கீசகன், மிக்க வலிமைஅமைந்த அந்தப் பீமஸேனனுடைய வேகத்தைச் சிறிதுகாலமே பொறுக்கச் சக்தி யுள்ளவனனன். வரவர, அவன் பீமஸேனனல் பலக்குறைவு அடை யும்படிசெய்யப்பட்டான். மஹாபலசாலியான பீமஸேனன், கீசகன் (பலத்தால்) குறைவுபட்டானென்பதை அறிந்து பிரஜ்ஞையற்றவ னன அவனே வேகத்தோடு இழுத்து மார்பில்அடித்தான். ஜயசாலி களுள் சிறந்தவனன விருகோதரன் கோபமூண்டு மறுபடியும் பெரு மூச்சுவிட்டுக்கொண்டு அப்பொழுது அந்தக்கீசகனைத் தலைமயிர் களில் தானே கெட்டியாகப்பிடித்தான். புலியானது இறைச்சிக் காக மிருகயூதபதியைப் பிடிப்பதுபோல, மஹாபலசாலியான பீமன், கீசகனைப்பிடித்துக்கொண்டு விளங்கினன். அதிகபலமுள்ள வனும் பலத்தினல் இறுமாப்புடையவனும் (ஒருவராலும்) அவ மதிக்கமுடியாதவனுமான கீசகன், பலசாலியானபாண்டவனேடு அந்த நாட்டியசாலையில் மறுபடியும் யுத்தஞ்செய்து பீமஸேனனல் முஷ்டியினல் தலையில் நன்றாக அடிக்கப்பட்டான். கீசகன், சுழலு கின்ற சிவந்த கண்களுடன் உயிரையிழந்து பூமியில்விழுந்தான். பிறகு, பீமன் அந்தக்கீசகனுடைய அங்கங்களனைத்தையும் நசுக்கி அவனுடைய முகத்தையும் இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் தலையையும் குண்டலங்களுடன்கூடின கழுத்தை யும் அவன் உடலில் புகும்படி செய்தான். அந்தப் பீமன், ஒடிக் கப்பட்ட எல்லா அங்கங்களையுமுடைய அந்தக்கீசகனைத் தசை உருண்டையாகச் செய்தான். அவ்விடத்தில், மஹாபலசாலியான பீமஸேனன், கைகளை ஒன்றோடொன்று தேய்ப்பதனல் உண்டு பண்ணப்பட்ட அக்நியைத் தானே ஜ்வலிக்கச்செய்து க்ருஷ்ணைக்கு அவனைக் காண்பித்தான். மஹாதேஜஸையுடையவனன பீமஸேனன், ஸ்திரீகளுள் உத்தமியான திரௌபதியைப்பார்த்து, 'பாஞ்சாலி! உன்னிடத்தில் மிக்கஆசைகொண்டவனும் பாபியும் பரதார கமனம்பண்ணுகின்றவனுமான இவனை வந்துபார். காமுக னன இந்தக்கீசகன் என்னல் கொல்லப்பட்டுவிட்டான். அழகிய கூந்தல்நுனியையுடையவளே! பயந்ததன்மையையுடையவளே!

கல்யாணி! நல்லொழுக்கமுள்ளவளான உன்னை விரும்புகிறவர்கள், பூமியில் உன்னைத்தள்ளிக் காலால்உதைத்த இந்தக்கீசகன் விழுந்துகிடப்பதுபோலவே விழுந்துகிடப்பார்கள்' என்று கூறினன். சிறந்தகைகளையுடையபீமன், இவ்வாறு சொல்லிவிட்டு, அப்பொழுது கந்தர்வனல் கீசகன் கொல்லப்பட்டானென்பதை மற்றவர்களுக்கு அறிவிப்பதின்பொருட்டு மஹாயுத்தத்தினின்று நீங்கினன். அந்தப்பீமன் கீசகனை அவ்வாறு கொன்று கோபத்துக்குப் பரிஹாரத்தைத்தேடி த்ரௌபதியினிடத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு, பிறகு, விரைவாக மடைப்பள்ளிக்குச் சென்றான். பயங்கரமானபராக்ரமமுள்ளபீமன் ஸ்நானஞ்செய்து சந்தனம் பூசிக்கொண்டு மஞ்சரதத்தைநிரப்பிப் படுக்கையில் ஸுகமாகப் படுத்திருந்தான். பிறகு, ஸ்திரீகளுள் உத்தமியும் துருபதராஜகுமாரியுமான கிருஷ்ணையானவள் எப்பொழுது பீமன் கீசகனைக் கொன்றுவிட்டு மடைப்பள்ளியைப்போய்ச்சேர்ந்தானென்று எண்ணினளோ அப்பொழுது ஸந்தோஷத்தைஅடைந்து பயத்தைவிட்டு ஸைபக்காவலாளிகளைப்பார்த்து, 'என்னுடையபதிகளான கந்தர்வர்களால் கீசகன்கொல்லப்பட்டுக் கிடக்கிறான். பிறனுடைய மனைவியிடத்திலுண்டான காமத்தினல் மிக்கதாபத்தையடைந்த இந்தக்கீசகனை வந்துபாருங்கள்' என்றுகூறினள். அவளுடைய அந்தவார்த்தையைக்கேட்டு நாட்டியசாலையைக் காக்கின்றவர்களனைவர்களும் குறைக்கொள்ளியை எடுத்துக்கொண்டு விரைவாக அவ்விடம் வந்துசேர்ந்தார்கள். கீசகனுடையஸஹோதரர்கள், அந்தக்கீசகன் கொல்லப்பட்டானென்பதை த்ரௌபதியிடமிருந்து கேட்டு, அந்தநடனசாலைக்குச்சென்று, பூமியில் தள்ளப்பட்டிருக்கின்றவனும் உயிரைஇழந்தவனும் ரக்தத்தால் மிகவும் நனைக்கப்பட்டவனுமான கீசகனைக்கண்டார்கள். கால்களும் கைகளும் தலையும் அற்றிருக்கிற அந்தக்கீசகனைக்கண்டு அவர்கள் வியப்புற்றார்கள். அப்பொழுது அந்தஉபகீசகர்கள், 'இவனுக்குக் கழுத்து எங்கே? கால்கள் எங்கே? கைகள் எங்கே? தலை எங்கே? கண் எங்கே?' என்று கந்தர்வனல்கொல்லப்பட்டிருக்கின்ற கீசகனைப் பரிசோதித்தார்கள். பிறகு, எல்லாரும் (கந்தர்வர்களால்) செய்யப்பட்டிருக்கிற அமானுஷ்யமானசெய்கையையும் கொல்லப்பட்டிருக்கிற அந்தக் கீசகனையுங்கண்டு அதிகமான ஆச்சர்யத்தை அடைந்தார்கள்.

இருபத்தேழாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(உபகீசகர்களின் வதம்.)

அந்தஸமயத்தில் அந்தக் கீசகனுடைய பந்துக்களனைவர்களும் அங்குவந்து அவனைப்பார்த்துப் புலம்பிக்கொண்டு நாலுபக்கத்திலும் சூழ்ந்துநின்றார்கள். அவர்களனைவர்களும் அவ்வாறு மூறிக்கப்பட்ட எல்லா அங்கங்களுடனுங்கூடியவனும் (ஜலத்தினின்று) கரையிலெடுத்து விடப்பட்ட ஆமைபோன்றவனுமான கீசகனைக்கண்டு மயிர்க்கூச்சம் உள்ளவர்களும் மிகப்பயந்தவர்களுமானார்கள். அவர்கள், மஹேந்திரனால் கொல்லப்பட்ட அஸுரன் போலப் பீமஸேனனால் கொல்லப்பட்டவனும் பலத்தினால் மிகவும் மதங்கொண்டவனும் ஒருவராலும் ஜயிக்கமுடியாதவனும் புருஷஶ்ரேஷ்டனுமாயிருந்த கீசகனனவன் கந்தர்வனால் கொல்லப்பட்டானென்பதைக்கேட்டு அவனை அடக்கஞ்செய்வதில் விருப்பங்கொண்டு, (நகரத்துக்கு) வெளியில்கொண்டுபோகத் தொடங்கினார்கள். பிறகு, அந்தஸூதபுத்ரர்கள் ஒன்றுசேர்ந்து ஸமீபத்தில் ஸ்தம்பத்தைக் கட்டிக்கொண்டிருப்பவளும் தோஷமற்ற அங்கங்களுள்ளவளுமான கிருஷ்ணையைக்கண்டார்கள். அங்குவந்திருந்த உபகீசகர்களுள் ஒருவன், மற்றவர்களைப்பார்த்துச் சிரிப்பவன் போலவும் கோபத்தினால் கண்ணால் (பிறர்களைக்) கொளுத்துகிறவன்போலவும் அப்பொழுது, 'எவள்நிமித்தமாகக் கீசகன் கொல்லப்பட்டானோ அப்படிப்பட்ட இந்தத்துஷ்டஸ்திரீயானவள் சீக்ரமாகக்கொல்லப்படலாம். இல்லாவிட்டால், இவளைக்கொல்லவேண்டாம்; காமியான இந்தக் கீசகனுடனே இவள் கொளுத்தப்படட்டும். உயிரைஇழந்தவனுயிருந்தாலும் ஸூதபுத்ரனை கீசகனுக்கு எல்லாவிதத்தினாலும் நம்மால் பிரியமான காரியமானது செய்யத்தக்கது. இவளோ கெட்டநடையுள்ளவள்; என்னுடைய ப்ராதாவுக்குப் பகையாயிருப்பவள். எவள் நிமித்தமாக என்னுடைய ப்ராதா மரணமடைந்தானோ அப்படிப்பட்ட இவள் ஜீவித்திருக்கத்தக்கவளல்லள். ஸூதர்களே! அரசனிடத்தில் தெரிவித்து அனுமதிபெற்றுக் கீசகனுடன்கூடவே இவள் எரிக்கப்படவேண்டும். கந்தர்வர்களால் கொல்லப்பட்டிருந்தாலும் கீசகனுக்கு இது ப்ரியமாகும்' என்றுசொன்னன். பிறகு, ஸூதர்கள், விராடனிடம்சென்று அஞ்சலிபந்தம்செய்துகொண்டு, '(ராஜரே!)கீசகன், காமரூபிகளான கந்தர்வர்களால் கொல்லப்பட்டு விழுந்துகிடக்கிறான்; ஸைரந்த்ரியினால் இரவில் உயிரை இழக்கும்படி செய்யப்பட

டான். அவனை இவளோடு கூடவே எரிக்கப்போகிறோம் வீரரே! உம்மால் நாங்கள் கௌரவப்படுத்தப்பட்டிருக்கிறோம். ஆதலால், (இவ்வாறு செய்வதற்கு) அனுமதிகொடுக்கவேண்டும்' என்று சொன்னர்கள். ஜனதிபனை விராடராஜன், ஸைதர்களுடைய பராக்ரமத்தைஅறிந்து, ஸைரந்த்ரியை ஸைதபுத்ரரிடமிருந்து அனுமதிகொடுத்தான். பிறகு, அரசனுடைய அனுமதியைப் பெற்றவர்களான அந்தக்கீசகனுடைய பந்துக்களெல்லாரும் கீசகனைப் பார்த்து நான்குபக்கத்திலும் நின்றுகொண்டு புலம்பினர்கள். அந்தஸைதர்களும் கீசகரோடு கிருஷ்ணையை (ஆஸந்தியில்) ஏற்றி மயிர்களிலும் கால்களிலும்கட்டி [1]அவளைஉத்தேசித்து, 'மிக்க தைர்யமுள்ள இந்தக்கீசகன் இவள்நிமித்தமாகக் கொல்லப்பட்டதனால் இவள் கீசகனுடைய வழியை அடையட்டும். ஸுந்தரியான இவள், (ஒருவராலும்) தடுக்கமுடியாத பராக்ரமத்துடன்கூடியவனும் உயிரை இழந்தவனுமானகீசகனுடனே ஸ்வர்க்கலோகம்போகட்டும்' என்ற வசனங்களைச்சொன்னர்கள். சிறந்தகீர்த்தியுடையவளும் உதாரமான மனத்தையுடையவளும் மங்களமான அங்கங்களுள்ளவளும் மிகச்சிறந்த ஸ்வபாவமுள்ளவளுமான அந்தக்ருஷ்ணையானவள், துஷ்ட ஸ்வபாவமுள்ளவனும் உயிரை இழந்தவனுமான அந்தக்கீசகனோடு சேர்த்து ஆஸந்தியில் துஷ்டர்களான உபகீசகர்களால் கட்டப்பட்டுப் பரவசமாய் உறுதியான அந்த ஆஸனத்தில் தொங்கிக்கொண்டு அழுதாள். பிறகு, ஸைதபுத்ரர்களால் பலாத்காரமாகக் கட்டிக் கொண்டுபோகப்படுகின்றவளும் அழகிய இடையையுடையவளும் இகழப்படாதவளும் நாதர்களையுடையவளும் பதிவ்ரதையுமான அந்தக்ருஷ்ணையானவள் நாதனை விரும்பிக்கொண்டு உரக்கஅலறினள். மரித்தவனோடு சேர்த்துக் கட்டப்பட்ட அங்கத்தையுடையவளும் அப்பொழுது உயிரோடிருப்பதில் ஆசையற்றவளுமான அந்தத்ரௌபதியானவள் ப்ரமசானத்துக்கு எதிரில் கொண்டுபோகப்பட்டவளாகிப் பெண்யானைபோல அலறினள். திரௌபதி, 'ஜயன் ஜயேசன் விஜயன் ஜயத்ஸேனன் ஜயத்பலன் என்கிற இவர்கள் என்னுடைய வாக்யத்தை அறியவேண்டும். ஸைதபுத்ரர்கள் என்னைக்கொண்டுபோகின்றார்கள். எவர்களுடைய பெரிதான நாணெலியானது துந்துபிவாத்யத்தினுடைய முழக்கம்போலக் கேட்கப்படுகிறதோ அவர்கள் என்னுடைய வார்த்தையை அறியட்டும். ஸைதபுத்ரர்கள் என்னைக் கொண்டுபோகிறார்கள். எவர்களுடைய நாணெலியும் கையுறையின் சப்தமும் இடிமுழக்கம் போலிருக்கின்றனவோ, யுத்

1 ஒருசொல்விடப்பட்டது.

தத்தில் பலசாலிகளான எவர்களுடைய பயங்கரமான சப்தமானது பெரிதாகக்கேட்கப்படுகிறதோ, பலசாலிகளான எந்தக் கந்தர்வர்களுடைய ரதத்தின் ஓசையானது மிக உரக்கக்கேட்கப்படுகிறதோ அவர்கள் என்னுடைய வசனத்தை அறியட்டும். ஸ்ரீதபுத்ரர்கள் என்னைக்கொண்டுபோகிறார்கள். எவர்களுடைய வீர்யமானது ஒப்பற்றதோ, எவர்களுடைய பலமும் கீர்த்தியும் இந்த்ரனுடையபலம்போலவும் கீர்த்திபோலவும்இருக்கின்றனவோ ராஜஸிம்மங்கள்போலச் சிறப்புற்றவர்களான அவர்கள் என்னை அதிக துக்கமுள்ளவளென்று அறியட்டும்' என்று சொன்னாள்.

இவ்வாறு தீனமான இந்த க்ருஷ்ணையினுடைய புலம்பல் வார்த்தைகளைக் கேட்டவுடன், பீமன் ஆலோசியாமல் படுக்கையினின்று எழுந்திருந்தான். அவன், 'ஸைரந்த்ரீ! உன்னால் சொல்லப்பட்ட வார்த்தைகளை நான் கேட்கிறேன். ஆதலால், உனக்கு ஸ்ரீதபுத்ரர்களிடத்திலிருந்து பயம் ஒருபொழுதும் உண்டாகவேண்டாம்' என்று கூறினான். நீண்டகைகளையுடைய அந்தப்பீமஸேனன் இவ்வாறு சொல்லிவிட்டுக் (கீசகர்களைக்) கொல்லவேண்டுமென்கிற எண்ணத்தினால் வளர்ச்சியடைந்தான். பிறகு, அவன் (சண்டைக்கு) ஆயத்தமாகி வஸ்திரத்தைச் சுற்றிக்கட்டிக்கொண்டு வாயில்களில்லாத இடங்களில் தாண்டிக்கொண்டு அப்பொழுது வெளியில் சென்றான். அந்தப்பீமன் மதில்களைத்தாண்டி வேகமாக மரங்களின்மீது ஏறி அந்தக்கீசகர்கள் சென்றுகொண்டிருக்கும் இடுகாட்டுக்கு எதிராகச் சென்றான். அப்பொழுது அந்தப்பீமன் பிராகாரத்தைத்தாண்டி உத்தமமான பட்டணத்திலிருந்துவெளிப்பட்டு வேகத்தோடு (எல்லாவற்றையுந்) தாண்டிக்கொண்டே ஸ்ரீதர்களுக்கு எதிரில் வந்துசேர்ந்தான். மஹாபலசாலியான அவன், சிதையின் பக்கத்தை அடைந்து, அவ்விடத்திலிருக்கின்ற ஒரு பனை அளவுள்ளதும் பருத்த அடியினையுடையதும் மேலே உலர்ந்திருப்பதுமான ஒருமரத்தைக் கண்டான். பயங்கரமான பராக்ரமமுள்ள பீமன் யானைபோல அம்மரத்தினருகிற் சென்று இரண்டு கைகளாலுந்தழுவி அம்மரத்தை (வேரோடு) பெயர்த்தான்; பிறகு, அம்மரத்தைப் பத்துப்பாகம் நீளம் இலையில்லாமல் செய்தான். பருத்த உருவமுள்ள அந்த மரத்தை உயரத்தூக்கிப் பிடித்துச் சுழற்றிக்கொண்டு காலதண்டத்தைக் கையில் கொண்ட யமன்போல வேகத்தோடு ஸ்ரீதர்களுக்கு எதிரில்வந்து தோன்றினான். அவனுடைய தோடைகளின் வேகத்தினால் ஆலமரங்களும் அரசமரங்களும் பலாசமரங்களும் முறிக்கப்பட்டுப் பிறகு பூமியில் விழுந்துகிடந்தன. ஸிம்மம்போலக் கோபங்கொண்டு வந்திருக்

கின்ற அந்தக்கந்தர்வனைக்கண்டு, அப்பொழுது, ஸ்திதர்கள் வ்யஸனத்தாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்டு மிகப்பயந்தார்கள். மூத்தோனுகிய கீசகனைத் தஹனம் செய்யக்கருதிய உபகீசகர்கள், யமன்போலக் கோபங்கொண்ட பீமனைக்கண்டு, கந்தர்வனென்கிற பயத்தினல் கவலையடைந்து, துயரத்தாலும் பயத்தாலும் மதிமயங்கி, அப்பொழுது ஒருவரையொருவர் பார்த்து, 'பலசாலியான கந்தர்வன் கோபத்துடன் ஒரு மரத்தைத் தூக்கிக்கொண்டு வருகிறன். கந்தர்வர்கள் நல்லஉக்கமுடையவர்கள்; மஹாபாக்யசாலிகள்: ஸ்ர்யனுடைய காந்திபோன்ற காந்தியையுடையவர்கள். நமக்குப் பெரிதான பயம் வந்துவிட்டது. ஸைரந்த்ரியைச் சீக்ரமாக (அவிழ்த்து) விட்டுவிடுவோம்' என்று பேசிக்கொண்டார்கள். பிறகு, அவர்கள் பீமஸேனனல் சுழற்றப்படுகின்ற மரத்தைப்பார்த்து நடுக்கமுற்று த்ரௌபதியை விட்டுவிட்டு நகரத்தை நோக்கி ஓடினர்கள். பிறகு, பீமன், ஓடுகின்ற அவர்களை வஜ்ராயுதத்தை ஏந்திய இந்திரன் அஸுரர்களைப் பார்ப்பதுபோலப் பார்த்து, தாண்டிக்குதித்து ஓடி, அவர்களுக்கு எதிரில் நின்றனன். அவர்கள் அவனைப்பார்த்துப் பயத்தினல் மனக்கலக்கமுற்று அசைவற்று நின்றார்கள். அந்த வ்ருகோதரன் நூற்றுக்கணக்கான அந்தக்கீசர்களைப் பார்த்து, வஜ்ராயுதமுள்ள இந்திரன் தானவர்களை நாசஞ்செய்ததுபோல, ஒரே அடியினல் பத்துப்பேர்களையும் ஏழு பேர்களையும் இருபது பேர்களையும் பதினைட்டுப் பேர்களையும் ஐம்பது பேர்களையும் கொன்றனன். ராஜேந்ரரே! வாயுபுத்ரனும் பலசாலியும் வாயுவின்வேகத்துக்கு ஒப்பான வேகமுள்ளவனும் தைர்யலக்ஷ்மியையுடையவனுமான பீமன் நூற்றைந்து ஸ்திதர்களையும் மிச்சமின்றி மரத்தினலேயே (அடித்து) யமனுடைய வீட்டுக்கு அனுப்பினன். சிறந்த கைகளுள்ளவனும் மஹாபலசாலியுமான பீமஸேனன் அவர்களைக் கொன்றுவிட்டு அப்பொழுது க்ருஷ்ணையைக் கட்டிலிருந்து விடுவித்துத் தேறுதலடையச் செய்தான். பரதஸ்ரேஷ்டனே அந்த விருகோதரன் பயந்தவளும் கண்ணீரால் நிறைந்த முகமுள்ளவளுமான பாஞ்சாலியை (ஆபத்தினின்று) ரக்ஷித்து மென்மையான சொல்லால் வசனிக்கலானன். 'யாஜ்ஞஸேனி! பதிவ்ரதாதர்மத்தில் நிலைபெற்றவளான நீ துயரமடையாதே. பாதிவ்ரத்யத்தில் நிலைபெற்றிருக்கின்ற ஸ்திரீயானவள் எப்பொழுதும் தன்னுடைய விரதத்தைக்காப்பாற்றவேண்டும். பதிவ்ரதையும் கணவ்னிடத்தில் அன்புள்ளவளும் தேவராதருடைய மனைவியுமான சிரோமணியென்பவள் முன்னொருகாலத்தில் தன் கணவனுடைய வேஷத்தைத் தரித்த ஒரு ராக்ஷஸனல் கவரப்பட்டாள். அந்த ராக்ஷஸன் ஒரு குளக்

கரையில் அவளைக் கீழே இறக்கிவிட்டு பார்த்தாவினுடைய ரூபத்தை விட்டுவிட்டு அதிபயங்கரனை ராக்ஷஸனைத் தோன்றி, ஸாம தான பேதங்களாலும் அவள் உடன்படாதிருந்தபொழுது, அவன் அவளை 1 நிர்ப்பந்தஞ் செய்யத் தொடங்கினன். பிறகு, அவள் அப்பொழுது தைர்யத்தைக் கைக்கொண்டு (அந்த ராக்ஷஸனுக்கு) இடம்கொடுக்கவில்லை. பிறகு, அவன் கத்தியை உருவிக்கொண்டு பதிவ்ரதையான அவளைப் பயமுறுத்தினன். கிருஷ்ணையே! கற்பையே முதன்மையாகக்கொண்டவளான அந்த ஸாத்வியும் பயத்தை நீக்கி, உயிரை விடுவதில் நல்ல நிச்சயமுடையவளாகி, 'என்னுடையபர்த்தா என்னால் பரதேவதையாக ஆராதிக்கப்பட்டிருப்பாராகில், பெரியோர்கள் என்னால் செய்கையினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் ஸந்தோஷப்படுத்தப்பட்டிருப்பார்களாகில் அந்தஸத்யத்தினால் என்னுடைய 2 சரீரத்தில் சிலபாகம் இப்பொழுது கற்பாறையாகட்டும்' என்று பிரதிஜ்ஞை செய்தாள். இவ்வாறு, அவளால் பிரதிஜ்ஞை செய்யப்பட்டவுடனே, அவளுடைய 3 அங்கமானது அவ்விதமான கற்பாறையாகியது. நாபிக்கும் முழங்காலுக்கும் நடுவிலுள்ள இடம் முழுவதுமே கல்லாய்விட்டது. பிறகு, அந்தராக்ஷஸன் கத்தியை எடுத்துக்கொண்டு அவளுடையதலையை வேகமாக அறுத்தான். அவள் பார்வதிக்கு நகழும்சதையும்போல (இணைபிரியாத) ஜயை என்கிற ஸகியாளுள். ஆதலால், கற்புள்ளவளுக்குத் துக்கம் அல்பம்; ஸுகம் அதிகம். பயந்தஸ்வபாவமுடையவளே! உன்னைத் துன்புறுத்துகிறவர்கள் இவ்விதமாகவே கொல்லப்படுவார்கள். கிருஷ்ணையே! நீ நகரத்துக்குப்போ; உனக்குப் பயம் இல்லை. நீ வேறுவழியிலல் ஸுதேஷ்ணையினுடைய இருப்பிடத்திற்கு விரைவாகச்செல். நான் வேறு வழியிலல் விராடனுடைய மடைப்பள்ளிக்குச் செல்லுகிறேன். இரவில் இவ்வாறு நாமிருந்தோமென்பதை ஜனங்கள் அறியாவண்ணம் நாம் நடந்துகொள்ளவேண்டும்' என்று சொன்னன்.

பீமனல் ஸமாதானம் செய்யப்பட்ட பதிவ்ரதையான அந்தக் கிருஷ்ணையானவள் நகரத்தில் பிரவேசித்தாள். நல்லலக்ஷணங்களுள்ள அவள், செய்யவேண்டிய கார்யத்தைச் செய்துவிட்டு, நஹுஷன் சபிக்கப்பட்ட பிறகு இந்திராணியானவள் ஸ்வர்க்கத்தில் பிரவேசித்ததுபோல, ஸுதேஷ்ணையினுடைய அந்தப்புரத்தில் பிரவேசித்தாள். அளவுகடந்த வீர்யத்தையுடையவனும் சிறந்த பலமுள்ளவனும் பகைவர்களைத் துணைக்கிறவனும் தர்மநந்தனருக்கு இளையஸஹோதரனும் பகைவர்களை ஜயித்தவனும்

1, 2, 3, மூலம் வேறு.

கம்பீரஸ்வபாவமுடையவனுமான பீமனும், ராமர் ராக்ஷஸர்களைக் கொன்றதுபோல எல்லாக் கீசகர்களையும் அவ்விடத்தில் மிச்சமின்றிக் கொன்றுவிட்டு, பிறகு, பட்டணத்தில் பிரவேசித்தான். பாரதரே! அந்தப் பீமனால் அவ்விடத்தில் கொல்லப்பட்ட நூற்றைந்து கீசகர்களும், வெட்டப்பட்டுச் சாய்ந்துகிடக்கின்ற மரங்களுள்ள பெரிய காடுபோலச் சாய்ந்துகிடந்தார்கள். ராஜரே! இவ்வாறு அந்த நூற்றைந்து உபகீசகர்களும் ஸேனாபதியான அந்தப் பிரதானகீசகனும் கொல்லப்பட்டார்கள். இவ்விதமாக நூற்றுறுகீசகர்களும் மாண்டார்கள். கீசகனுடைய பந்துக்கள் கந்தர்வர்களிடத்திலிருந்து உண்டானபயத்தினால் ஒன்றும் பேசவில்லை. அவ்விடத்தில் பயத்தினால் அந்த ஸைரந்த்ரியைப்பார்ப்பதற்கும் சக்தியற்றவர்களானார்கள். விராடநகரத்திலுள்ள எல்லா ஜனங்களும் ஒன்றுகூடி, கொல்லப்பட்டிருக்கிற அந்த நூற்றைந்து ஸுதபுத்ரர்களையும் காலையில் கண்டார்கள். பாரதரே! பெரிதான அந்த ஆச்சர்யத்தை நகரத்திலுள்ள புருஷர்களும் ஸ்திரீகளும் பார்த்து அதிகமான ஆச்சர்யத்தை அடைந்து ஒன்றும் சொல்லவில்லை.

இருபத்தேட்டாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(ஸுதேஷ்ணை த்ரௌபதியை ஊரைவிட்டுப் போகச்சொல்லியதும், அவள் ஒருமாதம் வஸிக்க அனுமதி பெற்றதும்.)

பாரதரே! பீமஸேனனால் கொல்லப்பட்ட ஸுதர்களைக் கண்டு, அந்தப்பட்டணத்திலிருக்கிற ஜனங்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து விராடராஜனிடம்சென்று, 'ராஜரே! நூற்றுக்குமேலான ஸுதபுத்ரர்களும் கந்தர்வனால் கொல்லப்பட்டார்கள். வஜ்ரத்தினால் பிளக்கப்பட்ட மலையினுடைய பெரிய கொடிமுடிகள்போல ஸுதபுத்ரர்கள் பூமியில் சிதறிக்கிடக்கின்றவர்களாகக் காணப்படுகிறார்கள். அந்த ஸைரந்த்ரியும் விடுபட்டு மறுபடியும் உம்முடைய அரண்மனைக்கு வருகிறாள். ஓ! அரசரே! உம்முடைய நகரமுழுவதும் ஸந்தேஹிக்கத்தக்கதாகும். ஸைரந்த்ரியோ அவ்விதமான ரூபமுள்ளவள். கந்தர்வர்களும் மிக்க பலசாலிகள். புருஷர்களுக்கு ஸ்த்ரீகளுடன் சேர்வதில் விருப்பமுண்டாவது இயற்கை; ஸம்சயமில்லை. ராஜரே! ஸைரந்த்ரியினுடைய தோஷத்தினால் உம்முடைய இந்தப்பட்டணமானது விநாசத்தை அடையாதபடி விரைவாக நன்கு செய்யப்படவேண்டும். ஸர்வாங்கஸுந்தரியும் ரூபலாவண்யங்களால் விளங்குகின்றவளும் மங்களகரியுமான ஸ்தி

ரீயைக் கண்ணால் இமையாமல்பார்க்கின்ற புருஷர்களுடைய மனத்துக்கும் கண்ணுக்கும் தடைஇராது. ஆதலால், பூமியில் ரூபத்தால் ஒப்பற்றவளான அந்தஸைரந்த்ரியை எந்தப்புருஷன் பார்த்துக் காமனுக்கு வசப்படுவனே அந்தமூடன் கந்தர்வர்களால் கொல்லப்படுகிறான். இவளை அரண்மனையினின்று வெளியில் ஓட்டிவிடும்; முக்யமாகப் பட்டணத்திலிருந்தே ஓட்டிவிடும். காலன் ஸைரந்த்ரியினிடத்தில் பிரவேசித்து இந்தப் பட்டணத்தை அழிக்கிறனென்பது நிச்சயம்' என்று விஜ்ஞாபனம்செய்தார்கள். அவர்களுடைய அந்த வார்த்தையைக்கேட்டுச் சேனத்தலைவனான விராடன், 'இந்தக் கீசகர்களுக்கு அபரக்ரியையானது நடத்தப்படட்டும். நன்றாக மூட்டப்பட்டிருக்கிற ஒரே அக்னியில் வாசனைப்பொருள்களை எங்குஞ்சேர்த்து அந்தக்கீசகர்களனைவர்களும் கொளுத்தப்படலாம்' என்று ஆஜ்ஞாபித்தான். அரசன் இவ்வாறுசொல்லி அதிக மனக்கவலையுற்று மங்களகரமான அந்தப்புரத்தை அடைந்து தன்பட்ட மஹிஷியான ஸுதேஷ்ணையைப் பார்த்து மிகுந்த பயத்துடன் (பின்வருமாறு) உரைக்கலானான்.

'(ஸுதேஷ்ணையே!) ஸைரந்த்ரி இவ்விடம்வந்தால் அவளைப் பார்த்து நான் கட்டளையிட்டதாகவே நீ சொல்லவேண்டும். (எவ்வாறெனில்) 'ஏ! ஸைரந்த்ரி! உனக்கு மங்களம். இப்பொழுது உன்னிஷ்டப்படி (வெளியில்) சென்று ஸஞ்சாரம்செய். ஸைரந்த்ரி! ராஜாவானவர் கந்தர்வர்களிடத்திலிருந்து நேரக்கூடிய அவமானத்தில் பயப்படுகிறார். கந்தர்வர்களால் பாதுகாக்கப்பட்டிருக்கிற உன்னிடத்தில் அவர் நேரில்சொல்வதற்கு விரும்பவில்லை. உன்னிடம் ஸ்திரீகள் சொல்லுவதில் குற்றமில்லை. ஆதலால், நான் உன்னிடத்தில் (இவ்விஷயத்தைச்) சொல்லலானேன்' என்பது' என்றான். அந்த ராஜகிங்கரர்களெல்லாரும் நன்றாக மூட்டப்பட்டிருக்கிற ஒரே அக்னியில் எல்லாக்கீசகர்களையும் ஸர்வவிதமான ஸம்ஸ்காரங்களோடும் தகனஞ் செய்தார்கள். பிறகு, பீமஸேனனால் ஸுதபுத்ரர்களைக் கொன்று விடுவிக்கப்பட்ட திரௌபதியானவள் பயத்தினின்று விடுபட்டவளாகி நகரத்தைநோக்கிச் சென்றாள். புலியினால் பயமுறுத்தப்பட்ட பெண்மான்போலப் பயமுறுத்தப்பட்டவளும் உத்தமமான மனோபாவமுள்ளவளும் யௌவனமுடையவளுமான திரௌபதியானவள் (தன்னுடைய) அங்கங்களையும் ஆடையையும் நன்றாக அலம்பிக்கொண்டு நகரத்தில் ப்ரவேசித்தாள். ராஜரே! அவளைக்கண்டு கந்தர்வர்களிடமுள்ள பயத்தினால் (அங்குள்ள) புருஷர்கள் பத்துத் திக்குக்களிலும் ஓடினர்கள். சிலர் கண்ணை மூடிக்கொண்டார்கள். அவ்வாறே, மற்ற

ஜனங்கள் மயக்கமடைந்து கைகளால் கண்களை மூடிக்கொண்டு ஓடினர்கள். அவ்வாறே, (சில ஜனங்கள்,) 'அந்த ஸைரந்த்ரியைப் பாராதேயுங்கள்' என்று சொல்லிக்கொண்டு தீனஸ்வரூபத்துடன் அலறினர்கள். (மற்றும் சிலர்,) 'ஸௌந்தர்யத்தினால் விளங்கும் இவளை இப்பொழுது பார்ப்பவன் கீசகர்கள்போல நாசம்செய்யப் பட்டு இந்த இடத்தில் இறக்கவேண்டிவரும்' என்று சொல்லிக் கொண்டு பயத்தினால் நிலைதவறிய மனத்துடன் கந்தர்வர்களிடத்தி லிருந்து உண்டானபயத்தால் மயக்கத்தை அடைந்தார்கள். அரசரே! பிறகு, பாஞ்சாலியானவள் சமையற்கட்டிடத்தினுடைய வாயிலில் மதங்கொண்ட பெரிய யானைபோல வீற்றிருக்கும் பீம ஸேனனைக்கண்டு பரிஹாஸத்துடன் குறிப்புக்களோடு மெல்லப் பின்வருமாறு சொல்லலாளுள். 'எவரால் நான் (ஆபத்தினிட மிருந்து) விடுவிக்கப்பட்டேனே அந்தக் கந்தர்வராஜருக்கு வந்த னம். தோஷமற்றவளும் நாதனில்லாதவளாக வீட்டில் வஸித்துக் கொண்டிருக்கின்றவளும் கீசகர்களிடத்திலிருந்து பயந்தவளுமான என்னை ரக்ஷித்த கந்தர்வருக்கு வந்தனம்' என்றாள். பீமன், 'எந்தப்புருஷர்கள் [1] உனக்கு ஸ்வாதீனப்பட்டவர்களாக இவ்வுல கில் ஸஞ்சரிக்கிறார்களோ அவர்களுக்கு எப்பொழுதும் நீ வசப் பட்டவளாக இஷ்டப்படி ஸஞ்சரித்துக்கொண்டிரு. எந்தப்புருஷர் கள் (உனக்கு) ஸ்வாதீனப்பட்டவர்களாக இவ்வுலகில் ஸஞ்சரிக் கிறார்களோ அவர்கள் இனி அப்படிப்பட்ட உன்னுடைய வார்த் தையைக்கேட்டுக் கடனில்லாதவர்களாக விளையாடிக்கொண்டிருக்கட் டும்' என்றான். அவ்விருவர்களுடைய அந்த வார்த்தையையும் கேட்டு மற்ற ஜனங்கள் (அதன் கருத்தை) அறியவில்லை. பிறகு, பாஞ்சாலராஜகுமாரியும் (வேறிடத்திற்குச்) சென்றாள். பிறகு, அவள் நடனசாலையில் விராடராஜனுடைய பெண்களுக்கு நடனம் கற்பிக்கின்றவனும் சிறந்த கைகளுள்ளவனுமான தனஞ்சயனைக் கண்டாள். பிறகு, அந்தக்கன்னியர்கள் அர்ஜுனனுடன் நடன சாலையிலிருந்து வெளியில்வந்து, வருகின்றவளும் துன்பமடைந்த வளும் குற்றமற்றவளுமான திரௌபதியைக் கண்டார்கள். கன்னி யர்கள், 'ஸைரந்த்ரி! நீ பாக்யத்தால் ஆபத்தினின்று விடுவிக்கப் பட்டாய்; பாக்யத்தினால் மீண்டு (இங்கு) வந்தாய். குற்றமற்றவ ளான உன்னைத் துன்பப்படுத்தினஸைந்தர்களும் உன்பாக்யத்தால் கொல்லப்பட்டார்கள்' என்றுசொன்னர்கள். பிருஹன்னளை, 'ஸை ரந்த்ரி! எவ்விதம் நீ விடுவிக்கப்பட்டாய்? அந்தப்பாபிகள் எவ்வா றுகொல்லப்பட்டார்கள்? உன் வரலாற்றை நான் கேட்கவிரும்புகி

---

1 'யஸ்யா:' என்பது மூலம்.

றேன். உள்ளபடி நீ உரைப்பாயாக' என்றுவினவ, ஸைரந்த்ரி, 'ப்ருஹன்னளே! ஸைரந்த்ரியினுல் உனக்கு இப்பொழுது என்ன கார்யமிருக்கின்றது? கல்யாணி! நீ எப்பொழுதும் ஸுகமாகக் கன்யாமாடத்தில் மகிழ்ந்திருக்கிறாய். ஸைரந்த்ரி அடைகிற துக்கத்தை நீ அடைகிறாயில்லை. நீ ஸுகமாக இங்கே இருக்கிறாய். அவ்விதமான துக்கம் உன்னுல் அடையப்படவில்லை. ஆதலால், துக்கமடைந்திருக்கின்ற என்னைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு இம்மாதிரியாக வினவுகிறாய்' என்றுசொல்ல, பிருஹன்னளை, 'கல்யாணி! இந்தப்ருஹன்னளையும் விலங்குஜாதியில்பிறந்த ஒரு ஜந்துவைப்போல முடிவில்லாத துக்கத்தை அடைந்திருக்கிறாள். இவளை நீ அறியவில்லை. பெண்ணே! உன்னுடன் நான் வாஸம் செய்திருக்கிறேன். நீயும் எல்லாருடனும்சேர்ந்து வாஸஞ்செய் திருக்கிறாய். உன்னைக்காட்டிலும் மிக்க கஷ்டத்துடன் நான் வஸித்துவருகிறேன். அழகிய இடையையுடையவளே! நீ துய ரப்பட்டுக்கொண்டிருக்கும்போது யார்தாம் (அப்படிப்பட்ட உன்) துக்கத்தை (மனத்தில்) எண்ணுமலிருப்பார்? ஒருவராலும் ஒருவ ருடையமனமானது முழுதும் ஒருஸமயத்திலும் அறியமுடியா தென்பது நிச்சயம். அதனுல் என்னை நீ அறியவில்லை' என் ருள். பிறகு, திரௌபதியானவள் பெண்களோடுகூடவே அந்த ராஜகிருஹத்தில் நுழைந்து அஸ்வினையற்றவளாக ஸுதேஷ்ணை யிடம் சென்ருள். அவளைநோக்கி, ராஜபத்னியானவள் விராட னுடையசொற்படி-, 'ஸைரந்த்ரி! நீ எங்கேபோகவேண்டுமென்று விரும்புகிறாயோ அவ்விடம் விரைவாகச்செல். ஸைரந்த்ரி! அர சர் கந்தர்வர்களிடத்தினின்று அனர்த்தம்நேரிடுமென்று பயப் படுகிறார். நீயும் யௌவனமுடையவள்; அழகியபுருவங்களுள்ள வள்; ஸௌந்தர்யத்தினுல் பூமியில் நிகரில்லாதவள். கல்யாணி! புருஷர்களுடையமனமும் ஸ்பர்சத்தினுல் உண்டாகிறஸுகத்தில் பற்றுள்ளது. ஆதலால், உன்னிடத்திலிருந்து எனக்கும் தேசத் துக்கும் நகரத்துக்கும் பயமுண்டாயிருக்கிறது. நீ இஷ்டப்படி ஸுகமாயிருக்கத்தக்க இடத்தைக்குறித்து இப்பொழுதே (இந்த) நகரத்தினின்று போய்விடு. கல்யாணி! உன்நிமித்தமாக என் னுடைய பந்துக்கள் அனைவர்களும் கொல்லப்பட்டார்கள். என் னுடைய பிராதாக்களை நீ கொன்றகாரணத்தால் உன்னுடைய புத்தி கொடிது. ஆகையால், கந்தர்வராஜர்களிடத்திலிருந்து இப் பொழுது பயம் உண்டாகிறது. ஸைரந்த்ரி! (உனக்கு) இவ்வுல கில் எவ்வாறு க்ஷேமமுண்டாகுமோ அவ்வாறு இஷ்டப்படிசெல்' என்ருள். ஸுதேஷ்ணையினுடைய வார்த்தையைக்கேட்டு, ஸைரந்

த்ரியானவள், 'கோபமுள்ளவளே! முப்பதுநாள்வரையில் அரசர் பொறுத்துக்கொண்டிருக்கட்டும். (அதற்குள்) அந்தக்கந்தர்வர்கள் கார்யஸித்தி அடைவார்கள்; ஸம்சயமில்லை. பிறகு, என்னைத் தங்களிடம் அழைத்துக்கொள்வார்கள்; உனக்கு ப்ரியத்தையும்செய்வார்கள். நிச்சயமாகவே அரசர் பந்துக்களோடு கூட நன்மையை அடைவார். கல்யாணி! அந்தக்கந்தர்வர்கள் அரசரால் உதவிசெய்யப்பட்டவர்களும் எப்பொழுதும் நன்றி அறிவுள்ளவர்களும் நல்லஸ்வபாவமுள்ளவர்களும் பலத்தினல் அதிககர்வமுள்ளவர்களும் ப்ரத்யுபகாரஞ்செய்வதில் விருப்பமுள்ளவர்களுமாயிருக்கின்றார்கள். நான் (மிச்சமானமுப்பதுநாள் வரையில் இங்குவஸிக்க) விரும்புகிறேன். நீ தடைசொல்லாதே. (நான் இங்குவஸிப்பதால் சுபமோ அசுபமோ) எதுவருமென்பதை ஆலோசனைசெய். அந்த (முப்பது) நாள்வரையில் என்னைக்காப்பாற்று. அதனல் உனக்கு நன்மை உண்டாகும்' என்றுகூறினள். அந்தஸைரந்த்ரியினுடைய அந்தவார்த்தையைக் கேட்டு, கேகயராஜகுமாரியான ஸுதேஷ்ணையானவள், ப்ராதாக்களுக்குநேர்ந்த விபத்தினல் பீடிக்கப்பட்டுத் துக்கத்தினல் மதிமயங்கித் துன்பத்துடன் திரௌபதியைப்பார்த்து, 'கல்யாணி! நீ இஷ்டப்படி வாஸம்செய். உன்னை நான் சரணமடைந்தேன். என்னுடையபர்த்தாவையும் விசேஷித்துப் புத்ரர்களையும் நீ காப்பாற்று' என்றுசொன்னள். ராஜப்ரேஷ்டரே! ஸுதேஷ்ணையானவள் இவ்வாறு சொல்லிவிட்டு, (விராடராஜனிடம்வந்து,) '(மஹாராஜரே!) பயந்தவளான இந்தஸைரந்த்ரியானவள் இந்தமுப்பதுநாள் (இவ்விடத்தில் வாஸஞ்செய்து) க்ருதக்ருத்யையாகட்டும். நான் (அதுவரையில் இவ்விடத்தில் இவளை) வஸித்துவரும்படிசெய்கிறேன்' என்று அரசனிடம் எல்லாவிஷயத்தையும் தெரிவித்தாள்.

கீசகவதபர்வம் முற்றிற்று.

இருபத்தொன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம்.

(பாண்டவர்களைத்தேடி விராடநகரம் சென்ற சாரர்கள் ஹஸ்தினபுரம் சென்று துர்யோதனனிடத்தில் தாங்கள் பாண்டவர்களை அறியவில்லையென்பதையும் கீசகவதத்தையும் தெரிவித்தது.)

கீசகன்கொல்லப்பட்டவுடன், பகைவீரர்களைக் கொல்லும் திறமையுடைய விராடராஜன், மந்திரிகளோடும் புரோஹிதர்க

ளோடும் மிக்க சோகத்தை அடைந்தான். ராஜரே! அந்தநகரத்திலும் தேசத்திலுமுள்ள ஸாமான்யஜனங்கள், ஸோஹாதரர்களோடுகூடின கீசகனுடைய கோரமானவதத்தைக்கேட்டு, இது மஹாபயங்கரமென்றெண்ணி ஆச்சர்யமடைந்து, 'வீர்யமுடையவனும் ராஜாவுக்கு நண்பனும் கொழுப்பிலல் அதிகர்வம்கொண்டவனும் யுத்தத்தில்அட்டஹாஸம்செய்பவனும் பலசாலியும் யுத்தத்தில் ஒருவராலும் ஜயிக்கமுடியாதவனுமான கீசகனைவன், பகைவர்களை நாசஞ்செய்கின்றவனும் பெண்போகம் தேடுகிறவனும் கெட்டபுத்தியுள்ளவனுமாயிருந்தான். அவன் ஸைரந்த்ரிநிமித்தம் கந்தர்வர்களால் இரவில் கொல்லப்பட்டானும்' என்று எல்லா இடங்களிலும் பேசிக்கொண்டார்கள். மஹாராஜரே! கீசகன்கொல்லப்பட்டவுடன், அந்தஅந்தத்தேசங்களிலுள்ள மனிதர்கள் வியப்புற்று இவ்வாறு கீசகனுடைய விநாசத்தைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

பிறகு, துர்யோதனனல் வெளிநாடுகளில் (பாண்டவர்களைத் தேடுவதற்காக)அனுப்பப்பட்டிருந்தசாரர்களெல்லாரும் (துர்யோதனனுடைய) கட்டளைப்படி ஸங்கேதஞ்செய்துகொண்டு அநேகதேசங்களிலும் கிராமங்களிலும் நகரங்களிலும்தேடி, பிறகு, தாம் சொல்லிக்கொண்டபடி (ஒருவரை ஒருவர்) பார்த்துக்கொண்டு ஹஸ்திநபட்டணத்துக்குத் திரும்பினர்கள். அவர்கள் ஹஸ்தினபட்டணத்தைவந்தடைந்து அங்கு பகைவர்களை அடக்குபவனும், குருவம்சத்திலுதித்தவனும், திருதராஷ்டிரகுமாரனும், துரோணர் கர்ணன் கிருபர் மஹாத்மாவான பீஷ்மர் இவர்களோடும் ஸோஹாதரர்களோடும் மஹாரதர்களான திரிகர்த்தர்களோடும் சேர்ந்திருக்கின்றவனுமான துர்யோதன மஹாராஜனைக்கண்டு தலையால் பூமியில்வணங்கி, 'ஜயமடைவீராக' என்ற ஆசீர்வாதத்தால் (அவனை) மேன்மைப்படுத்தி, பிறகு, ஸூர்யனுக்கு ஸமமும் ஸ்வர்ணமயமும் உத்தமமுமான ஆஸனத்தில் வீற்றிருப்பவனும் தேவர்களால் இந்திரன் போற்றப்படுவதுபோல மந்திரிகளால் போற்றப்படுகிறவனும் கற்றறிந்தவர்களாலும் பாடகர்களாலும் கவிகளாலும் ஸ்துதிபாடகர்களாலும் பரிவாரங்களுடன்கூடின அனேக மன்னர்களாலும் வணங்கப்பட்டவனும் ஸபையின் நடுவில் வீற்றிருப்பவனுமான அவனைப்பார்த்து, 'ஓ! மனுஷ்யேந்திரரே! ஜனங்களில்லாததும் துஷ்ட மிருகங்களால் சூழப்பட்டதும் பற்பல வண்டுகளால் வியாபிக்கப்பட்டதும் கொடிகளாலும் செடிகளாலும் (அடர்ந்ததும்) உள்ளே புகமுடியாததும் பற்பல புதர்களால் சூழப்பட்டதுமான அந்தப் பெரிய அரண்

யத்தில் அந்தப் பாண்டவர்களைத் தேடுவதின்பொருட்டு எப்போதும் நாங்கள் பெரியமுயற்சியைச்செய்தோம். அதிக உறுதியான வல்லமையுள்ள பாண்டவர்கள் சென்றவழியை நாங்கள் அறியோம். ஆஸ்ரமங்களிலும் காடுகளிலும் உயர்ந்தமலைகளின் சிகரங்களிலும் பற்பலதேசங்களிலும் ஜனங்கள்நிறைந்திருக்கின்றதேசங்களிலும் நாற்சந்திகளிலும் பட்டணங்களிலும் நாங்கள் (பார்த்தர்களுடைய) அடிவைப்பைத் தேடினோம். நரேந்திரரே! விரைவாக (ஓடி) ஒளிந்தவர்களான பாண்டவர்களை நாங்கள் அறியவில்லை. மனிதரிற்சிறந்தவரே! முழுதும் காணமற்போனதினால் அவர்கள் நாசமடைந்திருக்கவேண்டும். உமக்கு மங்களம். மலைகளின் உச்சியிலிருக்கும் புதர்களிலும் குகைகளினிடையிலும் தாழ்வரைகளிலும் நதிகளிலும் மலையருவிகளிலும் மடுக்களிலும் தடாகங்களிலும் செல்லுதற்கரியகாடுகளிலும் கிராமங்களிலும் பூந்தோட்டங்களிலும் யானைகளின் அருகிலும் புலிகளின் அருகிலும் சிங்கங்களின் ஸமீபத்திலும் சரபங்களின்மத்தியிலும் நாங்கள்தேடினோம். அவர்களுடையகதியானது(எவ்விதத்திலும்) அறியமுடியாததாயிருக்கிறது. ரதிகர்களுள் உத்தமரே! மனுஷ்யேந்திரரே! வழியில் (பாண்டவர்களின்) ரதங்களின்கதியை (அறியவிரும்பிக்) கொஞ்சகாலம் நாங்கள் அவர்களுடைய தேர்ப்பாகர்களை அனுஸரித்தோம். பகைவர்களைவாட்டுபவரே! நாங்கள் முறைப்படி தேடிப்பார்த்து உண்மையாக விஷயங்களை அறிந்துகொண்டோம். ஸாரதிகள் பார்த்தர்களின்றி த்வாரகைக்குச் சென்றுவிட்டார்கள். ராஜேந்திரரே! அந்தத்வாரகையில் கிருஷ்ணையும் இல்லை; மஹாவ்ரதமுள்ள பாண்டவர்களுமில்லை. நரதேவரே! உண்மையை உரைத்தோம். பாண்டவர்களை இப்புவியில் நாங்கள் காணவில்லை. பகைவர்களை வாட்டுபவரே! நீர் ஸுகமாக இரும். அவர்கள் நசித்துவிட்டார்கள். நீர் ஸ்வஸ்தமாகஇரும். எல்லாவிதத்திலும் அவர்கள் நசித்துவிட்டார்கள். பரதர்களிற் சிறந்தவரே! உமக்குவந்தனம். மலைகள் வனங்கள் காடுகள் தேசங்கள் நகரங்கள் கிராமங்கள் பட்டணங்கள் இவற்றையுடைய பூமிமுழுவதும் மிச்சமின்றி எல்லா இடத்திலும் நாங்கள் தேடினோம். பாண்டவர்களைக் காணவில்லை. மனுஷ்யேந்திரரே! மறுபடியும் (எங்களுக்குக்) கட்டளையிடும். வேந்தரே! இதற்குமேல் பாண்டவர்களைத் தேடும்விஷயத்தில் மறுபடியும் நாங்கள் என்ன செய்யக்கடவோம்? வீரரே! பிரியமும் மங்களகரமுமான எங்களுடைய இந்த வார்த்தையையும் கேளும். அரசரே! பரதவம்சத்திலுதித்தவரே! மத்ஸ்யராஜனைச் சேர்ந்தவனும் ஸூதஜாதியில் பிறந்தவனும்

மிக்கபலசாலியும் த்ரிகர்த்தர்களைப் பெரும்பாலும் பலத்திலை நாசம்செய்தவனுமான கீசகன் இரவில் கந்தர்வர்களால் அடித்துத்தள்ளப்பட்டுக் கிடக்கிறான். நராதிபரே! விராடராஜனுக்குமைத்துனனும் ஸைந்யபதியும் கம்பீரமானபுத்தியுடையவனும் ஸுதேஷ்ணைக்கு இளையஸஹோதரனும் கொடியவனும் சூரனும் வீரனும் துன்பமற்றவனும் ஊக்கமுடையவனும் மஹாவீர்யமுள்ளவனும் நீதியும் பலமுமுள்ளவனும் யுத்தம்செய்யுமுறைகளை அறிந்தவனும் பகைவர்களுடையவீர்யத்தை நாசஞ்செய்பவனும் சிங்கத்துக்கு ஒப்பான வன்மையுள்ளவனும் குடிகளைக்காப்பதிலும் பகைவர்களைப் பிடிப்பதிலும் வல்லவனும் பெரும்போரில் பகைவர்களைவென்றவனும் மிகக்கொடியவனும் கௌரவத்தையேமுதன்மையாகக்கொண்டவனும் ஸ்திரீபுருஷர்களுடையமனங்களை ஆனந்தப்படுத்துகின்றவனும் தைர்யமும் நன்றுகப்பேசுந்திறமையும் யுத்தத்தில்விருப்பமும் புண்யச்செய்கைகளுமுள்ளவனும் பொருளின்பங்களுக்கு ஆதாரமாயிருப்பவனும் மனிதர்களுள் உத்தமனும் (பகைவர்களுடையபெருமையைப்) பொறுதவனும் கொடியநெஞ்சமுள்ளவனுமான அந்தக்கீசகன் ஸைரந்த்ரீலோடு ஸ்த்ரீநிமித்தமாக நடுநிசியில் கந்தர்வர்களால் கொல்லப்பட்டான்; இவனுடையஸ்நேஹிதர்களும் கொல்லப்பட்டார்கள்; யுத்தவீரர்களும் ஆயுதங்களால் அடிக்கப்பட்டார்கள். கந்தர்வர்களுக்கு மஹிஷியும் அழகிய இடையுள்ளவளுமான ஸைரந்த்ரி என்கிற ஒருஸ்திரீ இருக்கிறாள். கொழுப்பும் கெட்ட எண்ணமுமுள்ளவனும் பலசாலியுமான அந்தக்கீசகன் அவளை விரும்பினான். அந்தக்கீசகன் அனேகபந்துக்களுடன் இரவில் கந்தர்வர்களால் கொல்லப்பட்டானென்னும் வ்ருத்தாந்தத்தை நாங்கள் கேட்டோம். ராஜேந்திரரே! ஆகையால், இதுமுதல் பாண்டவர்களைத்தேடும்பொருட்டுச் சாரர்களை எங்கும் ஸஞ்சரிப்பதற்காக நீர் அனுப்பவேண்டுமென்பது எங்களுடைய எண்ணம். நராதிபரே! துஷ்டாத்மாவானகீசகன் தம்பிமார்களுடன் இரவில் கந்தர்வர்களால் கொல்லப்பட்டான். இவ்வளவுமட்டில் நாங்கள் கேள்வியுற்றோம். உமக்கு மங்களமுண்டாகட்டும். குருகுலத்தில் உதித்தவரே! செய்யவேண்டியகார்யத்தைச் செய்தீர், இந்தப்ரியத்தையும் பகைவர்களுடைய அவமானத்தையும் கேட்டு, இனிச்செய்யத்தக்கதை உடனே செய்யும்' என்று சொன்னார்கள்.

முப்பதாவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனனிகள் பாண்டவர்களைத்தேடுவதற்கு ஆலோசனை செய்தது.)

பிறகு, துர்யோதனமஹாராஜன், அப்பொழுது அவர்களுடைய வார்த்தையைக்கேட்டு நெடுநேரம் மனத்தில்சிந்தித்துஸபையிலிருக்கின்றவர்களைப்பார்த்து இவ்விதமான வார்த்தையைச் சொல்லலானான். '(ஸபையோர்களே!). கார்யத்தின்கதியானது உண்மையாக அறிவதற்குமுடியாததன்றோ? ஆதலால், நீங்கள் எல்லாரும் நன்றாக ஆராய்ந்துபாருங்கள். பாண்டவர்கள் எங்கே போயிருப்பார்கள்? அவர்களுக்கு அஜ்ஞாதவாஸகாலமாக ஏற்பட்ட இந்தப்பதின்மூன்றுவதுவர்ஷத்தில் அனேகமாகக் காலம்சென்றுவிட்டது; கொஞ்சம் மிகுதி இருக்கிறது. இந்தஸமயத்தில் அந்தப்பாண்டவர்கள் இந்த வர்ஷத்தின்மிகுதியையும் தாண்டிவிடுவார்களானால் பிரதிஜ்ஞையைநிறைவேற்றினவர்களும் ஸத்யத்தையும் விரதத்தையும் ப்ரதானமாகக்கொண்டவர்களுமான அவர்களனைவரும், மதப்பெருக்குடைய சிறந்த யானைகள் போலவும் ஸர்ப்பங்கள்போலவும், நிச்சயமாகக் கௌரவர்களைக்குறித்து, (தங்களால் முன்பு அனுபவிக்கப்பட்டிருக்கிற) துக்கத்தினால் அதிககோபமுடையவர்களாவார்கள். புருஷர்களிற்சிறந்த பாண்டவர்கள், ஸமர்த்தர்களும் கற்றறிந்தவர்களும் வல்லமையுடையவர்களும் நன்றாகமறைந்திருக்கின்றவர்களுமான சாரர்களால் நன்றாக உபயோகிக்கப்பட்டிருக்கிற (உபாயத்துடன் கூடின) ஞானத்தினால் அறியத்தக்கவர்கள். கஷ்டமான நிலைமையை அடைந்திருக்கின்ற பாண்டவர்கள் அஜ்ஞாதவாஸகாலத்தில் அறியப்படுவார்களாயின், கோபத்தை அடக்கிக்கொண்டு, பிரதிஜ்ஞைசெய்திருக்கிறகாலம் முடிவதற்குள்ளாகவே மறுபடியும் கானகத்தில்செல்லுவார்கள். ஆதலால், (நம்முடைய) ராஜ்யமானது நாசமற்றதும் குறைவற்றதும் இரண்டாவது அரசனில்லாததும் கவலையற்றதும் பகைவர்களற்றதுமாக நெடுங்காலம் நிலைபெற்றிருக்கத்தக்க உபாயத்தை விரைவாகத்தேடுங்கள்' என்றான்.

அதிகவ்யஸனமுற்றவனான துர்யோதனன் இவ்விதமான வார்த்தையைச் சொன்னவுடன், கர்ணன், ஸத்யமும் தர்மமும் அர்த்தமுமுள்ளவாக்யத்தை (பின்வருமாறு) உரைக்கலானான். 'பரதகுலத்திலுதித்தவனே! மறுபடியும் இவர்கள் போகவேண்டாம். வேறு

சாரர்கள்போகட்டும். சுறுசுறுப்புள்ளவர்களும் யோக்யர்களும் ஸாமர்த்தியமுடையவர்களும் மறைந்துஸஞ்சரிக்குந் தன்மையுடையவர்களுமான சாரர்கள், வளப்பமுள்ளவைகளும் கிராமங்களால் நிறைந்தவைகளுமான பலதேசங்களில் ஸஞ்சரிக்கட்டும். ராஜனே! அவ்விடங்களிலுள்ளனவும் மனத்தைக்கவர்வனவுமான ஸபைகளிலும் ராஜதானிகளிலும் தீர்த்தங்களிலும் பற்பலவிதமான [1] ஆகரங்களிலும் வஸித்தவேஷமும் பிராம்மணவேஷமும் தரித்து, மறைந்துஸஞ்சரிப்பவர்களான பாண்டவர்களைத் தேடவேண்டும். ஓ! மனுஷ்யேந்திர! நல்ல நிபுணர்களும் அதைஅறிந்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களும் அவ்விதமாகத் தேடுகின்றதையே பிரதானகார்யமாகக் கொண்டவர்களுமான பற்பலசாரர்களால், நல்லநீதியுடன்கூடின ஊஹத்தால், பாண்டவர்கள் நதிகளுடைய (ஸமீபத்திலுள்ள) புதர்களிலும் தீர்த்தங்களிலும் கிராமங்களிலும் நகரங்களிலும் ரம்யமான ஆஶ்ரமங்களிலும் மலைகளிலும் குகைகளிலும் தேடத்தக்கவர்கள்' என்று சொன்னேன். பிறகு, தமையனான துர்யோதனனுக்கு உடன்பிறந்த தம்பியும் அண்ணனை அவனுக்கு ப்ரியத்தையும் ஹிதத்தையும்செய்வதில் அதிகப்பற்றுள்ளவனுமான துச்சாஸனன் அந்தஸபையில் தன் தமையனை துர்யோதனனைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான். 'மனுஷ்யர்களுக்குநாதரே! மன்னரே! நமக்குநம்பிக்கையுள்ள சாரர்கள் நாம்கொடுக்கும்வெகுமதியைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் பாண்டவர்களைத்தேடுவதற்குச் செல்லட்டும். ராஜேந்திரரே! கண்ணன்பார்க்கச்சொன்ன இடமனைத்தும் நன்றுகப்பார்க்கப்படவேண்டும். குறிப்பிட்டபடி, சாரர்களனைவரும் தேடவேண்டிய இடங்களில் தேடட்டும். பசுக்கள் மூக்குக்களால் (முகர்ந்து) அறிகின்றன. பிராம்மணோத்தமர்கள் வேதங்களாலேயே அறிகிறார்கள். மன்னர்கள் சாரர்களால் அறிகிறார்கள். மற்றஜனங்கள் இரண்டுகண்களாலும் பார்க்கிறார்கள். கீழ்ச்சொல்லப்பட்டபடி, வேவுகாரர்கள் மறுபடியும்மறுபடியும் தேடட்டும். இவர்களும் இன்னும்மற்றப்பலரும் தேசங்களிலும் நகரங்களிலும் தேடட்டும். அவர்களுடையகதியாவது வாஸஸ்தலமாவது வரலாறுவது (ஒன்றும்) அறியப்படவில்லை. அவர்கள் நன்றுக மறைந்துகொண்டிருக்கிறார்களோ; அல்லது, ஸமுத்திரத்தின் அக்கரையை அடைந்திருக்கின்றார்களோ; சூரர்களென்கிற எண்ணமுள்ளவர்களான அவர்கள் மஹாரண்யத்தில் துஷ்டமிருகங்களால் தின்னப்பட்டார்களோ; சிறந்த த்வீபத்தையாவது

---

[1] ரத்னங்களுண்டாகும் இடம்.

அடைந்தார்களோ; மதத்தை இழந்தவர்களான அவர்கள் ஆசை யற்றவர்களாக மலைகளிலும் நுழைதற்கரிய காடுகளிலும் (ஸஞ் சரிக்கையில்) ராக்ஷஸர்களால் பக்ஷிக்கப்பட்டார்களோ; அல்லது, அனேகவர்ஷங்கள் ஆபத்தையடைந்து நாசமடைந்து விட்டார் களோ. அரசரே! ஆதலால், நீர் உம்முடையமனத்தைக் கவலை அற்றதாகச்செய்து அடக்கிச் செய்யக்கருதிய கார்யத்தை அதிக ஊக்கத்துடன் செய்யும்' என்றான்.

முப்பத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(துரோணர் துர்யோதனனைநோக்கிப் பாண்டவர்கள் அழிந்திராரென்று சொல்லி அவர்களைத்தேடுவதற்கு ஏற்பாட்டைச்செய்ததும், பீஷ்மர் பாண்டவர்களைவஸிக்கும் இடத்துக்குரிய லக்ஷணங்களை யும் அவர்கள் எவ்விதத்தினாலும் ஜயிக்கத்தகாதவர்கள் என்பதையும் கூறி அவர்களோடு ஸந்தியைச் செய்வது அவஸ்யமென்றதும்.)

பிறகு, ஸூக்ஷ்மார்த்தங்களைக்கண்டறிந்தவரான துரோ ணர், ஸபையின்நடுவில் (துர்யோதனன் முதலானவர்களைப் பார்த்து,) 'அவ்விதமானமஹிமையையுடையவர்கள் நாசத்தை யும் அவமானத்தையும் அடையமாட்டார்கள். சூரர்களும் நல்ல வித்யாப்யாஸம்செய்தவர்களும் புத்திசாலிகளும் இந்திரியங்களை அடக்கினவர்களும் தர்மங்களை அறிந்தவர்களும் ஸத்யஸந்தர் களும் மஹாத்மாக்களும் பிராதாக்களுமான அந்தப்பாண்டவர் கள், நீதி தர்மம் அர்த்தம் இவைகளுடையபதத்வத்தை அறிந்தவ னும் தந்தைபோலவே மனத்தைஅடக்கினவனும் தர்மத்திலிருப் பவனும் ஸத்யத்தில் உத்ஸாஹமுள்ளவனும் மூத்தவனும் மேலோர்களை வணங்குகின்றவனும் அன்புள்ளஸஹோதரனும் பெருமையுள்ளவனும் ஸஹோதரரனைவரையும் அனுஸரித்திருப் பவனும் அஜாதசத்ருவுமான யுதிஷ்டிரனை அனுஸரித்திருக்கின்றார் கள். அவ்வாறு, (தனக்கு) ஸ்வாதீனப்பட்டவர்களும் (தைர்யத் தினால் ஆபத்துக்காலங்களிலும்) அசைவற்றிருப்பவர்களும் மஹாத்மாக்களுமான அவர்களுக்கு நீதியில்சிறப்புற்றவனும் கற் றறிந்தவனுமான யுதிஷ்டிரன் என் நன்மையை உண்டுபண்ண மாட்டான்? ஆதலால், முயற்சியுடன் கவனித்துப்பாருங்கள். இன்னும் ஸமயம் தாண்டவில்லை. அவர்கள் நாசத்தை அடைய மாட்டார்களென்பது என்னுடைய உறுதியான எண்ணம்.

செய்யவேண்டிய கார்யமானது விளம்பமின்றிச் சீக்ரம் ஆலோசிக்கப்படலாம்; நன்ருக ஆலோசித்துச் செய்யப்படவேண்டும். இவர்களுடைய வாஸஸ்தானமும் நன்கு ஆலோசிக்கப்படவேண்டும். எல்லாக்கார்யங்களிலும் தைர்யத்திலுல் நிலைதவருதமனத்தையுடையவர்களான பாண்டுபுத்ரர்களுடைய வ்ருத்தாந்தத்தை அறியத்தக்க நீதியைச்செலுத்தவேண்டும். எல்லாவிதஉபாயங்களாலும் பாண்டவர்களைப்பார்ப்பதற்கு நீ முயற்சிசெய். தேவதைகளால் எப்பொழுதும் காக்கத்தக்கவர்களான அந்தச்சூரர்கள் (எவ்விதத்தாலும்) அறியமுடியாதவர்கள். சுத்தஸ்வரூபமுள்ளவனும் ஸத்யஸந்தனும் உத்தமமான நீதியையுடையவனும் சுத்தனும் ஒளிக்குவியல்களால் நான்குபக்கங்களிலும் நிறைந்தவனுமான பார்த்தன், மனிதர்களைக் கண்ணுல்கொளுத்திலுலும் கொளுத்துவான். ஆதலால், முயற்சிசெய்யவேண்டும். பிராம்மணர்களாலும் சாரர்களாலும் வித்தர்களாலும் நிபுணர்களான தவசிகளாலும் மறுபடியும் நாம் தேடுவோம். மனுஷ்யேந்திர! மறைந்து வாஸம்செய்கின்ற பாண்டவர்கள், தேடுவதில்தேர்ச்சியடைந்தவர்களும் பயமில்லாதவர்களும் அதைஅறிந்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களும் அந்தத் தேடுகிற கார்யம் ஒன்றையே முக்யமாகவுடையவர்களுமான பற்பலசாரர்களால் தேடத்தக்கவர்கள்' என்று கூறினர். பிறகு, சிறந்தபுத்தியையுடையவரும் பரதகுலத்தில் உதித்தவர்களுக்குப் பாட்டனுரும் சாஸ்திரங்களை நன்குகற்றறிருந்தவரும் தேசகாலங்களை அறிந்தவரும் நீதியையுடையவரும் விசாலமானபுத்தியையுடையவரும் சந்தனுவினுடைய குமாரருமான தேவவிரதர், மஹாத்மாவான ஆசார்யருடைய அந்தவாக்யம்சொல்லிமுடிந்தவுடன், காரணங்களோடும் அர்த்தத்துடனுங்கூடிய இவ்விதமான வார்த்தையை உரைக்கலானர். அவர், தர்மங்களை அறிந்தவனும் பாண்டுமஹாராஜனுடைய புதல்வனுமான யுதிஷ்டிரன் விஷயத்தில் நன்ருக இசைந்ததும் தர்மத்துடன்கூடியதும் எக்காலத்திலும் மாற்றமுடியாததும் எப்பொழுதுமே அயோக்யர்களடைவதற்கரியதும் எக்காலத்திலும் ஸாதுக்களால் ஸம்மதித்துப்பூஜிக்கப்பட்டதுமான ஒருவார்த்தையை அந்த ஸபையில் சொல்லத் தொடங்கினர்.

'எல்லாத்தர்மங்களையும் அறிந்தவரும் பிராம்மணருமான நம்முடைய ஆசார்யர்சொன்னது (ஸரியே.) சாஸ்திரஞானமும் நல்லஒழுக்கமுமுள்ளவர்களான பாண்டவர்கள் நாசத்தை அடையமாட்டார்கள். எல்லா லக்ஷணங்களுமுள்ளவர்களும் நல்லஒழுக்கமுள்ளவர்களும் பெரியோர்களுடைய வரையறையில் கட்டுப்பட்டவர்க

ளும் ஸத்யத்தையும் தர்மத்தையும் முதன்மையாகக்கொண்டவர்களும் ஸமயத்தை அறிந்தவர்களும் ஸமயத்தைப் பாதுகாக்கின்றவர்களும் நல்லநியமமுள்ளவர்களும் ஸாதுக்களுக்குரிய காரியபாரத்தை வஹிக்கின்றவர்களுமான அந்தப்பார்த்தர்கள் துன்பமடையமாட்டார்கள். தவத்திலும் தம்முடைய வீர்யத்திலும் ரக்ஷிக்கப்பட்ட அந்தப்பாண்டவர்கள் நாசமடையமாட்டார்களென்பது என்னுடைய நிச்சயமானஎண்ணம். அவர்கள் எப்பொழுதும் கூத்ரியதர்மத்தில் நிலைபெற்றவர்கள்; எப்பொழுதுமே கேசவனை அனுஸரித்தவர்கள்; அதிகவீரபுருஷர்கள்; மஹாத்மாக்கள்; மஹாபலசாலிகள். அப்படிப்பட்ட பாண்டவர்களைத் தேடும்விஷயத்தில் நான் (உனக்குப்) புத்தியை நன்கு சொல்வேன்; கேள். நன்முக நீதியைச்செலுத்துகிறவனுடைய நீதியானது பிறரால் அறிவதற்கு அருமையானது. அந்தப்பாண்டவர்களைநினைத்து நம்மால் இப்பொழுது செய்யத்தக்கதைப் புத்தியினல் நிச்சயிப்பதற்காக நான் உனக்குச் சொல்லப்போகிறேன். அதை நீ அறிந்துகொள். ஐயனே! பெரியோர்களுடையகட்டளையில் கட்டுப்பட்டுநிற்பவனும் ஸத்யத்தைத் தவறவிடாமலிருப்பவனுமான அந்த யுதிஷ்டிரனுடைய இந்த நீதியானது எவ்விதத்திலும் நன்முகச் சொல்லத்தக்கதன்று. மேலும், என்னல் அது சொல்லத்தக்கதன்று. (ஏனென்முல்,) எனக்குக் கௌரவர்களும் பாண்டவர்களும் ஸமானர்கள். பாண்டுபுத்ரர்களுடைய இருப்பிடத்தை ஆலோசித்து நான்சொல்லுகிறேன். வீணன அதிகப்புலம்பலால் யாதுபயன்? எங்குதர்மமோ அங்குஜயம். ஏவப்பட்டு ஸபையின்நடுவில் (விஷயத்தை எடுத்து) உரைக்க எண்ணங்கொண்ட (ஒருமனிதன்) இவ்வுலகில் தர்மத்தைஅடையும்விருப்பத்துடன் எல்லாவிதத்திலும் தக்கமொழியையே சொல்லவேண்டும். மன்னவ! மற்றஜனங்கள் எண்ணினபடி நான் எண்ணவில்லை. பாண்டுபுத்ரர்களுடைய இருப்பிடத்தைக்கேள். வீரர்களான பிராதாக்களோடும்கிருஷ்ணையோடும் கூடியவனும் மிக்ககீர்த்தியையுடையவனுமான அந்த மஹாராஜன் என் தன்னுடையஸ்ரேயஸைத் தேடிக்கொள்பவனுகமாட்டான்? 'பாண்டவன் ராஜ்யத்தில்விருப்பமுற்றவர்களான உங்களால் முன்பு பட்டணத்தில் வஞ்சிக்கப்பட்டான்; எப்பொழுதும் துன்பத்திற்கும்உட்படுத்தப்பட்டான்'என்கிறவிஷயம் உள்ளபடி உன்னல் அறியப்பட்டிருக்கிறது. ஆதலால், இயற்கையாகவே நீதியில் மஹாஸமர்த்தனன அந்தயுதிஷ்டிரமஹாராஜன் இப்பொழுது மறைந்துவாஸம்செய்கிறன். இந்தஒருவருஷகாலம் நன்முகமறைந்து ஸர்வோத்தமமான் அஜ்ஞாதவாஸத்தைச்செய்துவிட்டு நல்லகாலம்

உதிக்கும்தருணத்தில் சீக்ரம்வரப்போகிறான். பகைவர்களைவாட்டு பவனே ! ஸஹோதரர்களோடும் திரௌபதியோடும் சேர்ந்திருக்கின்ற பாண்டவ வீரனை நீ பார்க்கப்போகிறாய். சிறந்தகைகளுள்ளவனே ! நமக்கு ஸுகமுண்டாகும்படி (காரியத்தைச்) செய். பல சாலிகளுள் சிறந்த ராஜாவான அந்தயுதிஷ்டிரன் மறைந்துவாஸஞ் செய்கிறவிடத்தில் மனிதர்கள் ஆசையினாலும் மோஹத்தினாலும் விடுபட்டவர்களாயிருப்பார்கள். மஹாராஜனே ! க்ஷத்ரியரிற் சிறந்தவனே ! பட்டணமோ, அல்லது, தேசமோ ராஜாவான யுதிஷ்டிரன் வஸிக்கிறவிடத்தில் மனோவ்யாதிகளும் பிணியும் உண்டாகா. தானசீலனும் [1]பெருங்கொடையுடையவனும் அமைதியுள்ளவனும் (அகார்யத்தில்) வெட்கமுள்ளவனும் அன்பும் உண்மையுமானவாக்கையுடையவனும் சூரனும் தர்மசீலனும் புலன்களை வென்றவனும் மனக்களிப்புடையவனும் புஷ்டியுள்ளவனும் பரிசுத்தனும் ஸபர்த்தனும் ராஜாவுமான யுதிஷ்டிரன் இருக்கிற இடத்தில் ஜனங்கள் அஸூயையும் பொறாமையும் அஹங்காரமும் மாத்ஸர்யமுமுள்ளவர்களாயிரார்கள் ; தாமாகத் தர்மத்தை அனுஸரிப்பார்கள் ; அதிகமான வேதஒலிகளும் புண்யசப்தங்களும் கேட்கப்படும் ; அதிகதக்ஷிணைகளுள்ள அநேகயாகங்களும் நடக்கும் ; மழைக்கடவுள் எப்பொழுதும் அவ்விடத்தில் மழையை நன்றுகப்பொழிந்துகொண்டிருக்கும் ; ஸம்சயமில்லை ; பூமியானது பயிர்களால்நிறைந்தும் நோயில்லாமலுமிருக்கும் ; தான்யங்கள் ரஸமுள்ளவைகளும் பழங்கள் குணமுள்ளவைகளும் பூமாலைகள் வாஸனையுள்ளவைகளும் வாக்கானது மங்களகரமானசப்தத்துடன் கூடியதுமாயிருக்கும். ராஜாவான யுதிஷ்டிரனிருக்கிற இடத்தில் காற்றும் இனிமையுடையதாக வீசும் ; அங்குள்ளஜனங்கள் ரோகமற்றவர்களாக இருப்பார்கள் ; கொலையும் சிறையிலடைத்தலும் இரா. ராஜாவானயுதிஷ்டிரன் இருக்கிறஇடத்தில் திருடர்களும் தண்டனைகளும் ஹிம்ஸைகளும் நிச்சயமாக உண்டாகா ; சக்தியற்றவர்களும் துஷ்டர்களுமிருக்கமாட்டார்கள். அந்த இடத்தில் பயமும் வந்துஅணுகாது ; நல்ல ஸித்தாந்தமானது விரோதமின்றி விளங்கும் ; அவ்வாறே, பசுக்கள் அதிகப்பாலுள்ளவைகளும் நல்லபுஷ்டியுள்ளவைகளும் நல்லகறவையுடையவைகளும் ஆகும் ; பாலும் தயிரும் நெய்யும், ரஸமும் ஹிதமுமுள்ளவைகளாகின்றன ; தீர்த்தங்களும் தெளிந்திருக்கும் ; எல்லாப்பொருள்களும் மங்களகரமாகின்றன. ராஜாவானயுதிஷ்டிரன் இருக்கிற

---

1 'வதான்ய :' என்பது மூலம் ; 'ப்ரியமாய்ப்பேசுகிறவன்' என்பது பழையஉரை.

தேசத்தில் சிறந்தகுணமுள்ளபானங்களும் பற்பலவிதஉணவுகளும் கிடைக்கும். ராஜாவானயுதிஷ்டிரன் இருக்கிறவிடத்தில் ரஸங்களும் ஸ்பர்சங்களும் கந்தங்களும் சப்தங்களும் குணமுள்ளவைகளாயிருக்கும்; பார்க்கத்தக்கபொருள்கள் இனியகாட்சியுள்ளவைகளாயிருக்கும். ஐயா! இந்தப் பதின்மூன்றுவதுவர்ஷத்தில் பாண்டவர்கள் வஸிக்கிற தேசத்தில் தர்மங்கள் பிரம்மக்ஷத்ரியவைச்யர்களனைவர்களாலும் நன்றுக அனுஷ்டிக்கப்பட்டவைகளும் தத்தம் குணங்களோடுகூடியவைகளுமாகும். அந்த இடத்தில் ஜனங்கள் மிக்க ப்ரீதியுள்ளவர்களும் ஸந்தோஷமுள்ளவர்களும் சுத்தர்களும் குறைவில்லாதவர்களும் தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் அதிகமான ஸத்காரங்களைச் செய்பவர்களும் எல்லா ப்ராணிகளிடங்களிலும் அன்புடையவர்களுமாயிருப்பார்கள். அப்பா! யுதிஷ்டிரன் இருக்கிற இடத்தில், ஜனங்கள், இஷ்டமான வஸ்துக்களைத் தானம்செய்வதில்அதிகஉத்ஸாஹமும் எப்பொழுதும் தர்மத்திலேயே பற்றும் வெளிப்படையானபேச்சும் மேன்மேல் அதிகமானமங்களங்களும் நல்லகாந்தியும் நல்லவிருப்பமும் எப்பொழுதும் ஸந்தோஷமும் ஐஸ்வர்யமுமுள்ளவர்களாயிருப்பார்கள். ராஜாவானயுதிஷ்டிரன் இருக்கிறஇடமானது நித்யோத்ஸவங்களால் மிகுந்த ஸந்தோஷமுள்ளதும் எப்பொழுதும் மனக்களிப்புற்றதும் செல்வத்தினால் சூழப்பட்டதுமாயிருக்கும். தர்மங்களை அறிந்தவனான அந்தயுதிஷ்டிரன், ஸர்வஜ்ஞர்களான த்விஜாதிகளாலும் அறியமுடியாதவன். அப்பா! அவ்வாறிருக்க, அல்பமனிதர்களால் பார்த்தன் ஓரிடத்தில் எவ்வாறு அறியப்படுவான்? யுதிஷ்டிரனிடத்தில் ஸத்யமும் உத்ஸாஹமும் தானமும் அதிகமானசாந்தியும் நிலையானபொறுமையும் வெட்கமும் செல்வமும் கீர்த்தியும் உத்தமமானதேஜஸும் தயையும் கபடமின்மையும் நிலைபெற்றிருக்கின்றன. ஆதலால், நான் உங்களிடத்தில் சொல்லியபடி பார்த்தர்களுடையவாஸஸ்தானத்தையும் அங்கு அவர்களுடைய உத்தமமானகதியையும் ஆலோசிக்கவேண்டும். வேறுவிதமாகச் சொல்வதற்கு நான் சக்தியுள்ளவனல்லேன். குருகுலத்திலுதித்தவனே! நான் சொன்னவிஷயத்தை நீ நம்புவாயாகில் இவ்விதமான இந்தவிஷயத்தை நன்றுகஆலோசித்து நீ நல்லதென்றுஎண்ணுகிறதைக் காலதாமதமின்றிச் செய். ஐயனே! நான் உனக்கு உரைத்தது நம்முடையகுலத்துக்குத் தகுதியுள்ளதன்றே!' என்றார்.

முப்பத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் ஊஹத்தினல் பாண்டவர்கள் விராடநகரத்தில் இருக்கலாமென்றெண்ணி ஸுசர்மாவை அனுப்பியதும், ஸுசர்மா விராடநகரத்தின் தென்பாகத்திலுள்ளபசுக்களைப் பிடித்ததும்.)

பிறகு, சரத்வானுடையகுமாரரான கிருபர், அப்பொழுது (துர்யோதனனைப்பார்த்து), '(ராஜனே!) பிராயமுதிர்ந்தவரான பீஷ்மரால் பாண்டவர்களைப்பற்றி யுக்தியுள்ளதும் காலத்திற்குத் தகுந்ததுமான வார்த்தை சொல்லப்பட்டது. தர்மார்த்தங்களோடு கூடியதும் மிக்கநேர்த்தியானதும் முழுதும் உண்மையானதும் (தகுந்த) காரணங்களோடுகூடியதுமான பீஷ்மருடையவசனமானது அந்த (ப் பாண்டவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும்) விஷயத்தில் பொருத்தமானது. என்னுடையவார்த்தையையும் கேள். அவ்விடத்தில் அவர்களுடைய கதியும் இருப்பிடமும் நன்றுக ஆலோசிக்கப்படவேண்டும். இப்பொழுது (நமக்கு) ஹிதமாயிருக்கக்கூடிய நீதியானது அவ்விஷயத்தில் செலுத்தப்படவேண்டும். ஐயனே! பகைவன் அல்பனுயிருந்தாலும் மேன்மைஅடைய எண்ணுபவனுல் உபேக்ஷிக்கப்படத் தக்கவனல்லன். சூரர்களும் கற்றறிந்தவர்களும் பலசாலிகளுமான பாண்டவர்கள் உபேக்ஷிக்கப்படத்தகாதவர்களென்பதில் யாது ஸந்தேஹம்? ஆதலால், கானகம் சென்ற மஹாத்மாக்களான பாண்டவர்கள் தங்கள் கருத்தை வெளியிடாமல் மறைந்திருக்கையில் நல்ல காலமும் உண்டாயிருக்கும்பொழுது தன் நாட்டிலும் பிறநாட்டிலும் தன்பலம் அறிந்து கொள்ளத்தக்கது. பாண்டவர்களுக்கு வ்ருத்தியடையுங்காலம் வந்துவிட்டது; ஸம்சயமில்லை. மஹாத்மாக்களான பார்த்தர்கள், பிரதிஜ்ஞைசெய்த காலம் கழிந்தபிறகு, மஹாபலசாலிகளும் பெரிய உத்ஸாஹமுள்ளவர்களுமாவார்கள். பாண்டவர்கள் அளவுகடந்த வல்லமையுள்ளவர்களல்லரோ? ஆதலால், அவர்களுக்கு அபிவ்ருத்தி காலமானது வந்திருக்கும் தருணத்தில், நாம் அவர்களோடு நன்றுகப் போர்புரியும்படி சேனையும் போக்கசமும் நீதியும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். நீ, மேன்மைக்குக் காரணமாக எண்ணுவதும் பலசாலிகளும் துர்ப்பலர்களுமான எல்லா மித்ரர்களிடங்களிலும் நிச்சயமாக இருப்பதுமான உன்னுடைய பலத்தை அறிந்துகொள். பாரத! பயனுள்ளதும் பயனற்றதும் நடுத்தரமுமான பலத்தை அறிந்து தன்னுட்டிலும் பிறர் நாடுகளிலும் தன்பலம் அறியவேண்டும். அவ்வாறே, பகை

வர்களோடு ஸாமதானபேததண்டங்களாலும் கப்பங்கட்டுதலாலும் அதிக வெறுப்போடாயினும் விருப்போடாயினும் ஸந்திசெய்துகொள்வோம். பலஹீனர்களான பகைவர்களை நியாயத்திலுல் அடக்கிப் பலத்திலுல் (அவர்களை) வணங்கும்படி செய்து மித்ரர்களையும் ஸமாதானப்படுத்திச் சேனையையும் ஸுகமாக இருக்கிறதாவென்று விசாரிக்கவேண்டும். உன்னுடைய பொக்கசத்திலும் சேனையிலும் நன்றாக வ்ருத்தியடைந்திருக்கின்ற நீ நல்ல வித்தியைப் பெறுவாய். எதிர்த்துவருகிற பலசாலிகளான வேறுபகைவர்களோடும் தமது பலத்திலும் வாஹனத்திலும் குறைவுபட்டிருக்கின்ற பாண்டவர்களோடும் நீ போர்புரிவாய். மனுஷ்யேந்திர! இவ்வாறு எல்லாவற்றையும் நீ நன்கு நிச்சயித்து, தகுந்த காலத்தில் நியாயத்தை அனுஸரித்து நடந்துகொள்வாயாக. (இவ்விதம் செய்தால்) வெகு காலம் ஸுகத்தை அடைவாய்' என்று கூறினர்.

பீஷ்மரும் துரோணரும் கிருபரும் கர்ணன் துச்சாஸனன்முதலானவர்களும் இவ்வாறு சொல்லியபின், துர்யோதனன், மஹாத்மாக்களான அவர்களுடைய வார்த்தையைக்கேட்டு ஒரு முகூர்த்த காலம் ஆலோசித்து மந்திரிகளைப் பார்த்து, '(ஓ! மந்திரிகளே!) ஜனங்களால் நிறைந்த ஸபையில் ஸல்லாபங்கள் நடக்கும் தருணத்தில் நான் இதை முன்னம் கேட்டிருக்கிறேன். தீரர்களும் சாஸ்திரங்களை அறிந்தவர்களுமான பிராஜ்ஞர்களுடைய புத்தி நிச்சயத்தையும் ஸமர்த்தர்களுடைய ஸாராஸாரங்களையும் நீதியாகிறகண்ணுல் நான் அறிந்திருக்கிறேன். தைத்யர்களோடும் மனுஷ்யர்களோடும் ராக்ஷஸர்களோடும் கூடின மண்ணுலகில் இக்காலத்தில் தோள்வலியிலும் ஆண்மையிலும் தைர்யத்திலும் சரீரபலத்திலும் இந்திரனுக்கு ஒப்பான நான்கு புருஷச்ரேஷ்டர்கள் பூமியில் பலத்தில் (எல்லா) ப்ராணிகளிலும் சிறப்புடையவர்கள். பலத்தில் அவர்களுக்கு ஒப்பு ஒருவரும் இல்லை. அவர்கள் எப்பொழுதும் ஒத்த மனேபலமும் நிறைந்ததேஹபலமும் ஆண்மையுமுடையவர்கள். (அவர்கள் யாவரெனின்,) பலதேவரும் பீமனும் வீர்யசாலியான மத்ரராஜனும் நாலாமவனை கீசகனும் ஆவர். அவர்களைக்காட்டிலும் ஐந்தாவது மனிதனை நாம் கேட்டதில்லை. இவர்கள், ஒருவருக்கொருவர் வேற்றுமையில்லாத பலமுடையவர்கள்; ஒருவரையொருவர்வெல்வதில் விருப்பமுற்றவர்கள்; மல்லயுத்தத்தில் விருப்பமுள்ளவர்கள்; எப்பொழுதுமே கோபங்கொண்ட மனமுள்ளவர்கள். அந்தநம்பிக்கையினல், என்மனத்தில் (எப்பொழுதும்) புகுந்திருக்கின்ற விருகோதரனை நானறிவேன். பாண்டவர்கள் உயிருடனிருக்கிறார்

களென்பது வெளிப்படை. அவர்களுள் பீமஸேனனே கீசகனைக் கொன்றவனென்று நான் எண்ணுகிறேன்; ஸைரந்த்ரியை த்ரௌபதியென்று நினைக்கிறேன். இவ்விஷயத்தில் ஆலோசனை செய்யத் தக்கதில்லை. க்ருஷ்ணையினிமித்தமாகப் பீமஸேனனால் கந்தர்வனென்கிற வ்யாஜத்தினால் மஹாபலசாலியானகீசகன் இரவில்கொல்லப்பட்டிருப்பானென்று ஸந்தேஹிக்கிறேன். பீமஸேனனைத்தவிர வேறு எவன் ஆயுதமின்றிப் பலத்தினால் கீசகனைக் கொல்வதற்கும், அவ்விதமே கைவன்மையால் (அவனுடைய)எல்லா அங்கங்களையும் பொடியாக்குவதற்கும், அவ்வாறே அடிப்பதற்கும், தோலையும்மாம்ஸத்தையும் எலும்பையும் விரைவாகப் பொடிபண்ணுவதற்கும் சக்தியுள்ளவனுவான்? இது, வேறு உருவத்தை எடுத்துக்கொண்டு (மறைந்துவாஸஞ்செய்கின்ற)பீமனுடைய செய்கையே. நிச்சயமாக க்ருஷ்ணையினிமித்தம் ஸூதபுத்ரர்கள் கந்தர்வனென்கிற வ்யாஜத்தினால் பீமஸேனனால் இரவில் கொல்லப்பட்டுவிட்டார்கள்; ஐயமில்லை. பிதாமஹரால் தேசத்திற்கும் ஜனங்களுக்கும் உரைக்கப்பட்ட குணங்களை மத்ஸ்யதேசத்தில் பலவாறு நான் கேட்டிருக்கிறேன். மனத்தைக் கவர்வதான விராடநகரமென்னும் பட்டணத்தில் பாண்டவர்கள் மறைந்து வாஸஞ்செய்கிறார்களென்று எண்ணுகிறேன். (ஆதலால்,) அந்தப்பட்டணத்தைக்குறித்து யாத்ரையானது செய்யப்படலாம். நாம் மத்ஸ்யதேசத்திற்குச் செல்வோம்; பசுக்கூட்டத்தையும் கைப்பற்றுவோம். பசுக்கூட்டமானது (நம்மால்) கவரப்பட்டால் அந்தப் பாண்டவர்களும் நிச்சயம் போர்புரிய வருவார்கள். குறித்தகாலம் முடிவடையுமுன் பாண்டவர்களை நாம் பார்த்தால் மறுபடியும் வேறு பன்னிரண்டு வர்ஷகாலம் கானகத்தில் ப்ரவேசிப்பார்கள். ஆதலால், இவ்விரண்டனுள் ஒன்றுகிடைத்தாலும் நமக்கு லாபமாகும்; இவ்விஷயத்தில் நம்முடையபராக்கரமம் வளர்ச்சியடையும்; பகைவர்க்கும் நாசமுண்டாகும். 'முன்பு யுதிஷ்டிரரால் போஷிக்கப்பட்டவன் துர்யோதனனை எவ்வாறு அடைவான்?' என்கிற இந்தவார்த்தையையும் இந்தவிராடன் என்விஷயத்தில் அவமதிப்புடன் சொல்லுகிறான். ஆதலால், இஃது அவஶ்யம்செய்யத்தக்கது. அந்த மத்ஸ்யதேசத்தைக்குறித்துப் படையெடுக்கவேண்டும். உங்களனைவர்களுக்கும் ப்ரியமாயிருக்குமாயின், இது சரியான உபாயமென்று நான் எண்ணுகிறேன்' என்று கூறினன்.

பிறகு, த்ரிகர்த்ததேசத்துக்குராஜனும் தேர்க்கூட்டங்களைக் காப்பவனும் பலசாலியுமான ஸுசர்மாவானவன் விரைவாகக் கர்ணனுடனும் துச்சாஸனனுடனும் முந்தியே பேசிக்கொண்டு

அந்த ஸமயத்துக்குரிய இவ்விதமான வார்த்தையைச் சொல்லலா ணுன். 'ப்ரபுவே! முன்னமே மத்ஸ்யதேசத்தார்களாலும் ஸால்வ தேசத்தார்களாலும் கேகயர்களாலும் அடிக்கடி வஞ்சிக்கப்பட் டிருக்கிறேன். மத்ஸ்யராஜனைச்சேர்ந்தவனும் ஸூதஜாதியில் பிறந் தவனும் பலசாலியுமான கீசகனாலும் அடிக்கடி பந்துக்களோடு கூடின நான் பலாத்காரமாக ஹிம்ஸிக்கப்பட்டிருக்கிறேன்' என்று சொல்லி, அந்தஸூசர்மாவானவன், கர்ணனை நன்றுகப் பார்த்து, பிறகு, துர்யோதனனைநோக்கி, 'ராஜனே! மத்ஸ்யராஜனால் என் னுடைய தேசமானது அடிக்கடி ஹிம்ஸிக்கப்பட்டிருக்கின்றது. பலத்தினால் அதிககர்வங்கொண்டவனான கீசகன் முன்பு அவ னுக்கு முக்யனாயிருந்தான். கோபமுள்ளவனும் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவனும் பகைவர்களை வெல்லுகின்றவனும் ப்ரஸித்த மான பலமும் ஆண்மையுமுள்ளவனும் பாபங்களைச் செய்பவனும் கொடியசெய்கையையுடையவனுமான அந்தக்கீசகன் அந்தவிராட நகரத்தில் கந்தர்வர்களால் கொல்லப்பட்டான். ராஜனே! அவன் கொல்லப்பட்டபிறகு, விராடன் கொழுப்புக்குலைந்தவனும் ஆதார மற்றவனும் உத்ஸாஹத்தை இழந்தவனுமா யிருப்பானென்பது என்னுடைய எண்ணம். தோஷமற்றவனே! உனக்கு விருப்பமிருந் தால் அந்தமத்ஸ்யதேசத்தில் படையெடுப்பது எனக்கு ஸம்மதம். எல்லாக் கௌரவர்களுக்கும் மஹாத்மாவான கர்ணனுக்கும் இது பெரிதும் மிகமுக்யமுமான கார்யமாயிருக்கலாமென்று நான் நினைக்கிறேன். தனதான்யங்களால் நிறைந்த அந்தவிராடனுடைய ராஜ்யத்தைக்குறித்து நாம் படையெடுத்துச் செல்வோம். அவனி டத்திலுள்ள பற்பலரத்னங்களையும் பொருள்களையும் நாம்கொள்ளை யிடுவோம்; அவனுடைய ஊர்களையும் தேசங்களையும் துண்டு துண்டாகப் பங்கிட்டு ஸ்வாதீனப்படுத்திக்கொள்வோம். காட்சிக் கினியவனே! அல்லது, பலத்தினால் (அந்தப்) பட்டணத்தைத் துன்பப்படுத்தி அனேகமும் பற்பலவிதமுமான ஆயிரக்கணக்கான பசுக்களைக் கவர்வோம். ராஜனே! கௌரவர்களோடும் த்ரிகர்த் தர்களோடும் மற்ற எல்லாமஹாரதர்களோடும் சேர்ந்து அவ னுடைய பசுக்களைக்கவர்வோம்; அல்லது, அவனுடன் ஸந்தியைச் செய்துகொண்டு அவனுடைய ஆண்மையை அடக்குவோம்; அவ னுடைய சேனையெல்லாவற்றையுங் கொன்று அவனை வசப்படும் படியாகவே செய்துகொள்வோம். அவனை நீதியினால் வசப்படுத் திக்கொண்டு நாம் ஸுகமாக வஸிப்போம். உங்களுக்கும் பலத் தில் விருத்தியுண்டாகும்; ஸந்தேஹமில்லை' என்றான்.

அவனுடையஅந்தவார்த்தையைக்கேட்டு, கர்ணன், ராஜாவை நோக்கி, '(அரசனே!) ஸுசர்மாவினால் ஸமயோசிதமான இவ்வித

நல்லவார்த்தைசொல்லப்பட்டது. ஆதலால், சேனையை ஒன்று சேர்த்துக்கொண்டு விரைவாகப்புறப்படுவோம். இது உனக்கு விருப்பமாயிருப்பதுபோல எனக்கும் விருப்பமாயிருக்கிறது. நீ எண்ணுகிறவண்ணம் ஸைன்யங்களைப்பகுத்துக்கொண்டு செல்லுவோம். அறிவுள்ளவரும் குலத்திலுள்ளவர்களுள் பிராயமுதிர்ந்தவரும் நம்அனைவர்களுக்கும் பிதாமஹருமானபீஷ்மரும் ஆசார்யரான துரோணரும் கற்றறிந்தவரான க்ருபரும் ஸுபலனுடைய குமாரனான சகுனியுமாகிய அவர்களனைவரும் எண்ணுகிறபடி படையெடுத்துச்செல்ல விதிக்கலாம். ராஜனே! நாம்ஆலோசித்துக் கார்யத்தை நிறைவேற்றுவதற்காக விரைந்துசெல்வோம். பொருளும்வலியும் ஆண்மையும்குறைந்தபாண்டவர்களால் நமக்குஎன்ன கார்யம் ஆகவேண்டும்? அவர்கள் முற்றிலுமே காணுமற்போய் விட்டார்களோ; அல்லது, யமனுடையவீட்டை அடைந்துவிட்டார்களோ. பாரத! ஆதலால், நீ பெரிதானசதுரங்கபலத்தால் சூழப்பட்டு எல்லாஸைந்யத்துடனும் செல்வாய். அந்தவிராடனுடைய பலவிதமானபசுக்களையும் தனங்களையும் கைக்கொள்வோம்' என்றுசொன்னன். பிறகு, துர்யோதனமஹாராஜன் ஸூர்ய குமாரனை அந்தக்கர்ணனுடைய வார்த்தையைக்கேட்டு, உடனே (தன்னுடைய) கட்டளையில் எப்பொழுதும் கட்டுப்பட்டிருப்பவனை துச்சாஸனனைநோக்கி, தானே விரைவாகக் கட்டளையிடலானன். '(துச்சாஸன!) பெரியார்களோடு நன்றுகஆலோசித்து விரைவில் சேனையைத்திரட்டு. நாம் எல்லாக்கௌரவர்களோடும் சேர்ந்து உத்தேசித்தபடி (மத்ஸ்யதேசம்) செல்வோம். மஹாரதனும் முந்தியே (மாத்ஸ்யர்களுடன் போர்புரிவதில்) மிக்கமுயற்சியுள்ளவனுமான ஸுசர்மாவோ ப்ரஸித்திபெற்றபலமும்பௌருஷமுமுள்ள எல்லாத்ரிகர்த்தர்களோடும் உத்தேசித்தபடி விராடநகரமென்னும் தேசத்தைக் குறித்துச்செல்லட்டும். நாம், வேறொருதினத்தில் செல்வதினால், அதிகமாகநிறைந்ததும் (தனதான்யங்களோடு) நன்றுகச்சேர்க்கை பெற்றதுமான மத்ஸ்யராஜனுடைய தேசத்தைக்குறித்துப் பின்புறத்திலேயே செல்வோம். ஸுசர்மாவினால் மத்ஸ்யராஜனுடைய கோதனமானது கவரப்படும்பொழுது விராடன் படைகளை அழைத்துக்கொண்டு த்ரிகர்த்தர்களோடு போர்புரிவான். கௌரவர்கள் மறுநாள் அந்த விராடநகரத்தில் பசுக்களைப்பிடிக்கட்டும். அப்பொழுது பசுக்கள் நிமித்தமாகப் பாண்டவர்கள் கௌரவர்களோடு போர்புரிவார்கள். (ஆதலால்,) உத்தேசித்தபடி த்ரிகர்த்தர்கள் விராடநகரத்தினுடைய ஸமீபத்தில் அவ்வாறு சென்று விரைவாகப் பசுமந்தையை அடைந்து

பெரியகோதனத்தைக் கவர்ந்துகொள்ளட்டும். நாம் சேனையை இரண்டாகப் பகுத்துக்கொண்டு அழகும் குணமுமுள்ள லக்ஷக்கணக்கான இந்த விராடனுடைய பசுக்களைப் பிடிப்போம்' என்று கூறினன். போர்த்தகுதியும் கொடிகளும் பலத்தால்மேன்மையும் பழிக்குப்பழிதீர்ப்பதில் விருப்பமும் பசுக்களிடத்தில் பேராசையும் மிக்கபலமுமுள்ள அந்தரதிகர்களனைவர்களும் உத்தேசித்தபடி மத்ஸ்யராஜனுடைய தேசத்தை அடைந்தார்கள். பிறகு, ஸுசர்மாவானவன் க்ருஷ்ணாஷ்டமிதினத்தில் (விராடனுடைய) பசுக்களைக் கவர்ந்தான். மன்னரே! மறுதினத்தில் மஹாவீர்யமுள்ளவர்களான கௌரவர்களெல்லாரும் [1]ஒருங்குகூடி மாத்ஸ்யர்களுடைய தேசத்தின்ஓரிடத்தில் க்ருஷ்ணபக்ஷம் நவமிதிதியில் ஆயிரக்கணக்கான பசுக்கூட்டங்களைப் பிடித்தார்கள்.

மூப்பத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(கோபாலர்கள் ஸுசர்மாபசுக்களைக்கவர்ந்ததை விராடனிடத்தில்தெரிவித்ததும், விராடன் முதலானவர்கள் யுத்தத்துக்குப் புறப்பட்டதும், யுதிஷ்டிரர் தங்கள் யுத்தஸாமர்த்தியத்தை விராடனுக்குத் தெரிவித்துத் தாழும் ப்ரார்த்தனையோடு புறப்பட்டதும்.)

மஹாராஜரே! பிறகு, அளவற்றதேஜஸ்ஸுள்ளவர்களும் கபடமான வேஷங்களைத் தரித்தவர்களும் மஹாத்மாக்களும் விராடநகரத்தில் வாஸஞ்செய்துகொண்டு அந்தவிராடராஜனுக்கு ஊழியங்களைச் செய்பவர்களுமான அந்தப்பாண்டவர்களுக்கு அஜ்ஞாதவாஸகாலமானது அவ்விடத்திலேயே நன்றுகக் கழிந்துவிட்டது. கீசகன் கொல்லப்பட்டபிறகு, பகைவீரர்களைக் கொல்பவனான விராடராஜன், குந்திபுத்ரரான யுதிஷ்டிரரிடத்தில் அதிகமான கௌரவத்தைப் பாராட்டினன். பரதகுலத்தில் பிறந்தவரே! பிறகு, அந்தப்பதின் மூன்றுவது வர்ஷத்தின்முடிவில் ஸுசர்மாவினால் (விராடனுடைய) ஏராளமான கோதனமானது விரைவாக அபஹரிக்கப்பட்டது. பிறகு, பெரிதானசப்தமுண்டாகியது. புழுதியும் ஆகாயத்தை அளாவியது. சங்கங்களின்சப்தமும் துந்துபிகளின்கோஷமும் பேரிகளுடையபேரொலியும் முழங்கின. பசுக்களுடையதும் குதிரைகளுடையதும் ரதங்களுடையதும் யானைகளுடையதும் காலாட்களுடையதுமான சப்தமுமுண்டாயிற்று.

---

[1] இங்கு ஒருபதம் விடப்பட்டது.

இவ்வாறு, அந்த த்ரிகர்த்தர்கள் படையெடுத்துவந்து மத்ஸ்யராஜனுடைய பசுக்கூட்டத்தைக் கவரும்பொழுது கோபாலர்கள் தடுத்தார்கள். பாரதரே! பிறகு, அனேக த்ரிகர்த்தர்கள் பசுக்கூட்டத்தை ஏராளமாகக்கைப்பற்றி விரைவாகச் செல்லுகின்ற குதிரைகளாலும் தேர்க்கூட்டங்களாலும் நாற்புறத்திலும் சூழ்ந்து யுத்தத்தில் (தாங்களே) வெற்றிபெறுவோமென்பதில் தைர்யங்கொண்டு கோபாலர்களை எதிர்த்துப் போர்புரிந்தார்கள். பசுக்களுடைய கூட்டத்தில் பற்றுதலுடையவர்களான அந்தக்கோபாலர்கள், ப்ராஸங்களையும் தோமரங்களையும் கையில்கொண்டவர்களான அனேக வீரர்களால் ஹிம்ஸிக்கப்பட்டாலும், பலத்திலுல் த்ரிகர்த்த வீரர்களை எதிர்த்துத் தடுத்தார்கள். பசுரக்ஷகர்கள், கோடாலிகளாலும் உலக்கைகளாலும் பிண்டிபாலங்களாலும் முத்கரங்களாலும் பலவிதமான துன்புறுத்தலாலும் நான்குபுறத்திலும் குதிரைகளை வருத்தினர்கள். (கோபாலர்களால்) துன்புறுத்தப்படுகின்றவர்களும் மிக்க கோபங்கொண்டவர்களும் தேரின்மீதேறிப் போர்புரிகின்றவர்களுமான அந்த த்ரிகர்த்தர்கள் அம்புமழைகளைப் பொழிந்து பலத்திலுல் கோபாலர்களை ஓடச்செய்தார்கள். ராஜரே! பிறகு, கோபாலர்கள் ஹிம்ஸிக்கப்பட்டுப் புறங்காட்டி ஓடும்பொழுது யௌவனமுடையவர்களும் மிகப் பயந்தவர்களுமான சில கோபாலர்கள் பெருமூச்சுசெறிந்து, புழுதிபடிந்த மேனியையுடையவர்களாய் அதிவேகத்தோடு விராடநகரத்தை வந்தடைந்தார்கள். (அந்தப்) பசுக்காப்பவர்களான மனிதர்கள் விராடநகரத்தை அடைந்து, பாண்டவர்களோடு ஸபையில் வீற்றிருப்பவனும், சூரர்களும் குண்டலங்களையும் தோள்வளைகளையும் அணிந்தவர்களுமான யுத்தவீரர்களால் சூழப்பட்டவனும், ஸாதுக்களோடும் பண்டிதர்களோடும் கூடியவனும், ராஜஸ்ரேஷ்டனும், மந்திரிகளால் சூழப்பட்டவனுமான விராடராஜனைச் சீக்கிரம்கண்டு, 'ராஜேந்த்ரரே! பந்துக்களோடு கூடின எங்களை யுத்தத்தில் ஜயித்து அவமதித்து உம்முடைய அறுபதினாயிரம் பசுக்களை த்ரிகர்த்தர்கள் ஓட்டிக்கொண்டு செல்லுகின்றார்கள். அவைகளைத் திருப்பும். உமது பசுக்கள் அழிந்துபோகவேண்டாம்' என்று சொன்னார்கள்.

அந்தக் கோபாலர்களுடைய வார்த்தையைக்கேட்டு, பகைவர்களை அடக்குபவனான அந்தவிராடராஜன், ரதங்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் வ்யாபிக்கப்பட்டதும் காலாட்களாலும் கொடிமரங்களாலும் அடர்ந்ததுமான மாத்ஸ்யர்களுடைய பெரியசேனையை (யுத்தத்துக்காக) ஒருங்குசேர்த்தான். பிறகு, அரசர்களும், அரசகுமாரர்களும், காந்தியுள்ளவைகளும் காற்று

நுழையவும் இடமில்லாதவைகளும் நன்றுகத் தரிக்கத்தக்கவைகளு மான கவசங்களைத் தனித்தனியாக தரித்துக்கொண்டார்கள். பொற்கவசமணிந்த குதிரைகளைத் தனித்தனியாக ரதங்களில் பூட்டினர்கள். சூரர்கள் நாண்கயிறுகளை இழுத்து விற்களில் கட்டினர்கள். விராடனுக்கு அன்புள்ள தம்பியான சதானீகன் உறுதியுள்ளதும் இரும்பிறற்செய்து உள்ளும்புறமும் புடம்போட்ட பொன்னல் மூடப்பட்டதுமான கவசத்தை அணிந்துகொண்டான். சதானீகனுடைய இளையஸஹோதரனான மதிராக்ஷன் எவ்லாப் பாரத்தையும்பொறுக்கக்கூடியதும் உறுதியுள்ளதும் பொன்மயமான கவசத்தைஅணிந்துகொண்டான். மேற்புறத்தில் நூறு தாமரைப் புஷ்பங்களும் நூறு செங்கழுநீர் மலர்களும் ப்ரகாசிக்கின்றதும் மெருகிட்ட தங்கமயமான ஓரமுள்ளதுமான கவசத்தை ஸ்ரேர்யதத்தன் அணிந்துகொண்டான். வீரனும் விராடனுடைய மூத்தகுமாரனுமான சங்கனனவன் உறுதியுள்ளதும் இரும்பிறற் செய்து பொன்னல்மூடி அலங்கரிக்கப்பட்டதும் வெண்ணிறமுள்ளதுமான கவசத்தை அணிந்துகொண்டான். மத்ஸ்யதேசத்துக்கு ராஜாவான விராடனும் நூறுஸ்ரேர்யப்ரதிமையுள்ளதும் நூறுசுழிகளையுடையதும் நூறுபுள்ளிகளுள்ளதும் நூறுகண்களால்நிறைந்ததும் பிளக்கமுடியாததுமான கவசத்தை அணிந்தான். பிறகு, மஹாபலசாலிகளும் தேவதைகள் போன்றவர்களும் (பகைவர்களை) அடக்குந் திறமையுள்ளவர்களுமான யுத்தவீரர்கள் போர்புரிய எண்ணங்கொண்டு தங்கள் தங்களுக்குரிய பற்பலவிதமான கவசங்களைப் பூட்டிக்கொண்டார்கள். மஹாரதர்கள் துணைக்கருவிகளோடு கூடியவைகளும் ப்ரகாசமுள்ளவைகளுமான பெரிய தேர்களில் பொற்கவசங்களால் மூடப்பட்ட குதிரைகளைத் தனித்தனியாகப் பூட்டினர்கள். ஸ்ரேர்யசந்த்ரர்களுக்கு ஒப்பானதும் ரத்னங்களாலும் தங்கத்தாலும் நன்றுக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதுமான மத்ஸ்யராஜனுடைய ரதத்தில் மிகவும் பெரிய கொடியானது தூக்கிக் கட்டப்பட்டது. சூரர்களான க்ஷத்ரியர்கள் பற்பல வடிவமுள்ளவைகளும் ஸ்வர்ணத்தால் செய்யப்பட்டவைகளும் பொன்மயமான மாலைகளுள்ளவைகளுமான கொடிகளை அவரவர்களுக்குத் தக்கபடி ரதங்களில் தூக்கிக் கட்டினர்கள். (இவ்வாறு) ரதங்கள் ஸித்தம்செய்யப்படும்பொழுது, கங்கர், விராடராஜனைப் பார்த்து, '(ராஜரே!) என்னுல் தர்மார்த்தகாம மோக்ஷங்களுக்கு ஸாதனமான அஸ்த்ரமானது ரிஷிப்ரேஷ்டரிடத்தினின்று அடையப்பட்டிருக்கின்றது. நான் கவசம் பூண்டு ரதத்தின்மீதேறிப் பசுக்களிருக்கும் இடத்தைக் குறித்துப்

புறப்படுகிறேன். தோஷமற்றவரே! பலசாலியான இந்தவலல னும் சூரனைக் காணப்படுகிறான். பசுரக்ஷகனை தந்த்ரீபாலனையும் அப்வரக்ஷகனை தாமக்ரந்தியையும் ரதங்களில் ஏறும்படிசெய் யும். பசுக்களின்நிமித்தமாக (த்ரிகர்த்தவீரர்கள்) ஒருபொழுதும் இவருடன் போர்புரியமாட்டார்களென்பது என்னுடையஎண் ணம்' என்றார். பிறகு, மத்ஸ்யதேசத்துராஜாவான விராடன், இளையஸஹோதரனை சதாநீகனைப்பார்த்து, '(சதாநீக!) கங்கர், சமையற்காரனை வலலன், வீர்யமுடையவனை தாமக்ரந்தி, பசுக் களைக்காப்பவனை தந்த்ரீபாலன் இவர்கள் புருஷஸ்ரேஷ்டர்களும் சூரர்களும் மிக்கவீரபுருஷர்களும் சிறந்தகஜராஜனுக்கு ஒப்பான வர்களுமாயிருத்தலால், இவர்கள் யுத்தஞ்செய்வார்களென்பது என்னுடைய எண்ணம். இவ்விஷயத்தில் ஸம்சயமில்லை. இவர் களுக்கும் த்வஜங்களும் பதாகைகளுமுள்ள தேர்கள் கொடுக்கப் படலாம். (இவர்களும்) விசித்ரமும் உறுதியுள்ளனவும் லேசா யிருக்கின்றனவுமான கவசங்களைச் சரீரங்களில் பூண்டுகொள்ளட் டும். இவர்களுக்கு ஆயுதங்களும் கொடுக்கவேண்டும். இவர்கள் ஒருபொழுதும் யுத்தம்செய்யாமலிருக்கமாட்டார்களென்பது என் னுடையஎண்ணம்' என்று சொன்னான்.

ராஜரே! அந்தச்சதாநீகன் ராஜாவினுடைய அந்தவார்த்தை யைக்கேட்டு மனத்தில்வேகங்கொண்டு பார்த்தர்களானஸஹதேவ னுக்கும் யுதிஷ்டிரராஜருக்கும் பீமனுக்கும் நகுலனுக்கும் ரதங் களைக்கொடுத்தான். அரசனால் விரைவாகக் கட்டளையிடப்பட்ட ஸாரதிகள் ராஜபக்தியைமுன்னிட்டவர்களாகி ரதங்களைக்கண்டு விரைவாகக் குதிரைகளைப்பூட்டினார்கள். விராடன் சிறந்தசெய்கை யுள்ள அந்தப்பாண்டவர்களுக்குக்கொடுத்தனவும் விசித்ரமான வையும் புதியனவும் உறுதியுள்ளனவுமான கவசங்களை அந்த மஹாரதர்கள் சரீரங்களில்பூட்டிக்கொண்டு கவசமுள்ளவர்களா னார்கள். ராஜஸ்ரேஷ்டரே! வேகமுள்ளவர்களும் மறைக்கப் பட்ட உருவமுள்ளவர்களும் எல்லாச்சாஸ்த்ரங்களிலும் ஸமர்த் தர்களும் மஹாரதர்களும் குருபுங்கவர்களும் சூரர்களும் உண்மை யானவன்மையுள்ளவர்களும் பாண்டுகுமாரர்களுமான நான்கு ப்ராதாக்களும் கவசமணிந்து உத்ஸாஹத்துடன் ஸுவர்ணத் தால் அலங்கரிக்கப்பட்ட தேர்களின்மீதேறி ஒருங்குசேர்ந்து விராடனுக்குப் பின்னேசென்றார்கள். அந்தவீரர்கள் நீண்டன வும் உறுதியுள்ளனவுமான வில்லின்நாண்களைத் தங்கள் வன்மைக் குத்தக்கபடி இழுத்து விற்களில் பூட்டினார்கள். பிறகு, நல்ல

ஆடைகளை உடுத்தவர்களும் சந்தனங்களால்பூசப்பட்டவர்களு மான அந்தவீரர்களெல்லாரும் அரசனுல்ஏவப்பட்டுக் குதிரைகளை விரையஓட்டினர்கள். பொன்னுபரணங்களால் மறைக்கப்பட்ட வைகளும் பருத்தவைகளும் (பாரத்தை) நன்குபொறுக்கும் தன்மைபொருந்தியவைகளுமான அந்தக்குதிரைகள் தூண்டப் பட்டுப் பக்ஷிகளுடையவரிசைகள்போலக் காணப்பட்டன. பயங் கரமானவடிவமுள்ளவைகளும் மதப்பெருக்குள்ளகன்னத்தையும் முகத்தையுமுடையவைகளும் யுத்தத்தில் ஸமர்த்தர்களானவீரர் களால் நன்கு ஏறப்பட்டவைகளும் சிறந்தயானமாவுத்தர்களால் ஏறப்பட்டவைகளும் நல்லதந்தங்களையுடையவைகளும் அறுப துவயதுசென்றவைகளும் மழைபொழிகின்றமேகங்கள்போன்றவை களுமான பெரியயானைகள் நகர்ந்துபோகின்றமலைகள்போலப் பின் புறத்தில் ராஜாவைத் தொடர்ந்து சென்றன. உறுதியான ஆயுதங் களையுடைய ஜனங்களால் சூழப்பட்டதும் ரதங்களாலும் குதிரை களாலும் யானைகளாலும் சூழப்பட்டதுமான விராடனுடைய அந்தச் சேனையினுடைய முன்னணியானது அப்பொழுது இந்த ரனுடையசேனைபோல விளங்கியது. மஹாராஜரே! வேந்தரே! பசுக்களுடையஸ்தானத்தை அடையவேண்டுமென்கிற எண்ணத் துடன் செல்லுகின்ற அந்தவிராடனை அப்பொழுது மத்ஸ்யதேசத் தினர்களும் ஸமர்த்தர்களும் மேன்மைபெற்றவர்களுமான இரு பதினாயிரம்வைய்யர்களும் ராஜபுருஷர்களும் எண்ணாயிரம்ரதங் களும் ஆயிரம்யானைகளும் இருபதினாயிரம்குதிரைகளும் விரைவா கப் பின்தொடர்ந்து சென்றார்கள். பரதகுலத்திலுதித்தவரே! விராடனுடைய அந்தச்சேனையானது வஸந்தகாலத்தில் அதிகபுஷ் பங்களால் நிறைந்ததும் விசித்ரமுமானகானகம்போல அதிகமாக விளங்கியது.

மூப்பத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(விராடன்சேனைக்தும் ஸுசர்மாவின்சேனைக்தும் யுத்தமும், யுதிஷ்டிரர்முதலானவர்களால் கொல்லப்பட்டவர்களின் தொகை யும், விராடனுக்தும் ஸுசர்மாவுக்தும் யுத்தமும்.)

சூரர்களும் வரிசைபடுத்தப்பட்டிருக்கின்ற சேனையுடையவர் களும் (பகைவர்களை) வெல்லும் தன்மையுடையவர்களுமான மாத் ஸ்யர்கள் பட்டணத்திலிருந்துவெளிப்பட்டு ஸுர்யாஸ்தமனஸம

யத்தில் த்ரிகர்த்தர்களை அடைந்தார்கள். பசுக்களிடத்தில் அதிக ஆவலுள்ளவர்களும் மிக்க பலமுள்ளவர்களும் நன்றுக அடிப்பவர் களுமான அந்த த்ரிகர்த்தர்களும் மாத்ஸ்யர்களும் ஒழுங்குபடுத் தப்பட்டிருக்கிற சேனையுடன்கூடி ஒருவரையொருவர் எதிர்த்துப் போர்புரிந்தார்கள். பயங்கரமாயிருப்பவைகளும் தோமரங்க ளாலும் அங்குசங்களாலும் தூண்டப்பட்டவைகளும் ஸாமர்த்திய மும் தலைமையுமுள்ள யானைமாவுத்தர்களால் ஏறப்பட்டவைகளும் மதங்கொண்டவைகளுமான யானைகளும் ஒன்றோடொன்று எதிர்த் துப் போர்புரிந்தன. ராஜரே! பரஸ்பரம் அடித்துக்கொள்ளு கின்ற அவ்விருதிறத்து வீரர்களுக்கும் ஸூர்யன் அஸ்தமிக்கும் தருணத்தில் கோரமானதும் நெருங்கியதும் மயிர்க்கூச்சம் உண்டு பண்ணுகின்றதும் யமனுடைய நாட்டை வ்ருத்திபண்ணுகின்றதும் காலாட்களும் ரதங்களும் சிறந்த யானைகளும் குதிரைவீரர்களும் நிறைந்த சேனையின் பெருக்கமுள்ளதும் தேவாஸுரர்களின் யுத் தம்போன்றதுமான யுத்தம் உண்டாயிற்று. (அந்தச்சேனைகள்) ஒன்றையொன்று எதிர்த்து அடித்துக்கொள்ளுகையில், பூமியிலு ள்ளபுழுதியானது உயரக்கிளம்பிற்று; ஒன்றும் அறியப்படவில்லை. பறவைகளும் சேனையிலுண்டான புழுதியால் மூடப்பட்டுப் பூமி யில் விழுந்தன. அதிவேகமாகச்செல்லுகின்ற அம்புகளால் ஸூர்ய னும் மறைக்கப்பட்டான். ஆகாயமானது மின்மினிப்பூச்சிக ளோடு கூடியதுபோலாயிற்று. கர்ஜிக்கின்றவர்களும் இடமாகவும் வலமாகவும் அம்புகளையெய்கின்றவர்களுமான உலகிற்சிறந்த வீரர் களுடைய பொன்மயமான பின்புறத்துடன்கூடின விற்கள் மின்னல்கள்போல அசைந்துகொண்டிருந்தன. தேர்கள் தேர்க ளோடு சேர்க்கைபெற்றன. காலாட்கள் காலாட்களோடு சேர்ந் தார்கள். குதிரைவீரர்கள் குதிரை வீரர்களோடு சேர்ந்தார்கள். மஹாகஜங்கள் மஹாகஜங்களோடு சேர்ந்தன. யுத்தவீரர்கள் ரணகளத்தில் அதிகோபங்கொண்டு கத்திகளாலும் பட்டஸங் களாலும் சக்திகளாலும் தோமரங்களாலும் ஒருவரையொருவர் கொன்றார்கள். பரிகாயுதங்களைக் கையில்கொண்ட சூரர்களான யுத்தவீரர்கள் அதிக கோபங்கொண்டவர்களும் உத்ஸாஹமுள்ள வர்களும் ரணகளத்தில் ஒருவரைஒருவர் கொல்லுகிறவர்களுமாகிப் (பகைவர்களை) புறங்காட்டி ஓடும்படி செய்வதற்குச் சக்தியற்றவர் களானார்கள். (அந்த யுத்தகளத்தில்) அறுக்கப்பட்ட தலைகள், சிவந்திருக்கின்ற கீழ்மேல் உதடுகளுள்ளவைகளும் நல்லமூக்குள்ள வைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிற மீசையுள்ளவைகளும் நன்கு அலங்கரிக்கப்பட்டவைகளும் புழுதியிலல் காந்தியற்றன

வாகச்செய்யப்பட்ட குண்டலங்களுள்ளவைகளுமாகக் காணப்பட்டன. அந்த மஹாயுத்தத்தில் நான்குபக்கங்களிலும் வீரர்களால் அறுக்கப்பட்டிருக்கின்ற க்ஷத்ரியர்களுடைய சரீரங்கள் ஆச்சாமரங்களுடைய அடிக்கட்டைகள்போலக் காணப்பட்டன. அந்த யுத்தபூமியானது, ஸர்ப்பங்களுடைய உடல்போன்றவைகளும் சந்தனங்களால்பூசப்பட்டவைகளுமான கைகளாலும் குண்டலங்களுடன்கூடின தலைகளாலும் நான்கு பக்கங்களிலும் வ்யாபிக்கப்பட்டது. அந்தயுத்தபூமியானது மெல்லியவையும் பொன்னல் அழகு செய்யப்பட்டவையுமான இரண்டுவஸ்த்ரங்களைத் தரித்துக் கொண்டிருக்கின்ற நல்ல யௌவனமுள்ள ஒருஸ்த்ரீபோல விளங்கியது. அதிகமாகப்பெருகுகின்ற ரக்தத்திலால் பூமியிலிருந்து உண்டானபுழுதி தணிந்தது. ஸைன்யமானது கோரமான மதிமயக்கத்தை அடைந்து வரம்புகடந்திருந்தது. அப்பொழுது தர்மாத்மாவும்பாண்டுநந்தனருமான யுதிஷ்டிரரும் ஸஹோதரர்களோடு அணிவகுத்துக்கொண்டு விராடனுடன்சேர்ந்து(பகைவர்களோடு)போர் புரிந்தார். யுதிஷ்டிரர் தமதுபடையை ராசாளிப்பக்ஷிபோல்ஆக்கிக்கொண்டு(அந்தப்பக்ஷிக்குத் தாம்) முகமாயிருந்தார்;நகுலஸஹதேவர்கள் இரண்டுசிறகுகளானார்கள்; வ்ருகோதரன் வாலாயிருந்தான். அந்தயுத்தத்தில் குந்திபுத்ரரான யுதிஷ்டிரர் ஆயிரம்ரதிகர்களைக்கொன்றார். சஸ்த்ரங்களைத்தரித்த எல்லாவீரர்களுள்ளும் சிறந்தவனும் மிக்ககோபங்கொண்டவனும் வீரனுமானபீமஸேனனே இரண்டாயிரம் ரதிகர்களைப் பரலோகத்துக்கு அனுப்பினன். நகுலன் முந்நூறு ரதிகர்களைக் கொன்றான். ஸஹதேவன் நானூறு ரதிகர்களைக் கொன்றான். சதானீகன் நூறுபேர்களைக் கொன்றான். மதிராக்ஷன் நானூறுபேர்களைக் கொன்றான். சிறந்தபலமுள்ள சதானீகனும் மதிராக்ஷனும் மிகக்களிப்புற்ற த்ரிகர்த்தர்களுடைய பெரும்படையில் நுழைந்து மிக்கபரபரப்புடன் (எதிரிகளோடு) மயிர்பிடித்துச் சண்டைசெய்தார்கள்; தேராளிகளோடு தேராளிகளாகநின்றும் சண்டை செய்தார்கள். த்ரிகர்த்தர்களுடைய பெரும்படையில் நுழைந்தவர்களான அவ்விருவர்களையுங்கண்டு ஸூர்யதத்தனும் வலனும் (அவர்களைப்) பின்தொடர்ந்துசென்றார்கள். பெரிதான வில்லையேந்தியவனும் மஹாபலசாலியும் விராடபுத்ரனுமான சங்கன் யுத்தத்தில் சூரர்களை ஸம்ஹரித்துக் கொண்டு (த்ரிகர்த்தர்களுடைய) பெரும்படையில் புகுந்தான். அந்தயுத்தத்தில், ரதிகர்களுள் சிறந்தவனான அந்தவீரர்டன், ஐந்நூறு ரதிகர்களையும் நூறு யானைகளையும் அவ்வாறே ஆயிரம் குதிரைகளையுங்கொன்று, ஒற்றைத்தேருடன் பற்பல விதமான யுத்த

கதிகளில் ஸஞ்சரித்துக்கொண்டு, பொன்மயமான ரதத்துடன் கூடின த்ரிகர்த்ததேசாதிபதியான ஸுசர்மாவை யுத்தத்தில் எதிர்த்தான். பெரியவில்லுள்ளவர்களும் மஹாபலசாலிகளுமான அவ்விருவர்களும், பசுக்களின்நடுவில் இரண்டுகாளைகள்போல ஒரு வரையொருவர் அடித்துக்கொண்டு அந்த ரணகளத்தில் போர் புரிந்தார்கள். மிகுந்தகோபங்கொண்டவர்களும் பொறுமையற்ற வர்களும் அஸ்த்ரங்களில் பயிற்சியுள்ளவர்களுமான ராஜப்ரேஷ் டர்களிருவர்களும் கூர்மையுள்ள பாணங்களாலும் கத்திகளாலும் சக்திகளாலும் கோடாலிகளாலும் ப்ரகாசித்தார்கள். பிறகு, ரதிகர்களானஇருவர்களும் ரதங்களுடன் (யுத்தத்துக்காக) ஒரு வரோடொருவர்சேர்ந்து இரண்டுமேகங்கள் மழைத்தாரைகளைப் பொழிவதுபோல நான்குபக்கத்திலும் விரைவாகப் பாணங்களைப் பொழிந்தார்கள். அஸ்த்ரவித்தையில் பயிற்சியுள்ளவர்களான அவ்விருவர்களும், அதிகோபங்கொண்டு, இரண்டுயானைகள் தந் தங்களால் ஒன்றையொன்றுபிளப்பதுபோல, கூர்மையுள்ள பாணங்களால் ஒருவரைஒருவர் யுத்தத்தில் பிளந்தார்கள். மத் ஸ்யராஜன் ஸுசர்மாவைக் கூர்மையுள்ளபாணங்களால் அடித்து அவனுடைய நான்குகுதிரைகளையும் ஐவைந்துபாணங்களால் அடித்தான்; இரண்டுபாணங்களால் ஸாரதியையும் மூன்றுபாண ங்களால் கொடியையும் அடித்தான். அவ்வாறே, யுத்தத்தில் கொடியமதங்கொண்டவனும் உத்தமமான அஸ்த்ரங்களை அறிந்த வனுமான ஸுசர்மாவும் மத்ஸ்யராஜனைக் கூர்மையுள்ள ஐம்பது பாணங்களால் அடித்தான். ராஜேந்த்ரரே! அப்பொழுது, பெரிய யுத்தத்தில் அவ்விருவர்களுடைய ஸைன்யங்களனைத்தும், இரவின் முன்னேரத்தில் புழுதியால் சூழப்பட்டமையால் ஒன்றையொன்று அறிந்துகொள்ளவில்லை.

முப்பத்தைந்தாவது அத்யாயம்

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(ஸுசர்மா விராடனைப்பிடித்ததும், பீமன் விராடனை விடுவித்து ஸுசர்மாவைப்பிடித்ததும், யுதிஷ்டிரர் கருணையினல் ஸுசர்மாவைவிடுவித்ததும்.)

பரதவம்சத்தில் உதித்தவரே! உலகமனைத்தும் இருளாலும் புழுதியினலும் மூடப்பட்டிருக்குங்கால் அணிவகுக்கப்பட்டசேனை களை உடையவர்களும் பகைவர்களைக்கொல்லுந்தன்மையுள்ளவர்

களுமான அந்த (இருதிறத்துவீரர்களும்) ஒரு [1]முஹூர்த்தகாலம் யுத்தம்செய்யாமல் இருந்தார்கள். பிறகு, இருளை விலக்கிக்கொண்டும் ராத்ரியை நிர்மலமாகச்செய்துகொண்டும் க்ஷத்ரியர்களை யுத்தத்தில் காண்பித்துக்கொண்டும் சந்த்ரன் உதித்தான். வெளிச்சம் உண்டானபின், அந்த யுத்தவீரர்களுக்கு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு செய்யும்படியான கொடும்போர் பின்பும் விளைந்தது. அவ்வாறே, அந்தவீரர்களுடைய நெருங்கின அந்தச் சேனைகள் கோபங்கொண்டு கதாயுதங்களாலும் பட்டாக்கத்திகளாலும் கோடாலிகளாலும் கூரியநுனிகளுள்ளனவும் நன்றுகச் சாணைபிடிக்கப்பட்டிருக்கிற முனையுள்ளனவுமான ஈட்டிகளாலும் ஒன்றைஒன்று எதிர்த்து அடித்துக்கொண்டன. த்ரிகர்த்த தேசாதிபதியும் ராஜாவுமான ஸுசர்மாவானவன், (தன்) சேனையினால் மத்ஸ்யராஜனுடைய எல்லாச்சேனையையும் அடித்துஜயித்து மாத்ஸ்யர்களை நசுக்கி, பிறகு, பலசாலியான விராடனை எதிர்த்து ஓடினன். அவ்விருவர்களும், மதங்கொண்ட இரண்டு காளைகள்போலவும் மதத்தினால் அடங்காத இரண்டுயானைகள் போலவும் யானைகளைப்பற்றிஇழுக்கும்தன்மையுள்ள இரண்டு சிங்கங்கள்போலவும் அதிக மதங்கொண்டஇந்த்ரனும் வ்ருத்ரனும் போலவும் போர்புரிந்தார்கள். இருவர்களும் ஸமமானபலமும் உத்ஸாஹமுள்ளவர்கள். இருவர்களும் ஸமமான பராக்ரமம் உடையவர்கள். இருவர்களும் ஸமமாகவே அஸ்த்ரங்களை ப்ரயோகிப்பவர்கள். இருவர்களும் யுத்தத்தில் ஸமர்த்தர்கள். அவ்விருவர்களும் தனியாகத் தேரில்கட்டியிருக்கின்ற குதிரைகளையும் இருவர்களுடையபுறங்காப்பவரையும் ஸாரதிகளையும்கொன்று ஸமமானவில்லைப்பிடித்துக்கொண்டு அதிகக்கொழுப்புள்ள க்ருஷ்ணகம்ஸர்கள்போல இருந்தார்கள். பிறகு, த்ரிகர்த்ததேசாதிபதியான ஸுசர்மாவானவன் ஸுவர்மாஎன்கிற ஸஹோதரனுடன் நாற்புறத்திலும் தேர்க்கூட்டத்தோடு மத்ஸ்யராஜனைஎதிர்த்துவந்தான். பிறகு, க்ஷத்ரியரிற்சிறந்தவர்களான அவ்விரண்டு ஸஹோதரர்களும் மிகுந்தகோபங்கொண்டு கதாயுதத்தைக் கையில்கொண்டுதேர்களிலிருந்து இறங்கிவேகமாக (விராடனை) எதிர்த்துவந்தார்கள். பிறகு, பகைவீரர்களை நாசஞ்செய்பவனும் பலசாலியும் வீர்யமுள்ளவனும் கதாயுதமுள்ளவனுமான ஸுசர்மாவானவன் தேரிழந்த மத்ஸ்யராஜனை உயிரோடுபிடித்தான். பயத்தைச்செய்யும்வண்மையுள்ள ஸுசர்மாவானவன் ஒரு காழுகன் யுவதியைத்துன்புறுத்துவதுபோல அந்த மத்ஸ்யராஜனைத்

1 'சந்த்ரன்உதிக்கும்வரையில்' என்பது பழையஉரை.

துன்புறுத்தித் தன்தேரில் ஏற்றிவைத்துக்கொண்டு சென்றான். ரதத்தைஇழந்த மிகுந்தபலசாலியான அந்தவிராடன் பிடிக்கப்பட்டவுடனே, அந்தஸைன்யமுழுவதும் தோல்வியடைந்து உத்ஸாஹத்தையும் ஆசையையும் இழந்ததாகியது. யுத்தத்தில் த்ரிகர்த்தர்களால் ஹிம்ஸிக்கப்பட்ட மாத்ஸ்யர்கள் எல்லாத்திசைகளிலும் மூலைத்திசைகளிலும் பயந்துஓடினார்கள்; நடந்தும்சென்றார்கள். அந்த மாத்ஸ்யர்கள், (த்ரிகர்த்தர்களால் அவ்விதமாக) ஓட்டப்படுமளவில், தர்மாத்மாவும் குந்தியின்புதல்வருமான யுதிஷ்டிரர், பகைவர்களை அடக்குகிறவனை பீமஸேனனைப்பார்த்து, 'சிறந்தகைகளுள்ளவனே! மத்ஸ்யராஜன் (த்ரிகர்த்தராஜனை) ஸுசர்மாவினால் பிடிக்கப்பட்டுவிட்டான். அவனை நீ விடுவிக்கவேண்டும். அவன் சத்ருக்களுக்கு வசப்படவேண்டாம். பீமஸேன! நீண்டகைகளுள்ளவனே! ஸுசர்மாவினால் பிடிக்கப்பட்டிருக்கிறவனும் நமக்கு ப்ரீதியை உண்டுபண்ணுகிறவனுமான விராடராஜனைக் காப்பாற்று. விரைவாக விடுவி. நாம்எல்லாரும் ஸர்வாபீஷ்டங்களாலும் நன்றுகப் பூஜிக்கப்பட்டு (இவனிடத்தில்) ஸுகமாகவஸித்துவந்தோம். பீமஸேன! அப்படிப்பட்ட வாஸத்துக்குக் கைம்மாறுனது உன்னால் செய்யத்தக்கது' என்று சொன்னார். அந்தயுத்தத்தின்மத்தியில் அவ்வாறு சொல்லுகின்ற அந்தயுதிஷ்டிரரைப்பார்த்து, (பகைவர்களால்) அவமதிக்கத்தகாதவனும் மஹாபலசாலியுமான பீமஸேனன், 'ராஜரே! உம்முடைய கட்டளையினால் நான் இவனைப் பாதுகாக்கிறேன். யுத்தத்தில் பகைவர்களுடைய பலத்தோடு ஒப்பிடக்கூடாததான என்னுடைய தோள்வலியை ஆதாரமாகக்கொண்டு எதிராளிகளோடு போர்புரிகிற என்னுடைய மிகப்பெரிதான இந்தச்செய்கையைப் பாரும். ராஜரே! நீர் உடன்பிறந்தார்களோடு ஏகாந்தமானஸ்தலத்தை அடைந்திரும். இதோ பெரிய கிளைகளுள்ளதும் மலைபோன்றதும் பூவாமற்காய்ப்பதுமான ஒருமரம் இருக்கிறது. நான் இதைப்பெயர்த்துப் பகைவர்களை நாசம்செய்கிறேன்' என்று சொன்னான். மதயானைபோல மரத்தைப்பார்க்கின்றவனும் வீரனுமான அந்தஸஹோதரனைப்பார்த்து, தர்மராஜாவானயுதிஷ்டிரர், 'பீம! ஸாஹஸம்செய்யாதே. இந்தமரம் இருக்கட்டும். பரத குலத்தில் உதித்தவனே! வ்ருக்ஷத்தைக் (கையில்எடுத்துக்) கொண்டு அதிமானுஷமானகார்யங்களைச் செய்யும் உன்னை ஜனங்கள், 'இவன் பீமஸேனன்' என்று தெரிந்துகொள்ளவேண்டாம். (ஆதலால்,) நீ இந்தமரத்தை (க்கையில்) எடாதே; ஹிம்மநாதத்தையும் வெளியிடாதே. (இவ்விதமான) செய்கையினாலும் ஹிம்மநாதத்தினாலும்

ஜனங்கள் உன்னை நிச்சயமாக அறிவார்கள். நீ இந்தமரத்தை எடுத்துக்கொண்டு இந்தஸேனையை எதிர்த்து ஓடாதே. மரத்தைப் பிடுங்கும் உன்னை நிச்சயமாக ஜனங்கள் அறிந்துகொள்வார்கள். (ஆதலால்,) நீ வேறு ஆயுதத்தையே எடுத்து மனுஷ்யர்களுக்கு உரியகார்யத்தையே செய். மனிதர்களுக்கு உரித்தானதும் பிறர்களால் கண்டுபிடிக்க முடியாததுமான ஆயுதமானவில்லையாவது சக்தியையாவது கத்தியையாவது கோடாலியையாவது எடுத்துக்கொண்டு விரைவாக விராடராஜனை விடுவிப்பாயாக. மத்ஸ்யராஜனை ரக்ஷிக்க எண்ணங்கொண்டு (பகைவர்களோடு) யுத்தரங்கத்தில் போர்புரியும் உனக்கு மஹாபலசாலிகளான நகுலஸஹதேவர்கள் சக்ரரக்ஷகர்களாவார்கள்' என்று சொன்னர்.

பாண்டுநந்தனனான பீமன் ஸஹோதரருடையவசனத்தை ஏற்று, மரத்தைவிட்டு வில்லைஎடுத்துத் தேரின்மீதேறி ஜலத்துடன் கூடின மேகம்போலச் சரமாரிகளைப்பொழிந்துகொண்டு பயங்கரமானசெய்கையுள்ள அந்தஸூசர்மாவைக்குறித்து ஓடிவந்தான். பீமன், விராடனைப் பார்த்தவுடன் ஸூசர்மாவை நோக்கி, 'நில், நில்' என்றும் சொன்னன். ரதிகர்களுள் உத்தமனான ஸூசர்மாவானவன், பின்புறத்தில்'நில்நில்' என்றுசொல்லுகின்றவனும் காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்கும் ஒப்பானவனுமான பீமனைப் பார்த்து மனக்கவலையுற்றான். ஸூசர்மாவானவன், 'மஹாயுத்தம் நேர்ந்துவிட்டது. இவன் என்னுடைய மிகச் சிறந்த செய்கையைப் பார்க்கட்டும்; நானும் இவனுடைய மிகச்சிறந்த செய்கையைப் பார்க்கிறேன்' என்றுசொல்லி வில்லைஎடுத்துக்கொண்டு ஸஹோதரர்களுடன் திரும்பினன். அந்தரதிகர்கள் நிமிஷத்திற்குள் பீமஸேனனோடு சேர்ந்தார்கள். பீமஸேனனுல் வீரர்களுடன்கூடின தேர் யானை குதிரைகளுடையனவும் உக்கிரர்களும் வில்லாளிகளுமான சூரர்களுடையனவுமான லக்ஷக்கணக்கான கூட்டங்கள் விராடனுடையஸமீபத்தில் கீழேதள்ளப்பட்டன. மஹாத்மாவான பீமன் கதாயுதத்தைஎடுத்து அவர்களுடைய காலாட்களைக்கொன்றான். யுத்தத்தில் கொடியமதங்கொண்டஸூசர்மா, அவ்விதமான அந்த யுத்தத்தைப்பார்த்து,'மஹாபலமுள்ள (நம்முடைய) ஸைன்யத்தில் முந்திமுழுகின ஒருசத்ருவீரன் காணப்படுகிறான்; என்னுடையசேனையில் மிச்சம் என்னஇருக்கிறது?' என்றுமனத்திலால் ஆலோசித்து அப்பொழுது காதுவரையில்இழுக்கப்பட்ட நாண்கயிறுள்ளவில்லுடன் தோன்றினன். ஸூசர்மா, கூரிய அம்புகளை அடிக்கடி (பீமஸேனன்மீது) விடுத்தான். பிறகு, அதிகோபமுள்ளவர்களான அந்தப்பாண்டவர்களனைவரும் த்ரிகர்த்தர்களைக்குறிப்பிட்

டித் திவ்யாஸ்த்ரத்தைதவிட்டுக்கொண்டு குதிரைகளை எதிரில்நடத்தி னர்கள். அப்படிப்பட்ட பெரியசேனையைநோக்கித் திருப்பிவிடப் பட்ட ரதங்களுடன்கூடின அந்தப்பாண்டவர்களைக்கண்டு, விராட புத்ரன்(பகைவரிடம்)அதிககோபம்கொண்டு மிக்கவியப்பைத்தரத் தக்கதாக யுத்தம் செய்தான். த்ரிகர்த்தர்கள் எதிர்த்துவந்து ஜயத் தில்விருப்பத்துடன் போர்புரிந்தார்கள். அவர்கள்மீது அதிகோ பங்கொண்டவனும் ஆயுதம்பிடித்தவரனைவருள்ளும் சிறந்தவனும் வீரனுமான பீமஸேனன் இரண்டாயிரம் தேராளிகளைப் பரலோகத் தை அடையச்செய்தான். குந்திபுத்ரரும் ராஜாவுமானயுதிஷ்டிரர் (அம்புகளால்) ஆயிரம்வீரர்களைக்கொன்றார். நகுலனும் எழுநூறு பேர்களைப் பாணங்களால் கொன்றான். ப்ரதாபமுள்ளவனும் புருஷச்ரேஷ்டனும் பெரியவன்மையுள்ளவனுமான ஸஹதேவன் யுதிஷ்டிரரால் கட்டளையிடப்பட்டுப் பெரிதான த்ரிகர்த்தர்களு டையசேனையில் புகுந்து ஸிம்மமானது அல்பமிருகங்களைக் கலக்க முறச்செய்வதுபோல எல்லாப்ராணிகளையும் கலக்கமுறச்செய்து முந்நூறுசூரர்களைக்கொன்றான். பிறகு, மஹாபலமுடைய யுதிஷ் டிரராஜர் விரைவாக எதிர்த்துச்சென்று ஸுசர்மாவை அம்புக ளால் நன்றாக அடித்தார். ஸுசர்மாவும் மிக்ககோபம்கொண்டு விரைவுள்ளவனாகிப் பத்துப்பாணங்களால் யுதிஷ்டிரரை அடித்து நான்குபாணங்களால் (அவருடைய) நான்கு குதிரைகளையும் அடித் தான். ராஜரே! பிறகு, சுறுசுறுப்புடன் யுத்தம்செய்பவனும் குந்திபுத்ரனுமான வ்ருகோதரன் ஸுசர்மாவினிடம்சென்று அவ னுடைய குதிரைகளை (அடித்து)க் கீழேதள்ளினான்; சிறந்தபாணங் களால் அவனுடைய பின்புறத்திலுள்ள இரண்டுரக்ஷகர்களையுங் கொன்று, பிறகு, கோபங்கொண்டு அவனுடையஸாரதியையும் ரத மத்தியினின்று கீழேதள்ளினான். சூரனைகவும் சக்ரரக்ஷகனைகவுமி ருக்கிற சோணஸ்வனென்பவன் ரதத்தையிழந்தவனை த்ரிகர்த்த ராஜனைக்கண்டு அப்பொழுதுபயத்தினால் அவனைவிட்டு விலகினான். பிறகு, பலசாலியானவிராடன் ஸுசர்மாவினுடையரதத்தினின்று துள்ளிக்குதித்து அவனுடைய கதாயுதத்தை எடுத்துக்கொண்டு அவனையே அடித்தான். கதாயுதத்தைக் கையில்கொண்டவனை அவன் பிராயமுதிர்ந்தவனாயிருந்தாலும் தருணன்போல ஸஞ்சரித் தான். பயங்கரமான உருவமும் வீர்யமுமுள்ள பீமனை (தன்) தேரினின்று துள்ளி வேகமாய்ச்சென்று அவனுடைய தேரில் குதித்து, மறுபடியும் மனத்தேறுதலடைந்து யுத்தம்செய்கிற ஸுசர்மாவினுடைய தலையை, ஸிம்மமானது மலையின் உச்சியிலி ருந்துகுதித்துச் சிறிய ம்ருகத்தைப்பிடிப்பதுபோலவும் பூனையா-

னது கோபத்தோடு மேலேபாய்ந்து எலியினுடைய தலையைப் பிடிப்பதுபோலவும் பிடித்துக்கொண்டான். சிறந்தகைகளுள்ள பீமன் கோபத்தினால் அவனைத்தூக்கிப் பூமியில்தேய்த்து, அலறுகின்ற அவனுடைய தலையில் நன்றாக அடித்தான். பீமன், அவன் மீது முழங்காலை வைத்து அவனை முஷ்டியினால்குத்தினன். அந்த த்ரிகர்த்தராஜன், பலத்தஅடியினால் துன்பமுற்று மயக்கமடைந் தான். த்ரிகர்த்தர்களுள் மஹாரதனை அந்தவீரன் பிடிபட்ட வுடன், த்ரிகர்த்தர்களுடைய ஸைன்யமுழுவதும் பயத்தால் துன் பமடைந்து தோல்வியுற்றது. பிறகு, மஹாரதர்களும் தம்முடைய தோள்வலிமையை ஆதாரமாக கொண்டவர்களும் (அகார்யத்தில்) வெட்கமுடையவர்களும் உத்தமமான வ்ரதமுள்ளவர்களும் மஹாத்மாக்களும் விராடனுடைய துன்பத்தைத்தீர்த்தவர்களு மான அந்தப்பாண்டுபுத்ரர்களனைவர்களும் எல்லாப்பசுக்களையும் திருப்பிக்கொண்டு ஸுசர்மாவைஜயித்து (அவனுடைய) தனத் தையும் முற்றும் எடுத்துக்கொண்டு (அரசனுக்கு) முன்னிலையில் வந்து நின்றார்கள்.

பிறகு, பீமன், 'தீயொழுக்கமுள்ள இந்தஸுசர்மாவானவன் என்னிடத்தினின்று உயிர்பிழைப்பதற்குத் தகுந்தவனல்லன். அரசர் எப்பொழுதும் தயையுள்ளவராக இருப்பதால் என்னால் யாதுசெய்யத்தக்கது?' என்றுசொன்னன். குந்தீபுத்ரனை வ்ருகோதரன், தனக்குவசப்பட்டுப் பரவசனையிருக்கிற அந்தஸு சர்மாவைக் கழுத்தில்பிடித்து அரசனிடம்கொண்டுவந்து, பிறகு, துடித்துக்கொண்டிருக்கின்ற அவனைக்கட்டி, ப்ரஜ்ஞைகெயிழந்த வனும் புழுதிபடர்ந்தவனுமான அவனைத் தேரிலேற்றிவைத்தான். பீமனை, ரணகளத்தின் மத்தியிலிருக்கிற யுதிஷ்டிரரைவந்தடை ந்து ராஜாவானஸுசர்மாவை (அவருக்குக்) காண்பித்தான். புரு ஷரிற்சிறந்த யுதிஷ்டிரமஹாராஜர், அந்தஸுசர்மாவைப்பார்த்து நகைத்து யுத்தத்தில்விளங்குகின்ற பீமனைப்பார்த்து, '(வலல!) இந்தநராதமனை நீ விட்டுவிடு' என்று கட்டளையிட்டார். இவ் வாறுசொல்லப்பட்டபீமன், மஹாபலசாலியான ஸுசர்மாவைப் பார்த்து, 'ஏ! மூட! உனக்குப்பிழைத்திருக்க விருப்பமிருக்கு மானால், சொல்லுகின்ற என்னிடமிருந்து அதன்காரணத்தைக் கேள். வீரர்கள்கூட்டங்களிலும் ஸபைகளிலும், 'நான் (உமக்கு) அடிமையாயிருக்கிறேன்' என்று உன்னால் சொல்லத்தக்கது. இப் படிச்சொன்னால் நான் உனக்கு உயிரைக்கொடுப்பேன். இதுயுத்தத் தில் ஜயம்பெற்றவனால் அனுஷ்டிக்கத்தக்க முறை' என்று சொன் னன். பிறகு, தமையனரான யுதிஷ்டிரர், அந்தப்பீமனைப்பார்த்து, 'உனக்கு நாம் ப்ரமாணமாயிருப்போமாகில் இழிவான நடக்கை

யுடையவனென இந்த ஸுசர்மாவை விட்டுவிடு ; விட்டுவிடு. இவன் விராடராஜனுக்கு அடிமையாகிவிட்டான்' என்று அன்புள்ள வார்த்தையைச் சொல்லிவிட்டு, '(ஸுசர்மாவே!) நீ விடுபட்டாய் ; தாஸனுகாமல் ஓடிப்போ. ஒருபொழுதும் இவ்விதம் செய்யாதே' என்று சொன்னர். (தர்மபுத்ரர்) இவ்வாறு சொல்லியபின், ஸுசர்மாவானவன் வெட்கத்துடன் தலைகுனிந்தான். அவன், விடப்பட்டவுடன், ராஜாவை வந்தடைந்து நமஸ்காரம்செய்து புறப்பட்டான். பகைவர்களை வென்றவர்களும் தங்கள் கைவன்மைகுறையாதவர்களும் (அகார்யத்தில்) வெட்கமுடையவர்களும் வ்ரதங்களை அனுஷ்டித்தவர்களுமான அந்தப்பாண்டவர்கள் ஸுசர்மாவை விட்டுப் போர்க்களத்தினிடையில் அன்றிரவு ஸுகமாக வஸித்தார்கள்.

முப்பத்தாறுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரருடைய ஏவலால் விராடன் அனுப்பியதூதர்கள் நகரத்தில் ஜயத்தை வெளியிட்டது.)

பிறகு, விராடன், ஸந்தோஷமடைந்து, மனிதர்களுடையவல்லமையைமீறியிருக்கின்ற வல்லமையுள்ளவர்களும் மஹாரதர்களுமான குந்திபுத்ரர்களைத் தனத்திலும் வெகுமானத்திலும் நல்வார்த்தையிலும் ஸ்நேஹத்திலும் பூஜித்தான். விராடன், 'என்னுடைய ரத்னங்கள் உங்களுடையவைகளே. அந்த எல்லா ரத்னங்களாலும் (உங்களுடைய) இஷ்டப்படி காரியங்களை இனிது செய்துகொள்ளுங்கள். பகைவர்களை நாசஞ்செய்பவர்களே! அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற கன்னிகைகளையும் பலவிதமான தனங்களையும் மற்றும் மனத்திலல் விரும்பப்பட்டவைகளையும் உங்களுக்குக் கொடுக்கிறேன். உங்களுடைய வல்லமையினல் இப்பொழுது இவ்விடத்தில் நான் க்ஷேமமாக விடுவிக்கப்பட்டேன். ஆதலால், நீங்களெல்லாருமே மத்ஸ்யதேசத்துக்கு அரசர்கள்' என்று கூறினன். அந்த ஸமயத்தில் அவ்விதம் சொல்லிய அந்த விராடனைநோக்கி, குருகுலத்தில் உதித்தவர்களும் யுதிஷ்டிரரை முதன்மையாகக்கொண்டவர்களுமான பாண்டவர்கள் மிகக்களித்தமனத்துடன் தனித்தனியாக (ப்பின்வருமாறு) உரைக்கலானர்கள். 'ராஜரே! எல்லாவிதத்திலும் (உம்முடைய) வார்த்தையை (நாங்கள்) கொண்டாடுகிறோம். நீர் பகைவர்களால் விடப்பட்டீரென்னும் இவ்வளவிலேயே (நாங்கள்) இப்பொழுது ப்ரீதியுள்ள

வர்களாகிறோம். நீர் பகைவரிடமிருந்து விடுபட்டீரென்னும் இந்தக் கார்யமன்றோ எங்களுக்கு ஹிதமானது. எங்களுக்கு வேறொரு கார்யமுமில்லை. (நாங்கள்) தனத்தைத் தேடவில்லை' என்றனர். பிறகு, சிறப்புற்ற கைகளுள்ளவனும் அரசரிற்சிறந்தவனும் மத்ஸ்ய தேசத்து ராஜாவுமான விராடன், மனக்களிப்புற்றவனும் அன்பின்பெருக்கால் நிறைந்தவனும் ஸ்ந்தோஷத்தால் தழுதழுத்த வாக்குள்ளவனுமாகி யுதிஷ்டிரரைப்பார்த்து மறுபடியும் கூறலானன். 'பகைவர்களை அழிப்பவரே! இங்கு வாரும். உமக்கு நான் பட்டாபிஷேகம் செய்விக்கிறேன். நீர் நம்முடைய மத்ஸ்யதேசத்துக்கு அரசர். நீர் மனத்தினல் விரும்புகிறதையும் நான் உமக்குக் கொடுப்பேன். நீர் எங்களுடைய எல்லாவற்றையும் அடைவதற்குத் தகுந்தவராயிருக்கிறீர். வ்யாக்ரபாதருடைய கோத்திரத்தில் உதித்தவரே! ப்ராம்மணரே! ரத்னங்களையும் பசுக்களையும் ஸ்வர்ணத்தையும் மணிகளையும் முத்துக்களையும் நான் உமக்குக் கொடுக்கிறேன். எல்லாவிதத்தினலும் உமக்கு வந்தனம். என்னுடைய ராஜ்யத்தையும் உடலையும் இப்பொழுது உமக்காகவென்றே நான் எண்ணுகிறேன். நமக்குக் கோபத்தை உண்டாக்கிய பகைவனும் வசப்பட்டுவிட்டான்' என்றான். பிறகு, யுதிஷ்டிரர், மறுபடியும் மத்ஸ்யராஜனைப்பார்த்து, 'ஓ! மத்ஸ்யதேசத்து வேந்தரே! உம்மால் சொல்லப்பட்டிருக்கின்ற இனியவார்த்தையைப்பற்றி நான் ஸந்தோஷிக்கிறேன். நீர் எப்பொழுதும் மெல்லிய தன்மையுடையவர்; எப்பொழுதும் ஸுமுகர்' என்று சொன்னர். விராடராஜனும், மறுபடியும் கங்கரைப்பார்த்து, 'ஓ! ப்ராம்மணரே! சூத்ரனை வலலனுடைய செய்கைகள் ஆச்சர்யகரமாயிருக்கின்றன. யுத்தத்தில் நான் சூத்ரனை வலலனல் ரக்ஷிக்கப்பட்டேன். அந்தோ! குற்றமற்றவரே! உம் நிமித்தமாகவே இவை அனைத்தும் என்னல் அடையப்பட்டன. வேண்டும் வரத்தைப் பெற்றுக்கொள்ளும். உமக்கு மங்களம். உமக்கு நான் எதைச் செய்யக்கடவேன்? சொல்லும். நான் அதிகப் ப்ரீதியினல் உமக்குப் பலவிதமான ரத்னங்களையும் சயனங்களையும் ஆஸனங்களையும் வாஹனங்களையும் நன்றாக அலங்கரிக்கப்பட்ட கன்னிகைகளையும் யானைக்கூட்டங்களையும் குதிரைக்கூட்டங்களையும் ரதக்கூட்டங்களையும் பற்பல தேசங்களையும் கொடுக்கிறேன். என்னிடமிருந்து இவைகளை என்னிடமுள்ள அன்பினல் நீர் பெற்றுக்கொள்ளும்' என்றுசொன்னன். அவ்வாறுசொல்லுகின்ற அவனைப்பார்த்து, அந்தஸமயத்தில், குருகுலத்தில் உதித்தவரானயுதிஷ்டிரர், 'ஓ! பகைவரை வாட்டுபவரே! நீர் பகைவர்களால் விடப்பட்டீரென்னும் இதுவே எனக்கு ப்ரீதி.

ப்ரவிஸ்தரான நீர் ஸங்தோஷமுள்ளவராயிருப்பீராஞல், இப் பொழுது பட்டணத்தில் ப்ரவேசித்து மனவிமக்களோடும் சேர்க் கைபெறும். அஃதன்றே எனக்கு நிகரில்லாத ப்ரீதி ராஜேந் த்ரரே! வேலைக்காரர்களோடும் ஸைந்யத்தோடும் வாஹனங் களோடும்கூடினவனும் மனிதரிற் சிறந்தவனுமான ஸுசர்மாவை விட்டுவிடும். இதைத்தான் நான் வரமாக வரிக்கிறேன்' என்று மறுமொழிகூறினர். இவ்வாறு கங்கர் சொல்லியவுடன், வேந்த ரிற்சிறந்த விராடன், பிறகு கங்கரைப்பார்த்து, 'ஸுசர்மா இஷ் டப்படி போகட்டும்' என்று கூறினன். கங்கர், 'ராஜரே! ஸுஹ்ருத்துக்களுக்கு ப்ரியத்தைச் சொல்வதற்காகத் தூதர்கள் விரைவாக உம்முடைய நகரத்தை அடையட்டும்; உம்முடைய ஜயத்தை ப்ரஸித்தப்படுத்தட்டும்' என்று சொன்னர். பிறகு, மத்ஸ்யதேசாதிபதியான விராடராஜன், அவருடைய வார்த்தை யிஞல், தூதர்களைப்பார்த்து, '(தூதர்களே!) நீங்கள் பட்ட ணத்தை அடைந்து யுத்தத்தில் எனக்கு நேர்ந்திருக்கின்ற விஜயத் தைச் சொல்லுங்கள். கன்னிகைகள் நன்றாக அலங்கரித்துக் கொண்டு என்னுடைய பட்டணத்திலிருந்து எதிராக வரட்டும். எல்லாவாத்யங்களும் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருக்கிற தாஸி களும் நகரத்திலுள்ள எல்லாஜனங்களும் சீக்ரமாக எனக்கு எதி ரில்வரட்டும்' என்று ஆஜ்ஞாபித்தான். இவ்வாறு சொல்லப் பட்டவர்களும் விரைவாகச் செல்லுகின்றவர்களுமான அந்தத் தூதர்கள், நடுவழியில் தங்காமல் இரவிலேயே வழிநடந்து நன் றாக ஸூர்யோதயமாகும் ஸமயத்தில் (விராட) நகரத்தில் புகுந் தார்கள். தூதர்கள் விராடநகரத்தில் விரைவாக ப்ரவேசித்து, அந்தநகரமானது தூக்கிக்கட்டப்பட்ட கொடிகளாலும் மாலை களாலும் நிரம்பினதும் நிகரில்லாததுமாகும்படி (அரசனுடைய) மங்களகரமான விஜயத்தைக் கோஷித்தார்கள்.

முப்பத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் பீஷ்மர் முதலியோருடன் விராடநகரத்தின் வடபா கத்தில் பசுக்களைப்பிடித்ததும், பசுக்காப்போன் ஒருவன் உத்தரனிடத்தில் கௌரவர்கள் பசுக்களைக் கவர் கின்றனரென்று முறையிட்டதும்.)

மத்ஸ்யதேசாதிபதியான விராடன் அந்தப்பசுக்களை மீட்க எண்ணம்கொண்டு த்ரிகர்த்தர்களை நோக்கி (யுத்தத்துக்காகச்)

சென்றபொழுது, துர்யோதனன் மந்திரிகளுடன் விராடநகரத்தைக்குறித்துச் சென்றான். பீஷ்மர், த்ரோணர், கர்ணன், சிறந்த அஸ்த்ரங்களை அறிந்தவரான க்ருபர், த்ரோணருடைய குமாரரான அஸ்வத்தாமா, ஸுபலனுடைய குமாரனான சகுனி, துச்சாஸனன், சலன், விவிம்சதி, விகர்ணன், வீர்யமுள்ளவனான சித்ரஸேனன், துஸ்ஸஹன், துர்முகன் இவர்களும் மற்ற மஹாரதர்களானவர்களும் மத்ஸ்யதேசத்தை வந்தடைந்து, விராடராஜனுடைய பசுக்காப்பவர்களை ஓட்டி, விரைவாகப் பராக்ரமத்தினால் பசுக்கூட்டத்தைக் கவர்ந்தார்கள். கௌரவர்கள் லக்ஷக்கணக்கான பசுக்களைக் கைப்பற்றி நான்குபக்கத்திலும் பெரிய தேர்க்கூட்டத்தால் சூழ்ந்துகொண்டு (அவற்றை) ஓட்டினார்கள். பயங்கரமான யுத்தத்தில் அந்தமஹாரதர்களால் இடைச்சேரிகளில் கொல்லப்படுகின்ற கோபாலர்களுடைய மிகப்பெரியசப்தமானது கிளம்பியது. அப்பொழுது பசுக்களின் தலைவனே, மிகப்பயந்து விரைவாக ரதத்தின் மேலேறிப் பீடிக்கப்பட்டவனைப்போல இரைந்து அழுதுகொண்டு நகரத்திற்குச்சென்றான். பிறகு, அவன் பட்டணத்தில் நுழைந்து அரசனுடைய அரண்மனையைநோக்கிச் சென்று தேரினின்று கீழேஇறங்கி விரைவாக (பசுக்களின் வ்ருத்தாந்தத்தைச்) சொல்வதற்காக உட்புகுந்து பௌருஷமுள்ளவனான பூமிஞ்சயனென்கிற மத்ஸ்யராஜனுடைய குமாரனைப்பார்த்து அவனுக்குத் தேசத்திலுள்ள பசுக்கள் (கௌரவர்களால்) கவரப்படுவதை முற்றிலும் சொல்லத்தொடங்கினன்.

'தேசங்களைப்பெருக்குகின்றவனே! அந்தக்கௌரவர்கள் லக்ஷக்கணக்கானபசுக்களை ஓட்டிக்கொண்டுபோகிறார்கள். (அவர்களை ஜயித்துப்) பசுக்கூட்டங்களை மீட்பதற்காக எழுந்திரு. ராஜபுத்ரனே! ஹிதத்தைப்பெற விருப்பமுள்ள நீ நேரில் சீக்ரம் புறப்படு. மத்ஸ்யராஜர் உன்னை இப்பொழுது தாமில்லாதபட்டணத்துக்கு ரக்ஷகனாகவன்றோ ஏற்படுத்தினர்? அந்த அரசர், உன்னையைபயின் மத்தியில், 'என்புத்ரன் எனக்குத் தகுந்தவன்; சூரன்; என்குலத்தை அபிவ்ருத்தியடையச்செய்பவன்; பாணங்களிலும் அஸ்த்ரங்களிலும் ஸமர்த்தன்; நன்றாக யுத்தம்செய்பவன். என்னுடையபுத்ரன் எப்பொழுதுமே வீரன்; அப்படிப்பட்டகௌரவர்களோடு யுத்தரங்கத்தில் போர்புரிவதற்கு வல்லமையுள்ளவன்' என்று புகழுகிறார். அந்தராஜருடைய அவ்விதவார்த்தையானது உண்மையேஆகட்டும். யுத்தத்தில் ஜயம் நிச்சயம். கௌரவர்கள் நிச்சயமாக மாண்டார்கள். நீ கௌரவர்களைஜயித்துப் பசுபதிபோலப் பசுக்களைத்திருப்பு. பயங்கரமான பாணத்தினுடைய

ஒளியிலுல் இவர்களுடைய ஸைந்யங்களைக் கொளுத்து. நீ வில்லினின்று விடுபட்டவைகளும் தங்கமயமான கட்டுக்களுள்ளவைகளும் விசித்ரமானவைகளும் ஆழ்ந்திருக்கின்ற கணுக்களுள்ளவைகளுமான பாணங்களால் பகைவர்களுடைய படைகளை, தலைமையானயானை மற்றயானைகளைப் பிளப்பதுபோலப் பிளந்துவிடு. நாண்கயிற்றின் இருபக்கத்திலும் கட்டப்பட்டிருக்கிற இரண்டு கயிறுகளாகிற [1] உபதானங்களுள்ளதும் நாண்கயிறுகிற தந்தியுள்ளதும் விற்கழியாகிற தண்டத்துடன்கூடியதும் அதிகமாக ஒலிக்கின்றதும் அம்புகளாகிற அக்ஷரங்களுடன்கூடினதுமான வில்லாகிற வீணையைச் சத்ருக்களுடைய மத்தியில் நீ வாசிப்பாயாக. நகரத்திலிருந்து சீக்ரம் வெளியில் புறப்படு. ராஜபுத்ர! என் சும்மா இருக்கிறாய்? வெண்ணிறமுள்ளவைகளும் ஸ்வர்ணமயமான கவசங்களுள்ளவைகளுமான உன்னுடைய குதிரைகள் ரதத்தில்பூட்டப்படலாம். ப்ரபுவே! அவ்வாறே, ஸ்வர்ணமயமான ஸிம்மக்கொடியை நீ தூக்கிக்கட்டு. ஸ்வர்ணமயமான கணுக்களுள்ளவைகளும் கூர்மையான முனையுடையவைகளும் கைப்பழக்கமுள்ள உன்னால் விடப்பட்டவைகளும் ராஜாக்களுடைய ஆயுளை அபஹரிக்கின்றவைகளுமான அம்புகள் ஸவ்யஸாசியை மறைக்கட்டும். நீ வஜ்ரபாணியான இந்த்ரன் அஸுரர்களை ஜயிப்பதுபோல எல்லாக் கௌரவர்களையும் யுத்தத்தில் ஜயித்துப் பரிதான புகழ்ச்சியைப் பெற்று மீண்டும் இந்தப்பட்டணத்தில் ப்ரவேசிப்பாயாக. மத்ஸ்ய ராஜருக்குப்புத்ரனாகிய நீயல்லவோ தேசத்துக்கு முக்யமானவன்? தேசவாஸிகளான ஜனங்கள் எல்லாரும் இப்பொழுது கதியுள்ளவர்களாகட்டும். ஜயசாலிகளுள் சிறந்தவனான அர்ஜுனன் பாண்டுபுத்ரர்களுக்குக் கதியாயிருப்பதுபோலவே, நீ தேசத்தில் வஸிக்கின்ற ஜனங்களுக்குக் கதியென்பது நிச்சயம்' என்று கூறினன்.

முப்பத்தேட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(ஸாதியில்லாமல் வருந்திய உத்தரனுக்கு ப்ருஹன்னளா ஸாதியானதும், உத்தரன் யுத்தத்திற்குப் புறப்பட்டதும்.)

பசுக்களுக்குத்தலைவன், அப்பொழுது, மஹாஜனங்களுக்கு எதிரிலும் மேலும் ஸ்த்ரீகளுடையமத்தியிலும் விராடபுத்ரனுக்கு நன்றாகச்சொல்லினன். அந்த இடையனுல் ஸ்த்ரீகளுடையமத்தி

---

1 வீணையில் இருபக்கத்திலும் தந்தியைக் கட்டுவதற்குள்ள இரண்டு முளைகள்.

யில் தைர்யத்தைதவ்ருத்திபண்ணக்கூடிய வாக்கியத்தைச் சொல்லக் கேட்ட அந்த உத்தரன், அந்தப்புரத்தில் தன்னைப்புகழ்ந்து கொண்டு, பின்வரும்வசனத்தை வெளியிடலானன். 'குதிரைகளை ஓட்டுவதில் ஸமர்த்தனன ஒருஸாரதி எனக்கு இருப்பானுனல் உறுதியுள்ளவில்லையேந்தி நான் இப்பொழுது பசுக்களிருக்கும் இடத்தைப் பின்தொடர்வேன். எனக்குத் தகுந்தஸாரதியையே நான் அறியவில்லை. (போர்புரிவதற்குப்) புறப்படுகின்ற எனக் குத் தகுந்தஸாரதியை விரைவாகப் பாருங்கள். சற்றேறக்குறைய இருபத்தெட்டுநாள் அல்லது ஒருமாஸம் நிச்சயமாகநடந்த மஹா யுத்தத்தில் என்னுடைய ஸாரதிகொல்லப்பட்டான். யுத்தத்தில் எனக்குத்தகுந்தஸாரதியை நான் அடைவேனுகில், இப்பொழுது, எடுத்துநிறுத்தப்பட்டி-ருக்கின்ற பெரிய கொடியுள்ளவனுகி விரை வில் (யுத்தத்துக்குச்) செல்வேன். யானைகளாலும் குதிரைகளா லும் தேர்களாலும் நிறைந்த அந்தப்பகைவர்களின் படையில் நுழைந்து, ஸஸ்த்ரங்களுடைய ப்ரதாபத்தினுல் வீர்யமற்றவர் களான கௌரவர்களைஜயித்து, பசுக்களை மீட்டுக்கொண்டுவரு வேன். ஒன்றுசேர்ந்தவர்களும் சிறந்த வில்லாளிகளுமான துர் யோதனனையும் விகர்ணனையும் [1] வைகர்த்தனனை கர்ணனையும் க்ருபரையும் த்ரோணரையும் அவர் புத்ரரையும், இந்த்ரன் அஸு ரர்களை ஓட்டுவதுபோல யுத்தத்தில் ஓடும்படிசெய்து இந்த முஹூர்த்தத்திலேயே பசுக்களை மறுபடியும் மீட்டுக்கொண்டுவரு வேன். கௌரவர்கள், (இந்தப்பட்டணத்தில்) ஒருவரும் இல்லை யென்றறிந்து பசுக்கூட்டத்தைக்கைப்பற்றிச் செல்லுகின்றார்கள். நான் அவ்விடத்தில் இல்லாமலிருப்பதால் எதுதான் அவர்களால் செய்யமுடியாது? ஒருங்குகூடிய அந்தக்கௌரவர்கள் என்னுடைய வீர்யத்தை இப்பொழுதுபார்க்கட்டும். பகைவர்கள், என்னை, 'இவன் நேரில்வந்திருக்கின்ற குந்திபுத்ரனை அர்ஜுனனே' என்று எண் ணப்போகிறார்கள்' என்றான். ஸ்திரீகளுடையமத்தியில் தற்புகழ்ச் சியை ப்ரதானமாகக்கொண்ட தன்னை 'பீபத்ஸு என்று எண்ணு வார்கள்' என்கிற உத்தரனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, பாஞ்சாலியானவள் பொறுக்கவில்லை. எல்லா விஷயங்களையும் அறிந்தவனன அர்ஜுனன், உத்தரன் சொல்லிய அந்தவசனத் தைக்கேட்டு, அந்தஸமயம்போன பிறகு, ஒருஸமயத்தில், த்ருபத ராஜனுடைய புத்ரியும் ரூபத்தினுல் (எல்லாராலும்) கொண்டாடப் பட்டவளும் ஸத்யமும் கபடமின்மையும் நற்குணங்களுமுடைய வளும் பர்த்தாவுக்கு ப்ரியத்தையும் ஹிதத்தையும் செய்வதில்

1 கவசத்தை அறுத்துக்கொடுத்தவன்.

விருப்பமுள்ளவளும் (தனக்கு) ப்ரியமான பார்யையும் பாஞ்சால ராஜகன்னிகையுமான க்ருஷ்ணையைப் பார்த்து அன்புடன் ரஹஸ்யத்தில் (பின்வருமாறு) கூறலானன். 'நிர்மலமான புன்னகையுள்ளவளே! பாஞ்சாலி! நீ விரைவாக உத்தரையிடம் சென்று, 'இந்த ப்ருஹன்னளையானவள், ஸவ்யஸாசி என்று பெயர் பெற்றவனும் பாண்டுபுத்ரனுமான அர்ஜுனனுக்கு முன்பு காண்டவனநிமித்தமான சண்டையில் ஸாரதியாயிருந்தாளாம். அந்த ப்ருஹன்னளை ஸாரதியாக ஏற்படுவாளானால் யுத்தத்தில் பெரிதான ஜயமுண்டாகும்' என்றுசொல்' என்று கூறினன். அப்பொழுது, அந்த அர்ஜுனனால் தூண்டப்பட்டவளும் சுத்தமான சிரிப்புள்ளவளும் தாமரைமலர்போன்ற கண்களையுடையவளும் பாஞ்சாலராஜகுமாரியுமான அந்த க்ருஷ்ணையானவள், அப்பொழுது உத்தரையினுடைய வாஸஸ்தானத்துக்கு வந்து, தர்மத்தையே ப்ரதானமாகக் கொண்டவரும் ஸத்யத்திலும் நேரானவழியிலும் நிலைபெற்றவருமான யுதிஷ்டிரர் ராகுவினுடைய முகத்தினின்று விடுபட்டசந்த்ரனைப்போல (அந்த) ப்ரதிஜ்ஞையினின்று விடுபட்டாரென்று தெரிந்துகொண்டு, தோழிகளுடைய மத்தியில் அழகியவளான உத்தரையைப் பார்த்து, மிக்க துக்கத்தைப் பொறுதவளாகிப் (பின்வருமாறு) வசனிக்கலானாள்.

'(ஓ! ராஜகுமாரி!) கஜயூதபதிக்கொப்பானவளும் யௌவனமுள்ளவளும் தன்னை ப்ருஹன்னளையென்று சொல்லிக்கொள்ளுகிறவளுமான இந்த ப்ருஹன்னளை, வில்லாளிகளுள் உத்தமனனபார்த்தனுக்கு முற்காலத்தில் அந்த (க்காண்டவவனநிமித்தம்சண்டைநேர்ந்த) ஸமயத்தில் ஸாரதியாயிருந்தாளென்று நான் எண்ணுகிறேன். இந்த ஸாரதியினலேயே, வீர்யமுடையவனன அந்த அர்ஜுனன், அப்பொழுது தேவர்களையும் கந்தர்வர்களையும் பெரிய அஸுரர்களையும் ஸர்ப்பங்களையும் (மற்ற) எல்லா ப்ராணிகளையும் ஜயித்து அக்நிக்கு த்ருப்தியை உண்டுபண்ணினன். அவனுடைய யுத்தத்தில் இவளுடைய நிலைமையையும் சத்ருவீரர்களுடைய மத்தியில் எற்பட்ட (இவளுடைய) வீர்யத்தையும் நான் அறிவேன். வீர்யமுடையவளான இவள், அந்த அர்ஜுனனுடைய தேரின் மீதிருந்து கடிவாளங்களையும் பிடித்து வில்லையும்எடுத்துக்கொண்டு (யுத்தத்துக்காகச்) சென்றாள். (இப்படிப்பட்ட) ப்ருஹன்னளையானவள் உத்தரனுக்கு ஸாரதியாயிருப்பாளாயின் எல்லாப்ராணிகளும் தேவர்களும் அஸுரர்களும் வில்லாளிகளான எல்லாக்கௌரவர்களும் ஒன்று சேர்ந்தாலுங்கூட உன்னுடைய பசுக்கூட்டத்தை ஒருபோதும் அபஹரிப்பதற்குச் சக்தியுள்ளவர்களாகார்கள். பாண்டவர்களுடைய அரண்மனையில் ஸஞ்சரித்த நான்,

மஹாத்மாவான அந்த அர்ஜுனனுக்கு வில்வித்தையில் சிறந்த சிஷ்யையாகவுமிருந்த இவளை முன்பு நன்றுகப்பார்த்திருக்கிறேன். அந்த அர்ஜுனனும் முன்பு இவளுடைய உதவியினல் காண்டவ வனத்தையும் எரித்தான். அப்பொழுது அர்ஜுனனுடைய சிறந்த குதிரைகள் இவளால் (கடிவாளம்) பிடித்து நடத்தப்பட்டன. பார்த்தன் இந்தஸாரதியினல் எல்லாப்ராணிகளையும் இந்த்ரப்ரஸ்தத்தில் எல்லாவிதத்தினலும் ஜயித்தான். இப்படிப்பட்ட ஸாரதி (எங்கும்) இல்லை' என்றுள். பிறகு, உத்தரையானவள், ஸைரந்த்ரியுடன் ஸஹோதரனுடைய (ஸமீபத்தை வந்தடைந்து,) 'வீரா! ஸாரத்யம் செய்வதில் இந்தப்ருஹன்னளையை நீ விரைவாக வேண்டிக்கொள். இவள் ஸாரத்யம் செய்வதிலும் நர்த்தனம் செய்வதிலும் பாடுவதிலும் வாத்யம் வாசிப்பதிலும் பயிற்சி அடைந்திருக்கிறுள். பெரிய அறிவுள்ளவளான ஸைரந்த்ரியானவள் ப்ருஹன்னளையை (இவ்வாறு) புகழ்ந்து கூறுகிறுள்' என்று சொல்ல, உத்தரன், 'எ! ஸைரந்த்ரி! என்னுடைய வ்ரதத்தை நீ அறிகிறுயன்றே? நான் நபும்ஸகனுக இருக்கும் மனிதனைடு பேசமாட்டேன். கல்யாணி! அவ்விதமான நான் ப்ருஹன்னளையைப் பார்த்து, 'நீ என்னுடைய குதிரைகளை நடத்து' என்று நேரில் சொல்வதற்குச் சக்தியற்றவனுயிருக்கிறேன்' என்று மறுமொழி சொன்னன். ஸைரந்த்ரி, '(ராஜபுத்ர!) பயம் நேர்ந்திருக்குங் காலத்தில் வ்ரதமும் வ்ரதமில்லாமையுமில்லை. கற்றறிந்தவன் துக்கத்தைத் தாண்டத்தகுந்த கார்யத்தைச் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். இவ்வாறு, தர்மத்தை அறிந்தவர்கள் சொல்லுகின்றுர்கள். ஆதலால், ப்ருஹன்னளை (உன்னல்) சொல்லத்தக்கவள். ஓ! வீர! அழகியஇடையுள்ளவளும் இளமைப்பருவத்திலிருக்கின்றவளுமான உன்னுடைய இந்த இளைய ஸஹோதரியினுடைய வார்த்தைப்படி ப்ருஹன்னளை செய்வாள்; ஸம்சயமில்லை. உனக்கு அவள் ஸாரதியாயிருப்பாளாகில் நீ கௌரவர்களனைவர்களையும் ஜயித்து நிச்சயமாகப் பசுக்களையும் மீட்டுக்கொண்டுவருவாய்; ஸம்சயமில்லை' என்று கூறினுள். ஸைரந்த்ரி இவ்வாறு உரைக்கக் கேட்ட அந்த உத்தரன், ஸஹோதரியைப்பார்த்து, 'தோஷமற்ற அங்கங்களுள்ளவளே! நீ போ; அந்த ப்ருஹன்னளையை அழைத்துவா' என்றுன். பொன்மாலைகளை அணிந்தவளும் புகழ் பெற்றவளும் அழகிய புருவங்களுள்ளவளும் மங்களகரமான முகத்தையுடையவளும் ஸ்வர்ணத்தினலும் வஜ்ரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும் தமையனல் ஏவப்பட்டவளுமான அந்த உத்தரையானவள் ஸஹோதரனுடைய ஆஜ்ஞையைக் கேட்டு விரைவாக ஓடினுள். ப்ராதாவினல் கட்டளையிடப்பட்டவளும்

வஜ்ரங்களாலும் முத்துக்களாலும் மணிகளாலும் ஸ்வர்ணத்தாலும் இழைக்கப்பட்ட குண்டலங்களையுடையவளும் ம்ருதுவாக அடிவைத்து நடப்பவளும் வலமாகச் சுழன்றிருக்கின்ற மயிர்ச்சுழிகளோடுகூடின சரீரமுள்ளவளும் மயில்தோகையால் அலங்கரிக்கப்பட்டவளும் தாமரைமலர்போன்ற முகமும் தாமரையிதழ்போல அகன்ற கண்களும் மெலிந்ததேகமும் ஸமமான அங்கங்களும் ம்ருதுவாயும் கம்பீரமாயுமிருக்கின்ற பார்வையும் விலாஸங்களும் வளைந்த. இமைமயிர்களுமுள்ளவளுமான அந்த மத்ஸ்யராஜகுமாரியானவள், மின்னலானது மேகத்தை அடைவதுபோல நடனசாலையை வந்தடைந்தாள். யானைத்துதிக்கைபோல இளைந்த தொடைகளுடையவளும் தோஷமற்றவளும் 1 வேதிபோல மெலிந்த இடையுள்ளவளும் சிறந்த மாலைகளை அணிந்தவளும் சுபத்தைச்செய்பவளுமான அந்த உத்தரையானவள், ஒருபெண்யானையானது ஓர் ஆண்யானையை அடைவதுபோலப் பார்த்தனை அடைந்து நின்றாள். (தன்னருகில்) வந்தவளும் நீண்டும் சிவந்துமிருக்கின்ற கண்களுள்ளவளுமான அந்த உத்தரையைப்பார்த்து, பார்த்தன், 'அழகியசரீரமுள்ளவளே! ஸ்வர்ணமாலை அணிந்தவளான நீ ஏன் இங்குவந்தாய்? அழகியபுருவமுள்ளவளே! கொஞ்சம் அவஸரப்படுகிறாய். ஸுந்தரீ! ஏன் உன்முகம் தெளிவில்லாமலிருக்கிறது? அழகிய சிரிப்புள்ளவளே! சீக்ரமாக எனக்குச்சொல்' என்று வினவினன். வஜ்ரங்களாலும் வைடூர்யங்களாலும் செய்யப்பட்ட குண்டலங்களுள்ளவளும் மலர்ந்ததாமரைகருநெய்தல் இவைகளுடைய இதழ்களின்வாஸனை போன்றவாஸனையுடையவளும் நன்குப்ரகாசிக்கின்ற சந்த்ரனுக்குஒப்பானமுகமுள்ளவளுமான அந்த ராஜகுமாரியானவள் பார்த்தனைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினள்.

'ப்ருஹன்னளையே! கௌரவர்கள் என்பிதாவினுடைய தனத்தையும் லக்ஷும்பசுக்களையும் கவர்ந்து கொண்டுபோகின்றார்கள். நீ என் ஸோதரனுடைய குதிரைகளை நடத்து. பகைவர்கள் பசுக்களை வெகுதூரம்கொண்டுபோகின்றார்கள். ப்ருஹன்னளையே! ஸைரந்த்ரியானவள், ரதத்தில்பூட்டிய குதிரைகளை நடத்தும் விஷயத்தில் மிக்க பழக்கமுள்ளவளென்று உன்னைச்சொல்லுகிறாள். அப்படிப்பட்டஸாரத்யத்தில் என்னால் வரிக்கப்பட்டநீ போகாயாகில் நான் பிராணனைவிட்டுவிடுவேன். இவ்விஷயத்தில் எனக்கு ஸம்சயமில்லை' என்றுகூறினள். ராஜபுத்ரியினால் அவ்

---

1 நடுக்குறுகிய ஒருவகையான மேடை; 'இடைகுறுகிய ஒருவகைக்குளவி' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்புக்களின் கருத்து.

வாறு ஏவப்பட்டவனும் அன்புநிறைந்த மனமுள்ளவனும் புருஷ
ரிற்சிறந்தவனும் குந்தியினுடையகுமாரனுமாகிய தனஞ்சயன்,
அழகிய முகமுள்ளவளும் வெண்ணிறமுள்ள பற்களையுடையவளும்
சுத்தமான புன்சிரிப்புள்ளவளுமான உத்தரையைப் பார்த்து,
'அழகிய மந்தஹாஸமுள்ளவளே! நீ விரும்புமிடத்திற்கு நான்
செல்வேன். நன்முகஜ்வலிக்கின்ற நெருப்பில் நான் பிரவேசிக்க
வேண்டுமானாலும் செய்வேன். சிறந்தசரீரமுள்ளவளே! நீ பிழைத்
திருக்கவேண்டுமென்பதை நான் விரும்புகிறேன். ஓ! ஸுந்தரீ!
இப்பொழுது நான் உனக்கு எந்தப்ரியத்தைச்செய்யவேண்டும்?
அன்புள்ளவளே! என்நிமித்தமாக நீ மஹாபயங்கரமான் யம
னுடைய வைவஸ்வதபட்டணத்தைப் பார்க்கவேண்டாம்' என்று
மங்களகரமும் கம்பீரமுமான வாக்கினால் மொழிந்தான். கௌரவ
வீரர்களுள் சிறந்தவனும் ப்ருஹன்னளையின்ரூபத்தினால் அலங்கரிக்
கப்பட்டமுகமுள்ளவனுமான அர்ஜுனன், விலாஸமுடையவளும்
வெண்மையான தந்தங்களுள்ளவளும் நிர்மலமான மந்தஹாஸ
முள்ளவளுமான உத்தரையைப்பார்த்துஇவ்வளவுமட்டும்சொல்லி
விட்டு விராடபுத்ரனுடைய ஸமீபத்துக்கு வந்தான். அவ்வாறு
நடந்துவருகின்றவனும் சிறந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்
பட்டவனும் அதிக காந்தியுடையவனும் கஜயூதபதிக்கொப்பான
வனும் கஜராஜனுடைய துதிக்கைபோன்ற கைகளுள்ளவனும்
தாமரைமலர்போல அகன்றகண்களும் கதவுபோன்றமார்பும்
உயர்ந்ததோள்களுமுள்ளவனும் பகைவர்களை நாசஞ்செய்கின்ற
வனும் மஹாபலசாலியும் யானைபோல (எல்லாவற்றையும்) அழிப்
பவனுமான அந்தப்பார்த்தனை விராடபுத்ரனை உத்தரன் நல்
வரவுகூறி, பிறகு, (அந்த) ப்ருஹன்னளையைப் பசுக்களிருக்கும்
இடத்தை அடைவிக்க எண்ணங்கொண்டு (அவனுடன்) ஸல்லா
பம்செய்தான். விரைந்துவருகின்றவனும் மதங்கொண்ட யானை
போன்றவனுமான அந்த அர்ஜுனனை அகன்றகண்களையுடையவ
ளான உத்தரையானவள் ஆண்யானையைப் பெண்யானை பின்
தொடர்வதுபோலப் பின்தொடர்ந்தாள்.

ராஜபுத்ரன், தூரத்திலிருந்தே பார்த்து, '(ஓ! ப்ருஹன்ன
ளையே!) பார்த்தன், ஸாரதியான உன்னால் காண்டவவனத்தில்
அக்னியை த்ருப்தியடைவித்தானும். குந்திபுத்ரனதனஞ்சயன்
பூமியனைத்தையும் (உன்னுடைய உதவியால்) ஜயித்தானும்.
ஸைரந்த்ரியானவள் இவ்வாறு என்னிடத்தில் உன்னைப்பற்றிச்
சொன்னாள். அவள் பாண்டவர்களை அறிந்திருக்கிறாளாம். வீர
னும் ப்ரஸித்தமானவன்மையுள்ளவனுமான மாதலியானவன்

தேவேந்த்ரனுக்கு ஸாரதி; பரசுராமருக்கு ஸுமஹான் ஸாரதி; தாருகன் (க்ருஷ்ணவதாரம் செய்த) விஷ்ணுவுக்கு ஸாரதி; ஸுமந்த்ரர் தசரதபுத்ரரான ஸ்ரீராகவருக்கு ஸாரதி; அவ்வாறே, அருணன் ஸூர்யனுக்கு ஸாரதி; (இவ்வாறு) ஸாரத்யத்தில் ப்ரஸித்திபெற்றவர்களான எல்லாரும் ப்ருஹன்னளைக்கு ஒப்பானவர்களல்லர்' என்று ஸைரந்த்ரி எனக்குச் சொன்னுள். ஆதலால், உன்னை அழைக்கிறேன். ப்ருஹன்னளையே! அழைக்கப்பட்டவளான நீ என்னுடன் சேர்ந்து யுத்தத்துக்காகப் புறப்படு. பசுக்கள் கௌரவர்களால் கவரப்பட்டு வெகுதூரத்தில் செல்லுகின்றன' என்றுன். அவ்வாறு சொல்லக்கேட்ட ப்ருஹன்னளையானவள், ராஜபுத்ரனைப்பார்த்து, '(ஓ! ராஜகுமார!) யுத்தமுனையில் ஸாரத்யம் செய்வதற்கு எனக்கு வல்லமைஎது? நாட்டியமாடுவேன்; பாட்டைப்பாடுவேன்; பற்பலவிதமான வாத்யங்களையும் வாசிப்பேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். எனக்கு ஸாரத்யம்செய்வதில் வல்லமையில்லை' என்று மறுமொழி கூறினுள். உத்தரன், '(ப்ருஹன்னளையே!) நீ ஆடுகிறவளாகவாவது பாடுகிறவளாகவாவது இரு. நீ ஒளிபொருந்தினகவசத்தை விரைவாக அணிந்துகொள். இப்பொழுது என்னிடம் உன்னுடையசெய்கையையும் வல்லமையையும் மாதர்கள் அடிக்கடி புகழ்ந்துசொல்லுகிறார்கள்' என்றுன். ராஜபுத்ரர்களுள் சிறந்தவனை உத்தரன் இவ்வாறுசொல்லிவிட்டு அப்பொழுது புன்னகைசெய்து அர்ஜுனனைக்கொண்டாடினுன். பிறகு, விராடபுத்ரனைஉத்தரன், பகைவீரர்களை அழிப்பவனை ப்ருஹன்னளையின்பொருட்டு நூறுகண்களுள்ளதும் தங்கத்தால் விசித்ரமாயிருப்பதும் ஒளிபொருந்தியதுமான கவசத்தைஎடுத்து அப்பொழுது நேரில் கொடுத்தான். அப்பொழுது, வீர்யமுடையவனை அர்ஜுனன், மத்ஸ்யராஜகுமாரனுன் உத்தரனுடைய கட்டளையால் அந்தக்கவசத்தை அணிவதற்கு விருப்பமில்லாதவன்போலப் பெற்றுக்கொண்டான். பாண்டவன் 'ஓ! ராஜபுத்ர! (எனக்கு) யுத்தத்தில் சௌர்யமுமிருந்து பகைவர்களைக் கொல்வதும் ஸாத்யமானுல், நீ செல்லுகிறவிடத்துக்கு நான் உன்னைத்தொடர்ந்துவருகிறேன்' என்றுன். பிறகு, எல்லாமறிந்தவனும் சத்ருக்களைச்சிக்ஷிப்பவனுமான அந்தப்பாண்டவன் உத்தரைக்குஎதிரில் பரிஹாஸத்திற்கிடமான அனேக கார்யங்களைச் செய்யலானுன். (கவசத்தை) வாங்கிய அந்தஅர்ஜுனனைப்பற்றி (அங்குள்ள) பெண்கள் சிரித்தார்கள். பகைவர்களை அழிப்பவனும் உத்தமவீரனுமான அர்ஜுனன் கவசத்தைத் தலைகீழாகஅணிந்துகொண்டான். பிறகு, தலைகீழாகஇருக்கிற கவசத்

தைக் குறுக்காக இருக்கும்படிசெய்து பிறகு நேராக இழுத்தான். உண்மையான வன்மையுள்ளவனும் எல்லாக்கௌரவர்களுள்ளும் உத்தமவீரனும் மிக்க வீர்யமுள்ளவனுமான ஸாரதியானதனஞ்சயன், நன்முகஅறிந்தவனாக இருந்தாலும் அறியாதவன்போலக் கவசத்தை மறுபடியும் உயரத்தூக்கி உதறிப் பூட்டிக்கொண்டான். அந்தஅர்ஜுனன் இவ்விதமான அநேககார்யங்களைச் செய்யுங்கால் (அங்குள்ள) அதிக யௌவனமதமுள்ள பெண்கள் பரிஹஸித்தார்கள். அவ்விதம் (பரிஹஸிக்கத்தக்க கார்யங்களைச்) செய்துகொண்டிருந்தாலும் பகைவர்களை அழிப்பவனான தனஞ்சயனை உத்தரன் பரிஹாஸம்செய்யவேயில்லை. ராஜபுத்ரனான உத்தரன், ஸ்வர்ணத்தால் அழகானதும் மங்களகரமானதும் அக்னியில் காய்ச்சப்பட்டதுபோல ஒளிவீசுவதும் மிக ஜ்வலிக்கின்றதும் ஆயிரம்கிரணங்களுள்ளதுமான கவசத்தை அந்த ப்ருஹன்னளைக்குத் தானே நன்முகக் கட்டிவிட்டான். பிறகு, அர்ஜுனன் நன்முகப்பார்த்துப் பொற்கவசங்களால் மூடப்பட்டிருக்கிற குதிரைகளை அந்தஉத்தரனுடைய தேரில் விரைவாகப்பூட்டினன், பொன்னாலாகியசுட்டிகளை மத்தியில்கொண்ட கழுத்துக்கயிற்றைப் பூஷணமாகக்கொண்டதும் ஸ்வர்ணமயமுமான விம்மத்தையும் ரதத்தில் எடுத்துக்கட்டினன். அவன், அந்தத்தேரின்மத்தியில் விசித்ரமான விற்களையும் அழகிய அனேக பாணங்களையும் ஆயுதங்களையும் (எடுத்து) வைத்தான். வீரனானஉத்தரன், அந்தத்தேரின்மீதேறி, ப்ருஹன்னளாஸாரதியுடன், (யுத்தத்துக்காகச்) செல்லத்தொடங்கினன். பிறகு, உத்தரையும் மற்றப்பெண்களும் தோழிகளும், அப்பொழுது, (ப்ருஹன்னளையைப்பார்த்து), 'ப்ருஹன்னளையே! யுத்தத்திற்கு வந்திருக்கின்ற பீஷ்மரையும் த்ரோணரையும் தலைவராகக்கொண்ட கௌரவர்களைஜயித்து எங்களுக்காக அழகிய வஸ்த்ரங்களையும் பாவைகளுக்காக மெல்லிய வஸ்திரங்களையும் பலவிதரத்னங்களையும் கொண்டுவா' என்று சொன்னர்கள். பிறகு, குருநந்தனனைபார்த்தன், ஒருங்குசேர்ந்து சொல்லுகின்ற அந்தக்கன்னியர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு, மேகம்போலவும் துந்துபி வாத்யம்போலவும் (கம்பீரமான கண்ட)த்வனியுடன், '(கன்னியர்களே!) இந்தஉத்தரன் யுத்தத்தில் மஹாரதர்களை ஜயிப்பானுகில் அப்பொழுது மெல்லிய வஸ்த்ரங்களையும் ஆபரணங்களையும் கொண்டுவருவேன்' என்று மறுமொழி கூறினன். பிறகு, வீரனான உத்தரன், அதிக மஹிமைபொருந்தியதும் தங்கத்தினாலும் வைடூர்யத்தினாலும் அலங்கரிக்கப்பட்டதும் மங்களகரமுமான கவசத்தை அணிந்து தனஞ்சயனை ஸாரதி

யாகக்கொண்டு உத்தமமான ரதத்திலேறிச் சென்றான். அப்பொழுது, சிறந்தரதத்தில் வீற்றிருக்கின்ற அந்தஉத்தரனையும் ப்ருஹன்னளையையும்பார்த்து மஹாஜனங்களும் ஸ்த்ரீகளும் பெண்களும் நல்லவ்ரதமுள்ள ப்ரார்ம்மணர்களும் வலமாகவந்து மங்களம் உண்டாகவேண்டுமென்று தேவதாப்ரார்த்தனையுடன், 'ப்ருஹன்னளையே! முன்பு காண்டவவனத்தை எரித்தகாலத்தில், காளை போல நடக்கிற அர்ஜுனனுக்கு உண்டானதுபோன்ற மங்களமானது, உத்தரனோடு யுத்தகளத்தில் கௌரவர்களை எதிர்க்கிற உனக்கு இப்பொழுது உண்டாகட்டும்' என்று வாழ்த்தினர்கள்.

முப்பத்தொன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் கௌரவசேனையைக் கண்டு பயந்தோட, அர்ஜுனன் அவனைத்தேற்றித் தேரிலேற்றி ஆயுதங்களையெடுத்து வருவதற்காக வன்னிமரத்தினிடம் சென்றது.)

அந்த விராடகுமாரன், பயமற்றவனைப் பட்டணத்திலிருந்து வெளிப்பட்டு, தேர்ப்பாகனைப் பார்த்து, 'அந்தக் கௌரவர்கள் சென்றிருக்கிற இடத்தைக்குறித்துப்போ. நான், (நம்மை) ஜயிக்க விரும்பி ஒன்றுசேர்ந்து வந்திருக்கின்ற எல்லாக்கௌரவர்களையும் தோல்வி அடையச்செய்து இந்தப்பசுக்களையும் சீக்கிரமாகத் திருப்பிக்கொண்டு மீண்டும் பட்டணத்துக்கு வருவேன்' என்று சொன்னான். பிறகு, பாண்டுநந்தனன் அவ்விதமான நல்ல குதிரைகளை ஓட்டினான். மனிதரிற் சிறந்தவனான தனஞ்சயனால் ஓட்டப்பட்ட வைகளும் காற்றின்வேகம்போன்ற வேகமுள்ளவைகளும் பொன் மாலைகளை அணிந்தவைகளுமான அந்தக்குதிரைகள் ஆகாயத்தை எல்லாப்பக்கத்திலும் கீறுகின்றவைகள்போல (ரதத்தை) இழுத்துச்சென்றன. பிறகு, சிறிதுதூரம் சென்று மத்ஸ்யராஜகுமாரனான உத்தரனும் தனஞ்சயனும் பயமில்லாமல் பலசாலிகளான கௌரவர்களுடைய சேனையைப் பார்த்தார்கள். சூரர்களான அவ்விருவர்களும், ஸ்மசானத்துக்கு அருகில் சென்று, கௌரவர்களையும், நான்குபக்கத்திலும் பரவியதும் கடல்போன்றதும் ஆகாயத்தில் பறக்கிறதுபோன்றதும் அனேக மரங்களால் அடர்ந்த காடுபோன்றதுமான அந்தக் கௌரவர்களுடைய பெரிய சேனையையும் கண்டார்கள். குருவம்சத்தில் உதித்தவர்களுள் உத்தமரே! செல்லுகின்ற அந்தச்சேனையினால் உண்டுபண்ணப்பட்டதும் ப்ராணிகளுடைய கண்களைக் கெடுக்கின்றதும் பூமியிலிருந்து உண்டாகின்

றதுமான புழுதியானது ஆகாயத்தை அளாவுகின்றதாகக் காணப் பட்டது. பிறகு, யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களாலும் நெருங்கியதும் கர்ணனாலும் துர்யோதனனாலும் க்ருபராலும் பீஷ்மராலும் த்ரோணராலும் பெரிதான வில்லைப் பிடித்தவரும் புத்திசாலியுமான த்ரோணபுத்ரராலும் காக்கப்பட்டதுமான அந்த (க்கௌரவ)சேனையைப்பார்த்து மயிர்க்கூச்சமடைந்தவனும் பயத்தினால் மனத்தளர்ச்சியடைந்தவனும் நடுக்கமுற்ற சரீரமுள்ளவனுமான விராடராஜகுமாரன், அப்பொழுது தன்னுடையஇரண்டுகண்களையும் மூடிக்கொண்டு, பார்த்தனைப் பார்த்துச் சொல்லலானான்.

'(ப்ருஹன்னளையே!) கௌரவர்களோடு போர்புரிவதற்கு நான் திறமையுள்ளவனல்லேன். என்மீது உண்டாயிருக்கின்ற மயிர்க்கூச்சத்தைப் பார். அநேக மஹாவீரர்களுள்ளதும் மிகவும் உக்ரமாயிருக்கின்றதும் தேவர்களாலும் அணுக முடியாததும் பயங்கரமுமான கௌரவசேனையை எதிர்த்துப் போர்புரிவதற்கு நான் சக்தியற்றவனாயிருக்கிறேன். அச்சத்தைச் செய்யும் விற்களுள்ள பாரதசேனையில் செல்வதற்கு நான் விரும்பவில்லை. (இந்தக் கௌரவசேனையானது) இந்த்ரனுடன்கூடின தேவர்களாலும் அணுக முடியாதது. மனிதர்களால் அணுகமுடியாததென்பதில் யாது ஸந்தேஹம்? தேர்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் நெருங்கியதும் காலாட்களாலும் கொடிமரங்களாலும் நான்கு பக்கத்திலும் அடர்ந்திருக்கின்றதுமான பகைவர்களுடைய படையைப் பார்த்தே என் மனம் மிக்க துன்பமடைந்திருக்கின்றது. எந்த யுத்தத்தில் தைரியமுள்ளவர்களும் பெரிய வில்லையுடையவர்களும் யுத்தத்தில் ஸமர்த்தர்களும் பருத்த மதயானைபோன்றவர்களும் (ரதத்தில்) கட்டப்பட்டிருக்கின்ற கொடிகளையும் கொடிமரங்களையும் உடையவர்களும் சிறந்த யுத்தமுறையையுடையவர்களும் பெரியவில்லாளிகளும் எல்லாக்கார்யங்களிலும் நிச்சயமுடைவர்களுமான த்ரோணரும் பீஷ்மரும் க்ருபரும் கர்ணனும் விவிம்சதியும் அச்வத்தாமாவும் விகர்ணனும் ஸோமதத்தனும் பாஹ்லிகனும் ராஜாவான துர்யோதனனும் உத்தமவீரனான துர்மர்ஷணனுமாகிய அனைவரும் இருக்கின்றார்களோ அந்த யுத்தத்தில் அந்தச் சூரர்களை ஜயிப்பதற்கு நான் புத்திகெட்டு வந்தேன். வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்ற ஸைன்யமுள்ளவர்களும் (பகைவர்களை) மிகவும் வருத்துகின்றவர்களுமான கௌரவர்களனைவர்களையும் பார்த்தே (எனக்கு) மயிர்கள் சிலிர்த்தன. என் மனம் மயக்கமடைகின்றது' என்று சொன்னான். உறுதியான விற்களுள்ள கௌரவர்களுடைய பெரிய சேனையைக்கண்டு

மூடனை அவன், திரும்பவும், '(ப்ருஹன்னளையே!) என்னுடைய பிதாவானவர் ஜனங்களில்லாதபட்டணத்தில் என்னைவைத்துவிட்டு எல்லாஸைன்யத்தையும் திரட்டிக்கொண்டு த்ரிகர்த்தர்களை நோக்கிச் சென்றுவிட்டார். எனக்கு இவ்விடத்தில் படைத்தலைவர்கள் இல்லை. ஸஹாயமில்லாதவனும் பாலனும் அஸ்த்ரவித்தையில் ப்ரமப்படாதவனுமான நான் அஸ்த்ரவித்தையில் தேர்ச்சியடைந்திருக்கின்ற அனேக வீரர்களைஎதிர்த்துப் போர்புரிவதற்குச் சக்தியுள்ளவனுகமாட்டேன். ப்ருஹன்னளையே! (ரதத்தைத்) திருப்பு' என்று புலம்பினன்.

உலகங்களனைத்திலும் மஹாரதனை பீபத்ஸுவானவன், அவ்விடத்தில் அவ்வாறு சொல்லுகின்ற அந்தஉத்தரனைப்பார்த்து நன்கு சிரித்து, '(ராஜபுத்ர!) நீ பயத்தினால் இளைத்த உருவமுடையவனையிருக்கிறாய். எதிரிகளுக்கு ஸந்தாஷத்தை வளரச் செய்கிறாய். போர்க்களத்தில் பகைவர்களால் இப்பொழுது ஒரு கார்யமும் செய்யப்படவில்லை. நீ தானுகவே என்னைப்பார்த்து, '(ப்ருஹன்னளையே!) கௌரவர்களிருக்குமிடத்தைக் குறித்து என்னை நீ நடத்திக்கொண்டுபோ' என்று முன்பு சொல்லியிருக்கிறாய். (ஆதலால்,) அப்படிப்பட்ட நான் அதிகமான இந்தக்கொடிகளிருக்கின்றவிடத்தில் உன்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கிறேன். சிறந்த கைகளையுடையவனே! போக்யவஸ்துவினிடத்தில் ஆசையுள்ளவர்களும் [1]ஆததாயிகளுமான கௌரவர்களுக்கு நடுவில் உன்னைக்கொண்டுபோய்ச் சேர்ப்பேன். சத்ருக்களைச் சிக்ஷிப்பவனே! ஸமுத்ரம்போலக் கம்பீரமாயிருக்கின்ற கௌரவஸைன்யத்தைப்பார்த்து நீ மனவருத்தமடையாதே. புருஷர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது ஸ்த்ரீகளின்பக்கத்தில் சபதஞ்செய்துதற்புகழ்ச்சிசெய்துகொண்டு (நகரத்தினின்று) வெளிப்பட்டுவந்து இவ்விடத்தில் ஏன் யுத்தம்செய்யவில்லை? சொல். அவ்வாறு, ஸ்த்ரீகளிடத்திலும் புருஷர்களிடத்திலும் ஆண்மையைப்பற்றி ப்ரதிஜ்ஞைசெய்து தேரின்மீதேறி (நகரத்தைவிட்டு) வெளியில்புறப்பட்டுவந்து (இப்பொழுது) ஏன் யுத்தம்செய்யாமலிருக்கிறாய்? நீ (பகைவர்களைவென்று) பசுக்களைமீட்காமல் நகரத்துக்குத்திரும்பிப்போனால் வீரர்களானபுருஷர்களும் ஸ்த்ரீகளும் ஒன்றுசேர்ந்து உன்னைப்பரிஹாஸஞ்செய்வார்கள். நானும் ஸைரந்த்ரியினால் ஸாரத்யம் செய்வதில் புகழ்பெற்றிருக்கிறேன். (ஆகையால்,) நான் பசுக்களை

---

1 நெருப்பைவைப்பவன், விஷமிடுபவன், சஸ்த்ரங்களைக் கையில் கொண்டிருப்பவன், தனங்களைக் கொள்ளையடிப்பவன், க்ஷேத்ரங்களை அபஹரிப்பவன், மனைவியை அபஹரிப்பவன்.

மீட்காமல் பட்டணத்தைக்குறித்துப்போவதற்குச் சக்தியற்றவனு யிருக்கிறேன். ஸைரந்த்ரியினுடைய ஸ்தோத்திரத்தினாலும் உன் னுடையவசனத்தினாலும் தூண்டப்பட்டிருக்கின்றநான் இந்தக் கௌரவர்களோடு எவ்விதம் போர்புரியாமலிருப்பேன்? நீ உறுதி யுள்ளவனாகஇரு' என்று மறுமொழிகூறினன். உத்தரன், 'ப்ரு ஹன்னளையே! கௌரவர்களனைவர்களும் மாத்ஸ்யர்களுடைய பொருள்களை இஷ்டப்படி கொண்டுபோகட்டும். என்னை ஸ்த்ரீ களும் புருஷர்களும் பரிஹாஸஞ்செய்யட்டும். யுத்தத்தினால் எனக் குப் பயனில்லை. என்னுடையபசுக்களும் போகட்டும். ப்ருஹன் னளையே! நீ பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நகரத்தில் புகு வேன்' என்றான். குண்டலங்களணிந்தவனும் பயந்தவனுமான உத்தரன் இவ்வாறுசொல்லிவிட்டு மிகப்பயந்து மானத்தை இழ ந்து அம்பையும்வில்லையும் எறிந்துவிட்டு ரதத்தினின்று கீழே குதித்து ஓடினன். அர்ஜுனன், 'ஏ! (உத்தர!) யுத்தத்தைவிட்டு ஓடுதலானது க்ஷத்ரியனுக்குரிய தர்மமென்று சூரர்கள் எண்ண வில்லை; யுத்தத்தில் மரணம்நேருவது மேன்மை; பயந்துஓடுவது மேன்மையன்று' என்றான். குருகுலத்தில் தோன்றிய அந்த தனஞ்சயன், இவ்வாறுசொல்லிவிட்டு, சிறந்ததேரினின்று கீழே துள்ளிக்குதித்து, நீண்டபின்னலையும் நன்குசிவந்த இரண்டு ஆடை களையும் அசையும்படி செய்துகொண்டு, ஓடுகின்ற அந்த ராஜகுமா ரனைப் பின்தொடர்ந்து ஓடினன். ஓடுகின்றவனும் காலடி வைப்புக் களால் பூமியை அழுந்தும்படி செய்கின்றவனும் பின்னலை ஆட்டிக் கொண்டு ஓடுகின்றவனும் பெண்வேஷம் பூண்டவனுமான அவ னைப்பார்த்து அப்பொழுது அர்ஜுனனென்று அறியாத சிலஸை னிகர்கள் நகைத்தார்கள். வேகமாகஓடுகின்ற அவனைக்கண்டு, கௌரவர்கள், 'தொடக்கத்தில், உத்தமமானரதத்தை விட்டுவிட் டுத் தடையற்று ஓடுகின்ற இவன் யார்? சாம்பலால் மறைக்கப் பட்ட நெருப்புப்போல வேஷத்தால் மூடப்பட்டிருக்கின்ற இவன் யார்? இவனுடைய ரூபமானது கொஞ்சம் புருஷனுடைய உருவம் போலவும் கொஞ்சம் ஸ்த்ரீயினுடைய உருவம்போலவும் இருக்கி றது' என்று சொல்லிக்கொண்டார்கள். இவ்வாறு ஸைனிகர் களும் சொன்னார்கள். அவர்களைப்பார்த்து, கௌரவபாண்டவர் களுக்கு ஆசார்யரும் புத்தியில் சுக்ரனுக்கும் ப்ருஹஸ்பதிக்கும் ஒப் பானவருமான த்ரோணர் பின்வருமாறு உரைக்கலானார்.

'(இந்த)விசாரத்தினால்உங்களுக்குஎன்னபயன்? பின்தொடரப் பட்டிருக்கின்ற இவனால்தான் உங்களுக்கு என்னபயன்? பயந்துஓடு கின்றவனைப் பின்தொடர்ந்து பின்னல்அசையப் பயமின்றிஓடுகிற

வன் ஒரு புருஷஸ்ரேஷ்டனை விளங்குகிறான். இவனுடையரூபமானது அர்ஜுனனுடைய ரூபம்போலிருக்கிறது; நபும்ஸகவேஷத்தைத் தரிக்கிறான். ஸ்த்ரீவேஷத்தால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற இவன் ரூபத்தில் பார்த்தனுக்கு ஸமானனாயிருக்கிறான். இவனுடைய தலையும் கழுத்தும் அந்தப் பார்த்தனுடையவே. இவனுடைய பரிகாயுதம்போன்ற இரண்டு கைகளும் அந்த அர்ஜுனனுடைய கைகளே. இவனுடைய வன்மையும் அந்த அர்ஜுனனுடையதே. ஆதலால், தனஞ்சயனைக் காட்டிலும் இவன் வேறுனவனல்லன். தேவர்களுள் தேவேந்த்ரன்போல மனுஷ்யர்களுள் தனஞ்சயன் சிறந்தவன். உலகத்தில் தனஞ்சயனைத்தவிர வேறு எவன் நம்மை ஒருவனை எதிர்த்துவருவான்?' என்று சொன்னார். த்ரோணர் இவ்வாறுசொல்லியதைக்கேட்ட புத்திசாலியான கர்ணன், (கௌரவர்களைப்பார்த்து,) 'விராடனுடைய புத்ரன் ஒருவன் சூன்யமான பட்டணத்தில் வஸித்திருந்தான். அப்படிப்பட்ட இவன் வாலிபத்தன்மையால் அலியை ஸாரதியாகக்கொண்டு நகரத்தைவிட்டு வெளியில் புறப்பட்டுவிட்டான்; ஆண்மையால் வெளிப்பட்டவனல்லன். (அவனைத்தொடர்ந்து) ஓடுகின்றவனை வேறுவேஷத்தினால் மறைக்கப்பட்ட அர்ஜுனனென்றே நீங்கள் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளுங்கள். அந்தமாத்ஸ்யர்கள் எல்லோருமே யுத்தத்தில் நம்மை எதிர்த்துவருவதற்குச் சக்தியற்றவர்கள். (அவ்வாறிருக்க,) அவர்களுள் ஒருவன் எவ்வாறு கௌரவர்களனைவர்களையும் எதிர்த்துப் போர்புரியவருவான்? உத்தரன் ஸாரதியை ஏற்படுத்திக்கொண்டு நகரத்தினின்று வெளியில் புறப்பட்டுவிட்டான். அவன் நம்முடைய த்வஜத்தைப் பார்த்து இப்பொழுது பயந்துஓடுகிறனென்று நான்நினைக்கிறேன்' என்றுசொன்னன். க்ருபர், 'ஓடுகின்ற அந்தத் தனஞ்சயன் உத்தரனையே பிடிக்கவிரும்புகின்றான்; நிச்சயம். இப்பொழுது இவன் உத்தரனை ஸாரதியாகச் செய்துகொண்டு தான் போர்புரிவதற்கு விரும்புகிறான்' என்று கூறினர். இவ்வாறு வீரர்களான அந்தக்கௌரவர்கள் எல்லாரும் தனித்தனியாக ஆலோசித்தும் அர்ஜுனனென்று நிச்சயிப்பதற்குச் சக்தியற்றவர்களானர்கள். துர்யோதனன், சேனையிலிருக்கின்ற சிறந்த ரதிகர்களைப்பார்த்து, 'அர்ஜுனரே, வாஸுதேவரே, ராமரே, ப்ரத்யும்னரே, அவர்களை நம்மை யுத்தத்தில் எதிர்த்துவருவதற்குச் சக்தியுள்ளவர்களாகார்கள். (அவ்வாறிருக்க,) வேறொருவன் நபும்ஸகவேஷத்தோடு பசுக்களிருக்குமிடத்தைக்குறித்து வருவனனல், (அவன்மீது) கூர்மையான அம்புகளைவிடுத்து (அவனைப்)

பூமியில்தள்ளுவேன். அந்தமத்ஸ்யதேசத்தார்களுள் ஒருவன் எவ்வாறு கௌரவர்களணிவர்களோடும் போர்புரிவான்?' என்று கூறினன்.

அவ்வாறு, வேஷத்தால் மறைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பாண்டவனைக்கண்டு அந்தஸைன்யத்திலுள்ளவர்கள் அவனை அர்ஜுனனென்றுவது அல்லனென்றுவது நிச்சயிக்கவில்லை. கௌரவர்களணிவர்களும், இவ்வாறு அடிக்கடி ஊகித்துப்பார்த்து, 'பகைவர்களை உறுதியாக அடிப்பவனும் மஹாபலமுள்ளவனும் இந்த்ரனுக்கொப்பான வன்மையுள்ளவனுமான தனஞ்சயன் இப்பொழுது போர்புரியவரின் நமது ஸைன்யமனைத்தும் (உயிரோடிருப்பது) ஸந்தேஹம்தான்' என்று எண்ணினர்கள். அந்தஸமயத்தில் தனஞ்சயனைக்காட்டிலும் வேறு ஒருவனென்றும் அவனை நிச்சயிக்கவில்லை. அர்ஜுனனே ஓடுகின்ற உத்தரனை நூறுகாலடிதூரம் பின்தொடர்ந்து ஓடி விரைவாக (அவனை)க்கூந்தலில் பிடித்தான். 'ப்ருஹன்னளையே! என்னைப் பிடியாதே; பிடியாதே. உனக்கு மங்களம். நான் உனக்கு அடிமை' என்று சொல்லிக்கொண்டே விரைவாக ஓடுகின்ற விராடபுத்ரனை, பலசாலியும் பகைவர்களைச்சிக்ஷிப்பவனுமான பீபத்ஸுவானவன் விரைவாகப் பிடித்தான். அர்ஜுனனால் பிடிக்கப்பட்ட அவன் துன்பத்தை அடைந்தவன்போல அதிகஉருக்கமாக மிகவும் புலம்பினன்; மிகுதியான பொருளைக்கொடுப்பதாகவும் சொன்னன். உத்தரன், 'ப்ருஹன்னளையே! தங்கம், ரத்னங்கள், முத்துக்கள் இவைகளுள் எதைஎதை நீவிரும்புகிறீயோ அதைஅதையெல்லாம் உனக்கு நான்கொடுக்கிறேன்: யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் பசுக்களையும் நன்கு அலங்கரிக்கப்பட்டபெண்களையும் சுத்தமானபொன்னையும் சிறந்தவெள்ளியையும் நூறுபொன்னணையத்தையும் உனக்குக்கொடுக்கிறேன். என்னை நீ விட்டுவிடு. நன்கு அலங்கரிக்கப்பட்ட அறுபதுகன்னியர்களையும் ஒருக்ராமத்தையும் உனக்குக்கொடுக்கிறேன். அதிக எளிமையையும் மனத்தளர்ச்சியையும் பயத்தினால் நடுக்கத்தையும் அடைந்த என்னை நீ விட்டுவிடு. தங்கக்கட்டுள்ளவைகளும் அதிகமான ஒளிபொருந்தியவைகளுமான எட்டு வைடூர்யரத்னங்களையும் ஸ்வர்ணமயமான தண்டங்களால் இணைக்கப்பட்டதும் குதிரைகளோடுகூடியதுமான தேரையும் மதங்கொண்ட பத்துயானைகளையும் உனக்கு நான் கொடுக்கிறேன். ப்ருஹன்னளையே! என்னை நீ விட்டுவிடு. ஓ! அலியே! இப்பொழுது என்தாயாரைப் பார்ப்பதற்கு நான் பட்டனத்தைக்குறித்துச் செல்லுகிறேன். நான் ஒருவனே என்தாயா

ருக்குப் பிள்ளை; ஆதலால், நான் என்னசொல்வேன்? இவ்விதமானகாலத்தில் விதியானது என்னை உன்வசமாக்குகிறது. நான் மத்ஸ்யராஜாவான விராடனுடைய செல்வக்குமாரன்; சிறுவன்; அவரால் நன்குபோஷிக்கப்பட்டவனுயிருக்கிறேன். நான் தாயின் பக்கத்தில் படுத்திருப்பவன்; காற்றுவெய்யில்களுடைய ஸ்பர்சத்தை அடையாதவன். சிறுவருடைய சண்டையையும் பாராதவன். இப்படிப்பட்டநான் எங்கே! அப்படிப்பட்ட கௌரவர்கள் எங்கே! ப்ருஹன்னளையே! தாயாருடையபக்கத்தில் நான் போய்ச்சேருகிறேன். என்னை நீ விட்டுவிடு. கௌரவர்களுடைய சேனை ஊழிக்காலத்துஸமுத்ரம்போலக் காணப்படுகிறது. யௌவனகர்வமுள்ள நான் ஸ்த்ரீகளுடையமத்தியில் அறிவின்மையால் வீர்யத்தினுலும் சௌர்யத்தினுலும் நிறைந்த வார்த்தையைச் சொன்னேன். எவன் கௌரவர்களைஜயிக்கச் சக்தியுள்ளவனுவான்? நீ என்னை விடாமல் அங்குகொண்டுபோனுல் உனக்கெதிரில் நான் உயிரைஇழப்பேன்' என்றுபுலம்பினன்.

புருஷரிற்சிறந்த அர்ஜுனன், இப்படிச்சொல்லிப் புலம்புகின்றவனும் அறிவற்றவனுமான அந்த உத்தரனைப் பலாத்காரமாக ரதத்துக்கு அருகில் கொண்டுவந்தான். பிறகு, பார்த்தன், பயத்தினுல் பீடிக்கப்பட்டவனும் அறிவற்றவனுமான அவனைப் பார்த்து, ' (உத்தர!) 'நான் கௌரவர்களோடு போர்புரியப் போகிறேன். என்னுடையகுதிரைகளை நீ அடக்கி நடத்து' என்று என்னை அழைத்துவந்து (இப்பொழுது) ஏன் ஓடுவதில் நோக்கமுள்ளவனுனய்? கௌரவர்களோடு யுத்தம்செய். உனக்கு ஜயம்உண்டாகும். ராஜாவே, ராஜபுத்ரனே, நான் ஸாரதியாயிருந்து உத்தமமானகுதிரைகளை அடக்கிநடத்துகிற யுத்தத்தில் அவனுக்கு நிச்சயமாக ஜயம்உண்டாகும். உத்தர! ஸாரதியான என்னுடன்சேர்ந்து எல்லாவித்தாலும் கௌரவர்களுடன் சண்டைசெய். வென்று புகழ்பெற்று இந்தப்பூமிமுழுவதையும் ஆளுவாய். அல்லது, கொல்லப்பட்டு ஸ்வர்க்கத்தை அடைவாய். ஓடுவது உனக்கு நன்மைஎயக்கொடாது. இப்பொழுது எல்லாக் கௌரவர்களையும் வென்று ஜயத்தை அடையும்வண்ணம் நான் முயற்சிசெய்யப்போகிறேன். இந்தவிஷயத்தில் நான் உனக்கு ஸஹாயனுக எண்ணத்தக்கவன். பகைவர்களை அழிப்பவனே! பகைவர்களோடு போர்புரிவதற்கு நீ சக்தியற்றவனுயின் இங்கேவா; பகைவர்களோடு போர்புரிகின்ற என்னுடைய குதிரைகளை நீ நடத்து. நீ என்னுடையதேர்வலியால் காக்கப்பெற்று (ஒருவராலும்) அவமதிக்கத்தகாததும் கோரஸ்வரூபமுடையதும்

கோரரூபிகளானமஹாரதர்களால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது மான இந்தத்தேர்ப்படையில் புகுவாயாக. ராஜபுத்ரர்களுள் சிறந்தவனே! நீ பயப்படாதே. பகைவர்களைவாட்டுபவனே! நீ க்ஷத்ரியனல்லனோ? நான் அந்தக்கௌரவர்களோடு போர்புரியப்போகிறேன். உன்னுடையபசுக்களை மீட்டுக்கொண்டுவரப்போகிறேன். மனிதரிற் சிறந்தவனே! பகைவர்களால் அவமதிக்கமுடியாததும் நெருங்கமுடியாததுமான இந்தத்தேர்ப்படையில் நீ நுழையவேண்டும். நீ எனக்கு ஸாரதியாயிரு. நான் கௌரவர்களோடு யுத்தம்செய்யப்போகிறேன்; யுத்தத்தில் உக்ரஸ்வரூபிகளான சூரர்களை யமலோகத்துக்கு அனுப்பப்போகிறேன்' என்றுகூறினன். (மாற்றூர்களால்) வெல்லற்கரியவனும் பரதஸ்ரேஷ்டனுமான பீபத்ஸுவானவன், பயத்தினல்பீடிக்கப்பட்டிருக்கின்ற விராடபுத்ரனை அந்தஉத்தரனை இவ்வாறு சொல்லி ஸமாதானப்படுத்தினன். பகைவர்களுடையபட்டணங்களை ஜயிப்பவனைபார்த்தன், இங்கும் அங்கும் சுற்றிவருகின்றவனும் (யுத்தம்செய்வதில்) விருப்பமில்லாதவனும் பயத்தினல் பீடிக்கப்பட்டவனுமான உத்தரனை ரதத்தின்மீது ஏற்றிவைத்தான். (எதிரிகளின்) செல்வத்தை ஜயித்த அர்ஜுனன், அழுகின்ற அந்தஉத்தரனைத்தேற்றித் தேரின்மீதேற்றிவைத்து அவனை ஸாரதியாக ஏற்படுத்திக்கொண்டு காண்டீவமென்கிறவில்லை எடுப்பதற்காக அந்தவன்னிமரத்தைநோக்கிச் சென்றனன்.

நாற்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனனுடைய ஏவலால் உத்தரன் வன்னிமரத்தின் மீதேறி வில்லெடுத்தது.)

உத்தரனைத் தேரில் ஏற்றிவைத்துக்கொண்டு வன்னிமரத்துக்கு எதிராகச்செல்லுகின்றவனும் நபும்ஸகவேஷத்தோடு தேரிலிருப்பவனும் தேராளிகளுள்சிறந்தவனுமான அந்தஅர்ஜுனனைக்கண்டு சூரர்களும் ரதிகர்களுள்சிறந்தவர்களுமான கௌரவசேனையிலுள்ள த்ரோணர் பீஷ்மர்முதலானவர்கள், தனஞ்சயனிடத்திலிருந்து உண்டானபயத்தினல் மனநடுக்கமுற்றார்கள். உத்ஸாஹத்தை இழந்தவர்களான அவர்களையும் அத்புதமான உத்பாதங்களையும்பார்த்து ஆசார்யரும் சஸ்த்ரதாரிகளுள் சிறந்தவருமான த்ரோணர் சொல்லலானார். '(வீரர்களே!) கொடிய

வைகளும் கொடிய ஒலியுள்ளவைகளுமான பேய்க்காற்றுக்கள் வீசுகின்றன. ஆகாயம் சாம்பல்மழைபோன்ற இருளால் மூடப்பட்டுவிட்டது. மேகங்கள் விகாரமான நிறமுள்ளவைகளும் ஆச்சர்யகரமான காட்சியுள்ளவைகளுமாகக் காணப்படுகின்றன. பலவிதமானசஸ்த்ரங்கள் உறைகளினின்றும் (தாமே) வெளியில் நழுவுகின்றன. ஒளியுடன்கூடின திசைகளில் கொடியஉருவமுள்ளனவாக இதோ நரிகள் ஊளையிடுகின்றன. குதிரைகளும் கண்ணீர் சொரிகின்றன. அசையாதகொடிகளும் அசைகின்றன. இவ்விடத்தில் காணப்படும் பலநிமித்தங்களையும் (ஆலோசிக்குங்கால்) ஸமீபத்தில் யுத்தம் நேரப்போகிறது. நீங்கள் ஸன்னத்தமாயிருங்கள்; ராஜாவையும் காப்பாற்றுங்கள்; சேனையையும் வரிசைப்படுத்துங்கள்; அனர்த்தத்தை எதிர்பார்த்திருங்கள்; பசுக்கூட்டத்தையும் ரக்ஷியுங்கள். வீரனும் மஹாவில்லாளியும் எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளும் சிறந்தவனுமானபார்த்தன் இதோ நபும்ஸகவேஷத்தோடு வந்துவிட்டான். இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை' என்று இவ்வளவுமட்டில் சொல்லிவிட்டுப் பீஷ்மரைப்பார்த்து வசனிக்கலானர். 'ஓ! கங்காபுத்ரரே! லங்கேச்வரனுடையவனத்துக்குச் சத்ருவைக் கொடியாகக்கொண்டவனும் ஒருமரத்தினுடைய பெயரையுடையவனும் மலைகளுக்கு விரோதியினுடையபுத்ரனும் நடையிலும் தேவராஜன்போன்றவனும் ஒருஸமயத்தில் பெண்போன்றவனுமான (இந்தப்புருஷன் பார்க்கப்படலாம்)' என்கிற ஒரு வசனத்தை ஆசார்யர் அப்பொழுது சொன்னர். வேந்தரே! த்ரோணர் குறிப்புடன் இவ்விதம்சொல்லிவிட்டுப் பேசாமலிருந்தார். கங்காபுத்ரரானபீஷ்மர், த்ரோணருடையவார்த்தையைக்கேட்டு, குறிப்புடன் (துர்யோதனனைப்பார்த்து,) 'மனிதரிற்சிறந்தவனே! நாம் நம்முடையதேசத்தைத்தாண்டி வேறு தேசத்தைவந்தடைந்துவிட்டோம். நம்மால் ஸபையில் சொல்லப்பட்ட ஸமயமும் சென்றுவிட்டது. சத்ருக்களிடத்திலிருந்து பயம்பாராட்டத் தக்கதன்று. ஸந்தேகத்தைவிட்டுவிடு' என்றுசொன்னர். ஹிதத்தைச்செய்யும் தன்மையுள்ள தேவவ்ரதரால் இவ்விதமானவார்த்தை சொல்லப்பட்டவுடன், த்ரோணர் துர்யோதனனைப் பார்த்துக் குறிப்புடன் (பின்வருமாறு) உரைக்கலானர்.

'பெரிதான வில்லையுடையவனும் ஆயுதம்பிடித்தவர் அனைவருள்ளும் சிறந்தவனும் வீரனுமான பார்த்தன் இதோ நபும்ஸகரூபத்தோடு வந்துவிட்டான். இவ்விஷயத்தில் ஸம்சயமில்லை. இந்தப் பார்த்தனே வன்மையுமுள்ளவன்; இடக்கையினாலும் பாணங்களை விடுப்பவன்; பகைவர்களை வாட்டுபவன். அரசர்களை ஜயிக்

கின்ற கௌரவர்கள் இவனல் கொல்லப்பட்டவர்களாவார்கள். ராஜனே! எவன் பிறந்தவுடன் பூமிமுழுவதும் நிரம்ப ஆறுத லுள்ளதாகியதோ, எவனல் த்ருபதராஜனைப் பராக்ரமத்தால்கட்டி எனக்குத் தக்ஷிணைகொடுக்கப்பட்டதோ, எவனல் முற்காலத்தில் ஸ்வயம்வரஸபையில் ஆகாயத்தில் கட்டப்பட்டிருந்த லக்ஷ்யத்தை அடித்து அரசர்களையும் ஜயித்துப் பாஞ்சாலியானவள் அடையப் பட்டாளோ, எவனல் காண்டவவனத்தில் தேவாஸுரர்களை ஜயித் து அக்நிபகவான் நன்கு திருப்திசெய்விக்கப்பட்டாரோ, எவ னல் யாதவர்களைஜயித்து ஸுபத்ரையானவள் விவாஹம்செய்யப் பட்டாளோ, எவனல் த்ரிபுரத்திற்குச் சத்ருவும் மன்மதனை நாசம் செய்தவருமான த்ரிபுராரியானவர் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டா ரோ, எவனல் தேவலோகத்தை அடைந்து யுத்தத்தில் இந்திரனை ஜயித்தவர்களும் காற்றும் நுழைதற்கரிய கவசமுள்ளவர்களும் தனுவினுடையகுலத்தில் தோன்றியவர்களுமான மூன்றுகோடி அஸுரர்களும் ஹிரண்யபுரத்தில்வஸித்த காலகேயர்களும் ஜயிக் கப்பட்டார்களோ, எவனல் அந்தக்காட்டில் சித்ரஸேனனல் கட் டப்பட்டிருந்தநீ விடுவிக்கப்பட்டாயோ, எவனல் மேருபர்வதத்தி னுடைய வடபாகம்சென்று ஏராளமான பொருளைக்கொண்டுவந்து எல்லா அரசர்களையும்வென்று தர்மபுத்ரர் ராஜஸூயயாகம் செய் விக்கப்பெற்றாரோ, எவனிடத்தில் சௌரியமும் வீர்யமும் ப்ரதாப மும் தைர்யமும் பராக்ரமமும் ஔதார்யமும் காம்பீர்யமும் ஐஸ்வர்யமும் (அகார்யத்தில்) வெட்கமும் தர்மமும் ஜீவகாருண்யமும் கபடமின்மையும் இருக்கின்றனவோ அப்படிப்பட்டபார்த்தன் இதோ வந்துவிட்டான்; ஸம்சயமில்லை. இவன் எல்லாத்தேவக் கூட்டங்களையும்கூட வெல்லாமல் திரும்பமாட்டான். சூரனை இவன் காட்டில் (உன்னல்) துன்பப்படுத்தப்பட்டான்; இந்த்ரனை லும், (வில்வித்தை) கற்பிக்கப்பட்டிருக்கின்றான். இவன் (இப் பொழுது) ரோஷத்துடன் போர்புரியப்போகிறான். இவ்விஷ யத்தில் ஐயமில்லை. குருகுலத்தில் உதித்தவனே! இவனுடன் எதிர்த்து யுத்தம்செய்யத்தக்க மற்றொருவீரனை நான் காண வில்லை. வேடவேஷத்தால் மறைந்தவரும் ப்ரபுவுமான ஸ்ரீ மஹா தேவரும் இமயமலையில் பார்த்தனல் யுத்தத்தில் மனக்களிப் படையும்படி செய்விக்கப்பட்டாரென்று கேள்வி' என்றார். கர் ணன், இவ்வாறு சொல்லுகிற த்ரோணரைப் பார்த்துக் கோபங் கொண்டு, '(ஆசார்யரே!) எப்பொழுதுமே நீர் பல்குனனுடைய குணங்களை எங்களிடம் புகழ்ந்துபேசுகிறீர். அர்ஜுனன் என் னையும் துர்யோதனனையும்விட வித்தையினல் நிறைந்தவனல்

லன்' என்று கூறினன். துர்யோதனன், 'ராதாபுத்ர! இவன் பார்த்தனுயிருப்பனுகில் என்னுடைய காரியம் நிறைவேறினதாகும். இந்தப்பாண்டவர்கள் அறியப்பட்டால் மறுபடியும் வேறு பன்னிரண்டுவர்ஷகாலம் காட்டில் ஸஞ்சரிப்பார்கள். அப்படியின்றி, தேவதைகளுள் தலைவனை வேறொருவன் பேடிவடிவத்துடன் இங்குவந்திருப்பானுயின், நல்ல கூர்மையுள்ள பாணங்களால் இவனைப் பூமியில் வீழ்த்துவேன்' என மொழிந்தான். பகைவர்களை வாட்டுபவனும் த்ருதராஷ்ட்ரபுத்ரனுமான அந்தத் துர்யோதனன் அவ்விதமான வார்த்தையைச் சொல்லுகையில், பீஷ்மரும் த்ரோணரும் க்ருபரும் த்ரோணபுத்ரரும் (துர்யோதனனுடைய) அவ்விதமான ஆண்மையைக் கொண்டாடினர்கள்.

பார்த்தன், அந்த வன்னிமரத்தினருகிற் சென்று, பிதாவினல் ஸுகமாக வளர்க்கப்பட்டவனும் யுத்தங்களை அறியாதவனுமான விராடபுத்ரனைப்பார்த்து, '[1] பூமிஞ்சய! விராடபுத்ர! (இங்கு) வா; நான் உன்னை ஏவுகிறேன். நீ பெரிதான (இந்த) வன்னிமரத்தின்மீதேறி விரைவாகக் காண்டீவம் என்கிற வில்லை எடுத்துக் கொண்டுவா. இங்கு இருக்கின்ற உன்னுடைய இந்த விற்கள் என்னுடைய பலத்தைத் தாங்குவதற்கு சக்தியுள்ளவைகளல்ல; பெரிதான பாரத்தை [2] வஹிப்பதற்காவது யானையை நன்றுக அடிப்பதற்காவது இந்த யுத்தத்தில் பகைவர்களை வெல்லப்போகின்ற என்னுடைய கையினல் இழுப்பதைத் தாங்குவதற்காவது திறமையுள்ளவையல்ல. அவைகளால் இந்த யுத்தகளத்தில் ஜயத்தைக்கொடுக்கக்கூடிய காரியத்தைச் செய்வதற்கு நான் விரும்பவில்லை. நீண்ட கைகளையுடையவனே! மஹாபலமுள்ளவனே! உன்னுடைய இந்த ஆயுதங்களெல்லாம் மிக மெலிந்தவைகள்; சிறியவைகள்; உறுதியற்றவைகள். பூமிஞ்சய! ஆதலால், இலைகளால் அடர்ந்திருக்கின்ற இந்தவன்னிமரத்தின்மீது ஏறு. இதில் பாண்டுபுத்ரர்களான யுதிஷ்டிரருடையதும் பீமனுடையதும் பீபத்ஸுவினுடையதும், அவ்வாறே, நகுலஸஹதேவர்களுடையதுமான விற்களும் கொடிகளும் அம்புகளும் சூரர்களுக்குரிய திவ்யமானகவசங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மஹாவீர்யமுள்ளதும் ஒன்றுகஇருந்தாலும் லக்ஷம் விற்களுக்கு ஒப்பானதும் ராஜ்யங்களை வ்ருத்திபண்ணுகின்றதும் அதிகமாக (யுத்த) ச்ரமத்தைப் பொறுக்கின்றதும் பனைமரம் போன்றதும் பெரியதும் ஆயுதங்களெல்லாவற்றுள்ளும் சிறந்ததும் பகைவரனைவரையும் நாசஞ்செய்கின்றதும் பொன்னல் சித்ரவேலை செய்யப்பட்டிருக்கின்றதும் தேவஸம்பந்தம் பெற்றதும் பளபளப்

---

1 உத்தரனுக்கு மற்றொரு பெயர். 2 வேறு பாடம்.

புள்ளதும் நீண்டதும் காயமில்லாததும் பெரிதான (யுத்த) பாரத்தைப் பொறுப்பதில் ஸாமர்த்தியமுள்ளதும் நல்ல காட்சியுள்ளதும் [1] வருணனுல் தரிக்கப்பட்டிருந்ததுமான பார்த்தனுடைய காண்டீவம் என்கிற வில்லும் இவ்விடத்திலேயே இருக்கின்றது. அதைப்போன்றவைகளும் பலமுள்ளவைகளும் உறுதியுள்ளவைகளும் ப்ரஸித்திபெற்றவைகளும் மேன்மைபெற்றவைகளும் பார்ப்பதற்கு மிகஅரியவைகளுமான யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன், நகுலஸஹதேவர் ஆகிய இவர்களுடைய எல்லா ஆயுதங்களும் இவ்விடத்திலேயேயிருக்கின்றன' என்று கூறினன். உத்தரன், 'இந்த வன்னிமரத்தில் முற்காலத்தில் (மரித்தவனுடைய) சரீரமன்றோ கட்டப்பட்டு உலர்ந்திருக்கிறது. ராஜபுத்ரனுகிய நான் அதை எவ்வாறு கையினுல் தொடுவேன்? ஓ! ப்ருஹன்னளையே! என்னை இவ்விதமான கார்யத்தைச் செய்யும்படி செய்யாதே. எவ்விதம் (இந்தக்கார்யம்) செய்வதற்கு இயலும்? நீ உன் புத்தியினுல் எவ்வாறு நினைக்கிறாய்? க்ஷத்ரிய ஜாதியில் பிறந்தவனும் மஹிமையுடையவனும் ராஜபுத்ரனும் மந்த்ரங்களையும் யஜ்ஞங்களையும் அறிந்தவனுமான என்னுல் இவ்விதமான (சவமானது) தொடத்தக்கதன்று. ஓ! ப்ருஹன்னளையே! இந்தச் சரீரத்தைத் தொட்டவனும் சவத்தைத் தூக்கினவன்போல அசுத்தனுமாயிருக்கும் என்னை எவ்வாறு நீ வ்யவஹரிக்கத்தக்கவனுகச் செய்வாய்?' என்று சொன்னன். பிறகு, பகைவர்பட்டணங்களை ஜயிப்பவனும் சூரனுமான பார்த்தன், [2] மத்ஸ்யராஜர்களுடைய வம்சத்தில் புத்ரனுக உதித்தவனும் ஸாமர்த்யமுடையவனுமான அவனைப் பார்த்து, 'பேரறிஞ! நான் உன்னை ஜாதியினுலும் குலத்தினுலும் சிறந்தவனென்றறிவேன். பகைவரை வாட்டுபவனே! (அப்படிப்பட்ட) உன்னைப் பாவத்தொழிலைச் செய்யென்று எவ்வாறு நான் சொல்வேன்? வேந்தரிற் சிறந்தவனே! நீ வ்யவஹரிக்கத்தக்கவனும் சுத்தனுமாவாய். இவைகள் விற்கள். இதில் (மரித்தவனுடைய) சரீரமில்லை. நீ பயப்படாதே. ராஜபுத்ர! மத்ஸ்ய ராஜாவினுடைய குலத்தில் புத்ரனுகப் பிறந்தவனும் சிறந்த மனமுள்ளவனுமான உன்னை நான் எவ்வாறு நிந்திக்கத்தக்க தொழிலைச் செய்யும்படி செய்வேன்?' என்றனன். பார்த்தனுல் இவ்வாறு சொல்லப்பட்டவனும் குண்டலங்களை அணிந்தவனுமான அந்த விராடபுத்ரன் அப்பொழுது பரவசனுகி ரதத்தினின்று கீழே குதித்து வன்னிமரத்தின்மீதேறினன். பகைவரை அழிப்பவ

---

1 'பயங்கரமானதும்' என்பது வேறு பாடம்.

2 ஒரு சொல் விடப்பட்டது.

ணன தனஞ்சயன், ரதத்திலிருந்துகொண்டு அவனைப்பார்த்து, '(உத்தர!) மரத்தின் உச்சியிலிருந்து இந்தவிற்களைத் தாமதமின்றிக் கீழேஇறக்கு' என்று கட்டளையிட்டான். அந்தஉத்தரன், அகன்றமார்புடையவர்களான வீரர்களுடைய மிகச்சிறந்தவிற்களையெடுத்து நான்குபக்கத்திலும் சுற்றப்பட்டிருக்கிற இலைகளையும் எடுத்துவிட்டு அருகில் கொண்டுவந்தான். (அர்ஜுனன்,) 'உத்தர! இவைகளுக்கு நாற்புறத்திலும் சுற்றப்பட்டிருப்பதை முழுவதும் தாமதமின்றி அவிழ்த்துவிடு' என்றுசொன்னன். பகைவரைவாட்டுபவனான உத்தரன், அவைகளுடைய கட்டுக்களை அவிழ்த்து, அவற்றுள் நான்கு வேறுவிற்களோடு காண்டீவத்தைக் கண்டான். அவிழ்த்துவிடப்பட்டவைகளும் ஸூர்யனுடைய ஒளிபோன்ற ஒளியுள்ளவைகளுமான அந்தவிற்களுடைய சிறந்த காந்திகள் உதயமாகுங்காலங்களில் க்ருஹங்களின் காந்திகள் வெளிப்படுவனபோல வெளிப்பட்டன. சீறுகின்ற ஸர்ப்பங்களுடைய ரூபம்போன்ற அவைகளுடைய ரூபத்தைக்கண்டு, அந்த உத்தரன், அப்பொழுது மயிர்க்கூச்சலும் பயத்தினால் மனக்கலக்கமும் அதிகமடைந்தவனனன். ராஜபுத்ரனை உத்தரன் அர்ஜுனனால் தேறுதல்செய்யப்பட்டுக் கொஞ்சம்தைர்யத்தை அடைந்தான். அவன் (கண்களை) மூடிப் பிறகு திறந்ததும், (அவ்வாயுதங்களைத்) தொட்டுத்தொட்டு அடிக்கடி அவைகளைப்பார்க்கவும் தொடவும் பழகினன். அப்பொழுது (அர்ஜுனனால்) நன்மொழிகூறப்பட்ட உத்தரன் கூஷணத்திற்குள் தேறுதலடைந்தவனனன். மன்னரே! விராடபுத்ரன் காந்தியுள்ளவைகளும் பெரியவைகளுமான அந்த விற்களைத்தொட்டு, அர்ஜுனனைப்பார்த்து, பின்வருமாறு வசனிக்கலானன்.

நாற்பத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன், பாண்டவர்களின் ஆயுதங்களைக்கண்டு வியப்புற்று அவைகளைத்தரித்து வினவியது.)

'ஓ! ஸாரதியே! இது தேவஸம்பந்தம்பெற்றதோ? ஸர்ப்பமோ? அல்லது வில்லோ? இதில் தர்ப்பாக்கினிபோல ஜ்வலிக்கின்றவைகளும் காந்தியுள்ளவைகளும் பெரியவைகளும் தங்கமயமானவைகளும் நூறுஇதழ்களுள்ளவைகளுமான தாமரைப்புஷ்பங்கள் தனித்தனியாக விளங்குகின்றன. இதில் நான்குபக்கத்திலும் ரத்னங்களோடுசேர்க்கப்பட்ட பொன்மயமானபொட்டுக்

களும் ஒளிவிடுகின்றன ; பின்புறத்தில் பொன்னல் அலங்கரிக்கப் பட்ட சந்த்ரப்ரபைகளும் ஸூர்யப்ரபைகளும் பொற்றாமரைமலர் களும் தனித்தனியாக விளங்குகின்றன. ஆச்சரியப்படத்தக்க ரூபமுள்ளதும் பயங்கரமானதும் அச்சந்தரும் தோற்றமுள்ளதும் கருநெய்தலுக்கொப்பானதும் பொன்னல் அலங்கரிக்கப்பட்டது மான இந்தவில்லானது யாருடையது ?******* கொம்புகளுள்ள பொன்மயமான எருதுகளைப் பின்புறத்திலுடையதும் மணிகளா லும் பொன்னாலும் அலங்கரிக்கப்பட்டதும் ஒருபனை உயரமுள்ள தும் நல்லநிறமுள்ள பொன்மயமான பத்துக்குரங்கு (ப்ரதிமை) களுள்ளதுமான இந்தவில்லானது யாருடையது ? வெல்லத்தற்கரிய தும் மிகநீண்டதும் நல்லரூபமுள்ளதும் (பிறரால்) அவமதிக்கமுடி யாததும் ஆச்சர்யகரமுமான இப்படிப்பட்ட இந்தவில்லானது யாருடையது ? ஸாரதியே ! முழுவதும் கவசம்பூட்டப்பட்டவை களும் சந்த்ரஸூர்யர்கள்போல மாசற்றஒளியும் நல்லரூபமும் பார்க்க மிக்க அழகும் குசாக்னிக்குஒப்பான காந்தியுமுள்ளவை களுமான அன்னப்பறவைகள் பின்புறத்தை அடைந்திருப்பதும் சார்ங்கத்திற்கும் காண்டீவத்திற்கும் ஒப்பானதுமான இந்தவில் யாருடையது ? ஸ்வர்ணமயமான சரீரமுள்ளதும் மின்னற்கூட்டத் திற்கு ஒப்பானதும் நீலக்கற்களால் இழைக்கப்பட்டதும் த்வார மில்லாததும் பொன்மயமும் நான்காவதுமான ஒரு வில் விளங்கு கின்றது. ஸ்வர்ணமயமான இந்தவில்லினுடைய பின்புறத்தில் கவசத்தால்மூடப்பட்ட மீன்கள் இருக்கின்றன. ஸாரதியே ! படமெடுத்த ஸர்ப்பம்போல உயர்ந்திருக்கின்றதும் சிறந்ததும் உறுதியாயிருப்பதினல் வளைக்கமுடியாததும் இந்த்ரதனுஸுக்கு ஒப்பானதும் திவ்யமுமான இந்தவில்லானது யாருடையது ? இதில் பொன்மயமான ஆயிரம் சிறிய ம்ருகப்ரதிமைகளும் பதி நான்குபுலிகளும் ஸூர்யபிம்பங்கள்போன்ற அநேகஞ்சுட்டிகளால் அலங்கரிக்கப்பட்ட பொன்மயமான மயில்களும் விளங்குகின்றன. ஸ்வர்ணத்தால் விசித்திரமான அங்கத்துடன்கூடின இந்த ஐந் தாவதான வில் யாருடையது ? இறகுகள் கட்டப்பட்டவைகளும் கூரியமுகத்தின்நுனியுள்ளவைகளும் பொன்மயமான அம்பறாத் தூணியில் போடப்பட்டவைகளுமான இந்த ஆயிரம்சூரங்களும் நாராசங்களும் யாருடையன? மஞ்சள்நிறமும் கூர்மையும் ஸர்ப்பங் களுக்குஸமமானஸ்பர்சமுமுள்ளவைகளும் தீட்டப்பட்டவைகளும் உறுதியாயிருக்கின்றவைகளும் (லக்ஷ்யங்களில்) நேராகப்போ கின்றவைகளுமான இந்த ஐந்நூறுபாணங்களும் யாருடையவை ? கழுகிறகுகளின்பாகங்களால் வேகமுள்ளனவாகச் செய்யப்பட்ட

வைகளும் பெரியவைகளுமான இந்த விபாடங்கள் யாருடையவை? கூர்மையான முனையுள்ளவைகளும் பன்றியினுடைய காதுகள் போன்ற முட்களுள்ளவைகளும் அழகியவைகளுமான இந்த அம்புகள் யாருடையவை? வஜ்ராயுதத்துக்கும் இடிக்கும் ஸமமான ஸ்பர்சமுள்ளவைகளும் அக்னிஜ்வாலைபோன்ற தேஜஸ்ஸுள்ளவைகளும் பொன்மயமான கட்டுக்களுள்ளவைகளும் கூரியமுனையுள்ளவைகளுமான இந்த எழுநூறுபாணங்களும் யாருடையவை? மாட்டுத்தோலால் செய்யப்பட்ட உறையில் போடப்பட்டதும் நீண்டதுமான இந்தப்பாணம் யாருடையது? உறுதியும் பளபளப்பும் அழகுமுள்ள இந்தத்தண்டம் ஒளிவிடுகின்றதே, இது யாருடையது? புலித்தோலால் உறைபோடப்பட்டதும் அதிகஒளிபொருந்தியதும் திவ்யமுமான இந்தச்சங்கமானது யாருடையது? புலி அடையாளமிட்டிருக்கிற இந்த ஐந்துகத்திகளும் எதற்காக இருக்கின்றன? அழுக்கற்றதும் புலித்தோலால் மூடப்பட்டதுமான இந்தக்கத்தி யாருடையது? கருநெய்தலுக்கொப்பான நிறமுள்ளதும் பெரிதும் மஹிமைபொருந்தியதுமான இந்தக்கத்தி யாருடையது? ஸிம்மத்தோலாலும் காளத்தோலாலும் உறைபோடப்பட்டதும் கூரியமுனையுள்ளதும்மிக்கபளபளப்புள்ளதும்பெரிதுமான இந்தக்கத்தி யாருடையது? உறையின்மீது அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற ஐந்து ஸூர்யப்ரதிமைகள் காணப்படுகின்றதும் கொம்பிலால் செய்யப்பட்டபிடியிலால் மனத்தைக்கவர்வதும் பெரிதுமான இந்தக்கத்தி யாருடையது? புள்ளிமான்தோலால்செய்த உறையில் போடப்பட்டதும் எண்ணெயிட்டுத் தீட்டப்பட்டதும் நன்றுகச் செய்யப்பட்டிருக்கின்றதும் அளவுடனும் நிறத்துடனும் கூடியதும் பெரிதுமான இந்தக்கத்தி யாருடையது? இதனால் ஓர்யானை அடிக்கப்படுமாலால் அது உயிரோடிராது. ப்ருஹன்னளையே! நான் உன்னைக் கேட்கிறேன். நீ (எனக்கு இவைகளை) முறையாக உரைப்பாயாக. பெரியனவான இவையனைத்தையும் பார்த்து எனக்கு அதிகமான ஆச்சர்யம் உண்டாகிவிட்டது' என்று கூறினன்.

நாற்பத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், உத்தரனைநோக்கி ஆயுதங்களைத் தனித்தனிதுறப்பிட்டு அந்தஅந்தஆயுதங்களுக்குரியவர்களைக் கூறியது.)

உத்தரன் இவ்வாறுசொல்லக் கேட்ட பார்த்தனனவன், பயந்தவனும் (ப்ராண)ஸங்கடஹரத்தை அடைந்தவனுமான விராட

புத்ரனே மெல்லியமொழியால் நம்பிக்கையுடையவனைச் செய்து (பின்வருமாறு) சொல்லலானன். '(உத்தர!) உன்னல் முதலில் கேட்கப்பட்டதும் சத்ருசேனைகளுடைய அங்கங்களை அடிக்கின்றதும் தேவஸம்பந்தம் பெற்றதும் காண்டீவமென்று ப்ரஸித்தி பெற்றதுமான இந்தவில்லானது பார்த்தனுடையது. பிளக்கமுடியாததும் அச்சமற்றதும் ஒளியுள்ளதும் ஆச்சர்யகரமானதும் முறிக்கமுடியாததும் வெடிப்பில்லாததும் எல்லா ஆயுதங்களுள்ளும் சிறந்ததும் பொன்மயமானதும் நாடுகளைப் பெருகச்செய்கின்றதும் அநேகவர்ஷகாலமாகத் தேவர்களாலும் அஸுரர்களாலும் கந்தர்வர்களாலும் பூஜிக்கப்பட்டிருக்கின்றதுமான இந்தவில்லானது லக்ஷம்ஆயுதங்களுக்கு ஒப்பானது. இதனல் பார்த்தன் போர்க்களத்தில் தேவாஸுரர்களனைவரையும் எதிர்த்துத் தாங்கினன். இதை, முற்காலத்தில் ப்ரம்மதேவர் ஆயிரம்வர்ஷகாலம் வைத்திருந்தார்; உமாபதியானவர் அறுபத்துநான்குவர்ஷம் வைத்திருந்தார்; இந்த்ரன் எண்பத்தைந்துவர்ஷம் தாங்கியிருந்தான்; சந்த்ரன் ஐயாயிரம்வர்ஷம் தரித்திருந்தான்; அவ்வாறே, வருணன் நூறுவர்ஷம் தரித்திருந்தான்; அந்தவருணனிடத்தினின்று அக்னியானவன் மங்களகரமான அந்தவில்லை அன்புடன் பெற்றுத் தான் தரித்துவந்தான். மத்யஸ்தனை அக்னியினல் (இந்தக்) காண்டீவமானது பார்த்தனுக்குக் கொடுக்கப்பட்டது. குந்தி புத்ரனை அர்ஜுனன் அறுபத்தைந்துவர்ஷகாலம் தரிக்கப்போகிறன். இவ்விதமான வீர்யமுள்ளதும் மஹாவேகமுள்ளதும் உத்தமமும் கருநெய்தல்போன்றதுமான இந்த வில்லானது மஹாத்மாவும் ராஜாவுமான யுதிஷ்டிரருடையது. இதில் புறத்தில் பொன்மயமான புள்ளிகளும் நன்றாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ப்ரஸித்திபெற்றதும் பொற்கட்டுள்ளதும் உறுதியுள்ளதுமான இந்தவில்லானது பீமஸேனனுடையது. பின்புறத்தில் பொன்மயமான ஆயிரம் சிறிய ம்ருகப்ரதிமைகளும், பதினன்குபுலிகளும், கொம்புள்ளவைகளும் பொன்னல் செய்யப்பட்டவைகளுமான காளைகளுமுள்ளதும் பகைவர்களை வாட்டுபவனான பீமன் கீழ்த்திசை அனைத்தையும்வென்றதும் பின்புறத்தில் குசாக்நிபோலஒளிர்கின்ற தனித்தனியான (ரேகைகள்) ப்ரகாசிக்கின்றதும் தேவர்களிடங்களிலும் மனுஷ்யர்களிடங்களிலும் பூஜிக்கப்பட்டதும் ப்ரஸித்திபெற்றதும் ஒரு பனைமரஅளவுள்ளதும் ரத்னங்களாலும் பொன்னலும் அலங்கரிக்கப்பட்டதும் உத்தமமுமான இந்தவில்லானது பீமனுடையது. பொன்மயமும் அனேகவண்ணங்களால் நிறைந்தபதாகைகளை அலங்காரமாகக்கொண்டவைகளுமான மயில்கள் இருக்கின்றதும்

வளைக்கமுடியாததும் பருத்தும் நீண்டுமிருப்பதும் நல்லஉருவ முள்ளதும் (ஒருவராலும்) அவமதிக்கமுடியாததுமான இந்தவில் லானது, புத்திசாலியும் மாத்ரீபுத்ரனுமான நகுலனுடையது. இந்தவில்லை ஒத்ததும் வியப்பைத்தருவதுமான மற்றொரு வில்லா னது இளையஸஹோதரனை ஸஹதேவனுடையது. மஞ்சள்நிற முள்ள இந்தவில்லானது குருகுலத்தில் உதித்தவரும் மஹாத்மா வுமான யுதிஷ்டிரராஜருடையது. மலைகளையும் பிளக்கின்றவை களும் நல்லகாந்தியுடையவைகளும் மிகப்பெரிய உடலுள்ளவை களும் கூர்மையானமுனையுள்ளவைகளும் மிக்கஉறுதியுள்ளவை களுமான இந்த அம்புகள் பீமஸேனனுடையவை. பீமனால் இந்த அம்புகள் யானைகளைத்தடுப்பதற்காகத் தொடுக்கப்படுகின்றன. பொன்மயமானகோல்களால் அலங்கரிக்கப்பெற்று அழகியவை களும் காலதண்டத்துக்கொப்பானவைகளும் மங்களகரமாயிருப் பவைகளும் வஜ்ராயுதத்திற்கும் இடிக்கும் ஸமமான ஒளிபொருந் தியவைகளுமான இந்தஅம்புகள் நகுலனுடையவை. ஜ்வலிக் கின்றவைகளும் ஒத்தமுனையுள்ளவைகளும் நன்கு செய்யப்பட் டிருக்கின்றவைகளும் நீ கேட்பவைகளும் கூர்மையான முனையுள்ள வைகளுமான வராஹகர்ணங்கள் என்கிற இந்த அம்புகள் ஸஹ தேவனுடையவை. நீண்டதும் பசுவின்தோலாற்செய்த உறையில் போடப்பட்டதும் மஹாகோரமானதும் எல்லாப்பாரங்களையும் பொறுக்கின்றதும் பெரிதுமான இந்தக்கத்தியானது பார்த்த னுடையது. புலித்தோலால்செய்த உறையில்போடப்பட்டதும் மாசற்றதுமான இந்தக்கத்தியானது புத்திசாலியும் குந்திபுத்ரரும் ராஜாவுமான யுதிஷ்டிரருடையது. புலித்தோலால்செய்த உறை யில் போடப்பட்டதும் ஐந்து புலிப்ரதிமைகளை அடையாளமாகக் கொண்டதும் மதமிகுந்த யானைகளுடைய கழுத்துக்களை வெட்டு வதில் பழக்கமுடையதுமான இந்தக்கத்தியானது பீமனுடையது. கருநெய்தலுக்கொப்பான ஒளிபொருந்தியதும் லிம்மத்தினுடைய தோலால்மூடப்பட்டதும் கூரியமுனையுள்ளதும் மிகஅழுக்கற்றது மான இந்தக்கத்தியானது புத்திமானை பார்த்தனுடையது. பார்க்கஅழகியதும் மிக்ககூர்மையானமுனையுள்ளதும் பகைவர்க ளுடையசேனைகளை எதிரில் நாசஞ்செய்கின்றதுமான இந்தக்கத்தி யானது புத்திசாலியும் குந்தீபுத்ரனுமான அர்ஜுனனுடையது. புள்ளிமான்தோலால்செய்த உறையில் போடப்பட்டதும் அழகிய பிடியுள்ளதும் நெருப்புப்போன்ற ஒளிபொருந்தியதுமான இந்தக் கத்தியானது நகுலனுடையது. மஞ்சள்நிறமுடையதும் விசித்ரமா யிருக்கின்றதும் மணிகள் இழைக்கப்பட்ட பிடியுள்ளதும் பாரத்

தைப்பொறுக்கக்கூடியதும் நன்முக உறைபோடப்பட்டதுமான இந்தக்கத்தியானது ஸஹதேவனுடையது. பகைவர்களினவர்களையும் அழிக்கின்ற இந்தப்பெருந்தடியானது பீமனுடையது' என்று கூறினன். அர்ஜுனன், ஆயுதங்களையும் தூணீரங்களையும் ஒப்பற்ற ஒளிபொருந்தியகத்திகளையும் தனித்தனியாகப்பகுத்து உள்ளபடி விரைவாக உத்தரனுக்குக் கூறினன்.

நாற்பத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனுக்குத் தான் அர்ஜுனனென்றும் கங்கர்முதலியோர் யுதிஷ்டிரர்முதலான பாண்டவர்களென்றும் கூறியதும், தன்னுடைய பத்துப்பேர்களையும் அவற்றின்பொருளையும் சொல்லியதும்.)

மூடாத்மாவான விராடபுத்ரன், இந்தஸமயத்திலும்அவனைப் பார்த்தனென்றுதெரிந்துகொள்ளாமல், மறுபடியும் எதிரில் வினவலானன். 'மஹாத்மாக்களும் மிக்க சுறுசுறுப்புள்ளவர்களுமான இந்தப்பார்த்தர்களுடைய ஆயுதங்கள் பொன்னால் அழகியவைகளும் மனத்துக்கு இனியவைகளுமாக விளங்குகின்றன. எவர்களுடைய இந்த ஆயுதங்கள் ப்ரகாசமுள்ளவைகளாக ஒளியினால் ஜ்வலிக்கின்றனவோ சூரர்களும் யுத்தங்களில் (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவர்களுமான அந்தப்பாண்டவர்களெங்கே? தர்மமறிந்தவர்களும் பந்துக்களிடத்தில் நேசமுள்ளவர்களுமான அவர்கள் எந்தத்தேசத்தில் வஸிக்கின்றனர்? தர்மராஜரும் குந்திபுத்ரரும் தர்மசீலரும் தர்மாத்மாவும் சிறந்த தர்மமுள்ளவரும் தர்மத்தைப்பற்றி அறிந்தவரும் நல்ல புத்தியுடையவரும் தர்மத்துக்குத் தலைவராயிருப்பவரும் தர்மத்தை அனுஷ்டிப்பதற்காகவே பிறந்தவரும் தர்மங்களை அறிந்தவரும் தர்மத்தை உருவமாகக்கொண்டவரும் தர்மத்தில் நிலைபெற்றவரும் தர்மத்தைச்செய்பவரும் தர்மத்தைக் காப்பவரும் தர்மத்தை நன்கு அனுஷ்டிப்பவரும் ஸத்யத்திற்கும் கபடமின்மைக்கும் பொறுமைக்கும் ஆதாரமானவரும் தயையுள்ளவரும் தர்மத்தைத் தலைமையாகக்கொண்டவரும் தர்மதேவதையினுடையபுத்ரருமானயுதிஷ்டிரர் எங்கே இருக்கிறார்? என்னுடைய அம்மான்மார்களான பீமஸேனர் அர்ஜுனர் யுத்தத்தில் எல்லா அஸ்த்ரங்களிலும் வல்லவர்களான நகுல ஸஹதேவர்கள் ஆகிய இவர்கள் எல்லாரும் எங்கிருக்கின்றார்கள்? மஹாத்மாக்களும் எல்லாச் சத்ருக்களையும்

அழிப்பவர்களுமான அந்தப்பாண்டவர்களனைவரும் சூதாட்டத்தினால் நாட்டைத்தோற்றுக் கானகம் சென்றார்களென்று நான் கேட்டிருக்கிறேன். பாஞ்சாலராஜகுமாரியான த்ரௌபதியும் ஸ்த்ரீகளுள் சிறப்புற்றவளென்று நான் கேட்டிருக்கிறேன். அந்த க்ருஷ்ணையும் அப்பொழுது பாச்சிகைகளால் ஜயிக்கப்பட்டு அவர்களையே பின்தொடர்ந்து கானகம்சென்றாள். அவர்கள் தர்ம்மாகக் கிடைத்த ராஜ்யத்தைஇழந்து கானகம்சென்றார்களென்று நான் கேள்விப்படுகிறேன். ப்ருஹன்னளையே! தர்மத்தை அனுஷ்டிப்பவர்களான அவர்கள்எங்கே? எந்தஇடத்தில் வஸிக்கின்றார்கள்? பாண்டவர்களை நீ அறிவாயாகில் உண்மையைச் சொல். கல்யாணி! மஹாத்மாக்களான அவர்களுடைய சஸ்த்ரங்களும் அஸ்த்ரங்களும் யாதுகாரணம்பற்றி இங்குவந்தன? உன்னால் எவ்வாறுஅறியப்பட்டன? அவ்விதத்தை எனக்குக் கூறுவாயாக' என்று விஜயன்.

பிறகு, வெண்மையானகுதிரைகளையுடையவனும் குந்தீபுத்ரனுமான பீபத்ஸுவானவன், சிரித்து ராஜகுமாரனை அந்தஉத்தரனைப் பார்த்து, 'வேந்தரிற்சிறந்தவனே! என்வார்த்தையைக் கேள். நீ பயப்படாதே. நான் உனக்கு எல்லாவற்றையும் சொல்லுகிறேன். ராஜபுத்ர! இவ்விஷயத்தில் இன்னும் நீ பயப்படத் தகுந்தவனல்லை. நாங்களே வனவாஸத்தினுடைய கரையைக்கண்டவர்களான அந்தப்பாண்டவர்கள். பன்னிரண்டுவர்ஷகாலம் சென்றபிறகு; அஜ்ஞாதவாஸஞ் செய்வதற்காக இங்கு வாஸஞ்செய்துவருகிறோம். உத்தர! ஆதலால், ஸந்தேஹமில்லாத மனத்துடன் ஸாவதானமாகக்கேள். நான் ப்ரஸித்திபெற்ற அர்ஜுனன். கங்கனென்பவர் யுதிஷ்டிரர். உன்பிதாவுக்கு ருசியான ஆஹாரங்களைப் பக்குவம்செய்கின்ற வலலனே பீமஸேனன். குதிரைகளைக்கட்டுகிறவன் நகுலன். பசுக்களைக்காப்பவன் ஸஹதேவன். எவளுக்காகக் கெட்டஒழுக்கமுள்ள கீசகன் யுத்தத்தில் உடன் பிறந்தாரோடு பீமஸேனனால்கொல்லப்பட்டானோ அந்தஸைரந்த்ரியை த்ரௌபதி என்று அறி' என்றான். ஜிஷ்ணுவினுடைய இந்தச்சொல்லைக் கேட்டு, உத்தரன், வியப்பால் மலர்ந்த கண்களையுடையவனாகி இமைகொட்டாமல் பார்த்தனைப் பார்த்துக்கொண்டு, மெதுவாக, 'பார்த்தனுக்குப் பத்துப்பெயர்கள் உண்டென்று கதைகளில் நான் கேட்டிருக்கிறேன். அவற்றை நீ எனக்குச்சொன்னால் நீ சொன்ன எல்லாவற்றையுமே நம்புவேன்' என்றுசொன்னான். அர்ஜுனன், 'விராட புத்ர! அப்படியானால் என்னுடைய அந்தப் பத்துப்பெயர்களையும் உனக்குச் சொல்லுகிறேன். முன்பு உன்

ஞல் கேட்கப்பட்டிருக்கின்ற அந்தப்பெயர்களை நீ கேட்பாயாக. பொன்னுலகத்திற்குத் தலைவரும் ஐஸ்வர்யமுள்ளவருமான மஹேந்த்ரர் எனக்கு விண்ணுலகத்தில் அர்ஜுனன், பல்குனன், ஜிஷ்ணு, கிரீடி, ஸ்வேதவாஹனன், பீபத்ஸு, விஜயன், பார்த்தன், ஸவ்யஸாசி, தனஞ்சயன் என்கிற இந்தப்பெயர்களை ஏற்படுத்தினர். தேவஸ்ரேஷ்டர்கள் அவற்றை நிலைபெறச்செய்தனர்' என்று சொன்னன். உத்தரன், 'தோஷமற்றவனே! உலகத்தில் ப்ரஸித்திபெற்றுப் பாண்டவனிடத்தில் வழங்கிவருகின்ற பத்துப் பெயர்களும் குணத்தினுல் அமைந்திருப்பவைகளாக என்னுல் அறியப்பட்டிருக்கின்றன. ஸாரதியே! யாதுகாரணத்தினுல் நீ விஜயன் என்று பெயர்பெற்றாய்? எந்தக்காரணத்தினுல் ஸ்வேதவாஹனன் என்று பெயர்பூண்டாய்? எந்த நிமித்தத்தினுல் ஸவ்யஸாசி, ஜிஷ்ணு, பீபத்ஸு, அர்ஜுனன், பல்குனன், பார்த்தன், கிரீடி என்று பெயர்பெற்றாய்? ப்ருஹன்னளையே! எக்காரணத்தினுல் தனஞ்சயன்என்று ப்ரஸித்திபெற்றாய்? விரைவாகச் சொல்வாயாக. வீரனை அந்த அர்ஜுனனுடைய பெயர்களுக்குரிய முக்யகாரணங்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ப்ருஹன்னளாய்! சஞ்சலமான என்னுடையமனமானது உன்விஷயத்தில் நீ அர்ஜுனனே அல்லவே என்று இங்குமங்குமாகத் தடுமாற்றமுற்றிருக்கிறது. (உண்மையை) விரைவாகச்சொல்' என்று வினவ, அர்ஜுனன் கூறலானுன்.

'(உத்தர!) எல்லாத்தேசங்களையும்ஜயித்து எல்லாப்பக்கங்களிலிருந்தும் தனங்களைக் கொள்ளையிட்டுக்கொண்டுவந்து அந்தத் தனத்தின்நடுவில் நின்றதினுல் என்னைத் தனஞ்சயனென்று சொல்லுகிறார்கள். யுத்தத்தில் மிக்கமதங்கொண்டவர்களை யுத்தத்தில் நான் எதிர்த்துவெல்லாமல் திரும்பாத காரணத்தினுல் என்னை விஜயன் என்று சொல்லுகிறார்கள். பகைவர்களுடன் போர்புரிகின்ற என்னுடைய ரதத்தில் பொன்மயமான கவசமுள்ள வெள்ளைக்குதிரைகள் கட்டப்பட்டிருப்பதால் என்னை ஸ்வேதவாஹனன்என்று ஜனங்கள் சொல்லுவார்கள். யுத்தத்தின் மத்தியில் தேரிலிருக்கின்ற என்னுடையதலையில் ஸூர்யனுக்கும் அக்நிக்கும் ஒப்பானதும் (யாராலும்) உற்றுக்க அருமையானதும் அழகியதும் விசித்ரமாயிருக்கின்றதும் பொன்னுல் அலங்கரிக்கப்பட்டதும் இந்த்ரனுல் கொடுக்கப்பட்டதும் (ஒருவராலும்) கவரமுடியாததுமான முடியானது ஸூர்யன்போல விளங்குகிறது. அதனுல், என்னைக் கிரீடி என்று சொல்லுகிறார்கள். போர்புரிகின்றயான் ஒருகாலும் அருவருக்கத்தக்க கார்யத்தைச்செய்கிறதில்லை.

அதனல், தேவர்களுள்ளும் மனிதர்களுள்ளும் என்னை பீபத்ஸு என்று அறிகிறார்கள். போரில் என்னுடைய இருகைகளும் காண்டீவத்தை இழுக்கும்விஷயத்தில் ஒத்தசெய்கையுள்ளவைகளாகவும் பகைவர்களின் படையை அழிப்பவைகளாகவும் இருக்கின்றன. அவ்விரண்டுகைகளுள் இடக்கையானது (வலக்கையைவிட) மேலாயிருக்கிறது. அதனல், என்னை ஸவ்யஸாசி என்று சொல்லுகிறார்கள். என்னுடைய (தேகத்தின்) நிறமானது கடல்சூழ்ந்தபூமியில் (பிறரால்) அடைவதற்கு அருமையானதும் (எனக்கே) இசைந்ததுமாயிருக்கிறது. அவ்வாறு, சுத்தனுகவும் சிறந்தரூபமுள்ளவனுகவுமிருப்பதினல் என்னை அர்ஜுனன் என்று (ஜனங்கள்) அறிகிறார்கள். நான் இமயமலையின் மேற்பக்கத்தில் பகலில் உத்தரபல்குனிபூர்வபல்குனிநக்ஷத்ரங்களின் ஸந்தியில்பிறந்தவனுதலால், என்னைப் பல்குனன்என்றுசொல்லுகிறார்கள். என்னுடையதமையனர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, என்னுடைய உடலில் காயத்தை உண்டுபண்ணுகிறவனுடைய அல்லது ஒருஸமயம்யுதிஷ்டிரருடைய தேகத்தில் உதிரத்தைக்காண்பிக்கிறவனுடைய குலத்தை நான்அவமதிப்பேன்; ஐயமில்லை. அவர்களனைவர்களோடும் நான் போர்புரிவேன். எனக்கு அவர்களிடமிருந்து அவமானம் நேரிடாது. அக்காரணத்தினல் தேவர்களுள்ளும் மனிதர்களுள்ளும் நான் ஜிஷ்ணுவென்று ப்ரஸித்திபெற்றிருக்கிறேன். என்னுடைய தாயானவள் ப்ருதைஎன்று பெயருடையவள். ஆதலால், என்னைப் பார்த்தன் என்று சொல்வார்கள். நான் முன்பு காண்டவவனத்தில் தேவர்களையும் அஸுரர்களையும் கந்தர்வர்களையும் பிசாசங்களையும் ஸர்ப்பங்களையும் ராக்ஷஸர்களையும் போரில்வென்று அக்னிக்கு த்ருப்தியைச்செய்தேன். சார்ங்கமென்னும் வில்லைத்தரித்த ஸ்ரீக்ருஷ்ணனுடுசேர்ந்து நான் அக்நியை த்ருப்தியடையச்செய்து (தேவராஜனுடு போர்புரிந்தஸ்ரமத்தினல் மூர்ச்சை அடைந்து பூமியில்விழுந்துவிட்டேன்.) பூமியில் மூர்ச்சையினல்விழுந்திருக்கின்ற என்னைப்பார்த்து விண்ணுலகில்வஸிப்பவர்களும் தேவரிஷிமேம்பட்டவர்களுமான ப்ரம்மதேவரும் மஹேஶ்வரரும் வந்தார்கள். வரங்கொடுப்பவர்களான அந்தத்தேவர்களைக்கண்டு திரும்ப அறிவையடைந்து எழுந்திருந்தேன். முடியினல் பூமியில்வணங்கிய என்னை, சிறப்புற்றவர்களும் வரங்கொடுப்பவர்களுமான அந்த இரண்டுதேவர்களும் (ஆசீர்வதித்தார்கள்). என்னுடைய வீர்யத்தினலும் செய்கையினலும் பூஜிக்கப்பட்டவர்களும் ஸந்தோஷமடைந்தவர்களுமான அவ்விருவர்களும் அப்பொழுது ப்ரீதியினல் எனக்கு, 'க்ருஷ்ணன்' என்று பதினுராவது பெய

ரையும் வைத்தார்கள். எல்லாத்தேவர்களாலும் சூழப்பட்டவர் களான அவ்விருவர்களும் தாங்களாகவே மறுபடியும் என்னைப் பார்த்து, ‘அப்பா! பாண்டுநந்தன! நீ விரும்பும்வரத்தைப் பெற் றுக்கொள்’ என்று சொன்னார்கள். பிறகு, நான் அவர்களிட மிருந்து திவ்யமானவைகளும் உறுதியுள்ளவைகளுமான ப்ரம்மாஸ் த்ரம் பாசுபதம் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாத ஸ்தூணகர்ணம் ஐந்த்ரம் வாருணம் ஆக்னேயம் வாயவ்யம் வைஷ்ணவம்என்கிற அஸ்த்ரங்களைப்பெற்றேன். பிறகு, நான் மாதலியைப் பாகனைக் கொண்டு இந்த்ரனுடையதேரிலேறி (ஒருவராலும்) ஜயிக்கமுடியாத வர்களும் தேவர்களாலும்பிளக்கமுடியாத கவசமுள்ளவர்களும் வரத்தினல் கர்வமடைந்தவர்களுமானநிவாதகவசர்கள் என்கிற பெரிய அஸுரர்களை மறுபடியும் போரில் வென்றேன். போரில் புறங்காட்டாதவர்களான மூன்றுகோடி அஸுரர்களை நான் ஒருவ னுகவே போரில்வென்று மறுபடியும் தேவர்களை மகிழ்ச்செய் தேன். பிறகு, இந்த்ரபகவான் எனக்குக் கிரீடத்தைத் தாமாகக் கொடுத்தார். தேவர்களும் பகைவர்களுடையபடைகளைத் தடுக் குந்திறமையுள்ள சங்கத்தைக் கொடுத்தார்கள். நான், கடலுக்கு அக்கரையில் ஹிரண்யபுரத்தில்வாஸஞ்செய்கின்ற அறுபதினயி ரம் அஸுரர்களைக்கொன்று போரில் வெற்றிபெற்றேன். நான் பரபரப்பில்லாதவனுக நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவு மிருக்கின்ற பகைவர்களினிடையில் தேரில்நின்றுகொண்டு (பகை வர்களால்) அவமதிக்கமுடியாதவனுனேன். எனக்கு மயக்கத்தி னல் திசைகளில் தடுமாற்றம் உண்டாகிறதில்லை. அப்பனே! கந்தர்வர்களால் சண்டையில் ஜயிக்கப்பட்டுக் கந்தர்வராஜனல் ஸஹோதரர்களுடன் அபஹரிக்கப்பட்ட துர்யோதனனைப் பதினு லாயிரம்கந்தர்வர்களைக்கொன்று நான்விடுவித்தேன். என்னுடைய இந்தப்பெயர்களை நாள்தோறும்சொல்லுபவனை (துஷ்ட) ப்ராணி கள் பார்க்கமாட்டா. பகைவர்கள் அவனைத் துன்பஞ்செய்யமாட் டார்கள். சிறந்தகைகளுள்ளவனே! (பிறரால்) மிகவும் பொறுக்க முடியாத என்னுடையவீர்யத்தை இப்பொழுது பார். நீ பயப் படாதே. ஒன்றுசேர்ந்திருக்கின்ற இந்தக்கௌரவர்களை நீ பய மில்லாமல் பார். துர்யோதனனும் கர்ணனும் க்ருபரும் பாட்ட ரானபீஷ்மரும் த்ரோணபுத்ரரும் த்ரோணரும் நேரில் பார்த் துக்கொண்டிருக்கும்பொழுதே நான் எல்லாக்கௌரவர்களையும் வென்று உன்னுடையபசுக்களை மீட்டுக்கொண்டுவருவேன்’ என்று சொன்னேன்.

நாற்பத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் ப்ருஹன்னளையை அர்ஜுனனென்றுஅறிந்து முன்பு தான் செய்த பிழைகளைப்பொறுக்கவேண்டியதும், அர்ஜுனன் தான் பேடியுருவடைந்தகாரணத்தைக்கூறி அவனைஸாதியாக்கிக்கொண்டு போருக்குப் புறப்பட்டதும்.)

பிறகு, அந்தவிராடபுத்ரன், கைகளைக்குவித்துக்கொண்டு பார்த்தனைப்பார்த்து, 'தனஞ்சயரே! பூமிஞ்சயன் என்ற பெயர் கொண்ட நான் உம்மை வணங்கினேன்' என்று அபிவாதனஞ் செய்து, 'பார்த்தரே! உம்மைப் பாக்யத்தால் நான் பார்க்கிறேன். தனஞ்சயரே! உமக்கு நல்லவரவா? சிவந்த கண்களையுடையவரே! சிறந்த கைகளுள்ளவரே! மேலான யானையரசுக்கு ஒப்பானவரே! மனிதருள் மேலானவரே! அறியாமையாலும் அஜாக்ரதையினாலும் உம்மைப்பற்றி (இதற்குமுன்) நான்சொல்லிய என்னுடைய பிழைகளல்லாவற்றையும் மனத்தில்வைக்காமல் பொறுத்தருள்வீராக. (ஒருவராலும்) செய்யமுடியாத விசித்ரமான செய்கையானது உம்மால்முன்புசெய்யப்பட்ட காரணத்தால் என்னுடைய பயம் விலகிவிட்டது. உம்மிடத்தில் எனக்கு அதிகமான ப்ரீதியும் உண்டாயிருக்கிறது. உமக்கு நான் தாஸனாவேன். என்னைக்கருணையுடன் பாரும். முன்பு உமக்குத் தேர்ப்பாகனையிருப்பதற்காகச் செய்யப்பட்ட என்னுடைய ப்ரதிஜ்ஞை நிரம்பிவிட்டது. அர்ஜுனரே! எனக்கு மகிழ்ச்சியுமுண்டாகின்றது. போரில் அடங்காத மதமுள்ளவரே! இவ்வுலகில் தேவேந்த்ரகுமாரனுக்கு மஹாயுத்தத்தில் நான் பாகனாவேன் என்னும் ப்ரதிஜ்ஞையானது முற்காலத்தில்என்னால் செய்யப்பட்டது. என்னுடைய ப்ரதிஜ்ஞையானது உமக்குத் தேரோட்டுவதென்னும் காரணத்தால் நிறைவேறிவிட்டது. என் மனத்துக்கு நல்ல நிலைமையும் உண்டாயிற்று. எனக்குப் பெரும்பேறு கிடைத்தது. வீரரே! நீர் பாகனை என்னுடனே பெரியதேரின்மீதேறிப் போரில் துர்யோதனனைவென்று என்னுடைய பசுக்களைத் திருப்பும்' என்று கூறினன்.

அர்ஜுனன், 'அரசகுமார! நான் ப்ரீதியடைந்தேன். உனக்கு இப்பொழுது பயமில்லை. போரில் திறமைவாய்ந்தவனே! போர்க்களத்தில் உன்னுடைய பகைவரனைவரையும் நான் துரத்தப்போகிறேன். நீ ஸுகமுள்ளவனும் பெருந்தன்மையுள்ளவனுமாயிரு. யுத்தத்தில் பகைவர்களோடு போர்புரிகின்றவனும் அச்சந்தரும் ஒலியை வெளியிடுகின்றவனுமான என்னைப்பார். காண்டீவம் என்

கிறவில்லையும் தேவத்தம்என்கிற சங்கத்தையும் பொன்றைச்செய்த அம்புகளையும் இந்த எல்லா அம்பறாத்தூணிகளையும் என்னுடைய தேரில் விரைவாகக்கட்டு. பொன்னல் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற ஒருபட்டாக்கத்தியையும் கொண்டுவா. நான் கௌரவர்களோடு போர்புரிந்து உன்பசுக்களை விடுவித்து அரசனை ஸந்தோஷப் படுத்தி மீண்டும் பட்டணத்தில் புகுவேன். 1மேலெவ்யாபாரமாகிற ஆழ்ந்த அகழுள்ளதும் (என்) கைகளாகிற மதில்களும் வாயில்களு மூள்ளதும் 2த்ரிதண்டங்களாலும்அம்பறாத்தூணிகளாலும் நெருங் கியதும் அனேகம்கொடிகளால் நிறைந்ததும் நாணெலியாகிற பெரிய ஒலியுள்ளதும் வண்டிஉருளையின் ஓசையாகிற துந்துபி வாத்யமுள்ளதும் அம்புக்கூட்டங்களாகிற மேற்கட்டுக்களால் நிறைந்ததும் ஸிம்மநாதங்களாகிற பேரொலியுள்ளதும் என்னால் காக்கப்பட்டதுமான (இந்த) தேரின்நடுவானது உனக்கு நகரமா கப்போகிறது. காண்டீவத்தை வில்லாகக்கொண்டநான் வீற்றிருக் கும்தேரானது போரில் பகைவர்படைகளால் வெல்ல இயலாதது. ஓ! விராடபுத்ர! உன்னிடத்தினின்று பயம் விலகிப்போகட்டும்' என்று கூறினன். உத்தரன், 'குந்திபுத்ரரே! அனேகமான வீண் புலம்பலால் யாதுபயன்? மேலான என்மொழியைக்கேளும். இந்த ரன் நேரில்வந்தாலும் நான் பயப்படேன். யமன் வாயு குபேரன் இவர்களிடத்தினின்றும் நூறுத்ரோணர்களிடத்தினின்றும் நூறு பீஷ்மர்களிடத்தினின்றும் நான் பயப்படேன். யுத்தத்தில் உம் மை உறுதியுடையவரென்றும் அறிகிறேன்; போரில் ஸாக்ஷாத் கேசவனுக்கும் இந்த்ரனுக்கும் ஒப்பானவரென்றும் அறிகிறேன். ஆனல், நான் இவ்விஷயத்தை மாத்ரமே ஆலோசித்துப் புத்திமய க்கத்தை அடைகிறேன்; நிச்சயத்தை அடையவில்லை; ஒன்றையும் அறியவில்லை. இவ்வாறு, சிறந்தஅங்கங்களும் ரூபமுமுள்ளவரும் லக்ஷணங்களால் (எல்லாரினும்மேலானவரென்று) காட்டப்பட்ட வருமான உம்மை எந்தவினையின்பயனுக (இவ்விதமான) பேடி உருவம் வந்தணுகியது? கந்தர்வராஜனுக்கு ஒப்பான உம்மைப் பேடிஉருவத்தோடு (பூமியில்) உலவுகின்ற சூலபாணியாகவும் தேவ னை மஹேந்த்ரனுகவும் எண்ணுகிறேன்' என்றுகூறினன்.

அர்ஜுனன், 'தமையனுருடைய கட்டளையினல் ஒருவருஷம் இந்த ப்ரம்மசர்யவ்ரதத்தை (நான்) அனுஷ்டிக்கிறேன். இந்த உண்மையை உனக்கு உரைக்கிறேன். சிறந்தகைகளுள்ளவனே!

---

1 'அங்கங்களை உறுதியாகச்செய்தல்' என்பது பழையஉரை.

2 'எர்க்காலும் அதன் இருபுறத்திலுமுள்ள கட்டைகளும்' என்பது பழையஉரை.

நான் பேடியல்லேன்; பராதீனன்; தர்மானுஷ்டானமுள்ளவன். உர்வசியினுடைய சாபத்தினால் உண்டான (இந்தப்) பேடிவடிவமானது (என்னை) வந்து அடைந்தது. முற்காலத்தில் நான் மூத்ததமையனுருடைய கட்டளையினால் தேவலோகம்சென்றேன். அப்பொழுது, நான் ஸுதர்மைனென்கிற தேவஸபையில் உர்வசியைப்பார்த்தேன். இந்த்ரனுக்கெதிரில் நர்த்தனம் செய்கின்றவளும் சிறந்தரூபமுள்ளவளும் என்னுடைய வம்சத்துக்குத்தலைவியுமான அவளை நான் இமைகொட்டாமல் பார்த்தேன். அவள் என்னுடன் கூடவிருப்பங்கொண்டு இரவில் என்படுக்கையை வந்தடைந்தாள். நான் அவளைவணங்கித் தாயைப்போல மரியாதை செய்தேன். (அப்போது), அவள் சினந்து என்னை, 'நீ பேடியாகக்கடவாய்' என்று சபித்தாள். அதனை இந்த்ரன்கேட்டு, என்னைப்பார்த்து, 'பார்த்த! நீ பயப்படவேண்டாம். இந்தப் பேடிவடிவமானது, உனக்கு வரப்போகிற அஜ்ஞாதவாஸகாலத்தில் உதவியாகும்' என்றுசொன்னன். மழைபொழியச்செய்பவனை இந்த்ரன் இவ்வாறு என்னை அனுக்ரஹித்து, பிறகு, (பூலோகத்துக்கு) அனுப்பினன். தோஷமற்றவனே! நான் இந்தவ்ரதத்தை அடைந்து அனுபவித்துவிட்டேன். ராஜபுத்ர! நீ என்னை வ்ரதத்தைமுடித்தவனென்றும் (பிரதிஜ்ஞையைத்தாண்டிக்) கரையேறினவனென்றும் அறிந்துகொள்' என்று கூறினன். உத்தரன், 'இப்பொழுது என்னுடைய ஊகமானது வீணாகவில்லை. ஆதலால், என்விஷயத்தில் மேலான அனுக்ரஹம் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட புருஷஸ்ரேஷ்டர்கள் பேடிரூபமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். நான் யுத்தத்தில் உதவிபெற்றவனுகிறேன்; தேவர்களோடும் போர்புரிவேன். எனக்குண்டான அந்தப்பயம் நீங்கிவிட்டது. நான் என்னசெய்யவேண்டும்? எனக்குச்சொல்லும். பகைவர்களை அழிப்பவரே! நான் உம்முடைய குதிரைகளை அடக்கி நடத்துவேன். புருஷஸ்ரேஷ்டரே! நான் ஸாரத்யத்தில் கற்பிக்கப்பட்டுத் தேர்ச்சியடைந்திருக்கிறேன். மனிதரிற்சிறந்தவரே! வாஸுதேவருக்குத் தாருகனும் இந்த்ரனுக்கு மாதலியும் போல ஸாரத்யத்தில் தேர்ந்தவனென்று நீர் என்னை அறிந்துகொள்ளும். சிறந்தகைகளுள்ளவரே! மென்மையான தேரில் கட்டப்பட்டவைகளும் போரில்வெல்வதற்கு அருமையானவைகளும் பலமுடையவைகளும் ஸ்ரமத்தைப்பொறுக்கும் தன்மையுள்ளவைகளுமான இந்தக்குதிரைகள் உமக்கே தகுதியுள்ளவைகள். எந்தக்குதிரை செல்லும்பொழுது பூமியில்வைக்கப்பட்ட ஒவ்வொருகாலடியையும் (ஜனங்கள்) பார்க்கமாட்டார்களோ, எந்தக்குதிரை

யானது வலப்பக்கத்துநகத்தடியைச் சுமக்கிறதோ அப்படிப்பட்ட இந்தக்குதிரையானது ஸுக்ரீவமென்கிற குதிரைக்கு ஒப்பானது. சுமக்கும்குதிரைகளுள் சிறப்புற்றதும் மங்களகரமும் இடப்பக்கத்து நகத்தடியைத் தாங்குகின்றதுமான இந்தக்குதிரையை வேகத்திலும் மேகபுஷ்பத்துக்கு ஸமானமென்றெண்ணுகிறேன். சிறந்தமுயற்சியுள்ளதும் வலப்பக்கத்தைத்தாங்குகிறதுமான இந்தக்குதிரையானது தேஜஸிலும் வலாஹகமென்கிற குதிரையினும் சிறந்தவீர்யமுள்ளதென்று எண்ணப்படுகிறது. பொன்மயமான கவசமுள்ளதும் மங்களகரமும் இடப்பக்கத்தைத் தாங்குவதுமான இந்தக் குதிரையை வேகத்திலும் சைப்யமென்கிற குதிரையிலும் அதிகபலமுள்ளதென்று நான் எண்ணுகிறேன். இந்தத் தேரானது போரில் வில்லாளியான உம்மையே தாங்குவதற்குத் தகுதியானது. நீரும் இந்தத்தேரின்மீதேறிக்கொண்டு தேவராஜன் அஸுரர்களோடு போர்புரிவதுபோல எல்லாப்பகைவர்களோடும் நெருங்கிப் போர்புரிவதற்குத் தகுந்தவராயிருக்கிறீர் என்பது என்னுடைய எண்ணம்' என்றுசொன்னன். பிறகு, வீர்யமுள்ளவனும் பகைவர்களை அடிப்பவனுமான அர்ஜுனன், தேரினின்று கீழேகுதித்துத் தேவர்களைவந்தனஞ்செய்து காண்டீவத்தைக்கையில்எடுத்துக் காந்தியோடுவிளங்கினன். பிறகு, மிக்கதோள்வலியுள்ளவனும் பாண்டுநந்தனனுமான அர்ஜுனன், இரண்டுகைகளிலுமிருந்து சங்குவளைகளைக்கழற்றி அந்தக்கைகளில் துந்துபிவாத்யம்போல முழங்குகின்ற இரண்டு கையுறைகளையும் பூட்டி, இந்திரனால் கொடுக்கப்பட்ட திவ்யமான இரண்டுகுண்டலங்களையும் எடுத்து அணிந்து, மனத்தைக்கவர்கின்றவையும் எண்ணெய்ப்பசையுள்ளவையும் மெல்லியவையுமான தலைமயிர்களை வெண்மையான வஸ்த்ரத்தினால் தூக்கிக்கட்டிக்கொண்டு, பிறகு, கிழக்குமுகமாகநின்று சுத்தனும் அடக்கப்பட்டமனமுள்ளவனுமாகிச் சிறந்த தேரில் எல்லா அஸ்த்ரங்களையும் தியானஞ்செய்தான். எல்லா அஸ்த்ரங்களும், கைகளைக்குவித்துக்கொண்டு ராஜபுத்ரனை பார்த்தனைப்பார்த்து, 'மிக்கதைரியமுள்ளவனே! இந்திரநந்தன! இதோ நாங்கள்பணிவிடைசெய்பவராயிருக்கிறோம்' என்றுகூறின. பிறகு, பார்த்தன், (அந்த அஸ்த்ரதேவதைகளை,) நமஸ்காரஞ்செய்து கையினால்தொட்டு, 'நீங்களெல்லாரும் இந்தஸமயத்தில் என்னுடைய [1]மனத்தில் நிலைபெற்றவர்களாவீர்' என்றுசொன்னன். பிறகு, அஸ்த்ரங்களைக்கையிலேந்தி மிகக்களிப்புற்ற முகமுள்ளவனனன்; விரைவாகக் காண்டீவம் என்கிற வில்லில் நாணேற்றி (நாண்கயிற்றை) இழுத்துவிட்டான். இழுத்து

1 'நினைத்தவுடன் வருகின்றவர்களாக' என்பது பழைய உரை.

விடப்பட்டஅந்தவில்லினுடைய பேரொலியானது மலைகளைவலிந்து அடிக்கின்ற பெரிய மலையினுடைய ஒலிபோலத் தோன்றியது. பூமியானது, இடிமுழக்கமுள்ளதாயிற்று. திக்குக்களில் அதிகமாகக் காற்றுவீசியது. ஆகாயத்தில் பக்ஷிகள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தன. பெரிய மரங்கள் நடுக்கமுற்றன. ராஜரே! கௌரவர்கள் இடியின்முழக்கம்போலவும் கருடனுடைய ஒலிபோலவுமிருக்கின்ற அவ்வொலியைக்கேட்டு மனத்தளர்ச்சியடைந்து பயந்தார்கள். பலசாலியான அர்ஜுனன், சிறந்தவில்லை இருகைகளாலும் இழுத்து, இந்த்ரன் பயங்கரமான இடியினுடைய ஓசையைப் பூமியில் உண்டுபண்ணுவதுபோல, (பெருத்த சப்தத்தை உண்டுபண்ணினான்.) பெரிதான (அந்த) நாணொலியானது பேரிடியினுடைய பேரொலிபோலாகியது. பகைவர்களைக் கொல்லுகின்றவனான அர்ஜுனன் சத்ருவீரர்களைப் பயமுறச்செய்துகொண்டு தேரில் நின்றான். உத்தரன், 'பாண்டவரிற் சிறந்தவரே! நீர் ஒருவராயிருந்துகொண்டு எல்லாச் சஸ்த்ரங்களிலும் அஸ்த்ரங்களிலும் கரைகண்டவர்களும் மஹாரதர்களுமான இந்தப் பலவீரர்களையும் போரில் எப்படிவெல்லப்போகிறீர்? குந்தீபுத்ரரே! துணையற்றவராயிருக்கிறீர். கௌரவர்களோ துணையுள்ளவர்களாயிருக்கிறார்கள். சிறந்தகைகளுள்ளவரே! அதனால், நான் உம்முடைய முன்னிலையிலும் பயந்தவனாயிருக்கிறேன்' என்று சொன்னான். பார்த்தன், அப்பொழுது, சப்திக்கும்படி உரக்கச் சிரித்து (உத்தரனைப் பார்த்து), 'ஏ! வீர! நீ பயப்படாதே. கோஷயாத்திரைக்காலத்தில் மிக்க பலசாலிகளான கந்தர்வர்களோடு போர்புரிந்த எனக்கு அப்பொழுது எவன் துணையானான்? அப்படியே, பயங்கரமானதும் தேவர்களாலும் தானவர்களாலும் நிறைந்ததுமான அந்தக் காண்டவவனத்தில் போர்புரிந்த எனக்கு அப்பொழுது எவன் உதவியாயிருந்தான்? தேவராஜனுக்காக நிவாதகவசர்களோடும் மஹாபலசாலிகளான பௌலோமர்களோடும் போர்புரிந்த எனக்கு அப்பொழுது எவன் ஸஹாயனாக இருந்தான்? அப்பனே! பாஞ்சாலியினுடைய ஸ்வயம்வரத்தில் போர்க்களத்தில் அனேகஅரசர்களோடு போர்புரிந்த எனக்கு அப்பொழுது எவன் ஸஹாயனாக இருந்தான்? ஆசார்யரான த்ரோணரையும் சுக்ரனையும் குபேரனையும் யமனையும் வருணனையும் அக்னியையும் க்ருபரையும் லக்ஷ்மீபதியான ஸ்ரீக்ருஷ்ணனையும் பிநாகம் என்கிற வில்லைக்கையிற்கொண்ட பரமசிவனையும் அடித்துப் பிழைக்கின்ற நான் இந்தக் கௌரவர்களோடு என் போர்புரியமாட்டேன்? என் தேரை விரைவாக ஓட்டு. உன்னுடைய மனக்கவலையானது விலகட்டும்' என்று கூறினான்.

நாற்பத்தைந்தாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் தேரில் ஸிம்மக்கொடியை விலக்கி வானரக் கொடியை நாட்டியதும், தன் சங்கமுழக்கத்தால் பயந்த உத்தரனைத் தேற்றியதும்.)

அர்ஜுனன், உத்தரனைத் தேர்ப்பாகனாகச் செய்துகொண்டும், வன்னிமரத்தைவலம்வந்து ஆயுதமனைத்தையும்எடுத்துக்கொண்டும், பிறகு, போருக்குச்செல்லத் தொடங்கி, மத்ஸ்யராஜனுடைய ஸிம்மக் கொடியையும் ப்ராதாக்களுடைய ஆயுதங்களையும் வன்னிமரத்தின் நடுவில் வைத்துவிட்டுப் புறப்பட ஆரம்பித்தான். பிறகு, பொன்மயமான வாலுள்ளதும் குரங்கினுருவமுள்ளதும் தேவஸம்பந்தம்பெற்றதும் மாயாமயமானதும் (தனக்குத்) தகுந்ததும் விச்வகர்மாவினால் அமைக்கப்பெற்றதும் அக்னியினுடைய அனுக்ரஹத்தினால் கிடைத்ததுமான துவஜத்தை மனத்தினால் தியானஞ்செய்தான். அந்தஅக்னிபகவானும் அவனுடைய எண்ணத்தை அறிந்து கொடியில் பூதங்களைச் சேர்த்து வைத்தார். (விஜயன்) தேரில் வானரக்கொடியைத் தூக்கி நிறுத்திக் காண்டீவம் என்கிற வில்லை நாணேற்றியிடும்படி செய்தான். (உடனே அந்தத்) தேரின் மீது விசித்ரமான அங்கங்களும் அதிக பலமும் திவ்ய ரூபமும் மனத்துக்கு இன்பமுமுள்ள வானரமான்து கொடியுடனும் அம்பறுத்தூணிகளுடனும் ஆகாயத்தினின்று விரைவாகக் குதித்தது. பிறகு, குந்தீபுத்ரனும் வெள்ளைக்குதிரைகளையுடையவனுமான அந்தப் பீபத்ஸுவானவன், தேரின்மீதேறிக் கத்தியைத் தரித்துக் கையுறைபூண்டு விற்பிடித்துச் சிறந்த வானரக்கொடியைப் பெற்று வடக்குத்திசையை நோக்கிச் சென்றான். பகைவர்களை அடக்குபவனும் பீபத்ஸு என்று ப்ரஸித்திபெற்றவனுமான அந்தத் தனஞ்சயன், படையின் பக்கத்தை அடைந்து, சிறந்த ஒலியுள்ளதும் சந்த்ரன்போன்ற உருவமுள்ளதும் சிறந்ததுமான தேவதத்தம் என்கிற சங்கத்தை எடுத்து உரக்க முழங்கும்படி ஊதினன். பகைவர்களை அடக்குபவனை இந்த்ரகுமாரன், சந்த்ரனையும் குந்தபுஷ்பத்தையும்போன்ற வெண்ணிறமுடையசங்கத்தை வாயில்வைத்து, காற்றினால் நிறைந்த இரண்டு கன்னங்களும் நரம்புகளுடைய வரிசைகளால் எல்லாப்பக்கத்திலும் நிறைந்த நெற்றியும் நன்றாகச் சிவந்து, ஆழ்ந்திருக்கின்றகண்களும் குறுகியும் பருத்துமிருக்கின்றகழுத்தும் மிக்கசேர்க்கைபெற்றிருக்கின்றவயிறும் மார்பு

மூள்ளவணுகிக் குறுக்காகஇருக்கும்முகத்திலல் விளங்கிக்கொண்டு மூவுலகத்தையும் நடுங்கச்செய்கிறவன்போலத் தனக்குள்ள நிறைந்த திறமையுடன் 1 பத்துக்காற்றுக்களாலும் நன்றுக ஊதினன். இவனுடைய அந்தச்சங்கத்தின்ஓசையானது, காள மேகத்தினுடைய ஒலிபோல உரக்கக்கேட்கப்பட்டது. இந்த குமாரனன அர்ஜுனன் அந்தச்சங்கத்தினுடைய ஓசையினாலும் வில்லினுடைய ஒலியினாலும் வானரத்தினுடைய சப்தத்தினாலும் தேர்உருளையின் ஒலியாலும் அசையும்பொருள் (எல்லாவற்றிற் கும்) கொடியஅச்சத்தை உண்டுபண்ணினான். பார்த்தனுடைய சங்கத்தின்ஒலியால் குதிரைகள் (பயந்து) தலைகவிழ்ந்து பூமியில் விழுந்தன. உத்தரனும் மிக்கநடுக்கமுற்றுத் தேரினிடையில் உட் கார்ந்தான். பகைவர்களைவாட்டுபவனன பார்த்தன், பிறகு, தேரினிடையில்இருந்துகொண்டே குதிரைகளைக் கடிவாளங்களால் (இழுத்து) உயரத்தூக்கி மஹாமேருவின் உச்சியில் ஸூர்யன் போல விளங்கினான். அர்ஜுனன், சங்கினாலியால் நடுக்கமுற்ற வனும் நாணொலியினால் மூர்ச்சைஅடைந்தவனுமான உத்தரனை நன்குகட்டிக்கொண்டு, 'ராஜபுத்ரர்களுள் சிறந்தவனே! நீ பயப் படாதே. பகைவர்களைவாட்டுபவனே! நீ க்ஷத்ரியனல்லனோ? புருஷ ரிற் சிறந்தவனே! பகைவரினிடையில் ஏன் வ்யஸனப்படுகிறாய்? அணிவகுக்கப்பட்டிருக்கின்றபடைகளில் நாள்தோறும் சங்க த்வனிகளும் பேரிவாத்யங்களுடைய ஓசைகளும் யானைகளுடைய பிளிறுதல்களும் நான்குபக்கத்திலும் உன்னல்கேட்கப்பட்டிருக் கின்றன. அப்படிப்பட்ட நீ இந்தச்சங்கொலியினால் எவ்வாறு பயமுறுத்தப்பட்டாய்? நீ அறிவில்லாதமனிதன்போலப் பயந்து துயரமுற்ற ஸ்வரூபமுள்ளவனுக எப்படி ஆகலாம்?' என்று கூறினன்.

உத்தரன், '(அர்ஜுனரே!) அணிவகுக்கப்பட்டபடைகளில் நிலைபெற்றவனன நான், சங்கொலிகளையும் பேரிவாத்யத்தின் ஓசைகளையும் யானைகளுடையமுழக்கங்களையும் நாள்தோறும் கேட்டிருக்கிறேன். இவ்விதச்சங்கமுழக்கத்தை இதற்குமுன் நான் ஒருபொழுதும் கேட்டதில்லை. இவ்விதமான கொடியினுருவத்தை யும் நான் முன்பு பார்த்ததில்லை. (இவ்விதமான) வில்லினுடைய ஓசையையும் நான் ஓரிடத்திலும் முன்பு கேட்டதில்லை. இந்தச் சங்கொலியினாலும் வில்லினுடையஓசையினாலும் த்வஜத்தில் வசிக்கின்ற அமானுஷமான பூதங்களுடைய சப்தத்தினாலும்

1 நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தனஞ்சயன், ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், ஸமானன் என்பன.

தேருருளையினெலியினுலும் என்மனமானது அதிகமயக்கமடை கிறது. எல்லாத்திசைகளும் கலக்கமுற்றிருக்கின்றன. என்மன மானது துன்பமடைகின்றது. கொடியினுல்மூடப்பட்ட திக்குக்க ளெல்லாம் எனக்கு விளங்கவில்லை. காண்டீவத்தினுடையஒலி யினுல் என்காதுகள் இரண்டும் செவிடுபட்டன' என்று கூறினன். மதிமயக்கங்கொண்ட அந்தவிராடகுமாரன் கொடியையும் சங்கத் தையும் வில்லையும் அர்ஜுனனையும் மறுபடியும்மறுபடியும் நன்கு பார்த்தான். அந்தப்பார்த்தன் யுத்தத்துக்குரித்தான ஸமயத்தை அடைந்திருக்கின்ற விராடபுத்ரனைப்பார்த்து, 'சிறந்தகைகளுள்ள வனே! நீ உறுதியாயிரு. மனத்தில் நல்லநினைவுடனிரு. நான் சங்கத்தை மறுபடியும் ஊதப்போகிறேன். நீ தனியே தேரை அடைந்து இரண்டு கால்களாலும் (தேர்த்தட்டை) மிதித்துக் கொண்டு குதிரைக்கடிவாளங்களை உறுதியாகப் பிடித்து இழுத்துக் கொள்' என்றனன். அப்பொழுது, சிறந்தகைகளுள்ளவனும்பகை வர்களைத் தபிக்கச்செய்பவனுமான ஸவ்யஸாசியானவன், இவ் வாறுசொல்லிவிட்டு, பிறகு, மலைகளையும் மலைக்குகைகளையும் திக் குக்களிலுள்ளபர்வதங்களையும் பிளக்கிறவன்போலச் சங்கத்தை ஊதினன்; நாணேற்றையையும் கையுறையின்ஓசையையும் உண்டு பண்ணி ப்ராணிகளை மயக்கினன். உத்தரனும் பதுங்கிக்கொண்டு தேரின்நடுவில் உட்கார்ந்தான். மறுபடியும் தனஞ்சயன் அவனை ஸமாதானப்படுத்தினன். அந்தஅர்ஜுனனுடைய சங்கத்வனி யாலும் தேருருளையின் ஒலியாலும் காண்டீவத்தினுடைய ஓசை யாலும் பூமி நடுங்கிற்று.

நாற்பத்தாருவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரோணர், அர்ஜுனனுடையசங்கத்வனிமுதலியவற்றல் அவனை நிச்சயித்து துர்யோதனனுக்கு அவ்விஷயத்தைத்தெரி வித்துத் துர்நிமித்தங்களையுங்காட்டியது.)

பிறகு, எல்லாவில்லாளிகளுள்ளும்சிறந்தவரும் பகைவர்களை அடக்குகிறவரும் பரத்வாஜருடைய புத்ரருமான த்ரோணர், ராஜா வான துர்யோதனனைப்பார்த்து, '(துர்யோதன!)தேரின்பேரொலி உண்டாகின்றது. சங்கமும் உரக்கஊதப்படுகிறது. பூமியும் நடுங்கு கிறது. ஆதலால், இவன் ஸவ்யஸாசியைத்தவிர வேறுஒருவனுமல் லன். அரசனே! இப்பொழுது நமக்குக் கேட்டை விளைவிக்கக்கூடிய

இவ்விதமான துர்நிமித்தம் தோன்றுகிறது. பகைவரைவாட்டுபவனே! நமதுசேனையில் வெற்றியை நான் காணவில்லை. சஸ்த்ரங்கள் விளங்கவில்லை. வாகனங்களும் மகிழவில்லை. நன்றுகமூட்டப்பட்டிருக்கிற அக்னிகளும் ப்ரகாசிக்கவில்லை. அவைகள் மங்களகரமாகவுமில்லை. நமக்கு (முன்னிலையில்) ம்ருகங்கள்எல்லாம் கொடிய உருவமுள்ளவைகளாக ஸூர்யனுக்கு எதிராகக் கத்துகின்றன. வலப்புறமாகச்செல்லுகின்ற பக்ஷிகளும் பெரும்பயத்தைத் தெரிவிக்கின்றன. இதோ நரியானது ஊளையிட்டுக்கொண்டு சேனையின்மத்தியில் ஓடுகிறது. காடைகள் பெரியஅச்சத்தைத் தெரிவித்துக்கொண்டு ஆகாசத்தில் கத்துகின்றன. உங்களுடைய (தேகத்திலிருக்கும்) ரோமங்களைச் சிலிர்த்திருக்கின்றனபோலக் காண்கிறேன். யானைகள் சுறுசுறுப்பில்லாதஅங்கங்களுள்ளவைகளாகவும் அதிகத்துன்பத்தைஅடைந்தவைகளாகவும் அடிக்கடி கொட்டாவிவிடுகின்றன; ஸ்தம்பித்துநின்றுகின்றன. குதிரைகள் கண்ணீர்களைச் சொரிகின்றன; எப்பொழுதும் நீர்விடுவதுடன் அடிக்கடி மலத்தையுங்கழிக்கின்றன. பூமியானது ரக்தத்தால் நனைந்திருக்கிறது. திசைகளெல்லாம் மிகப்புகைவனவாயிருக்கின்றன. ஸூர்யனும் ப்ரகாசிக்கவில்லை; அதிகமானபயத்தைத் தெரிவிக்கிறான். யானைகளும் மிகப்பயப்படுகின்றன. யுத்தவீரர்களும் அதிகமாகப்பயந்துவிட்டார்கள். உங்களுடையபடை அவமானத்தை அடைந்துவிட்டது. ஒருவனுவது யுத்தஞ்செய்வதற்கு விரும்பவில்லை. அந்தயுத்தவீரர்களனைவரும், துக்கம்நிறைந்தமுகமுள்ளவர்களும் ப்ரஜ்ஞையற்றவர்களுமாகி அடிக்கடி தெற்குத்திக்கைப்பார்க்கின்றார்கள். ம்ருகங்களும் பறவைகளும் நமக்கு இடப்பக்கமாகவே செல்லுகின்றன. நன்றுகவாசிக்கப்பட்டவாத்யமுழக்கங்களும் கம்பீரமாக ஒலிக்கவில்லை. கொடிமரங்களுடையநுனிகளில் காக்கைகள் வந்தடைகின்றன. அது மங்களமன்று. மேகத்தினுடையஒலிபோலக் கம்பீரமானதேரோசையானது விரைவில் நீண்டதாகக் கேட்கப்படுகிறது. தனஞ்சயனைத் தவிர இவன் வேறொருவனுமல்லன். இந்த்ரகுமாரனை அர்ஜுனனைத் தாங்கிவருகின்றதும் கனைக்கின்றதுமான குதிரைகளின் ஒலியும் தேரிலுள்ளகுரங்கின் திவ்யமான பெரியஓசையும் கேட்கப்படுகின்றன. பார்த்தனுடையசங்கமுழக்கத்தினால் என்னுடைய இரண்டுகாதுகளும் செவிடாயின. எல்லாப்படைகளும் அதிகப்பயமடைந்துவிட்டன. இவன் தனஞ்சயனைத்தவிர வேறொருவனும் அல்லன். நாமனைவரும் பகைவர்களை அடக்கும் அரசனை உன்னை முன்னிட்டுக்கொண்டு பசுக்களை ஓட்டிவிட்டுப் படையை

மூன்றுகப்பங்கிட்டுக் கொடிகளையும் உயரத்தூக்கிநிறுத்தி வரிசைப் படுத்தப்பட்டசேனையுடன் பகைவர்களை அடிப்பதில் முயற்சியும் உள்ளவர்களாயிருப்போம். இந்தத்தனஞ்சயன், கூர்மையுள்ள அம்புகளால் இந்தச்சேனையை வருந்தச்செய்து எல்லாஅரசர்க ளுடையமுடியிலும் இடக்காலைவைக்கப்போகிறான். இந்தப்பீபத் ஸுவானவன் தேவாஸுரர்களாலும் ஜயிக்கமுடியாதவன். திக் குக்களில் [1]குல்மங்கள்ஏற்படுத்தப்படலாம். நாம் முயற்சியுள்ள வர்களாக அர்ஜுனனுடன் போர்புரிவோம்' என்று கூறினர்.

நாற்பத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் த்ரோணரை அவமதித்துச் சேனையை உத்ஸாஹப்படுத்தியது.)

பிறகு, துர்யோதனராஜன், போர்க்களத்தில் பீஷ்மரையும் ரதிகர்களுள்சிறந்தவரான த்ரோணரையும் மிகுந்தபலசாலியான க்ருபரையும்பார்த்து, 'ஆசார்யர்களே! இந்த விஷயமானது என்னுலும் கர்ணனுலும் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றது. பின்னும்சொல்லுகிறேன். நான் அதைச்சொல்லி த்ருப்திஅடைய வில்லை. தோல்வியை அடைவிக்கப்பட்டவர்களான அந்தப்பாண் டவர்கள் காட்டில்பன்னிரண்டுவர்ஷமும்தேசத்தில்(ஒருவராலும்) அறியப்படாமல் (ஒருவர்ஷமும்) வஸிக்கவேண்டுமென்பதே நம் முடைய ப்ரதிஜ்ஞையன்றோ? அவர்களுக்கு அந்தப் பதின்மூன்று வதுவர்ஷம் முழுதும் நிறைவேறவில்லை. அஜ்ஞாதவாஸமயத் தில் பீபத்ஸுவானவன் நம்மால்தரிந்துகொள்ளப்பட்டான். அஜ்ஞாதவாஸகாலமானது நிறைவேறுமலிருக்கையில் பீபத்ஸு வானவன் (இங்கு) வருவனேயாகில் மறுபடியும் பாண்டவர்கள் பன்னிரண்டுவர்ஷகாலம் வனவாஸஞ்செய்யவேண்டும். அவர்கள் தாம் பேராசையினுல் (அந்தப்ரதிஜ்ஞாகாலத்தை) அறியவில்லை யோ; நமக்குத்தான் மோகம்வந்ததோ. இவர்களுக்கேற்பட்ட (ப்ர திஜ்ஞாகாலத்தினுடைய) குறைவையும் மிகுதியையும் பீஷ்மர் அறி யத்தக்கவர். கார்யங்கள் இரண்டுபடுங்காலத்தில் எப்பொழுதும் ஸந்தேஹமுண்டாகின்றது. ஒருவிதமாக எண்ணப்பட்டிருக்கின்ற கார்யம் வேறுவிதமாக முடிகிறது. [2]உத்தரனைத்தேடுகின்றவர்க

---

1 பிறர்களால்நுழையமுடியாத காவற்படை.

2 'உத்தரகோக்ரஹணத்தை' என்பது பழையஉரை.

ளும் மாத்ஸ்யர்களுடைய சேனையோடு யுத்தம்செய்ய விருப்ப முள்ளவர்களுமான நமக்குப் பீபத்ஸுவானவன் வந்துவிடுவனே யாகில் இதைக்காட்டிலும் வேறு என்னகார்யம் இருக்கின்றது? பாண்டவர்களைத் தேடுவதானது த்ரிகர்த்தர்களுடைய கார்ய மென்று ஏற்படுத்தப்பட்டது. ஏனென்றால், ஸுசர்மாவானவன் மாத்ஸ்யனால் முன்பு அபகாரங்களால் துன்பஞ்செய்யப்பட்டிருக் கிறான். பயமடைந்தவர்களும் நடுக்கமுற்றவர்களும் காவலிலிருப்பு கின்றவர்களும் அபயதானத்தை வேண்டுகின்றவர்களுமான அவர் களுக்கு நம்மால் அப்பொழுது அபயமானது ப்ரதிஜ்ஞைசெய்யப் பட்டிருக்கிறது. அவர்கள் தங்களால் முதலில் மாத்ஸ்யர்களுடைய பெரிய பசுக்கூட்டமானது, [1] அஷ்டமிதினத்தில் பிற்பகலில் கைப் பற்றத்தக்கதென்று நம்மிடத்தில் நிச்சயம் செய்திருக்கிறார்கள். மத்ஸ்யராஜன் பசுக்களிருக்கும் இடத்தைக்குறித்து (போர்புரிய)ச் சென்ற பிறகு, [2]நவமிதினத்தில் ஸூர்யோதயகாலத்தில் (மற்றொரு பக்கத்தில்) இந்தப்பசுக்கள் நம்மால் பிடிக்கத்தக்கவைகளென்று நிச்சயமான ஆலோசனையானது, பாண்டவர்களை அறியும்விஷ யத்தில் நம்மனைவர்களாலும் ஒருவரோடொருவர்கலந்து ஹஸ்தி னபட்டணத்தில் (முந்தியே) செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் பசுக்களை ஓட்டிக்கொண்டுபோனாலும் போவார்கள்; அல்லது, தோல்வி அடைவிக்கப்படுவார்கள்; அல்லது, நம்மை வஞ்சித்து விட்டு மாத்ஸ்யனுடன் சேர்க்கைபெற்றாலும் பெறுவார்கள். அல் லது, இந்த மத்ஸ்யராஜன் தேசத்துஜனங்களோடு அந்தப்பாண்ட வர்களையும் கூட்டிக்கொண்டு எல்லாவிதத்தினாலும் சேனையுடன் சேர்ந்து நம்முடன் போர்புரியவிரும்பினாலும் விரும்புவான். அவர் களுள் மஹாவீர்யமுள்ள தலைவனை ஒருவனே நம்மைவெல்வதற் காகத் தனித்து இங்கு வந்திருக்கலாம். அல்லது, மத்ஸ்யராஜனே நேரில் வந்திருக்கலாம். (இங்கு) வந்திருக்குமிவன் மத்ஸ்யராஜ னாயிருந்தாலும் அர்ஜுனனாயிருந்தாலும் நாமனைவரும் போர்புரிய வேண்டும். இவ்விதம் நாம் ப்ரதிஜ்ஞைசெய்திருக்கிறோம். அவ்வா றிருக்க, இந்தத்தனஞ்சயன், (யுத்தத்திற்கு) வந்திருக்கும்பொ ழுது சிறந்தரதிகர்களும் பரபரப்புள்ள மனமுள்ளவர்களுமான பீஷ்மர், த்ரோணர், க்ருபர், கர்ணன், விகர்ணன், த்ரோணபுத்ரர் இவர்களெல்லோரும் ஏன் தேர்களில் (சும்மா) நிற்கின்றார்கள்? போரைக்காட்டிலும் வேறுகார்யத்தில் பெருமையில்லை. அவ்வித மாக மனத்தை ஸாவதானமுள்ளதாகச் செய்யுங்கள். எல்லா

---

1 'ஸப்தமிதினத்தில்' என்பது வேறுபாடம்.

2 'அஷ்டமிதினத்தில்' என்பது வேறுபாடம்.

உலகத்தாரோடுமாவது இந்த்ரனேடுகூடிய தேவர்களோடாவது வஜ்ராயுதத்தைக் கையிலேந்திய இந்த்ரனேடாவது யமனேடாவது நமக்கு யுத்தம்நேரட்டும். யுத்தத்தில் பசுக்கூட்டத்தை மீட்காமல் எவன் ஹஸ்திநபட்டணம் செல்லுவான்? (என்னுடைய) பாணங்களால் அடித்துத் துரத்தப்பட்டு நழையமுடியாத கானகத்தில் முறியஅடிக்கப்பட்ட காலாட்களுள் குதிரைகள்மீது [1] வீற்றிருந்தாலும் எவன் ஜீவித்திருப்பான்? ஆசார்யரைப் பிற்படுத்தி அவ்விதமாக நீதியானது (உங்களால்) அனுஷ்டிக்கப்படலாம். ஏனெனில், இவர் அந்தப்பாண்டவர்களுடைய கருத்தை [2] அறிவார்; அதனல், நம்மைமப்பயமுறுத்துகிறார். மேலும், அர்ஜுனனிடத்தில் (இவருக்கு) மிக்க அன்பிருப்பதாக நான் காண்கிறேன். அவ்வாறிருப்பதால், (இங்கு) வருகின்ற பீபத்ஸுவைப்பார்த்துப் புகழ்கிறார். நம்முடையசேனை சிதறுதபடி நீதிசெலுத்தவேண்டும். நமது சேனையானது காட்டில் இந்தத்துன்பநிலையில் தலைவனற்றுப் பகைவருக்குவசப்பட்டுத் தடுமாறுவண்ணம் நீதி செலுத்தப்படவேண்டும். குதிரைகளுடைய கனைத்தலைக்கேட்டுப் பகைவனிடத்தில் என்னபுகழ்ச்சியுண்டாகக்கூடும்? குதிரைகள் நின்றுகொண்டிருந்தாலும் சென்றுகொண்டிருந்தாலும் எப்பொழுதும் கனைக்கின்றன. காற்றுக்கள் எப்பொழுதும் வீசுகின்றன. இந்திரன் எப்பொழுதும் மழையைப்பொழிகிறான். அப்படியே, மேகத்தினுடைய இடிமுழக்கமானது பலதடவை கேட்கப்படுகிறது. (அவ்வாறிருக்க, எதற்காக) நீர் பாண்டவர்களிடமிருந்து எல்லா ஜனங்களையும் பயமடையச்செய்துகொண்டு படை அனைத்தின் முன்னிலையிலும் பொய்யாகப் பலவாறுபேசுகிறீர்? குதிரைகளைத் தேடுகிறவர்கள், அவற்றையே அடையவிரும்புதலால், எல்லா ஒலிகளையும் அக்குதிரையொலியாகவே கேட்பதுபோல, உமது இந்தச் செய்கையும் இருக்கிறது. பார்த்தனுக்கு இவ்விடத்தில் என்ன காரியம்? பகைவரிடத்துள்ள விருப்பையும் எங்களிடத்துள்ள வெறுப்பையும் கோபத்தையும் தவிர எதனல் அவன் புகழப்படுகிறான்? ஆசார்யர்கள் கருணையுள்ளவர்கள்; கற்றறிந்தவர்கள்; [3] அபாயத்தை ஊகிப்பவர்கள். இவர்கள் கொடிய பெரியயுத்தத்தில் எவ்விதத்தாலும் கேட்கத்தக்கவர்களல்லர். உப்பரிகைகளிலும் விசித்ரமான அன்னபானங்கள்நடந்துவரும்கோஷ்டிகளிலும் விசித்ரமான கதைகளைச்சொல்லும் பண்டிதர்கள், அப்படிப்பட்ட கதைகளைச்சொல்வதிலேயே ஸமர்த்தர்கள். ஜனங்களுடைய ஸபை

---

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

3 'அஹிம்ஸையில் நோக்கமுள்ளவர்கள்' என்பது வேறுபாடம்.

யில் வியப்பைத்தரும் அநேககாரியங்களைச் செய்வதிலும் அம்பு களையும் அஸ்த்ரங்களையும் வில்லில்தொடுப்பதிலும் பண்டிதர்கள். அவ்விதமான கார்யங்களிலேயே வல்லமையுடையவர்கள். பிறருடையகுற்றங்களை அறிவதிலும் மனிதரின் ஒழுக்கங்களிலுள்ள குற்றங்களை அறிவதிலும் நன்றுகப் பக்குவம்செய்யப்பட்டிருக்கின்ற அன்னங்களில் குற்றம்கூறுவதிலும் பண்டிதர்கள்; அந்தக்கார்யங்களிலேயே திறமையுடையவர்கள். பகைவர்களுடையகுணங்களைச் சொல்வதையே இயற்கையாகக்கொண்ட பண்டிதர்களைப் பின்புறத்தில் வைத்துவிட்டு, பகைவனைக் கொல்வதற்கேற்றதான நீதியை அனுஷ்டிக்கவேண்டும். இந்தப்பசுக்களும் போகட்டும். தாமதமின்றிப் படையை அணிவகுத்திடுங்கள். பகைவர்களோடு நாம் போர்புரியுமிடத்தில் தகுந்த ரக்ஷகர்கள் ஏற்படுத்தப்படவேண்டும்' என்று கூறினன்.

நாற்பத்தேட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணன் தன்னைப்புகழ்ந்து அர்ஜுனனை அவமதித்துப் பொய்யான ப்ரதிஜ்ஞை செய்தது.)

கர்ணன், '(இங்கிருக்கின்ற) சிரஞ்சீவிகளான அனைவரையும் பயந்தவர்களும் நடுக்கமுற்றவர்களும் போரில் மனத்தைச் செலுத்தாதவர்களும் நிலைதவறினவர்களுமாக நான் காண்கிறேன். (இப்பொழுது இங்கு) வந்திருக்கும்இவன் ஜமதக்னியின் குமாரரான பரசுராமராலும் அல்லது பகைவர்பட்டணங்களை அழிக்கிறவனான இந்த்ரனாலும், அல்லது வாஸுதேவனோடு கூடின பீபத்ஸுவாலும், கரையானது கடலைத்தடுப்பதுபோல, நான் இவனைத்தடுப்பேன். பொன்னாலாகியகட்டுக்களும் பளபளப்பான மூனையுமுள்ளவைகளும் கைதேர்ந்த என்னால் தொடுக்கப்படுபவைகளும் பார்த்தனுடைய உயிரைவாங்கும் திறமையுடையவைகளுமான அம்புகள் ஸவ்யஸாசியை மறைக்கட்டும். என் வில்லினின்று விடுபட்டவைகளும் அழுந்திய கணுக்களுள்ளவைகளும் ஸர்ப்பங்கள்போலச் சீறிக்கொண்டு செல்லுகின்றவைகளுமான பாணங்களுக்கு நிவ்ருத்தி கிடையாது. அம்புகளைக் கணுக்களில்வைத்து (இழுத்துவிடுகையில்) நாண்கயிற்றினால் நன்றுக அடிக்கப்படுகிற இருகையுறைகளின்ஒலியும் அடிக்கப்படும் இரண்டு

மூரசின் ஒலிபோலக் 1 கேட்கப்படுகிறது. (என்னுடைய) பாணங்களால் ஒவ்வொன்றுகவும் நான்காகவும் ஐந்தாகவும் ஓரிடத்தில் அறுபதாகவும் ஓரிடத்தில் நூறுகவும் 2 அடிக்கப்படப்போகின்ற மாத்ஸ்யர்களுடைய தேர்களைப்பாருங்கள். என்கையினின்று விடுபட்டவைகளும் எண்ணெயிட்டுத் தீட்டப்பட்டவைகளும் இறகுள்ளவைகளுமான அம்புகளால் ஆகாயமானது மின்மினிப் பூச்சிகளோடுகூடியதுபோல விளங்கட்டும். அந்த அர்ஜுனனுடையவானரமானது என்னுல் பல்லம்என்கிற பாணத்தால் அடிக்கப்பட்டுப் பயங்கரமானசப்தங்களை வெளியிட்டுக்கொண்டு கொடியின் நுனியிலிருந்து இப்பொழுதே பூமியில்விழட்டும். பகைவர்தேரிலிருப்பவைகளும் என்னுல் எதிர்த்து அடிக்கப்பட்டுத் திக்குக்களில் ஓடுகின்றவைகளுமான பூதங்களுடைய ஒலியானது ஆகாயத்தை அளாவட்டும். கோபங்கொண்டவனை என்னுல் விடப்பட்ட அஸ்த்ரமானது இந்தப்பூமியையும் கொளுத்தும். போர்முகத்தில் ஒருவனுயிருக்கின்ற பார்த்தனைக் கொளுத்துவதில் ஐயமென்ன? பதின்மூன்றுவர்ஷகாலம் மனத்தை அடக்கியிருப்பவனும் யுத்தத்தில் மிக்கபற்றுள்ளவனுமான பீபத்ஸுவானவன் என்னிடத்தில் (தன்வலியைக்) காண்பிக்கப்போகிறுன். குந்தீபுத்ரனை அர்ஜுனன் குணசாலியான ப்ராம்மணன்போல (பாணதானங்களுக்கு)ப்பாத்ரனுயிருக்கிறுன். அவன் என்னுல் கொடுக்கப்படும்சரமாலையை 3ஸ்வதையைப்போலப் பெற்றுக்கொள்ளட்டும். பெரிய வில்லாளியான இந்த அர்ஜுனனும் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்றவன். நானும் புருஷஶ்ரேஷ்டனை அர்ஜுனனிலும் ஒருபொழுதும் குறைந்தவனல்லேன். என்னுடைய கையினின்று விடுபட்டவைகளும் அழுந்திய கணுக்களுள்ளவைகளும் அக்னிஜ்வாலைபோன்ற ஒளியுள்ளவைகளும் (பகைவர்களைக்குறித்துச்) செல்லுகின்றவைகளுமான பாணங்களுக்குத் திரும்பிவருதல் இல்லை. இங்குமங்குமாக விடப்பட்டவைகளும் அழுந்தியகணுக்களுள்ளவைகளுமான அம்புகளுடைய நெருங்கின ஒலியானது, பாடுகின்ற வண்டுகளுடையஒலிபோலக் கேட்கப்படட்டும். வானத்தினிடையில் உலவுகின்றவைகளும் கழுகிறகுகள் பூட்டப்பட்டவைகளும் சாணையில் தீட்டப்பட்டவைகளுமான அம்புகளால் இப்பொழுது விட்டிற்பூச்சிகளுடைய நிழல்போன்ற நிழலானது காணப்படட்டும். இப்பொழுது என்னுடையவில்லினுல் விடப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளும் உயிர்நிலைகளில் செல்லுகின்றவை

---

1 'கேட்கப்படலாம்' என்பது வேறுபாடம்.

2 ஒருசொல் விடப்பட்டது. 3 பிதிரருணவு.

களுமானஅம்புகள் புற்றில் பாம்புகள் நுழைவதுபோல அர்ஜுன னுடையதேகத்தில் நுழையட்டும். (அடியில்கட்டப்பட்டிருக்கிற) மயில்தோகைகளால் விளங்குகின்றவைகளும் 1ஒன்றின்பின்ஒன் றாகத் தொடர்ந்துசெல்லுகின்ற மயில்கள் போன்றவைகளும் தொடர்ச்சியாக விழுந்துகொண்டிருக்கின்றவைகளுமான அம்புக ளுடையஒலியானது (மாலைபோல இடைவெளியில்லாமல்தொடர் ந்து) செல்லுகின்ற பக்ஷிகளுடையசப்தம்போல (அனைவரா லும் கேட்கப்படலாம்.) 'யுத்தத்தில் அர்ஜுனனைக்கொன்று (உனக்கு ஜயத்தைக் கொடுப்பேன்' என்று) அக்காலத்தில் துர் யோதனனிடத்தில் என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ்ஞையாகிய கடனிலிருந்து இப்பொழுது நான் விடுபடப்போகிறேன். இந்த ரனுடைய வஜ்ராயுதம்போன்ற ஸ்பரிசமுள்ளவனும் மஹேந்த்ர னுக்குஒப்பான வன்மையுள்ளவனுமான பார்த்தனைக் கொள்ளிக் கட்டைகளால் யானையைத் துன்புறுத்துவதுபோல நான் துன் புறுத்தப்போகிறேன். அம்புக்கூட்டங்களாகிற மிக்கஜ்வாலையுள்ள தும் கத்திகளையும் சக்திகளையும் கதாயுதங்களையும் விறகாகக் கொண்டதும் படைகளை எரிக்கின்றதுமான அர்ஜுனனாகிற நெருப்பைத் தணிக்கப்போகிறேன். உலகத்திலுள்ள ரதிகர்களைக் காட்டிலும் அதிரதனும் படையாளிகளான எல்லாவீரர்களுள்ளும் சிறந்தவனும் பரவசனுயிருக்கின்றவனுமான பார்த்தனை, கருடன் பாம்பைப்பிடிப்பதுபோல (நான்)கவர்ந்துகொள்ளப்போகிறேன். (மேனியில்வந்து) விழுகின்றவைகளும் பற்பலவிதமுமான என்னு டைய சூத்ரகங்களாலும் பல்லங்களாலும் மதிமயக்கமுற்ற குந்திபுத்ரன் செய்யவேண்டியவிஷயத்தை அறியாமற்போகட்டும். நான் இப்பொழுது அம்புகளால் பார்த்தனுடையதலையை அறுத் துத் துர்யோதனனுடையமனத்தில் நெடுங்காலமாயிருக்கின்ற துக்கத்தை வேரோடு களையப்போகிறேன். இப்பொழுது என்வில்லினின்று விடுபட்டவைகளும் அழுந்தியகணுக்களுள்ள வைகளுமான பல்லங்களால் கொல்லப்பட்ட குதிரைகளையுடைய வனும் தேரையிழந்தவனும் ஆண்மையில் நிலைத்திருப்பவனும் பாம்புபோலப் பெருமூச்சுவிடுகிறவனுமான பார்த்தனைக் கௌர வர்கள் பார்க்கட்டும். ரிஷிஸ்ரேஷ்டரான ஜமதக்னியின்குமாரரிட மிருந்து என்னால் திவ்யாஸ்த்ரம் அடையப்பட்டிருக்கிறது. அதனை யும் வீர்யத்தையும் ஆதாரமாகக்கொண்டு இந்த்ரனோடும் போர்புரி வேன். கொடிநுனியிலிருக்கும் வானரமானது என்னால் பல்லத்தி னால்அடிக்கப்பட்டு அச்சத்தைச்செய்யும்ஓசைகளை வெளியிட்டுக்

1 'சிறகுமுளைத்த மயில்கள்போன்றவைகளும்' என்றும் பொருளுண்டு.

கொண்டு இப்பொழுதே பூமியில்விழட்டும். பகைவரைவாட்(பவர்களான கௌரவர்கள் பசுக்களைப்பிடித்துக்கொண்டு இஷ்டட படி போகட்டும். அல்லது, தேர்களிலிருந்துகொண்டு என்னுடை போரைப் பார்க்கட்டும்' என்றுகூறினன்.

நாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(க்ருபர், அர்ஜுனனைப்புகழ்ந்து கர்ணனையிகழ்ந்து அர்ஜுனன் ஒருவனாலும் தனித்து வெல்லமுடியாதவனுதலின் எல்லாரும்சேர்ந்து படையெடுத்துச்செல்லும்படி நிச்சயித்தது.)

அந்தக்கர்ணனுடைய அவ்விதமானவார்த்தையைக்கேட்டு நீதி நூல்களில் வல்லவரும் குருவீரர்களுக்கு ஆசார்யரும் சரத்வானுடைய புத்ரருமான க்ருபர், (கர்ணனைப்பார்த்து,) 'ஏ! ராதேய எப்பொழுதுமே உனக்குப் போரில் மிக்க கொடியபுத்தியிருக்கிறது. அர்த்தங்களுடைய ஸ்வபாவத்தை நீ அறியவில்லை. (அவற்றின்) பயனையும் நீ யோசிக்கவில்லை. சாஸ்த்ரங்களை ஆதாரமாகக் கொண்டு ஆலோசிக்கப்பட்டநீதிகள் அனேகமுண்டு. அவற்றுள் யுத்தமானது கொடும்பாவமென்று முற்காலத்துவழக்கத்தை அறிந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள். தேசகாலத்தோடுகூடிய யுத்தம் வெற்றியைக்கொடுக்கும். அதுவே, காலவேறுபாட்டோடுகூடியிருந்தால் இவ்வுலகில் கேட்டைவிளைவிக்கும். தகுந்தஇடத்திலும் தகுந்தகாலத்திலும் வெளியிடப்பட்டவிக்ரமமானது மங்களத்தின்பொருட்டாகும். (தேசகாலங்களுடைய) ஒற்றுமையிலில் மேன்மேலும் கார்யம்செய்யப்படவேண்டும். ரதஞ்செய்பவனுடைய அதிகப்ரமத்திலில் ஸாதிக்கத்தக்க கார்யத்தை, பண்டிதர்கள் (வெற்றியைக்கொடுக்கக்கூடிய தென்று) நம்பமாட்டார்களல்லரோ? (தற்காலநிலைமையை) ஆலோசிக்குங்கால், பார்த்தனோடு போர்புரிவதற்காக நெருங்குவது நமக்குத் தகுந்ததன்று. ஏனெனில், (இந்தஅர்ஜுனன்) ஒருவனுகவே போரில் பகைவர்களைஎதிர்த்து அடிப்பதற்கு வல்லமைபொருந்தியவன். (இவன்) ஒருவனுகவே (முன்பு) கௌரவர்களைக் காப்பாற்றினன்;

---

1 'பண்டிதர்கள், 'என்னுல்செய்யப்பட்ட இந்தரதம் மிகவும் உறுதியானது. இதனுல் தேவர்களையும் ஜயிக்கலாம்' என்னும் ரதகாரனுடையவார்த்தையைநம்பி, தேசகாலங்களைக்கவனியாமல் போருக்கு முயற்சிசெய்யார்கள். அதுபோல உனதுவார்த்தையைநம்பி நாங்கள் எவ்வாறு யுத்தம் செய்யலாம்?' என்பது பழையஉரை.

ஒருவனுகவே அக்னியை திருப்தி அடையும்படிசெய்தான் ; ஒருவனுகவே ஐந்துவர்ஷகாலம்ப்ரம்மசர்யத்தை அனுஷ்டித்தான்; ஒருவனுகவே ஸுபத்ரையை (ரதத்தின்) மீதேதற்றிவைத்துக்கொண்டு கண்ணனை த்வந்த்வயுத்தத்துக்குஅழைத்தான்;(ஒருவனுகவே)வனவாஸமயத்தில் ஸைந்தவனை ஜயித்து, பிறகு, க்ருஷ்ணையை மீட்டுக் கொண்டுவந்தான் ; ஒருவனுகவே ஐந்துவர்ஷகாலம் இந்த்ரனிடத்திலிருந்து அஸ்த்ரங்களைக்கற்றுக்கொண்டான் ; ஒருவனுகவே பகைவர்களைவென்று கௌரவர்களுக்குப் புகழை உண்டுபண்ணினன். பகைவரை அடக்குபவனன அர்ஜுனன் ஒருவனுகவே கந்தர்வராஜாவான சித்ரஸேனனையும் எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாத அவனுடைய சேனையையும் போரில் பலத்திலுல் வென்றுன். (இந்தப்) பார்த்தன் ஸ்வயம்வரத்தில் க்ஷத்ரியர்களை ஜயித்துச் செல்வமுள்ளபாஞ்சாலியை அடைந்து அவளை எடுத்துக்கொண்டு சென்றுன். நீ அப்பொழுது எவ்விடம் சென்றிருந்தாய்? அவ்வாறே, தேவர்களாலும் கொல்லத் தகாதவர்களான நிவாதகவசர்களும் காலகேயர்களென்கிற அஸுரர்களும் ஒருவனுலேயே யுத்தத்தில் (அடித்துத்) தள்ளப்பட்டார்கள். ஏ! கர்ண! அந்தப் பாண்டவர்களுள் ஒவ்வொருவராலும் மன்னர்கள் ஸ்வாதீனப்படுத்தப்பட்டதுபோல நீ ஒருவனுக இவ்வுலகில் முன்பு எந்தக் கார்யத்தைச் செய்திருக்கிறுய்? இந்த்ரனும் யுத்தத்தில் பார்த்தனேடு போர்புரிவதற்குத் தகுந்தவனல்லன். அந்தப் பார்த்தனேடு யுத்தம்செய்ய விரும்புகிறவனுக்கு மருந்துசெய்யத்தக்கது. நீ கோபங்கொண்டிருக்கின்ற பாம்பின்பல்லை வலக்கையைத்தூக்கி ஆட்காட்டிவிரலால் பிடுங்கிஎடுப்பதற்கு விரும்புகிறுய்! அல்லது, மதங்கொண்டு காட்டில் தனித்துஸஞ்சரிக்கின்ற ஒருயானையின்மீது அங்குசமில்லாமலே ஏறிப் பட்டணம்செல்ல விரும்புகிறுய். நீ நெய்பிலல் நனைக்கப்பட்டவனும் மெல்லியஆடையை உடுத்தவனுமாகி, நன்றுகமூட்டப்பட்டு நெய்யினுலும் இறைச்சியினுலும் ஊனீராலும் ஹோமம்செய்யப்பட்ட அக்னியின்நடுவில் செல்ல விரும்புகிறுய். கர்ண! 1 எவன் சரீரத்தைக் (கயிறுகளால்) கட்டிக்கொண்டும் அவ்வாறே கழுத்தில் கல்லைக்கட்டிக்கொண்டும் இருகைகளாலும் ஸமுத்ரத்தைத்தாண்டுவான்? அதில் ஆண்மையேது? கர்ண! அஸ்த்ரப்பயிற்சியில்லாதவனும் மிக்க பலமற்றவனுமான எவன் அஸ்த்ரத்தில் பயிற்சியுள்ளவனும் சிறந்தபலசாலியுமான அப்படிப்பட்ட பார்த்தனுடன் போர்புரியவிரும்புவனே அவன் கெட்டபுத்தியையுடையவன். நம்மாலேயே இப்புவியில் பதின்

1 வேறுபாடம்.

மூன்றுவர்ஷகாலம் துன்பமுறும்படி செய்யப்பட்ட பார்த்தன கட்டிலிருந்துவிடப்பட்ட ஸிம்மம்போல நம்மை மிச்சம்வைக்கா போகிறதில்லை. கிணற்றில்மறைக்கப்பட்ட நெருப்புப்போலத் தன இடத்தில்வாஸஞ்செய்யும் பார்த்தனை அறியாமையால் எதிர்த்து சென்று மிக்க பயத்தைஅடைந்துவிட்டோம். பஞ்சுக்குவியலில இட்டநெருப்பை ஒருவன் எவ்வாறு அவிப்பான்? போரில் கொடிய மதங்கொண்டவனும் (போருக்கு) வந்திருக்கின்றவனுமான பார்த்தனை நாம் (எல்லோருஞ்) சேர்ந்து (எதிர்த்துப்) போர்பு வோம். நாம் முயற்சியும் வன்மையுமுள்ளவர்களும் படைை அணிவகுத்துக்கொண்டவர்களும் (பகைவனை) அடக்கும் தன்மை யுள்ளவர்களுமாகி, யுத்தத்தின்பொருட்டு ஸந்நத்தனாகவந்திரு கின்ற இந்த்ரகுமாரனை பார்த்தனை (எதிர்ப்போம்.) வஜ்ரபாண யான மஹேந்த்ரனை அஸுரர்கள் சூழ்ந்துகொள்வதுபோல தேராளிகளிற்சிறந்த அர்ஜுனனைத்தேராளிகளாகிய (நாம்) அ வரும் முயற்சியுடன் தகைந்து நான்குபக்கத்திலும் சூழ்ந்துகொ வோம். கர்ண! த்ரோணர், துர்யோதனன், பீஷ்மர், நீ, த்ரோண புத்ரன், நான் ஆகிய எல்லாரும் பார்த்தனை (எதிர்த்துப்) போ புரிவோம். நீ ஸாஹஸம்செய்யாதே. நாம் ஒன்றுசேராமல் யு த்தில் பார்த்தனை வெல்லப்போகிறதில்லை. போரில் நாமெல்லே ரும் ஒன்று சேர்ந்தே பார்த்தனை வெல்வோம்' என்று கூறினர்

ஐம்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணன் க்ருபரை நிந்தித்ததும், அஸ்வத்தாமா கர்ணனையும் துர்யோதனனையும் நிந்தித்ததும்.)

அரசரே! போர்வீரர்களுள் தலைவனை கர்ணன் க்ருப டையவார்த்தையைக்கேட்டுக் கோபங்கொண்டு ப்ராம்மணராக க்ருபரை நிந்தித்து மறுபடியும் (பின்வருமாறு) வசனிக்கல னன். 'ஆசார்யர் பயத்தினால் பகைவனிடத்தில் அன்புபார ட்டுகிறாரென்று நான் நினைக்கிறேன். பயந்திருப்பவர் போ புரியவேண்டாம். நான் போர்புரிகிறேன். ஐயா! ப ஹீனரான உமக்கு, வாருணம் ஆக்னேயம் யாம்யம் வாய யம் என்கிற அஸ்த்ரங்களும் ப்ரம்மசிரஸ் என்கிற அஸ்த்ரமு வீண். (உம்மாலும்) மஹாரதர்களாயிருக்கின்ற 1 தகப்ப 2 பிள்ளைகளாலும் மித்ரனுக்குச்செய்யவேண்டியதான இந்த

1,2 த்ரோணர் அஸ்வத்தாமா என்றுகருத்து.

காரியம் செய்யப்பட்டது. எஜமானனுடையசோறும் உங்களால் அனுபவிக்கப்பட்டது. நீங்கள் இஷ்டப்படிபோகலாம். நீர் நாள் தோறும் பிச்சையெடும்; யாகங்கள்நடக்குமிடம்செல்லும்;ஸ்ராத்த போஜனங்களைச் சாப்பிடும்; இப்பொழுது யுத்தத்தினுல் எங்களைப் பயப்படுத்தாதீர். பரசுராமரிடமிருந்து அப்யஸிக்கதும் என்னுல் விடப்பட்டதுமான அஸ்த்ரமானது இந்தப்பூமியையும் கொளுத்தும்; பாண்டுபுத்ரர்களுள் ஒருவனை இந்த அர்ஜுனனை யுத்தத்தில்கொளுத்துமென்பதில் ஸம்சயமென்ன? மாத்ஸ்யர்கள் பாண்டவனைச்சார்ந்து பலமுள்ளவர்களும் பகைவர்களுடையபடையை அழிப்பவர்களுமான கீசகர்களுடைய வழியை வந்தடையப் போகிறீர்கள். அவர்களை நான் கொல்லப்போகிறேன். நீர் வீட்டுக்குப் போகலாம். வேதமோதுகின்றவர்களும் பிறரிடத்தில் நேசித்துப் பேசுகின்றவர்களுமான (உங்களுக்கு இங்கு) என்ன காரியம்?' என்றுகூறினன். பேசுகிறவர்களுள்சிறந்தவரும் ப்ரதாபமுள்ளவருமான அஸ்வத்தாமா,அவனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு, துர்யோதனனையும்பார்த்துச் சொல்லலானுர்.

'கர்ண! நாம் இன்னும்பசுக்களைஜயிக்கவில்லை; வேறுஎல்லையையும் அடையவில்லை; ஹஸ்திநபட்டணத்தையும் அடையவில்லை. நீயோ புகழ்ந்துகொள்ளுகிறாய். ப்ராம்மணர்கள் அனேக தர்ம சாஸ்த்ரங்களைப் படித்திருக்கிறார்கள். அவைகளில்அரசனைச் சூதாட்டத்தில் ஜயிக்கலாமென்பதைப் பார்த்ததுண்டா? பெரிய சண்டைகளைச்செய்து (பகைவர்களை) வென்று மிகுதியாகப் பொருளை அடைந்து பூமிமுழுதையும் ஜயித்தும் இவ்வுலகில் கற்றறிந்தவர்கள் புகழ்ந்துகொள்ளுகிறதில்லை. அக்னி வாயிளுற்சொல்லாமலே (பதார்த்தங்களைப்) பக்குவம் செய்கிறான். ஸூர்யன் பேசாமலே ப்ரகாசிக்கின்றான். பூமி சராசரங்களுள்ள உலகங்களைப் பேசாமலே தாங்குகிறது. செல்வமடையத் தக்கனவும் கேட்டைஅடைவியாதனவும் நான்குவர்ணங்களுக்கும் உரியனவுமானசெய்கைகள் மஹரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; ப்ராம்மணன், வேதமோதி, தான் யாகம்செய்யலாம்; யாகம் செய்விக்கலாம். க்ஷத்ரியன், பொருளைத்தேடிவந்து, தான்மாத்திரமே யாகம்செய்யலாம்; யாகம்செய்விக்கக்கூடாது. வைச்யன் பொருள்களைப்பெற்று வேளாண்மைத்தொழில்முதலியவற்றைச் செய்யவேண்டும். சூத்ரன் நாள்தோறும் [1]நீர்நொச்சியின்செய்கையை அடைந்து நமஸ்காரத்தாலும் கட்டளையைச்செய்வதாலும் மூன்று வர்ணங்களுக்கும் பணிவிடைசெய்யவேண்டும். பெரும்பாக்யமுள்

---

1 ஜலத்தைக்கண்டவுடன் வணங்குவது நீர்நொச்சியின் செய்கை.

ளவர்கள் சாஸ்த்ரத்தில் சொல்லியமுறைப்படி நடந்து இந்தப் பூமியையும் பெற்று மிக்க பெரியயாகங்களையும் செய்கின்றூர்கள். ஓ! ஸுத! கீழ்க்குறித்த ஜாதிகளுள் உன்னுடையது எந்தஜாதி? என்ன மந்த்ரங்கள்? எந்தக் கர்மங்கள்? ராஜனுக்கு (நன்மையை)ச் சொல்லுகின்றவன், (அரசனிடத்தினின்று) போகங்களைப் பெறுகின்றவன், (அரசனை) அடக்கிஆள்பவனென்னும் ஜாதிகளுள், உன்னுடையது எந்தஜாதி?' என்றூர்.

அப்பொழுத்தாமா, கௌரவஸபையில் துர்யோதனனையும் கர்ணனையும் நன்குபார்த்து மிக்ககோபங்கொண்டு துர்யோதனனை அதட்டினர். 'எந்தக்ஷத்ரியன் சூதாட்டத்தால் ராஜ்யத்தைப் பெற்று ஸ்தோத்ரம் செய்வதற்குத் தகுந்தவனுவான்? இந்தத்ருத ராஷ்டிரபுத்ரன் அவ்வாறு கொடுந்தன்மையுள்ளவன்; தயையில்லாதவன். அவ்வாறு, பொருள்களைப்பெற்றுப் பக்ஷிவேட்டையாடுகிறவேடன்போலக் கபடத்தோடும் வஞ்சனையுள்ளஉபாயங்களோடும் ஸஞ்சரிப்பவனை எந்தப்புத்திசாலிதான் தற்புகழ்ச்சி செய்துகொள்ளுவான்? உன்னல் பொருள்கவரப்பட்ட தனஞ்சயனையாவது நகுலனையாவது ஸஹதேவனையாவது நீ எந்த [1] த்வைரதயுத்தத்தில் ஜயித்தாய்? எந்தயுத்தத்தில் யுதிஷ்டிரனும் பலசாலிகளுள்சிறந்த பீமனும் உன்னல் ஜயிக்கப்பட்டார்கள்? எந்தயுத்தத்தில் முன்பு இந்த்ரப்ரஸ்தமானது உன்னல் ஜயிக்கப்பட்டது? இழிவானகார்யங்களைச் செய்பவனே! அவ்வாறே, ஒற்றை ஆடையுடுத்தவளும் வீட்டுக்கு விலக்காயிருந்தவளும் ஸபையை அடையும்படி செய்விக்கப்பட்டவளுமான க்ருஷ்ணையை நீ ஜயித்தயுத்தம் எது? பொருளாசைகொண்டநீ, வாஸனையைவிரும்புகிறவன் சந்தனமரத்தைஅறுப்பதுபோல, இழிவானசெய்கையைக் கைக்கொண்டு இந்தப்பாண்டவர்களின் பெரியவேரை அறுத்துவிட்டாய். அதைப்பற்றி விதுரர் என்ன சொன்னர்? மனுஷ்யர்களுக்கும் புழு எறும்புமுதலான மற்றப்ராணிகளுக்குங் கூடச் சக்திக்குத்தக்கபடி கோபமிருப்பதைக் காண்கிறோம். (ஆகையால்), த்ரௌபதியினுடைய துன்பத்தைப் பாண்டவன் பொறுக்கத்தக்கவனல்லன். தார்த்தராஷ்ட்ரர்களுடைய ராஜத்தின்பொருட்டுத் தனஞ்சயன் தோன்றிவிட்டான். நீ பண்டிதனுயிருந்தும் ஆசார்யரை அவமதிக்கவிரும்புகிறாய். வைரத்தைமுடிக்கவந்தவனை ஜிஷ்ணுவானவன் நம்மில் (ஒருவரையும்) மிச்சம்வைக்கப்போகிறதில்லை. புத்திசாலியான பாண்டுபுத்ரனோடு இவ்வுலகில் தேவர்களாவது கந்தர்வர்களாவது அஸுரர்களாவது

1 இரண்டுதேராளிகள் எதிர்த்துச்செய்யும் யுத்தம்.

ராக்ஷஸர்களாவது பயத்தினால் போர்புரியமாட்டார்கள். (அர்ஜுனன்) ஒருவனையிருந்தாலும் கோபங்கொண்டு யுத்தத்தில் எவனெவனை எதிர்ப்பனை அவனவனைக் கருடன் வேகத்தால் மரத்தை ஒடிப்பதுபோல நாசஞ்செய்து (வைரத்தினுடைய) மூடிவை அடைவான். உன்னைக் காட்டிலும் வீர்யத்தினால் மேலானவனும் வில்லில் தேவராஜனுக்கும் யுத்தத்தில் வாஸுதேவருக்கும் ஒப்பானவனுமான அந்தப்பார்த்தனை எவன் பூஜிக்கமாட்டான்? தேவதையைத் தெய்வசக்தியினாலும் மனுஷ்யனை மனுஷ்யசக்தியினாலும் (எதிர்த்துப்) போர்புரிபவனும் அஸ்த்ரத்தை அஸ்த்ரத்தால் நாசஞ்செய்பவனுமான அர்ஜுனனுக்கு ஒப்பானமனிதன் எவன்? சிஷ்யன் புத்ரனைக்காட்டிலும் குறைந்தவனல்லனென்று தர்மசாஸ்த்ரங்களை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இந்தக்காரணத்தினாலும், த்ரோணருக்குப் பாண்டவன் அன்புக்குரியவனையிருக்கிறான். நீ சூதாடினதுபோலவும் இந்த்ரப்ரஸ்தத்தைக் கவர்ந்ததுபோலவும் த்ரௌபதியை ஸபைக்கு இழுத்துவந்ததுபோலவும் பாண்டவனோடு யுத்தம்செய். உனக்கு அம்மானும் கற்றறிந்தவனும் க்ஷத்ரியதர்மங்களை நன்கு அறிந்தவனும் கெட்டசூதாட்டத்தை விளையாட்டாகக் கொண்டவனும் காந்தாரதேசாதிபதியுமான இந்தச் சகுனியும் இப்பொழுது போர்புரியட்டும். காண்டீவமானது பாச்சிகைகளை எறியாது; [1] க்ருதத்தையும் [2] த்வாபரத்தையும் எறியாது. ஜ்வலிக்கின்றவைகளும் கூர்மையுள்ளவைகளுமான அந்தஅந்த அம்புகளைக் காண்டீவம் ப்ரயோகிக்கிறது. காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் கழுகிறகு கட்டியவைகளும் நன்கு சாணைபிடிக்கப்பட்டவைகளும் மலைகளையும் பிளக்கின்றவைகளுமான அம்புகள் (லக்ஷ்யங்களை அடியாமல்) நடுவில் நில்லா. அந்தகன் வாயு ம்ருத்யு அவ்வாறே வடவைத்தீ இவர்கள் ஒருஸமயம் மிகுதிவைத்தாலும் வைப்பார்கள். தனஞ்சயன் கோபங்கொண்டால் மிச்சம் வைக்கமாட்டான். நீ ஸபையில் மாமனுடன் சேர்ந்து சூதாடினதுபோலவே போரில் ஸுபலனுடைய புத்ரனை சகுனியினால் நன்கு காக்கப்பட்டுப் (பார்த்தனோடு) போர்புரிவாயாக. [3] ஆசார்யர் இஷ்டப்படி யுத்தம்செய்யட்டும். நான் தனஞ்சயனோடு போர்புரியேன். பசுக்களிருக்கும் இடத்தைக்குறித்து மத்ஸ்யராஜன் வந்தால் அவன் நம்மால் போர்புரியத்தக்கவன்' என்று கூறினர்.

---

1 பாச்சிகையின் நாலு எண்ணுள்ள பக்கம்.

2 பாச்சிகையின் இரண்டு எண்ணுள்ள பக்கம்.

3 (உனது) 'யுத்தவீரர்கள்' என்பது வேறுபாடம்.

ஐம்பத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் துர்யோதனனைக்கண்டித்ததும், கோபங்கொண்ட அஸ்வத்தாமாவை ஸமாதானஞ்செய்ததும், துர்யோதனனும் கர்ணனும் க்ருபரையும் த்ரோணரையும் பொறுக்கும் படி வேண்டியதும்.)

பிறகு, சந்தனுகுமாரரானபீஷ்மர், அந்தக்களரவஸபையில் துர்யோதனனைப்பார்த்து, அறம்பொருள்களுள்ளதும் க்ஷேமத்தையும் நன்மையையும் பயக்கத்தக்கதுமான இவ்விவார்த்தையை உரைக்கலானர். 'த்ரோணரும், (விஷயங்களை) நன்றாகஅறிந்திருக்கிறார். க்ருபரும் (விஷயங்களை) நன்றாக அறிந்திருக்கிறார். ஆசார்யபுத்ரரான அஸ்வத்தாமாவும் இயற்கையானதும் நிச்சயமுள்ளதுமான(வார்த்தையை) நன்குசொல்லுகிறார். கர்ணனே க்ஷத்ரியதர்மத்திலும் மாத்ரம் போர்புரிவதில் விரும்புகிறான். அறிவுள்ளமனிதன் ஆசார்யரை அவமதிக்கக் கூடாது. தேசகாலங்களை நன்றாகஆலோசித்து யுத்தஞ்செய்யவேண்டுமென்பது என்னுடைய எண்ணம். எவனுக்கு ஸ்திர்யன் போன்றவர்களும் (பகைவர்களை) அடிக்கும் தன்மையுள்ளவர்களுமான ஐந்துபகைவர்கள் இருக்கிறார்களோ அறிவுள்ளஅவன் அவர்களுக்கு அபிவ்ருத்தி நேர்ந்திருக்குங்காலத்தில் எவ்வாறு புத்திமயக்கம் கொள்ளமாட்டான்? தர்மத்தை அறிந்தவர்களாயிருந்தாலும், தம்கார்யத்தில் எல்லாஜனங்களும் புத்திமயக்கம் கொள்ளுகிறார்கள். ஆகையினல், அரசன் செய்யத்தக்கதின் உண்மையை அறிகிறதில்லை. துர்யோதனனும்,துர்ப்புத்தியுடையவனகி, தனஞ்சயனை நேரில்பார்த்தும் தெரிந்துகொள்ளவில்லை. புத்திஹீனனை அவன் கோபத்துக்கு உடன்பட்டவனகி (அந்த அர்ஜுனனுடைய வாஸுதேவனை) முகரவில்லை' என்றார். புத்திமான்களுள் சிறந்தவரும் பரதகுலத்தில் பிறந்தவர்களுள் மேலானவருமான பீஷ்மர், ராஜாவைப்பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டு, மறுபடியும் த்ரோணபுத்ரரைப்பார்த்து, கைகூப்பி, நல்லவார்த்தையுடன், (பின்வருமாறு) சொல்லலானர். 'கர்ணன் தேஜஸைப்பெருகச் செய்வதற்காக உம்மைப்பற்றிச் சொல்லியவார்த்தையை ஆசார்யபுத்ரரான (நீர்) பொறுத்துக்கொள்ளவேண்டும். பெரியகார்யம் நேர்ந்திருக்கிறது. குந்திபுத்ரனை அர்ஜுனன் (யுத்தத்துக்கு) வந்திருத்தலால், விரோதம்பாராட்டுவதற்கு இது காலமன்று. உம்மாலும் ஆசார்யராலும் க்ருபராலும் எல்லாம் பொறுக்கத்தக்கது.

ஆதித்யனிடத்தில் ஒளி நிலைபெற்றிருப்பதுபோலவே உங்களிடத்தில் அஸ்த்ரபாண்டித்யம் நிலைபெற்றிருக்கிறது. சந்த்ரனிடத்தில் காந்தி எவ்விதத்தாலும் குறைவற்றதாயிருப்பதுபோல உங்களிடத்தில் ப்ராம்மண்யமும் ப்ரம்மாஸ்த்ரமும் நிலைபெற்றிருக்கின்றன. ஒருவனிடத்தில் நான்குவேதங்கள் காணப்படுகின்றன; ஒருவனிடத்தில் க்ஷத்ரியதேஜஸ் காணப்படுகிறது. பாரதர்களுக்கு ஆசார்யரும் புத்ரனுடன்கூடினவருமான த்ரோணரைத்தவிர வேறொருவரிடத்திலாவது இந்த இரண்டும் முழுதும்இருப்பதாக நாம் கேட்டதில்லையென்பது என்னுடையஎண்ணம். வேதாந்தங்களும் புராணங்களும் பழமையான இதிஹாஸமும் (த்ரோணரிடத்தில் நிலைபெற்றிருக்கின்றன.) பரசுராமரைத்தவிர வேறுஎவன் த்ரோணரைக்காட்டிலும் மேலானவனாயிருக்கிறான்? ப்ரம்மாஸ்த்ரமும் வேதங்களும் இவரைத்தவிர வேறொருவரிடத்திலும் காணப்படவில்லை. ஆசார்யபுத்ரர் பொறுத்துக்கொள்ளவேண்டும். கலகத்துக்கு இது ஸமயமன்று. (இங்கு) வந்திருக்கின்ற இந்த்ரகுமாரனுடன் நாமெல்லாரும் ஒன்றுசேர்ந்து போர்புரிவோம். வித்வான்களால் இவ்வுலகில் ஸைன்யத்துக்குச் சொல்லப்பட்ட வ்யஸனங்களுள், கலகமானது முக்யமென்றும் மிகக்கொடியதென்றும் கற்றறிந்தவர்கள் எண்ணுகிறார்கள்' என்றுகூறினர். அப்பொழுது தாமா, 'புருஷரிற்சிறந்தவரே! நீதிதவறுததான எங்களுடைய இந்த (வார்த்தை) இவ்வாறு நிந்திக்கத்தக்கதன்று. ஆனால், கோபத்தினால் ஆக்ரமிக்கப்பட்ட ஆசார்யர் (அர்ஜுனனுடைய) குணங்களைச் சொன்னர். பகைவனுயிருந்தாலும் (அவனிடத்திலிருக்கிற) குணங்கள் கொள்ளத்தக்கன. ஆசார்யனுயிருந்தாலும் (அவனிடத்திலுள்ள) தோஷங்கள் உரைக்கத்தக்கன. எல்லாவிதத்தாலும் எவ்விதமுயற்சியினாலும் புத்ரன்விஷயத்திலும் சிஷ்யன்விஷயத்திலும் ஹிதத்தையே சொல்லவேண்டும். இந்த ஆசார்யர் பொறுத்துக்கொள்ளவேண்டும். இவரிடத்தில் பொறுமையை வேண்டுங்கள். ஆசார்யர் பேதிக்கப்படாமலிருந்தால் 1மிச்சமுள்ள கார்யம் நிறைவேறினதாகும்' என்றார். பரதகுலத்தில்பிறந்தவரே! பிறகு, துர்யோதனன், கர்ணனோடும்பீஷ்மரோடும்சேர்ந்து த்ரோணரையும் மஹாபலசாலியான க்ருபரையும் (பிழைகளைப்) பொறுக்கும்படி வேண்டினன். த்ரோணர், 'முதலில் சந்தனுபுத்ரரான பீஷ்மர்சொல்லிய இந்தவார்த்தையினாலேயே நான் கோபம்தணிந்தேன். இந்தஸமயத்தில் மேல்ஆகவேண்டியகார்யம் செய்யலாம். பார்த்தனைவன் துர்யோதனனை யுத்தத்தில் ஸாஹ

1 வேறுபாடம்.

ஸத்திரூலோ மோகத்திரூலோ அணுகாதபடி (நாம்) செய்யவே ர
டும். வனவாஸகாலமானது நிறைவேரூமலிருந்தால் தனஞ்சய ர
(தன்னைவெளியில்) காண்பியான். தன்செல்வத்தை அடையாத ப
ரூன (இந்தஅர்ஜுனன்) இப்பொழுது அப்படிப்பட்ட (நம் ம
டையஅக்ரமத்தைப்) பொறுக்கவில்லை. இந்தஅர்ஜுனன் துர்யே ர
தனனை எவ்விதத்தாலும் அணுகாமலும் (கௌரவ) சேனையை ம
தோற்கச்செய்யாமலுமிருக்கும்வண்ணம் முறைசெய்யவேண்டு .
கங்காபுத்ரரே! துர்யோதனரூலும் முன்பு இவ்விதமானமொ ி
உரைக்கப்பட்டிருக்கிறது. அதை நினைத்து உள்ளபடி நீர் சொல் ல
வேண்டும்' என்றுகூறினர்.

ஐம்பத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பலகாரணங்களால் பாண்டவர்களுடன் ஸந்திசெய்வது நல்லதென்றதும், துர்யோதனன்மறுத்ததும், யுத்தஞ் செய்ய ஸித்தமாகிப் படைகளைவகுத்ததும்.)

பீஷ்மர், '1கலைகளும் காஷ்டைகளும் முஹூர்த்தங்களு ஒன்றுசேர்ந்து தினங்களாகின்றன. பக்ஷங்களும் மாஸங்களு நக்ஷத்ரங்களும் க்ரஹங்களும் ருதுக்களும் சேர்க்கப்பட்டு ஸம்வ ஸரங்களாகின்றன. இவ்வாரூன காலத்தின்பிரிவினல் காலசக்ர நடைபெற்றுவருகிறது. அவைகளுடைய காலாதிக்யத்தாலு ஜ்யோதிக்ரஹங்களுடைய மாறுபாட்டினலும் ஐந்தாவதுஐந்த வது வர்ஷத்தில் இரண்டுமாஸகாலங்கள் அதிமாஸங்களாக ஏற்ப கின்றன. இந்தப்பதின்மூன்றுவர்ஷங்களுக்கும் ஐந்துமாஸங்களு பன்னிரண்டு நாட்களும் அதிகமாகின்றனவென்பது என்னுடை எண்ணம். நேற்றைக்கே (பாண்டவர்களால் ப்ரதிஜ்ஞைபண்ண பட்டிருந்த வனவாஸகாலமானது) முடிந்துவிட்டது. அக்கா ணத்தினல்தான் பீபத்ஸுவானவன் இங்குவந்தான். இந்த பாண்டவர்களால் எவைஎவை ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டனவே அவைஅவைஎல்லாம் உள்ளபடி அனுஷ்டிக்கப்பட்டன. இ விஷயத்தை இவ்வண்ணம் நிச்சயமாய்த் தெரிந்துகொண்டபிறகு பீபத்ஸுவானவன் (யுத்தத்துக்கு) வந்திருக்கிறான். (பாண்ட வர்கள்) ஐவரும் மஹாத்மாக்கள். எல்லாரும் அறம்பொருள களை அறிந்தவர்கள். யுதிஷ்டிரமஹாராஜனைத் தலைவனாக

---

1 காலத்தின்அளவுகள்.

கொண்டவர்கள் தர்மத்தினின்றுளவ்வாறு தவறுவார்கள்? தர்ம புத்ரன் காமத்திணுலாவது க்ரோதத்திணுலாவது பேராசையினுலாவது காமக்ரோதங்களாலுண்டாகும் பயத்திணுலாவது ஸ்நேஹத்திணுலாவது மோஹத்திணுலாவது தர்மத்தைத் தாண்டமாட்டான். குந்திபுத்ரர்கள் ஆசையற்றவர்கள்; ஒருவராலும்செய்யமுடியாத கார்யத்தைச் செய்தவர்கள். அவர்கள் அதர்மத்திணுல் அல்பமானநாட்டை விரும்பமாட்டார்கள். அந்தக்கௌரவநந்தனர்கள் அப்பொழுதே பராக்ரமத்தை வெளிப்படுத்த விரும்பினர்கள்; ஆனுல், தர்மபாசத்தில்கட்டுப்பட்டு க்ஷத்ரியவ்ரதத்தினின்று தவறுமலிருந்தனர். பொய்யென்றுப்ரஸித்திபெற்றது (அந்தத் தர்மநந்தனனிடத்தில்) அவமானத்தை அடையும். பார்த்தர்கள் மரணத்தைஅடைந்தாலும் அடைவார்களேயல்லாமல் பொய்யை எவ்விதத்திலும் சொல்லமாட்டார்கள். புருஷரில் மேம்பட்டவர்கள் ஸமயம்நேர்ந்தால் வஜ்ராயுதத்தைக் கையிலேந்திய மஹேந்த்ரனுல் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் தம்பொருள்களை விடமாட்டார்கள். பாண்டவர்கள் அப்படிப்பட்ட வீர்யமுடையவர்களல்லரோ? நாம், படையாளிகளனைவருள்ளுஞ்சிறந்த அர்ஜுனனைப் போரில் எதிர்த்துச் சண்டைசெய்வோம். ஆதலால், இந்தஸமயத்தில் மங்களத்தை உண்டுபண்ணுவதும் உலகத்தில் ஸாதுக்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமானகார்யம் விரைவில் செய்யப்படலாம். உங்களுடையபொருளானது பகைவரை அடையவேண்டாம். குருகுலத்தில் பிறந்தவனே! போரில் எப்பொழுதும் வெற்றியேஉண்டாகுமென்று நான் ஒருபொழுதும் எண்ணமாட்டேன். ராஜேந்த்ர! தனஞ்சயனும் வந்துவிட்டான். போர் தொடங்கப்படுமாயின், உயிரோடிருப்பதோ மரணமோ வெற்றியோ தோல்வியோ அவஸ்யம் ஒருவனே அடையும். இஃது ஐயமின்றிக் காணப்படுகிறது. ராஜேந்த்ரனே! ஆகையால், போருக்கேற்றகார்யமாவது [1] தர்மத்துடன்கூடின காரியமாவது விரைவாகச் செய்யப்படவேண்டும். தனஞ்சயன் வந்துவிட்டான். பார்த்தன் ஒருவனுகவே யுத்தத்தில் அம்புகளால் பூமியை எரித்துவிடுவான். உடன்பிறந்தவர்களோடு சேர்ந்துகொண்டு யுத்தத்தில் கௌரவர்களை எரித்துவிடுவானென்பதில் யாதுஸந்தேஹம்? கௌரவர்களுள் மேன்மைபெற்றவனே! ஆதலால், நீ விரும்பினுல் ஸந்தியைச்செய்துகொள்' என்றுகூறினர். துர்யோதனன், 'பிதாமஹரே! ப்ரபுவே! நான் நாட்

---

1 'பாண்டவர்களுடன் சண்டைசெய்யாமல் நேசித்து அவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுப்பது தர்மத்துடன்கூடின காரியம்' என்பது பழைய உரை.

டையோ க்ராமத்தையோ சேனையையோ ஏவலாளர்களையோ அல்லது சிறிதுபொருளையோ (எதையும்) பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன். போருக்குவேண்டிய கார்யமனைத்தும் நன்ற அனுஷ்டிக்கப்படலாம்' என்றுசொன்னன். பீஷ்மருடையசொல்லும் அவ்வாறே துர்யோதனனுடைய சொல்லும் ஒப்ந்தவுடன் அந்தணரிற்சிறந்த த்ரோணரும் காலத்துக்கேற்றதும் பொருள் மாறுபடாததும் போருக்குத்தக்கதும் அறத்துடன்சேர்ந்ததுமான சொல்லைச் சொல்லலானர்.

'துர்யோதன! மறுபடியும் நீ சொல்லப்படத்தக்கவனாயிருக்கிறாய். உலகத்தில் உனக்கு நிகர் யார்? உனக்குவிருப்பமிருந்தால் இந்த விஷயத்தில் என்னுடைய ஆலோசனையையும் கேள். குருநந்தன! எல்லாவிதத்திலும் என்னால் நன்மையே சொல்லத்தக்கது. அரசன், படையில் நாலிலொருபாகத்தை அழைத்துக்கொண்டு விரைவாகச் செல்லட்டும். பிறகு, (படையின்) மற்றொரு நாலிலொருபாகமானது பசுக்களை ஓட்டிக்கொண்டு போகட்டும். நாங்கள் பாதிப்படையுடன் பாண்டவனை எதிர்த்துப் போர்புரிகிறோம். நானும் பீஷ்மரும் கர்ணனும் அஸ்வத்தாமாவும் க்ருபரும் (யுத்தத்தில்) துணிவுடன் வந்திருக்கின்ற பீபத்ஸுவை எதிர்த்துப்போர்புரிகிறோம். இவ்வாறு செய்தால் அரசன் நன்குபாதுகாக்கப்படுவான்; அதைர்யத்தை அடையத்தகுந்தவனல்லன். மத்ஸ்யராஜன் மீண்டுவந்தாலும் அல்லது இந்த்ரனே வந்தாலும் கரையானது கடலைத்தடுப்பதுபோல நான் தடுப்பேன்' என்றார். மஹாத்மாவான த்ரோணர்சொல்லிய அந்தச்சொல் அவர்களுக்கு விருப்பமாயிருந்தது. கௌரவர்களுக்குஅரசனை துர்யோதனன் அவ்வாறே உடனே செய்தான். பீஷ்மர் ராஜாவையும் பிறகு பசுக்கூட்டத்தையும் அனுப்பிவிட்டு, சேனைக்குத் தலைவர்களை ஏற்படுத்தி அணிவகுக்கத்தொடங்கினர். த்ரோணருடையவாக்யம் முடிந்தவுடன், சிறந்தபுத்தியையுடைய பீஷ்மர் சொல்லலானர்.

'ஆசார்யரே! நீர் மத்தியில் நில்லும். அஸ்வத்தாமா இடப்பக்கத்தில் இருக்கட்டும். சரத்வானுடையகுமாரரும் சிறந்தபுத்தியையுடையவருமான க்ருபர் வலப்பக்கத்தைப் பாதுகாக்கட்டும். பகைவர்களால் ஜயிக்கப்படாதவர்களும் சிறந்தவலிமையுடையவர்களுமான மஹாவீர்யமுள்ளவிகர்ணனும் பகைவரைவாட்டுபவனை துர்முகனும் ஸுபலபுத்ரனை சகுனியும் மஹாபலசாலியான துஸ்ஸஹனும் த்ரோணருடைய பக்கத்தைப் பாதுகாக்கட்டும். ஸுதபுத்ரனை கர்ணரே கவசமணிந்து முதலில் நிற்கட்டும். நான் படையனைத்தையும் பாதுகாத்துக்கொண்டு பின்புறத்

தில் நிற்பேன். சூரர்களும் பெரியவில்லாளிகளும் மிக்கபலசாலிகளு மானஎல்லாமஹாரதர்களும் யுத்தத்தில்வந்திருக்கின்ற பாண்டவ ப்ரேஷ்டனை முயற்சியுடன் (எதிர்த்துப்) போர்புரியட்டும்' என்று கூறினர். கௌரவர்களுள் சிறந்தவரான பீஷ்மர் பகைவர்களு டையபடைகளால் உடைக்கஅருமையான வஜ்ரகர்ப்பம், வ்ரீஹி முகம், பத்மம், சந்த்ரார்த்தமண்டலம் என்னும் வ்யூஹங்களை ஏற் படுத்தி அந்தப்படைவகுப்பின் பின்புறத்தில் ஆயுதங்களைக் கை யில்எடுத்துக்கொண்டு பொன்மயமான பனைக்கொடியைத் தூக்கிக் கட்டித் தேரில்நின்றுகொண்டு விளங்கினர்.

ஐம்பத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(இந்த்ரன் தேவர்களுடன் விமானமேறி அர்ஜுனனுக்குத்தம்கௌர வர்களுக்குத்தம்நடத்தும் சண்டையைப்பார்க்கவந்தது.)

பிறகு, பச்சைநிறமானகுதிரைகளையுடைய மஹேந்த்ரன் ஸூதர்சனம்என்கிற விமானத்தில் எல்லாத்தேவர்களையும் ஏற்றி வைத்துக்கொண்டு பாண்டவனிருக்குமிடம் வந்துசேர்ந்தான். நடு வில் ஆயிரம்தூண்வரிசைகள் நாட்டப்பெற்றதும் ஸூர்யனுடைய மார்க்கத்தில் இருப்பதுமான அந்தவிமானத்தில் நிர்மலமான ஒரு பெரியஸபை நிலைபெற்றிருந்தது. அந்தவிமானத்தில் ஆதித்யர் களும் வஸூக்களும் ருத்ரர்களும் அஸ்வினீதேவர்களும் மருத்துக் களின்கூட்டங்களும் விளங்கினர்கள். பரதகுலத்தில் உதித்தவரே! அந்தவிமானத்தில் வெண்ணிறமுள்ளவைகளும் பொன்னாலும் படிகத்தாலும் செய்யப்பட்டவைகளுமான சக்ரங்களும், வியப் பைத்தரத்தக்கவைகளும் சிறந்த உருவமுடையவைகளும் மணி களாலும் ரத்னங்களாலும் விசித்ரங்களாக இருக்கின்றவைகளும் தனித்தனியாகப் பற்பலரூபமுள்ளவைகளும் நல்லகாந்தியுடைய வைகளும் மங்களத்தைச்செய்பவைகளுமானகுடைகளும் ஆகாயத் தில்சேர்ந்து காணப்பட்டன. அக்னி, இந்த்ரன், ஸோமன், யமன், வருணன், தாதா, விதாதா, ஸூர்யன், குபேரன், ருத்ரன், விஷ்ணு, ஸவிதா, அவ்வாறே, மற்றத்தேவர்கள் ஆகிய இவர்களுடையபொன் மயமானமாலைகளும், தேவலோகத்துப்புஷ்பங்களால் அலங்கரிக் கப்பட்ட பலவிதமானசிறந்தமாலைகளும் வியப்பைத்தருவனவாயி ருந்தன. ராஜரே! சிறந்தமணிகளால் அலங்கரிக்கப்பட்டஅந்தவிமா னத்தில் திவ்யவாஸனையுள்ள தேவருலகத்துமாலைகள் விளங்கின.

திவ்யமானகாற்றும் (புஷ்பங்களுடைய) வாஸனையைக் கவர்ந்து கொண்டு நான்குபக்கத்திலும் வீசியது. பரதகுலத்தில்பிறந்த மஹாராஜரே! அதில் மலர்களைத்தாங்கிக்கொண்டு (ஆறு)ருதுக்களும் ஏழுஸ்ருஷ்டிகர்த்தர்களும் ஏழுமஹரிஷிகளும் ஸ்வர்க்கத்தில் வஸிக்கின்றதேவரிஷிகளும்இந்த்ரனை உபாஸித்துக்கொண்டிருந்தனர். எல்லாத்தேவர்களும் இந்த்ரனைடுகூடியிருந்தார்கள். அதில் சேருவது புழுதியாவது எவ்விதத்தாலும் உண்டாகவில்லை. அதில் ஆதித்யனும் கொடுமையில்லாமல் சிறிது ப்ரகாசித்தான். அதில் திவ்யகந்தத்தைஎடுத்துக்கொண்டு காற்று எதிரில்வீசியது. ஆகாசமும் எல்லாத்திக்குக்களும் அழகுடன்காணப்பட்டன. அச்சமயத்தில் தேவர்கள் நாற்புறத்திலும் ஒளிர்கின்றதும் விரும்பியபடி செல்லுந்தன்மையுள்ளதுமான அந்தத்திவ்யவிமானத்தில் ஏறிக்கொண்டு மாசற்ற ஆகாயத்தில் நின்றார்கள். அந்தவிமானத்தில் தேவலோகவாஸிகளான ராஜரிஷிகளும் ஏறிக்கொண்டிருந்தார்கள். ஜனமேஜயரே! அப்பொழுது, அரசனை ஸ்வேதன், வஸுமனஸ், பத்ரன், ப்ரதர்சனன், ந்ருகன், யயாதி, நஹுஷன், மாந்தாதா, பரதன், குரு, அஷ்டகன், சிபி, அப்படிப்பட்ட ராஜாவான புரூரவன், டம்போத்பவன், கார்த்தவீர்யார்ஜுனன், ஸகரன், திலீபன், கேரளன், பூரு, சர்யாதி, ஸோமகன், ஹரிச்சந்திரன், தேஜஸ்வியான ரகு, தசரதன், ராஜரிஷியான பகீரதன், சாமரங்களாலும் விசிறிகளாலும் விளங்குகின்றவனும் தூக்கிப்பிடிக்கப்பட்டகுடையுள்ளவனும் ராஜஸூயயாகத்தாலுண்டான காந்தியில்சூழப்பட்டவனுமான பாண்டுமஹாராஜன், ஆகிய இவர்களனைவர்களும் புண்யசீலர்களும் சுத்தமானவ்ரதமுள்ளவர்களும் கீர்த்திசாலிகளும் மஹாவீர்யமுள்ளவர்களுமான மற்றும் அனேகராஜரிஷிகளும் அந்தவிமானத்திலேயே ஆகாயத்தில் வீற்றிருந்தார்கள். அப்ஸரஸுகளுடைய எல்லாக்கூட்டங்களும் எல்லாகந்தர்வர்களும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் யக்ஷர்களும் கருடர்களும் பன்னகர்களும் இந்த்ரனை முதன்மையாகக்கொண்டவர்களும் கணநாதர்களோடுகூடினவர்களுமான எல்லாத்தேவர்களும் அந்த யுத்தத்தைப்பார்க்க விருப்பங்கொண்டு அந்தவிமானத்தில் ஏறியிருந்தார்கள். இவ்வாறு, தேவலோகவாஸிகள் விமானத்தில்ஏறி, ஒருவனனஅர்ஜுனனுக்கும் அநேகர்களானகௌரவர்களுக்கும் நடக்கப்போகிற யுத்தத்தைப் பார்க்கவிரும்பி ஆகாயத்தில் ஒழுங்காகநின்றார்கள்.

ஐம்பத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனைத் துர்யோதனனிருக்குமிடத்துக்குத் தேரைச் செலுத்தஏவி த்ரோணர்முதலியோரை அம்புகளால்வணங்கியதும், த்ரோணர் அர்ஜுனனைப் புகழ்ந்ததும்.)

மஹாரதர்களான கௌரவவீரர்களால் படைகள் அவ்வாறு அணிவகுக்கப்பட்டிருக்கும்பொழுது, அர்ஜுனன் தேரொலியிலுல் (போர்க்களத்தை) எதிரொலியிடச்செய்து விரைவாக (கௌரவர்களுடைய) ஸமீபத்தில் வந்தான். அந்தக்கௌரவர்கள் (அர்ஜுனனுடைய) கொடியின் நுனியைக்கண்டார்கள்; தேரின்ஒலியையும் அடிக்கடி மிகவும் இழுத்துவிடப்படுகிற காண்டீவத்தின்ஒலியையும் கேட்டார்கள். வெண்ணிறமுள்ள குதிரைகளையுடையவனும் பாண்டுபுத்ரனுமான பார்த்தன் மூன்றுக்ரோசதூரம் சென்று படையின் முன்னணியைக்கண்டு விராடபுத்ரனைநோக்கிச் சொல்லலானான்.

'(உத்தர!) இந்தத்தேர்ப்படையில் ராஜாவான துர்யோதனன் நிற்கின்றதை நான் காணவில்லை. கௌரவர்கள் தென்பக்கத்திலிருக்கின்ற சேனையின் ஒருபிரிவை அழைத்துக்கொண்டு வடக்குமுகமாகச் செல்லுகின்றார்கள். பெரியவில்லாளிகளால் காக்கப்பட்ட இந்தத்தேர்ப்படையைவிட்டுவிட்டுப் பசுக்களைவளைத்துகொண்டு எதிரில் செல்லு. என்பகைவனைப் பார்க்கப்போகிறேன். பசுக்களைவளைத்துக்கொண்டு முன்னிலையில்சென்று பசுக்களையும் விரைவாகத் திருப்பு. ப்ரபுவே! இந்தக்கௌரவர்கள் வேகத்துடன் பசுக்களைத் திருப்பிக்கொண்டுபோவதற்குள்ளாகவே உன்னுடையபசுக்கள் எல்லாவற்றையும் நான் திருப்புவேன்' என்றான்.

(பகைவர்களால்) ஜயிக்கப்படாதவனை பார்த்தன் விராடபுத்ரனைப்பார்த்துப் போர்க்களத்தில் இவ்வாறுசொல்லிவிட்டு, இடப்பக்கத்திலுள்ள சேனையின் ஒருபாகத்தைஅடைந்து குதிரைகளை விரைந்துஓட்டினான். பிறகு, பார்த்தன் முதலில் ஆசார்யரான த்ரோணரையும் சந்தனுபுத்ரரான பீஷ்மரையும் க்ருபரையும் முறையே இரண்டுஇரண்டுபாணங்களால் நமஸ்கரித்தான். த்ரோணரையும் க்ருபரையும் பீஷ்மரையும் பாணங்களால் அபிவாதனம் செய்தான். பிறகு, அவையனைத்தையும்பார்த்து, த்ரோணர், (பின்வருமாறு) கூறலானார். '(இங்கு யுத்தத்துக்காக) வந்திருப்பவனும் மஹாரதனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அர்ஜுனனைப்பார்த்து ஒருவனுவது யுத்தஞ்செய்வதற்கு விரும்ப

மாட்டான். (விரும்பிஞல்) தன்னுடைய உயிரானது பாதுகாக்கப்பட்டதாகாது. இவன் யுத்தத்தில் (பகைவர்களால்) ஜயிக்கமுடியாதவன்; வீரன்; சூரன். இதோ பார்த்தனுடையகொடிநுனியானது தூரத்தில்காணப்படுகிறது. (அதிலிருக்கின்ற) வானரமும், மின்னலும் இடிமுழக்கமுள்ள மேகம்போல அதிகமாகக் கூச்சலிடுகிறது. அர்ஜுனன் காண்டீவமென்கிறவில்லை நாணெறியிடும்படிசெய்து தேரின்மீதேறி வருகின்றனன். இந்திரகுமாரனை அர்ஜுனனைச் சுமக்கின்றவைகளும் கனைக்கின்றவைகளுமான குதிரைகளுடையஒலியும் மேகத்தினுடையமுழக்கம்போன்ற தேரிலெலியும் மிக்கபயங்கரமாகக் கேட்கப்படுகின்றன. தேஜஸுடையவனும் ரதிகர்களுள்சிறந்தவனும்அனேக ரதிகர்களை (அஸ்த்ரசஸ்த்ரங்களால் யுத்தகளத்தைவிட்டு) ஓட்டுகின்றவனுமான இந்திரகுமாரன் இதோ ரதத்திலிருந்துகொண்டு பூமியைப்பிளக்கிறவன்போல வருகின்றனன். பகைவர்களை அடிப்பவனும் செல்வமுள்ளவனும் பெருங்கொடையுடையவனும் தைர்யமுள்ளவனுமான இந்தப் பாண்டவன் நமது தேர்ப்படையைக்கண்டு கௌரவிக்கிறன். இதோ இரண்டுபாணங்கள் வந்து என்னுடைய இரண்டுகாலுகளையும் அடைந்தன. விசித்ரமானகட்டுக்களுள்ள இரண்டுபாணங்கள் என்னுடையதேரின்நுனியில் நாட்டப்பட்டன. இதோ வேறு இரண்டுபாணங்கள் இருபக்கத்திலும் என்காதோரங்களில் நன்கு கூஷ்மத்தைக்கேட்பதுபோலத் தொட்டுக்கொண்டு சென்றுவிட்டன. நம்மால் வெகுநாளைக்குமுந்திப் பார்க்கப்பட்டவனும் தர்மங்களை அறிந்தவனும் பந்துக்களிடங்களில்ப்ரியமுள்ளவனும் ப்ரதாபசாலியுமான பாண்டுபுத்ரன் காந்தியினல் அதிகமாக விளங்குகின்றனன். பகைவர்களைத் தண்டிப்பவனை பார்த்தன் வனத்தில் வாஸஞ்செய்து (ஒருவராலும்) செய்யமுடியாத காரியத்தையும் செய்து என்னைப் பூஜித்து அபிவாதனம்செய்கிறன். கோபத்தால்நிரம்பினவனும் துக்கத்தால் மிகத்தூண்டப்பட்டவனுமான இந்தப்பார்த்தன் ஒருவனுகவே இப்பொழுது இந்தப்பாரதசேனையை நிச்சயமாக நாசஞ்செய்யப்போகிறன். கிரீடியானவன், பன்னிரண்டுவர்ஷகாலம் வனவாஸம்செய்து, பந்துக்களால் அறியப்படாமல் பதின்மூன்றுவதுவர்ஷம் அஜ்ஞாதவாஸமும்செய்துவிட்டு, ரதத்தின்மீதேறிக்கொண்டு, ஸூர்யன் இரவிலுண்டானஇருளை விலக்கி விளங்குவதுபோல, விளங்குகிறன். தேரிலேறினவனும் அம்புகளும் அழகியமாலையும் அம்பறாத்தூணியும் சங்கமும் கொடியும் கவசமும் கத்தியும் வில்லுமுள்ளவனுமான இந்தக்கிரீடியான் யஜ்ஞங்களில் நெய்யினல் ஹோமம்பண்ணப்பட்ட அக்னிபோல விளங்குகிறன்' என்றுசொன்னர்.

ஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் படையில் துர்யோதனனைக்காணுமல் பசுக்களுக்கேதிரில் வந்ததும், பீஷ்மர் தம் படையுடன் அவனைப் பின்தொடர்ந்ததும், அர்ஜுனன் பசுக்களைத் திருப்பியதும்.)

பகைவர்கள், ஸமீபத்தில் வருகின்ற பாண்டுகுமாரனை அர்ஜுனனைப்பார்த்து, எரிக்கின்ற ஸூர்யனைப்போன்ற அவனை உற்றுநோக்கத் திறமையற்றவர்களாயினர். அந்தப்பார்த்தன், அந்தத் தேர்ப்படையைக்கண்டு ஸாரதியைப்பார்த்து, 'பகைவரை அடக்குபவனே! சேனைக்கு ஓரம்புவிழுந்தூரத்தில் குதிரைகளை நிறுத்து. இந்தப்படைவகுப்பில் எனக்குப் பகைவனை துர்யோதனனைப் பார்ப்பேன். செந்நிறமுடையதும் வைடூர்யங்களால் இழைக்கப்பட்டதும் உயர்ந்தரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதும் தூரத்தில் உயரத்தூக்கிக்கட்டப்பட்டதுமான அவனுடையகொடியை மட்டும் நான் பார்க்கிறேன். கெட்டபுத்தியுள்ளவனும் அதிககர்வங்கொண்டவனுமான துர்யோதனனை இப்பொழுது நான் பார்த்தால், ஈச்வரன் ஸஹாயமாகஇருந்தாலும், அவனை யமனிடத்தில் அனுப்புவேன். மிக்கஇறுமாப்புள்ளவனை அவனைக்கண்டால் மற்றவரனைவரையும் அலக்ஷ்யம்செய்துவிட்டு ஸிம்மமானது அல்பம்ருகத்தின்மீது குதிப்பதுபோல அவனுடையதலையில் குதிப்பேன். காண்டீவத்தினின்றும் வெளிப்பட்டஅம்புகளால் அவனையே இப்பொழுது கொல்வேன். அவன்கொல்லப்பட்டால் அனைவரும் தோல்விஅடைவிக்கப்பட்டவர்களேயாவார்கள். சொல்லத்தகாதவார்த்தைகளைச் சொல்லுகிறவனும் கௌரவர்களுள் பாபியுமான துர்யோதனனையும் சகுனியையும் நான் அம்புகளால்அடக்கப்போகிறேன். இவ்விடத்தில் அரசனை நான் காணவில்லை. இச்சேனையானது அனுபவிக்கத்தக்க பொருளை இழந்ததாயிருக்கின்றது. இந்த ஸமயத்தில் பயமற்றவனைநான் ராஜாவைக்குறித்தே வெளிப்படையாக எதிர்த்துச்செல்லுகிறேன். ஆசார்யரானத்ரோணரும் சேனையின்மத்தியில் இருக்கிறார். அச்வத்தாமாவும் அவரைஅடுத்திருக்கின்றார். பெரியவில்லுள்ளவர்களான க்ருபரும் கர்ணனும் எதிரில் நிற்கின்றார்கள். போரில் திறமையுள்ளவர்களான பூரிச்ரவஸும் ஸோமதத்தனும் பாஹ்லீகனும் ஜயத்ரதனும் சேனையினுடையவலப்பக்கத்தைஅடைந்து நிற்கின்றார்கள். ஸால்வராஜனும் த்யுமத்ஸேனனும் வ்ருஷஸேனனும் சகுனியும் தசார்ணனும் காளிங்கனும் இடப்பக்கத்தில் நிற்கின்றார்கள். கௌர

வர்களுள் தலைமைபெற்றவரும் எல்லாவீரர்களுள்ளும் சிறந்தபழுள்ளவரும் எங்களுக்குப் பாட்டனருமான பீஷ்மர் கவசத்தை அணிந்து (கௌரவசேனைகளின்) பின்பக்கத்தில் பாதிப்படையுடன் நிற்கின்றார். துர்யோதனனேமாத்திரம் நான் காணவில்லை. ராஜாவான அவன் எங்கே இருக்கிறானே? இந்தத் தேர்ப்படையை விட்டுத் துர்யோதனனிருக்குமிடத்திற்குச்செல். அவனைக்கொன்று விட்டுத் திரும்பப்போகிறேன். அவன் பசுக்களை ஓட்டிக்கொண்டு செல்லுகிறான். அரசனிருக்கும்இடமாகிய பசுக்களுடைய கூட்டத்தைநோக்கி நான்குபக்கத்திலும் வளைத்துக்கொண்டுசெல் என்றுகூறினான்.

(பகைவர்களால்) வெல்லக்கூடாதபார்த்தன், அப்பொழுது போர்க்களத்தில் விராடபுத்ரனைப்பார்த்து இவ்வாறுசொல்லி விட்டு, திவ்யமானவில்லை (கையிலால்) தொட்டு உருவிக்கொண்டு விரைவாகச்சென்றான். பிறகு, கௌரவர்களினிடையில், பகைவரைவாட்டுபவரான பீஷ்மர், (அவர்களைப்பார்த்து,) '(வீரர்களே!) தர்மங்களை அறிந்தவனும் உறவினர்களிடத்தில் அன்புள்ளவனுமான இந்தஅர்ஜுனன் நெடுங்காலத்துக்குப் பிறகு நம்மால் பார்க்கப்பட்டான். (இங்கு) வந்திருக்கின்ற இந்த்ரகுமாரன் ஒளியிலால் அதிகமாக விளங்குகிறான். இந்தப்பார்த்தன், துர்யோதனனை (அவனால் செய்யப்பட்ட) வஞ்சனையை நினைத்துக்கொண்டு தேடுகிறான். இந்த்ரகுமாரனை அர்ஜுனன் படையை நன்றுகப்பார்த்து இந்தத் துர்யோதனனைப் பிடிக்கும்விஷயத்தில் விரைவுபண்ணுகிறான்; விம்மமானது ம்ருகத்தைப்பார்ப்பது போல(த்துர்யோதனனைக்) கவர்வதற்காகப் பார்க்கிறான். இந்தப் பீபத்ஸுவானவன் அரசனை எதிர்க்காமல் நிற்கமாட்டான். வேகத்தோடு (துர்யோதனனை) லக்ஷ்யம்வைத்துக்கொண்டு ஓடுகின்ற இந்தஅர்ஜுனனை (நாமெல்லோரும்) பின்தொடர்வோம். யுத்தத்தில் கோபங்கொண்டவனை இந்தஅர்ஜுனனேடு 1மஹாதேவரென்னும் தேவரையும் தேவகீபுத்ரரான ஸ்ரீக்ருஷ்ணபகவானையும் பரத்வாஜருடையகுமாரரும் மஹாரதரும் புத்ரரோடுகூடியவருமான ஆசார்யரையும் தவிர வேறுஎவனும் தனித்துநின்று போர்புரியமாட்டான். பசுக்கள் நமக்கு என்னசெய்யப்போகின்றன? அவ்வாறே, அதிகமானசெல்வமும் என்னசெய்யப் போகின்றது? துர்யோதனன் பார்த்தனிடத்தில் அகப்பட்டு உயிரைஇழக்கப்போகிறான்' என்ற வாக்யத்தைக் கூறினர். குருகுலத்தில்பிறந்தவரான பீஷ்மர், போர்க்களத்தில் இவ்வாறு

1 'இந்த்ரனையும்' என்பது வேறுபாடம்.

சொல்லிவிட்டு, அப்பொழுது துர்யோதனனைக் காப்பதற்காகச் சேனையுடன் பார்த்தனைப் பின்தொடர்ந்தார். பார்த்தன், [1]மூன்று க்ரோசதூரம்சென்று விராடபுத்ரனைப் பார்த்து, 'பகைவர்களை அடக்குபவனே! இந்தக் கௌரவசேனைக்கு ஓரம்புவிழும்அளவுள்ள தூரத்தில் குதிரைகளை நிறுத்து. ஸாரதியே! இதோ பசுக்களுடைய முன்பக்கம் என்னால் பார்க்கப்பட்டுவிட்டது. (குதிரைகளை) மெல்லநடத்து. பசுக்களைவிலக்கிக்கொண்டு சேனைக்கு வடபுறமாகச் செல். பசுக்களுடைய கூட்டத்தை ஓட்டிக்கொண்டு இப்பொழுது துர்யோதனனோடு போர்புரியப்போகிறேன். பசுக்கள், பாதுகாப்பவர்களுள்ளவைகளாகி, விரைவாகச் செல்லுகின்றன. (அவைகளை) நீ விடுவிக்கவேண்டும். ஓ! வீரனே! அவ்விடத்தில் சென்று இடையர்களுள்ள பசுக்களை நீ விடுவிக்கவேண்டும். உத்தர! சேனையைவிட்டுவிலகிக் கிழக்குமுகமாகச் செல். அதிரதர்களான இந்தக்கௌரவர்கள் எல்லாரும், போரில், மஹேந்த்ரனுடைய பராக்ரமத்தை அஸுரர்கள் பார்ப்பதுபோல என்னுடைய வீர்யத்தையும் பராக்ரமத்தையும் பார்க்கட்டும்' என்று சொன்னான்.

பிறகு, தேராளிகளுட்சிறந்த அந்தஅர்ஜுனன் தன்னுடைய பெயரை (எல்லோரும்) கேட்கும்படிசெய்து கூர்மையுள்ளவைகளும் தீட்டப்பட்ட நுனியுள்ளவைகளும் யமனுக்கொப்பானவைகளுமான அம்புகளை (ப் பகைவர்மீது) தொடுத்தான். விட்டிற்பூச்சிகளால் (நிறைந்த) ஆகாயம்போலவும் மழைத்தாரைகளால் நிறைந்தமலைபோலவும் கிரீடியுல்விடப்பட்ட அம்புகளால் ஆகாயமானது இடைவெளியற்றதாகியது. அம்புகளால் பொழியப்படுகின்றவர்களும் துர்யோதனனைச் சார்ந்தவர்களுமான அந்தப் போர்வீரர்கள் பார்த்தனுல்விடப்பட்ட அம்புகளால் பசுக்களைப் பார்க்கவேயில்லை. பார்த்தனுடைய அம்புகளால் நான்கு பக்கத்திலும் வருத்தப்படுகின்ற மிகுதியான அந்தச்சேனையும் (அம்புகளால்) மூடப்படாத பூமியையாவது ஆகாயத்தையாவது திக்குக்களையாவது பார்க்கவில்லை. அர்ஜுனனை அப்பொழுது ஸந்தோஷத்துடன் தன்னுடைய வீர்யத்தைக்காட்டிக்கொண்டு காண்டீவத்தினின்று வெளிப்படுகின்ற அம்புகளால் (கௌரவ) சேனைகளைத் துன்பமுறும்படி செய்தான். அவர்களுக்கு ஓடுவதிலாவது எதிர்த்துவருவதிலாவது புத்திஉண்டாகவில்லை. அவர்கள் பார்த்தனுடைய சுறுசுறுப்பையே புகழ்ந்து வியப்படைந்தார்கள். பிறகு, பார்த்தன், சந்த்ரன்போல வெளுத்ததும் கடலிலுண்டானதும் கௌரவசேனைகளுக்குப் பயத்தையும் பகைவர்களுக்கு மயிர்க்கூச்

1 வேறுபாடம்.

சத்தையும் உண்டுபண்ணுகின்றதுமான சங்கத்தை ஊதினன், நாணெலியையும் கையுறையின் ஓசையையும் உண்டுபண்ணி ப்ராணிகளை மயக்கினன். பசுக்கள், அந்தச்சங்கத்தினுடையஓசையினும் வில்லினுடைய ஓசையினும் கொடியிலிருக்கின்ற மனிதஇயல்பற்ற பூதங்களுடைய ஒலியினும் ஆகாயத்திலிருக்கின்ற தேவர்களுடையதும் (பூமியில்இருக்கின்ற) மனிதர்களுடையதுமான சப்தத்தினும் பயந்து, கன்றுகளுடன் கதறிக்கொண்டும் வாலை மேலேதூக்கி விசிறிக்கொண்டும் தெற்குத்திக்கை நோக்கித் திரும்பிவிட்டன. பிறகு, சூரனும் பகைவர்கூட்டங்களை அழிப்பவனுமான அந்தப்பீபத்ஸுவானவன் போர்க்களத்தில் இடையர்களைப்பார்த்து, 'பசுக்களை ஓட்டிக்கொண்டு செல்லுங்கள்' என்று ஏவினன். பாண்டுநந்தனனான பீபத்ஸுவானவன், உத்தரனைப் பார்த்து, '(உத்தர!) பசுக்களின் முன்பக்கத்தைப்பார். பசுக்களையும் சீக்ரமாகத் திருப்பு. ராஜபுத்ர! இந்தக்கௌரவர்கள் விரைந்து திரும்புவதற்குள்ளாக இந்தப்பசுக்களுக்கும் படைகளுக்கும் வடபுறமாகச்செல். கௌரவர்களெல்லோரும் என்னுடைய வீர்யத்தையும் பராக்ரமத்தையும் பார்க்கட்டும்' என்று அவனுக்கு உத்ஸாஹமுண்டாகும்படி கூறினன். அந்தக்கௌரவர்கள், ஸமீபத்தில் வருகின்ற அர்ஜுனனைப்பார்த்து யுத்தத்தில் லாபம் கிடைத்ததுபோல எண்ணித் தேர்களோடு விரைவாக எதிர்த்துவந்தார்கள். நன்குவிளங்குகின்ற பெரிய யானைப்படையினாலும் குதிரைப்படையினாலும் ஈட்டிகளையும் கத்திகளையும் கையில்கொண்டவர்களும் தூக்கிப்பிடித்த விற்களும் பாணங்களும் (மற்ற) ஆயுதங்களுமுள்ளவர்களுமான யுத்தவீரர்களாலும் (நிறைந்திருக்கின்ற) ஆததாயிகளான கௌரவர்களுடைய அந்தப்படைகள், ஆகாயத்தில் மின்னலுடன்கூடின மேகங்கள் ஸஞ்சரிப்பதுபோல ஸஞ்சரித்துக்கொண்டு விளங்கின. திருப்பப்பட்ட தேர்களுள்ள அந்தப்படைகளைப் பார்த்ததும், பார்த்தனும் காற்றுப்போல (அதிவேகமுள்ளவனுக) அம்புகளால்கோரமான (அந்தக்கௌரவ) ஸைன்யமுகத்தை (அடித்து) நடிக்கமுறும்படி செய்தான். அந்தப் பகைவர்படையைச் சிறந்தவில்லினால் விரைவாக விலக்கிவிட்டுப் பசுக்களையும்மீட்டுக்கொண்டு துர்யோதனனைக்குறித்து எதிர்த்துச் செல்லுகின்ற அர்ஜுனனை, சிறந்தகௌரவவீரர்கள் விரைவாக எதிர்த்துவந்தார்கள். பிறகு, பசுக்கள் மத்ஸ்யதேசத்தைக்குறித்து வேகமாக ஓடுகையில், எல்லாஇடையர்களும் கிரீடியை அன்புள்ளவனுகக்கண்டு பசுக்களை ஓட்டிக்கொண்டு திரும்பி மத்ஸ்யதேசத்தை நோக்கிச் சென்றார்கள்.

ஐம்பத்தாறுவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனுக்கு த்ரோணர்முதலியோருடைய கோடி அடையாளத்தால் அவர்கள்பெயரைக்குறிப்பிட்டு வல்லமையையும் கூறியது.)

பாரதரே! பிறகு, வில்லாளிகளும் கோரரூபிகளும் ரதிகர்களுமான மூவாயிரம்கௌரவவீரர்கள் அர்ஜுனனை நாற்புறத்திலும் சூழ்ந்துகொண்டார்கள். கர்ணன், ஆயிரம்தேர்களோடு தனஞ்சயனை எதிர்த்தான். சந்தனுபுத்ரரும் புத்திசாலியுமான பீஷ்மர் ஆயிரம் ரதிகர்கள் தம்மைத்தொடர்ந்துவர அர்ஜுனனை எதிர்த்தார். அவ்வாறே, ஆயிரம்தேர்களாலும் உடன்பிறந்தவர்களாலும் சூழப்பட்ட துர்யோதனன் புகழிலும் செல்வத்திலும் விளங்கிக்கொண்டு பின்பக்கத்தில்நின்றான். காலாட்படைகள் குதிரைகளோடு இடைவெளிகளில் நின்றன. தோமரங்களாலும் அங்குசங்களாலும் ஏவப்பட்டவைகளும் அச்சந்தரும் வடிவமுள்ளவைகளுமான யானைகளும் இருந்தன. மஹாத்மாக்களுடைய விஸ்தாரமான அந்தப்படைகளைக்கண்டு பாண்டவன் விராடபுத்ரனை உத்தரனைப்பார்த்துச் சொல்லலானான்.

'நுனியில்பொன்யாகவேதி காணப்படும் கொடியும் சிவப்புக் குதிரைகள்பூட்டிய ரதமுமுள்ள இவர் த்ரோணர். இவர்ஆசார்யர்; ஸமர்த்தர்; சிறந்தபுத்தியுள்ளவர்; வேதங்களை அறிந்தவர்; சூரர்களுள் மிகச்சிறந்தவர்; யுத்தத்தில் நிகரில்லாதவர்; தூரத்திலிருந்து லக்ஷ்யத்தைஅடிக்கும் திறமையுள்ளவர்; மஹாரதர்; (என் விஷயத்தில்) அதிகக்ருபையுடையவர்; மஹாவீரர். இவரைப்ரதக்ஷிணம்செய். இவரிடத்திலேயே இந்தஸைன்யத்தின் மானது விரோதமின்றியிருக்கின்றது. உத்ஸாஹமுள்ளவனை என்னுடையமேனியில் த்ரோணர் (அம்புதொடுத்து) அடிப்பாராஞல், பிறகு, இவரை நான் அடிப்பேன். வேறுவிதமாக எனக்கு எண்ணமில்லை. ஸாரதியே! பரதகுலத்தில் பிறந்தவர்களுக்கு முக்ய ஆசார்யரும் மஹாத்மாவுமான அந்தப்பிராம்மணரோடு போர்புரியும்போது என்னுடைய (ரதத்தை) மெல்லநடத்து. எல்லாத்திக்குக்களிலும் சிங்கத்தினுடையவால் விளங்குகின்ற த்வஜத்தின் நுனியையுடையவர் பாரதர்களுடைய ஆசார்யருக்குப்புத்ரரான அஸ்வத்தாமா. எவரிடத்தில் பாலஸூர்யனுக்குஒப்பான ஒளியுள்ள கொடியின்நுனி காணப்படுகிறதோ அந்தஅஸ்வத்தாமா எல்லா ஸைன்யங்களாலும் இந்திரனோடுகூடின தேவர்களாலும்

ஜயிக்கமுடியாதவர். ஸாரதியே! அவருடன் நான் போர்புரியுங்கால் தேரை மெதுவாகநடத்து. எவருடைய கொடியின் நுனியில் பொன்மயமான காளையானது எதிராகவிளங்குகிறதோ அவர் மஹாரதரும் சிறந்த ஆசார்யர்களுள் முக்யருமான க்ருபர். இவர் வீர்யத்தில் த்ரோணருக்கு ஸமமானவர்; என்னுடைய பிதாவுக்குச் சிறந்த நண்பர். ஸாரதியே! இவரோடு நான் போர்புரியுங்காலத்தில் (தேரை) மெதுவாகநடத்து. எவனுடைய கொடியானது பொன்மயமான சங்குகளோடுகூடி யானைகட்டும் கச்சையினால் அலங்கரிக்கப்பட்டு மின்னற்கூட்டங்களுக்கு ஒப்பாக ரதத்தின் மீது தூரத்தில் விளங்குகிறதோ இவன் வைகர்த்தனனெனகர்ணன்; வில்லாளிகளுக்கு உபமானமாயிருப்பவன்; எம்மிடத்தில் எப்பொழுதும் உறுதியான பகைமையுள்ளவன்; எப்பொழுதும் க்ரூரமாகப்பேசுபவன்; எவனுடைய ஆஸ்ரயபலத்தினாலேயே துர்யோதனன் சகுனியுடன் சேர்ந்துகொண்டு ராஜ்யத்தினின்றும் எம்மை விலக்கி இப்பொழுதும் மறுபடியும் எம்முடன் போர்புரியப்போகிறானே, எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாத இவன் நாள்தோறும் என்னுடனகூட வைரம்பாராட்டுகிறான். மஹாரதனான இந்தக் கர்ணன், ஜமதக்னியினுடைய குமாரரான பரசுராமருடைய சிஷ்யன்; எல்லா அஸ்த்ரங்களிலும் ஸமர்த்தன்; எல்லாச் சஸ்த்ரதாரிகளுள்ளும் சிறந்தவன்; யுத்தத்தில் ஒப்பற்றவீர்யமுள்ளவன்; (பகைவர்களைப்) பலமாக அடிப்பவன்; சிறந்தபராக்ரமமுடையவன்; ஸுதபந்துவான இவனுடன் நான் இப்பொழுது போர்புரியப்போகிறேன். பலிக்கும் இந்த்ரனுக்கும் நடந்த யுத்தம் போல எங்கள்இருவருக்கும் நடக்கப்போகிற யுத்தத்தை நீ பார்ப்பாய். ஸாரதியே! சூரனும் ஸுதபுத்ரனும் வில்லாளியுமான அந்த மஹாரதனோடு போர்புரிகின்ற என்னுடைய (தேரை) விரைவாக நடத்து. எவனுடைய ரதத்தின் மத்தியில் மணிமயமான அரவக்கொடியானது இருக்கிறதோ இவன் குருகுலத்தில் பிறந்தவனும் கீர்த்தியினால் சூழப்பட்டவனுமான துர்யோதனன். இவன் லக்ஷ்யத்தைத் தவறுதவன்; நன்றாக அடிப்பவன்; சுறுசுறுப்புள்ள கையுடையவன்; சிறந்தப்ரதாபமுடையவன். .ஸாரதியே! இவனுடன் போர்புரிகிற என்னுடைய (தேரை)விரைவாகநடத்து. ஐந்துமட்டைகளோடும் வைடூர்யக்கல் மயமான மரத்தோடும் வெளுத்ததும் பளபளப்புள்ளதுமான பனைமரக்கொடியினால் விளங்கிக்கொண்டும், கைகளுக்கு உறைபோட்டுக்கொண்டும், பெரியவில்லைப்பிடித்துத், தம்சேனையை உத்ஸாஹப்படுத்திக்கொண்டும் நிற்கிறாரே, இவர்தாம் முன்னர் பரசுராமரோடு எதிர்நின்று யுத்தஞ்

செய்து தோல்வியடையாதவரும் விரைவாகவும் எளிதாகவும் அடிப்பவரும் கைவேகமும் பராக்ரமமுமுள்ளவரும் சந்தனுபுத்ரரும் எங்களெல்லாருக்கும் பிதாமஹருமான பீஷ்மர்; எல்லா ஸைநிகர்களுள்ளும் ஆயுதம்பிடித்தவரிலுள்ளும் சிறந்தவர்; ஜயலக்ஷ்மியோடு கூடியவர்; துர்யோதனனுக்கு வசப்பட்டு (அவனை) அனுஸரித்திருப்பவர். இவர், பிறகு (நம்மால்) எதிர்க்கத் தக்கவர். இவர் எனக்கு இடையூற்றை உண்டுபண்ணமாட்டார்' என்றுசொன்னன். பார்த்தன், உத்தரனிடத்தில் இவர்களைப்பற்றி உருவத்திலும் அடையாளங்களாலும் இவ்வாறு விரைவுடன் சொல்லி, மறுபடியும் யுத்தத்திற்காக வேகம் பாராட்டினன்.

ஐம்பத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், பீஷ்மர் முதலியோருடன் போர்புரிந்து கர்ணனை அவமதித்தது.)

பிறகு, வீர்யமுடையவரான அஸ்வத்தாமா, அவ்விடத்தில் பகைவர்களை அடக்குபவனும் ஸூதபுத்ரனுமான கர்ணனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு, 'ஏ! கர்ண! நீ ஸபைநடுவில், 'போரில் எனக்குஒப்பானவன் ஒருவனுமில்லை' என்று பலவாறு பொருத்தமில்லாமல் புகழ்ந்துகொள்ளுகிறாயே; அதற்கு இதோ ஸமயம் வந்துவிட்டது. இதோ அர்ஜுனன் யமன்போலக் கோபங்கொண்டு எல்லாப்ராணிகளையும் அழிப்பவனைப யுத்தமுனையின்மத்தியில் சிங்கம்போல வ்ருத்திஅடைகிறன். நீ சூரனையிருந்தால், போரில்[1] அச்சமின்றி (உன்வல்லமையைக்) காண்பி. வியப்பைத்தரத்தக்க செய்கையுள்ள பார்த்தனோடு போர்க்களத்தில் (போர்புரிவதற்கு) நீ திறமையற்றவனையிருந்தால் புத்திசாலியான துர்யோதனனோடு மறுபடியும் சபையை அடைந்து அம்மானையும் அழைத்துக்கொண்டு விரைந்து ஸுகமாக ஆலோசனைசெய்' என்று சொன்னர்.

இவ்வாறு சொல்லியதைக்கேட்ட கர்ணன், கோபத்தினால் இரண்டுகண்களையும் புரட்டிவிழித்துக் கௌரவர்களுக்கெதிரில் த்ரோணபுத்ரரைப்பார்த்து, 'பீபத்ஸுவினிடத்தினின்றும் தேவகீபுத்ரனான கிருஷ்ணனிடத்தினின்றும் எல்லாப்பாண்டவர்களிடத்தினின்றும் நான் பயப்படமாட்டேன். நான் கூர்த்திரிய

---

1 வேறுபாடம்.

தர்மத்தை அனுஸரித்தவன். பலத்திலும் மேலானவர்களுட தனுர்வேதத்தை ஆதாரமாகக்கொண்டு பிழைக்கின்றவர்களுப் கர்ஜிக்கின்றவர்களுமான புருஷர்களுக்குக் கர்வம்உண்டாகிறது ஸ்வரமும் கீழ்ப்படாது. அதிகவேகமுள்ள அர்ஜுனமேருகலந்த போர்புரிகின்றனன்னை ஆசார்யபுத்ரர் பார்க்கலாம்; ஜயம் என்ன டத்தில்நிலைபெற்றிருக்கிறது' என்று கூறினன். குந்தீபுத்ரனுட வெண்ணிறமுள்ள குதிரைகளையுடையவனும் ரதிகர்களுள்சிறந்தவ னுமான பீபத்ஸுவானவன், பிறகு, அட்டஹாஸம்செய்து திவ்ய ஸ்த்ரத்தை வெளிப்படுத்திக்கொண்டு எதிர்த்துச்சென்றனன் மஹாராஜரே! அப்பொழுது, மந்தபுத்தியுள்ளவனும் த்ருதர ஷ்டிரபுத்ரனும் ராஜாவுமான அந்தத் துர்யோதனன், மனவலிை யுள்ள கர்ணனைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, 'கர்ண அந்த மத்ஸ்யராஜனுடைய அரண்மனையில் அர்ஜுனன் வாஸப் செய்துகொண்டிருப்பதாக நாம் அறியோம். அதனல், மாத்ஸ் யர்களுடைய மிகுதியான இந்தப்பசுக்கூட்டத்தைக் கைப்பற்ற வேண்டும். இவ்விதமானல் மிகுதியான பசுக்கூட்டத்தை விட்டுவிட்டு (நகரத்துக்குச்) சென்றுவிடுவோம். இம்மையிலும் மறுமையிலும் (நமக்கு)அபகீர்த்தி உண்டாகாமலிருக்கட்டும். இல்லையேல், கூத்தி ரியர்களுக்கு ஸுகத்தை உண்டுபண்ணக்கூடிய செய்கையானது யுத்தத்தைத்தவிர வேறொன்றுமில்லை. ஆதலால், பார்த்தனோடு சண்டைசெய்வோம். ஓடவேண்டாம்' என்றுசொன்னன். அந்தத் துர்யோதனராஜன், இவ்வளவுமட்டிலும் சொல்லிவிட்டு, (பார்த் தனை) எதிர்த்துச் செல்வதில் விருப்பங்கொண்டான்.

அப்பொழுது, வில்லாளிகளான பதினாயிரம்வீரர்கள், விட் டிற் பூச்சிகள் நெருப்பை எதிர்த்துச்செல்வதுபோல அர்ஜுனனை எதிர்த்துச் சென்றார்கள். அப்பொழுது, கவசம்பூண்டவைகளும் காலாட்களால் நிறைந்தவைகளுமான குதிரைகளும், தோமரங்க ளையும் அங்குசங்களையும் கையில்கொண்டவர்களும் மிக்கமுயற்சி யுள்ளவர்களும் யானைபழக்குவதில் திறமையுள்ளவர்களுமான மாவுத்தர்களால் ஏறப்பட்டவைகளும் பயங்கரமான உருவத்தை யுடையவைகளுமான யானைகளும் எதிர்த்துச்சென்றன. மிக்க கோபங்கொண்டவர்களும் விற்களையும் ஆயுதங்களையும் கையில் எடுத்தவர்களும் ரதிகர்களுள் சிறந்தவர்களுமான த்ரோணரும், பீஷ்மரும், கர்ணனும், வீர்யமுடையவனை துர்யோதனனும், தோள்வலிமையுள்ளவரும் தனுர்வேதத்தை ப்ரதானமாகக் கொண்டவருமான அஸ்வத்தாமாவுமாகிய ஐவரும் வேகத்துடன் பார்த்தனை எதிர்த்துச்சென்று அவனை நான்கு பக்கத்திலும்

சூழ்ந்துகொண்டு மழைக்காலத்து மேகங்கள்போல அம்புகளையும் நன்குமிதாடுத்தார்கள். அவர்கள் தனஞ்சயனை லாபம்போல எண்ணிப் பத்துத்திசைகளையும் எதிரொலியிடும்படி செய்து அம்புக் கூட்டங்களைப் பொழிந்துகொண்டு எதிர்த்தனர். பிறகு, குந்தி புத்ரனும் வெண்ணிறமுள்ள குதிரைகளையுடையவனுமான பீபத் ஸுவானவன் அட்டஹாஸம்செய்து திவ்யாஸ்த்ரங்களை வெளிப் படுத்திக்கொண்டு ரதிகஸ்ரேஷ்டர்களை எதிர்த்தான்; ஸூர்யன் கிரணங்களால் பூமியை மறைப்பதுபோலக் காண்டீவத்தினின்று விடுபட்ட அம்புகளால் திக்குக்களை மூடினான். ப்ரயோகிக்கப் பட்ட கூர்மையுள்ள அம்புகளால் தேர்கள் குதிரைகள் கொடிகள் கவசமணிந்தவீரர்கள்ஆகிய இவர்களுடைய (உடலில்) இரண்டு அங்குலஇடங்கூட (அடிக்கப்படாமல்) இல்லை. பார்த்தனுடைய அத்ருஷ்டவிசேஷத்தாலும் உத்தரனுடைய குதிரைகளின் பழக் கத்திறமையாலும் அஸ்த்ரங்களுடைய தடையற்ற ஸஞ்சாரத் தாலும் கொடி காண்டீவம் இரண்டினுடைய திவ்யமான மாயா சக்தியினாலும் அந்த ரதத்தினுடைய கதியானது, மனோகதிபோல இங்குமங்கும் ஸஞ்சரிப்பதில், தூரத்திலோஅல்லது பக்கத்திலோ, செல்லமுடியாததும் மேடுபள்ளமுமான இடத்திலோ பள்ளத் திலோ ஸமமானதரையிலோ(எவ்விடத்திலும்) தடைப்படவில்லை. யுத்தங்களில் அந்தத் தேரினுடைய அவ்வவ்விதமான கதிவிசே ஷங்களையும் அவ்வாறே பார்த்தனுடைய மிக்கவியப்பைச்செய்யும் வீர்யத்தையும் அவ்விதமான பலத்தையுங்கண்டு, கற்றறிந்த பகை வர்கள் பயந்து நடுங்கி ரதங்களையும் திருப்பிக்கொண்டு ஓட ஆரம் பித்தார்கள். காலாக்னிபோல ப்ரஜைகளைக் கொளுத்துகின்ற பீபத்ஸுவை எரிகிறநெருப்பைப்போலப் பகைவர்கள் பார்ப்ப தற்குச் சக்தியற்றவர்களானார்கள். அர்ஜுனனுடைய பாணங் களால் பிளக்கப்பட்ட அந்தஸைன்யங்கள் ஸூர்யனுடைய கிர ணங்களால் வ்யாபிக்கப்பட்ட நெருங்கியமேகங்கள்போல விளங் கின. (வஸந்தகாலமானது) நிறைக்கப்பட்ட கல்லபுஷ்பங்களால் அசோகமரங்கள் அடர்ந்த காடுகளைச் சிவக்கச்செய்வதுபோலப் பார்த்தன் நெருங்கியிருக்கின்ற (கௌரவர்களுடைய) படையை ரக்தத்தால் சிவப்பாகச் செய்தான். காற்றானது, ஆயிரக்கணக் காக அர்ஜுனனுடைய அம்புகளால் அறுக்கப்பட்ட பற்பலவித மான குடைகளையும் கொடித்துணிகளையும் ஆகாயத்தில் எடுத்துக் கொண்டு சென்றது. அர்ஜுனனுடைய பலத்தைக்கண்டுபயந்து அவனால் அறுக்கப்பட்ட நகங்களுடன் அவ்விடத்தைவிட்டுத் தேரினின்று பத்துத்திக்குகளிலும்ஓடிய குதிரைகள் கூர்மையான

அம்புகளால் அறுக்கப்பட்ட முன்கால்களையுடையவைகளாகித் தலைகளால் முதலில் பூமியில்விழுந்தன; (பிறகு), பின்புறங்களால் பூமியையடைந்தன. அவ்வாறே, சிறந்தயானைகள் (மற்ற) யானைகளைக் கண்களிலும் மூக்குக்களிலும் தந்தங்களிலும் தந்தக்கட்டைகளிலும் மற்ற மர்மஸ்தானங்களிலும் அடித்துக் கொன்றன. உயிரைஇழந்த கௌரவர்களுடையவும் யானைகளுடையவும் சரீரங்களால் போர்க்களமானது, மேகங்களால் ஆகாயம்மூடப்படுவதுபோல, கூளத்துக்குள் மூடப்பட்டது. சிறந்தகைகளுள்ள அர்ஜுனன் அட்டஹாஸஞ்செய்துகொண்டு வடவைத்தீயினின்று உண்டாயிருக்கின்ற காலாக்னிபோலத் திவ்யாஸ்த்ரங்களால் சூழப்பட்டு ஜ்வலித்தான். யுகாந்தகாலத்தில் உக்ரமான ஜ்வாலைகளுள்ள நெருப்பானது காலத்தினால் பக்வமாயிருக்கின்ற ஸ்தாவரஜங்கமவடிவமான உலகமனைத்தையும் மிச்சமின்றி எரிப்பதுபோலப் பார்த்தன் (கௌரவசேனையை) எரித்தான். அந்தஅர்ஜுனன் அஸ்த்ரதேஜஸ்களினாலும் வில்லினுடையஒலியினாலும் அத்ருஷ்டத்தினாலும் வீர்யத்தினாலும் துர்யோதனனுடைய அந்தச்சேனையிலுள்ள பகைவர்களுடைய யுத்தத்திலுள்ளவல்லமையை, இராக்காலமானது பெரும்பான்மையாக உயிருள்ளவைகளுடைய செய்கையை ஒடுக்குவதுபோல, ஒடுக்கி அடக்கினன். அவன் பகைவர்களை விரைவாக மீறிச்சென்றான். அவர்களும் (அவனை) விரைவாக எதிர்த்தார்கள். ஸமீபத்தில் விரைந்துவருகின்றதும் உறுதியுள்ளதும் வீணாகாததும் மனிதர்களுடைய அஸ்த்ரத்தினும் மேற்பட்டிருக்கின்றதுமான இவனுடைய அஸ்த்ரத்தையும் மனிதவியற்கைக்கு மேம்பட்ட விக்ரமத்தையும் பார்த்து அந்தக்கௌரவர்கள் பயந்தார்கள். பக்ஷிகளுடைய இறகுகளால் நான்குபக்கத்திலும் கட்டப்பட்டவைகளும் ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகள்போன்றவைகளும் (பகைவர்களுடைய) உதிரத்தையும் உயிரையும் உறிஞ்சுகின்றவைகளுமான அர்ஜுனனுடைய அம்புகளால் ஆகாயம் நாற்புறத்திலும் மூடப்பட்டது. காண்டீவத்தைவில்லாகக் கொண்ட அர்ஜுனனால்விடப்பட்ட அம்புகள் ஆகாயத்தில் கருடனுடைய வேகம்போன்ற வேகத்தையுடையவைகளாகப் (பறந்துசென்று) பகைவர்களுடைய மர்மஸ்தானங்களில் பாய்ந்தன. பிறகு, கவசங்களும், ஸாரதியும் குதிரைகளுடைய ஸ்வர்ணலங்காரங்களும் ஸௌர்யனுக்கொப்பான கிரீடமும் (ரதத்தின்மீதுள்ள) புலித்தோலும் ரதத்தினுடைய எல்லாஅவயவங்களும் பனியினால் ப்ராணிகள் மூடப்படுவதுபோலப் பகைவர்களுடையஅம்புகளால் மூடப்பட்டவைகளாகவிளங்கின. ஒருதடவைகூட அந்தரதத்தைப் பகைவர்

கள் (எதிர்த்துத்தாக்கச்) சக்தியுள்ளவர்களாகவில்லை; (அதேனுடு) பழகுவதற்கு எவ்விதம் சக்தியுள்ளவர்களாவார்கள்? கௌரவர்களால் பழகப்படாத அந்தத்தேரானது அவர்களை எதிர்த்துவந்தது. அந்த அர்ஜுனனுடையபாணங்கள் சத்ருக்களுடையசரீரங்களில் தடைப்படாததுபோல, [1]இரண்டுவிதமாக வகுக்கப்பட்டிருக்கின்றபடைகளில் அவனுடையதேரும் தடைப்படவில்லை. தேராளியான அந்த அர்ஜுனன், பெருங்கடலில் மிக்கவேகத்தோடு விளையாடுகின்ற பாம்புபோல, அந்தப்பகைவர் படையில் நுழைந்து அதைக்கலக்கினன். எப்பொழுதும் அளவுக்குமீறி(அம்புகளைத்)தொடுக்கின்ற கிரீடியினுடைய எல்லாஒலியையுங்காட்டிலும் அதிகமான வில்லினுடைய ஒலியானது ப்ராணிகளால்கேட்கப்பட்டது. அந்தப்போர்க்களத்தில் அப்பொழுது வெளியற்றஅம்புகளால் நன்றுக அறுக்கப்பட்ட யானைகள் ஸௌர்யகிரணங்களால் [2]சூழப்பட்ட மேகங்கள்போலக் காணப்பட்டன. எல்லாத்திசைகளிலும் சுழன்றுவருகின்றவனும் இடமாகவும் வலமாகவும் (அம்புகளைத்) தொடுக்கின்றவனுமான அர்ஜுனனுடைய வில்லானது போர்க்களத்தில் எப்பொழுதும் வட்டமாகவே காணப்பட்டது. உருவமில்லாத வஸ்துக்களில் கண்கள் ஒருபொழுதும் செல்லாததுபோலக் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அந்த அர்ஜுனனுடைய பாணங்கள் லக்ஷ்யமல்லாதவைகளில் விழவில்லை. யுத்தகளத்தில் அர்ஜுனனுடைய தேரின்வழியானது, ஒரேஸமயத்தில் காட்டைஅழிக்கும் ஆயிரம் பெரியயானைகளின் (வழிபோல), மிகவும் கோரமாயிருந்தது. பார்த்தனுலேயே துன்பமடைந்த பகைவர்கள், "பார்த்தனுக்குஜயத்தை விரும்புவதால் இந்த்ரனே எல்லாத்தேவர்களுடனும் சேர்ந்து நம்மைக்கொல்லுகிறனென்பது நிச்சயம்' என்றுஎண்ணினர்கள். போரில் பகைவர்களை அதிகமாகக்கொல்லுகின்றஸௌம்யஸாசியை (கௌரவர்கள்) அர்ஜுனஉருவத்தோடு ப்ரஜைகளைப் பக்ஷிக்கின்ற காலனைப்போல எண்ணினர்கள். கௌரவஸைனிகர்களுடைய சரீரங்கள் பார்த்தனால் அடிக்கப்படாமலிருந்தாலும் பார்த்தனுடையசெய்கையைக்கண்டமாத்திரத்தில் பார்த்தனால் அடிக்கப்பட்டவைகள்போலக் கீழேவிழுந்தன. கௌரவர்களுடையதலைகள், காலவேறுபாட்டினால் ஒஷதிகளுடையசிரங்கள் வணங்குவதுபோல அர்ஜுனனிடத்திலிருந்து உண்டானபயத்தினால் வணங்கின. அர்ஜுனன், கோபத்தினால், (பகைவர்படைகளைப்போரினின்று) புறங்காட்டி ஓடுகின்றவைகளும் கோபமுள்ளவைகளுமாகச் செய்தான். ஓரிடத்தில் பிளக்கப்பட்ட கௌரவ

1 'பகைவர்களின் படைகளில்' என்பது வேறுபாடம். 2 வேறுபாடம்.

சேனையின்முன்னணிகள் உதிரப்பெருக்கினால் பூமியைமிகச்சிவந்
நிறமுடையதாகச் செய்தன. ரக்தத்தேதாடுகூடியவைகளும் கா
றினால் தூற்றப்பட்டவைகளுமான புழுதிகளாலும் அந்தக்காற்றி
லேயே தூற்றிவிடப்பட்ட ஸூக்ஷ்மமான ரக்தத்துளிகளாலு
(பூசப்பட்டவர்களும்) ரக்தத்தால்நனைந்திருக்கின்ற ஆயுதங்க
லடிக்கப்பட்டவர்களும் ரக்தத்தால்நனைக்கப்பட்டவர்களும் ரக்தா
களில் அமிழ்ந்தவர்களுமான அந்தவீரர்கள் கிரீடியினால் கொல்ல
ப்பட்டார்கள். அந்தஸமயத்தில் ஸூர்யனுடையகிரணங்கள் மி
வும் சிவந்தவைகளாயின. அந்தக்ஷணத்தில் ஆகாசமானது ஸ
ந்த்யாகாலத்து மேகம்போலச் சிவந்ததாயிற்று. ஸூர்யன்கூட
அஸ்தகிரியைஅடைந்து திரும்பினாலும் திரும்புவான்; பாண்ட
வன் பகைவனைவெல்லாமல் திரும்பமாட்டான். எப்பொழுதுட
வீண்பேச்சுக்களைப்பேசுவதில் ஸமர்த்தர்கள், பகைவனைவெல்லா
மல் திரும்புவார்கள். ஸபலமான ஆண்மையுள்ள அர்ஜுனன்
யுத்தத்தில் சௌர்யமுடையவர்களும் ஆண்மையில் நிலைபெற்றவ
களும் விற்களைப்பிடித்தவர்களுமான அவர்களனைவர்களையும் தி
யாஸ்த்ரங்களால் எதிர்த்தான். அந்த அர்ஜுனனே த்ரோணர்
மீது எழுபத்துமூன்றுநாராசங்களை விடுத்தான்; சகுனியை எண்
பதுபாணங்களாலும் அஸ்வத்தாமாவை ஏழுபாணங்களாலும்
துஸ்ஸஹனைப் பத்துப்பாணங்களாலும் அடித்தான்; துச்சாஸன
னைப் பன்னிரண்டுபாணங்களாலும் சரத்வானுடையகுமாரரான
க்ருபரை மூன்றுபாணங்களாலும் சந்தனுபுத்ரரான பீஷ்மரை
அறுபதுபாணங்களாலும் நடுமார்பில்அடித்தான். இந்த்ரகுமா
னன அந்த அர்ஜுனன், பகைவரினிடையில், கர்ணனை, துவைந்த
தும் கூர்மையுள்ளதுமான கர்ணினென்கிற சிறந்தபாணத்தினால்அடி
த்தான். உறுதியானவில்லுள்ள அர்ஜுனனால் விடப்பட்ட கூரிய
அந்த அம்பானது கவசத்தையணிந்த கர்ணனை நன்றுகப் பிளந்து
விட்டுப் பூமியையும் பிளந்துகொண்டு சென்றது. பிறகு, பகைவர்
களை அடக்குபவனான அர்ஜுனன் அவனுடைய நான்குகுதிரை
களையும் நான்குக்ஷுரங்களால்கொன்று ஸாரதியினுடையதலையை
யும் சரீரத்தினின்று அறுத்துத்தள்ளினான்; அர்த்தசந்த்ரபாணத்
தினால் அவன்கையிலிருந்தவில்லையும் வெட்டினான். சிறந்தபாக்ய
முள்ளவனும் எல்லாஅஸ்த்ரங்களிலும் கரைகண்டவனுமான அந்
தக் கர்ணன் குதிரைகளும் ஸாரதியும் கொல்லப்பட்டு ரதத்தை
இழந்து அடிக்கப்பட்டபொழுது, படையானது தோல்வியடைந்
தது.

ஐம்பத்தேட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், விகர்ணன் முதலானவர்களை வென்று கர்ணனுடைய இளையஸஹோதரனைக் கொன்றதும், கர்ணன் தோற்று ஓடியதும்.)

(அர்ஜுனனுல்) நன்றுகஅடிக்கப்பட்ட அந்தப்படைமுழுவதும், அவ்வாறு (பெருகுகின்ற) பெருவெள்ளம்போல ஆரவாரித்து, பெருங்கடலானது கரையை அடைந்து நிற்பதுபோலப் பீஷ்மரை அடைந்துநின்றது. பகைவர்களை வாட்டுபவரும் தோள்வலிமையுள்ளவரும் யுத்தங்களில் (பகைவர்களால்)வெல்லப்படாதவரும் யுத்தஞ்செய்யும் விதத்தை நன்றுக அறிந்தவருமான காங்கேயர் அப்படைகள் எல்லாவற்றையும் ஸமாதானப்படுத்தி, பிறகு, அணிவகுத்துத் தேர்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் நிறைந்ததும் பகைவர்படைகளால் உடைக்கமுடியாததும் சூரர்களால் நன்றுகப் பாதுகாக்கப்பட்டதுமான (அந்தக் கௌரவசேனையை யுத்தத்துக்காக) ஒன்றுசேர்த்தார். ஆசார்யராலும் துர்யோதனனுலும் ஸுதபுத்ரனுலும் க்ருபராலும் பீஷ்மராலும் ரக்ஷிக்கப்பட்டவைகளும் கொல்லத்தகாதவைபோலிருப்பவைகளும் (பகைவர்களால்) நெருங்கமுடியாதவைகளும் தேர்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் வ்யாபிக்கப்பட்டவைகளும் வரிசைப்படுத்தப்பட்டவைகளும் பெரியகொடிகளுள்ளவைகளுமான அந்தக் கௌரவர்களுடைய படைகளைக்கண்டு, பகைவரையழிப்பவனும் கிரீடம்தரித்தவனும் காண்டீவத்தை வில்லாகக் கொண்டவனுமான அர்ஜுனன், பிறகு விராடபுத்ரனை அழைத்து, 'உத்தர! நீ முயற்சியுடன் கடிவாளங்களை நன்றுக இழுத்துப்பிடித்துக் குதிரைகளை அடக்கி நன்கு கவனித்து வேகமாக நடத்து. பகைவனை இந்தக்கர்ணனைப் போர்புரிவதற்காக வரிக்கிறேன். தேரின்மீது (நாட்டப்பட்டிருக்கின்ற) ஸ்தம்பத்தில் பார்க்கஅழகியதும் பலவாறு விசித்ரமானதும் புரளுகின்றதும் நெருப்பைப்போல ஒளிருகின்றதுமான யானைகட்டும்சங்கிலி காணப்படுகிற இதுதான் கர்ணனுடைய சிறந்தபடை. பொன்னுல்செய்யப்பட்ட மேல்விரிப்பும் வார்களுமுள்ள இந்தவெள்ளைக் குதிரைகளை இந்தப்படையோடு விரைவில் சேரும்படிசெய். அவ்விடத்தில் (என்னுடைய) வேகத்தைமுழுதும் காண்பிப்பேன். இந்தத்தேர்வீரர்களுடையகூட்டத்தை அடைவாயாக. ஸுதபுத்ரன், யானையானது யானையுடன் சண்டைசெய்வதற்குவிரும்புவதுபோல,என்னுடன் சண்டைசெய்ய எப்பொழுதும் விரும்புகிறான்.

நீ, என்னை, துர்யோதனனை அடுத்திருத்தலாலுண்டான இறுமாப்புடைய அந்த ஸைதபுத்ரனையே அடையும்படிசெய். இந்த்ரன் வஜ்ராயுதத்தினால் வ்ருத்ரனைத்தள்ளியதுபோல நான் அவனைத் தேரின்நடுவில் தள்ளுவேன்' என்று கூறினன். பிறகு, அந்த விராடகுமாரன் அதிகவேகமுள்ளவைகளும் பெரியவைகளும் பொன்னல்செய்தவார்களுள்ளவைகளுமான அந்தக்குதிரைகளால் தேராளிகளுடைய அந்தப் படையை நாசஞ்செய்துகொண்டு யுத்த பூமியின்மத்தியில் பாண்டவனை நடத்தினன். அதிகதேஜஸுடன் வருகின்ற அந்த அர்ஜுனனைக்கண்டு, அந்தத் தேர்வீரர்களுடைய கூட்டங்கள், எதிர்த்து ஓடிவந்து, புலியினால்கவரப்பட்ட காளையைப்போன்ற ஸூர்யகுமாரனைப் போரில் பாதுகாத்தன. யௌவனமுள்ளவர்களான சித்ராங்கதன், வீரனான சித்ரதன், ஸங்க்ராமஜித், துஸ்ஸஹன், சித்ரஸேனன், விவிம்சதி, துர்முகன், துர்ஜயன், விகர்ணன், துச்சாஸனன், சகுனி, சோணன், நிஷேதன் ஆகிய இவர்கள் அதிவேகமாக அந்தக்கர்ணனை அணுஸரித்தார்கள். மிக்கபலமுள்ள அந்தராஜபுத்ரர்களும், ஸஹோதரர்களோர்டுகூடி, கர்ணன் பார்த்தனை அடைந்துவிட்டானென்பதைப் பார்த்து, விற்களை எடுத்துக்கொண்டுசென்று அம்புகளுடைய ஜ்வாலைகளைப் போர்க்களத்தில் தனஞ்சயன்மீது நான்குபக்கத்திலும் இறைத்தார்கள். பார்த்தன் வில்லில் நாண்கயிறுகளாகிற அநேகதந்தியுள்ளதும் [1] ப்ராஸங்களாகிற உபவீணைகளுள்ளதும் அம்புக்கூட்டங்களாகிற வீணைவாசிக்குங்கோலுள்ளதும் கைந்நுனியாகிற யந்த்ரமுள்ளதும் உறுதியுள்ள வில்லாகிற தண்டமுள்ளதுமான வீணையை அந்தப்பகைவருடைய ஸமீபத்தில் விரைவாக வாசித்தான். அவ்விதமான நெருங்கினயுத்தம் தொடங்கியிருக்குங்காலத்தில், கௌரவர்களுள் அதிகசூரனை விகர்ணன் தேரின்மீதிருந்து பயங்கரமான [2] விபர்டங்களை வர்ஷித்துக்கொண்டுவந்து பீமனுடைய இளையஸஹோதரனும் அதிரதனுமான அர்ஜுனனைத் தாக்கினன். பிறகு, அர்ஜுனன் பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும் உறுதியான நாண்பூட்டியதுமான விகர்ணனுடையவில்லை அறுத்து அவன்கொடியையும் அடித்துக் கிழேதள்ளினன். அறுக்கப்பட்டகொடியுள்ள அந்தவிகர்ணனும் (போர்க்களத்தைவிட்டு) விரைவாக ஓடிவிட்டான். பகைவர்களுடைய கூட்டத்தைத் துன்புறுத்துகின்றவனும் மனிதரால்செய்யமுடியாத செய்கைகளைச்செய்கின்றவனுமான அந்தப்பார்த்தனைப் பகையைப்பொறுக்கதவனை சத்ருந்தபன், கூர்மநகமென்கிற பாணத்தால் அடித்

---

1 ஈட்டிகள். 2 'ஸ்தூலதண்டம் என்கிறபாணம்' என்பது பழைய உரை.

தான். அதிரதனும் ராஜாவுமான அந்தச் சத்ருந்தபனால் அடிக்கப் பட்ட அந்தத்தனஞ்சயன் பகைவர்களுடைய படையில்புகுந்து சத்ருந்தபனை ஐந்துபர்ணங்களால் விரைவாகஅடித்துப் பிறகு அவனுடையஸாரதியைப் பத்துப்பாணங்களால் கொன்றான். வேந்தரே! பிறகு, பரதஸ்ரேஷ்டனான அர்ஜுனனால் சரீரத்திலுள்ள கவசத்தைதப்பிளந்துகொண்டு செல்லுகின்றஅம்பினால் அடிக்கப்பட்ட அந்தச்சத்ருந்தபன் உயிரை இழந்து காற்றினால்முறிக்கப்பட்ட மரமானது மலையுச்சியினின்று விழுவதுபோலப் போர்க்களத்தில் விழுந்தான். தேராளிகளுள் சிறந்தவனும் உத்தமவீரனுமான அர்ஜுனனால் போரில்தோல்வியடைந்த தேராளிகளிற்சிறந்த அந்தவீரர்கள், காற்றடிக்கும்போது காற்றிலகப்பட்டு மிகவும் நடுக்கமுற்ற பெருங்காடுகள்போல, நடுங்கினர்கள். புருஷஸ்ரேஷ்டர்களும் பெளவனமுள்ளவர்களும் நல்லவேஷமுள்ளவர்களும் தனங்களை (ப்பிறருக்கு)க் கொடுக்கும் தன்மையுள்ளவர்களும் இந்த்ரனுக்கு ஒப்பான வீர்யமுள்ளவர்களும் யுத்தத்தில் இந்த்ரகுமாரனால் தோல்வி அடைவிக்கப்பட்டவர்களும் பொன்னாலும் எஃகினாலும் செய்யப்பட்ட கவசத்தால் கட்டப்பட்டவர்களும் இமயமலையைச்சேர்ந்த காட்டில் நன்றுகவளர்ந்த யானைகள்போன்றவர்களுமான போர்வீரர்கள் பார்த்தனால் அடிக்கப்பட்டு யுத்தபூமியில் படுத்துத் [1] தீர்க்கநித்ரைசெய்தார்கள். புருஷரிற்சிறந்தவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அந்த அர்ஜுனன் அவ்விதம் போரில் பகைவர்களைக்கொன்று முதிர்வேனிற்காலத்தின்முடிவில் காட்டை எரிக்கின்றநெருப்புப்போலப் போர்க்களத்தில் திசைகளிலும் மூலைத்திசைகளிலும் ஸஞ்சரித்தான். (காற்றானது) வஸந்தகாலத்தில் சருகுகளைக் கீழே உதிர்த்துவிட்டுப் புழுதியை ஆகாயத்தில் இறைத்துக்கொண்டு உலாவுவதுபோல, அதிரதனான கிரீடியானவன், பகைவர்மீது (அம்புகளை) இறைத்துக் கொண்டு ஒருதேருடன் போர்க்களத்தில் ஸஞ்சாரஞ்செய்தான். பிறகு, கிரீடத்தைத்தரித்தவனும் தீரத்தன்மையுள்ளவனுமான அர்ஜுனன், கர்ணனுக்கு உடன்பிறந்தவனும் தேரில் (பூட்டப்பட்ட) சிவப்புக்குதிரைகளுள்ளவனுமான ஸங்க்ராமஜித்தினுடைய குதிரைகளைக்கொன்று ஓரம்பினால் (அவனுடைய) தலையையும் அறுத்தான். ப்ராதா கொல்லப்பட்டவுடனே, வீர்யமும் மதமும் ப்ரதாபமுமுள்ளவனும் ஸுதபுத்ரனுமான கர்ணன் இரண்டு தந்தங்களையும் ஆயுதமாகக்கொண்டு மஹாபலமுள்ள கஜராஜாவானது விம்மத்தை எதிர்ப்பதுபோல (அர்ஜுனனை) எதிர்த்துவந்

1 இறந்தனர் என்பது பொருள்.

தான். ஸௌர்யகுமாரனன அந்தக்கர்ணன் பாண்டுபுத்ரனன பார்த்தனைப் பன்னிரண்டுபாணங்களால் அடித்து, (அவனுடைய) குதிரைகளையெல்லாம் அங்கங்களில் அம்புகளாலடித்து, (அவனுடைய ஸாரதியான) விராடபுத்ரனையும் அடித்தான். எல்லாவிதத்திலும் நிறைந்திருக்கின்ற தேஜஸ்ஸுள்ளவனும் பெரியவில்லாளியும் வீரனுமான கிரீடியானவன் போரில் எதிர்த்துவருகின்ற அந்த வைகர்த்தனனை (அம்புகளால்)மூடிப் பகைவர்களுடைய கூட்டங்களையும் தடுத்தான். பிறகு, மன்னத்திலெண்ணமுடியாத மஹிமையுள்ள கிரீடியானவன், கர்ணனுடைய முன்னிலையில்ஸஞ்சரிப்பவர்களையும் பின்புறத்தைக் காப்பவர்களையும் கொன்று சிறகுகளைவிரித்துக்கொண்டு கருடன் ஸர்ப்பத்தை எதிர்த்து அருகில்வருவதுபோல (க்கர்ணனை) அருகில் எதிர்த்து வந்தான். கௌரவர்கள், எல்லாவில்லாளிகளுள்ளும் சிறந்தவர்களும் மஹாபலசாலிகளும் பகைவரெல்லாருடைய (பராக்ரமத்தையும்) நேர்நின்று தாங்கும் திறமையுடையவர்களுமான அந்தக்கர்ணனையும் பார்த்தனையும் யுத்தத்தில் பார்க்க விருப்பமுற்று யுத்தத்தை நிறுத்திவிட்டு நின்றார்கள். பாண்டவன், வெளிப்படையாக வ்ருத்தியடைந்த கோபமுள்ளவனும் குற்றவாளியுமான கர்ணனைக் கோபத்துடன்பார்த்து, மேகமானது பெருமழையால் (பூமியை) மறைப்பதுபோல ஒருநொடியில் அவனைக் குதிரையோடும் தேரோடும் ஸாரதியோடும் பாணங்களால் மூடினன். பிறகு, கிரீடியினல் பாணங்களால்மூடப்பட்ட கர்ணனுடைய தேரைப்பார்த்து, குதிரைகளையும் தேர்களையும் யானைகளையுமுடையவர்களும், பீஷ்மரை முதன்மையாகக்கொண்டவர்களுமான பரதஸ்ரேஷ்டர்களைச்சேர்ந்த யுத்தவீரர்கள் ஆரவாரஞ்செய்தார்கள். பிறகு, மஹாத்மாவான அந்தக்கர்ணனும் அர்ஜுனனுடையகைகளால்விடப்பட்ட அந்த அம்புகளை அம்புக்கூட்டங்களால் விரைவாகத் திருப்பியடித்துவிட்டு, வில்லுடனும் பாணத்துடனும்கூடி, பொரிகளுடன்கூடின நெருப்புப்போல விளங்கினன். பிறகு, கர்ஜனைகளாலும் தோள்தட்டுதல்களாலும் ஸிம்மநாதங்களாலும் கர்ணனைக்கொண்டாடுகின்ற கௌரவர்களுடைய கைகளுடன் கைகள்கொட்டுகிற ஒலியானது, சங்கங்களாலும் பேரிகளாலும் பணவங்களாலும் நெருங்கியதாகத் தோன்றியது. பிறகு, கர்ணன், நான்குபக்கத்திலும் வாலைச்சுழற்றுகின்ற பெருங்கொடியையுடையவனும் ரதிகர்களுள் சிறந்தவனும் கௌரவர்களுள் மிகச் சிறப்புற்றவனும் கர்ணலோகத்தில் மிக்க ஓசையை உண்டுபண்ணுகிறவனுமான கிரீடியைப் பார்த்துக்

கர்ஜித்தான். குந்தீபுத்ரனுன கிரீடியும் கர்ணனைக் குதிரைகளோடும் கொடியோடும் ரதத்தோடும் ஸாரதியோடும்கூடத் துன்பமுறும்படி செய்து ஸந்தோஷத்தினுல் விரைவாகப் பிதாமஹரையும் த்ரோணக்ருபர்களையும்பார்த்து ஸிம்மநாதஞ்செய்தான். கர்ணன் வேகமுள்ள கூர்மையான அனேக அம்புக்கூட்டங்களை யுத்தத்தில் பார்த்தன்மேல் பொழிந்தான். அர்ஜுனனும் கர்ணனைக் கூர்மையுள்ள அம்புக்கூட்டங்களால் நன்றுக மூடினுன். பழுதுபடாத சரமாரிகளைப் பொழிகின்றவர்களும் அஸ்த்ரங்களை அறிந்தவர்களுமான அவ்விருவர்களுக்கும் பெரும்போர் நடந்தது. ஜனங்கள் ஒரு நொடிப்பொழுதில் (அவ்விருவரையும்) ராஹுவினிடத்தினின்றும் விடுபட்ட சந்த்ர ஸூர்யர்களைப்போல (ச்சரக்கூட்டினின்றும் விடுபட்டவர்களாக)க் கண்டார்கள். பார்த்தனுல் கொல்லப்பட்டவர்களும் யௌவனமுள்ளவர்களும் அழகிய தலைமயிர்களையுடையவர்களும் தங்கத்தினுலும் எஃகினுலும் செய்யப்பட்ட கவசமணிந்த சரீரமுள்ளவர்களுமான தேர்வீரர்கள் இமயமலைச்சாரலில் வெட்டப்பட்ட மரங்கள்போல யுத்தபூமியில் (விழுந்து) மரித்தார்கள். காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அந்தஅர்ஜுனன், யுத்தத்தில் அவ்விதமாகப் பகைவர்களைக் கொன்று அவர்களை ஊதினுன்; வெய்யில்காலத்துமுடிவில் அக்நியானது காட்டைக் கொளுத்துவதுபோல யுத்தத்தில் (பகைவர்களை எரித்துக்கொண்டு) மூலத்திசைகளிலும் திசைகளிலும் ஸஞ்சரித்தான். காற்றுனது வஸந்தகாலத்தில் உலர்ந்த இலைகளை இறைப்பதுபோல, அதிரதனைகிரீடியானவன், பகைவர்களை ஊதிக்கொண்டுபோர்க்களத்தில் தேரோடு ஸஞ்சரித்தான். அழகிய கிரீடத்தை அணிந்த அர்ஜுனன், இந்திரன் யுத்தத்தில் பகைவர்களை ஓட்டுவதுபோல அந்த வீரர்களான ரதிகர்களுடைய கூட்டத்தை ஓடும்படிசெய்து சிறந்த பாணங்களால் அனேக சத்ருக்கூட்டங்களை மூடினுன். சூரனும் கௌரவர்களுள் சிறந்தவனுமான கிரீடியானவன், அப்பொழுது, கர்ணனைப் பார்த்துக் கர்ஜித்துக்கொண்டு சொல்லலானுன்.

'கர்ண! 'யுத்தத்தில் எனக்கு ஸமானன் ஒருவனும் இல்லை' என்று ஸபையின்நடுவில்பலவாறுகப் பொருத்தமில்லாமல் நீ பேசுகிறுயல்லையோ? அதற்கு (ஸமயம்) இப்பொழுது வந்துவிட்டது. ஸபையில் ஆண்மையை அதிகமாகப் பேசி, முக்யமான தர்மத்தை விட்டுவிட்டு, நீ செய்யவிரும்புகிற கார்யம் உன்னுல் செய்யத்தகாததென்று நினைக்கிறேன். ராதாபுத்ர! உன்னுல் முன்பு, 'எனக்கு ஸமானன் ஒருவனும் இல்லை' என்று சொல்லப்பட்ட வார்த்தை

யைக் கௌரவர்களுடைய மத்தியில் என்னுடன் எதிர்த்து உன்
மையாகச்செய். உன்னுல் அப்பொழுது ஸபையில் துன்பப்படு
தப்பட்டவளான பாஞ்சாலியைப் பார்த்திருந்த (என்னிடத்
னின்று) இப்பொழுது அந்தச் செய்கையின் பலனைத் தனிமே
அனுபவிப்பாயாக. கெட்டபுத்தியுடையவனே! ராதாபுத்ர! தர்ம
பாசத்தால் கட்டுப்பட்டிருந்த என்னுல் உன்னுடைய எந்தப்பாவ
செய்கையானது பொறுக்கப்பட்டதோ அந்தப் பாவச்செய்கை
னுடைய பலனை அனுபவிப்பாயாக. கர்ண! இங்கே வா. இப்பொ
ழுது என்னேடு இவ்விடத்தில் யுத்தஞ்செய். அந்தக் கௌரவரை
வரும் ஸைனிகர்களுடன்கூட (நம்மிருவருடைய யுத்தத்தையும்
பார்த்துக்கொண்டிருக்கட்டும். ராதாபுத்ர! இப்பொழுதுதான்
என்னுடைய யுத்தத்தினின்றும் ஓடினுய். உன்னுடைய இளைய
ஸஹோதரனே கொல்லப்பட்டுவிட்டான். நீ என்னகாரணத்தினை
உயிரோடிருக்கிறுய்? உன்னைத்தவிர வேறு எந்த மனிதன் உடன்
பிறந்தவனைப் பறிகொடுத்துப் போர்க்களத்தையும்விட்டு ஓடி
ஸாதுக்களிடங்களில் (தன்னை ஆண்மையில்) நிலைபெற்றவனென்று
இவ்விதம் சொல்லிக்கொள்வான்?' என்றான்.

கர்ணன், 'பார்த்த! வாக்கினுல் சொல்லுகிறதை நீ செய்கை
யினுல் அனுஷ்டித்துக் காட்டு. பூமியில் செய்கையினுல் ஒப்பில்
லாத என்னைக்காட்டிலும் நீ வாக்கினுல்மாத்ரம் விசேஷித்தவன்
பார்த்த! உன்னுடைய அவ்விதமான பராக்ரமத்தைக் காணுதத
னுல், முன்பு நீ பொறுமையுடனிருந்தது திறமையில்லாமையா
லென்று எண்ணினேனும். தர்மபாசத்தால் கட்டுப்பட்டு முன்பு
பொறுத்திருந்ததுபோலவே இப்பொழுதும் கட்டுப்பட்டிருக்கை
யில் கட்டுப்படாதவன் என்று எண்ணுகிறுய். நீ ப்ரதிஜ்ஞைசெய்த
படி வனத்தில் வாஸம்செய்யவில்லை. துன்பமுற்றவனை நீ பொறு
னிலுள்ள பேராசையினுல் ப்ரதிஜ்ஞாகாலத்தைக் குறைப்பதற்கு
விரும்புகிறுய். பார்த்த! இந்த்ரன் நேரில்வந்து உனக்காகப் போர்
புரிந்தாலும் பராக்ரமத்தைக் காண்பிக்கப்போகின்ற எனக்குச்
கொஞ்சமேனும் வருத்தம் கிடையாது. ஓ! அர்ஜுன! நீ விரும்பி
யது இதோ விரைவில் வந்துவிட்டது. என்னுடன் நீ போர்
புரிவாயாகில் இந்தச்சண்டையில் உன்னுடைய பலத்தை நான்
பார்ப்பேன்' என்று கூறினன். கர்ணன் இவ்வாறு சொல்லிக்
கொண்டும் கவசங்களைப் பிளக்கின்ற அம்புகளை எய்துகொண்
டும் (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவனை பீபத்ஸுவை
எதிர்த்துச் சென்றான். மஹாரதனை பார்த்தன் விருப்பத

துடன் அந்தப் பாணங்களை ஏற்றுக்கொண்டான். பீபத்ஸுவான வன் காண்டீவம்என்கிறவில்லை நாணெலிசெய்து மழையைப்பொழி கின்றமேகம்போலப் பெரிதானசரமாரியோடு எதிர்த்துச்சென்று யுத்தத்தில் கர்ணனைக்கொல்லவிரும்பி (அவன்மீது) அனேக பாணங்களை விடுத்தான். வாயுவின்வேகத்தை மலைதாங்குவது போல அந்தப்பாணங்களைக் கர்ணன் ஏற்றுக்கொண்டு தாங்கினன்; அம்புக்கூட்டங்களை இடைவெளியில்லாமல் ஆகாயமுழுமையும் சொரிகின்றவர்களான அவ்விருவர்களுக்கும் தேவாஸுரர்க ளுடைய யுத்தம்போலப் பெரிதானயுத்தம் நடந்தது. பயங்கர மானவடிவமுள்ள மேகமண்டலங்கள் நான்குபக்கங்களிலும் உய ரக்கிளம்பின. கர்ணனுக்கும் பார்த்தனுக்கும் யுத்தம்நேர்ந்திருக் கும்போது பூமியிலுள்ளபுழுதியானது பறந்தது; ஸூர்யன் ப்ர காசிக்கவில்லை; காற்றும் வீசவில்லை; அம்புகளால் நன்குமூடப் பட்ட ஆகாயமானது ஒரேநிழல்போலாகியது; காண்டீவத்தி னுடைய ஒலியும் அவ்வாறே கர்ணனுடைய வில்லின்ஒலியும் எரிக் கப்படுகின்ற மூங்கில்களுடையஒலிபோல அதிபயங்கரமாகத் தோன்றின. அர்ஜுனனே குதிரைகளையும் யானைகளையும் தேர்களை யும் நாசம்செய்துகொண்டு அந்தஸைன்யத்தைக் கொந்தளிக்கச் செய்தான்; பலமுறை கர்ணனையும் அடித்தான். பிறகு, சிறந்தகை களுள்ளபார்த்தன் கர்ணனுடைய வில்லை அறுத்தான். அறுக்கப் பட்ட வில்லையுடையவனை கர்ணன், பிறகு, வேகத்துடன் சக்தி ஆயுதத்தை எறிந்தான். பார்த்தன் போர்க்களத்தில் அந்தச்சக்தி ஆயுதத்தைக் கூர்மையுள்ள அம்புகளால் துணித்தான். பிறகு, பார்த்தன், கர்ணனைப் பின்தொடர்ந்துவந்தவர்களையெல்லாம் காண்டீவத்தினின்று விடுபட்டபாணங்களால் யமனுடையவீட் டுக்கு அனுப்பினன். பார்த்தனுடைய பாணங்கள் போகிறவழியில் அடிக்கப்பட்டவைகளும் பொன்மயமான கச்சைகளுள்ளவைக ளும் அம்புக்கூட்டங்களால் ஆச்சர்யகரமானவைகளும் அக்னித்தி ரளால் வ்யாபிக்கப்பட்ட மலைகள்போன்றவைகளுமான யானைஅர சுகள் பூமிமுழுதையும் மறைத்துக்கொண்டு விழுந்தன. ஸூர்ய குமாரனை கர்ணன், முதலில், சத்ருக்களுடையசேனைகளை நாசம் செய்பவைகளும் அமானுஷங்களுமான கார்யங்களைச்செய்கின்ற அந்தப்பார்த்தனைப் பொறுமல் (பாணங்களுக்கு) இலக்காகச்செய் தான். பிறகு, கர்ணன் (நாண்கயிற்றினின்று) இழுத்துவிடப்பட்ட நான்குபாணங்களால் தனஞ்சயனுடையகுதிரைகளையும் ஆறு பாணங்களால் ஸாரதியையும் பத்துப்பாணங்களால் (மறுபடியும்)

குதிரைகளையும் அறுபதுபாணங்களால் பார்த்தனையும் மூன்
பாணங்களால் அவனுடையகொடியையும் அடித்தான். பொ
களால் ப்ரகாசிக்கின்றதும் பயங்கரமானசப்தமுள்ளதும் கோ
மாகிறவிறகுள்ளதும் கொடிகளாகிற நுனியுள்ளதும் பாணங்
ளாகிற ஜ்வாலைகளுள்ளதும் அஸ்திரங்களின்காற்றுகிற பயங்
மான காற்றுள்ளதுமான கர்ணனுகிய ஒருப்பானது பார்த்
ணுகிற உலர்ந்தகாட்டைக்கொளுத்த எண்ணங்கொண்டதுபோ
ப்ரகாசித்தது. தன்னுடையதேருருளைகள்சங்கம் இவைகளுடை
சப்தமாகிறபயங்கரமான இடிமுழக்கமுள்ளதும் அசைந்
கொண்டிருக்கிற கொடித்துணிகளாகிற ப்ரகாசிக்கின்ற பயங்க
மான மின்னல்களுள்ளதும் சஸ்திரங்களும்பாணங்களுமாகிற நீர்
தாரைகளுள்ளதுமான பார்த்தனுகிற மேகமானது கர்ணனுகி
ருப்பை நன்றுகத்தணித்தது. அந்தக்கர்ணனுல் யுத்தத்தில் மி
வும் அடிக்கப்பட்டவனும் கௌரவர்களுள்சிறந்தவனும் ஜயசீ
லனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான கிரீடியானவன்
தூங்கும்போது எழுப்பப்பட்டவரிம்மம்போல(க்கோபங்கொண்டு
கர்ணனைக்கொல்வதின்பொருட்டு அதிகவிரைவை அடைந்தான்
ஆச்சர்யகரமானவீர்யமும் செய்கையுமுள்ள அந்தக்கிரீடியான
வன் கிரணஸமூஹங்களுள்ள ஸூர்யன் இவ்வுலகங்களைத் தபி
கச் செய்வதுபோலப் பாணசமூகங்களால் கர்ணனுடையபரத்தை
நன்றுகத் தபிக்கச்செய்துகொண்டு போர்க்களத்தில் ப்ரம்மாஸ்
திரத்தை ப்ரயோகித்தான். யானையால்அடிக்கப்பட்ட யானை
தலைவன்போன்ற அந்த அர்ஜுனன் கூர்மையுள்ள அம்புகளை
தூணீரத்தினின்றெடுத்து வில்லைக் காதுவரையில் இழுத்துப் பிற
பாணங்களால் ஸூதபுத்ரனை அடித்தான். பிறகு, அந்தப்பார்
தன் பகவானுனமஹேந்திரன் வஜ்ராயுதங்களால் பர்வதத்தை
பிளப்பதுபோல அந்தக்கர்ணனுடைய இரண்டுகைகளையும் தலை
யையும் நெற்றியையும் கழுத்தையும் மார்பையும் தோள்களையும்
கைகளுடையநடுவையும் யுத்தத்தில் (பாணங்களால்) பிளந்தான்
பலசாலியான அந்தவைகர்த்தனன் பார்த்தனல் விடப்பட்ட
பாணங்களைப் பொறுமல் யானையினல்ஜயிக்கப்பட்ட யானைபோலவ
பார்த்தனுடைய பாணங்களால் தபிக்கச்செய்து வெல்லப்பட்
யுத்தகளத்தைவிட்டு ஓடினன்.

ஐம்பத்தோன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம்.(தொடர்ச்சி.)

(அர்ஜுனன் த்ரோணருடன் யுத்தம்செய்ததும், இடையில் அஸ்வத்தாமா வந்ததும், த்ரோணர் தோற்றோடியதும்.)

பார்த்தன், ஸுர்யகுமாரனை கர்ணன் ஜயிக்கப்பட்டதைக்கண்டு, விராடபுத்ரனைப்பார்த்து, 'ராஜகுமாரா! நீ உறுதியாயிரு. யுத்தத்தில் நமக்கு ஜயம். சத்ருக்களுக்கு மயிர்க்கூச்சலுண்டாகக்கூடியதான சங்கத்தைத் தைர்யத்துடனும் பரபரப்பில்லாமலும் மார்பும் கண்களும் [1]கலங்காமலிருக்கும்படியும் ஊதப்போகிறேன். நீ யுத்தகளத்தில் என்னுடைய ஆசார்யரான த்ரோணரிருக்கிற இடத்துக்கு விரைவாகச்செல்' என்று கூறினன். அவ்வாறு போர்க்களத்தில் விளையாடுகின்ற அர்ஜுனனுக்குப் பலமும் ஆண்மையும் தேஜஸும் சுறுசுறுப்பும் பெருகின. அந்த ஆச்சர்யத்தைப்பார்த்து உத்தரனுக்குப் பயம் அணுகியது. உத்தரன், 'கூர்மையுள்ள அம்புக்கூட்டங்களை விடுகின்ற உம்முடைய திவ்யாஸ்த்ரங்களையும் உமதுபராக்ரமத்தையுங் கண்டு என்மனம் மிக்க மயக்கமுற்றிருக்கிறது. பரதஸ்ரேஷ்டரே! என்மனமானது பயத்தால் இரண்டுபட்டிருக்கிறது. முன்பார்த்திராத உம்முடைய காண்டீவத்தின் சப்தத்தையும் வில்லை மிகஇழுக்கின்ற உம்முடைய தோள்வலிமையையும் த்ரிவிக்ரமாவதார காலத்தில் விஷ்ணுவினுடைய தேஜஸ்போன்ற (ஒருவராலும்) அவமதிக்கமுடியாத உம்முடைய தேஜஸையும் பார்க்கிறேன்' என்றான். உத்தரன், ஆச்சர்யகரமான அந்தக் காண்டீவத்தையும் கிரீடியினால்விரைவாகவிடப்படுகின்ற பாணங்களையும் பார்த்துப் பயந்து போரின் இடையில் அர்ஜுனனைப்பார்த்து, 'நான் உம்முடையகுதிரைகளை நடத்தச் சக்தியற்றவனாயிருக்கிறேன்' என்றுகூறினன். பகைவர்களைக் கொல்லுபவனும் காண்டீவத்தை வில்லாகக் கொண்டவனுமான அர்ஜுனன், அந்தஉத்தரனைப் பார்த்துக் கொஞ்சம் சிரித்து, 'உத்தர! நான் துணைவனாக இருக்கும்பொழுது உனக்கு எங்கிருந்து பயமுண்டாகும்? (தைர்யத்துடன்) போ. குதிரைகளைத் தட்டிக்கொடுத்து நடத்து' என்றுசொன்னன். அந்தத் தனஞ்சயனால் தேற்றப்பட்ட விராடபுத்ரன் குதிரைகளை விரைவாக நடத்தினன். மஹேந்த்ரனுக்கு ஒப்பான தனஞ்சயனும் வில்லைஇழுத்து நாணொலி உண்டாக்கினன். இழிவானகார்யத்தைச் செய்யாதவனான அர்ஜுனன், மறுபடியும், உத்தரனைப்

1 'அவ்யக்ர' என்றபாடம் கொள்ளப்பட்டது.

பார்த்து, 'அப்பனே! என்னை அடுத்திருக்கும் நீ போர்முனையி பயப்படவேண்டாம். நீ ராஜபுத்ரனுயிருக்கிறாய். உனக்கு மங்க மூண்டாகவேண்டும். பெரிதான மாத்ஸ்யராஜகுலத்தில் பிறந்த னை நீ (இந்த) அரசர்களின்கூட்டத்தில் வ்யஸனமடையத்தக்க னல்லை. ராஜபுத்ர! நீ அதிகதைர்யத்தை உண்டுபண்ணிக்கொண் போர்க்களத்தில் அரசர்களோடு போர்புரிகின்ற என்னுடை தேரை நடத்து' என்றுசொன்னன். ஒப்பற்றஒளிபொருந்தி வனும் ரதிகர்களுள் சிறந்தவனும் பாண்டுவின்மைந்தனுமா பீபத்ஸு அந்த உத்தரனைப்பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டு பாரத்வாஜரைக்குறித்து மறுபடியும் கூறலானன்.

'அக்னிஜ்வாலைக்கொப்பானதும் ஸ்வர்ணமயமான தண்ட தின்மீது தூக்கிநிறுத்தப்பட்டதும் கொடித்துணிகளால் அல கரிக்கப்பட்டதுமான பொன்மயமான இந்தவேதியானது கான படுகிறவிடத்தில் என்னை நடத்திக்கொண்டுபோ. உனக்கு மங்கள உத்தமரான த்ரோணரை எதிர்த்துப் போர்புரியப்போகிறேன் பரத்வாஜருடைய புத்ரரும் ஆசார்யரும் மஹாத்மாவுமா த்ரோணரோடு நான் யுத்தம்செய்யப்போகிறேன். சென்றிறமுள்ள வைகளும் நன்றுக (ப்பாரத்தைச்) சுமக்குந் தன்மைபொருந்தி வைகளும் எல்லாப் பழக்கங்களிலும் மிக்கதேர்ச்சியடைந்தவ களும் ப்ரகாசிக்கின்றவைகளுமான குதிரைகள் கட்டப்பட்ட சிறந்தரதத்தில் வீற்றிருப்பவரும், சூரரும், ஆயுதம்பிடித்தவரனை ருள்ளும் சிறந்தவரும், ப்ரகாசிக்கின்ற வைடூர்யத்துக்கு ஒப்பான வரும், சிவந்தகண்களும் இனியகாட்சியும் ஸௌர்யமனப்போன் தேஜஸுமுள்ளவரும், பலமும் வீர்யமும்பொருந்தியவரும், உ கங்களிலுள்ள எல்லாவில்லாளிகளுள்ளும் சிறந்தவரும், எல்ல உலகங்களிலும் பூஜிக்கப்பட்டவரும், நீதியில் ப்ருஹஸ்பதிக்கும் சு ரனுக்கும் ஒப்பானவரும், புத்திசாலிகளுள் சிறந்தவரும், லக்ஷண களுடனும் [1]அங்கங்களுடனும் உபாங்கங்களுடனும்கூடின நான்கு வேதங்களையும் தனுர்வேதத்தையும் ப்ரம்மாஸ்த்ரத்தையும் புரா ணத்தையும் இதிஹாஸத்தையும் தண்டநீதியையும் மனுநூலையும் முழுதும் நன்குகற்றுத் தம்மிடம் நிலைபெறச்செய்தவரும், பொற மையும் இந்த்ரியநிக்ரஹமும் ஸத்யமும் தேஜஸும் மென்மையும் கபடமின்மையுமானபலகுணங்கள் நிலைபெற்றவரும், ப்ராம்மண களுள் சிறந்தவரும், எப்பொழுதும் என்னிடம் ப்ரியமுள்ளவரும் எனக்கு எப்பொழுதும் இஷ்டருமான இந்த த்ரோணருடன் நான் இப்பொழுது க்ஷத்ரியதர்மத்தைமுன்னிட்டு யுத்தஞ்செய்

1 விவரம், ஆதிபர்வம் நுசு-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

யப்போகிறேன். உத்தர! ஆங்கையால், இப்பொழுது என்னுடைய சிறந்தரதத்தை ஆசார்யரிடம் கொண்டுபோ. எனக்கும் அவருக்கும் (நடக்கப்போகிற) அத்புதமான் மற்றொரு யுத்தத்தையும் பார்' என்று சொன்னன். இவ்வாறு சொல்லக்கேட்ட உத்தரன், அந்த த்ரோணரைக்குறித்துக் குதிரைகளைத் தூண்டினன். அர்ஜுனனுடைய ரதமானது த்ரோணருடைய ரதத்தை நோக்கி வந்தது. போர்க்களத்தில் தேருடன் வேகமாகவருகின்ற பாண்டு குமாரனை அந்தப் பார்த்தனை, த்ரோணரும், மதங்கொண்ட ஓர் யானையை மதங்கொண்ட மற்றொருயானை எதிர்ப்பதுபோல எதிர்த் தார். சிறந்த கைகளுள்ளவனை அந்தக் குந்தீபுத்ரன் பொன்மய மானதேருள்ளவரும் வேகமாய் எதிர்த்துவருகின்றவருமான அந்த ஆசார்யரைக்கண்டு இருகைகளையும் குவித்துக்கொண்டு பின்வருமாறு சொல்லலானன்.

'நாங்கள், செய்ததற்கு ப்ரதிசெய்யஎண்ணி, வனத்தில் வாஸஞ்செய்தோம். யுத்தத்தில் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாத வரே! எங்கள்விஷயத்தில் எப்பொழுதும் நீர் கோபம்செய்யத் தக்கவரல்லீர். தோஷமற்றவரே! நான் முதலில் உம்மால் அடிக் கப்பட்டுப் பிறகு உம்மைஅடிக்க விரும்புகிறேன். அதை நீர் பொறுத்துக்கொள்ளவேண்டும்' என்றுசொன்னன். பிறகு, பேரி களும் படஹங்களும் முழங்கின. அர்ஜுனன் சங்கத்தை ஊதி னன். படைமுழுவதும் பொங்குகிறகடல்போலக் கலக்கமுற்றது. பிறகு, அந்த த்ரோணர் (அர்ஜுனன்மீது) இருபதுபாணங்களை விடுத்தார். கைச்சுறுசுறுப்புள்ள பார்த்தன் அவைகளைத் தன் னிடம் வருவதற்குள்ளாகவே துண்டித்தான். பிறகு, வீர்யசாலி யான த்ரோணர் ஹஸ்தலாகவத்தைக்காட்டிப் பார்த்தனுடைய தேரின்மீது ஆயிரம்பாணங்களைத் தொடுத்தார். இவ்வாறு, த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தம் நடந்தது. போரில் அன்னப்பறவைகளின் நிறம்போன்ற நிறமுடையகுதிரைகளோடு சேர்ந்திருக்கிற மிக்கவேகமுள்ள சிவப்புக்குதிரைகளைக்கண்டு பாமரஜனங்கள் வியப்புற்றார்கள். பகைவர்களைவாட்டுகிறவரான அந்த த்ரோணாசார்யர் பார்த்தனுடையதேரைத் தேரினால்தாக்கி ஸந்தோஷத்துடன் அப்பொழுது பாண்டவனை எதிர்த்தார். த்ரோணர் பாண்டவன் இவர்களுடைய கொடிகள் ஒன்றோ டொன்று சேர்க்கைபெற்றதுபோலிருப்பதைப்பார்த்துக் கௌர வர்களுடைய பெரியசேனையானது அடிக்கடி மிக்கநடுக்கமுற்றது. கொடியவைகளும் கூர்மையான முனையுள்ளவைகளும் மிக்கஒளி யுள்ளவைகளுமான பாணங்களைத் தொடுக்கின்ற ஆசார்யருக்கும்

அர்ஜுனனுக்கும் அவ்விதமானயுத்தம் நடந்தது. வீர்யத்தா
நிறைந்தவர்களும் ரதிகர்களும் வீர்யத்தைவெளிப்படுத்தினவ
களும் பலசாலிகளும் ப்ரவ்ருத்தமானசெய்ஞைகளுள்ளவர்களும் ஜ
யடைவதற்காக ஸ்ரமத்தை அடைந்தவர்களும் உலகத்தில் அ
ரதர்களும் பகைவர்பட்டணத்தை ஜயிக்கின்றவர்களும் அம்புக்கூ
டங்களைத் தொடுக்கின்றவர்களும் ஆசார்யசிஷ்யர்களுமான அ
விருவீரர்களையும் பார்த்து க்ஷத்ரியர்கள் மயக்கமடைந்தார்கள்
த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும்நேர்ந்த த்வந்த்வயுத்தத்தி
மனிதர்கள்எல்லாரும் ஆச்சர்யமடைந்தார்கள். (இவ்விஷ
மான) வார்த்தையைச் சொல்லுகின்ற மனிதர்களுடைய அவ்வி
மான பெரியசப்தமானது கேட்கப்பட்டது. அந்தயுத்தமுனையி
நிற்கின்ற ஜனங்கள், கோபங்கொண்டுநெருங்கிப் போர்புரிகின்
மஹாரதர்களான அவ்விருவர்களையும் நன்றுகப்பார்த்து, 'போர்
களத்தில் த்ரோணருடன் அர்ஜுனனைத்தவிர வேறுஎவன் யு
தம்செய்யத் தகுந்தவன்? அர்ஜுனன் ஆசார்யரோடுபோ
புரிவதால் இந்தக்ஷத்ரியதர்மம் பயங்கரமானது' என்று சொ
லிக்கொண்டார்கள். (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவர்களா
அவ்விருவர்களும் ஒருவரையொருவர் அம்புக்கூட்டங்களா
மூடினர்கள்; போர்க்களத்தில் உதித்திருக்கின்ற இரண்டு ப்ரள
காலஸூர்யர்கள்போல விளங்கினர்கள். த்ரோணர், அ
பொழுது அதிகமான கோபங்கொண்டு, ஸ்வர்ணமயமான பி
புறமுள்ளதும் (பகைவர்களால்) நெருங்க முடியாததுமா
பெரியவில்லை நாணேற்றியிடும்படிசெய்து பல்குனனைஎதிர்த்து
போர்புரிந்தார். அவர் அர்ஜுனனுடையதேரைப் பாண்ம
மான வலிகளால்மூடி ஒளியுள்ளவைகளும் சாணையில்தீட்டப்ப
டவைகளுமான அம்புகளால் திசைகளை நன்றுக மூடினர். அ
பொழுது, மஹாரதனான அர்ஜுனன் மிக்கவேகமுள்ள அனே
பாணங்களால் த்ரோணரை அடித்தான். மழைக்காலத்தி
நீருண்டமேகமானது மலையின்மேல் மழைத்தாரைகளைப் பொழி
வதுபோலப் பல்குனன் (பாணங்களை த்ரோணர்மீது) பொழி
தான். பரத்வாஜருடைய புத்ரரான த்ரோணாசார்யர் பொன்ம
மானவைகளும் பற்பலவகைப்பட்டவைகளும் வில்லினின்று வி
ப்பட்டவைகளுமான அம்புகளால் அந்த அர்ஜுனனுடைய உத்த
மான ரதத்தை நன்றுகமூடினர். புஜபலமுள்ளவனும் அளவி
முடியாத தைர்யமுள்ளவனுமான அர்ஜுனனும் அவ்வாறே
திவ்யமானதும் சத்ருக்களைக்கொல்லுகின்றதும் சிறந்தவே
முள்ளதாகப் படைக்கப்பட்டதும் (சத்ருஸம்ஹாரகார்ய) பார
துக்கு ஸாதனமாயிருக்கின்றதும் உத்தமுமான காண்டீவம்என

கிற வில்லை வளைத்து அதனை நாணெளியிடும்படி செய்து பற்பல விதங்களும் ஸ்வர்ணத்தால்செய்யப்பட்டவைகளுமான அனேக பாணங்களை ப்ரயோகித்து த்ரோணருடைய ரதத்தைமூடி விளங்கினன்; அவருடையவில்லினின்று விடுபட்டபாணங்களைத் தன் பாணங்களால் தடுத்தான். பார்க்கஅழகியவனும் மஹாரதனுமான பார்த்தன் எல்லாத்திக்குக்களிலும் ஒரேஸமயத்தில் அஸ்த்ரங்களை ப்ரயோகித்துக்கொண்டு ரதத்துடனே எல்லாப் பக்கத்திலும் ஸஞ்சரித்தான். குந்திபுத்ரனை பாண்டவன் கைப்பழக்கத்தால் கொடியபாணங்களை எடுப்பதையும் தொடுப்பதையும் விடுப்பதையும் ஜனங்கள் பார்க்கமுடியவில்லை. அவன் நான்கு பக்கத்திலும் ஆகாயத்தைப் பாணங்களால் ஒரேநிழலுள்ளது போலச் செய்தான். பிறகு, பனியினல் (மூடப்பட்ட) மலைபோல (பாணங்களால்மூடப்பட்ட) த்ரோணர் கண்ணுக்குத்தோன்றவில்லை. ராஜரே! அனேக அம்புகளால் அர்ச்சிக்கப்பட்ட மிகச்சிறந்த பார்த்தனுடைய சரீரமானது, கிரணங்களால் மலர்ந்திருக்கும் ஸூர்யனுடைய சரீரம்போலிருந்தது. அம்புக்கூட்டங்களைத் தொடுக்கின்றவனும் மஹாத்மாவுமான அர்ஜுனனுடைய அப்படிப்பட்ட கோரமானபாணங்களை யுத்தத்தில் (சத்ருக்களை) ஜயிப்பவரான த்ரோணரும் சிதறஅடித்து, ஆகாயத்தில் இருளைவிலக்கி ப்ரகாசிக்கின்ற ஸூர்யன்போல விளங்கினர். அக்னிசக்ரத்துக்கு ஒப்பானதும் பயங்கரமானதும் யுத்தத்தில் வட்டவடிவமாகச் செய்யப்பட்டதும் மிகப்பெரிதும் மேகத்தினுடைய இடிமுழக்கம் போன்ற முழக்கமுள்ளதுமான வில்லையிழுத்துப் போர்க்களத்தில் அடிக்கடி பாணங்களைஎய்கின்ற (அர்ஜுனனைக்) கௌரவர்கள் கண்டார்கள். பிறகு, இடிமுழக்கத்துக்குஒப்பான த்ரோணருடைய வில்லின்பெரியஒலியும் அப்பொழுது ஜனங்களால் எல்லாத்திக்குக்களிலும் கேட்கப்பட்டது. பரதஸ்ரேஷ்டரே! அது ஸைன்யங்களுக்கு ஆச்சர்யகரமாகஇருந்தது. அளவிடமுடியாத பலமுள்ள த்ரோணர் புடம்போட்டதங்கத்தால் செய்யப்பட்ட வைகளும் ப்ரகாசிக்கின்றவைகளும் அக்னிபோன்றவைகளுமான அம்புகளால் திக்குக்களைபும் ஸூர்யனுடையஒளியையும் மூடினர். பிறகு, பொன்மயமான கட்டுக்களுள்ளவைகளும் அழுந்திய கணுக்களுள்ளவைகளும் ஆகாயத்தைஅடைந்து ஸஞ்சாரம் செய்கின்றவைகளுமான பாணங்களுடைய அனேககூட்டங்கள் காணப்பட்டன. த்ரோணருடைய வில்லினின்று பாணங்கள் தோன்றின. ஒன்றுபோலத் தொடர்ச்சியாகவிளங்குகின்ற பெரிய பாணங்கள் ஆகாயத்தில் அன்னப்பறவைகளுடையவரிசைகளைப்

போலக் காணப்பட்டன. இவ்வாறு, பொன்னால் அழகுசெய்
பட்டிருக்கின்ற அனேக அம்புகளை விடுக்கின்ற அவ்விருவீரர்களு
ஆகாயத்தை எரிநக்ஷத்ரங்களால் சூழப்பட்டதுபோலச் செய்த
கள். கழுகிறகுகளும் மயில்தோகைகளும் பூண்ட அவ்விரு
ருடையபாணங்களும் சரத்காலத்தில் ஆகாயத்தில் (ஸஞ்சரி
கின்ற) மதங்கொண்ட ஸாரஸபக்ஷிகளுடைய வரிசைகள்போல
காணப்பட்டன. மிகுந்தகோபங்கொண்ட அவ்விருவருக்கும் மி
கொடுமையானதும் வியப்பைத்தரத்தக்கதும் மனத்திலெண்ண
முடியாததுமான அந்தயுத்தமானது, வ்ருத்ரனுக்கும் இந்த்ரனு
கும் நடந்ததுபோல நடந்தது. இரண்டுபெரியயானைகள் ஒன்ற
ஒன்றுஎதிர்த்துக் கொம்புகளுடைய நுனிகளால் அடித்துக்கொ
வதுபோல அவர்கள் (காதுவரையிலும்) பூர்த்தியாக இழுத்
விடப்படும் அம்புகளால் ஒருவரையொருவர் அடித்துக்கொ
டார்கள். பிறகு, ஜயசாலிகளுள் உத்தமனை அர்ஜுன
ஆசார்யமுக்யரால் விடப்பட்டவைகளும் சாணையில் தீட்டப்பட்
வைகளுமான அம்புகளைக் கூர்மையானபாணங்களால் தடு
தான். கொடியபராக்ரமமுள்ள தனஞ்சயன் தன்னை உத்ரஸ்
ரூபியாகவும் இந்த்ரஸம்பந்தம்பெற்றவனாகவும் வெளிக்காட்டி
கொண்டு அனேக அம்புகளால் ஆகாயத்தை விரைவாக மூடினா
(பகைவர்களை) கொல்லவிருப்பமுள்ளவனும் புருஷரிற்சிறந்த
னும் பயங்கரமானகாட்சியுள்ளவனுமான அர்ஜுனனை த்ரோண
கூர்மையும் அழுந்தியகணைக்களுமுள்ள அம்புகளால் அடித்தா
யுத்தத்தில் திறமையுள்ளவரும் ப்ரதாபசாலியுமான த்ரோண
அழுந்தினகணைக்களுள்ள அம்புகளால் அர்ஜுனனைநெடுவிளையாடி
கொண்டு ஸந்தோஷமுள்ளவராஞர். சூரர்களும் ஸந்நத்தர்களு
போரில்விளங்குகின்றவர்களுமான அவ்விருவர்களும் வகைவக
யாக ப்ரம்மாஸ்த்ரமுதலான திவ்யாஸ்த்ரங்களை ப்ரயோகித்து
கொண்டு (ஒருவரையொருவர்) பிளந்தார்கள். யுத்தத்தில் சூ
ரனை அந்தப்பார்த்தன் தன்னுடையவீர்யத்தைக் காட்டி
கொண்டு மஹாஸ்த்ரங்களாலும் பாணங்களாலும் மஹாத்மாவா
த்ரோணரை மூடினன். பார்த்தன் அஸ்த்ரங்களால் அஸ்த்ர
களைத் தடுத்துத் த்ரோணரைமூடினன். கோபங்கொண்டவர்களு
புருஷச்ரேஷ்டர்களும் (ஒருவர் ஒருவருடைய பராக்ரமத்தைப்
பொறுதவர்களுமான அவ்விருவர்களுக்கும், மஹாபலிக்கும் இ
த்ரனுக்கும் நடந்ததுபோல ரணகளத்தில் யுத்தம்நடந்தது
பாரத்வாஜரும் அர்ஜுனனும் யுத்தத்தில் மஹாஸ்த்ரங்களை
வெளிப்படுத்தினர்கள். பாண்டவன் த்ரோணருடைய வில்

னின்று அடிக்கடி விடுப்பட்ட ஐந்த்ராஸ்த்ரத்தையும் வாயவ்யாஸ்த்ரத்தையும் ஆக்னேயாஸ்த்ரத்தையும் அந்தஅந்த அஸ்த்ரத்தால் அடிக்கடி விலக்கினன். இவ்விதம் சூரர்களும் மஹாவில்லாளிகளும் சாணையில் தீட்டப்பட்ட சரங்களைத்தொடுக்கின்றவர்களுமான அவ்விருவர்களும் ஆகாயத்தைச் சரமாரிகளால் ஒரேநிழலுள்ளதாகச் செய்தார்கள். பிறகு, அர்ஜுனனால் விடப்பட்டுப்ராணிகள்மீது விழுகின்ற பாணங்களுடையசப்தமானது பர்வதங்களின்மீது விழுகின்ற வஜ்ராயுதங்களுடைய சப்தம்போலக் கேட்கப்பட்டது. வேந்தரே! பிறகு, ரக்தத்தால் நனைக்கப்பட்டயானைகளும் தேர்களும் குதிரைகளும் குதிரைக்காரர்களும் பூத்திருக்கின்ற பலாசமரங்கள்போலக் காணப்பட்டார்கள். த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும் நேர்ந்த அந்த த்வந்த்வயுத்தத்தில் ஸைன்யமானது தோள்வளைகளுடன் அறுத்துத்தள்ளப்பட்ட கைகளாலும், பெரியதேர்களாலும், உடைத்துத் தள்ளப்பட்டவைகளும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கவசங்களாலும், த்வஜங்களாலும், பார்த்தனுடையபாணங்களால் நான்குபக்கத்திலும் பீடிக்கப்பட்டவர்களும் கொல்லப்பட்டவர்களுமான யுத்தவீரர்களாலும் மிகமயங்கியதாகியது. பெரியகார்யங்களுக்கு ஸாதனங்களாயிருக்கின்ற இரண்டுவிற்களையும் (அம்புதொடுப்பதால்) அதிகஅளவுள்ளனவாகச் செய்கின்ற வீரர்களான அவ்விருவரும் ஒருவரையொருவர் எரிக்கவிரும்பிச் சிறந்தஅம்புகளால் மூடினர்கள். பிறகு, 'த்ரோணர் (பகைவர்களை) நன்குஅடிப்பவனும் மஹாவீர்யமுடையவனும் உறுதியான முஷ்டியையுடையவனும் (பகைவர்களால்) அணுகமுடியாதவனும் எல்லாத்தைத்யர்களையும் ஜயித்தவனும் எல்லாவீரர்களுள்ளும் மஹாரதனுமான அர்ஜுனனை எதிர்த்துப் போர்புரியும் காரணத்தால் செய்யமுடியாதகார்யத்தைச் செய்கிறார்' என்று அந்தயுத்தத்தில் அவரைப் புகழ்கின்றவர்களுடைய சப்தமானது ஆகாயத்தில் தோன்றியது. அர்ஜுனனுடைய மதிமயக்கமில்லாமையையும், அஸ்திரவித்தையினுடையஅப்யாஸத்தையும், லாகவத்தையும், தூரத்திலிருப்பதையும் வீழ்ந்ததும் தன்மையையும் யுத்தத்தில் கண்டு த்ரோணருக்கு ஆச்சர்யமுண்டாயிற்று. மஹாத்மாக்களான அவ்விருவருக்கும் மஹாபயங்கரமானதும் உலகத்துக்குக் குழப்பத்தைஉண்டுபண்ணுகின்றதும் கோரமுமான அவ்விதயுத்தமானது தொடங்கப்பட்டு நெடுநேரம் நடந்தது. பிறகு, கோபமுள்ளவனும் பரதஸ்ரேஷ்டனுமான பார்த்தன் திவ்யமான காண்டீவமென்கிறவில்லை எடுத்துப் போர்க்களத்தில் இரண்டுகைகளாலும் இழுத்தான். அந்த அர்ஜு

னஞ்ல் விடப்பட்டசரமாரியானது விட்டிற்பூச்சிகளுடைய கூட்டம்
போல இருந்தது. அவனுடைய அம்புகளினிடையில் காற்றுட
ஸஞ்சரிப்பதற்குச் சக்தியற்றதாகியது. அடிக்கடி அம்புக
எடுப்பது தொடுப்பது விடுப்பதாகிய அர்ஜுனனுடைய செய்
களில் (ஜனங்களால்) சிறிதும் அவகாசம் காணப்படவில்லை. சு
சுறுப்புடன் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்களுள்ளதும் மிக்க ப
கரமுமான யுத்தம் நடந்துவரும்போது, பார்த்தன் மேன்மே
அதிசீக்ரமாக வேறுபாணங்களையும் விடுத்தான். பிறகு, அந்
போர்க்களத்தில் அழுந்தியகணுக்களுள்ள ஆயிரம்அம்புகள் ஒ
ஸமயத்தில் த்ரோணருடைய தேருக்கருகில் விழுந்தன. பா
ரேறே! காண்டீவத்தைவில்லாகக்கொண்ட அர்ஜுனன் பா
களை த்ரோணர்மீது இறைக்கவே, சேனையிலுள்ளவர்களுக்
பெரிதான ஹாஹாகாரம் உண்டாயிற்று. பாண்டவனுடை
அஸ்திரலாகவத்தை இந்த்ரனும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகள
அங்குவந்திருந்த மற்றவர்களும் புகழ்ந்தார்கள். பிறகு, ப்ரத
சாலியும் தேர்ப்படைத்தலைவரும் ஆசார்யபுத்ரருமான அ
வத்தாமா, த்ரோணரை யுத்தஸமூத்திரத்தில் மூழ்கினவரா
கண்டு 1 பெரிதான ரதிகர்களுடைய கூட்டத்தோடு சேர்ந்
பாண்டவனை அம்புகளால் எதிர்த்துத்தடுத்தார். அவர் மஹாத்ம
வான அர்ஜுனனுடைய அவ்விதமானசெய்கையை மனத்தி
புகழ்ந்தார்; அப்பொழுது அவன்மீது கோபத்தையும் செய்தா
கோபங்கொண்ட அந்த அஸ்வத்தாமாவானவர் மழைபொ
கின்ற மேகம்போலப் போரில் ஆயிரம்பாணங்களை இறைத்து
கொண்டு பார்த்தனை எதிர்த்துச்சென்றார். மஹாபாஹுவா
அவர் திரும்பி த்ரோணரிருக்குமிடத்துக்கும் வந்தார். பார்த்த
த்ரோணர் விலகிப்போவதற்கு இடம்கொடுத்தான். உத்தமமா
பாணங்களால் கவசமும் த்வஜமும் ரதமும் உடைக்கப்பட்
வரும் அடிக்கப்பட்டவருமான அந்த த்ரோணர் வேகமுள்
குதிரைகளோடு ஸமயத்தைப்பெற்று விரைவாகச் சென்றார். அ
பொழுது, த்ரோணர் தோல்வி அடைவிக்கப்பட்டிருக்கையி
த்ரோணபுத்ரர்வந்து காலதண்டத்தை ஏந்தியவனும் சிவந்
கண்களையுடையவனுமான யமன்போல யுத்தகளத்தில் நின்றார்.

---

1 ஒருசொல் விடப்பட்டது.

அறுபதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் அஸ்வத்தாமாவைக்காட்டிலும் மேலானவனானது.)

வர்ஷிக்கின்ற மேகம்போலப் பெரிய அம்புக்கூட்டங்களைப் பொழிகின்ற பார்த்தன், வாயுவேகத்தை மலைதாங்குவதுபோல அந்த அஸ்வத்தாமாவை எதிர்த்துத்தாங்கினன். வ்ருத்ரனும் இந்திரனும்போல அம்புக்கூட்டங்களைப் பொழிகின்ற அவ்விருவருக்கும் தேவாஸுர யுத்தத்துக்கு ஒப்பான பெரிய யுத்தம் நடந்தது. அப்பொழுது, ஸூர்யன் ப்ரகாசிக்கவில்லை; காற்றும் வீசவில்லை; ஆகாயமுழுதும் அம்புகளால் நெருங்கியதாகச் செய்யப்பட்டு நிழலுள்ளதுபோலாகியது. இரண்டு யுத்தவீரர்களும் போர்புரியும் பொழுது எரிகின்ற மூங்கில்களுடைய சப்தம்போல அதிபயங்கரமான பெரிய சடசடவென்னும் ஒலி உண்டாகியது. அரசரே! அர்ஜுனன் யுத்தத்தில் அந்த அஸ்வத்தாமாவினுடைய குதிரைகளை வலிமையற்றவையாகச் செய்தான். அந்தக் குதிரைகள் மயக்கமடைந்து ஒருதிசையையும் அறியவில்லை. பிறகு, மஹாவீர்யமுள்ள அந்த த்ரோணபுத்ரர் ஸஞ்சரிக்கப் போகின்ற பார்த்தனுடைய நாண்கயிற்றைச் சிறிது இடைவெளி கண்டபொழுது க்ஷுரத்தால் அறுத்தார். தேவர்கள், மனித இயற்கைக்கு மேலான அவருடைய அச்செய்கையைக் கண்டு, 'த்ரோணபுத்ரரைத் தவிர வேறு மனிதன் தனஞ்சயனை எதிர்த்து நிற்பதற்குத் திறமையுள்ளவனுகான்' என்று புகழ்ந்தார்கள். பிறகு, புருஷச்ரேஷ்டரான த்ரோணபுத்ரர் சற்று விலகி மறுபடியும் வில்லை இழுத்துப் பார்த்தனைக் கழுகிறகுகள் பூண்ட அம்புகளால் மார்பிலடித்தார். பிறகு, சிறந்த கைகளுள்ள பார்த்தன் அப்பொழுது உரக்கச் சிரித்துக்கொண்டு பராக்ரமத்தினுல் காண்டீவத்தில் நாண்கயிற்றைப் பூட்டினன். பரதகுலத்தில் பிறந்தவரே! கோபங்கொண்டவனும் மதயானைபோல வருகின்றவனுமான அந்த அர்ஜுனனைக் கண்டு த்ரோணபுத்ரர் கோபங்கொண்டு யுத்தத்துக்காக அழைத்தார். பிறகு, அவரால் அர்த்தசந்த்ரபாணத்தை எடுத்து அடிக்கப்பட்ட பார்த்தன் பராக்ரமத்தினுல் கூர்மையுள்ளவைகளும் ஸர்ப்பங்களை ஒத்தவைகளுமான அம்புகளால் அவருடைய வில்லையும் ஸாரதியையும் குதிரையையும் வெட்டிவிட்டு அவரையும் அடித்தான். தேராளிகளுட் சிறந்த அந்த அஸ்வத்தாமா வேறுதேரிலேறிக்கொண்டு மதங்கொண்ட யானையோடு மதங்கொண்ட [1] கஜயூதபதியானது எதிர்

---

1 யானைக் கூட்டத்துக்குத் தலைமையானது.

த்து வருவதுபோல எதிர்த்துவந்தார். பிறகு, பூமியில் ஒப்பற்
வீரர்களான அவ்விருவருக்குமே போர்க்களத்தினிடையில் மிக
பெரியதும் மயிர் சிலிர்க்கக்கூடியதுமான போர்நேர்ந்தது. மஹா
மாக்களும் யானைகள்போல எதிர்த்துப் போர்புரிகின்றவர்க
மான அவ்விரு வீரர்களையும் எல்லாக் கௌரவர்களும் ஆச்சர்ய
மோடு பார்த்தார்கள். வீரர்களும் ஒருவரையொருவர் ஜயிப்பதி
விருப்பமுற்றவர்களுமான அவ்விருவரும் ஸர்ப்பத்தையும் ஜ்வல
கின்ற நெருப்பையும்போன்ற அம்புகளால் அடித்துக்கொண்ட
கள். மஹாத்மாவான பாண்டவனுடைய அம்பறாத்தூணிகள் இர
டும் எடுக்கஎடுக்கக் குறையாமலிருப்பவைகள்; தேவஸம்பந்த
பெற்றவைகள். ஆதலால், சூரனைபார்த்தன் யுத்தகளத்தில் ம
போல அசைவற்று நின்றான். போரில் (அம்புகளை) விரைவா
எய்கின்ற அஸ்வத்தாமாவினுடைய பாணங்களோ விரைவி
குறைந்தன. அதனால், அர்ஜுனன் (அஸ்வத்தாமாவைக்காட்
டிலும்) மேலானவனான்.

அறுபத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் ஓரேஸமயத்தில் த்ரோணர் முதலானவர்களோடு போர் புரிந்தது.)

இந்த ஸமயத்தில், அதிக வீர்யமும் பராக்ரமமுமுள்ளவரு
சிறந்த கைகளுள்ளவரும் சஸ்த்ரதாரிகளுள் சிறந்தவரும் மஹார
ரும் யுத்தத்தில் விருப்பமுள்ளவருமான க்ருபர் அர்ஜுனனை எதி
த்துப் போர்புரியஅவ்விடம்வந்தனர். பிறகு, அர்ஜுனன் த்ரோண
புத்ரருடைய ரதத்தைவிட்டு ஸூர்யனுக்கும் அக்நிக்கும் ஒப்பான
ஒளிபொருந்திய க்ருபருடைய உத்தமமான ரதத்தைக் குறித்து
விரைவாக வந்தான். ஸூர்யனுக்கு ஒப்பானவர்களும் யுத்த
செய்யப்போகின்றவர்களும் மஹாரதர்களுமான அவ்விரு வீரர்
ளும் (மழைபொழிவதற்கு) ஸந்நத்தமாயிருக்கின்ற இரண்டுவர்ஷ
கால மேகங்கள்போல விளங்கினர்கள். பரதஸ்ரேஷ்டனை அ
ர்ஜுனனே உலகத்தில் ப்ரஸித்திபெற்ற காண்டீவத்தை எடு
த்துச் சரமாலையினால் அடித்துக்கொண்டு எதிர்த்துச் செ
ன்றான். அவ்வாறே, க்ருபரும் வில்லை எடுத்துக்கொண்டு அர்ஜு
னனை எதிர்த்துச் சென்றார். பிறகு, க்ருபர் உறுதியான வில்லை
த்து (வைரிகளுடைய) ரக்தத்தைக் குடிக்கின்றவைகளான நார
சங்களை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பார்த்த

மீது விடுத்தார். அவர், கார்காலத்தில் மேகம்போலச் சரமாரி யைப்பொழிந்து எல்லாஸ்நேஹிதர்களையும் ஆனந்தப்படுத்திக் கொண்டு பல்குனனேறு எதிர்த்துச் சண்டைசெய்தார். அளவற்ற பராக்ரமமுள்ளவனும் பாண்டுவின்புத்ரனுமான பார்த்தன், மிக்க உறுதியுள்ளவில்லை நன்முக இழுத்துப் பலவகையான யுத்தமார்க் கங்களைக் காட்டிக்கொண்டு போர்க்களத்தில் ஸஞ்சரித்தான். மஹாபலசாலியும் ப்ரபுவுமான அர்ஜுனன் எல்லாத்திக்குக்களை யும் மூலத்திசைகளையும் ஆகாயத்தையும் அம்புகளால் எப்பக்கத் திலும் ஒரேநிழலுள்ளனபோலச் செய்தான். அளவிடமுடியாத பலமுள்ள அர்ஜுனன், மேலே ஸஞ்சரிக்கின்ற மேகமானது மழைத்தாரைகளால் பர்வதத்தைமூடுவதுபோல யுத்தத்தில் க்ரு பரை அனேக அம்புகளால் மூடினன். யுத்தத்தில் கூர்மையுள்ள வைகளும் அக்நிஜ்வாலைக்கு ஒப்பானவைகளுமான அம்புகளால் அடிக்கப்பட்டவரும் கோபம் கொண்டவருமான அந்தக்ருபர் புகையில்லாத நெருப்புப்போல ஜ்வலித்துக்கொண்டிருந்தார். பிறகு, மஹாபாஹுவான அவர், நிகரில்லாத பராக்ரமமுள்ள பார்த்தனை ஆயிரம் அம்புகளாலடித்துப் போர்க்களத்தில் ஸிம்ம நாதம்செய்தார். பிறகு, பார்த்தன் தங்கமயமான கட்டுக்களுள் ளதும் அழுந்தினகணுக்களுள்ளதுமான அம்பிலால் யுத்தத்தில் க்ருபருடைய உத்தமமான த்வஜத்தைப் பிளந்தான். அதற்குப் பிறகு, சிறந்ததேஜஸ்ஸுள்ளபார்த்தன், யுத்தத்தில் ஸைன்யனுக்கு ஒப்பான நாராசங்களையும் மறுபடியும் அனேகபாணங்களையும் எடுத்தான். சிறந்தகைகளுள்ளவனும் க்ஷத்ரியரிற் சிறந்தவ னுமான அவன் அவைகளால் அப்பொழுது க்ருபருடைய தேர்காப் பவர்களையும் யுத்தம்செய்கின்ற மஹாரதர்களையும் அடித்தான். அப்பொழுது, படையுடன் கூடினவர்களான சந்த்ரகேது, ஸுகேது, சித்ராயுவன், மணிமான், முஞ்சமௌளி, விக்ராந்தன், ஹேமவர்ணன், பயாவஹன், ஸுரதன், அதிரதன், ஸுக்ஷணன், அரிஷ்டன், க்ருகேதுஆகிய இவர்கள் உயிரை இழந்து விழுந்தார் கள். பரதகுலத்தில் பிறந்தவரே! பார்த்தன் நிமிஷத்தில் அவர் களைக்கொன்று மறுபடியும் வேறு பதின்மூன்றுபாணங்களை (வில் லில்) பூட்டினன். பிறகு, மஹாபலசாலியும் சிறந்தமஹிமையுள் ளவனும் இந்த்ரனுக்கு ஒப்பானவனுமான பல்குனன், யுத்தத்தில் ஒருபாணத்தினல் இந்தக்ருபருடைய (ரதத்தின்) நுகத்தையும் நான்குபாணங்களால் நான்கு குதிரைகளையும் ஆறுவது பாணத் தினல் ரதத்திலிருந்த ஸாரதியின்தலையையும் மூன்றுபாணங் களால் த்ரிவேணுவையும் இரண்டு பாணங்களால் அச்சுக்கட்டை

யையும் பன்னிரண்டாவதான வஜ்ராயுதத்துக்கு ஒப்பான பல்வ
திஞல் அம்புகளையுடைய அவருடையவில்லையும் அறுத்து, அட்
ஹாஸம்செய்து, பதின்மூன்றுவதுபாணத்திஞல் (அவருடைய) ம
மார்பிலடித்தான். அறுக்கப்பட்டவில்லையுடையவரும் ரதத்தை
இழந்தவரும் கொல்லப்பட்டகுதிரைகளையுடையவரும் ஸாரதியை
இழந்தவருமான அந்தக்ருபர் பிறகு கோபங்கொண்டு ஸ்ர்யனை
போலவும் அக்னியைப்போலவும் ப்ரகாசிக்கின்ற சக்தியைஎடுத்
அற்புதமான செய்கையுள்ளபார்த்தன்மீது விரைவாகவிடுத்தா
அர்ஜுனன் அவ்விதமான உருவமுள்ளதும் தங்கத்திஞல் அல
கரிக்கப்பட்டதுமான அந்தச் சக்தியைக் கூர்மையான அம்புகள
லும் அர்த்தசந்த்ரபாணங்களாலும் தடுத்தான்; (அவன் தன்னை
நோக்கி) வருகின்றதும் பெரிய எரிநக்ஷத்திரம்போலப் ப்ரகாசி
கின்றதுமான அந்தச் சக்தியைப் பத்துப்பாணங்களால் துண்டி
தான். பார்த்தஞல் அம்புகொண்டு துண்டிக்கப்பட்ட அந்த
சக்தியானது பத்துத் துண்டங்களாகப் பூமியில் விழுந்தது. சக்
யானது அறுக்கப்பட்டவுடன், ரதத்தை இழந்தவரும் அம்
களால் துன்பமடைந்தவரும் பகைவர்களைக் கொல்லுகின்றவ
மான க்ருபர் கதாயுதத்தைக் கையில்எடுத்துக்கொண்டு ரதத்
னின்று வேகமாகத் துள்ளிக்குதித்து அளவற்ற பலமுள்ள பார்
தன்மீது அதை விரைவாக ப்ரயோகித்தார். (அவரால்) விட
பட்டதும் பெரிதும் அவருடைய ரூபத்தால் அலங்கரிக்கப்ப
டதுமான அந்தக்கதாயுதமும் அர்ஜுனனுடைய பாணங்களா
அடிக்கப்பட்டு வேறு வழியைக் குறித்துச் சென்றது. பிறகு
வேகமும் பராக்ரமமுமுள்ள க்ருபர் கத்தியையும் ஒளிபொரு
தின கேடகத்தையும் எடுத்துக்கொண்டு பாண்டவனைக் கொ
வதற்கு விரும்பினர். சிறந்த ஆசார்யரும் நன்முகக்கற்பிக்க
பட்டவரும் சரத்வானுடையகுமாரருமான அந்த க்ருபர் கத்
யையும் கேடகத்தையும் எடுத்துக்கொண்டு ஒருவராக ஆக
யத்தில் ஸஞ்சரிக்கும் தேவன்போல வேகத்துடன் க்ரமமா
யுத்தபூமியில் ஸஞ்சரித்தார். பிறகு, குந்தீபுத்ரனை அர்ஜுனன்
பத்துக்ஷுரப்ரங்களால் (அவருடைய) கத்தியையும் கேடகத்தை
யும் ஒரு நிமிஷத்துக்குள் துண்டாக்கினன். அது ஆச்சர்யம
யிருந்தது. அப்பொழுது, அதிக தேஜஸ்ஸுள்ள அந்த க்ருபர்
கத்தியும் கேடகமும் அழிந்ததால் வ்யஸனமடைந்த முக
துடன் பற்களால் உதடுகளைக்கடித்து மனத்தில் பெரு
கோபத்தை அடைந்து மறுபடியும், 'இருக்கட்டும்' என்று சொல்
விட்டு, யுத்தத்தைவிட்டு விலகுவதில் முயற்சியுள்ளவராக (தம்

ஸஹோதரி புத்ரரான அஸ்வத்தாமாவினுடைய ரதத்தின்மீது விரைந்து ஏறிக்கொண்டு மறுபடியும் வில்லை எடுத்தார்.

இந்தஸமயத்தில், பீஷ்மர், பலசாலியான க்ருபர் பல்குனனால் துன்பமடைந்திருப்பதைக்கண்டு, கோபம்கொண்டு, பிறகு, த்ரோணரைப்பார்த்து, '(ஆசார்யரே!) பல்குனன் யுத்தத்தில் ஒவ்வொருவராய் (ச்சண்டைசெய்தால்) நம்மை ஜயித்துவிடுகிறான். (ஆகையால்,) நானும் 1 நீரும் கர்ணனும் அஸ்வத்தாமாவும் க்ருபரும் மற்றுமுள்ள அனேக சூரர்களும் (ஒன்றுகூடி) இந்த்ரகுமாரனை ஜயிப்போம்' என்று சொன்னர். பாரதரே! பிறகு, பீஷ்மர் த்ரோணர் முதலான எல்லாரதிகர்களும் ஒன்றுசேர்ந்துவந்து விரைவாக அர்ஜுனனை எதிர்த்துப் போர்புரிந்தார்கள். 2 அளவற்ற தைர்யமுள்ள அந்த அர்ஜுனன், பனியானது மலைகளை மூடுவதுபோல, சுற்றிலுமிருக்கின்ற அந்தமஹாரதர்களைப் பாணமயமான வலைகளால் மூடினன். (அப்பொழுது) கர்ஜிக்கின்ற பெரிய யானைகளாலும் கனைக்கின்ற குதிரைகளாலும் பேரிசங்கங்களுடைய கோஷங்களாலும் நெருங்கிய சப்தமுண்டாயிற்று. நூற்றுக்கணக்காகப் பார்த்தனால் விடப்பட்ட சரமாரிகள் யானைகளின் சரீரங்களையும் குதிரைகளின் சரீரங்களையும் இருப்புக்கவசங்களையும் பிளந்துவிட்டுப் பூமியில்விழுந்தன. விரைவாக அம்புகளைத்தொடுக்கின்ற பாண்டவனே சரத்காலத்தில் நடுப்பகலை அடைந்திருக்கின்ற நல்ல காந்தியையுடைய ஸூர்யன்போல ப்ரகாசித்தான். அப்பொழுது, எல்லா ரதிகர்களும், யுத்தத்தில் பார்த்தனுடைய வில்லிலிருந்து கிளம்பின அம்புகளைப் பொறுமல் மிகவும் துன்பம் செய்யப்பட்டு ரதங்களை இழந்து வடக்குமுகமாக ஓடினர்கள். குதிரைவீரர்களும் குதிரையின்மீதேறி ஓடினர்கள். காலாட்கள் பூமியில் ஓடினர்கள். பாணங்களால் அடிக்கப்படுகின்றவைகளும் தாம்ரத்தாலும் வெள்ளியாலும் இரும்பினாலும் செய்தவைகளுமான மஹாத்மாக்களான கௌரவர்களுடைய கவசங்களிலிருந்து பெரிய சப்தம் தோன்றியது. ப்ரஜ்ஞையை இழந்து ஸ்ரமத்தினால் சஸ்த்ரங்களை நழுவவிட்டுக் கீழேவிழுகின்ற குதிரைவீரர்களுடைய சரீரங்களால் யுத்தபூமியானது மூடப்பட்டதாகியது. அர்ஜுனன் ரதத்தின் நடுவிடங்களைச் சூன்யமாகச்செய்து மனிதர்களால் யுத்தபூமியை மூடினன். வில்லைக் கையில்கொண்டவனும் புருஷஸ்ரேஷ்டனுமான தனஞ்சயன் நடனம்செய்கின்றவன்போல (அங்குமிங்குமாக ஸஞ்சரித்துக்கொண்டு) யுத்தத்தில் க்ஷத்ரியர்களுடைய சிரங்களை வீழ்த்தினன். இடிமுழக்கம்போன்ற காண்டீவசப்தத்தைக் கேட்டு எல்லா

1 'த்ரோணரும்' என்பது மூலம். 2 வேறு பாடம்.

ஸைன்யங்களும் நடுக்கமுற்றுத் தனித்தனியே பதுங்கின. குண்
லங்களையும் தலைப்பாகைகளையும் தரித்தவைகளும் பொன்ட
மான மாலைகளை அணிந்தவைகளுமான (வீரர்களுடைய) தலைக
போர்முகத்தில் விழுந்தவைகளாகக் காணப்பட்டன. யுத்தபூமி
னது, பாணங்களால் அடித்துத்தள்ளப்பட்ட சரீரங்களாலும், வி
களைப்பிடித்தவைகளும் ஹஸ்தாபரணங்களை அணிந்தவைகளுமா
கைகளாலும் நன்குமூடப்பட்டு விளங்கியது. பரதஸ்ரேஷ்டரே!
யுத்தத்தில் கூர்மையுள்ள பாணங்களால் தள்ளப்படுகின்றதலைக
ஆகாயத்தினின்று கல்மாரி விழுவதுபோல விழுந்தன. பயங்க
மான பராக்ரமமுள்ள அர்ஜுனன் அப்பொழுது தன்னை ரௌத்
ஸ்வரூபமுள்ளவனைக் காண்பித்துக்கொண்டு யுத்தத்தில் நூ.
நூறுகவும் ஆயிரம் ஆயிரமாகவும் சூரர்களைக் கொன்றான். அரை
யத்தில் பதின்மூன்று வர்ஷகாலம் அவ்வாறு தடுக்கப்பட்டிருந்
பாண்டவன் யுத்தத்தில் த்ருதராஷ்ட்ர குமாரர்கள்மீது கோபா
னியைக் கக்கினான். ஓ! பரதகுலத்தில் உதித்தவரே! அந்தக்கெ
ரவசேனையை எரிக்கின்ற அந்தப் பாண்டவனுடைய பராக்ரம
தைக் கண்டு துர்யோதனனுடைய யுத்தவீரர்கள் எல்லோரு
பொறுமையைக் கைப்பற்றினார்கள். அறுபதுவயதுள்ள மத
கொண்ட யானையானது கோரைக்காட்டை அழிப்பதுபோல அ
ர்ஜுனன் சஸ்த்ரதேஜஸினால் எல்லாவீரர்களையும் அடித்தான்
பரதகுலத்தில் பிறந்தவரே! பிறகு, ஜயசாலிகளுள் சிறந்த அர்ஜு
னன் சேனையைத் துரத்தி மஹாரதர்களையும் பயப்படும்படிசெய்
நான்குபக்கத்திலும் ஸஞ்சரித்தான். அந்த அர்ஜுனன் போர்
களத்தில் (பலவிதமான)கதிகளோடு ஸஞ்சரித்துக்கொண்டு (பல
வர்களை)கொல்லுகையில், ரக்தத்தாலும் நரம்புகளாலும் நிறைந்
அலைகளுள்ள கோரமான ஒரு நதி தோன்றியது. அர்ஜுனன்
யுத்தத்தில் எலும்புகளாகிற பாசிக்கொத்துகளால் நெருங்கி
தும், 1 காலனால் படைக்கப்பட்டதும், பாணங்களும் விற்களுமா
கிற தெப்பங்களுள்ளதும், பயங்கரமானதும் மாம்ஸத்துடன்
கூடின ரக்தமாகிற சேறுள்ளதும், ரதங்களாகிற தெப்பங்களுள்ள
தும், நரம்புகளாகிற ஸ்ப்பங்களையுடையதும், தலைமயிர்களாகி
பாசிக்கொத்துக்களும் புல்தரைகளுமுள்ளதும், சிறு கத்திகளுட
பெருங்கத்திகளுமாகிற மீன்களுள்ளதும், சாமரங்களும் தலை
பாகைகளுமாகிற நுரைகளுள்ளதும், குதிரைக் கழுத்துக்கள
கிற பெரிய சுழல்களுள்ளதும், தலையில்லா முண்டங்களாகிற நீ
மனுஷ்யர்களை உடையதும், காக்கை கழுகுகளின் சப்தங்களுள்ள

1 வேறு பாடம்.

தும், வேகமுள்ளதும், ஸாரஸபக்ஷிகளாலும் அன்றிற்பக்ஷிகளாலும் சப்தமுள்ளதாகச்செய்யப்பட்டதும், ஹிம்மதாதங்களாகிற பெரியசப்தங்களுள்ளதும், சங்கத்வனிகளாகிற பெரியத்வனிகளுள்ளதும், வீரர்களுடையதலைகளாகிற தாமரைகளால் நிறைந்ததும், பாணங்களும் விற்களுமாகிற பெருங்கோரைகளுள்ளதும், காலாட்களாகிற மத்ஸ்யங்களால்கலங்கியதும், யானைத்தலைகளாகிற ஆமைகளுள்ளதும், நரிகளாகிற ம்ருகங்களுடையசப்தத்தால் நிறைந்ததும், மாம்ஸமும் மஜ்ஜையுமாகிற எங்கும்நிறைந்த சேறுள்ளதும், கோரஸ்வரூபமாயிருக்கின்றதும், பிசாசங்களுடையகூட்டங்களால் அடையப்பட்டதும், கரையில்லாததும், தடுக்கமுடியாததும், ரக்தத்தைஜலமாகக்கொண்டதும், நான்குபக்கத்திலும் பரவியதுமான ஒருநதியை உண்டுபண்ணினான். அரசரே! பார்த்தன் யானைகளுடையசரீரங்களாகிற பெரிய திட்டுக்களுள்ளதும் குதிரைகளுடையசரீரங்களாகிற பெரியகற்களுள்ளதும் பதாதிகளுடைய தேகங்களாகிற கட்டுமரங்களையுடையதும் ரதங்களுடையகூட்டங்களாகிற பெரியமரங்களையுடையதும் தலைமயிர்களாகிற புல்தரைகளால் மூடப்பட்டதும் மனிதர்களுக்கு மிக்கபயத்தைக்கொடுக்கக்கூடியதும் ஆழ்ந்திருக்கின்ற ரக்தமாகிற ஜலத்தையுடையதும் யமனுகிற கடலைக்குறித்துச் செல்லுகின்றதும் பயப்படும் மனிதர்களால் தாண்டமுடியாததும் சூரர்களால் எளிதில் தாண்டக்கூடியதுமான ரக்தம்நிரம்பியநதியை அடிக்கடி-உண்டுபண்ணினான். இந்த்ரகுமாரன் இவ்விதம் பயங்கரமான ரக்தநதியை உண்டாக்கினான். பாணங்களை எடுப்பதும் வில்வில்லூட்டுவதும் (லக்ஷ்யங்களில்) ப்ரயோகிப்பதும் காண்டீவத்தை இழுப்பதுமான அந்த அர்ஜுனனுடைய (செய்கைகளில்) கொஞ்சமேனும் இடைவெளியானது காணப்படவில்லை.

அறுபத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மரும் அர்ஜுனனும் யுத்தத்திற்காக ஸந்தித்ததும், தேவர்கள் அவ்விருவரையும் புகழ்ந்ததும்.)

பார்த்தன் இவ்வாறு அந்தஸைன்யத்தை ஓடும்படிசெய்துவிட்டுப் பீஷ்மருக்கருகில் வந்தான். இந்த்ரகுமாரனை அர்ஜுனன், மிக்கதைர்யமுள்ள துர்யோதனனுடைய எல்லாஸைன்யங்களும் பயந்திருக்கும்பொழுது, நான்குபாணங்களை வில்லில்பூட்டி (பீஷ்மரை)க் குறித்துப் பயத்துடன் விடுத்தான்; (அவற்றுள்).

இரண்டுபாணங்களால் அவரை அபிவாதனஞ்செய்தான். இரண்
பாணங்கள் அவருடைய காதுகளின்ஸமீபம்சென்று குசலப்
ணம்செய்தன. அவரும், 'குந்திபுத்ரன் ஜயமடையட்டும்' என்
ஆசீர்வாதம்செய்தார். போரில் பகைவரைவெல்ல எண்ண
கொண்டு ஸமீபத்தில்வருகின்ற புருஷஸ்ரேஷ்டனை தனஞ்சய
யுத்தத்தில் (ஸமர்த்தனென்று) உலகத்தில் ப்ரஸித்திபெற்
னும் சௌர்யம் வீர்யமுதலியவற்றால் பிம்பத்தினின்று எடுக்
பட்ட ப்ரதிபிம்பம்போலக் கர்ணனிடத்தினின்று உண்டா
வ்னும் வைகர்த்தனனுடையபுத்ரனும் வீரனுமான வ்ருஷஸேன
யுத்தம்செய்யவிரும்பி விரைவாக எதிர்த்தான். பிறகு, பா
குமாரனை பார்த்தன், தன்மேடு யுத்தம்செய்கின்ற அ
வ்ருஷஸேனனுடைய கைப்பழக்கத்தையும் ஆண்மையையும்
மூஹூர்த்தகாலம்பார்த்து அந்தவ்ருஷஸேனனுடைய ப்ரா
மத்தைப்பற்றி ஸந்தோஷித்தான். பார்த்தன் அப்பொழுது
கிறகு பூண்டதான ஒருபாணத்தினுடைய நுனியிலால், பொன்
அலங்கரிக்கப்பட்ட அந்த வ்ருஷஸேனனுடையவில்லை விரை
அறுத்தான்; பிறகு, ஐந்துபாணங்களால் திரும்பவும் அவ
நடுமார்பில் அடித்தான். பார்த்தனுடையபாணங்களால் அ
கப்பட்ட அந்தவ்ருஷஸேனன் தேரினின்று துள்ளிக்குதித்து
னன். (பகைவர்களைநோக்கி) வருகின்றவனும் பயங்கரமா
வில்லுள்ளவனுமான பாண்டவனைத் துச்சாஸனனும் விகர்ண
சகுனியும் விவிம்சதியும் எல்லாப்பக்கத்திலும் சூழ்ந்துகொ
டார்கள். பார்த்தன், யுத்தரங்கத்தில் கோபங்கொண்டு அ
தியகணுக்களுள்ள அம்புகளால் அவர்களுடைய (தேரிலுள்
நுகத்தையும் கொடியையும் வில்லையும் யுத்தத்தில் விரைவாக
துண்டித்தான். அவர்களெல்லாரும், பார்த்தனுடையபாண
களால் கொடியறுபட்டும் வில்லும்கவசமும்வெட்டுண்டும் பீடி
கப்பட்டுப் போர்க்களத்தின் மத்தியினின்று ஓடினர்கள்.

பிறகு, பீபத்ஸுவானவன், உரக்கச்சிரித்து விராடபுத்
னைப்பார்த்து, 'பகைவரைவருத்துபவனே! பொன்மயமானது
உயரத்தூக்கிக்கட்டப்பட்டதுமான இந்தப் பனைமரக்கொடியை
இப்பொழுது என்னை அடையும்படிசெய். இது மேகத்தினிடை
யிலுள்ள மின்னலைப்போல் அடிக்கடி நன்றாக ப்ரகாசிக்கி
றது. சந்தனுவின்குமாரரான இந்தப் பீஷ்மரிருக்குமிடத்து
குப் போ. தெய்வத்தன்மையுள்ளவைகளும் கோரரூபமுள்ளவை
களும் ஆச்சர்யத்தை உண்டாக்கத்தக்கவைகளும் சிறியவை
களும் பெரியவைகளுமான அஸ்த்ரங்களைப் போரில் காண்பி

கப்போகிறேன். மத்ஸ்யராஜனே! இவர் எங்களுக்குப் பால்யம் தொடங்கி எப்பொழுதும் போஷகராயிருப்பவர்; எப்போதும் எங்களுடையஸ்ரேயஸில் விருப்பமுள்ளவர்; எப்பொழுதும் எங்களுக்கு யோகக்ஷேமங்களைச்செய்பவர். இவர்மடியில் பால்யத்தில் நான் வளர்ந்தேன். ஆதலால், இவருடன் ஒழுங்காகப் போர்புரியப்போகிறேன். இவர் இரவும்பகலும் எங்களுக்கும் த்ருதராஷ்டிரகுமாரர்களுக்கும் (உண்டானவிரோதத்தைத்) தணிப்பதில் விருப்பமுள்ளவர்' என்றுகூறினன். அந்தஅர்ஜுனனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு அவனுடைய ஸாரதியான விராடபுத்ரன் அவனால் ஏவப்பட்டுப் பீஷ்மருடைய ரதத்தைநோக்கி ரதத்தைநடத்தினன். காற்றினால் விரைவாக எதிர்த்துத்தள்ளப்பட்ட மஹாமேகம்போன்றதும் (உத்தரனால்) தூண்டப்பட்டதும் ரதங்களில்சிறந்ததுமான அர்ஜுனனுடைய அந்த ரதத்தைக்கண்டு, கங்கையின்புதல்வரான பீஷ்மர், ஸூர்யன்போன்ற ஒளியுள்ள ரதத்தோடு அந்த ரதத்தை எதிர்த்துச்சென்றார். (தம்மைஎதிர்த்து) வருகின்ற அர்ஜுனனைக்கண்டு பகைவர்பட்டணங்களைஜயிப்பவரும் இந்தக்கௌரவர்களால் அவ்வாறு நன்குகாக்கப்பட்டவரும் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவரும் பிதாமஹருமான பீஷ்மர், போர்வீரர்கள் கொல்லப்படுங்கால், ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட சிறந்தவில்லையும் கூர்மையானமூணையுள்ளவைகளும் மர்மஸ்தானங்களையும் தேகங்களையும் பிளக்கின்றவைகளுமான அம்புகளையும் எடுத்துக்கொண்டு யுத்தஞ்செய்வதில் விருப்பமுற்று, ஒருவ்ருஷபமானது மற்றொருபெரியவ்ருஷபத்தை எதிர்ப்பதுபோல அர்ஜுனனை எதிர்த்துச்சென்றார். புருஷஸ்ரேஷ்டரான அந்தப்பீஷ்மர், தலையின்மேல் தூக்கிப்பிடிக்கப்பட்ட வெள்ளைக்குடையினால், ஸூர்யனைச் சிகரத்தில்வைத்துக்கொண்டிருக்கிற மலைபோல ப்ரகாசித்தார். காங்கேயர் சங்கத்தைஊதித் த்ருதராஷ்ட்ரகுமாரர்களை ஸந்தோஷிக்கச்செய்துகொண்டு பீபத்ஸுவை வலப்பக்கமாகநெருங்கிவந்து எதிர்த்தார். பகைவீரர்களைக்கொல்லுகின்றவனும் அளவிடமுடியாத வல்லமைபொருந்தியவனுமான அர்ஜுனன் (தன்னைநோக்கி) வருகின்ற அந்தப் பீஷ்மரைப்பார்த்து (தன்வீட்டிற்கு) வந்திருக்கின்ற ப்ரியமான விருந்தினரைப்போல வரவேற்றான். வீர்யமுள்ளவனான அர்ஜுனன், யுத்தத்தில் தேவதத்தமென்கிற மஹாசங்கத்தை உரக்கஊதினன். அப்பொழுது, பீஷ்மபாண்டவர்களுடைய அந்தச் சங்கநாதங்கள் ஸ்வர்க்கத்தையும் ஆகாயத்தையும் பூமியையும் எல்லாப்பக்கத்திலும் மிகவும் எதிரொலியிடும்படிசெய்தன. பரதகுலத்

தில் உதித்தவரே! ஆகாயத்தில் (யுத்தத்தைப்பார்க்க) வந்தி
கின்ற இந்த்ரனுடன்கூடின தேவர்களெல்லாரும், 'அர்ஜுன
கௌரவர்களெல்லோரையும் சஸ்த்ரதேஜஸினல் துண்டா
விட்டான். யுத்தத்தில் வீரர்களும் குருஸ்ரேஷ்டர்களுமான
தப்பீஷ்மரும் அர்ஜுனனும் எல்லா அஸ்த்ரங்களிலும் ஸமர்த்
கள்; யுத்தத்தில் எப்பொழுதுமே ஜாக்ரதையுள்ளவர்கள்; வீ
கள். இருவரும் தேவமனுஷ்யர்களுள் தம் பராக்ரமங்களால்
ஸித்திபெற்றவர்கள். இருவரும் அதிகப்பரபரப்புள்ளவர்க
இருவரும் விளங்குகின்ற வில்லைத் தரித்தவர்கள். மனிதருட்சி
தவர்களும் அதிகவேகமுள்ள இரண்டுபுலிபோன்றவர்களும் ஸ
யனுக்கும் அக்னிக்கும் ஸமமானசெய்கையுள்ளவர்களுமான இ
வரும் (யுத்தத்துக்காக) நெருங்கிவிட்டார்கள். இருவரும் வாள
தேவருக்கும் கார்த்தவீர்யனுக்கும் ஒப்பானவர்கள். இருவ
ப்ரஸித்தமானசெய்கையுள்ளவர்கள். இருவரும் சூரர்கள்; மஹ
பலசாலிகள்; எல்லா அஸ்த்ரங்களையும்அறிந்தவர்களுள்ளும்
லாச்சஸ்த்ரதாரிகளுள்ளும் சிறந்தவர்கள்; இவர்களின் வீ
மானது, அக்னிக்கும் இந்த்ரனுக்கும் 1ஸோமனுக்கும் யம
கும் குபேரனுக்கும் ஸூர்யனுக்கும் வருணனுக்கும் ஸமமான
எவன்தான் குந்தீபுத்ரனை யுத்தத்தில் த்வந்த்வயுத்தஞ்செய்வ
காக நெருங்குவன்? பீஷ்மரைத்தவிர (அவனைஎதிர்க்கத்தக்
க்ஷத்ரியன் பூமியில் வேறொருவனுமில்லை' என்று சொல்
கொண்டார்கள். இவ்வாறு, இந்த்ரனுடன்கூடினதேவர்கள் யுத்
களத்தில் அர்ஜுனனை அடைந்திருக்கின்ற பீஷ்மரையும் அந்
உத்ஸாஹமுள்ள அர்ஜுனனையுங்கண்டு பூஜித்தார்கள். பிற
இந்த்ரனுடையசேனைக்கு ஒப்பான காந்தியுள்ள கௌரவர்களி
சேனையானது, பலவிதமான தூர்யவாத்யங்கள் சங்கங்கள் இ
களுடையசப்தங்களாலும் ஸிம்மநாதத்துடன்கூடின பற்பலவி
மான சப்தங்களாலும் குருஸ்ரேஷ்டரானபீஷ்மரைப் பூஜித்த

அறுபத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் பீஷ்மரைத் தோற்கச்செய்தது.)

பிறகு, வீர்யசாலியானபீஷ்மர், ஜ்வலிக்கின்ற ஸர்ப்பங்க
போன்ற அதிகவேகமுள்ள எட்டுப்பாணங்களைப் பார்த்தனுடை
த்வஜத்தின்மீது விடுத்தார். அந்தப்பாணங்கள் பாண்டுபுத்

1 சிவன், சந்த்ரன்.

னுடைய த்வஜத்தை அடைந்து த்வஜத்திலிருக்கிற குரங்கையும் த்வஜத்தினுடைய நுனியில் வஸிக்கின்ற அந்த ப்ராணிகளையும் அடித்தன. அவர் பத்துப்பாணங்களால் அவனுடையஸாரதியையும் குதிரைகளையும் அடித்தார். இரும்புமயமான மூன்றுபாணங்களாலேயே பார்த்தனை மார்பில் அடித்தார். பிறகு, அர்ஜுனன் கௌரவர்களுக்குப் பிதாமஹரான பீஷ்மரைக் கூர்மையுள்ள பாணங்களால் அடித்துப் பத்துப்பாணங்களால் (அவருடைய) கொடியையும் ஸாரதியையும் அடித்தான். பலிக்கும் இந்த்ரனுக்கும் நடந்த யுத்தம்போலக் கோரமானதும் மயிர்க்கூச்சத்தை உண்டுபண்ணுகின்றதும் ஆச்சர்யகரமுமான அப்படிப்பட்ட யுத்தமானது பீஷ்மருக்குப் பார்த்தனோடு நடந்தது. மேகத்தினின்றுபுறப்படுகிற நீர்த்தாரைகள்போல அவ்விருவருடைய வில்லினின்றும் வெளிப்படுகின்ற பாணக்கூட்டங்களால் ஆகாசமானது இடைவெளியற்றதாகியது. கௌரவ பாண்டவர்களுடைய யுத்தத்தில் பல்லங்கள் பல்லங்களோடு அடித்துக்கொண்டு வர்ஷாகாலத்தில் மின்மினிப்பூச்சிகள்போல ஆகாயத்தில் விளங்கின. இடமாகவும் வலமாகவும் (சரங்களைத்) தொடுக்கின்ற ஜிஷ்ணுவினுடைய காண்டீவமானது யுத்தத்தில் மண்டலாகாரமாகச் செய்யப்பட்டு அக்னிசக்ரம்போலக்கோரமாகஇருந்தது. மேகமானது நீர்த்தாரைகளால் பர்வதத்தை மூடுவதுபோல அர்ஜுனன் அனேகமானசரமாரிகளால் பீஷ்மரைமூடினன். கொந்தளிக்கின்ற ஸமுத்ரம்போலக் கிளம்புகின்ற அந்தச்சரமாரியை அந்தப்பீஷ்மர் அம்புகளால் நாசஞ்செய்து அர்ஜுனனையும் தடுத்தார். பிறகு, அர்ஜுனனுடைய ரதத்தைக்குறித்துக் கூட்டம்கூட்டமாக விடப்பட்ட அவ்விதமான அம்புக்கூட்டங்கள் (பார்த்தனல்)அடிக்கப்பட்டுச் சிதறிவிழுந்தன. பிறகு, ஸ்வர்ணமயமான கட்டுக்களும் மூனைகளுமுள்ளவைகளும் கூர்மையுள்ளவைகளும் அழுந்தின கணுக்களுள்ளவைகளும் (வந்து) விழுகின்றவைகளும் பக்ஷிகளின் இறகுகளுள்ளவைகளுமான அம்புகளால் ஆகாயமானது மூடப்பட்டது. பிறகு, பாண்டவன் கொடியஅம்புக்கூட்டங்களை விடுத்தான். பீஷ்மரும் பார்த்தன்மீது அவ்வளவு சரக்கூட்டங்களை விடுத்தார். பரதகுலத்தில் உதித்தவரான அந்தப்பீஷ்மர், பார்த்தனைக்குதிரைகளோடும் ஸாரதியோடும் தேரோடும்கூட வத்ஸதந்தங்களால் நிரப்பிப் பொன்மயமான கணுக்களுள்ள பாணங்களால் எல்லாத்திக்குக்களையும் ஆகாயத்தையும் மூடினர். பிறகு, தேவர்களும் ரிஷிகளும் கந்தர்வர்களும், 'பீஷ்மர் அர்ஜுனனைத் தடுத்ததால் (ஒருவராலும்) செய்யமுடியாத காரியத்தைச் செய்தவராகிறார்.

பாண்டுபுத்ரனை அர்ஜுனன் பலசாலி; ஸாமார்த்தியமுை
வன்; விரைவாகக் கார்யங்களைச் செய்பவன். சந்தனுபுத்ரர
பீஷ்மரையும் தேவகீபுத்ரரான ஸ்ரீக்ருஷ்ணரையும் ஆசார்ய
ருள் மிகச்சிறந்தவரும் மஹாபலசாலியுமான த்ரோணரை
தவிர வேறுளவன் யுத்தத்தில் பார்த்தனுடைய வேகத்தைத்த
கச் சக்தியுள்ளவன்?' என்று (அவ்விருவரையும்,) 'நல்லது,
லது' என்றுபுகழ்ந்தார்கள். மஹாபலசாலிகளும் புருஷச்ரே
டர்களுமான அவ்விருவரும் எல்லாப்ராணிகளுடைய கண்களை
களிக்கச் செய்துகொண்டு அஸ்த்ரங்களால் அஸ்த்ரங்களை
தடுத்து விளையாடினர்கள். மஹாத்மாக்களான அவ்விருவரு
யுத்தத்தில் ப்ரம்மாஸ்த்ரத்தையும் ஐந்த்ராஸ்ரத்தையும் அதிகக்
மான ஆக்னேயாஸ்த்ரத்தையும் கௌபேராஸ்த்ரத்தையும் வா
ணாஸ்த்ரத்தையும் யாம்யாஸ்த்ரத்தையும் வாயவ்யாஸ்த்ரத்தை
யும் ப்ரயோகித்துக்கொண்டு விளங்கினர்கள். பிறகு, அப்பொ
ழுது, யுத்தத்தில் அவ்விருவரையுங் கண்டு ஜனங்கள் ஆச்சர்ய
அடைந்தார்கள். 'சிறந்தகைகளுள்ள பார்த்த! நல்லது; பீ
மரே! நல்லது' என்றும் சொன்னர்கள். யுத்தத்தில் பீஷ்மரு
பார்த்தனும் செய்த இவ்விதமான மஹாஸ்த்ரங்களுடைய ப்ரயோ
கத்தை மனிதர்களுள் மற்றவன் யுத்தத்தில் வெளிப்படுத்துவத
குச் சக்தியுள்ளவனுகான். எல்லா அஸ்த்ரங்களையும் அறிந்தவ
ளான அவ்விருவருக்கும் இவ்விதமாக அஸ்த்ரயுத்தம் நடந்த
பிறகு, ஜிஷ்ணுவானவன் அருகில்வந்து கூரிய முனையுள்ளதும் க
ிறகுகள் பூண்டதுமான ஓரம்பினுல், பொன்னினுல் அலங்கரி
கப்பட்ட (பீஷ்மருடைய) வில்லை அறுத்தான். மஹாபலசாலியு
புருஷரிற் சிறந்தவருமான பீஷ்மர் போர்க்களத்தில் அடுத்த
நிமிஷத்திலேயே வேறு வில்லை எடுத்து நாணேற்றிக் கோட
துடன் தனஞ்சயன்மீது விரைவாக அனேக பாணங்களை ப்ர
யோகித்தார். அர்ஜுனனும் பீஷ்மரின்மீது கூர்மையுள்
வைகளும் நன்கு தீட்டப்பட்டவைகளுமான அனேக பாண
களை விடுத்தான். மிக்க காந்தியுள்ள பீஷ்மரும் பாண்டவ
மீது அவ்வாறே அம்புகளை விடுத்தார். மன்னரே! திவ்யாஸ்
ரங்களை அறிந்தவர்களும் ஓயாமல் சரங்களைத் தொடுக்கின்றவ
ளும் மிக்க தைர்யசாலிகளுமான அவ்விருவர்களுள் அப்பொழு
வேற்றுமை காணப்படவில்லை. பிறகு, அதிரதனும் கிரீடமணிந்
வனுமான குந்தீபுத்ரன் அப்பொழுது பாணங்களால் பத்துத் தி
குக்களையும் அப்படியே சூரரான பீஷ்மரையும் மறைத்தான
அந்த வீரகோஷ்டியில் பாண்டவன் பீஷ்மரையும் பீஷ்மர் பா

டவனையும் அதிகமாக (அடித்தார்கள்.) வேந்தரே! இவ்வுலகத்தில் அது ஆச்சர்யமாக இருந்தது. சிறந்தகைகளுள்ளவரே! பீஷ்மருடைய ரதத்தைக் காக்கின்றவர்களான சூரர்கள் பாண்டவனால் கொல்லப்பட்டு அவனுடைய ரதத்துக்கு நான்கு பக்கத்திலும் விழுந்தார்கள். பிறகு, காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் சத்ருநாசத்தைச் செய்யவிருப்பம்கொண்டவைகளும் தடையற்றவைகளும் கட்டுக்களுள்ளவைகளும் அந்தப் பார்த்தனுடைய ரதத்தினின்று வெளிப்புறப்படுகின்றவைகளும் தீட்டப்பட்டவைகளும் பொன்மயமான வஸ்த்ரங்களுள்ளவைகளுமான அர்ஜுனனுடைய பாணங்கள் ஆகாயத்தில் அன்னப்பறவைகளுடைய வரிசைகள் போலக் காணப்பட்டன. பலமாகவும் ஆச்சர்யகரமாகவும் ப்ரயோகிக்கின்ற அந்த அர்ஜுனனுடைய அவ்வித திவ்யாஸ்த்ரத்தை இந்த்ரனோடுகூடின தேவர்களெல்லோரும் ஆகாயத்தில் நின்றுகொண்டு பார்த்தார்கள். பலவிதமும் ஆச்சர்யகரமுமான அந்த அஸ்த்ரயுத்தத்தைப் பார்த்து அதிக ப்ரீதியுள்ளவனும் ப்ரதாபசாலியுமான சித்ரஸேனனென்கிற கந்தர்வன், தேவராஜனைப் பார்த்து, 'தேவராஜரே!) பகைவர்களைப் பிளக்கின்றவைகளும் (ஒன்றோடொன்று) சேர்க்கப்பட்டதுபோல (த்தொடர்ச்சியாக)ச் செல்லுகின்றவைகளுமான இந்த அம்புகளைப் பாரும். திவ்யாஸ்த்ரத்தை ப்ரயோகிக்கின்ற ஜிஷ்ணுவினுடைய ஆச்சர்யகரமான இந்த ரூபத்தைப் பாரும். இதை மனுஷ்யர்கள் நம்பமாட்டார்கள். ஏனெனில், அவர்களிடத்தில் இவ்விதமான அஸ்த்ரம் இல்லை. தேவஸம்பந்தமுள்ள மஹாஸ்த்ரங்களுடைய இந்தச் சேர்க்கை ஆச்சர்யகரமானது. கௌரவஸைன்யங்கள், நடுப்பகலை அடைந்து ஆகாயத்தில் மிகத்தபிக்கின்ற ஸூர்யனைப்போலப் பாண்டவனைப் பார்ப்பதற்கும் சக்தியற்றவைகளாயிருக்கின்றன. இருவரும் ப்ரஹஸ்தமான செய்கையை உடையவர்கள். இருவருமே அரசர்களுள் சூரர்கள். இருவரும் விசித்ரமானசெய்கையுள்ளவர்கள். இருவரும் போரில் (ஒருவராலும்) நெருங்கமுடியாதவர்கள்' என்று புகழ்ந்தான். பரதகுலத்தில் உதித்தவரே! இவ்வாறு சொல்லக் கேட்ட தேவராஜனே, பார்த்தனுக்கும் பீஷ்மருக்கும் நேர்ந்த யுத்தத்தைத் தேவலோகத்திலுண்டான புஷ்பவர்ஷத்தால் பூஜித்தான்.

பிறகு, அப்ரமேயாத்மாவானவர், விரைவாகவந்து கர்ணனைப் பார்த்து, 'கர்ண! 'நான் ஒருவனுகவே ஒன்றுசேர்ந்திருக்கின்ற எல்லாப் பாண்டவர்களையும் கொல்லுவேன்' என்று ஸபையின் மத்தியில் என்முன்னிலையில் நீ சொன்னாய். அதை நீ செய்தாயில்லை. ஓ! ஸூதபுத்ர! ஒருவனிடமிருந்து பயந்தோடுகிறாய். விசித்ரவீர்ய

னுடைய பேரன்மார்களான துர்யோதனன் முதலானவர்களெ
லோரும் உன்னை ஆஸ்ரயித்துக் குந்தீபுத்ரர்களைப் போரில் வெ
விரும்புகிறார்கள். (ஆதலால்,) நீ பல்குனனோடு போர் புரிவாயா
என்று சொன்னர். அஸ்வத்தாமா சொல்லிய வார்த்தைகை
கேட்டு அப்பொழுது துர்யோதனன், கர்ணனுக்கு ப்ரியத்தை
செய்யக் கருதி, கோபத்துடன் த்ரோணபுத்ரரைப் பார்த்
'ப்ராம்மணோத்தமரே! ப்ரஸித்தமான செய்கை உள்ளவரை
கர்ணனுடைய மானத்தைப் பங்கம் செய்யாதீர். மானபங்கம் எ
வதிலுலோ அரசர்களுக்குப் பலக்குறைவுண்டாகும். சூரர்கள் த
கள் வீர்யத்துக்குத் தக்கபடி போரில் வாயினாலும் பேசுவார்கள்
கார்யங்களையும் செய்வார்கள்; பராக்ரமத்தையும் காண்பிப்பா
கள். ஆதலால், சூரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தக் க
ணனை நீர் நிந்திப்பது தகுதியன்று' என்று மறுமொழி கூறினை
அரசனால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்த த்ரோணபுத்ரர் அ
பொழுது ரோஷத்தை இழந்தவராஞர். பிறகு, சந்தனுகுமாரராகை
பீஷ்மர், (பாணங்களை) நாண்கயிற்றிற்பூட்டி வெளிப்படையாக
தொடுக்கின்ற ஸவ்யஸாசியின்மீது பாணங்களை எய்தார். பிறகு
பீபத்ஸுவானவன் அளவற்ற பராக்ரமமுள்ள பீஷ்மருடைய வி
லைப் பெரிதான முனையுள்ளதும் கழுகிறகுகள் கட்டியிருக்கின்றது
மான ஓர் அம்பினால் பலாத்காரமாக அறுத்தான். அதற்கு
பிறகு, குந்தீபுத்ரனை தனஞ்சயன், (யுத்தம் செய்வதற்காக
முயற்சிசெய்கின்றவரும் பராக்ரமசாலியுமான அந்தப் பீஷ்மரை
பத்துப் பாணங்களால் நடுமார்பில் அடித்தான். சிறந்த கை
னுள்ளவரும் யுத்தத்தில் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவருட
கங்காபுத்ரருமான அந்தப் பீஷ்மர் (அர்ஜுனனுடைய பாணங்
ளால்) துன்பப்படுத்தப்பட்டு ரதத்திலுள்ள ஏர்க்காலைப் பிடித்துக
கொண்டு 1 நெடுநேரம் நின்றார். தேர்க்குதிரைகளை நடத்துகின்ற
ஸாரதியானவன் சாஸ்த்ரத்தை நினைத்து மஹாரதரும் ப்ரஜ்ஞை
யற்றவருமான அந்தப் பீஷ்மரை ரக்ஷித்துக்கொண்டு (தேரை)
வேறிடம் நடத்திச் சென்றான். பராக்ரமத்திலும் சௌர்யத்தி
லும் வீர்யத்திலும் ஸத்வத்திலும் பலத்திலும் யுத்தத்திலும் எல்லா
அஸ்த்ரசஸ்த்ரங்களிலும் லாகவத்திலும் தூரத்தினின்று (லக்ஷ்
யங்களை) அடிக்கும் விஷயத்திலும் உலகத்தில் ஒப்பற்றவரும்
பிதாவினால் அளிக்கப்பட்ட வரமுள்ளவரும் ஸ்ரமத்தை வென்ற
வரும் பகைவர்களை ஜயித்தவரும் ஆலஸ்யமற்றவரும் இளைப்
பில்லாதவரும் தம்மிஷ்டப்படி மரணமடையத் தக்கவரும் சூரரும்

1 வேறு பாடம்.

பிதாவினுடைய பணிவிடையில் பற்றுள்ளவருமான பீஷ்மர், துர்யோதனனுடைய நன்மைக்காக யுத்தகளத்தில் பார்த்தனோடு போர்புரிந்து குந்தீபுத்ரனுக்கு ஹிதத்தைச் செய்வதற்காகத் தோல்வி அடைந்தவர்போலானர்.

அறுபத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், த்ரோணர்முதலான ஐந்து மஹாரதர்களை எதிர்த்துப் போர்செய்தது.)

பார்த்தன், போர்க்களத்தில் கௌரவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே, யுத்தத்தில் பீஷ்மரை ஜயித்து மறுபடியும் போர்புரியக்கருதி ஐந்து மஹாரதர்களைக் குறித்துச் சென்றான். அவன் இரண்டு தூணீரங்களையும் ஆராய்ந்து நாராசங்களை எடுத்துக்கொண்டு காண்டீவத்தை உருவுகின்றவனாகி மறுபடியும் கர்ணனை எதிர்த்துச் சென்றான். த்ரோணபுத்ரர் (கர்ணனைப்பார்த்து,) 'கர்ண! 'யுத்தத்தில் எனக்கு நிகரானவனில்லை' என்று ஸபையின்மத்தியில் பொருத்தமில்லாத அனேக வார்த்தையைச் சொல்லிக்கொண்டிருக்கிறாய். அதற்கு இதோ ஸமயம் வந்துவிட்டது. இதோ அர்ஜுனன், ஸர்வ ப்ராணிகளையும் நாசஞ்செய்கின்ற அந்தகன்போலக் கோபங்கொண்டு ஸமீபத்தில் எதிர்த்துவந்து விம்மம்போலக் கொட்டாவிவிடுகிறான். நீ சூரனாக இருந்தால் ஓடாதே; நின்று பல்குனனோடு யுத்தம்செய்' என்று சொல்ல, கர்ணன், 'க்ஷத்ரியர்களுக்குரிய தர்மத்தை அனுஸரித்திருக்கின்ற யான் பீபத்ஸுவினிடத்தினின்றுவது மேதவகீபுத்ரனை க்ருஷ்ணனிடத்தினின்றுவது (இன்னும்) மற்ற எல்லாப் பாண்டவர்களிடத்தினின்றுமாவது பயப்படவில்லை. பலத்திலும் அதிகரித்தவர்களும் தனுர்வேதத்தைக்கொண்டு பிழைக்கின்றவர்களுமான சூரர்களுக்கு (ப்பகைவர்களை)ப்பார்த்தவுடன் இறுமாப்புண்டாகிறது; ஸ்வரமும் உள்ளடங்காது. அர்ஜுனனோடு போர்க்களத்தில் நன்றாக எதிர்த்துப் போர்புரிகின்ற என்னை ஆசார்யபுத்ரர் பார்க்கட்டும். விதியோ (ஒருவராலும்) தாண்ட முடியாதது' என்று சொன்னான். அப்பொழுது த்ரோணர், 'கர்ண! சூரர்களுக்கு வாக்குடன் பௌருஷமும் இருக்குமாகில் என்னதோஷம்? அஃது இந்த உலகத்தில் குணங்களால் மேலானதென்று சொல்லப்படுகிறது. நீ பயமில்லாமல் பார்த்த

ேறுடு யுத்தம்செய். கர்ண ! 'யுத்தத்தில் பார்த்தனிடத்திலிருந். நான் பயப்படமாட்டேன்' என்பது முதலாக நீ சொன்னவார் ணதையைநினைத்துக்கொண்டு யுத்தத்தினின்று ஓடாதே' என்றுகூ னர். அந்தத்தனஞ்சயனை அந்த ஐந்து ரதிகர்களும் நான்கு ட கத்திலும் சூழ்ந்துகொண்டு அம்புகளை மிகவர்ஷிக்கின்றவர்களு பகைவர்களின் உயிரைப்போக்கக் கருதியவர்களும் (யுத்தத்தை லாபம்போலஎண்ணுகின்றவர்களும்வர்ஷாகாலமேகங்கள்போல சரக்கூட்டங்களை மிக இறைக்கின்றவர்களுமாகித் தனஞ்சயனை விரைவாகஎதிர்த்தார்கள். அவர்கள் விரைவாகச்சென்று எதிர்த். நின்று கூர்மையுள்ளவைகளும் பற்பலவகைப்பட்டவைகளு இறகுகளுள்ளவைகளுமான அநேகபாணங்களால் தனஞ்சயனை அடித்தார்கள். பிறகு, எல்லாச் சஸ்த்ரதாரிகளுள்ளும் உத்த ணன பீபத்ஸுவானவன் அட்டஹாஸம்செய்து திவ்யாஸ்த்ரத்தை ப்ரயோகித்துக்கொண்டு ரதிகஸ்ரேஷ்டர்களை எதிர்த்தான்; ஸூ யன் பூமியைக் கிரணங்களால் மூடுவதுபோலத் திசைகளைக் காண டவத்தினின்றுவிடுபட்ட அம்புகளால் மூடினன். ரதங்கள் யானை கள் கொடிமரங்கள் குதிரைகள் இவைகளுடைய (சேதகத்திற் கூர்மையுள்ளபாணங்களால் அடிக்கப்படாத இடம் இரண்டு அ குலங்கூட இல்லை. பரதகுலத்தில் உதித்தவரே ! அமைதிை பூதன்மையாகக்கொண்ட போர்வீரரனைவரும் தங்களுடைய மை நிலைமையை அறியவில்லை. யானைகளும் குதிரைகளும் பயந் ஓடுங்கின. மதப்பெருக்குற்றதும் அறுபதுவர்ஷம் சென்றது மான ஒருயானையானது கோரைக்காட்டை அழிப்பதுபோல அர்ஜுனன் சஸ்த்ரங்களுடைய தேஜஸினால் எல்லா வீரர்களையு அழித்தான். காண்டவத்திலுடையசப்தத்தினால் பூமியான நடுங்கியது. தனஞ்சயன் தார்த்தராஷ்ட்ரர்களுடைய மனங்களையு துன்பமடையும்படி செய்தான். ஆயுதம்பிடித்தவர்களுள் மேல னவனும் வீர்யமுள்ளவனும் சூரனுமான அந்த அர்ஜுனன் பிறகு, ஸைன்யங்களுடைய மத்தியில் நுழைந்து யுத்தத்தி ஸாரதியைநோக்கி, 'ஸாரதியே! இந்தக் குதிரைகளை இழுத்து பிடித்து மெல்லநடத்து. போரில் (ஒருவராலும்) ஜயிக்கமுடியா வரான ஆசார்யபுத்ரருடன் நான் போர்புரியப்போகிறேன். மூ தியே அவர் என்னோடு சண்டை செய்திருக்கிறார். அவர் என குப் பின்புறத்திலிருக்கிறார்' என்று கூறினன். இவ்வாறு அ ஜுனனால் சொல்லப்பட்டவுடன், அந்தவிராடபுத்ரன், வே முள்ள குதிரைகளை அஸ்வத்தாமாவினுடைய ரதத்தைக்குறித்த மிக்க விரைவுடன் ஓட்டினன்.

கர்ணன், 'துன்பமுற்றவனும் அதிகவேதனையுள்ளவனுமான பீபத்ஸுவானவன் இதோ ஓடுகின்றான். அவனை அவ்விடத்திலேயே நான் பின்தொடர்வேன். அவன் உயிரோடு விடப்படமாட்டான்' என்றுசொன்னன். த்ரோணர், 'மஹாத்மாவான இந்தஇந்த்ரகுமாரன் பயத்தினல் விலகவில்லை. பயந்தவர்கள் இவ்வாறு திரும்பமாட்டார்கள். அதிகமான வேதனையுடையவர்களும் இவ்வாறு திரும்பமாட்டார்கள். அதிகப்பரபரப்புள்ள இவனை மறுபடியும் நீ எதிர்த்துப்போவாயாகில், மீண்டு விடுபடமாட்டாய். அவன் பலஅஸ்த்ரங்களை அறிந்திருக்கிறான். தெய்வாதீனமாகத் துர்யோதனன் விடுபட்டான். தெய்வாதீனமாகப் பசுக்களும் ஓடிவிட்டன. நீயும் தெய்வாதீனமாக விடுபட்டாய். யுத்தத்தால் என்னசெய்யப்போகிறாய்? ஒரு க்ரோசதூரம் விலகிச்சென்று ஸைன்யத்தை நல்வார்த்தைசொல்வோம். அழைத்துவரப்பட்ட ஸைன்யத்தோடு மறுபடியும் பார்த்தனைஎதிர்த்துச்செல்லுங்கள்' என்று கூறினர்.

அறுபத்தைந்தாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், உத்தரனைப் பீஷ்மர்முதலானவர்களின்பக்கத்தில் ரதத்தைநடத்தும்படிஏவி, அவனுக்குத் தன்பராக்ரமத்தைக்கூறி, துச்சாஸனன்முதலானவர்களை அவமானப்படுத்துவதற்காகப் பீஷ்மர்முதலியோருடன் போர்புரிந்தது.)

விராடபுத்ரனைநோக்கி, "(உத்தர!) இப்பொழுது என்னை(ப் பகைவர்களை) அடிக்கும்திறமையுள்ள வீரர்களுடைய தேர்க்கூட்டத்தை அடையும்படிசெய். எங்களனைவருக்கும் பிதாமஹரும் சந்தனுவின்புத்ரருமான பீஷ்மர் நல்லயுத்தத்தைவிரும்பிக் கவசம்பூண்டு ரதத்திலிருப்பதும், வஜ்ரங்களாலும் வைடூர்யங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் பொன்மயமுமான பனைமரக் கொடியானது போர்க்களத்தில் காற்றினல்அசைவுற்று நன்கு ப்ரகாசிக்கின்றதுமானஇடத்தில் (சென்று), வில்லாளிகளுடைய தேர்க்கூட்டங்களைப் பயங்கரமாகஅடிப்பேன். இவர்களுடையவிற்களையும் நாண்கயிறுகளையும் கவசங்களையும் நான் அபகரிப்பேன். உத்தர! திவ்யாஸ்த்ரங்களை அற்புதமாக ப்ரயோகிக்கின்றனன்னை நீ பார். வர்ஷாகாலத்தில் மேகத்திலிருந்து ப்ரகாசிக்கின்ற மின்னல்போன்ற

ஸ்வர்ணமயமான பின்புறமுள்ள என்னுடைய காண்டீவத்தை கௌரவர்கள் பார்க்கட்டும். ஸாரதியே! '(இவன்) வலப்பக்தாலோ இடப்பக்கத்தாலோ எந்தப்பக்கத்திலல் (எய்கிறா என்று பகைவர்களனைவரும் என்னைப் பகுத்தறியப்போகிறதில் 1 அஸ்த்ரங்களாகிற ஜலமும் குதிரைகளாகிற சுழல்களும் யாளாகிற முதலைகளும் ரதங்களாகிற மடுக்களுமுள்ளதும் பரலோதுக்கு (எல்லாரையும்) இழுத்துக்கொண்டுபோகின்றதுமா நதியை நான் பெருகும்படிசெய்யப்போகிறேன்; கைகளும் கா ளும் தலைகளும் முதுகுகளும் புஜங்களும் சங்கங்களுமாகிற ச சரங்களுள்ளதான கௌரவர்களுடைய கூட்டமாகிறகாட்டை அழுந்தினகணுக்களுள்ள பாணங்களால் வெட்டுவேன். அம்பு தூணியிலிருப்பவைகளும் அழகியகட்டுக்களும் முனைகளுமுள் வைகளும் துந்துபிவாத்யம்போலச் சப்திக்கின்றவைகளுமா அம்புகள் என்னல்தொடுக்கப்பட்டுப் போரில் கௌரவர்களை கப்போகின்றன. கொடிகளாகிறமரங்களும் அம்புகளாகிற புல் களுமுள்ளதும் யானைகுதிரைகளாகிறதுஷ்டம்ருகங்களால் நி தும் ரதங்களாகிற சிங்கக்கூட்டங்களோடுகூடியதும் விற்க கிறகொடிகளால் அடர்ந்ததுமான கௌரவர்களுடையகூட் மாகிறகாட்டை அஸ்த்ரதேஜஸ்ஸினல்கொளுத்துவேன். ஒருவ இருந்துகொண்டு பாரதசேனையை யுத்தத்தில் ஜயிக்கின்ற எனக் நெருப்புக்குக் காட்டில் வழிகள் ஏற்படுவது போல அ வழிகள் ஏற்படும். என்னல் சக்ரம்போலச் சுழற்றி அடிக்க பட்ட கௌரவசேனையை நீ ஒருவனே பார்ப்பாய். சக்ரபா யான ஸ்ரீமந்நாராயணன் அஸுரர்களை ஒடும்படிசெய்வதுபோ நான் ஒருவனுகவேயிருந்துகொண்டு அந்தப்பகைவர்களை ரத ளுடையமத்தியினின்று பரலோகத்தின்பொருட்டு ஓடும்படிச வேன். ஸமதரைகளிலும் மேடுபள்ளமுள்ளதரைகளிலும் நா பரபரப்பில்லாமல் ரதத்திலிருந்துகொண்டு வழியைமறைத் நிற்கும் மலையையும் பிளப்பேன். நான், இந்த்ரனுடையயுத்த தில் மாதலியை ஸாரதியாகக்கொண்டு, பலத்தினல் இறுமா புள்ளவர்களும் பகைவர்களும் நான்குபக்கத்திலும் ஓடுகின் வர்களும் போர்புரிகின்றவர்களுமான எல்லா நிவாதகவசர்க யும் யுத்தத்தில் கொன்றேன்; ஆயிரக்கணக்காகக் காண்டீவ தினின்று விடுபட்ட அஸ்த்ரங்களால் நிவாதகவசர்களை கொன்றுவிட்டு, ஸமுத்ரத்துக்கு அக்கரையிலிருக்கின்ற சிறந் தான ஹிரண்யபுரத்தையும் நாசஞ்செய்தேன். ஸாரதியே

1 'ரக்தமாகிற' என்பது வேறுபாடம்.

உக்ரமான வில்லாளிகளான அறுபதினாயிரம்ரதிகர்களைக்கொன்று விட்டு யுத்தத்தில் அதிக உக்ரஸ்வரூபிகளும் கோரரூபிகளுமான பௌலோமர்கள் காலகேயர்கள் என்கிற அஸுரர்களையும் நான் பாசுபதாஸ்த்ரத்தினால்கொன்றேன். நான் இந்திரனிடத்தினின்று உறுதியாக (சஸ்த்ரங்களைப்பிடிக்கும்) முஷ்டியையும் ப்ரம்மதேவரிடத்தினின்று ஹஸ்தலாகவத்தையும் மனுவினிடத்தினின்று அதிகஸாமர்த்தியமுள்ளதும்ஆச்சர்யகரமுமான[1]மஹாயுத்தத்தையும் கற்றிருக்கிறேன். நான் ருத்ரரிடத்தினின்று ரௌத்ராஸ்த்ரத்தையும் வருணனிடத்தினின்று வாருணாஸ்திரத்தையும் ஸௌர்யனிடத்தினின்று ஸௌர்யாஸ்திரத்தையும் யமனிடத்தினின்று யாம்யாஸ்த்ரத்தையும் அக்னியினிடத்தினின்று ஆக்னேயாஸ்திரத்தையும் வாயுவினிடத்தினின்று வாயவ்யாஸ்திரத்தையும் மற்றத்தேவர்களிடங்களிலிருந்து (அனேகஅஸ்த்ரங்களையும்) பெற்றிருக்கிறேன். எந்தமனிதன் என்னுடைய யுத்தத்தைப் பொறுப்பான்? இப்பொழுது காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் மயிர்க்கூச்சத்தையுண்டுபண்ணுகின்றவைகளுமானசரக்கூட்டங்களால் வில்லாளிகளான கௌரவர்களுடைய தேர்க்கூட்டங்களை நாசம்பண்ணப் போகிறேன்' என்று கூறினன்.

அந்த ஸவ்யஸாசியினால் இவ்வாறு தேறுதல் செய்யப்பட்ட விராடபுத்திரன், பயங்கரமான பீஷ்மருடைய தேர்ப்படையில் குதிரைகளால் ப்ரவேசித்தான். உக்ரனான தனஞ்சயன், அப்பொழுதே நாண்கயிற்றை இழுத்து ஒலிக்கச்செய்துகொண்டு, ரதிகர்களுள்சிறந்தவரும் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவரும் யுத்தத்தில் பகைவர்களைஜயிக்க எண்ணங்கொண்டவருமான பீஷ்மரை எதிர்த்துச்சென்றனன். பரதஸ்ரேஷ்டரே! (அந்த) அர்ஜுனனைத் துச்சாஸனன் விரைவாக எதிர்த்துச்சென்றனன். விசித்ரமான ஆபரணங்களை அணிந்தவர்களும் யௌவனமுடையவர்களும் அழகியகுண்டலங்களை அணிந்தவர்களும் பயங்கரமான வில்லைத்தாங்கினவர்களுமான மற்றவீரர்களும் கைகளால் நாண்கயிற்றைஇழுத்து ஒலியையுண்டுபண்ணிக்கொண்டு அர்ஜுனனை எதிர்த்தார்கள். துச்சாஸனனும் விகர்ணனும் வ்ருஷஸேனனும் விவிம்சதியும் பயமற்றவர்களாகிப் பயங்கரமானவில்லைத்தாங்கிய பாண்டவனைச் சூழ்ந்துகொண்டார்கள். (வில்லில் பாணங்களைப்) பூட்டிவிடுகின்றவனும் புத்திசாலியும் குந்தீபுத்ரனுமான அந்த அர்ஜுனனுடைய இடவிலாப்புறத்தில் துச்சாஸனன் அறுபதுபாணங்களை ப்ரயோகித்தான். மறுபடியும், அந்தத்துச்சாஸனன்விராடபுத்ரனைஉத்தரனை

1 வேறுபாடம்.

ஒரு பல்லத்தால் அடித்து இரண்டாவதுபல்லத்தினால் வீரனை அர்ஜுனனை நடுமார்பில் அடித்தான். ஜிஷ்ணுவானவன், அருகில் வந்து, கழுகிறகுபூண்ட கூரமென்னும்பாணத்தினுடைய நுனியினால், பொன்னால் அலங்கரிக்கப்பட்ட அந்தத்துச்சாஸனனுடைய வில்லை வெட்டினன்; பிறகு, அந்தத்துச்சாஸனனை ஐந்துபாணங்களால் நடுமார்பில்அடித்தான். பார்த்தனுடையஅம்புகளால் நன்றாகப் பீடிக்கப்பட்ட அந்தத்துச்சாஸனன் ரதத்தின்மத்தியைவிட்டு ஓடினன். (பகைவர்களால்) ஜயிக்கப்படாத பீபத்ஸுவானவர் எல்லாத்திசைகளிலும் ஸஞ்சரித்தான். த்ருதராஷ்ட்ரபுத்ரனாகிய விகர்ணன், பகைவீரர்களை அழிப்பவனை அந்தஅர்ஜுனனைக் கூர்மையுள்ளவைகளும் கழுகிறகுகட்டப்பட்டவைகளும் சாணைக்கல்லில் தீட்டப்பட்டவைகளுமான அம்புகளால் அடித்தான். பிறகு,குந்தீபுத்ரன், அழுந்திய கணுக்களுள்ள ஓர் அம்பினால் அந்த விகர்ணனையும் நெற்றியில் உளையஅடித்தான். அடிக்கப்பட்டஅந்த விகர்ணன் பயந்து ஓடிவிட்டான். பிறகு, துஸ்ஸஹன் விவிம்சனுடன் பார்த்தனருகில் ஓடிவந்து போரில் (தன்) உடன்பிறந்தவனைக் காக்கக்கருதிக் கூர்மையான அம்புகளை இறைத்தான். தனஞ்சயன் பரபரப்புடன் கழுகிறகுகள் பூண்ட கூர்மையுள்ள இரண்டுபாணங்களால் ஒரேஸமயத்தில் அவ்விருவரையும் அடித்து அவ்விருவருடைய குதிரையையும் நாசஞ்செய்தான். கொல்லப்பட்ட குதிரைகளையுடையவர்களும் அடிக்கப்பட்ட அங்கங்களையுடையவர்களுமான அந்தத்ருதராஷ்டிரபுத்ரரிருவரையும் அஞ்சயர்கள் எதிரில் ஓடிவந்து வேறுதேர்களில் ஏற்றி வேறுஇடத்துக்குக் கொண்டுபோனர்கள். அப்பொழுது, பார்த்தன், யுத்தத்தில் த்ருதராஷ்ட்ரகுமாரர்களனைவரையும் (அவ்வாறு) ஓட்டினன்; ஓட்டிவிட்டு, யுத்தபூமியை ப்ரகாசிக்கச்செய்தான். கிரீடத்தை அணிந்தவனும் குந்தீபுத்ரனும் லக்ஷ்யங்களில் தவறுமல் பாணங்களை ப்ரயோகிப்பவனும் ப்ரதாபசாலியுமான பார்த்தன் (பகைவர்களுடைய) முடிகளையும் பரிகாயுதம்போன்ற கைகளையுடையவர்களையும் அறுத்துத்தள்ளினன். மஹாவீரர்கள் ஸ்வர்ணமாலைகளுடனும் நூற்றுக்கணக்காகப் பூமியில் விழுந்தார்கள். பிறகு, யுத்தபூமியானது, தாமரைப்புஷ்பங்களுக்கும் ஸூர்யனுக்கும் சந்த்ரனுக்கும் ஒப்பானவைகளும் வெண்ணிறமுள்ள பற்களுள்ளவைகளும் அழகிய முகமும் கண்களும் மூக்குமுள்ளவைகளும் அழகிய மகரகுண்டலங்களணிந்தவைகளுமான புருஷருடைய தலைகளால் மறைக்கப்பட்டதாக விளங்கிற்று. அழகியமூக்குள்ளவைகளும் அழகியவைகளும்ஒளிர்கின்றவைகளுமான கண்களுள்ளவைகளும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட மீசையுள்ளவைகளும், நன்றாக அலங்கரிக்கப்பட்டவைகளும், பொன்மயமான குண்டலங்களணிந்தவைகளும், அறுத்துத்தள்ளப்பட்டவைகளுமான தலைகள் அனேகங்கள் காணப்பட்டன. இவ்வாறு, அந்தக் கௌரவசேனையானது நன்கு அடிக்கப்பட்டு நாற்புறங்களிலும் பயந்து ஓடிவிட்டது. பிறகு; மஹாரதர்களும் மஹாபலசாலிகளுமான துர்யோதனனும் கர்ணனும் ஸுபலனுடைய புத்ரனை சகுனியும் த்ரோணரும் அவர் குமாரரும் அதிரதரான க்ருபரும் அப்பொழுது ஒன்றுகூடி உறுதியான விற்களை நாணெலியிடும்படி செய்துகொண்டு அந்தப் போர்க்களத்தில் விஜயதேடு போர்புரியவந்தார்கள்; பிறகு, அசைகின்ற கொடித்துணியுள்ளதும் ஸூர்யன்போல ப்ரகாசிக்கின்றதுமான தேருடன் மீண்டும் திரும்பிவந்து, வழியிலுள்ள வானரக் கொடியுடையவனைக் கண்டார்கள். மஹாவில்லாளிகளான அவர்கள், மிகுந்த கோபங்கொண்டு தனஞ்சயனைச் சூழ்ந்துநின்று மஹாமேகங்கள் மலையின்மீது பொழிவதுபோல (அவன்மீது) மஹாஸ்த்ரங்களை நான்குபக்கத்திலும் பொழிந்தார்கள். மஹாவீர்யமுடையவர்களான அவர்கள் சரத்கால மேகங்கள்போல அம்புக்கூட்டங்களை மிகப் பொழிந்து கிரீடியை மிகத் தபிக்கச்செய்துகொண்டு போரில் நின்றார்கள்; ஸமீபத்தில் எதிர்த்து நின்று, கூர்மையுள்ளவைகளும் கழுகிறகுகள் கட்டியவைகளுமான அனேக அம்புகளால் பாண்டவனை எதிர்த்து விரைவாகப் போர்புரிந்தார்கள். பிறகு, பீபத்ஸுவானவன், அட்டஹாஸம்செய்துகொண்டு, ஐந்துவர்ஷகாலம்அப்யஸித்ததும் ஸூர்யனுக்கொப்பானதுமான அவ்விதஐந்த்ராஸ்த்ரத்தைக் காண்டீவத்தில் பூட்டினன். அச்சுக்கட்டைகளிலும் சக்ரங்களிலும் ரதங்களிலும் குதிரைகளிலும் இரண்டோரங்குலங்கூட அர்ஜுனனுடைய அஸ்த்ரத்தினல் மூடப்படாமல் காணப்படவில்லை. ஸூர்யன் கிரணங்களால் எல்லாத்திக்குக்களையும் மூடுவதுபோலக் கிரீடியினல் விடப்பட்ட அஸ்த்ரமானது உலகமனைத்தையும் மூடியது. சக்ராயுதம்போல வளைக்கப்பட்ட காண்டீவமானது மேகத்தின்மீது மின்னல்போலவும் மலையின்மீது அக்னிபோலவும் இருந்தது. மேகம் வர்ஷிக்கும்பொழுது மலையில்விழும் மின்னல்போல ஜ்வலிக்கின்ற காண்டீவமானது, இடிமுழக்கமுள்ளனவாகச் செய்யப்பட்ட எல்லாத் திசைகளையும் (அஸ்த்ரதேஜஸினல்) மூடிற்று. அர்ஜுனன், ஐந்த்ராஸ்த்ரத்தை வெளிப்படுத்துகையில் எல்லாரதிகர்களும் பயந்தார்கள். போர்வீரர்களனைவரும் ஓய்வடைந்து நினைவைழிந்தார்கள்; த்ரோணரோடும் பீஷ்மரோடுங்கூடி மயக்கத்தினல் ப்ரஜ்ஞையை இழந்தார்

கள். பரதஸ்ரேஷ்டரே! அந்த எல்லாஸைன்யங்களும் தோல்வியடைந்து ஸவ்யஸாசியினிடத்தினின்று உண்டான பயத்தினல் எல்லாத் திக்குக்களிலும் ஓடின.

அறுபத்தாருவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனைத் தேற்றித் துர்யோதனனிடம் தேரைச் செலுத்த ஏவியதும், தனக்கு ஆற்றமல் ஓடுகின்ற துர்யோதனனைப் பரிஹஸித்துப் போருக்கழைத்ததும்.)

அர்ஜுனன், 'உத்தர! தெற்குத்திக்கைநோக்கியே குதிரைகளை நடத்து. இங்கே நிற்கின்ற இந்தவீரர்களுடைய இவ்விதசப்தமானது இனி அதிகமாகப் போகின்றது. ஸாரதியே! அஸ்வத்தாமாவினுடைய ரதத்தைக்குறித்துக் கிழக்குமுகமாகச் செல். டுகழையுடைய குருபுத்ரரை விரைவாகப் பார்க்க விரும்புகிறேன்' என்று கூறினன். அப்பொழுது, பாண்டவன், வில்லினுடைய ஓசையினல் அவர்களனைவரையும் மோஹிக்கச்செய்துவிட்டு (அந்தக் கௌரவசேனையை) ப்ரதக்ஷிணமாகச் சுற்றிக்கொண்டு அரைக்ரோசதூரம் விரைவாக ஓடினன். காற்றானது எப்பொழுதும் சென்றுகொண்டிருப்பதுபோலவும் கருடன் வேகமாகச் செல்லுகிறதுபோலவும் பார்த்தனுடைய தேரானது ஆகாயத்தில் எல்லாப்பக்கத்திலும் சீக்ரமாகச் சுழன்றது. ஒலியானது ஒருமுஹூர்த்தகாலத்தில் ஓய்ந்தது. தனஞ்சயனும் (வேறு இடத்துக்குச்) செல்லவே, பாணங்களால் மிகவும் காயப்படுத்தப்பட்ட த்ரோணர் பீஷ்மர் முதலான மஹாரதர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து பார்த்தனைக் காணமல் முயற்சியுள்ளவர்களாகி யானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் காலாட்களையும் முன்னிட்டுக்கொண்டு ஸைன்யங்களுக்குப் பின்புறத்தில் சென்றார்கள். ஸைனிகர்கள், 'பாக்யவசத்தினல் துர்யோதனன் விடுபட்டான். ஸைன்யம் பெரும்பான்மையாக (த்திரும்பி) வந்துவிட்டது. ஒருக்ரோசதூரந் தாண்டி ஸைன்யத்தைப் பின்தொடர்ந்து அழைத்து வருவோம். அம்மகை என்கிற நதிக்கருகில் நுழைய முடியாத அரண்யமிருக்கின்றவிடத்தில் செல்லுங்கள்' என்று கூறினர்கள். ஓ! குருஸ்ரேஷ்டரே! பிறகு, துர்யோதனன் போரில் தோல்வியடைந்த தன்னுடைய சேனையைக் கண்டு பொறுக்கவணுகி (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவர்களான பீஷ்மர், த்ரோணர், க்ருபர் இவர்களால் மிகவும் தடுக்கப்பட்டும், தன்னுடைய

சேனையிலுல் சூழப்பட்டுக் கோபத்துடன் தனஞ்சயனைத்தேடிக் கொண்டு திரும்பினன். பிறகு, அர்ஜுனன், விசித்ரமும் மிக்க வேகமுளளதும் நாகராஜனுக்கு ஒப்பானதும் உலகங்களில் ப்ரவ்லித்திபெற்றதும் யுத்தத்தில் (பகைவர்களால்) ஒடிக்கத்தகாததும் வெட்டத்தகாததும் எரிக்கத்தகாததுமானகாண்டீவத்தைப் பார்த்துப் பின்வருமாறு உரைக்கலானன்.

'இந்த வில்லானது இப்பொழுது கௌரவர்களுடைய அநீதியை (அடக்குகின்றது;) மங்களகரமானது; பகைவர்களை நாசஞ் செய்யும் திறமையுடையது; காற்றைவிட மேலான சிறந்த வேகமுள்ளது; சீக்ரமாக (சத்ருஸம்ஹாரத்தை)ச் செய்யக்கூடியது; பெரும்போரில் ஒருவராலும் தடுக்கமுடியாதது; பகைவர் படைகளைப்போக்கும் திறமையுள்ளது; யுத்தத்தில் (சத்துருக்களுடைய) படையை ஜயிக்கக்கூடியது; வஜ்ராயுதத்துக்கு ஒப்பானது; பகைவர் மனைவிகளுக்கு வைதவ்யத்தை விளைவிக்கக்கூடியது; குருவம்சத்தில் பிறந்தவர்களுக்கு ஸுகத்தைக் கொடுக்கக்கூடியது. அந்தத்துர்யோதனனிருக்கிற இடத்துக்குச் செல்.மிக்க கூர்மையுள்ள அம்புகளால் அவனைக் கீழேதள்ளுவேன். ஆசார்யபுத்ரர், துர்யோதனன், பிதாமஹரான பீஷ்மர், ஸூத புத்ரனான கர்ணன், த்ரோணர், க்ருபர் ஆகிய அனைவரையும் போரில் தடுத்துத் துர்யோதனனுடைய தலையை அறுப்பேன்' என்று கூறினன். உத்தரன், விசித்ரமும் மிக்கவேகமுள்ளதுமான அந்தவில்லையும் கூர்மையான அம்புகளையுங்கண்டு பயந்து போரினிடையில் அர்ஜுனனைப்பார்த்து, 'நான் உம்முடைய குதிரைகளை அடக்கி நடத்துவதற்குச் சக்தியற்றவனாக இருக்கிறேன்' என்று கூறினன். சத்ருக்களைக்கொல்பவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அர்ஜுனன், அந்த மத்ஸ்யராஜகுமாரனைப்பார்த்து, உரக்கச்சிரித்து, 'உத்தர! துணைவனென்னுடனிருக்கின்ற உனக்குப் பயமேது? குதிரைகளை வசப்படுத்தி நடத்து' என்று சொன்னன். அந்தத் தனஞ்சயனால் ஸமாதானம் செய்யப்பட்ட விராடபுத்ரன் வேகமாகக் குதிரைகளை நடத்தினன். ஜிஷ்ணுவானவன் மறுபடியும் போர்புரியக் கருதிக் கொடியவேகமுள்ள அந்தவில்லை நாணெலியிடும்படிசெய்தான். காண்டீவசப்தத்தினாலும் சங்கத்தினுடைய ஒலியினாலும் வானரத்தினுடைய முழக்கத்தினாலும் எல்லாப்பக்கத்திலும் அங்குள்ள சிறந்த யுத்தவீரர்களனைகர் பூமியில் ஆங்காங்கு மிகப்படுங்கினர்கள். அர்ஜுனன், '(ஸாரதியே!) மிக்க கர்வங்கொண்டவனும் எல்லாவித்தத்தினாலும் நிறைந்த தேஜஸையுடை

யவனும் த்ருதராஷ்ட்ரபுத்ரனுமான இந்தத் துர்யோதனன் தனக்கு நேர்ந்திருக்கின்ற தோல்வியை எப்பொழுதும் பொறுதவனாகிப் போர்புரிய எண்ணிப் படைமுகத்தில் நிற்கிறான். இளைய ஸஹோதரனுடன்கூடின அந்தத் துர்யோதனனையே பார்த்துக் கொண்டு ஜாக்ரதையுடன் அவ்விடம் செல்' என்று கூறினன்.

வருகின்ற அந்த அர்ஜுனனைப்பார்த்து எல்லாக் கௌரவ வீரர்களும் விரைவாக எதிர்த்துச்சென்றார்கள். வீரனான அந்த அர்ஜுனனே, உரக்கச்சிரித்துக்கொண்டு, அவர்களைத்தாண்டித் துர்யோதனன்மீது இரண்டுபாணங்களை நாட்டினன். பீடிக்கப் பட்ட மதங்கொண்டயானைபோல அதிரதனைபார்த்தனால் யுத் தத்தில் அடிக்கப்பட்ட த்ருதராஷ்ட்ரபுத்ரன் அவனோடு யுத்தம் செய்ய எண்ணித் தானேதானே விரோதித்துக்கொண்டு அவனைவந்து அடைந்தான். அதிவேகமுள்ள அந்தத்துர்யோதனன் பயங்கர மான வில்லையுடையவனும் அனேகம் பகைவராலும் ஜயிக்கமுடி யாதவனுமான தனஞ்சயனைக் காதுவரையில் நன்றாக இழுத்து விடப்பட்ட ஒருபாணத்தினால் நெற்றியின் நடுவில் அடித்தான். நன்கு ஸந்தானம்செய்து ப்ரயோகிக்கப்பட்டதும் ஸ்வர்ணத்தி னுடைய காந்திபோன்ற காந்தியுடையதுமான அந்தப்பாணத் தினால் அடிக்கப்பட்டு ரத்தத்தைப்பெருக்குகின்ற பார்த்தன், ஒற் றைக்கிரணமுள்ள ஸூர்யபகவான் பகலில் விளங்குவதுபோல விளங்கினன். பிறகு, பாணத்தால் பிளக்கப்பட்ட அந்த அர்ஜுன னுடைய (நெற்றியில்) சுடுகையுள்ளரக்தமானது தொடர்ச்சியாகத் தோன்றியது. அந்த ரக்ததாரையானது அவனுக்குப் பொன் மலர்களால் விசித்ரமாகச்செய்யப்பட்ட மாலைபோல விளங்கியது. பலமுள்ளவனும் அதிகோபாவேசமுள்ளவனும் கம்பீரஸ்வபாவ முள்ளவனுமான அந்த அர்ஜுனன், அந்தத் துர்யோதனனால் பாணத்தால் அடிக்கப்பட்டு விஷத்துக்கும் நெருப்புக்கும் ஒப் பானபாணங்களைஎடுத்து ராஜாவானதுர்யோதனனை அடித்தான். உக்ரமானதேஜஸுள்ள துர்யோதனனும் அந்த அர்ஜுனனை அடித்தான். ஒப்பற்றவீரனை பார்த்தனும் துரியோதனனை அடித் தான். (இவ்விதம்) அஜமீடனுடைய குலத்தில் உதித்தவர்களும் புருஷர்களுள் சிறந்த வீரர்களுமான அவ்விருவர்களும் யுத்தத்தில் ஒருவரையொருவர் அடித்தார்கள். பிறகு, விகர்ணன், மதப் பெருக்குள்ளதும் மலைபோலவிளங்குகின்றதுமான ஒருபெரிய யானையின்மீதேறிக்கொண்டு (தானேறிய) யானையின்பாதங்களை ரக்ஷிக்கின்றவர்களான நான்கு ரதிகர்களோடுசேர்ந்து குந்திபுத்ர னை பாண்டவனை எதிர்த்துச்சென்றான். வருகின்றதும் வேகமுள்

ளதுமான அந்தக் கஜராஜனை வீரனை தனஞ்சயன் காதுவரை யில் இழுத்துவிடப்பட்டதும் உறுதியுள்ளதும் இரும்புமயமுமான அம்பினால் கும்பஸ்தலத்திற்கும் நெற்றிக்குமருவில் அடித்தான். பார்த்தனல்விடப்பட்டதும் கழுகிறகுகள் பூண்டதுமான அந்தப் பாணமோ இந்திரனல்விடப்பட்ட வஜ்ராயுதமானது மலையைப் பிளப்பதுபோலப் பெரியமலைபோன்ற (அந்த) யானையைப் பிளந்து மூலப்ரதேசம்வரையில் நுழைந்தது. பாணத்தினால் நன்முகத் தபிக்கச்செய்யப்பட்ட அந்தயானையரசானது, மிக்க நடுக்கமுற்ற அங்கமுள்ளதும் துன்பமடைந்தமனத்தையுடையதும் நன்முக வாட்டமுற்றதுமாகி வஜ்ராயுதத்தினால் அடிக்கப்பட்ட மலையின் கொடுமுடிபோலப் பூமியில் விழுந்தது. கஜராஜாவானது பூமியில் வீழ்த்தப்பட்டவுடன், விகர்ணன் பயத்தினால் உடனே இறங்கி விரைவாக நூற்றெட்டடிதூரம் சென்று விவிம்சதியினுடையரதத் தின்மீது ஏறிக்கொண்டான். பார்த்தன் வஜ்ரத்துக்கு ஒப்பான அந்தஅம்பினால் பெரியமலைக்குஒப்பான (அந்த) யானையைக் கொன்றுஅவ்விதமானபாணத்தினாலேயே துர்யோதனனை மார் பில் பிளந்தான். யானையும்கொல்லப்பட்டு அரசனும்பிளக்கப்பட்டு விகர்ணனும்பாதரக்ஷகர்களோடுதோல்வியடைந்தபோது, காண்டீ வத்தினின்றுவிடுபட்டஅம்புகளால் அத்தகைய சிறந்தயுத்தவீரர் கள் பிளக்கப்பட்டு விரைவாக ஓடிவிட்டார்கள். பாணத்தால் கொல்லப்பட்டயானையையும் (தோல்வியுற்ற) எல்லாயுத்தவீரர்களை யும் பார்த்துக் கௌரவர்களுள்சிறந்தவீரனும் அரசனுமான துர் யோதனன், ரதத்தைத்திருப்பிக்கொண்டு யுத்தபூமியினின்று பார்த்தனில்லாத இடத்துக்கு ஓடினான். பகைவர்கூட்டங்களை அடிக்கின்ற கிரீடியானவன், மிகப்பயந்தவனும் வேகமாகச்செல்லு கின்றவனும் அம்பினால் அடிக்கப்பட்டவனும் ரக்தத்தைக்கக்கு கின்றவனுமான அந்தத் துர்யோதனனை யுத்தஞ்செய்யமனமுள்ள வனாக அழைத்தான். பெரியவில்லாளிகளுள்சிறந்தவனான அந்தத் துர்யோதனன் ஒப்பற்றதனஞ்சயனால் யுத்தத்தில் மிகவும்அடிக்கப் படவே, அந்தக்கௌரவனைன்பங்களனைத்தும் பார்த்தனைக் கண்டு பயத்தால் துன்பமடைந்து நடுக்கமுற்றன. பிறகு, மதப் பெருக்குற்ற யானைபோல உரக்கக்கர்ஜிக்கின்றவனும் யுத்தத்தில் பலத்தால்கர்வமுடையவனும் காளைகளுடையநடுவில் ஸிம்மம் போல (க்கௌரவர்களுடைய) மத்தியிலிருக்கின்றவனுமான அர்ஜுனனைக்கண்டு அந்தப்போர்வீரனைவரும் ஓய்வடைந்தார் கள். பாண்டவனுடைய காண்டீவத்தின்சப்தத்தினால் யுத்தவீரர் கள் ஸிம்மத்தால் ஆக்ரமிக்கப்பட்ட யானையரசுகள்போலப் பயத்

தால் பீடிக்கப்பட்டவர்களும் அவனுடைய அம்புகளால் நன்முகத் தபிக்கச்செய்யப்பட்டவர்களுமாகி ரதங்களிலிருந்து உடனே விழுந் தார்கள். மிகச்சிவந்தகண்களையுடையவனும் இந்த்ரனுடைய செய்கைபோன்ற செய்கையுடையவனுமான பார்த்தன், மறுபடி யும் பன்னிரண்டு பாணங்களால் கர்ணனையும் ஒரு ரதத்தேதாடிருக் கின்ற துச்சாஸனனையும் நடுக்கமடையச்செய்து, ஓடுகின்ற அவர் களைப்பார்த்தான். பார்த்தனுடைய அம்புகளால் மிகுந்த தாபத் தையடைந்த கர்ணன், துர்யோதனனையும் துஷ்ப்ரஸஹனையும் பார் த்து, 'அர்ஜுனன் இதோகாணப்பட்டுவிட்டான். நாம் விரைவா கத்திரும்பிச்செல்வோம். இவ்விடத்தினின்றும்போய் நாம்நன்மை யைத் தேடிக்கொள்வோம். ஐயா! நம்மால் இவ்விடத்தில் அர்ஜு னன் இப்பொழுது காணப்பட்டான். ஆதலால், உன்னுல்செய்யத் தக்க காரியம் நிறைவேற்றப்பட்டதென்றே நான் எண்ணுகிறேன். ஸவ்யஸாசியானவன் மறுபடியும் கானகம் செல்லவேண்டும். அவர்களுடைய ப்ரதிஜ்ஞாகாலமானது நிறைவேறவில்லையென்று நான் எண்ணுகிறேன்' என்று கூறினன். யுத்தத்தில் பாண்டவ ரல் பாணங்களால் பீடிக்கப்பட்டவர்களான அந்தக்கௌரவவீரர் கள் பிறகு ஒருவரைஒருவர் அழைத்துக்கொண்டு ஓடினர்கள். கர்ணன், 'இதோ ஜிஷ்ணு வருகிறான். துர்யோதனனை எல்லாப் பக்கத்திலும் சூழ்ந்துகொண்டு செல்வோம். எல்லா அஸ்த்ரங் களையும்அறிந்தவனும் கஜயூதபதிபோல ப்ரகாசிக்கின்றவனும் தகுந்தசமயத்தில் பகைவரைப் போரில்அடிப்பவனுமான இந்தப் பார்த்தன் மறுபடியும் நம்மிடம் வந்துவிட்டான். பரதஸ்ரேஷ் டர்களுக்குஆதாரமான துர்யோதனனை ரக்ஷிக்கவேண்டும்' என்றுகூறினன். காலனைப்போலச் சஸ்த்ரங்களை(க்கையில்)எடுத் துவிரைவாகவருகின்ற பார்த்தனைக்கண்டு துர்யோதனன்பயத்தினல் மிகவும்பீடிக்கப்பட்டு த்ரோணரையும் கர்ணனையும் க்ருபரையும் பீஷ்மரையும் சரணமடைந்தான். மிகவும்பயந்து (த்ரோணர் முத லானவர்களைச்) சரணமடைகின்றவனும் பாணத்தினல்அடிக்கப் பட்டு ரக்தத்தைக்கக்குகின்றவனுமான அந்தத்துர்யோதனனைப் பார்த்து, பகைவர்களுடையபோரைஏற்பவனும் அம்பறுத்தூணி களுள்ளவனுமான கிரீடியானவன், ப்ரீதியுள்ளமனத்துடன் பின் வருமாறு கூறலானன்.

'(துர்யோதன!) உலகத்தில் (பரவியிருக்கின்ற) பெயரையும் புகழையும்இழந்து யுத்தத்தினின்றுதிரும்பி ஏன் ஓடுகிறாய்? அடிக் கப்பட்ட உன்னுடைய வாத்யங்கள் யுத்தத்தினின்று ஓடினஉன்னை ஆனந்தப்படுத்தமாட்டா. இப்பொழுது அவ்விதமான நீ அகண்ட

மானபூமியையும் வாகனங்களையும் வஸ்த்ரங்களையும் போஜனங்களையும் நல்லவாசனையுள்ள சந்தனங்களையும் அனுபவிக்கப்போகிறதில்லை. நீ யுத்தத்தினின்று திரும்பிஓடினால் பொன்மாலைகளையும் குண்டலங்களையும் வைடூர்யத்தினால் செய்யப்பட்ட ஹாரங்களையும் அனுபவிப்பாயா? ஏ! பாவி! போரினின்றுநழுவின உனக்குச் சங்கத்தின்த்வனிகளும் இப்பொழுது ஆனந்தத்தை உண்டுபண்ணுகின்றவை ஆகா. ராஜபுத்ர! யுத்தத்தைவிட்டு ஓடுகின்றஉனக்கு உத்தமமான சந்தனமும் இனியசொற்களுள்ள உத்தமஸ்த்ரீகளும் இம்மையிலும் மறுமையிலும் போகத்தின்பொருட்டுப் பயன்படார்கள். நான் யுதிஷ்டிரருடைய ஆஜ்ஞையைச்செய்பவன்; குந்தியினுடைய மூன்றுவது புத்ரன்; போரில் உறுதியாகநிற்பவன். த்ருதராஷ்ட்ரகுமார! அதற்காக நீ திரும்பி முகத்தைக் காட்டு. அரசர்களுடைய நடக்கையை நினைத்துப்பார். இந்தப்பூமியில்உனக்குத் [1]துர்யோதனன் என்னும் இந்தப்பெயர் பொருளில்லாததாக முதலிலே இடப்பட்டது. மோசத்தையே தலைமையாகப்பற்றியநீ [2]ஸுயோதனனுயிருந்தும் பெயரினல்மட்டும் துர்யோதனனென்று ப்ரஸித்திபெற்றிருக்கிறாய். இப்போது சண்டையைவிட்டு ஓடுகிற உனக்குத் துர்யோதனனுயிருக்குந்தன்மை இல்லையே? துர்யோதன! உனக்கு முன்புறத்திலாவது பின்புறத்திலாவது ரக்ஷகனை நான் காணவில்லை. குருகுலத்தில் பிறந்தவர்களுள் சிறப்புற்றவீரனே! என்னல் அம்பின்வலிமையினல் தபிக்கச்செய்யப்பட்ட ப்ராணனைப் போரினல் அடைய விரும்பு' என்று கூறினன்.

அறுபத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் பீஷ்மர்முதலியோரால் காக்கப்பெற்று மறுபடியும் போருக்குவந்ததும், அர்ஜுனன் அவர்களோடு நெடுநேரம் போர் புரிந்து ஸம்மோஹனஸ்த்ர ப்ரயோகஞ்செய்து அவர் களாடைகளைக் கவர்ந்துகொண்டு பீஷ்மர்முதலியோரை அம்புகளால் வணங்கியதும்.)

மஹாத்மாவான அந்த அர்ஜுனனல் யுத்தத்திற்காக அழைக்கப்பட்ட அந்தத் துர்யோதனனே, அதிகமதங்கொண்டயானை அங்குசத்தினல் திருப்பப்படுவது போலக் கூர்மையுள்ள வாக்கினல் திருப்பப்பட்டான். பிறகு, அதிரதனும் அதிகபலமுள்

---

1 பிறரால் எதிர்த்துப்போர்செய்வதற்கு அரியவன்.

2 பிறரால் எதிர்த்துப்போர்செய்ய எளியவன்.

ளவனுமான அந்தத்துர்யோதனன் மஹாரதனை அர்ஜுனனுல் வாக்கினுல் தூண்டப்பட்டு (அதைப்) பொறுமல் உள்ளங்காலால் மிதிக்கப்பட்ட ஸர்ப்பம்போலத் தேருடன் திரும்பினன். பிறகு, துர்யோதனன், கோபமுற்று உத்தமமான வில்லை நாணெலிசெய்து கொண்டு அதிகமான தைர்யத்தை அடைந்து தனஞ்சயனைப் பார்த்து, 'பரதகுலத்தில் உதித்தவனே! அப்படிப்பட்ட நான் கோபங்கொண்ட இந்த்ரனிடத்தினின்றும்கூட இவ்விதமான யுத்தத்தில் பயப்படமாட்டேன். ஓ! நரஸ்ரேஷ்ட! மிக்கவிசாலமான ராஜ்யத்தையும் தனங்களையும் ஸுகங்களையும் அனுபவித்துவிட்டு, யுத்தஸமயத்தில் என் நான் ஓடவேண்டும்?' என்று மறுமொழி கூறினன். பரதகுலத்தில் உதித்தவரே! துர்யோதன மஹாராஜன் இவ்வாறுசொல்லிவிட்டு அங்குசத்தினுல் குத்தப்பட்ட யானைபோல வேகமுள்ளகுதிரைகளுடன் திரும்பி எதிர்த்துப் போர்புரிந்தான். உடலில்மிதிக்கப்பட்டதும் பொறுமையுள்ளதும் வில்லைப்போல வளைந்ததுமான ஸர்ப்பம்போன்ற துர்யோதனன் ரதத்தோடு ரதத்தைச்சேர்த்துப் பாண்டவனோடு போர்புரிந்தான். புஜபலமுள்ளவனும் நாணேற்றப்பட்டவில்லுள்ளவனுமான கர்ணன், திரும்பிவருகின்ற துர்யோதனனைக்கண்டு திரும்பிவந்து வலப்பக்கத்தில் நின்றுகொண்டு அசைவற்றிருக்கின்ற எல்லா அங்கங்களுமுள்ள அவனைப் பார்த்தனிடத்தினின்று பாதுகாத்தான். காந்தாரராஜனை சகுனியும் எல்லா அஸ்த்ரங்களையும் அறிந்தவர்களுள் உத்தமரான அப்ரவத்தாமாவும் ஆகிய இரண்டு வீரபுருஷர்களும் திரும்பிவந்து துர்யோதனனை அடைந்து இடப்பக்கத்தில்நின்று யுத்தத்தில் அவனைப் பார்த்தனிடமிருந்து பாதுகாத்தார்கள். பிறகு, சிறந்த கைகளுள்ளவரும் நாணேற்றப்பட்ட வில்லுள்ளவரும் சந்தனுபுத்ரருமான பீஷ்மர் பொற்கச்சைகள்கட்டிய குதிரைகளை விரைவாக (நடத்திக்கொண்டு) திரும்பிவந்து மேற்பக்கத்தினின்று துர்யோதனனைப் பார்த்தனிடத்தினின்றும் பாதுகாத்தார். த்ரோணர், க்ருபர், விவிம்சதி, துச்சாஸனன் ஆகிய எல்லாரும் விரைவாகத்திரும்பி முன்னிலையில்நின்று அம்புகளைத் தொடுத்துத் துர்யோதனனிமித்தமாக (அர்ஜுனனை) விரைவாக எதிர்த்தார்கள். குந்திபுத்ரனும் மிக்கவன்மையுள்ளவனுமான தனஞ்சயன் (யுத்தத்துக்காகத்) திருப்பப்பட்டவைகளும் பூர்ணப்ரவாஹங்கள் போன்றவைகளுமான எல்லாஸைன்யங்களையுங்கண்டு, ஸூர்யன் எதிரில்வருகின்றமஹாமேகத்தைத் 1தபிக்கச்செய்வதுபோல (அவற்றைத்) தபிக்கச்செய்தான். அவர்

1 வேறுபாடம்.

கள் பார்த்தனை நான்குபுறங்களிலும் சூழ்ந்துகொண்டு திவ்யாஸ்த்ரங்களை எடுத்து எதிர்த்துவந்து, மேகங்கள் 1 ஜலக்கூட்டங்களை மலையின்மீது பொழிவதுபோல, அம்புகளனைத்தையும் (அவன்மீது) பொழிந்தார்கள். பிறகு, காண்டீவத்தை வில்லாக உடையவனும் பகைவரைப் போரில் எதிர்ப்பவனுமான அர்ஜுனன் அந்தக்கௌரவஸ்ரேஷ்டர்களுடைய அஸ்த்ரத்தை அஸ்த்ரத்தால் தடுத்து இந்த்ரனால்கொடுக்கப்பட்டதும்(பகைவரால்) தடுக்கமுடியாததுமான ஸம்மோஹனமென்கிற வேறோர் அஸ்த்ரத்தை ப்ரயோகித்தான். பிறகு, பார்த்தன், மஹாகோரமும் கூர்மையுமுள்ளவைகளும் உறுதியான அடியுள்ளவைகளுமான அம்புகளால் திசைகளையும் மூலத்திசைகளையும் மறைத்துவிட்டுக் காண்டீவத்தினுடைய சப்தத்தினால் அவர்களுடைய மனங்களையும் பெரும்படையையும் மிக்கதுன்பமடையும்படி செய்தான். பிறகு, பகைவர்களைக்கொல்பவனை பார்த்தன், மறுபடியும், பயங்கரமும் கம்பீரமுமானசப்தமுள்ள மஹாசங்கத்தை இருகைகளாலும் பிடித்து மூலத்திசைகளும் திசைகளும் ஆகாயமும் பூமியும் எதிரொலியிடும்படி ஊதினன். துர்யோதனனுடைய ஸைன்யத்திலுள்ள போர்வீரர்கள், ஸம்மோஹனஸ்த்ரத்திலிருந்து உண்டான அம்புக்கூட்டங்களால் தேகமழிந்து கீழேவிழுந்து பலரும் வேகமும் ஒழிந்து சுவர்போலக் கைகாலசைவற்று நின்றார்கள். பார்த்தனால் உண்டுபண்ணப்பட்ட சங்கநாதத்தினால், மிகுந்த மதிமயக்கத்தை அடைவிக்கப்பட்ட அந்தக்கௌரவவீரரனைவரும் அப்பொழுது (பகைவர்களால்) அணுகமுடியாதனவானவிற்களைப் போட்டுவிட்டு மதிமயக்கத்தை அடைந்தார்கள். பிறகு, பார்த்தன், பகைவர்கள் ப்ரஜ்ஞையை இழந்திருக்கும்பொழுது, உத்தரையினுடைய வார்த்தையை நினைத்து விராடபுத்ரனைப்பார்த்து, ‘(உத்தர!) கௌரவர்கள் ப்ரஜ்ஞையை இழந்திருக்கிறகாலத்தில் நீ ரதத்தினின்று (இறங்கி அவர்களிடம்) போ. மனிதர்களுள் சிறந்தவீரனே! த்ரோணசார்யருடையதும் க்ருபருடையதுமான மிக்கவெண்ணிறமுள்ள வஸ்த்ரங்களையும் மஞ்சள்நிறமுள்ளதும் அழகியதுமான கர்ணனுடைய வஸ்த்ரத்தையும் அவ்வாறே த்ரோணபுத்ரருடையதும் துர்யோதனனுடையதுமான நீலவஸ்த்ரங்களையும் உரிந்துகொள். பீஷ்மருக்கு (மாத்ரம்) ப்ரஜ்ஞையானது அவ்விதமாகவே இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். இவர் என்னால்விடப்பட்ட (இந்த) ஸம்மோஹனஸ்த்ரத்தைத் தடுக்கும் விதத்தை அறிந்தவர். நீ இவருக்கு இடப்புறமாகக் குதிரைகளை

1 வேறுபாடம்.

நடத்து. மயக்கமில்லாதப்ரஜ்ஞையையுடையவர்களான நம்மால் இவ்வாறே செல்லத்தக்கது' என்று சொன்னான். ஐயா! பிறகு, மஹாத்மாவான விராடபுத்ரன் கடிவாளங்களைவிட்டுவிட்டுத் தேரினின்று கீழேகுதித்து மஹாரதர்களுடைய பற்பலவிதமானவைகளும் ஆச்சர்யகரமான நிறமுள்ளவைகளுமான வஸ்த்ரங்களையும் எடுத்துக்கொண்டு பெரியவையும் மெல்லியவையுமான வெண்பட்டுக்களையும் பலவகையான மனத்துக்கின்பம்தரத்தக்க பட்டுவஸ்த்ரங்களையும் ஹாரங்களையும் ராஜாக்களுடைய மணிமயமானபூஷணங்களையும் ஸ்வர்ணமயமான கண்டாபரணங்களையும் மாணிக்கத்தினால்செய்யப்பட்ட தோள்வளைகளையும் கங்கணங்களையும் அரசர்களுடைய மற்ற மணிமயமானபூஷணங்களையும் மஹாரதர்களுடையவஸ்த்ரங்களையும் கவர்ந்துகொண்டு விரைவாக மீண்டும் தனது ரதத்தின்மீதேறினான். ப்ரதிமைகள்போல (கைகால் அசைவற்றவர்களும்) ஸம்மோஹனஸ்த்ரத்தினால் ப்ரஜ்ஞையிழந்தவர்களை ஒத்தவர்களுமான அரசர்களனைவரையுங்கண்டு பார்த்தன் மூக்கினுனியில் கைவிரலைவைத்துக்கொண்டு வியப்புற்றமனத்துடன் சிரித்தான். பிறகு, விராடபுத்ரன் ஸ்வர்ணமயமானவர்களுள்ள அந்த நான்குசிறந்தகுதிரைகளையும் ஓட்டினான். அந்த வெண்மையானகுதிரைகள் போர்க்களத்தினிடையினின்று அர்ஜுனனைத்தாங்கிக்கொண்டு அந்தப்பகைவர்படையைத் தாண்டிசென்றன. அவ்வாறுசெல்லுகின்ற புருஷர்களுள்சிறந்தவீரனை அர்ஜுனனைப் பலசாலியானபீஷ்மர் பாணங்களால் அடித்தார். அந்த அர்ஜுனனும் பீஷ்மருடையகுதிரைகளைக்கொன்று, பத்துப்பாணங்களால் பீஷ்மரையும் அடித்தான். பிறகு, மங்களகரமானவில்லைத்தாங்கிய அர்ஜுனன், யுத்தத்தில் பீஷ்மரைவிட்டுவிட்டு அவருடையஸாரதியை அடித்துத் தேர்க்கூட்டங்களினிடையிலிருந்து விடுபட்டு ராஹுவைப்பிளந்து (ப்ரகாசிக்கின்ற) ஸூர்யன்போல நின்றான்.

பிறகு, புருஷர்களுள்சிறந்தவீரனை அந்தத்துர்யோதனன், ப்ரஜ்ஞையையடைந்து, மஹேந்த்ரனுக்குஒப்பானவனும் புருஷர்களுள்சிறந்தவீரனுமான பார்த்தனை யுத்தத்தினின்று விடுபட்டவனைக்கண்டு, விரைவுடன் (பீஷ்மரைப்பார்த்து,) 1 'இந்த அர்ஜுனன் உம்மிடத்தினின்று மிகுந்தப்ரயாஸத்தால் விடுபட்டான். விடுபடாவண்ணம் அவனை(ப்பிடித்து) நன்றுகக் கட்டுங்கள்' என்று சொல்ல, பீஷ்மர் அவனைப்பார்த்து உரக்கச் சிரித்துக்

1 'இந்த அர்ஜுனன் எவ்விதம் உங்களை விட்டான்? விடாமல் கொன்றுவிடுவனே' என்று சொன்னன் என்பது வேறுபாடம்.

கொண்டு, '(துர்யோதன!) அதிகமாக ஒய்வனடைந்து அம்புகளையும் ஆச்சர்யகரமானவில்லையும் (கீழே) விட்டுவிட்டு நீ பேசாமலிருந்தாயல்லையோ? உன்புத்தி எங்கேபோய்விட்டது? உன்னுடைய வீர்யம் எங்கேபோய்விட்டது? பீபத்ஸுவானவன் கொடியசெய்கையைச்செய்வதற்கு ஒருபோதும் ஸமர்த்தனல்லன். இவனுடைய மனமானது பாபத்தில் பற்றில்லாதது. இவன் [1]ஸ்வர்க்கலோகம் கிடைப்பதாயிருந்தாலும் தர்மத்தைவிடமாட்டான். ஆதலால், நாமனைவரும் இந்தயுத்தத்தில் இவனால் கொல்லப்படவில்லை. கௌரவர்களுள் சிறந்த வீரனே! சீக்கிரம் குருதேசத்தைக்குறித்துச் செல். பார்த்தன் பசுக்களை ஓட்டிக்கொண்டு (மத்ஸ்யதேசம்) போகட்டும். நீங்கள் ஸம்மோஹனஸ்த்ரத்தினால் மதிமயக்கமுற்றிருந்தீர்கள். (ஆதலால், அர்ஜுனன்) பொருளை அபகரித்ததை நீங்கள் அறியவில்லை. ராஜனே! விராடபுத்ரனுடைய வஸ்த்ரங்களும் ஆபரணங்களும் அபகரிக்கப்பட்டனவென்று அறிகிறேன். வேந்தர்களனைவரும் மதிமயக்கமுற்றிருக்குங்காலத்தில், அந்த அர்ஜுனன் (அரசர்களைக்) கொல்லவிரும்பினால் கொன்றேயிருப்பான். புருஷர்களுள்வீரனும் இந்த்ரகுமாரனுமான அர்ஜுனன் தர்மபுத்தியுள்ளவனாதலால் உங்களை அப்பொழுது கொல்லவில்லை. பார்த்தன் கௌரவர்களோடு ஸந்தியைச்செய்யவிரும்பி உங்கள் புண்யவிசேஷத்தால் உங்களைக்கொல்லவில்லை. ஆகையால், நீங்கள் கொல்லப்பட்டவர்கள்போக மிகுதியிருக்கும் இந்தஸைனிகர்களோடு ஹஸ்திநபட்டணத்துக்குப் போய்ச்சேருங்கள்' என்று சொன்னார். துர்யோதனராஜன் தனக்கு ஹிதமாயிருக்கும் அந்தப் பிதாமஹருடையவாக்யத்தைக்கேட்டுப் புகழ்ந்து யுத்தத்தில் விருப்பமற்று அதிகோபங்கொண்டு பெருமூச்சுவிட்டுப் பேசாமலிருந்தான். (கௌரவர்கள்)அனைவரும் பீஷ்மருடைய அந்தவாக்யத்தைக்கேட்டுத் தனஞ்சயனிறை நெருப்பை அதிகமாக வ்ருத்தி அடைகிறதாக(க்கண்டு) அந்தத்துர்யோதனனைப் பாதுகாத்துக் கொண்டு (ஹஸ்திநபட்டணம்) செல்லுவதற்கே புத்தியைச் செலுத்தினர்கள். புறப்பட்ட அவர்களைப்பார்த்து, ப்ரீதியுள்ள மனமுடையவனும் ஸமர்த்தனும் எல்லாக்கௌரவர்களுள்ளும் மிகச்சிறந்தவனும் வீரனுமான தனஞ்சயன்,(யுத்தத்துக்கு)அழைத்துக்கொண்டே காண்டீவத்தினுடைய சப்தத்தினால் உலகத்தை எதிரொலியிடும்படிசெய்துகொண்டு ஒருமுகூர்த்தகாலம் பின் தொடர்ந்தான். பலசாலியும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான பார்த்தன், சிதறிப்போன வாகனங்களும் கொடிகளும்

---

1 'மூன்றுலகங்களும்கிடைப்பதாக இருந்தாலும்' என்பது வேறுபாடம்

விற்களுமுள்ள அந்தக்கௌரவர்களுடைய சேனைகளைப்பார்த்து அட்டஹாஸஞ்செய்துகொண்டு சங்கத்தைப் பலத்துடன்உரக்க ஊதினன். பிறகு, அவர்கள் நெருங்கின சங்கத்வனியையும் ஆகாயத்திலுள்ள த்வஜத்தினுடைய சப்தத்தையும் காண்டீவத்தின் சப்தத்தையும் அடிக்கடி கேட்டுப் பயந்தவர்களாகி எல்லாத்தனத்தையும் இழந்துவிட்டுச் சென்றார்கள். மஹாத்மாவும் நிகரற்றகாந்தியுள்ளவனும் சிறந்தமனமுள்ளவனுமான தனஞ்சயன், அப்பொழுது, அந்தக்கௌரவர்களை மிகவும் தோல்வியடையச் செய்துவிட்டுப் பசுக்கூட்டத்தையெல்லாம் முழுதும் திருப்பிக் கொண்டு (வெகு)தூரம் அவர்களைப் பின்தொடர்ந்து (அவர்களிடம்) விடைபெற்றுக்கொண்டு பாணங்களால் எல்லா ஆசார்யர்களையும் அபிவாதனம்பண்ணி அம்புகளோடு திரும்பினன். மஹாத்மாவும் வீரனுமான அர்ஜுனன், பிதாமஹரும் சந்தனுவின்குமாரருமான பீஷ்மரை இரண்டுபாணங்களால் அபிவாதனஞ்செய்து, த்ரோணரையும் க்ருபரையும் பூஜிக்கத்தக்கவர்களான கௌரவர்களனைவரையும் போர்க்களத்தில் பாணங்களால் அபிவாதனஞ் செய்து, 'ராஜவம்சத்தில் பிறவாதவனை (உனக்கு) இந்தக்கிரீடத்தால் யாதுபயன்? உன்னால் இந்தக்கிரீடம் எப்பொழுதும் தரிக்கத்தக்கதன்று' என்று சொல்லி, துர்யோதனனுடைய சிறந்தரத்னமிழைக்கப்பட்ட கிரீடத்தையும் அம்புக்கூட்டங்களால் பிளந்தான். பிறகு, பூமியில் தள்ளப்பட்டதும் ரத்னமிழைத்ததுமான அந்தக்கிரீடத்தை(க்கண்டு)மத்ஸ்யராஜகுமாரனை உத்தரன் மனக்களிப்புற்றவனனன். மதப்பெருக்குள்ள யானைபோன்றவனும் சத்ருக்களைஜயித்துத் திரும்பி வருகின்றவனும் அந்தப்பசுக்களைஜயித்துக்கொண்டு எதிராகவருகின்றவனுமான தனஞ்சயனைக்கௌரவர்கள் (பார்ப்பதற்கும்) சக்தியற்றவர்களாகிச் சென்றார்கள். லிம்மம் போன்றவனும் சஸ்த்ரங்களைப்பிடித்தவனும் பசுக்களைஜயித்து எதிராகச்செல்லுகின்றவனுமான தனஞ்சயனை அந்தஅரசர்கள் நடுப்பகலைஅடைந்திருக்கின்றசூர்யனைப்போலப் பார்ப்பதற்கும் சக்தியற்றவர்களானார்கள். யுத்தத்தில் அதிகபலமுள்ளவனும் மதப்பெருக்குள்ள யானைபோன்றவனும் மிகுந்தஸந்தோஷமுள்ளவனும் தேராளிகளுள்சிறந்தவனுமானபார்த்தன், (கௌரவர்களை) ஜயித்துச் சென்றிறமான அந்தவஸ்த்ரங்களையும் அபஹரித்துக்கொண்டு, விராடபுத்ரனைப்பார்த்து, '(உத்தர!) குதிரைகளைத் திருப்பு. உன்னுடைய பசுக்கள் ஜயிக்கப்பட்டன. பகைவர்கள் ஓடிவிட்டார்கள். ஸந்தோஷமுடையவனாக நீ பட்டணத்தில் புகுவாய். உன்னுடைய விஜயமானது இப்பொழுது (பட்

டணத்தில்) சிக்கிரமாகக்கோஷிக்கப்பட்டும். உன்னுடைய சரீரத்திற் சந்தனம் பூசிக்கொள். புஷ்பமாலைகள் அணிந்துகொள். மிக்கஸந்தோஷமுள்ள உன்னைப்பார்த்து இப்பொழுது உன் தாயாரும் பந்துக்களும் ஸந்தோஷமடையட்டும்'என்று கூறினன்.

அறுபத்தெட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனைப் பாண்டவரின் உண்மையை வெளியிட வேண்டாமென்றுசொல்லி ப்ருஹன்னளை வேஷத்துடன் அவனுக்கு ஸாரதியஞ் செய்ததும், உத்தரன் அர்ஜுனன்ஏவலால் தன்வெற்றியை அறிவிக்தும்படி நகரத்துக்குத் தூதனுப்பியதும்.)

காளையின்கண்போன்ற கண்ணையுடையவனை அந்த அர்ஜுனன், பிறகு, போரில் 1 கௌரவர்களைஜயித்து விராடனுடைய பெரிய பசுமந்தையை அப்பொழுது மீட்டுக்கொண்டுவந்தான். த்ருதராஷ்டிரகுமாரர்களனைவரும் முழுதும் தோற்றுப்போன பிறகு, அனேக கௌரவஸைனிகர்கள் நழையமுடியாத காட்டினின்று வெளிப்பட்டுப் பயத்தினால் மிகநடுக்கமுற்றமனத்துடன் ஆங்காங்கு (பார்த்தனுக்கு) அருகில்வந்தார்கள். அப்பொழுது, அவர்கள், அவிழ்ந்த தலைமயிருடையவர்களும் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு நிற்கின்றவர்களுமாகக் காணப்பட்டார்கள். பசியினாலும் தாகத்தாலும் களைப்புற்றவர்களும் வேறுதேசத்தை அடைந்தவர்களும் ப்ரஜ்ஞைனையை இழந்தவர்களுமான அவர்கள் அனைவர்களும் இருகரங்களையுங்குவித்துக்கொண்டு, 'பார்த்த! நாங்கள் என்னசெய்யக்கடவோம்? நாங்கள் மனத்தினுள் அடங்கியிருக்கின்ற ப்ராணனை யாசிக்கிறோம். அர்ஜுன! நாங்கள் உனக்கு அடிமைகள்; உன்னால் ரக்ஷிக்கப்படத்தக்கவர்கள்; அனுதர்கள்' என்று சொன்னார்கள். அர்ஜுனன், 'நாதனற்றவர்களையும் துக்கித்தவர்களையும் தைன்யமுற்றவர்களையும் இளைத்தவர்களையும் பிராயமுதிர்ந்தவர்களையும் தோல்விஅடைந்தவர்களையும் சஸ்த்ரங்களை (க்கீழே) வைத்தவர்களையும் ஆசையற்றவர்களையும் அஞ்சலிசெய்தவர்களையும் நான்கொல்லேன். நீங்கள் (என்னிடத்தில்) நம்பிக்கையுள்ளவர்களும் பயமற்றவர்களுமாகி மரணமற்றவர்கள்போலச் செல்லுங்கள். என்னுடைய பாததூளியி

---

1 வேறு பாடம்.

னுடைய ஸம்பந்தத்தினல் நீங்கள் நெடுங்காலம் பூமியில் ஜீவித்திருங்கள்' என்று சொன்னன். அந்தப்போர்வீரர்கள் ஒன்று சேர்ந்து அந்த அர்ஜுனனுடைய அபயவார்த்தையைக்கேட்டு, அவனை ஆயுளையும் பெயரையும் புகழையும் [1] கொடுக்கக்கூடிய ஆசீர்வாதங்களால் ஸந்தோஷப்படுத்தினர்கள். பிறகு, கௌரவர்கள் (தங்கள்தேசத்துக்குத்) திரும்பினர்கள். (போரில்) கொல்லப்பட்டவர்கள் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். இவ்வாறு அவ்விடத்தில் அந்தஅர்ஜுனனல் அபயங்கொடுக்கப்பட்டவர்கள் பிறகு தனஞ்சயனை நமஸ்கரித்துக் குருதேசத்தைக்குறித்து எல்லாப்பக்கத்தாலும் சென்றார்கள்.

சிறந்த கார்யங்களைச் செய்கின்றவனும் பகைவர்களைக் கொல்லுகின்றவனுமான அந்தப்பார்த்தன் ஒருவனுகவே (அவ்விதமான) சிறந்த கார்யத்தைச்செய்து பகைவர்களைக்கொன்று கௌரவஸைன்யத்தைத் துரத்திவிட்டு வர்ஷாகாலத்தில் மகாமேகம்போல (விராடநகரத்தைக்குறித்துச்) சென்றன். மன்னரே! சத்ருக்களைக்கொல்பவனை அர்ஜுனன், மத்ஸ்யராஜனுடையகுமாரனை நன்குபிடித்துக்கொண்டு, 'அப்பனே! உன் பிதாவினுடைய ஸமீபத்தில் பார்த்தர்களனைவரும் வஸிக்கிறார்களென்பது உனக்குத்தெரியுமன்றே? நீ நகரத்தில்ப்ரவேசித்து, அவர்களைக்குறித்து (உன்பிதாவினிடம்) சொல்லாதே. (சொன்னல்) அந்தமத்ஸ்யராஜர் பயந்து உயிரை இழந்தாலும் இழப்பர். நீ நகரத்தில் புகுந்து, 'என்னலேயே அந்தக்கௌரவசேனை ஜயிக்கப்பட்டது. என்னலேயே பசுக்கள் சத்துருக்களிடமிருந்து திருப்பப்பட்டன' என்று இவ்விதமானகார்யம் உன்னலேயே செய்யப்பட்டதாகச் சொல்லிக்கொள்' என்று சொன்னன். உத்தரன், 'ஸவ்யஸாசியே! உம்மால் செய்யப்பட்டகார்யம் மறைக்கமுடியாதது. அந்தக்கார்யத்தைச் செய்வதற்கு எனக்குச் சக்தியில்லை. நீர் சொல்லும்படி என்னைக் கட்டளையிடாமலிருக்கிறவரையில் என் பிதாவினிடத்தில் உம்மைப்பற்றி நான் சொல்லப்போகிறதில்லை' என்று மறுமொழி கூறினன். பாணங்களால் காயப்படுத்தப்பட்ட அங்கங்களுள்ள அந்த அர்ஜுனன் பகைவர்களுடைய சேனையை விரைவாக ஜயித்துக் கௌரவர்களுடைய எல்லாப்பொருளையும் அபகரித்துக்கொண்டு மறுபடியும் ஸ்மசானம்சென்று அந்தவன்னிமரத்தருகில்வந்துநின்றன். பிறகு, நெருப்புக்குஒப்பான அந்தப் பெரியவானரமானது பூதங்களோடும் ஆகாயத்தில் கிளம்பியது. அவ்விதமாக ஏற்படுத்தப்பட்ட

---

1 வேறு பாடம்.

அந்த மாயையும் அந்தர்த்தானமடைந்தது. மறுபடியும், ரதத்தில் ஸிம்மக்கொடியைக் கட்டினன். போரில் (பகைவரை) அடிப்பவனும் மஹாத்மாவும் மத்ஸ்யராஜனுடைய குமாரனுமான அந்த உத்தரன் குருஸ்ரேஷ்டர்களான பாண்டவர்களுடைய அவ்விதமான ஆயுதங்களையும் தூணீரங்களையும் த்வஜங்களையும் (அந்த வன்னிமரத்தில்) வைத்துவிட்டு நகரத்தில் புகுவதற்காக ஸாரதியான கிரீடியுடன் புறப்பட்டான். பகைவர்களைக் கொல்லுகிறவனை பார்த்தன் மிக உத்தமமான காரியத்தைச்செய்து பகைவரைக்கொன்றுவிட்டு மறுபடியும் அவ்வாறே ப்ருஹன்னளாவேஷம் பூண்டு உத்தரனுடைய (குதிரைகளின்) கடிவாளங்களைப் பிடித்தான். (இவ்வாறு) அந்தப்பார்த்தன், ப்ருஹன்னளாவேஷத்தைத் தரித்துக்கொண்டு, பிறகு மத்ஸ்யராஜனுடைய நகரத்தில் ப்ரவேசிப்பதற்காகச் சென்றனன். பிறகு, அந்தக் கௌரவர்கள் தோல்வியடைந்து ஓய்ந்தவர்களும் தூணியை இழந்தவர்களும் (யுத்தத்தினின்று) திரும்பினவர்களுமாகி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே (ஹஸ்திநபட்டணத்தைநோக்கிச்) சென்றார்கள்.

அர்ஜுனன் (விராடநகரத்தின்) வழியையடைந்து (உத்தரனைப்பார்த்து), 'ராஜபுத்ர! இந்தத்தனங்கள் முழுமையையும் நீ பெற்றுக்கொள். சிறந்தகைகளுள்ளவனே! வீரர்களான கோபாலர்களுடன் பசுக்கூட்டங்களையும் பெற்றுக்கொள். குதிரைகளைத் தண்ணீர்குடிக்கச்செய்து குளிப்பாட்டித் தேறுதலடையச் செய்துவிட்டு, பிறகு, பிற்பகலில் விராடநகரத்தைக்குறித்துச் செல்வோம். தூதர்களையும் கோபாலர்களையும் ப்ரியத்தைச் சொல்வதின்பொருட்டு நீ விரைவாக அனுப்பு. அவர்கள் உன்னுடைய ஜயத்தை நகரத்தில் பறையறையச்செய்யட்டும்' என்று சொன்னன். பிறகு, உத்தரன் அர்ஜுனன் சொற்படியே விரைந்து தூதர்களைப் பார்த்து, '(தூதர்களே!) என்னுடைய ஜயத்தைச் சொல்லுங்கள். என்னால் அப்படிப்பட்ட கௌரவசேனையானது ஜயிக்கப்பட்டது. என்னால் பகைவரிடமிருந்து பசுக்கள் திருப்பப்பட்டனவென்று இவ்வாறு நீங்கள் இஷ்டப்படி நகரத்தில்சென்று இக்கார்யம் என்னால் செய்யப்பட்டதாகச் சொல்லுங்கள்' என்று கட்டளையிட்டான்.

அறுபத்தோன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(விராடன் த்ரிகர்த்தர்களைவென்று திரும்பிவந்து, உத்தரனைக் காப்பதற்காகச் சேனையை ஏவியதும், தூதர்கள் விராடனிடம் வந்து உத்தரனது வெற்றியைக் கூறியதும்.)

சேனைகளுக்கு நாதனை அந்த விராடன், (த்ரிகர்த்தவீரர்களிடத்திலிருந்து) பொருளை ஜயித்து ஸந்தோஷமுடையவனாகி நான்கு பாண்டவர்களோடும் நகரத்தில் ப்ரவேசித்தான். மஹாராஜன் யுத்தத்தில் த்ரிகர்த்தர்களை ஜயித்துத் தனித்திருக்கிற பசுக்களையும் திருப்பிக்கொண்டு பார்த்தர்களோடு ஜயலக்ஷ்மியினால் வரிக்கப்பட்டு விளங்கினன். ஆஸனத்தில் வீற்றிருப்பவனும் வீரனும் நண்பர்களுக்கு ப்ரீதியைவ்ருத்திபண்ணுகின்றவனுமான அந்த விராடனை ஜனங்கள் ப்ராம்மணர்களோடு (காண்பதற்கு) வந்தார்கள். அந்த மத்ஸ்யராஜனவன் அப்பொழுது ஸபையிலிருப்பவர்களால் பூஜிக்கப்பட்டு (அந்த) ப்ராம்மணர்களையும் அவ்வாறே ப்ரஜைகளையும் ஸந்தோஷிக்கச்செய்து அனுப்பினன். பிறகு, சேனைகளுக்குத் தலைவனும் மத்ஸ்யதேசத்துக்கு அரசனுமான அந்த விராடன், அனேக ஸ்திரீகளால் விளங்குகின்ற அழகான அந்தப்புரத்தில் ப்ரவேசித்து உத்தரனை அவ்விடத்தில் காணுமல், 'உத்தரன் எங்கேபோயிருக்கிறான்?' என்று (அங்குள்ளவர்களைக்)கேட்டான். அந்த அரண்மனையில் அந்தப்புரத்தில் ஸஞ்சரிக்கின்ற ஸ்த்ரீகளும் கன்னிகைகளும் மிக்க மனக்களிப்புற்று, 'கௌரவர்களால் பசுக்கூட்டம் கவரப்பட்டது. (பசுமந்தையைக்கவர்வதற்கு) வந்த அதிரதர்களான த்ரோணர், பீஷ்மர், க்ருபர், கர்ணன், துர்யோதனன், அஸ்வத்தாமா ஆகிய இந்த ஆறு ரதிகர்களையும் ஜயிப்பதற்காக மிகுந்த ரோஷத்துடன், பூமிஞ்சயன், ப்ருஹன்னளையைத் துணையாகக்கொண்டு அதிஸாஹஸத்தோடு ஒருவனுகவே புறப்பட்டுப் போயிருக்கிறான்' என்று கூறினர்கள். பிறகு, விராடன் போரில் (பகைவர்களை)அடிக்கின்றவனுனபுத்ரன் ஒரு ரதத்தோடு ப்ருஹன்னளையை ஸாரதியாகக்கொண்டு (யுத்தத்திற்காகச்) சென்றிருக்கிறனென்பதைக்கேட்டு மிகுந்தமனவருத்தமுற்றுச் சிறந்தவர்களான மந்த்ரிகளையெல்லாம்பார்த்து, '(மந்த்ரிகளே!) யுத்தத்தில் ஸாமர்த்தியமுள்ளவர்களானகௌரவர்களெல்லாரும்என்னுடைய புத்ரனை அவமதித்துவிட்டு லக்ஷம்பசுக்களையும் ஓட்டிக்கொண்டு போய்விட்

டார்கள். ஆதலால், த்ரிகர்த்தர்களால் காயப்படுத்தப்படாத என்னுடையபோர்வீரர்கள் உத்தரனைப் பாதுகாப்பதின்பொருட்டுப் பெரிதானசேனையினுல் சூழப்பட்டுச் செல்லட்டும்' என்று சொன்னன். பிறகு, விராடமஹாராஜன், தன் புத்ரனுடைய உதவிக்காக, விசித்ரமும் ஆச்சர்யகரமுமான ஆபரணங்களோடுகூடின கணக்கிலடங்காத குதிரைகளையும் யானைகளையும் ரதங்களையும் வாத்தியக்கூட்டங்களையும் விரைவாக அனுப்பினன். சேனைகளுக்கு நாதனும் மத்ஸ்யதேசத்தார்களுள் சிறந்தவனுமான அந்தவிராட ராஜன், (தேர் யானை குதிரை காலாள் என்னும்) நான்கு அங்கங்களுள்ள சேனையைப்பார்த்து, 'எவனுக்கு நபும்ஸகன் ஸாரதியாகச்சென்றிருக்கிறானே அவன் உயிரோடிருக்கமாட்டானென்று நான் எண்ணுகிறேன். நீங்கள் விரைவாக(ச்சென்று) குமாரன் உயிரோடிருக்கிறனு இல்லையாவென்று தெரிந்துகொள்ளுங்கள்' என்று விரைந்து கட்டளையிட்டான். தர்மநந்தனர், விராடன் கௌரவர்களால் நன்முகத்தபிக்கும்படி செய்யப்பட்டு மனவருத்தமுற்றிருப்பதை அறிந்து, அவனைநோக்கிச் சொல்லலானர்.

'அரசரே! இப்பொழுது ப்ருஹன்னளை ஸாரதியாயிருப்பாளாகில் உம்முடைய பசுக்களைப் பகைவர்கள் கவரமாட்டார்கள். அந்த (ப்ருஹன்னளை என்கிற) ஸாரதியினுல் ரதம்நடத்தப்பட்ட உம்முடையகுமாரன் யுத்தத்தில் எல்லா அரசர்களையும் ஒன்று சேர்ந்த எல்லாக்கௌரவர்களையும் அவ்வாறே தேவர்களையும் அஸுரர்களையும் ஸர்ப்பங்களையும் யக்ஷர்களையும் ஜயிப்பதற்கு ஸாமர்த்தியமுள்ளவன். கௌரவர்களும் மற்ற அரசர்களும், த்ரிகர்த்தர்கள் ஜயிக்கப்பட்டார்களென்பதைக்கேட்டு ஸர்வஸைன்யத்தினுலும் (யுத்தத்தில்) நிற்கமாட்டார்கள்' என்று சொன்னர். பிறகு, உத்தரனல் அனுப்பப்பட்ட அந்தத்தூதர்கள் அப்பொழுது சீக்கிரமாகச்சென்று விராடநகரத்தை அடைந்து ஜயத்தைத் தெரிவித்தார்கள். மந்த்ரிகளால்சூழப்பட்ட ராஜாவைப்பார்த்து (புத்ரனுடைய) மேலானவெற்றியையும் கௌரவர்களுடைய தோல்வியையும் அவ்வாறே உத்தரன் ஸமீபத்தில் வந்துகொண்டிருப்பதையும் சொல்லி, 'எல்லாப்பசுக்களும் ஜயிக்கப்பட்டன. கௌரவர்களும் தோல்வி அடைவிக்கப்பட்டார்கள். பகைவர்களைத் தபிக்கச்செய்பவனான உத்தரன், ஸாரதியோடு க்ஷேமமாயிருக்கிறன்' என்றும் சொன்னர்கள். கங்கர், 'அரசரிற் சிறந்தவரே! பாக்யத்தால் உமதுபசுக்கள் ஜயிக்கப்பட்டன. கௌரவர்களும் தோல்வி அடைவிக்கப்பட்டார்கள். பாக்யத்தால் உம்முடையகுமாரன் விஜயமுள்ளவனைக் கேட்கப்படு

கிறான். உம்முடையகுமாரன் கௌரவர்களை ஜயித்தானென்பதை நான் ஆச்சர்யமாக இப்பொழுது எண்ணவில்லை. எவனுக்கு ப்ருஹன்னளை ஸாரதியோ அவனுக்கு ஜயம் நிச்சயமே. தேவேந்த்ரனுடைய ஸாரதியான மாதலியும் ப்ரஸித்தமான பராக்ரமமுள்ள க்ருஷ்ணனுடைய ஸாரதியான தாருகனும் ப்ருஹன்னளைக்கு நிகராகார்' என்று கூறினர். பிறகு, விராடராஜன் நன்றாக மயிர்க்கூச்சலுற்று அதிகபராக்ரமமுள்ள அந்த உத்தரனுடைய விஜயத்தைக்கேட்டுத் தனங்களாலும் ரத்னங்களாலும் அந்தத்தூதர்களை எல்லாம் ஸந்தோஷப்படுத்தினன். அந்தப்பரிஜனங்கள் விலகினவுடன் தூதவாக்யத்தைக்கேட்டு உத்தரனுடையஜயத்தினல் ஸந்தோஷம்அடைந்த விராடன் (கிங்கரர்களைப் பார்த்துச்) சொல்லலானான்.

'ராஜமார்க்கங்கள் கொடிமரங்களால் அலங்கரிக்கப்பட்டனவாகச் செய்யப்படட்டும். எங்கும் தேவதைகளும் புஷ்பங்களால் அர்ச்சிக்கப்படட்டும். போர்வீரர்களுள் முக்யர்களான குமாரர்களும் நன்றாக அலங்கரிக்கப்பட்டதாவிகளும் எல்லாவாத்யங்களும் என்குமாரனை எதிர்கொண்டுபோகட்டும். என்புத்ரன் ஜயத்தை அடைந்திருக்குங்கால் பட்டணத்துஜனங்களும் மற்ற மனிதர்களும் 1 ஸ்த்ரீகளும் சுத்தவஸ்த்ரம் தரித்துக்கொண்டும் நல்லவாஸனைபொருந்தினசந்தனங்களையும் மாலைகளையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டும் மார்க்கத்தில் நிற்கட்டும். எல்லாத் தாவிகளும் என்புத்ரனுக்கு வழிபாடுசெய்யட்டும். நன்கு அலங்கரிக்கப்பட்டவர்களும் நல்லபாக்கியமுடையவர்களும் நல்லவேஷமுள்ளவர்களுமான ஸ்த்ரீகளும் கன்னிகைகளும் ஸைனிகர்களோடு கூடி என்புத்ரனுடைய வழியைக்குறித்துச் செல்லட்டும். கிங்கரர்கள் சீக்ரமாக மதயானையின்மீது ஏறிக்கொண்டும் மணிகளையும் பணவங்களையும் ஒலிக்கச்செய்துகொண்டும் எல்லாநாற்சந்திகளிலும் என்னுடையஜயத்தை நன்றாகச்சொல்லட்டும். உத்தரையும் அனேக ஆபரணங்களால்அலங்கரிக்கப்பட்டவளாகிக் குமாரிகளோடு, யுத்தத்தில் விஜயம்பெற்று (வருகின்ற) ஸகியான ப்ருஹன்னளையை எதிர்கொண்டுபோகட்டும்' என்றுசொன்னன். மஹாத்மாவான அந்தவிராடராஜனுடைய வார்த்தையைக்கேட்டுப் பட்டணத்துஜனங்கள் மிகவும் ஸந்தோஷத்துடன் மங்களத்ரவ்யங்களைக் கையில்கொண்டு அவ்விதமே செய்தார்கள். மாகதர்களும் எல்லா ஸூதர்களும் விராடனுடையநகரத்திலிருக்கின்ற எல்லா ஜனக்கூட்டங்களும் ஸந்தோஷ

1 ஒரு சொல் விடப்பட்டது.

முள்ளவர்களாகி விராடபுத்ரனை எதிர்கொண்டார்கள். பேரி வாத்யங்களும் தூர்யவாத்யங்களும் சங்கவாத்யங்களும் முழங்கின. சிறந்தவேஷங்களுள்ள ஸ்த்ரீஜனங்களும் எதிர்கொண்டார்கள். ஸ்துதிபாடகர்களுடைய ஸ்தோத்ரசப்தங்களும் பணவமுதலான வாத்யங்களுடையகோஷங்களும், அவ்வாறே, மற்ற வாத்யங்களின் சப்தங்களும் புல்லாங்குழல்களுடைய த்வனிகளும் தோன்றின. ஸ்த்ரீகள் வெண்கலத்தாளத்துடன் மதுரமாகப்பாடிக்கொண்டு நகரத்தினின்று புறப்பட்டார்கள். பொறுமையை ப்ரதானமாகக் கைக்கொண்டவர்களும் தலைமைபெற்றவர்களும் தமக்குரியவேதத்தையும் மற்றவேதங்களையும் முறைப்படி அறிந்தவர்களுமான அப்படிப்பட்ட ப்ராம்மணர்கள் மங்களகார்யத்தையும் மங்களகானத்தையும் ஜபத்தையும் ப்ரதானமாகக்கொண்டு அளவற்றவீர்யமுடையவனை விராடபுத்ரனை எதிர்கொண்டு சென்றார்கள்.

எழுபதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(விராடன் உத்தரனைப்புகழ்ந்ததும், யுதிஷ்டிரர் கௌரவர் ப்ருஹன்னளையால் தோல்வியடைவிக்கப்பட்டனரென்றதும், அவன் அவரைப் பாச்சிகையாலடித்ததும், அவர்காயத்திற்பெருகிய ரக்தத்தை ஸைரந்த்ரி தன்முன்றுனையிலேந்தியதும், விராடன் ரக்தமேந்தியகாரணத்தைவினவ அவள்விடை அளித்ததும்.)

மத்ஸ்யதேசத்துக்கரசனை விராடமஹாராஜன், சேனையையும் நன்றாக அலங்கரிக்கப்பட்ட கன்னியர்களையும் தாஸிகளையும் அனுப்பிவிட்டு, ஸந்தோஷமுடையவனைப் பின்வருமாறு வசனிக்கலானான்.

'ப்ராம்மணரே! த்ரிகர்த்தர்களும் கௌரவர்களுமாகிய எல்லோரும் யுத்தத்தில் என்னால் ஜயிக்கப்பட்டார்கள். ஸந்தோஷமடைந்திருக்கின்ற நாம் அந்தப்புரத்தை அடைந்து சூதுவினையாடுவோம்' (என்றுசொல்லி, ஸைரந்த்ரியைப்பார்த்து,) 'ஸைரந்த்ரி! பாச்சிகைகளைக்கொண்டுவா; ஆஸனத்தையும் எடுத்துப்போடு. நீ விசிறியை எடுத்துக்கொண்டு என்பக்கத்தில் ஸமீபத்தில் இரு' என்று சொன்னான். அவ்வாறு சொல்லுகின்ற அந்த விராடமஹாராஜனைப்பார்த்து, பாண்டுநந்தனரான தர்மபுத்ரர், '(வேந்தரே!) ஸந்தோஷமடைந்திருக்கின்ற சூதாடியோடு சூது

ஆடக்கூடாதென்று நாம் கேட்டிருக்கிறோம். (ஆதலால்,) இப்பொழுது ஸந்தோஷத்தோடுகூடின உம்முடன் சூதாடுவதற்கு நான் உத்ஸாஹமுடையவனாக இருக்கவில்லை. உமக்கு விருப்பமிருந்தால் ப்ரியமான (வேறுகார்யத்தை) நான் செய்யவிரும்புகிறேன். அரசரே! ஜனங்கள்நிறைந்தஸபையில் சூதாடுவதற்கு நான் ப்ரியப்படவில்லை' என்று மறுமொழிகூறினர். விராடன், 'ஸ்திரீகளும் பசுக்களும் ஸ்வர்ணமும் மற்றுமுள்ளதனமும் எனக்குத் தேவையில்லை. நீர் சூதாடுவதைத்தவிர மற்றொன்றும் எனக்குச் செய்யவேண்டாம்' என்றுசொன்னன். கங்கர், 'ராஜேந்திரரே! வெகுமானத்தைக்கொடுப்பவரே! அனேக தோஷங்களுள்ள சூதாட்டத்தால் உமக்கு யாதுபயன்? சூதாட்டத்தில் அனேக தோஷங்கள் இருக்கின்றன. ஆதலால், அதை விலக்கவேண்டும். தர்மராஜாவான யுதிஷ்டிரரை நீர் கேட்டிருக்கலாம்; அல்லது, பார்த்துமிருக்கலாம். அவர் ராஜ்யத்தையும் குறைவற்றதனத்தையும் தமக்கு அன்புள்ளமனைவியான க்ருஷ்ணையையும் தேவர்களுக்குஒப்பான தம்பிகளையும் ஒருபந்தயமாகத் தீர்மானித்தார். பற்பலரத்னங்களும் தனங்களும் தோற்கப்படவே, சூதாடியான அந்தப்பாண்டவர் ஸம்சயமில்லாமல் பச்சாத்தாபத்தை அடைந்திருக்கிறார். சூதாட்டமானது அபீஷ்டங்களை நாசஞ்செய்யக்கூடியது; ஓயாமல் கடுஞ்சொல்லை உண்டுபண்ணக்கூடியது; கற்றறிந்தவர்களால் எப்பொழுதும் விச்வாஸம்வைக்கத்தகாதது; ஒரேதினத்தில் (எல்லாப்) பொருள்களையும் நாசஞ்செய்யக்கூடியது. சூதாட்டத்தில் தர்மநந்தனர் எல்லாவற்றையும் இழந்தார். ஆதலால், சூதாட்டத்தை நான் விரும்பவில்லை. வேந்தரே! இல்லையேல், நீர் (சூதாட) எண்ணுவீராலல், (அது உமக்குப்) பிடித்திருக்குமாலல், நாம் சூதுவிளையாடுவோம்' என்று கூறினர்.

மனிதரிற்சிறந்த அவ்விருவரும், இவ்விதமானவாக்யங்களால் ஸம்பாஷித்துக்கொண்டு சூதாட ஆரம்பித்தார்கள். சூதாட்டமானது நடந்துவரும்காலத்தில் மத்ஸ்யராஜன் பாண்டவரைப்பார்த்து, '(கங்கரே!) நீர் பாரும். என்னுடைய புத்ரனல் யுத்தத்தில் அப்படிப்பட்ட கௌரவர்கள் ஜயிக்கப்பட்டார்கள். கௌரவர்களெல்லோரும் அதிரதர்கள்; தேவர்களாலும் எளிதில் ஜயிக்கமுடியாதவர்கள்' என்றுகூறினன். பிறகு, தர்மராஜாவான யுதிஷ்டிரர், சூதாடுகையில், மத்ஸ்யராஜனைப்பார்த்து, '(ராஜரே!) பாக்யவிசேஷத்தால் உம்முடைய பசுக்கள் மீட்கப்பட்டன; கௌரவர்களும் ஜயிக்கப்பட்டார்கள். உத்தரன் கௌர

வர்களை ஜயிப்பானுயின் அது மிக்க ஆச்சரியமென்று எண்ணு கிறேன். எவனுக்கு ப்ருஹன்னளை ஸாரதியோ அவன் எவ்விதத்தி லும் பகைவரை ஜயிப்பான்' என்றுகூறினர். பிறகு, விராடன் மனக்கலக்கமுற்றுச் சோகத்தாலும் வியாபிக்கப்பட்டுக் கோபத்து டன் ஸமீபத்தில் இருக்கிற ஸந்யாஸியைப் பார்த்து, 'ப்ராம்ம ணரே! மஹாவில்லாளியும் புத்திசாலியுமான அப்படிப்பட்ட மேர்வீரனுல் யுத்தத்தில் கௌரவர்கள் ஜயிக்கப்பட்டார்கள். அதில் என்ன ஆச்சர்யம்?' என்று சொன்னன். யுதிஷ்டிரர், 'வீர்ய முடையவனுன அந்த ஸாரதியானவன் எவனுடைய ரதத்திலிருக் கிறுனே அவன் (ஒருவராலும்) செய்யமுடியாதகார்யத்தைச் செய் வானுனுல் அந்தவிஷயத்தில் ஆச்சர்யமில்லையா?' என்று கூறினர். விராடன், 'ப்ராம்மணர்களுள் இழிந்தவனே! என் புத்ரனை நபும் ஸகமேனடு ஒப்பாகப்பேசுகிறுய். சொல்லத்தகுந்ததையும் சொல்லத் தகாததையும் நீ தெரிந்துகொள்ளவில்லை; நிச்சயமாகவே என்னை அவமதிக்கிறுய். அனேகவீரபுருஷர்களையும் அனேக ஸாரதிகளை யும் நான் பார்த்திருக்கிறேன். பராக்ரமத்தோடு போர்புரிகின்ற ஸாரதியை நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை. அரசர்களுக்கு அப்ரியமான கார்யத்தைச் செய்யலாகாது; அனுகூலமாயும் ப்ரிய மாயுமிருக்கிற கார்யத்தையே பேசவேண்டும். அரசர்களுக்கு அப் ரியத்தைச் செய்பவன் ஒருகாலும் ஸுகமாக வ்ருத்தியடைய மாட்டான். ஸ்நேஹமிதனுயிருப்பதினுல் இப்படிப்பட்ட உன் னுடைய குற்றம் எல்லாவற்றையும் பொறுக்கிறேன். நீ உயிரோ டிருக்க விரும்புவாயானுல் இப்படிப்பட்ட வார்த்தையைப் பேசா தே' என்று கூறினன். பிறகு, குருவம்சத்தை வ்ருத்திபண்ணுகிற வரான கங்கர் உரக்கச் சிரித்து மறுபடியும் (அரசனைப்பார்த்து,) 'ஓ! ராஜேந்த்ரரே! ப்ருஹன்னளையினுடைய ஜயத்தை நகரத்தில் பறையறைந்து தெரிவிக்கலாம். உத்தரனே கட்டாயமாக ஸாரத் யம் செய்திருக்கவேண்டும். (இவ்விஷயத்தில்) ஒரு நிமித்தமுண்டா யிருக்கிறது; எனக்கு உறுதியான ஊஹமும் உண்டாயிருக்கிறது. ராஜேந்த்ரரே! நான் எப்படி எண்ணுகிறேனே அது (அப்படியே இருக்கும்;) வேறுவிதமாயிராது. மஹாவீர்யசாலிகளான கௌர வர்களோ சந்த்ரன், வருணன், ஆதித்யன், குபேரன், அக்னி இவர்களோடுகூடின தேவர்களாலும் ஜயிக்கமுடியாதவர்கள். சந் தனுகுமாரரான பீஷ்மரும், (ஒருவராலும்) எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாதவர்களான த்ரோணரும், கர்ணனும், அஸ்வத்தா மாவும், விகர்ணனும், ஸோமதத்தனும், ஜயத்ரதனும், பூரிஸ்ரவ ஸும், சலனும், பூரியும், வீர்யமுடையவனுன ஜலஸந்தியும், தூர் யோதனனும், துஷ்ப்ரஸஹனும், துச்சாஸனனும், விவிம்சதியும்,

வ்ருஷஸேனனும், அஸ்வவேகனும், வாயுவேகனும், ஸுவர்ச்சஸும், பாஹ்லீகனும், சூரஸேனனும், பகைவரை வாட்டுபவனை யுயுத்ஸுவும், ஸுபலனுடைய குமாரனை சகுனியும், ஸால்வராஜனை த்யுமத்ஸேனனும், பற்பலதேசாதிபதிகளான அனேக சூரர்களும், ஆசார்யர்களுள் சிறந்தவரான க்ருபரோடுசேர்ந்த கௌரவ மன்னர்களும், ஆயத்தமாயிருக்கும் வில்லும் கத்தியுமுள்ள ரதயூதபதிகளான ரதிகர்களும், சிறந்த வீர்யமுள்ளவர்களும் மஹாரதர்களுமான மற்றராஜகுமாரர்களும் எந்தப்படையில் இருக்கிறார்களோ பீஷ்மர் த்ரோணர் முதலானவர்களால் சூழப்பட்ட அந்தப் படையை, தேவர்களுடைய கூட்டங்களால் சூழப்பட்ட இந்திரன் கோபங்கொண்டு நேரில்வந்தாலும் ஜயிக்கமாட்டான். அந்தப் படையை ப்ருஹன்னளையைத் தவிர வேறு எந்த மனிதன் எதிர்த்துப் போர்புரிவான்? பாஹுபலத்தில் ஒப்பற்றவனும் உலகில் போரைக் கண்டவுடன் மிக்க ஸந்தோஷம் வ்ருத்தியடைகிறவனுமான இப்படிப்பட்ட புருஷன் ஸ்வர்க்கத்திலாவது பூமியிலாவது உண்டா?' என்று சொன்னர். அந்த வார்த்தையினல் மிகக் கலக்கமுற்ற அரசன் பிளக்கப்படுகின்ற மனத்துடன் அவரை யுதிஷ்டிரரென்று அறியாமல், 'ஓ! கங்க! ப்ராம்மணேத்தம! எனக்கு ப்ரதிகூலமான வார்த்தையை நீ சொல்லாதே. நீ பலவாறு தடுக்கப்பட்டும் வாக்கை அடக்குகிறாயில்லை. அடக்கி ஆள்பவன் இல்லாவிடில் ஒருவனுவது தர்மத்தை அனுஷ்டிக்கமாட்டான்' என்று க்ரூரமான வார்த்தையைச் சொன்னன். இவ்வாறு, மிகக் கலக்கமுற்ற அந்த அரசனுனவன் பாச்சிகையினல் (அவரைப்) பலமாக அடிக்க ஆரம்பித்தான். கோபங்கொண்ட விராடன் தக்ஷகனுடைய உடல்போலவிளங்குகின்ற [1]வலக்கையைத்தூக்கி அவருடைய [2]வலக்காதிலடித்தான். அவன் கோபத்தினல், 'இனி இவ்வாறு சொல்லாதே' என்று அதட்டிக்கொண்டு யுதிஷ்டிரரை முகத்தில் அடித்தான். பலமாக அடிக்கப்பட்ட யுதிஷ்டிரருடைய மூக்கிலிருந்து ரக்தம் பெருகியது. விராடனல் பாச்சிகையினலடிக்கப்பட்டவரும் சிறந்த கைகளுள்ளவருமான யுதிஷ்டிரராஜர், மிக்க மனவருத்தமுற்றவளான த்ரௌபதியைப் பார்த்துக்கொண்டே, பேசாமலிருந்தார். சிறந்த கைகளுள்ளவரும் மஹாத்மாவுமான அந்தத் தர்மபுத்ரருடைய தலையிலிருந்து (பாச்சிகையினல்) அடித்ததினல் சந்தாமரை மலருக்கொப்பான ரத்தமானது அப்பொழுது பெருகியது. தர்மாத்மாவான பார்த்தர் அந்த ரக்தத்தைப் பூமியில் விழுவதற்குள்ளாகவே இருகைகளாலும் பிடித்துக்கொண்டு பக்கத்திலிருக்கின்ற த்ரௌபதியைப் பார்த்தார்.

---

[1], [2], இவை அதிக பாடத்திலுள்ளவை.

பர்த்தாவினுடைய மனத்தை அனுஸரித்து நடப்பவளான அந்த த்ருபதராஜகுமாரியானவள் பர்த்தாவினுடைய வேதனையை அறிந்து துக்கமும் பயமும் கோபமுமுள்ளவளாகி (பெருக ஆரம்பிக்கின்ற) கண்ணீரை அதிகப்ரயாஸத்தால் அடக்கிக்கொண்டு பர்த்தாவினுடைய நன்மையைக்கருதி மெல்லியதான மேலாடையினால் விரைவாக (அந்த) ரக்தத்தை ஏந்தினள். ராஜேந்த்ரரே! துக்கத்தினல் மதிமயக்கமுற்றவளும் த்ருபதராஜனுடைய புத்ரியுமான ஸைரந்த்ரியானவள் அப்பொழுது யுதிஷ்டிரருடைய ரக்தத்தை வஸ்த்ரத்தால் பிடித்து ஸ்வர்ணமயமான ஒருபாத்ரத்தை எடுத்து அந்த ரக்தத்தை அதில் பிழிந்தாள். விராடன், 'விசாலமான கண்ணையுடையவளே! ஸைரந்த்ரி! ஏன் இந்த ரக்தமானது உத்தரீயத்தால் பிடிக்கப்படுகிறது? இந்த விஷயத்தில் காரணம் யாது? அதை எனக்கு உண்மையாக உரைப்பாயாக' என்று வினவ, ஸைரந்த்ரி, 'மத்ஸ்யதேசத்தரசரே! கங்கருடைய ரக்தபிந்துக்கள் பூமியில் எவ்வளவு விழுகின்றனவோ அவ்வளவு வர்ஷகாலம் உம்முடைய தேசத்தில் மழையில்லாமல் போய்விடும்; உமக்குக் கேடுண்டாக வேண்டாமென்கிற இந்தக்காரணத்தைக்கருதிக் கங்கருடைய ரக்தமானது என்னல் உத்தரீயத்தால் பிடிக்கப்பட்டது. எவன் [1] யதீந்த்ரரைத் துன்புறுத்துசெய்வனோ அவனுக்கு ஆயுள் நாசமடைந்து விடும். எவன் யதீந்த்ரரைப்பார்த்து ஆஜ்ஞைசெய்வனோ அவன் நமலோகத்தில் ஆயிரம்யாதனைகளை அனுபவிப்பான். யதியினுடைய (தேகத்தினின்று) உண்டான ரக்தமானது எவ்வளவு புழுதியை நனைக்கிறதோ பித்ருலோகவாசிகளான அவ்வளவு பித்ருக்கள் கீழே விழுகின்றார்கள். விராடராஜரே! இதைஅறிந்து உம்மிடத்திலுள்ள ப்ரீதியினல் உமக்கு நன்மை செய்வதின்பொருட்டு நான் உத்தரீயத்தினல் ரக்தத்தை ஏந்தினேன்' என்று கூறினள்" என்றார்.

எழுபத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(யுத்தத்தைப் பார்க்கவந்ததேவர்கள் அர்ஜுனனைப் புகழ்ந்து தேவலோகம்சென்றதும், உத்தான் தன்நகரம் வந்ததும்.)

ஜனமேஜயர், "தோஷமற்றவரே! மனுஷ்ய யுத்தத்தைப் பார்ப்பதற்காக முன்பு வந்திருந்த அந்தத் தேவர்கள், பிறகு என்ன செய்தார்கள்? அதை எனக்குச் சொல்வீராக" என்று வினவ, வைசம்பாயனர், சொல்லத்தொடங்கினர்.

---

1 யதி = ஸந்யாஸி.

"(ஜனமேஜயமஹாராஜரே!) ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களும் இந்த்ரனே முதன்மையாகக்கொண்டவர்களும் ரிஷிகளைமுன்னிட்டவர்களுமான எல்லாத்தேவர்களும் யக்ஷகந்தர்வர்களுடைய கூட்டங்களும் அவ்வாறே அப்ஸரஸுகளுடைய கூட்டங்களும் ஒருவனை அர்ஜுனனுக்கும் அனேககௌரவர்களுக்கும்நடந்த பயங்கரமும் அத்யுக்ரமான காட்சியுள்ளதுமான மனுஷ்யயுத்தத்தையும் திவ்யாஸ்த்ரங்களின் ப்ரயோகங்களையும் உபஸம்ஹாரங்களையும் சுறுசுறுப்பாகவும் நேர்த்தியாகவும் ஆச்சர்யமாகவும் முயற்சியுடன் செய்யப்படும் செய்கைகளையும் பார்த்துவிட்டும், காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனால் ஜயிக்கப்பட்டவர்களான பீஷ்மரையும் க்ருபரையும் த்ரோணரையும் கர்ணனையும் மற்றஅரசர்களையும் பார்த்துவிட்டும், பிறகு, (ஸ்வர்க்கலோகத்தைக்குறித்துச்)சென்றார்கள். அத்தத்தேவர்களனைவரும், ஸந்தோஷமடைந்து அடிக்கடி (அர்ஜுனனைப்) புகழ்ந்து, தடையற்றகதியுள்ளதும் விரைவாகச் செல்லுகிறஸ்வபாவமுள்ளதுமான அந்தவிமானத்தோடு தடையற்றவர்களாகத் தேவலோகம் சென்றார்கள். 'இந்த்ரனோடுகூடின எல்லாத்தேவர்களாலும் எல்லா அஸுரர்களாலும் ஜயிக்கமுடியாதவர்களான பீஷ்மர், த்ரோணர், க்ருபர்முதலான எல்லாக்கௌரவர்களும் பார்த்தனொருவனால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டார்கள். அந்தோ! நமக்கு அதிகமான வியப்புண்டாகிவிட்டது. இந்த அர்ஜுனன் எந்தமுஹூர்த்தத்தில் பிறந்தானோ? எந்தத் தர்மத்தினுடைய பலனோ? ருத்ரனோடு எதிர்த்துப் போர்புரிந்த இந்தப்பல்குணனிடத்தில் (இது) என்ன ஆச்சர்யம்? முப்பதுகோடியென்றுகணக்கிடப்பட்ட நிவாதகவசர்களை யுத்தத்தில்கொன்ற அர்ஜுனனுக்கு இதுஎன்ன ஆச்சர்யம்?' என்று அந்தத்தேவர்கள் ஸ்தோத்ரம்செய்துகொண்டு ஸந்தோஷத்துடனும் ஆச்சர்யத்தினால் கவரப்பட்டமனத்துடனும்ஸ்வர்க்கலோகம் சென்றார்கள். கௌரவர்கள், அர்ஜுனனுடைய பாணங்களால் அடிக்கப்பட்டவர்களும், அம்புகளால் நன்றுகக்காயப்படுத்தப்பட்டவர்களும், ஸம்பூர்ணமான ஸைன்யமும் வாஹனமுமுள்ளவர்களும், யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களாலும் வ்யாபிக்கப்பட்டவர்களும், பலசாலிகளும் க்ஷத்ரியபுத்ரர்களுமான யுத்தவீரர்களால் அடையப்பட்டவர்களுமாகி விராடநகரத்தினின்று குருதேசத்தைநோக்கிச் சென்றார்கள். விராடனால்ஏவப்பட்டசேனையானது நகரத்தினின்று சீக்ரமாகச்சென்றுபகைவரைஅடக்குகின்றவனும் ஸாரதியுடன்சேர்ந்திருக்கின்றவனுமான அந்தஉத்தரனை எதிர்கொண்டுவந்தது. அனேகவாத்ய

முழக்கங்களால் நிரம்பியதும் யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களாலும் சூழப்பட்டதுமான அந்தவிராட்சேனையிலிருக்கும் ஸ்த்ரீகளுக்கும் குமாரர்களுக்கும் அதிகஸந்தோஷம் உண்டாகியது. பிறகு, அர்ஜுனனே, நன்றாக உயரக்கிளம்பினதும் ஸைன்யத்தினால் உண்டுபண்ணப்பட்டதுமான புழுதியைப்பார்த்து, சேனையிலுள்ள த்வஜத்தையும் அறிந்து, பிறகு, விராடபுத்ரனை நோக்கி, '(உத்தர!) நகரத்தில் நெருங்கின சப்தமுண்டாகிறது. புழுதியும் ஆகாயத்தை அளாவுகிறது. நம்மால் ஜயிக்கப்பட்டு ஓடினவர்களும் பெரிதான வில்லையுடையவர்களும் நல்ல தேஜஸையுடையவர்களுமான அந்தக் கௌரவர்கள் மீண்டும் உன்னுடைய நகரத்தை அடைந்துவிட்டார்களோ? ஏ! வீர! கவசத்தைப் பூண்டுகொள். குதிரைகளை ஓட்டு. விராடநகரத்தை விரைவாக அடை. கையுறையின் ஒலியையாவது காண்டீவத்தினுடைய சப்தத்தையாவது கொடியையாவது நான் காண்பிக்கமாட்டேன். ஒருஸமயம்,(இங்கு காணப்படுகிறவர்கள்) ஸ்வஜனங்களாயிருக்கலாம்' என்று கூறினான். உத்தரன், 'இது மாத்ஸ்யர்களுடைய ஸைன்யமுகம். நன்றாக அலங்கரிக்கப்பட்ட தாவிகளும் கன்னிகைகளும் காணப்படுகிறார்கள். பற்பல உடைகளைத் தரித்த போர்வீரர்களும் தேர்களில் காணப்படுகிறார்கள். தோழிகளால் நான்குபக்கத்திலும் சூழப்பெற்ற உத்தரையை இந்தஸைனியத்தில் காண்கிறேன். சேனைகளும் காணப்படுகின்றன. யானைகளும் கவசம்பூட்டப்பட்ட குதிரைகளும் தேராளிகளும் அநேகம் காலாட்களும் காணப்படுகின்றனர். (இவர்கள்) சஸ்த்ரங்களைத் தரிக்கவில்லை. விராடருடைய வார்த்தையிலில் எல்லோரும் அதிகஸந்தோஷமுடையவர்களாக (வருகிறார்களென்று) எனக்குத் தோன்றுகிறது. பந்துவினிடத்தில் உண்டாகாததுபோல இந்தக் கூட்டத்தினிடத்தில் என்மனத்துக்குக் குழப்பம் உண்டாகவில்லை' என்றான்.

பிறகு, ஸ்வஜனங்களெல்லோரும் உத்தரனை விரைவாகவந்தடைந்து பகைவர்களைவென்று வந்திருக்கின்ற அவனை ஒவ்வொருவரும் கட்டிக்கொண்டார்கள். ஜனங்கள், '(உத்தர!) நீ ப்ரீதி உடையவன்; புருஷரிற் சிறந்தவன்; ஸந்தோஷத்தோடு கூடியவன்; பாக்கியத்தினால் அடிக்கடி ஜயிக்கிறாய். உனக்கு மங்களம். பாக்யத்தால் ப்ருஹன்னளை உனக்கு ஸாரதியாக வாய்த்தாள். யுத்தத்தை அடைந்த உனக்குத் தெய்வாதீனமாக யாதொருவிதமான பயமும் உண்டாகவில்லை' என்று சொன்னார்கள். உத்தரன், '(ஜனங்களே!) இந்த ஜிஷ்ணுவானவர் ஒருதேவருள்ளவராகி யுத்

தத்தில் அந்தக் கௌரவர்களை ஜயித்தார். எதை ஸாதனமாகக் கொண்டு பசுக்கள் என்னல் மீட்டுக்கொண்டு வரப்பட்டனவோ எதை அடித்து அளவற்ற பராக்ரமமுள்ளவர்களான கௌரவர்கள் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டார்களோ அது இவருடைய பாஹுபலங்களின் வீர்யம். தேவகுமாரர்போன்ற யௌவனமுள்ள இவர் அந்தக்காரியத்தைதச் செய்தார். இந்தப் புருஷஶ்ரேஷ்டர் அப்படிப்பட்ட கௌரவமண்டலத்தைக் கலக்கமுறச்செய்து பலாத்காரமாகப் பசுக்களையும் யுத்தத்தில் மீட்டு என்னையும் பாதுகாத்தார்' என்று சொன்னான். அர்ஜுனனைப் புகழ்கின்ற உத்தரனுடைய வார்த்தையைக்கேட்டு மங்களத்தை எடுத்துரைக்கின்ற கிங்கரர்கள் ராஜபுத்ரனால் தூண்டப்பட்டு ஜயத்தைக் கோஷித்தார்கள். கன்னிகைகள் சத்ருக்களை ஸம்ஹரித்தவனை பார்த்தனைச் சந்தனங்களாலும் மாலைகளாலும் தூபங்களாலும் பூர்ணமான ஸ்வர்ணங்களாலும் பொழிந்து நன்குபூஜித்தார்கள். அர்ஜுனன் மாலைகளாலும் பற்பலவிதமான நல்ல சந்தனங்களாலும் நிரப்பப்படுகின்றவனும் ஜனங்களால் நன்கு பூஜிக்கப்படுகின்றவனுமாகி நகரத்தின் வாயிலைவந்து அடைந்தான். பேரிவாத்யங்களும் தார்யவாத்யங்களும் புல்லாங்குழல்களும் முழங்கின. விசித்ரவேஷங்களுள்ள ஸ்த்ரீஜனங்களும் சிறந்த பலமுள்ள விராடனுடைய பட்டணத்திலிருந்து வெளிக்கிளம்பிப் பூமிஞ்சயனைக் கொண்டாடினர்கள். அந்த நகரத்தில் ஜயத்தினால் புகழப்படுகின்றவனும், 'ஜயமுண்டாயிற்று?' என்று(ஜனங்களால்)கேட்கப்படுகின்றவனுமான அந்தவிராடபுத்ரன் மனவருத்தமுற்றுப் பாண்டவனை நன்றுகப் பார்த்துக்கொண்டு ஸந்தோஷிக்கவில்லை. 1 பிறகு, பாண்டு புத்ரனை அர்ஜுனன் விராடனுடையபுத்ரியான உத்தரைக்கும் (அவளுடைய) தோழிகளுக்கும் சிறந்த வஸ்த்ரங்களைக் கொடுத்தான். அங்கு வந்திருந்த அந்தப் பெண்களும் அந்த ஸைன்யமும் ஜயத்தைக்கண்டு (உத்தரனையும் ப்ருஹன்னளையையும்) மரியாதை செய்தார்கள்.

---

1 இது இங்கு பொருத்தமில்லை; அடுத்தஅத்யாயத்தின் இறுதியில் காண்க.

எழுபத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் அந்தப்புரத்தை அடைந்து விராடனைவணங்கி யுதிஷ்டிரரின் காயத்தைக்கண்டு பயந்ததும், விராடன் யுதிஷ்டிரரை க்ஷமிக்கும்படி வேண்டியதும், அர்ஜுனன் விராடனிடம்வந்ததும், விராடன் உத்தரனைப்புகழ்ந்ததும், உத்தரன் கௌரவர்களை ஒரு தேவதுமான் ஜயித்தானென்றதும், அர்ஜுனன் கௌரவராடைகளை உத்தரை முதலியோருக்குக்கொடுத்ததும்.)

பட்டணத்து ஜனங்களாலும் ஸ்த்ரீகளாலும் தேசத்தில் வஸிக்கின்ற ஜனங்களாலும் பூஜிக்கப்படுகின்ற உத்தரன், அந்தப்புரவாயிலை அடைந்து, பிதாவுக்கு (த்தன்வரவை)த் தெரிவித்தனன். பிறகு, வாயில்காப்போன், (அரசனிடம்)வந்து நமஸ்காரம் செய்து இருகரங்களையும் குவித்துக்கொண்டு ஜயத்தைத்தரக்கூடிய ஆசீர்வசனங்களால் (அரசனை) மேன்மைப்படுத்தி, 'வேந்தரே! பெரிய கீர்த்தியையுடையவரே! (உம்முடைய) குமாரனை உத்தரன் பகைவரைவென்று உமக்கு (ப்ரியத்தைத் தெரிவிப்பதற்காக) ப்ரதானயுத்தவீரர்களாலும் தாஸிகளாலும் சூழப்பட்டவனும் பட்டணத்து ஜனங்களோடும் தேசவாஸிகளோடும் கூடினவனும் (ப்ரஜைகளால்) ஜயசப்தத்துடன்கூடின ஆசீர்வசனத்தால் பூஜிக்கப்படுகின்றவனுமாகி ஸாரதியுடன்வந்து வாயிலில் 1 நிற்கிறான்' என்று கூறினன். பிறகு, அரசன் மகிழ்ந்து வாயில்காப்பவனைப்பார்த்து, '(த்வாரபாலக!) அவ்விருவரையும் விரைவாக (இங்கே) வரச்செய். நான் அவ்விருவரையும் பார்ப்பதில் விருப்பமுள்ளவனாயிருக்கிறேன்' என்று சொன்னன். கௌரவர்களுக்கு அரசரும் தர்மாத்மாவும் கம்பீரபுத்தியுள்ளவருமான யுதிஷ்டிரர், த்வாரபாலகனைப்பார்த்து, 'உத்தரன் ஒருவனுக (இங்கே) வரட்டும். ப்ருஹன்னளை வரவேண்டாம். ஏனெனில், யுத்தத்தில் தவிர மற்றஸமயத்தில் எவன் என்னுடைய அங்கத்தில் காயத்தை உண்டுபண்ணுவனே, ரக்தத்தையாவது காட்டுவனே, அவன் எவ்விதத்திலும் ஜீவித்திருக்கமுடியாதென்பது, சிறந்தகைகளுள்ளவனும் மஹாத்மாவுமான இவனுடைய நித்யமானவ்ரதம். (ஆகையால்,) ரக்தத்துடனிருக்கிற என்னைப் பார்த்ததிலேயே (ப்ருஹன்னளையானவள்) அதிகோபங்கொண்டு மந்த்ரிகளுடனும் சேனையுடனும் வாகனங்களுடனும்கூடின விராடனை

1 'வாரித:' என்பது விடப்பட்டது.

இந்த ஸமயத்தில் நிச்சயமாகக் கொன்றுவிடுவாள். இந்த ப்ருஹன்னளையானவள் என்மீது ரக்தத்தை உண்டுபண்ணினவன் இந்திரனுயிருந்தாலும் குபேரனுயிருந்தாலும் யமனுயிருந்தாலும் வருணனுயிருந்தாலும் அவனைக் கொன்றுவிடுவள். மனிதனைப் பற்றிச் சொல்லவேண்டுமா? ஆகையால், வீர்யசாலியான ப்ருஹன்னளையானவள் கூடணேரம் அவ்விடத்திலேயே வாயில் நிற்கட்டும்' என்று காதில் மெள்ள ரஹஸ்யமாகச்சொன்னர். தனையுள்ளவரான தர்மராஜர் இவ்வாறு சொல்லிவிட்டுப் பொறுமையுடன் ஸபையில் மத்ஸ்யராஜனுடன்கூடப் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

பிறகு, விராடராஜனுடைய மூத்தகுமாரனை பூமிஞ்சயன், (அரசனிருக்கும் அந்தப்புரத்தில்) நுழைந்து பிதாவினுடைய சரணங்களில் நமஸ்காரஞ்செய்தான்; கங்கரையும் அணுகினன். உத்தரன், வக்ரமானபார்வையினல் யுதிஷ்டிரரைப் பார்த்துக் கொண்டு பிதாவினுடைய சரணங்களில் அபிவாதனம்செய்து, பிறகு, கங்கருடைய (மேனியில்) ரக்தப்பெருக்கைப் பார்த்து, அப்பொழுது, ம்ருத்யுவினல் பிடிக்கப்பட்டவன்போல மனத்தில் எரிக்கப்பட்டான். பிறகு, உத்தரன், ரக்தத்தால் நனைக்கப்பட்ட அங்கங்களுடையவரும் மனைவ்யாகுலத்தை அடைந்தவரும் நிரபராதியும் பூமியில் ஏகாந்தஸ்தலத்தில் உட்கார்ந்திருப்பவரும் ஸைரந்த்ரியினல் நன்முகப் பணிவிடை செய்யப்பட்டவருமான கங்கரைக்கண்டு விரைவுடன் அரசனைப்பார்த்து, '(மஹாராஜரே!) இந்தக்கங்கர் யாரால் அடிக்கப்பட்டார்? எந்தமனிதனல் இந்தப்பாவம் செய்யப்பட்டது? எவன் ம்ருத்யுவை அடைய விருப்பமுற்றிருக்கிறன்? எவனல் ஸர்ப்பம் காலால்மிதிக்கப்பட்டது? வேதாத்யயனம் செய்தவரும் இந்த்ரனுடைய ஆஸனத்தை விரும்பத்தகுந்தவருமான இப்படிப்பட்ட இந்தப்ராம்மணத்தமர் பூஜிக்கப்படத்தக்கவர்; அபிவாதனம் செய்யப்படத்தக்கவர்; ஹிம்ஸிக்கப்படத்தக்கவரல்லரே?' என்று வினவினன். ராஜ்யங்களை வ்ருத்திசெய்கிறவனை அந்த விராடன், புத்ரனுடைய வார்த்தையைக்கேட்டுப் பயத்தினல் மனமழிந்து அவனைப் பார்த்து, 'புத்ர! உன்விஜயத்தைக்கேட்டு (முன்னமே) ஸந்தோஷமுள்ளவனை நான் மிகுந்தசந்தோஷத்தை அடைந்து இவருடன் சூதாட்டத்தினல் காலத்தைக்கழிக்கலானேன். அக்காலத்தில், 'ராஜ்யத்தை வ்ருத்தி பண்ணுகிறவனை உத்தரன் எல்லாக் கௌரவர்களையும் ஜயித்தான்' என்று நான் சொன்னேன். புத்ர! 'இல்லை. அந்த ப்ருஹன்னளையே எல்லாக் கௌ

ரவர்களையும் ஜயித்தாள்' என்று கங்கர் அடிக்கடி என்னைப் பார்த்துச் சொன்னார். புத்ர! ப்ரஸித்தமான உன்னுடைய விஜயமானது என்னால் புகழப்படும்பொழுது, கங்கர் ரோஷத்தோடு ப்ருஹன்னளையினுடையவிஜயத்தை ஸ்தோத்ரம்செய்தார். என்னால் நீ புகழப்படும்காலத்தில் கங்கர் அலியைப்புகழ்ந்தார். (அவ்வாறு,)ப்ருஹன்னளையினுடைய புகழ்ச்சிகளால்அப்பொழுது நான் (கங்கரிடத்தில்) அஸூயையையடைந்தேன். புத்ர! கெட்ட எண்ணமுள்ளவரும் பகைவனிடத்தில் அன்புபாராட்டுகின்றவருமான இவர் என்னால் அடிக்கப்பட்டார்' என்று மறுமொழிகூறினேன். இவ்வாறு, 'இந்தக்கங்கரென்னும் ஸந்யாஸியானவர் என்னால் அடிக்கப்பட்டார்' என்றுசொல்லிய பிதாவினுடைய அந்தவார்த்தையைக்கேட்டு,உத்தரன்,மிக்ககோபங்கொண்டு,பிதாவைப்பார்த்து,' மன்னரே! உம்மால் அகார்யம்செய்யப்பட்டது. நீர், இவரைக் கோபம்தணியும்படி விரைவில் வேண்டிக்கொள்ளும். கோரமானப்ராம்மணவிஷமானது உம்மை வேரோடுஎரிக்கவேண்டாம். ஐஸ்வர்யத்தால்நிறைந்ததும் (மேன்மேல்) வ்ருத்திஅடைந்திருக்கின்றதுமான மாத்ஸ்யர்களுடைய குலமானது சிறிதும் மீச்சமின்றி நாசமடையாமலிருப்பதற்குள்ளாக இவர் மனத்தெளிவுள்ளவராகச் செய்யப்படவேண்டும். இவருடைய கால்களில் தண்டம்போலப் பூமியில் (விழுந்து) நமஸ்கரித்து இருகைகளாலும் (இவருடைய) இருகால்களையும் பிடித்துக்கொண்டு இப்பொழுது இவர் மனந்தெளிந்தவராகச் செய்யப்படவேண்டும். இந்தக்கங்கரானவர், வலக்கையினால் உம்மைத்தொட்டு, '(எல்லாக்குற்றமும்) என்னால் பொறுத்துக்கொள்ளப்பட்டன. சபதம்செய்கிறேன்' என்றுசொல்லுகிறவரையில் இந்தக்கங்கரை கூடமிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்' என்றுகூறினன்.

புத்ரனுடையவார்த்தையைக்கேட்டு அந்தவிராடன் பயத்தினால் மனக்குழப்பமுற்று ப்ராம்மணதேஜஸினால் மறைக்கப்பட்டிருக்கின்ற குந்திபுத்ரரை (த்தன்குற்றத்தை)ப் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். (அவ்வாறு) பொறுத்துக்கொள்ளும்படி வேண்டுகின்ற விராடராஜனைப்பார்த்துத் தர்மநந்தனர், 'வேந்தரே! என்னால் நெடுங்காலமாகப் பொறுமை கைப்பற்றப்பட்டிருக்கின்றது. எனக்குக் கோபமேஇல்லை. ராஜரே! மனிதரிற்சிறந்தவரே! என்னுடைய அந்த ரக்தமானது பூமியில்விழுந்தால் ராஜ்யத்துடன்கூட நீர் இந்த க்ஷணத்தில் நாசமடைவீர். ராஜேந்த்ரரே! (ஒருவனுக்கும்) தீங்கு செய்யாதவனை என்னை எவன் துன்புறுத்செய்வனோ அவனையும் நான் கெடுக்கிறதில்லை. மஹா

ராஜரே! அச்செய்கைக்குத்தக்க க்ரூரமானபலனை அவன் சீக்ரமாக அடைவான்' என்றுமற்றுமொழி கூறினர். ரக்தமானது முழுதும் ஓய்ந்தபிறகு, ப்ருஹன்னளை (அவ்விடம்)வந்து மஹாராஜனையும் கங்கையும்வணங்கி அருகில்நின்றாள். பிறகு, விராடராஜன், குரு குலத்தில் உதித்தவரான தர்மபுத்ரரை (க்குற்றத்தைப்) பொறுத் துக்கொள்ளும்படிசெய்துவிட்டு, உத்தமமான ஆரண்மனைசென்று யுத்தத்தினின்று வந்திருக்கின்ற உத்தரனை இறுகத்தழுவி, ஸவ்ய ஸாசியானவன் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது,(பின்வருமாறு) புகழலானான்.

'ஸுதேதஷ்ணைக்கு ஆனந்தத்தை வளரச்செய்கின்றவனே! உன்னால் நான் புத்ரனுள்ளவனாகிறேன். உனக்குநிகரானபுத்ரன் எனக்கு இருந்ததுமில்லை; இனி உண்டாகப்போகிறதுமில்லை. அப் பனே! எவன் (ஒரேஸமயத்தில்) ஆயிரம்லக்ஷியங்களை அடிப்பதற் காக (ரணகளத்தில்) ஸஞ்சரித்துக்கொண்டு ஒருபாணங்கூட லக்ஷி யம்தவறுமல் எய்வனை அப்படிப்பட்டகர்ணனோடு உனக்கு எவ் விதம் போர்நடந்தது? அப்பனே! யுத்தத்தில் எவரைப்பார்த்த வுடன் (சத்ருக்கள்) வீர்யத்தையும் பராக்ரமத்தையும் இழந்து வாட்டமடைகிறார்களோ அப்படிப்பட்டக்ருபரோடு உனக்கு எவ் வாறு யுத்தம்நடந்தது? புருஷரிற்சிறந்தவனே! பெருமையுள்ள தும் ஸர்வோத்தமமுமானஎவருடைய அவ்விதஒழுக்கமானது உல கத்தில் ப்ரஸித்திபெற்றிருக்கிறதோ, எவரால் பிதாவின்நிமித்தம் கோரமும் ஸர்வோத்தமமுமான ப்ரம்மசர்யம் அனுஷ்டிக்கப்பட் டதோ, எவர் சிறந்தப்ரதாபமுள்ளவரும் ஜமதக்னியின் குமாரரு மான பரசுராமரோடு போர்க்களத்தில் போர்புரிந்தாரோ அப்ப டிப்பட்ட பீஷ்மர், யுத்தத்தில் (ஒருவராலும்) ஜயிக்கப்படாதவர்; பராக்ரமமுள்ளவர்; (ஒருவராலும்) அவமதிக்க முடியாதவர்; கற் றறிந்தவர்; சூரர்; இந்த்ரியங்களைவென்றவர்; (லக்ஷியங்களை) உறு தியாகஅடிப்பவர்; (கார்யங்களை) விரைவாகச்செய்பவர்; எல்லாக் கார்யங்களிலும் ப்ரஸித்திபெற்றவர். ஐயனே! குரு குலத்தில் பிறந்தவரும் பிராயமுதிர்ந்தவருமான அந்தப்பீஷ்மரோடு உனக்கு ரணகளத்தில் எவ்வாறு போர்நடந்தது? இவையெல்லாவற்றையும் எனக்கு நீ உரைப்பாயாக. அப்பனே! ராஜபுத்ரனானவன் சிறந்த அம்புகளால் மலையையும் பிளப்பனை அப்படிப்பட்ட துர்யோதன னோடு உனக்கு எவ்வாறு யுத்தம் உண்டாகியது? அப்பனே! வ்ருஷ்ணிவீரர்களுக்கும் பாஞ்சாலர்களுக்கும் ஆசார்யரும், கௌர வர்களுக்கும் பாண்டவர்களுக்கும் மற்ற எல்லாக்ஷத்ரியர்களுக்கும் குருவும், எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளுஞ்சிறந்தவரும் எல்லாஉல

கங்களிலும் ப்ரஸித்திபெற்றவரும் ப்ரபுவுமான த்ரோணரோடு உனக்கு எவ்வாறு போர்நடந்தது? அப்பனே! ஆசார்யபுத்ரரும் சூரரும் போரில் த்ரோணசார்யருக்குக் குறையாதவரும் வீரருமான அஸ்வத்தாமாவோடு உனக்கு யுத்தம் எவ்வாறு நடந்தது? த்ருதராஷ்ட்ர புத்ரர்களனைவரும் மஹாவீர்யமுடையவர்கள்; மஹாரதர்கள். ஐயனே! அந்தஅந்தவீரர்களோடு உனக்கு எவ்வாறு போர்உண்டாகியது?' என்றுவினவினன்.

உத்தரன், '(மஹாராஜரே!) என்னல் பசுக்கள் ஜயிக்கப்படவில்லை. என்னல் கௌரவர்களும் ஜயிக்கப்படவில்லை. அக்கார்யமனைத்தும் ஒருதேவகுமாரரால் செய்யப்பட்டது. யுத்தகளத்தில் பீஷ்மரையும் த்ரோணரையும் தலைமையாகக்கொண்ட கௌரவர்களைக்கண்டு பயந்து வ்யஸனமுற்று ஓடுகின்ற என்னை அந்ததேவகுமாரர்தாம் தடுத்தார். வஜ்ராயுதத்தைக்கையில்கொண்ட இந்த்ரனுக்குஒப்பானவரும் யௌவனமுள்ளவருமான அவர்தாம் தேரினிடையில்இருந்துகொண்டு (கௌரவர்களோடு போர்புரிந்தார்.) உமதுபசுக்களும் அவரால் மீட்கப்பட்டன. அந்தக்கௌரவர்களும் அவரால் ஜயிக்கப்பட்டார்கள். ஐயா! அனையெல்லாம் அந்த வீரருடைய செய்கையே. அவை என்னல் செய்யப்பட்டனவல்ல. வீர்யமுடையவரான அந்ததேவகுமார்தாம் பாணங்களால் க்ருபரையும் த்ரோணரையும் த்ரோணபுத்ரரையும் ஸுதபுத்ரனுடைய கர்ணனையும் பீஷ்மரையும் (யுத்தத்தினின்று) புறங்காட்டி ஓடச்செய்தார். மஹாபலசாலியும் ராஜபுத்ரனும் மதங்கொண்டயானைபோன்றவனுமான துர்யோதனனையும் யுத்தத்தில் தோல்வியடையச்செய்து, பயமடைந்த அவனைப்பார்த்து, '(துர்யோதன!) உனக்கு ஹஸ்திநபட்டணத்திலும் ஒருவிதமான ரக்ஷணத்தையும் நான்காணவில்லை. (யுத்தத்தினின்று) ஓடுகின்ற உன்னல் ஹஸ்தினபட்டணத்தில் போகங்கள் அனுபவிக்கமுடியா. ஓ! கௌரவநந்தன! போரினல் நீஉயிரை அடையவிரும்பு. [1]ராஜனே! நீஓடினல் விடப்படமாட்டாய்; (ஆகையால்,) போர்செய்வதில் மனத்தையுடையவனாகி நில்; ஜயித்தால் பூமியைஅனுபவிப்பாய்; கொல்லப்பட்டால் ஸ்வர்க்கத்தை அடைவாய்' என்று சொன்னர். புருஷச்ரேஷ்டனும்அரசனுமான அந்ததுர்யோதனன்(யுத்தத்துக்காகத்) திரும்பி, பீஷ்மர் த்ரோணர் க்ருபர்முதலான மந்திரிகளால்சூழப்பட்டு வஜ்ராயுதத்துக்குஒப்பான பாணங்களை ப்ரயோகித்துக்கொண்டு (போர்செய்யஆரம்பித்தான்.) பிறகு, எனக்கு மயிர்க்கூச்சமுண்டாயிற்று. என்னுடைய தொடைகளும் அசைவற்றிருந்

---

1 வேறுபாடம்.

தன. அரசரே! ஹிம்மத்தினுடைய கர்வம்போன்ற கர்வத்தை யுடையவரும் யௌவனமுள்ளவருமான அந்தத்தேவகுமாரர் போரில் மேகத்துக்குஒப்பான (கௌரவர்களுடைய) படைகளை அம்புகளால் நாசம்செய்து அந்தத்தேர்ப்படையையும் துரத்தி விட்டு ஸர்ப்பம்போலச் சீறிக்கொண்டு அந்தக்கௌரவர்களை (ப்போர்க்களத்தினின்று) ஓட்டினர். கொழுத்த புலியினால் புல்லைத் தின்னுகின்ற மான்கள்போல அந்த ஒரு சூரரால் ஆறுரதர்கள் ஜயிக்கப்பட்டார்கள்; ஆயிரக்கணக்கான குதிரைகளும் யானைகளும் வில்லாளிகளான சூரர்களும் கொல்லப்பட்டார்கள்; கௌரவசேனையும் தோல்வியடைந்தது. மஹாரதரான தேவகுமாரர் ஸுதபுத்ரனைகர்ணனை அனேகபாணங்களாலடித்துக் குதிரைகளைக்கொன்று அஸ்த்ரத்தினால் அவனை மோஹிக்கச் செய்து (அவன் அணிந்திருந்த) சிவப்புவஸ்த்ரத்தையும் உரிந்து கொண்டார். சந்தனுவின்குமாரரான பீஷ்மரையோ நான்கு அம்புகளால் பூஜித்தார். அவர், அவரையும் அவருடைய குதிரைகளையும் விரைவாக அடித்து அவர் அணிந்துகொண்டிருந்த வஸ்த்ரத்தைமாத்ரம் அபஹரிக்கவில்லை. பலசாலியான அவர் துர்யோதனனையும் ஏழுபாணங்களாலடித்தார்; அந்தத் துர்யோதனனையும் அவனுடையகுதிரைகளையும் அடித்து அவன் அணிந்திருந்த மஞ்சள்வஸ்த்ரத்தையும் உரிந்துகொண்டார். பலசாலியான அந்தத் தேவகுமாரர் த்ரோணரையும் க்ருபரையும் ஸோமதத்தனையும் ஜயத்ரதனையும் இந்த்ரன்போலப்ரகாசிக்கின்றபூரிச்ரவஸையும் மஹாரதனான சகுனியையும் துச்சாஸனன் முதலானவர்களையும் மும்மூன்றுபாணங்களாலடித்துப் பற்பலவிதமான மிகச் சிறந்த (அவர்களுடைய) வஸ்த்ரங்களையும் அபகரித்தார். அவர் யுத்தத்தில் ஆசார்யபுத்ரரான அஸ்வத்தாமாவை அவ்வாறுஇரண்டுபாணங்களாலடித்து, பிறகு, விகர்ணனுடையவில்லையும் துணித்து (அவருடைய) நீலமான இரண்டுவஸ்த்ரங்களையும் உரிந்துகொண்டார்' என்றுசொன்னன். விராடன், '(உத்தர!) யுத்தத்தில் கௌரவர்களால் விழுங்கப்பட்ட என்னுடையபுத்ரனை விடுவித்தவனும் வீரனும் சிறந்தகைகளுள்ளவனும் பெரும்புகழுள்ளவனுமான அந்தத் தேவகுமாரன் எங்கே? பகைவரை அழிப்பவனை அவனை நான் பார்க்கவும் பூஜிக்கவும் விரும்புகிறேன். உன்னையும் என்னுடைய பசுக்களையும் விடுவித்த அந்தத் தேவகுமாரனுக்கு (என்னுடைய) புத்ரியையும் க்ராமங்களையும் ஸுவர்ணங்களையும் ப்ரகாசிக்கின்ற அரைநாணையும் லக்ஷம் ஸ்த்ரீகளையும் நான் கொடுக்கப்போகிறேன்' என்றுகூற, உத்தரன், 'ஐயா! ப்ரதாபசாலியான (அந்தத்) தேவகுமாரர் மறைந்துவிட்டார்;

இன்றைக்கோ, நாளைக்கோ, அடுத்தநாளோ வெளிப்படுவாரென்று நான் எண்ணுகிறேன்' என மறுமொழி கூறினன்.

இவ்வாறு சொல்லியதைக்கேட்ட விராடன், வேறு வேஷத்தால் மறைந்துவஸிக்கின்ற குந்திபுத்ரனும் பாண்டுவின் குமாரனுமான அந்த அர்ஜுனனை அறிந்துகொள்ளவில்லை. பிறகு, மஹாத்மாவான விராடனால் அனுமதிகொடுக்கப்பட்ட குந்திபுத்ரனை தனஞ்சயன், மத்ஸ்யராஜகுமாரனை உத்தரனோடு ஆலோசித்து, '(உன்) அருகில் வருகின்ற விராடராஜரை நோக்கி, இவ்வாறு சொல்' என்று சொல்லிவிட்டு, விரைவாக [1] மங்களகரமான அந்தப்புரத்தில் ப்ரவேசித்து, விராடபுத்ரியான உத்தரைக்கு, தானே வஸ்த்ரங்களையும் ரத்னங்களையும் கொடுத்தான். உத்தரையோ, அப்படிப்பட்ட மிக உயர்ந்த எல்லா வஸ்த்ரங்களையும் ஆபரணங்களையும் பெற்றுக்கொண்டு பரிவாரங்களுடன் ப்ரீதியுள்ளவளானாள்.

எழுபத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(பீமன்முதலியோர் யுதிஷ்டிரரிடம் வந்து அவரை விராடன் பாச்சிகையாலடித்தது தெரிந்து அவனைக் கொல்ல எத்தனித்ததும், யுதிஷ்டிரர் அதைத் தடுத்ததும்.)

அந்தஅர்ஜுனன், போரினிடையில் பெரிதான காரியத்தைச் செய்துவிட்டு, (விராடநகரம் வந்து) அப்பொழுது ஸந்தோஷத்துடன் விராடனுடைய அரண்மனையிலுள்ள தோழிகளின்பொருட்டு வஸ்த்ரங்களைக் கொடுத்துவிட்டு, ப்ருதையின் குமாரரான யுதிஷ்டிரரைப் பார்க்க விரும்பி (அவரிடம்) சென்றனன். அந்த அர்ஜுனன், அந்தத் தர்மராஜரைப் பார்த்துவிட்டுப் பிறகு பீமஸேனனைப் பார்த்து, '(பீம!) தர்மராஜர் ஏன் (இப்பொழுது) முகத்தை மூடிக்கொண்டு, முன்போல என்னுடன் ஒன்றும் பேசாமலிருக்கிறார்?' என்று வினவினன். அரசரே! அந்தப் பீமஸேனனைப் பார்த்து இவ்வாறுசொல்லி ஸந்தேகப்படுகின்ற அர்ஜுனன் பீமஸேனன் இவ்விருவரையும் பார்த்து, யுதிஷ்டிரராஜர், அப்பொழுது அந்த ரக்தத்தைத் துடைத்துவிட்டு, 'பார்த்த! நீ (என்னால்) புகழப்படுங்கால் துராத்மாவான விராடராஜனால் நான் அடிக்கப்பட்டேன். அதன்பிறகு, நான் அந்த அடியினாலுண்டான ரக்தபிந்துக்

---

1 இரட்டித்திருப்பதால் 'பார்த்த!' என்னும் சொல் விடப்பட்டது.

களைப்பார்த்து, 'இவைகள் பூமியில்படவேண்டாம்' என்றுஎண்
முகத்தைமூடிக் கோபத்தை அடக்கிக்கொண்டு உட்கார்ந்திரு
றேன். மங்களங்களுக்குத் தகுந்தவனே! எந்தத் தேசத்தில் ந
ஸுகமாக வாஸம் செய்தோமோ அந்தத் தேசத்திற்குத் துண்ட
வரவேண்டாம். வீரனை நீ கோபித்துக்கொண்டு ஸந்தோஷமு
வணியிருந்தால் விராடராஜன் ஸுகத்தை அடையான். பார்த்
வேறு வேஷத்திலுல் மறைந்திருக்கின்ற உனக்கு யுத்தத்திலி
கின்ற சௌர்யத்தையும் பலத்தையும் அறியாதவனை அந்த வி
டனுல் இவ்விதகார்யம் என்னிடத்தில் செய்யப்பட்டது. (அ
னுல்) உன்னைப்பார்த்து ஸந்தோஷமற்றவனானேன்' என்று கூ
னர். எண்ணமுடியாத பெருமையையுடையவரும் மஹாபலசா
யும் பொறுமையுள்ளவருமான அந்த யுதிஷ்டிரரால் அந்த அர்ஜு
னன் அவ்விதமாகச் சொல்லப்பட்டபொழுது, அவன் அதி
கோபம்கொண்டதைப் பார்த்து, அதிகபலமும் கோபமுமுள்
பீமஸேனன், 'பார்த்த! ஞானவான்களுள் சிறந்த ப்ருஹஸ்ப
யானவர், பொறுமையானது எப்பொழுதுமே கைக்கொள்ள
தக்கதன்றென்று சொல்லுகிறார். பொறுமையுள்ளவன் விஷவீர்
மில்லாத ஸர்ப்பம்போல இவ்வுலகில் எல்லோராலும் அவமதிக்க
படுகிறான். (ஆதலால்,) இப்பொழுதே விராடனைப் புத்ரபௌ
ரர்களோடும் வம்சத்தோடும் ஸைன்யத்தோடும் விரைவாக நாச
செய்துவிட்டு, தர்மபுத்ரரை (இந்த) ராஜ்யத்தில் (ராஜாவாக) இ
பொழுதே சீக்ரம் ஏற்படுத்துவோம். இந்த மாத்ஸ்யன் நமக்கு
பகைவன். கீசகனுல் துன்பமடைந்த பாஞ்சாலராஜகுமாரியா
க்ருஷ்ணையானவள் இவனுல் உபேக்ஷிக்கப்பட்டாள். ஆதலால்
இவன், 'ராஜா' என்கிறபெயரை ஏற்றுக்கொள்வதற்குத் தகு
யுள்ளவனல்லன். அரசரே! பார்த்தனுடைய வீர்யத்திலுல் நீ
அரசராவீர். கௌரவர்களுக்கு அரசரும் உத்தம வீரருமான
இந்த யுதிஷ்டிரர் மத்ஸ்யதேசத்தில் ராஜாவாக இருக்கட்டும். ஜலப்
நிறைந்த குடத்தைக் கல்லில்போட்டு உடைப்பதுபோல அந்த
விராடனுடைய தேகத்தை இப்பொழுது நூறு துண்டாகப்
பிளக்கிறேன்' என்று சொன்னன். அர்ஜுனன், 'ராஜரே
உம்முடைய பொறுமையினுல் நமக்கு எல்லாத் தீங்குகளும்
விளைந்தன. அப்படிப்பட்ட மாத்ஸ்யனை ஸைன்யத்துடனும்
புத்ரர்களுடனும் ஞாதிகளுடனும் பந்துக்களுடனும் கொன்று
விட்டு, பிறகு, எல்லாக் கௌரவர்களையும் கொல்வேன்; ஸம்
சயமில்லை' என்று சொன்னன். பீமஸேனனும் மற்றவர்களும்
அவனைப்பார்த்து, 'அப்படியே' என்றுசொன்னார்கள். மஹாத்மா

வும் பொறுமையுள்ளவரும் பெரும் கொடையாளியுமான தர்மநந்தனர், கோபம்கொண்ட அந்த அர்ஜுனனையும் பீமனையும் பார்த்து, 'மத்ஸ்யராஜன் மனைவியுடன் மன்னிப்புக்கேட்டுக் கொள்வதற்கு வராமல் போனால், பிறகு, கெட்ட எண்ணமுள்ள இவன் நன்றுகக் கொல்லத் தக்கவனைகட்டும். அர்ஜுனை! (இப் பொழுது) இவன் உன்னால் கொல்லப்படத் தக்கவனல்லன். பார்த்த! நாளைக்காலையில் நாம் ஸபையில் ப்ரவேசித்து ராஜவேஷத்தோடு நன்கு அலங்கரித்துக்கொண்டு இந்த அரசன்வீற்றிருக்கத்தக்க ஸிம்மாஸனங்களில் வீற்றிருப்போம். அவ்விடத்தில் வீற்றிருப்பவர்களும் அரசர்களுக்குத்தகுதியான அலங்காரங்களால் விளங்குகின்றவர்களும் ராஜலக்ஷணங்களுள்ளவர்களுமான நம்மை விராடன் கௌரவியாமலிருந்தால், பிறகு, விராடனைப் பங்துக்களோடு கொல்வோம்' என்று சொன்னர். இவ்வாறு தர்மங்களை அறிந்தவர்களும் தர்மத்தில் பற்றுள்ளவர்களுமானபாண்டவர்கள் எல்லோரும் செய்யவேண்டியதைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டு அன்றிரவு வஸித்தார்கள். மிக்க களிப்புற்ற அந்த மத்ஸ்யராஜன் புத்ரனைடு ப்ரீதியுள்ளவனாக மிக்கஸந்தோஷமுள்ள மனத்துடன் அன்றிரவு வாஸம் செய்தான்.

கோக்ரஹணபர்வம் முற்றிற்று.

எழுபத்துநான்காவது அத்யாயம்.

ஸைவாஹரிகபர்வம்.

(யுதிஷ்டிரர் முதலியோர் ஸிம்மாஸன முதலியவற்றில் உட்கார்ந்ததும், விராடன் அது தகாதென்றதும், அர்ஜுனன் அஃது அவருக்குத் தக்கதுதானென்றதும்.)

பிறகு, [1] இரண்டாவதுநாளில், நன்றுக வ்ரதத்தை அனுஷ்டித்தவர்களும் பெரும்பாக்கியமுள்ளவர்களும் ப்ரகாசிக்கின்றவர்களும் மஹாரதர்களும் அக்நிபோன்றவர்களும் ப்ராதாக்களுமான அந்த ஐந்து பாண்டவர்களும், எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஸ்நானம் செய்து வெண்மையான வஸ்த்ரங்களைத்தரித்து ஸர்வாலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்களாகி யுதிஷ்டிரரை முன்னிட்டுக்கொண்டு விராடனுடைய ஸபையில் ப்ரவேசித்து அரசர்களுக்குரிய ஆஸனங்களில், யாகத்தில் வேதிகளில் அக்நிகள் வஸிப்

---

1 'மூன்றுவதுநாளில்' என்பது வேறு பாடம்.

பதுபோல உட்கார்ந்தார்கள். ப்ரபுவே! அவர்கள் அங்கு உ
கார்ந்திருக்கையில், பூபதியான விராடராஜன், அன்றிரவு கழி
பிறகு, காலையில் செய்யவேண்டிய கார்யத்தைச் செய்து முடித்
முறைப்படி பசு ஸ்வர்ணமுதலியவற்றை ப்ராம்மணர்களுக்
கொடுத்துவிட்டு உத்தரவேடு ஸபையை வந்து அடைந்தா
அந்த அரசன் மஹாபலசாலிகளும் ராஜவேஷங்களைத்தரித்
அக்னிபோலப்ரகாசிக்கின்றவர்களுமான அந்தப் பாண்டவர்களை
பார்த்து வியப்படைந்தான். மனிதர்களைப் பரிபாலிக்கும் (அந்
அரசன் புருஷர்களுள் மிகச் சிறந்தவர்களான பாண்டவர்களை
கண்டு, 'இஃது என்ன! இஃது என்ன கார்யம்!' என்று ஆசே
சித்துப் பயத்தால் பீடிக்கப்பட்டவன்போல வ்யஸனமடை
தான். பிறகு, மத்ஸ்யராஜன், தேவர்களுடைய கூட்டங்களா
உபாஸிக்கப்பட்டவனும் தேவர்களுக்கு நாதனுமான மஹேந்
னைப்போலிருக்கிற கங்கைப்பார்த்து, 'பாக்யசை உருட்டுகிற
னை நீ என்னல் ஸபையிலிருப்பவனைச் செய்யப்பட்டாய். அ
படிப்பட்ட நீ, பிறகு, அலங்கரித்துக்கொண்டு, ராஜாஸனத்தி
யாதுகாரணத்தால் உட்சார்ந்தாய்?' என்று விஜயன். பகை
வீரர்களைக் கொல்லுகின்றவனை அர்ஜுனன், விராடராஜனுடை
அந்த வார்த்தையைக்கேட்டு (அவனைப்) பரிஹஸிக்க விரும்பி
புன்சிரிப்புடன் (பின்வருமாறு) உரைக்கலானன்.

'அரசரே! ப்ராம்மணர்களுக்கு நன்மையைச் செய்பவரும்
சாஸ்த்ரங்களைக் கற்றவரும் த்யாகமுடையவரும் எல்லாலோகங்
ளாலும் பூஜிக்கப்பட்டவருமான இவர், இந்த்ரனுடைய அர்த்தா
ஸனத்தில் ஏறுவதற்குத் தகுதியுள்ளவர். இவர், மூர்த்திகரித்
திருக்கின்ற தர்மம். இவர், வீர்யசாலிகளுள் சிறந்தவர். இவர்
உலகத்தில் புத்தியினல் மேலானவர். இவர், தபஸ்விகளுக்கெல்
லாம் முக்ய கதியாயிருப்பவர். இவர், சராசரங்களுடன் கூடின
மூவுலகங்களிலுமுள்ள பலவிதமான அஸ்த்ரத்தையும் அறிந்திருக்
கிறார். (இவர் அறிந்திருப்பதை) வேறொருவரும் அறியவுமில்லை;
ஒருபொழுதும் அறியப்போகிறதுமில்லை; தேவர்களும் அஸுரர்
களும் மனுஷ்யர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் சிறந்த
யக்ஷர்களும் கின்னரர்களும் மஹிமைபொருந்தின உரகர்களு
மாகிய எவரும் அறியவில்லை. இவர் நீண்ட ஆலோசனையுள்ளவர்;
மிக்க தேஜஸ்ஸுடையவர்; பட்டணத்து ஜனங்களுக்கும் தேசவா
ஸிகளான ஜனங்களுக்கும் ப்ரியர்; பாண்டவர்களுள் அதிரதர்;
யஜ்ஞத்தையும் தர்மத்தையும் ப்ரதானமாகக்கொண்டவர்;
மனத்தை அடக்கினவர்; மஹரிஷிகளுக்குஒப்பானவர்; ராஜரிஷி;

எல்லா உலகங்களிலும் ப்ரஸித்திபெற்றவர்; சிறந்த பலமுள்ளவர்; தைர்யமுள்ளவர்; ஸமர்த்தர்; ஸத்யவாதி; இந்த்ரியங்களை வென்றவர்; தனங்களாலும் (மற்றப் பொருள்) குவியல்களாலும் இந்த்ரனுக்கும் குபேரனுக்கும் ஒப்பானவர். மஹாதேஜஸ்வியான மனுவானவர் எவ்வாறு உலகங்களுக்கு ரக்ஷகரோ அவ்வாறே மஹாதேஜஸ்வியான இவர் ப்ரஜைகளுக்கு நன்மையையுண்டுபண்ணுகிறவர். இவர், கௌரவர்களுள் சிறந்தவரும் குந்தியின்புத்ரருமான யுதிஷ்டிரர். இவருடைய கீர்த்தியானது உதிக்கின்றஸூர்யனுடைய ஒளிபோல உலகத்தில்நிலைபெற்றிருக்கிறது. இவருடைய யசஸின் கிரணங்கள் உதித்திருக்கின்ற ஸூர்யனுடைய தேஜஸின்கிரணங்கள்போல எல்லாத்திக்குக்களிலும் பரவுகின்றன. மன்னரே! இவர் குருதேசத்தில் வஸிக்கும்காலத்தில், சிறந்த பலமுள்ள மூப்பதினாயிரம் யானைகள் இவரைப் பின்தொடர்ந்தன. வேந்தரே! ரதிகர்களுள் சிறந்தவரான இவரை நல்ல குதிரைகள் பூட்டின மூப்பதினாயிரம் ரதங்களும் நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்கும் பதினாயிரக்கணக்குமான குதிரைகளும் அக்காலத்தில் பின்தொடர்ந்துசென்றன. முற்காலத்தில் இவரை மிக்க பரிசுத்தமான ஏத்தங்களினால்ஸ்துதித்தகுண்டலங்களணிந்த எண்ணூறுஸூதர்களும்மாகதர்களும் இந்த்ரனை ரிஷிகள் ஸ்தோத்ரம்செய்வதுபோல ஸ்தோத்ரம்செய்தார்கள். ஓ! அரசரே! இந்தமன்னரை அக்காலத்தில் குபேரனைத் தேவர்கள் அடைவதுபோல எல்லாக்கௌரவர்களும் எப்பொழுதும் கிங்கரர்களாகி அடைந்தார்கள். மஹாராஜரே! இவர் அப்பொழுதுதமக்குடன்பட்டவர்களும் உடன்படாதவர்களுமான எல்லா அரசர்களையும் வைஸ்யர்களைப்போல(த் தமக்குக்) கப்பம் கொடுக்கும்படி செய்தார். நன்கு வ்ரதத்தை அனுஷ்டித்தவர்களும் மஹாத்மாக்களுமான எண்பத்தெண்ணாயிரம் ஸ்நாதகர்கள் இந்தவேந்தரை அண்டிப் பிழைக்கின்றார்கள். (பகைவர்களை) அவமதிப்பவரான இவர், பிராயமுதிர்ந்தவர்களையும் நாதனற்றவர்களையும் அங்கஹீனர்களையும் நொண்டிகளையும் குள்ளர்களையும் புத்ரர்களைப்போலப் பாதுகாத்தனர்; ப்ரஜைகளை முறைப்படி பாதுகாத்தனர். இந்த அரசர் தர்மத்திலும் இந்த்ரியநிக்ரஹத்திலும் தானத்திலும் ஸத்யத்திலும் எப்பொழுதும் பற்றுள்ளவர்; மிகுந்த அருளுடையவர்; ப்ராம்மணர்களுக்கு நன்மையைச்செய்பவர்; யதார்த்தவாதி. மன்னரே! எவருடைய சிறப்புற்ற ஐஸ்வர்யத்திலும் ப்ரபாவத்திலும்,குருகுலத்தில்உதித்தவனும் வீர்யமுடையவனுமான துர்யோதனன் (தன்தம்பியர்களுடைய) கூட்டத்தோடும் கர்ணனோடும் சகுனியோடும் தபிக்கிறானே அப்படிப்பட்ட இவ

ருடைய குணங்கள் எண்ணமுடியாதவை. இவர் எப்பொ
தும் தர்மத்தை ப்ரதானமாகக்கொண்டவர்; க்ரூரஸ்வபாவமில்
தவர்; நல்லொழுக்கமுள்ளவர். இப்படிப்பட்ட (சிறந்தகுண
ருடன்) கூடியவரும் ராஜாதிராஜரும் பாண்டுவின்குமார
புருஷச்ரேஷ்டருமான இந்த யுதிஷ்டிரராஜர் வேந்தர்களுக்கு
ஆஸனத்தை என் அடையத்தகுந்தவராகார்?' என்று சொன்ன

எழுபத்தைந்தாவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் விராடனுக்கு வலலன்முதலியோர் பீமன் முதலிரு
ரென்றதும், உத்தரன் பாண்டவர்களை லக்ஷணங்களுடனும் பெய
ருடனும் தெரிப்பிட்டு அர்ஜுனனுடைய பராக்கிரமத்தைப்
புகழ்ந்ததும், விராடன் பாண்டவர்களை வணங்கி
மனத் தெளிவுறச் செய்ததும்.)

விராடன், 'இவர் குருகுலத்திலுதித்தவரும் குந்தீபுத்ர
மான யுதிஷ்டிரராஜராலல் (இவர்களுள்) இவருடைய ப்ராத
வான அர்ஜுனன் யார்? பலவானான பீமன் யார்? நகுலன் யார்
ஸஹதேவன் யார்? புகழ்பெற்றவளான த்ரௌபதி யார்? இவ
கள் பாச்சிகைகளால் ஜயிக்கப்பட்டது (முதல் இதுவரையில்
இடையில் நடந்த வரலாற்றை நான் கேட்கவில்லை' என்
கூற, அர்ஜுனன், 'ராஜரே! மஹா பாக்யமுள்ளவரே! உ
மிடம் சமையற்காரனையிருந்த வலலனென்னும் இவன் பய
கரமான வேகமும் பராக்கிரமமுமுள்ள பீமஸேனன். இவ
கந்தமாதனபர்வதத்தில் க்ரோதவசர்களைக்கொன்று த்ரௌப
யின் நிமித்தம் செங்கழுநீர்ப் புஷ்பங்களைக் கொண்டுவந்தான்
துராத்மாக்களான கீசகர்களைக்கொன்ற கந்தர்வன் இவனே
இவன் உம்முடைய பட்டணத்தில் புலிகளையும் கரடிகளையு
யானைகளையும் கொன்றான். இவன் ஹிடிம்பனையும் பகனையு
கிர்மீரனையும் ஜடாஸுரனையும் கொன்று காடுமுழுதும் பகை
ரற்றதும் மங்களகரமுமாகச் செய்தான். பகைவரை வாட்டுபவரே
உம்முடைய குதிரைகளைக் கட்டுகிறவனையிருந்தவனும், பசுக்களை
ரக்ஷிக்கிறவனையிருந்தவனும், அதிக பலமும் அழகிய வேஷமும்
ஆபரணமும் சிறந்தரூபமும் சிறந்த மனமுமுள்ளவர்களும் பற்பல
விதங்களாகவும் ஆயிரக்கணக்காகவுமிருக்கின்ற ரதிகர்களை (அடை
குவதில்) ஸமர்த்தர்களும் பரதகுலத்திற்பிறந்தவர்களுள் சிறந்தவ

களும் மாத்ரீபுத்ரர்களுமான நகுல ஸஹதேவர்கள். அரசரே! கீசகர்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமானவளும் தாமரை யிதழ்போன்ற கண்களையுடையவளும் அழகிய இடையையுடைய வளும் அழகிய புன்சிரிப்புள்ளவளுமான இந்தஸைரந்த்ரியான வள் த்ருபதனுக்கு ப்ரியமானபுத்திரியும் த்ருஷ்டத்யும்னனுடைய இளையஸஹோதரியும் அக்னிகுண்டத்திலிருந்து உண்டானவளு மான 1 த்ரௌபதியென்று எண்ணும்' என்றுசொன்னான்.

பீமன், '(விராடராஜரே!)இவன் வில்லாளிகளுள் மிகமேன்மை பெற்றவனும் குந்தீபுத்ரனுமான தனஞ்சயன். பூமண்டலத்தில் (இவனைப்போல) அஸ்திரங்களை அறிந்த ஒருவன் கிடைப்பது அரிது. மன்னரே! (அக்நிக்குக்கொடுக்க) ப்ரியமில்லாதவனை அந்த இந்த்ரனுடைய காண்டவவனமும் நாகங்களோடுகூட நாக வனமும் இவனல்லரிக்கப்பட்டன. (ஒருவராலும்)ஜயிக்கமுடியாத இவனல் மழையானது அம்புமழையினல் தடுக்கப்பட்டது. பூமண் டலத்திலுள்ள எல்லா அரசர்களும் கப்பங்கொடுக்கும்படிசெய்யப் பட்டார்கள். வேந்தரே! இவன் உம்முடைய அரண்மனையில் ஸ்த்ரீ வேஷத்தைத் தரித்திருந்தான். ஜயிப்பவர்களுள் உத்தமனை இந்த அர்ஜுனனைத்தான் (ஜனங்கள்) ப்ருஹன்னளையென்று சொன்னார்கள். அரசரே! உம்முடைய அரண்மனையில் அஜ்ஞாத வாஸகாலத்தில் சிசுக்கள் கர்ப்பத்தில் வஹிப்பதுபோல நாங்க ளெல்லோரும் ஒருவருக்கும்தரியாமல் ஸுகமாக வஹித்துவந் தோம்' என்றுகூறினன். அர்ஜுனனுல் வீரர்களான அந்த ஐந்து பாண்டவர்களும் சொல்லப்பட்டவுடன், உத்தரனும் மறுபடியும் அந்தப்பார்த்தர்களை (விராடனுக்குக்) காண்பிக்க ஆரம்பித்தான்.

உத்தரன், 'அரசரே! ஸ்வர்ணம்போலச் சுத்தமாயும் மஞ்சள் நிறமாயுமிருக்கின்ற சரீரமுள்ளவரும் பெரியவிம்மம்போல நன்கு வ்ருத்தியடைந்தவரும் நீண்டமூக்கையுடையவரும் நீண்டும் சிவந் தும் அகன்றுமிருக்கின்றகண்களையுடையவருமான இவர், குருதே சங்களுக்கு ராஜாவான யுதிஷ்டிரர். மதயானைபோல நடப்பவரும் புடம்போடப்பட்ட தங்கம்போலச் சுத்தமான மஞ்சள் நிறமுள்ள வரும் பருத்தும் அகன்றுமிருக்கின்ற தோள்களையுடையவரும் பருத்தும் நீண்டுமிருக்கின்ற கைகளுள்ளவருமான இவரோ பீம ஸேனர். இவரைப் பாருங்கள்; பாருங்கள். இவருக்குப்பக்கத்தில் நிற்பவரும் பெரிதான வில்லைத்தாங்கியவரும் கறுத்தநிறமுடைய வரும் யௌவனமுள்ளவரும் கஜயூதபதிபோன்றவரும் விம்மத்தி னுடைய தோள்கள்போல உன்னதமான தோள்களுள்ளவரும்

1 இரட்டித்திருப்பதால் 'த்ரௌபதீ' என்னும் ஒரு சொல்விடப்பட்டது.

கஜராஜன்போலச் செல்லுகின்றவரும் தாமரைமலர்போல அகல
கண்களையுடையவருமான இவர் வீரரான அர்ஜுனர். ராஜாவி
டைய ஸமீபத்திலிருப்பவர்களும் புருஷச்ரேஷ்டர்களும் விஷ்
வுக்கும் மஹேந்த்ரனுக்கும்ஒப்பானவர்களுமான இவ்விருவர்களு
(மாத்ரீ குமாரர்களான) இரட்டையர்கள். ரூபத்திலும் பல
லும் சீலத்திலும் இவர்களுக்கு நிகரானவன் அகண்டமான பூம
டலத்திலுமில்லை. ஸ்வர்ணம்போலச் சிறந்தமேனியுடையவ
மூர்த்திகரித்திருக்கின்ற பார்வதிபோல ஒளிபொருந்தியவள
நீலோத்பலத்தின்காந்திபோன்ற காந்தியுள்ளவளும் தேவர்கள
(ஆராதிக்கத்தக்க) தேவதைபோன்றவளும் மனிதவடிவத்துட
வந்த லக்ஷ்மிபோன்றவளும் இவ்விருவர்க்கும்பக்கத்தில் நிற்கின்
வளுமான இவள் க்ருஷ்ணை' என்றுசொன்னன். விராடகுமார
இவ்விதம் குந்தியின் புத்ரர்களான அந்தஐந்துபாண்டவர்களையு
அரசனுக்குத் தெரிவித்த பிறகு, அர்ஜுனனுடைய பராக்ரம
தைத் தெரிவிக்கலானன்.

'(அரசரே!) இந்த அர்ஜுனர் மான்களினிடையில் ஒ
ரிம்மம்போல அந்தப்பகைவர்களினிடையில் (பலத்தில்) சிறந்
வர்களையும் கீழானவர்களையும் நாசம்செய்துகொண்டு தேரா
களுடைய கூட்டங்களில் ஸஞ்சாரம்செய்தார். இவரால் அ
பொழுது பெரியமேகம் போன்றவைகளும் பொன்னலாகி
கச்சைகளுள்ளவைகளுமான யானைகள் யுத்தத்தில் அடிக்க
பட்டு இரண்டு தந்தங்களாலும் பூமியை (மூட்டிக்கொண்டு) விழு
தன. இவரால் பசுக்கள் மீட்கப்பட்டன; கௌரவர்கள் யு
த்தத்தில் ஜயிக்கப்பட்டார்கள். இவருடைய சங்கத்தின்ஒ
யினல் என்னுடைய இருகாதுகளும் செவிடுபட்டன. இ
ருடைய வில்லின்ஒலியையும் கூடஸஞ்சரிக்கின்றபூதங்களுடன்
சேர்ந்து கர்ஜிக்கின்ற கொடியிலுள்ளவானரத்தையும் நினைத்து
எனக்கு மயிர்க்கூச்சமுண்டாகிறது. யுத்தத்தில் கோரமான
அம்புகளைஎடுப்பவரும் அம்புகளின் கூட்டங்களை விடுப்பவரும்
வில்லையிழுப்பவருமான இவரை நான் பார்க்கவும் கூடவில்லை. யு
த்தத்தில் புங்காணுபுங்கமாக இவருடையவில்லினின்று விடப்பட்
டவைகளும் (பகைவர்களுடைய) ரக்தத்தைப் புஜிக்கின்றவை
களுமான பாணங்களும் நாராசங்களும் குறிதப்பிவிழுந்த
தில்லை. குதிரைவீரர்களுடையனவும் மற்றவீரர்களுடையனவுமான
சரீரங்கள், இவருடைய கூரியபாணங்களால் நன்றாக அறுக்கப்பட்
டுத் தலையும் கையும் தொடையும் மார்பும் அற்றனவாகக் காணப்
பட்டன. இவரால் அந்தப் போர்க்களத்தில் ரக்தமாகிறஜலத்

துடன் பெருகுகின்றதும் பயங்கரமான ஸ்வரூபமுள்ளதுமான ஒரு நதியானது உண்டுபண்ணப்பட்டது. அதை நினைத்து என் மனமானது பெருங்காற்றினால் அசைக்கப்பட்ட வாழைமரம் போல இன்னும்கூட மிகவும் நடுங்குகிறது. மன்னரே! பயங்கரமான செய்கையுள்ள இந்த வீரரால் பீஷ்மரையும் த்ரோணரையும் முதன்மையாகக்கொண்டவர்களும் துர்யோதனனுடன்கூடினவர்களுமான ரதிகர்கள் ஜயிக்கப்பட்டார்கள். பயந்து ஓடுகின்ற என்னை இந்தத் தேவகுமாரர் தடுத்தார். இவருடைய பாஹுபலத்தினால் நான் உயிரோடு மீண்டும் பட்டணத்துக்கு வந்தேன்' என்று கூறினன்.

ப்ரதாபசாலியான மத்ஸ்யராஜன், அந்த உத்தரனுடைய அவ்வித வார்த்தையைக்கேட்டு, பிறகு, தனஞ்சயனையும் (மற்ற) எல்லாப்பாண்டவர்களையும் ஆலிங்கனஞ்செய்து தர்மராஜரை நமஸ்கரித்து (அவரைத்தன்) ராஜ்யத்தில் ராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்தான். சேனபதியான விராடன், அவர்களைப்பார்ப்பதில் (போதுமென்னும்) த்ருப்தி அடையவில்லை; பிறகு, மிக்க அன்புள்ளவனாகி யுதிஷ்டிரராஜரைப்பார்த்து, 'தெய்வாதீனமாக நீங்களெல்லோரும் வனத்தினின்று க்ஷேமமாக (இந்தராஜ்யம்) வந்துசேர்ந்தீர்கள்: கெட்ட எண்ணமுள்ள துர்யோதனாதிகளால் அறியப்படாமல் பாக்யவிசேஷத்தினால்அஜ்ஞாதவாஸ கஷ்டத்தை விலக்கினீர்கள். இந்த ராஜ்யமும் மற்றுமுள்ள பொருளனைத்தும் உங்களுடையவை. இவை உங்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டன. [1] அரசர்களே! உங்களாலும் என்னாலும் இந்த ராஜ்யமானது பேதமின்றி அனுபவிக்கத்தக்கது. ஸந்தேஹம் வேண்டாம்' என்று கூறினன்.

எழுபத்தாறுவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் உத்தரையைக்கொடுத்துப் பாண்டவர்களை மனத்தெளிவடையச் செய்யும்படி விராடனுக்குச் சொல்லியதும், விராடன் உத்தரையுடன் பாண்டவர்களை நமஸ்கரித்துக் குற்றங்களைப் பொறுக்கவேண்டியதும், யுதிஷ்டிரர் அவனுக்கு அபயமளித்ததும்.)

நல்ல எண்ணமுடையவனான விராடராஜனுடைய வார்த்தையைக் கேட்டு, [2] உத்தரன், (பிதாவைப்பார்த்துப்) பின்வருமாறு வசனிக்கலானான்.

---

1 இங்கு அதிகபாடமான அரைசுலோகம் விடப்பட்டது.

2 இங்கு இரண்டு சொற்கள் விடப்பட்டன.

ஸ்ரீ மஹாபாரதம்.

'பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரருடைய மனக்கலக்கத்தை தெளியச் செய்வதற்கு இதுதான் தகுந்த ஸமயமென்று ந எண்ணுகிறேன். இந்த யுதிஷ்டிரர் ராஜராஜர்களுக்கும் தலை அதிக தேஜஸை உடையவர்; அதிக பலமுள்ளவர்; சூரர்; ப் பகைவர்களை அழிப்பவரே! என்னுடைய ஸஹோதரியான தரையைப் பார்த்தருக்கு நமஸ்காரஞ்செய்து கொடுப்போம். னல், [1] அவர்கள் ஸந்துஷ்டர்களாகட்டும். மன்னரே! நரு எல்லோரும் மந்த்ரிகளுடன் குந்தீபுத்ரரான யுதிஷ்டிரரை மன தெளிவடையும்படிசெய்து ஸ்தோத்ரம் செய்வோம். நாம் (வே எதைச் செய்யக்கடவோம்? அரசரே! போரில் (பகைவனு பிடிக்கப்பட்ட நீர் அவரால் விடுவிக்கப்பட்டீர். இவர்களுடை பாஹுவீர்யத்தினல் நீர் பசுக்களை மீட்டீர். மிக்க வலிமையுடை வர்களான கௌரவர்களும் யுத்தத்தில் (இவர்களுடைய)பாஹு வீர்யத்தால் ஜயிக்கப்பட்டார்கள். குந்திபுத்ரரான இந்த யுதி டிரர் கீழ்ச்சொல்லப்பட்ட கார்யம் அனைத்தையும் செய்தா பாண்டவர்கள் அர்ச்சிக்கத்தக்கவர்கள்; பூஜிக்கத்தக்கவர்கள் ஸம்மானம் பெறத்தக்கவர்கள்; எதிர்கொண்டு அழைக்கத்த வர்கள்; பூஜையை (ஏற்றுக்கொள்ளத்) தகுந்தவர்கள்; அபிவா னம் செய்யத் தக்கவர்கள். (இவற்றிற்கு) இது ஸமயமென்ப என்னுடைய எண்ணம். பூஜிக்கத்தக்கவர்களும் மஹா பாக்யசா களுமான பாண்டவர்கள் பூஜிக்கப்படலாம். ஸர்ப்பங்களுக் ஒப்பான இவர்கள் கோபம் கொண்டால் மிச்சம் வைக்கமா டார்கள். ஆதலால், சீக்கிரம் குந்தீபுத்ரரான யுதிஷ்டிரரைச் சர மடைவோம். நான், சிரஸ்நானம் செய்தவளான உத்தரை முன்னிட்டுக்கொண்டு அவ்விடம் (சென்று) இருகரங்களையு குவித்துக்கொண்டு மஹாத்மாக்களான (மற்றப்) பார்த்தர் ளோடுகூடின யுதிஷ்டிரரை மனக்கலக்கமற்றவராகச்செய்கிறேன் நான் இவர்களுடைய இவ்விதமான முழுபலத்தையும் ஆண்மை யையும் உயர்குடிப்பிறப்பையும் பல்குனருடைய பராக்ரமத்தை யும் அறிவேன்' என்று சொன்னன். பகைவர்களை அழிப்பவனை விராடன், உத்தரனிடத்தினின்று பாண்டவர்களுடையப்ரதாப தைக்கேட்டு உத்தரனையும் நன்றுகப்பார்த்து அந்த ஸமயத்துக் குத் தக்கபடி ஆலோசித்தான். பிறகு, விராடன், மந்த்ரி ளோடும் புத்ரர்களோடும் பந்துக்களோடும், சிரஸ்நானம் செய்தவ ளான உத்தரையை முன்னிட்டு அஞ்சலிசெய்துகொண்டு பாண் டவருக்கு ஸமீபத்தில் வந்து விரைவாகப் பூமியில் விழுந்து

1 வேறுபாடம்.

(நமஸ்கரித்து),'தர்மபுத்ரரான யுதிஷ்டிரமஹாராஜர் மனத்தெளிவு அடையவேண்டும்; ரூபத்தையும் வயஸ்தையும் மறைத்துக் கொண்டிருந்ததினல் புற்களால்மூடப்பட்ட அக்னிபோல என்னல் காணப்படவில்லை. நான் புத்ரர்களோடும் பரிசாரகர்களோடும் முடியினல் (உம்மைச்) சரணமடைகிறேன். அறியாதவர்களான எங்களால் அரசரான (நீர்) அவமதித்து நிந்திக்கப்பட்டீரென்பதனைத்தும் அற்பனிடத்தில்செய்வதுபோல அஜ்ஞானத்தினல் (உம்மிடத்தில்) செய்யப்பட்டது. தர்மத்தைவிரும்புகிறவரே! தர்மத்தை அறிந்தவரான நீர் அனைவனைத்தையும் பொறுத்துக்கொள்ளவேண்டும். வேந்தரே! ஸைன்யத்துடனும் பொக்கசத்துடனும் கூடின என்னுடைய ராஜ்யத்தையும் பட்டணத்தையும் அரசாட்சியையும் உமக்குக் கொடுக்கிறேன். அரசரே! உமக்கு ஸ்வாதீனப்பட்டவனுயிருக்கிறேன். நாங்களெல்லோரும் மந்த்ரிகளோடு உம்மைச்சரணமடைந்தோம்' என்று கூறினன். பரலோகத்தைக்கருதிய தர்மராஜர், பந்துவர்க்கங்களோடு பூமியில் விழுந்திருக்கும் அந்தவிராடராஜனைப்பார்த்துக் கோபத்தையும் சோகத்தையும் மாத்ஸர்யத்தையும்விட்டு (பின்வருமாறு) சொல்லினர்.

'அரசரே! என்னிடத்திலிருந்து உமக்குப் பயம்இல்லை. உம்முடைய மனைபாவத்தை ஆலோசித்து நான் மிக்கஸந்தோஷமுள்ளவனுகஇருக்கிறேன். உம்மாலும் தகுந்தவர்களும் பண்டிதர்களும் ப்ராம்மணர்களுமான மந்த்ரிகளாலும் இந்தஸமயத்தில் இந்தக்கார்யம் நன்குசெய்யப்பட்டது. ராஜஸ்ரேஷ்டரே! நன்கு அலங்கரிக்கப்பட்ட இந்தப்பெண்ணைப் பார்த்ததும், நான் மிகுந்தஸந்தோஷமுள்ளவனுயிருக்கிறேன். சிறந்த கைகளுள்ளவரே! மன்னரே! நீர் என்னிடத்தில் (இவ்வாறு) சொல்லுவதினல் இவை (எல்லாம்) என்னல் பொறுத்துக்கொள்ளப்பட்டன. வேந்தரே! உம்மிடத்தில் ஒருவிதமான குற்றத்தையும் நான் காணவேயில்லை' என்றுசொன்னர். பிறகு, மஹாத்மாவான விராடன், அதிகஸந்தோஷமடைந்து யுதிஷ்டிரராஜருடன் சேர்ந்து நிச்சயம்செய்துகொண்டு, செங்கோலையும் பொக்கசத்தையும் நகரத்தையும் ராஜ்யமனைத்தையும் அவருக்குக்கொடுத்தான்.

ஸ்ரீ மஹாபாரதம்.

எழுபத்தேழாவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(விராடன் அர்ஜுனனை உத்தரையை மனைவியாக அடையும்படி வே
டினதும், அர்ஜுனன் உத்தரையை மருமகளாக்கிக்கொள்ள அ
கீகரித்ததும், துர்யோதனன் மறுபடியும் வனவாஸஞ்செய்யும்
படி யுதிஷ்டிரருக்குத் தூதனுப்பியதும், யுதிஷ்டிரர் பீஷ்ம
ரிடம்தெளிந்துகொள்ளும்படி மறுமொழியனுப்பியதும்,
பீஷ்மர் பாண்டவர்களின் ப்ரதிஜ்ஞாகாலம் நிறை
வேறியதென்றதும்.)

விராடன், 'யுதிஷ்டிரரே! நான் உம்மிடத்தில் இப்
ழுது சொல்லப்போகிறவிஷயத்தில் நீர் ஸந்தேஹப்படவேண்ட
நகரங்களும் ஜனங்களும் ஸ்த்ரீகளுமுள்ள இந்தராஜ்யத்தை உ
ருக்கு நான் கொடுக்கப்போகிறேன். (உங்களால் அனுபவிக்
பட்டதின்,) மிச்சத்தையே நான் அனுபவிப்பேன். அரசர்
நான் மிக்க பிராயம்சென்றவன்; நெடுங்காலம் போகங்களை ஸ
மாக அனுபவித்தவன். உங்களுக்கு ராஜ்யத்தைக்கொடுத்
விட்டு நான் கானகம் செல்லப்போகிறேன். ஸவ்யஸாசியா
தனஞ்சயன் உத்தரையை (மனைவியாக) ஏற்றுக்கொள்ளட்
புருஷஶ்ரேஷ்டனை இவன்தான் அவளுக்குத் தகுந்த பர்த்
என்றுகூறினன். இவ்வாறு சொல்லக்கேட்ட தர்மராஜர், கு
புத்ரனை தனஞ்சயனைப் பார்த்தார். அர்ஜுனனும் (தன்
யுதிஷ்டிரர்) பார்த்த அபிப்ராயத்தை அறிந்து மத்ஸ்யராஜரை
பார்த்து, '(ராஜரே!) நாங்கள் வனத்தினிடையினின்று (இங்
வந்திருக்கின்றோம்; உம்முடையராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளா
ஆனால், தூர்யோதனாதிகளான அரசர்களுடைய ராஜ்யத்தை
கைப்பற்றிக் கொள்ளப்போகிறோம். அரசரே! உம்முடை
பெண்ணை மருமகளாக நான் அங்கீகரிக்கிறேன். மத்ஸ்யராஜ
சத்திலும் பரதவம்சத்திலும் தோன்றினவர்களான நம்மிருவ
கும் ஸம்பந்தமானது தகுந்ததன்றோ?' என்றுசொன்னன். வி
டன், 'பாண்டவஶ்ரேஷ்ட! என்னால் கொடுக்கப்பட்ட என்
டைய இந்தப்பெண்ணை நீ என் பார்யையாக ஏற்றுக்கொள்வது
விரும்பவில்லை?' என்று வினவ, அர்ஜுனன், '(அரசரே
நான் ரஹஸ்யமாகவும் வெளிப்படையாகவும் உம்முடை
பெண்ணைப் பார்த்துக்கொண்டு எப்பொழுதும் அந்தப்புரத்தி
வஸித்துவந்தேன். அவள் என்னிடத்தில் பிதாவினிடத்தி
போல விஶ்வாஸம் வைத்திருக்கிறாள். நான் (அவளுடைய)

திக்கும் நன்குமதிப்புக்கும் பாத்ரணயிருப்பவன். நாட்டியத்திலும் பாடுவதிலும் வாத்யம் வாசிப்பதிலும் என்னை எப்பொழுதும் உம் முடையகுமாரியானவள் ஆசார்யனைப்போல எண்ணுகிறாள். மன்னரே! தோழியாக அவளுடன்கூட ஒருவர்ஷம் வாஸம்செய்திருக்கிறேன். ப்ரபுவே! ஆதலால், உமக்கும் உலகத்தாருக்கும் ஸந்தேஹிக்கவேண்டாதவிஷயத்தில் அதிகஸந்தேஹம் உண்டாகும். அரசரே! ஆதலால், என்புத்ரனுக்காக (உம்முடைய குமாரியைப்பற்றி) உம்மைக்கேட்டுக்கொள்ளுகிறேன். (அப்படிச்செய்வதால் என்னை) சுத்தனுகவும் ஜிதேந்த்ரியனுகவும் எண்ணுகிறேன். என்னுல் அந்த உத்தரைக்கும் சுத்தியானது ஏற்படுத்தப்பட்டதாகும். உமதுபெண்ணை நான் மருமகளாக ஏற்றுக்கொண்டால், அவளிடத்திலும் என்னிடத்திலும் (என்) புத்ரனிடத்திலும் (ஜனங்களுக்கு) ஸந்தேஹம் உண்டாகாதென்று எண்ணுகிறேன். அதனுல், சுத்தியும் உண்டாகும். பகைவரைவாட்டுபவரே! நான் லோகாபவாதத்தினின்றும் கபடமான ஆசாரத்தினின்றும் பயந்தவன். அரசரே! (ஆகையால்,) உம்முடையகுமாரியான உத்தரையை நான் மருமகளாக ஏற்றுக்கொள்ளுகிறேன். மன்னவரே! வாஸுதேவருக்கு ஸஹோதரிபுத்ரனும் ஸாக்ஷாத்தேவகுமாரன்போன்றவனும் சக்ரபாணியான ஸ்ரீ வாஸுதேவருடைய அன்புக்கு விஷயமாயிருப்பவனும் பலசாலியும் அஸ்த்ரங்களில் மிகுந்தநேர்ச்சியுடையவனும் சிறந்தகைகளுள்ளவனும் எனக்குப் புத்ரனுமான அபிமன்யுவானவன் உமக்குத் தகுந்த மருமகன். உம்முடைய பெண்ணுக்கும் தகுந்த கணவன்' என்று மறுமொழிகூறினன். விராடன், 'கௌரவர்களுள் சிறப்புற்றவனும் குந்தீபுத்ரனுமான தனஞ்சயனிடத்தில் இது பொருத்தமாயிருக்கிறது. பாண்டவன் எப்பொழுதுமே தர்மத்தில் நிலைபெற்றவன்; அறியவேண்டிய விஷயத்தை அறிந்தவன். பார்த்த! நீ செய்யத்தகுந்ததென்று எண்ணுகிறதை உடனே நீ செய்யலாம். அர்ஜுனனை ஸம்பந்தியாக அடைந்த எனக்கு எல்லாவிருப்பங்களும் நிறைவேறிவிட்டன' என்று கூறினன்.

அரசரிற்சிறந்த விராடன் இவ்வாறு சொல்லும்பொழுது, குந்தீபுத்ரரான யுதிஷ்டிரர், அர்ஜுனனுக்கும் மத்ஸ்யராஜனுக்கும் ஏற்படும் ஸம்பந்தத்தைப்பற்றி அந்தஸமயத்தில் அனுமதி கொடுத்தார். பரதகுலத்தில் உதித்தவரே! குந்திபுத்ரனை அர்ஜுனனும் விராடராஜனும் எல்லாமித்ரர்களுக்கும் வாஸுதேவருக்கும் தூதர்களை அனுப்பினர்கள். பகைவரைவாட்டுபவனை அந்தப்பல்குனன் அப்பொழுது (உத்தரையைத்தனக்கு) மருமக

ளாக ஏற்றுக்கொண்டு தன்னுடைய வ்ரதத்தை வெளிப்ப
உலகத்தாருக்கு (த் தன்னுடைய) சீலத்தையும் சுத்தியையும்
லொழுக்கத்தையும் தெரிவித்து உலகத்தில் (தன்னுடைய) க
மையையும் யசஸையும் விளங்கச்செய்து க்ருதார்த்தனும் ச
னும் மனக்கவலையற்றவனும் ஸந்தோஷமுள்ளவனுமானன். யு
டிரர், 'அரசரே! நான் ப்ரீதியுள்ளவனாகிறேன். உமக்கு ப
ளம். பகைவரைவாட்டுபவரே! நீர் எனக்கு நண்பர். வேந்த
நாங்கள் எல்லோரும் (பகைவர்களால்) அறியப்படாதவ
ளாக உம்மிடத்தில் ஸுகமாக வஸித்தோம்' என்றுகூறி
தர்மாத்மாவும் கடுமையான வ்ரதமுடையவருமான யுதிஷ்
ராஜர் (விராடனால்) பூஜிக்கப்பட்டும் விராடநகரத்தில்
ஷேகஞ் செய்யப்பட்டும் ரத்னங்களால் பலவாறு அர்ச்சிக்கப்
டும் விளங்கினர். அவ்வாறு சொல்லுகின்ற யுதிஷ்டிரரை விர
ராஜன் நன்றுகப்பார்த்து அங்கிருக்கும் உறவினருடன் மிகு
ஸந்தோஷமடைந்து இரண்டுகைகளாலும் ஸ்நேஹத்தினால் த
டிக்கொண்டு குருகுலத்தில் உதித்தவர்களான பாண்டவர்களுக்
ஏராளமான தனத்தைக் கொடுத்தான்.

போரினின்று ஓடின கௌரவர்களோ மார்க்கத்தில் எல்லோ
ரும் ஒன்றுசேர்ந்தார்கள். அரசரே! ஸமர்த்தர்களான ஆசார்
புத்ரர், சகுனி, துர்யோதனராஜன், ஸுதபுத்ரனகர்ண
ஆகிய அனைவரும் அவ்விடத்தில் ஒருங்குசேர்ந்து ஹிதத்தைதே
நன்கு ஆலோசித்து, பிறகு, தூதனை (யுதிஷ்டிரரிடம்செல்ல
கட்டளையிட்டார்கள். மிக்க ஸந்தோஷமுள்ளவரான யுதிஷ்டிரரு
துர்யோதனனிடத்திலிருந்து வந்த தூதனைப்பார்த்தார். அந்த
தூதனும், தர்மத்தினால் விளங்குகின்றவரும் உக்ரமான வீர்
முடையவரும் பாண்டு புத்ரருமான யுதிஷ்டிரரிடம்சென்று
'ஓ! குந்தீபுத்ரரே! தனஞ்சயரால் மறுபடியும் நீர் காட்டுக்கு
போகும்படி செய்யப்பட்டீர்; ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றும்
ஏனெனில், இப்பொழுது, பதின் மூன்றுவது வர்ஷத்திலேயே
பாண்டுவின் புத்ரரான கிரீடியானவர் பார்க்கப்பட்டார்' என்
சொன்னன். பிறகு, தர்மநந்தனர், சிரித்து, '(தூத!) நீ
விரைவாகச்சென்று அந்தத்துர்யோதனனிடத்தில், 'எங்களு
க்கு இப்பொழுது பதின்மூன்றுவது வர்ஷம் நிரம்பியது
நிரம்பவில்லையென்பதைச் சந்தனுவின்குமாரரான பாட்டனார்
சொல்லட்டும். (பதின்மூன்றுவது) ஸம்வத்ஸரத்தின் முடிவில்
தான் தனஞ்சயன் போரினிடையில் காண்டீவத்தை நாணேலி
யிடும்படிசெய்தான். எங்களுடைய (ப்ரதிஜ்ஞாகாலமானது)

நிறைவேறியதென்றும் நிறைவேறவில்லையென்றும் இதனுடைய உண்மையைப் பீஷ்மர் சொல்லட்டும். எனக்கு அவருடைய வாக்யமே ப்ரமாணம்' என்றுசொல்' என்று கூறினர். அவரால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தத்தூதன் திரும்பித் துர்யோதனனை அடைந்து அங்கு நடந்ததைச் சொன்னன்.

அப்பொழுது, ராஜபுத்ரனை அந்தத் துர்யோதனன், தூதனுடன் சேர்ந்து பீஷ்மரோடும் கர்ணனோடும் க்ருபரோடும் த்ரோணரோடும் பூரிஸ்ரவஸோடும் ஆலோசனைசெய்தான். மஹாத்மாவான பீஷ்மர், அநேக ஸுஹ்ருத்துக்களுடன் இரவில் நன்கு ஆலோசித்துத் துர்யோதனனைப்பார்த்து, '(துர்யோதன!) ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றினபிறகே, தனஞ்சயனால் போரினிடையில் காண்டீவமானது நாணெலிசெய்யப்பட்டது. பாண்டுவின் புத்ரர்கள், தேவேந்த்ரனுடைய உலகமாயிருந்தாலும் ப்ரம்மாவினுடைய உலகமாயிருந்தாலும் அஸத்யத்தால் அடைய விரும்பமாட்டார்கள். உனக்கு நான் உண்மையும் நல்வழியைவிட்டு விலகாததும் ஸ்வர்க்கத்தைத் கொடுக்கக்கூடியதும் கீர்த்தியை உண்டுபண்ணக்கூடியதும் பரலோகத்துக்கு ஹிதமுமான வார்த்தையை உரைக்கிறேன். நீ குந்தீபுத்ரர்களோடு ஸந்தியைச் செய்துகொள். பாண்டவர்களோடுகூடி உன்னுடைய ராஜ்யத்தை அனுபவி. அப்படியல்லாமல் நீ ராஜ்யத்தை விரும்புவாயாகில், உறுதியுள்ளபுத்தியுடன் போர்க்களத்தில் குந்தீபுத்ரர்களோடு போர்புரி. மஹிமை தங்கியவர்களும் பலசாலிகளுமான பகைவர்களுடைய ராஜ்யமானது கபடத்தினால் கடைசிவரையில் அனுபவிப்பதற்கு ஸாத்யப்படாது. பகைவர்களை ஜயித்து அகண்டமான ராஜ்யத்தை அனுபவி; (அல்லது), நீ (அவர்களால்) கொல்லப்பட்டு இந்த்ரலோகத்தை அனுபவி' என்று கூறினர்.

பிறகு, காந்தாரியின் புத்ரனை அந்தத் துர்யோதனராஜன், பாகீரதி புத்ரரான பீஷ்மருடைய வார்த்தையைக்கேட்டு, மாதாபிதாக்களுடைய முன்னிலையில் பீஷ்மரைப் பார்த்து, '(பிதாமஹரே!) அணுமாத்ரமும் பூமியை நான் (பாண்டவர்களுக்குக்) கொடேன். பாண்டுபுத்ரர்களையாவது நான்கொல்வேன்; அல்லது, அவர்களால் கொல்லப்பட்டாவது ஸ்வர்க்கலோகம் செல்வேன்' என்று சொன்னன். அந்த த்ருதராஷ்ட்ரகுமாரர்கள் ப்ரதிஜ்ஞையைநிறைவேற்றியவனை தனஞ்சயனுடைய ப்ரதிஜ்ஞையைக் கேட்டு எல்லோரும் ஸுஹ்ருத்துக்களோடு சேர்ந்து நன்றாக ஆலோசித்து வேந்தர்களுடன்தங்கள் க்ருகங்களை அடைந்தார்கள்.

எழுபத்தெட்டாவது அத்யாயம்.

ஸைவவாஹி கபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் உபப்லாவ்யநகரம் சேர்ந்து க்ருஷ்ணன்முதலியோரு
த்தூதனுப்பியதும், க்ருஷ்ணன் ஸுபத்ரை அபிமன்யு த்ருபதன்
ப்ரதிவிந்த்யன்முதலியோர் உபப்லாவ்யநகரம் வந்ததும்.)

பிறகு, பதின்மூன்றுவதுவர்ஷம் முடிந்தவுடன், ஐந்துபாண்டவர்களும் விராடனுடைய உபப்லாவ்யம் என்கிற உத்தமமான பட்டணத்தில் வாஸஞ்செய்தார்கள். குந்திபுத்ரரான யுதிஷ்டிரரும் விராடராஜனும், எல்லாமித்ரர்களுக்கும் ஞாதிகளுக்கும் ஸம்பந்திகளுக்கும் தூதர்களை அனுப்பினர்கள். அப்பொழுது, அந்தப் பாண்டவர்கள் அந்த நகரத்தில் வாஸஞ்செய்துகொண்டு (தூதர்களை) ஆங்காங்கு அனுப்பினவுடன், சிறந்தகைகளுள்ளவரும் வனமாலையை அணிந்தவரும் பலராமருக்கு இளையவரும் சத்ருவீரர்களை ஸம்ஹரிப்பவருமான ஸ்ரீக்ருஷ்ணபகவான், அந்த ஸமயத்தில் தூதர்களுடைய வாக்யத்தைக்கேட்டு, பிறகு, (தம்) அன்புக்குப் பாத்ரனும் மருகனும் ஸுபத்ரையினுடைய புத்ரனும் மிக அபிமானிக்கப்பட்டவனுமான அபிமன்யுவை அழைத்துக்கொண்டு பலராமரோடு தலைவர்களான எல்லா யாதவர்களாலுஞ் சூழப்பெற்றுச் சங்கவாத்யங்கள் துந்துபிவாத்யங்கள் இவைகளுடைய கோஷங்களோடு விராடநகரத்தை அடைந்தார். பகைவரை வாட்டுகிறவர்களான ஹ்ருதிகனுடைய குமாரனை க்ருதவர்மா, ஸத்யகனுடைய குமாரனை யுயுதானன், அனத்ருஷ்டி, அக்ரூரர், ஸாம்பன், நிசடன், சிறந்தகைகளுள்ள ப்ரத்யும்னன், மஹாபலசாலியான உல்முகன் ஆகிய இவர்களெல்லாரும் அபிமன்யுவைத் தாயாருடன்அழைத்துக்கொண்டு க்ருஷ்ணரைப் பாண்டவர்களைப் பார்க்க வந்தார்கள். ஒரு வர்ஷம் (பாண்டவர்களை) விட்டு விலகி வஸித்தவர்களான இந்த்ரஸேனன் முதலானவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட ரதங்களோடு (உபப்லாவ்ய நகரத்தை) அடைந்தார்கள். பதினாயிரம் யானைகளும் இருபதினாயிரம் குதிரைகளும் நிறைந்த லக்ஷம் தேர்களும் பதினாயிரம்கோடி காலாட்களும் மஹாபராக்ரமசாலிகளான வ்ருஷ்ணிகளும் அந்தகர்களும் நூற்றுக்கணக்கான போஜர்களும் வ்ருஷ்ணிகளுள் சிறந்தவரும் மஹாபலசாலியுமான வாஸுதேவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது, பாண்டுபுத்ரர்களெல்லாரும் அவ்வாறு ஸ்ரீவாஸுதேவர் வருகிறதைக்கேட்டு மத்

ஸ்யராஜனுடன்சேர்ந்து சங்கமுழக்கங்களுடனும் துந்துபிகோஷங் களுடனும் மங்களத்ரவ்யங்களுடனும் ஸ்ரீஜனர்த்தனரை எதிர் கொண்டார்கள். பாண்டவர்களனைவரும் மத்ஸ்யராஜனோடு ஸ்ரீ ஜனர்த்தனரை (க்கண்டு) மனக்களிப்புற்று ஆனந்தக்கண்ணீரால் நனைக்கப்பட்டவர்களாகி அவருடைய சரணங்களில் நமஸ்கரித்து, 'ஓ! க்ருஷ்ணா! தாசார்ஹரே! தேவரீருடைய அனுக்ரஹத்தினால் இந்த (ப்பன்னிரண்டு) வர்ஷங்களும் பதின்மூன்றுவதுவர்ஷமுமு வதும் ப்ரதிஜ்ஞைபண்ணினபடி வாஸஞ்செய்துவந்தோம். ஜகந் நாதரே! ஜனர்த்தனரே! தேவரீர் எங்களுக்கு நாதர். தேவ தேவர்களுக்கெல்லாம் ப்ரபுவாயிருப்பவரே! நீர் எங்களைக் காப் பாற்றும். சிறப்புற்றவரே! உம்மை நாங்கள் சரணமடைந்தோம் என்றுகூறினர்கள்.

யாதவர்களனைவராலும்சூழப்பட்ட ஸ்ரீஜனர்த்தனர், (தம்மை) நமஸ்கரிக்கின்றவர்களும் விராடனுக்கு ஸஹாயர்களுமான அந் தப் பாண்டவர்களை விரைவாகக்கட்டிக்கொண்டு அதிகஸந்தோ ஷத்துடன் அவரவர்களுக்குத்தக்கபடி அவர்களைப் பூஜித்தார். வ்ருஷ்ணிவீரர்களும் அவர்களனைவரையும் அவரவர்களுக்குத்தக்க படி மர்யாதைசெய்தார்கள். அவ்வாறே, க்ருஷ்ணையும் தேவகீ புத்ரரைச் சரணங்களில் நமஸ்காரம்செய்தாள். தேவர்களுக்கு ஈச்வரரான ஸ்ரீவாஸுதேவர், அழகிய கூந்தல்நுனியையுடையவ ளான அவளை எடுத்துநிறுத்திக் கண்களைத்துடைத்து எல்லா யாதவர்களின் முன்னிலையிலும், 'கல்யாணி! நீ வ்யஸனமடை யாதே. நான் அர்ஜுனனோடுசேர்ந்து, அதிக அஹங்காரமுள்ள வர்களான த்ருதராஷ்ட்ரகுமாரர்களைச் சிக்கிரத்தில் கொன்று பூமியை யுதிஷ்டிரருக்குக் கொடுக்கப்போகிறேன். உன்னுடைய மனத்திலுள்ள தாபமானது விலகட்டும். (இவ்விஷயத்தில்) உன் னிடம் அபிமன்யுவின்மீதும் அர்ஜுனன்மீதும் ருக்மிணீபுத்ர னான ப்ரத்யும்னன்மீதும் ஆணையிடுகிறேன். தோஷமற்றவளே! என்னுடைய இந்தவார்த்தையை ஸத்யமென்று நீ எண்ணு' என்று சொன்னார். விருஷ்ணிகளுள் உத்தமரான ஸ்ரீக்ருஷ்ண பகவான் இவ்வாறுசொல்லி அவளை விட்டுவிட்டு, பிறகு, அன் புள்ளவராகி வ்ருஷ்ணிகளோடும் அந்தகர்களோடுமு யுதிஷ்டிரரை (அடைந்து அவருடன்) வாஸஞ்செய்தார். பூபதிகளானகாசிராஜ னும் சைப்யனும் இரண்டுஅக்ஷௌஹிணிகளுடன் (உபப்லாவ்ய நகரத்துக்கு) வந்து யுதிஷ்டிரரை அடைந்தார்கள். மூன்று அக்ஷௌஹிணிகளுடன்கூட மஹாபலசாலியான பாஞ்சாலராஜ னும் மஹாபலசாலிகளும் வீரர்களுமான த்ரௌபதீபுத்ரர்களும்

(பகைவர்களால்) ஜயிக்கப்படாதவனுன சிகண்டியும் (பகை
களால்) ஜயிக்கமுடியாதவனும் எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளு
சிறப்புற்றவனுமான த்ருஷ்டத்யும்னனும் பாண்டவர்களுக்குஉ
செய்வதற்காக விரைவாக உபப்லாவ்யநகரத்தை அடைந்தார்க
ப்பிறகு, யுதிஷ்டிரருடையசேனையின்பக்கத்தில் லக்ஷக்கணக்
பத்துலக்ஷக்கணக்கும் பத்துக்கோடிக்கணக்குமான போர்வீ
கள் நின்றார்கள். வர்ஷாகாலத்தில் சிறந்தப்ரவாஹங்கள்தன
தனியாகவந்து ஸமுத்ரத்தை நிரம்பச்செய்வதுபோல விதிப்ப
யாகம்செய்து நிரம்பியதக்ஷிணையளித்தவர்களும் வேதாத்யயன
செய்து அவப்ருதத்தை நிறைவேற்றினவர்களும் சூரர்களும் (ப
தத்தில்) சரீரத்தைவிடத் துணிந்தவர்களுமான எல்லா அரச
ளும் யுதிஷ்டிரருடைய சேனையை நிரப்பினர்கள். ஞானவா
களுள் சிறந்தபார்த்தன், வந்திருக்கின்ற அந்தராஜஸ்ரேஷ்ட
களைக் கண்டு அவரவர்களுக்குத்தக்கபடி விதிப்படி பூஜித்தா
ஸ்ரீக்ருஷ்ணன் மஹாத்மாக்களான பாண்டவர்களுக்கு அதே
ஸ்த்ரீகளையும் பற்பலவிதவஸ்த்ரங்களையும் ரத்னங்களையும் வி
மதியாகக்கொடுத்தார். அரசர்களும் ராஜகுமாரர்களும், ப்ரதிஜ்ஞ
காலமான (பதின்மூன்று வர்ஷமும்) அவ்வாறு கழிந்தபிற
பாண்டவஸ்ரேஷ்டர்களால் தம் தமக்குத்தக்கபடி பூஜிக்கப்பெ
ற்றார்கள்; ஸந்தோஷமுள்ள மனத்தையுடையவர்களாஞர்க
அப்பொழுது காணிக்கையையும் செலுத்தினர்கள். அரசரே
மன்னர்களோடும் வ்ருஷ்ணிகளோடும் எல்லோரும் ஒன்
சேர்ந்திருக்கையில் குருகுலத்தில்பிறந்த அபிமன்யுவுக்கும் ப
ஸ்யராஜகுமாரியான உத்தரைக்கும் சாஸ்த்ரமுறைப்படி விவாஹ
மானது நிறைவேறியது. பிறகு, அப்பொழுது அபிமன்
யுவினுடைய விவாஹகாலத்தில் மத்ஸ்யராஜனுடைய அரண்மனை
யில் சங்கங்களும் ம்ருதங்கங்களும் கோமுகங்களும் டிண்டிமங்
களும் முழங்கின. (பரிசாரகர்கள்) பரிசுத்தமான பலவகை ம்
கங்களை நூற்றுக்கணக்காகக் கொன்றார்கள்; அவ்வாறே, மிகு
யான பக்ஷ்யங்களையும் அன்னங்களையும் போஜ்யங்களையும் பான
களையும் (அதிதிகளைப்) புஜிக்கும்படி செய்தார்கள். பாடுகிறவ
களும் பழையகதைகளைச்சொல்லுகிற ஸ்வபாவமுடையவர்களு
நட்டுவர்களும் அவ்வாறே 1 வைதாளிகர்களும் மாகதர்களும் பெ
ராணிகர்களும் ஸ்தோத்ரம்செய்துகொண்டு அந்தப்பாண்டவ
களை அடைந்தார்கள். அந்த அபிமன்யுவினுடைய மங்களகரமான

---

1 ஸபாபர்வம் 11 - ம் பக்கம் 4 - வது குறிப்பிற்காண்க.

விவாஹோத்ஸவத்தில் த்ரௌபதியினுடைய அந்தப்புரத்திலும் விராடனுடைய அரண்மனையிலுமுள்ள பிராயமுதிர்ந்தஸ்திரீகளும் யுவதிகளானஸ்திரீகளும் மாத்ஸ்யர்களுடையஸ்த்ரீகளும் ஸைரந்த்ரணையைமுன்னிட்டுக்கொண்டு (விவாஹமண்டபத்திற்கு) வந்தார்கள். அந்தஸ்திரீகள் அழகிய பருத்த அங்கங்களுள்ளவர்களும் மெருகிடப்பட்ட ரத்னகுண்டலங்களணிந்தவர்களும் சிறந்தநாஸியுள்ளவர்களும் சிறந்தரூபமுடையவர்களும் நன்கு அலங்கரிக்கப்பட்டவர்களுமாயிருந்தார்கள். எல்லாஸ்திரீகளுள்ளும் க்ருஷ்ணையானவள் ரூபத்தாலும் தேகத்தாலும் சிறந்து விளங்கினாள். (அந்தஸ்திரீகளனைவரும்) புகழத்தக்கவளும் அலங்கரிக்கப்பட்டவளும் ராஜபுத்ரியும் மஹேந்த்ரனுடையபுத்ரிபோன்றவளுமான உத்தரையைமுன்னிட்டுச் சூழ்ந்துகொண்டு (விவாஹமண்டபத்தில்) நின்றார்கள். ஸைரந்த்ரியான விராடன், ஜலம்நிறைந்த பொற்குண்டிகையை எடுத்து, கருநெய்தல்போன்ற கண்ணையுடையவளான புத்ரியை அர்ஜுனனுடையகையில் மருமகளாக ஏற்றுக்கொள்வதற்காக விரைவாகத் தாரைவார்த்தான். சிறந்தமனமுள்ள குந்திபுத்ரன் (தன்)புத்ரனுக்காக அந்தப்பெண்ணைப் பெற்றுக்கொண்டான். தோஷமற்ற அங்கங்களுள்ளவனும் ஸுபத்ரையின் குமாரனுமான அபிமன்யுவும், அப்பொழுது இந்த்ரனுடைய ரூபத்தைத்தரித்து, விராடனுடையபுத்ரியான உத்தரையைப் பாணிக்ரஹணம்செய்துகொண்டு அந்தவிவாஹமண்டபத்தில் நின்றான். குந்திபுத்ரரானயுதிஷ்டிரர் அந்த உத்தரையை மருமகளாக அங்கீகரித்தார். விதிப்படி யாகம்செய்தவர்களும் மிகுதியாக (ப்ராம்மணர்களுக்குத்) தக்ஷிணைகொடுத்தவர்களுமான த்ருபதன், விராடன், மஹாபலசாலியான சிகண்டி, யுயுதானன், சைப்யன், த்ருஷ்டத்யும்னன், ஸாத்யகி இந்த ஏழு அக்ஷௌஹிணீபாலர்களும் பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரரைச் சூழ்ந்துகொண்டு அப்பொழுது விவாஹத்தை நடத்தினர்கள். சேனையும் அந்த விவாஹமண்டபத்தில் (ஸந்தத்தமாக) இருக்கும் சமயத்தில், தார்மிகர்களுள் உத்தமனான மத்ஸ்யராஜன் ப்ரீதியுள்ளவனாகி(த் தன்) பெண்ணைப்பிடித்து அபிமன்யுவுக்குக் கொடுத்தான். பார்த்தன், உத்தரையைப்பெற்றுக்கொண்டு ஜனார்த்தனரைமுன்னிட்டு மஹாத்மாவான ஸுபத்ராபுத்ரனுக்கு விவாஹத்தைச்செய்வித்தான். பிறகு, எல்லாச்சிறப்புக்களுடனும் மிக்கவைபவத்துடனும்கூடிய விவாஹமானது வ்ருத்தியடைந்தது. அப்பொழுது, உம்முடையபிதாவுக்குப் பிதாவும் ஸுபத்ரையினுடையபுத்ரனுமான அபிமன்யுவுக்கு நடந்த விவாஹகார்ய

மானது, ஆச்சர்யமாக இருந்தது. தௌம்யர், சிஷ்யர்களால் சூழப்பெற்றுச் சாஸ்திரமுறைப்படி அக்னியில் ஹோமம்செய்தார். ஸுபத்ராபுத்ரன் அக்னியைப்ரதக்ஷிணம்செய்து (உத்தரையைப்) பாணிக்கிரஹணம்செய்தான். பிறகு, மாத்ஸ்யர்களுக்குப் பதியான விராடராஜன், ஸந்தோஷமடைந்து, [1] பார்த்தனுடையபுத்ரனை அந்த அபிமன்யுவின்பொருட்டு அப்பொழுது மிகுதியான தனத்தையும் காற்றுப்போன்ற வேகமுள்ள லக்ஷம் குதிரைகளையும் முக்யமான இருநூறுயானைகளையும் பலவிதமான பொருள்களையும் ஸந்தோஷத்துடன் சிறந்தவரிசையாகக் கொடுத்தான். மத்ஸ்யராஜன் குந்தீபுத்ரர்களின்பொருட்டுக் காணிக்கையையும் கொடுத்தான். குந்தீபுத்ரர் க்ருஷ்ணேயை மிகுதியான (பொருள்களைப்) பெற்றுக்கொண்டார். தர்மபுத்ரரான அவர், அப்பொழுது விவாஹமானவுடன், ஸ்ரீக்ருஷ்ணன் கொண்டுவந்த தனத்தையும் ஆயிரம்பசுக்களையும் வஸ்த்ரங்களையும் பற்பலவிதமான ரத்னங்களையும் எல்லாப்பூஷணங்களையும் வாஹனங்களையும் படுக்கைகளையும் ப்ராம்மணர்களுக்குக் கொடுத்தார். அவர் நகரவாஸிகளான ஜனங்களை ப்ரீதியடையக்கூடிய சிறந்தபொருள்களால் த்ருப்தியடையச்செய்தார். ஓ! பரதஸ்ரேஷ்டரே! (எல்லா) மஹாத்ஸவங்களுக்கும் உப்மானமாயிருக்கின்ற அந்தமத்ஸ்யராஜனுடையநகரமானது, ஸந்தோஷமுள்ளவர்களும் புஷ்டியுள்ளவர்களுமான ஜனங்களால் நிறைந்துவிளங்கியது. நிறைந்த செல்வமுள்ள விராடராஜன், தன்புத்திரியான அந்த உத்தரையை ஸுபத்ராபுத்ரனை அபிமன்யுவுக்குக்கொடுத்து, புரோஹிதர்களோடும் மந்த்ரிகளோடும் பட்டணத்துஜனங்களோடும் தேசவாஸிகளான ஜனங்களோடும், அப்பொழுது பரமானந்தத்தை அனுபவித்தான்" என்றுகூறினர்.

ஜனமேஜயர், "(வைசம்பாயனரே!) விவாஹம்நிறைவேறியவுடன், ஸந்தோஷமுள்ள மனத்தையுடையவரான யுதிஷ்டிரர் என்னசொன்னரென்பதையும், பார்த்தர்கள் அதற்குமேல் என்னசெய்தார்களென்பதையும் முழுதும் (எனக்கு) இப்பொழுது உரைப்பீராக." என்று வினவினர்.

வைவாஹிகபர்வம் முற்றிற்று.

விராடபர்வம் முற்றிற்று.

---

1 மூலத்தில், 'பார்த்தாய' என்றிருக்கின்றது.